


பெரிய புராணம்

வசனம்




வெளியீடு

சிவதொண்டன் சபை

யாழ்ப்பாணம்




மாறாத மௌனத் தியானப் பிரவேசன்

உ

சேக்கிழார் பெருமான்

அருளிச்செய்த

பெரிய புராணம்

வசனம்

ஆக்கம் :

செல்லத்துரைசுவாமிகள்

சிவதொண்டன் சபை

யாழ்ப்பாணம்,

(12-08-2005)

முதற்பதிப்பு : பார்த்திப ஞ் ஆடிச்சுவாதி
12.08.2005

விலை :

வெளியீடு,
சிவதொண்டன் சபை,
434, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

கணனி வடிவமைப்பு : ஆ. பிரதீப்

அச்சுப்பதிப்பு : எவகிறீன் அச்சகம்,
93, திருமலை வீதி,
மட்டக்களப்பு.
✆ : 065- 2222607

ஓ

பதிப்புரை

'தென்தமிழ்ப் பயனாயுள்ள திருத்தொண்டத்தொகை' என்பது சேக்கிழார்பெருமான், சுந்தரமூர்த்திசுவாமிகள் அருளிச்செய்த திருத்தொண்டத் தொகையைப் போற்றிச் சொன்ன வாசகங்களுள் ஒன்று. மொழிப்பயன், உலககாரியங்கள் பலவற்றையும் போன்று உண்மை உணர்தற்கு உதவியாதலே. மொழியில் உண்மைநூல்கள் உள்ளமையாலே அது உண்மை உணர்தற்கு உறுதுணையாய் அமைகின்றது. உண்மைநூல்களுள்ளும் உண்மையுணர்ந்த மெய்யடியார்களது பெருமைகூறும் நூல்களே உத்தமமானவை. இத்தகைய மெய்யடியார்கள் பலரது பெருமையைத் தொகையாகக் கூறும் முதல் நூலாதலாலே திருத்தொண்டத்தொகையைத் 'தென்தமிழ்ப்பயன்' எனச் சேக்கிழாரடிகள் போற்றினர். திருத்தொண்டத்தொகையை அடியொற்றி விரித்துப் பாடியதே, திருத்தொண்டர்புராணம். திருத்தொண்டத்தொகைக்கு இறைவன் "தில்லைவாழந்தணர்" என அடியெடுத்துக் கொடுத்தது போலவே திருத்தொண்டர்புராணத்துக்கும் "உலகெலாம்" என அடியெடுத்துக் கொடுத்தனர். ஆதலாலே இரண்டும் அருள்வழிப்பட்ட திருநூல்களே. தொகையில் ஆலவித்துப் போன்று நுட்பமாய் உரைக்கப்பெற்ற தொண்டர்சீர் 'விரி' யில் பெரிய ஆலமரம் போன்று பரக்கப் பரவப் பெற்றிருக்கிறது. ஆதலாலே திருத்தொண்டத் தொகைக்குச் சேக்கிழார் சுவாமிகள் சூட்டிய விருது அவர்தம் திருத்தொண்டர் புராணத்துக்கும் சாலப்பொருந்துவதேயாம்.

பெரிய புராணம் உண்மையுணர்தற்கு உறுதுணையான நூல் என்பதற்கு இத்திருநூலிலுள்ள திருத்தொண்டர் சிலரது புராணங்கள் தக்க சான்றாயமைவன. கணநாத நாயனார். அப்பூதிஅடிகள், சோமாசிமாற நாயனார், பெருமிழலைக்குறும்பர் ஆதியோர் புராணங்கள் அத்தகையன. கணநாதநாயனார் திருஞானசம்பந்தப்பிள்ளையாரது சரிதத்தில் ஈடுபட்ட திறத்தாலே திருவடியின்பம் பெற்றார். அப்பூதியடிகள் 'திருநாவுக்கரசு' எனும் நாமமந்திரத்தைப் பற்றுக் கோடாகக் கொண்டு உய்திபெற்றார். சோமாசிமாறரும், பெருமிழலைக்குறும்பரும் நம்பியின்

நாமம் நவின்ற நலத்தால் பெரும்பதம் அடைந்தனர். இவ்விருவருள் நம்பிபாதம் சேவிக்கும் திண்ணிய அன்பால், நம்பி கைலை சேர்வதற்கு முதல் நாளே பெருமிழலைக் குறும்பர் கைலை சேர்ந்தனர்!

'தென்தமிழ்ப்பயன்' எனும் சேக்கிழார் பெருமான் வாக்கும், நாயன்மாரைப் போற்றிய நலத்தால் நாயன்மாரானோரின் புராணங்களுமான இவை பெரியபுராணத்தின் சிறப்புக்கான பெரியபுராணச் சான்றுகளே. இச்சான்றுகளுக்கு அயலான சான்றுகள் வேண்டுமெனின் அத்தகைய சான்றுகளும் அநேகமுள. அவற்றுள் பகவான் ரமணர் சொல்லி வைத்தது கிட்டிய சாட்சியமாகும். பகவான் பதினேழுவயதில் ஆன்ம-மலர்ச்சி பெற்றார். அதற்கு முன் தாம் பயின்ற ஒரேயொரு சமயநூல் பெரியபுராணமே என அவர் கூறுவார். அந்நூலைப் படித்தபிறகு அந்நூலிலுள்ள பெருமக்கள் போன்று தாமும் வரவேண்டும் எனும் குறிக்கோள் உடையவரானார். அக்குறிக்கோளே தம்மை வழிநடத்தி அருணாசல சிவத்துடன் கூட்டி வைத்ததாக அவர் கூறுவார். இவ்வாறு கூறக்கூடிய பலர் இலைமறைகாயாக இன்றும் உள்ளனர் என்பதில் ஐயமில்லை.

பெரியபுராணத்தில் போற்றப்பெறும் அறுபத்துமூன்று தனி அடியார்களும் கைக்கொண்ட நெறி தனித்தனி நெறி. அவ்வாறே தொகையடியார் தொகுதி ஒவ்வொன்றும் சென்ற நெறியும் தனிநெறி. இந்நெறிகளுள் சில எவரும் எளிதாகக் கைக்கொள்ளக் கூடிய நெறிகள். இயைந்தபடி வாழ்ந்து கொண்டே மேற்கொள்ளக்கூடிய இயல்பானநெறிகள். ஆனாயநாயனார் நெறி இதற்குத் தக்க எடுத்துக்-காட்டு. ஆனாயநாயனார் ஆனிரை மேய்க்கும் குடியிற் பிறந்தவர். அவர் ஆனிரை மேய்க்கும் தம் தொழிலை மேற்கொண்டார். ஆயர்களுக்கு வேய்ங்குழல்இசைத்தல் பிறவிக்கலை, ஆனாயர் பசுக்களை மேயவிட்டுத்தாம் வேய்ங்குழலிலே அஞ்செழுத்து மந்திரத்தை இசைப்பார். இவ்வாறு பலநாளும் இசையின்ற நலத்தால் உண்மை உணர்ச்சியுடன் இசைக்கும் ஆற்றல் அவருக்கு அமைந்துவிட்டது. அவர் அச்சிவ மூலமந்திரத்துப் பொருளுணர்ந்து பாடிய சமயம் அண்டசராசரம் அனைத்தும் அவ்விசைப்பெருக்கில் அமிழ்ந்து சலியாதிருந்தன. "ஊசிமேல் நுனியில் நின்றே உக்கிரதவத்தையாற்றும் மாசில் மாதவரும் காணா

மலர்பதம்" அவரைத் தேடிவந்து ஆட்கொண்டருளியது. தாம் கொண்ட கொள்கையில் தொண்டு பூண்டு ஒழுகுமிடத்து உலகியலுக்கு மாறான 'சோதனை' எதிர்ப்பட்டவேளையில் சற்றும் சித்தசலனமின்றி ஒழுகி உய்திபெற்ற நாயன்மாரும் சிலர் உளர். 'பிள்ளைக்கறி' அளித்த சிறுத்தொண்டரும், இல்லத்தரசியை அளித்த இயற்பகையாரும் இத்தகையவர்கள். பள்ளித்தாம **மென்பணி** செய்த முருகநாயனார் போன்றோரும் உளர். அரிவாளைக் கழுத்திற் பூட்டி **வன்பணி**செய்த தாயனார் போன்றோரும் உளர். வன்பணி செய்தோருள்ளும் தாமே தலையைச் சிலையில் மோதிச்சிதறச் செய்ய முயன்ற திருக்குறிப்புத் தொண்டரும் உளர். 'விரையாக்கலி' உண்ட தாயின் முலைப்பால் பருகிய குழந்தையை வாளால் எறிந்த கோட்புலியும் உளர். ஆகமநெறி முறையில் அணுவும் பிசகாது பூசை செய்த திருநீலநக்கரும் உளர். ஆகமப் பொருள் பொதிய ஊனமுது அளித்த கண்ணப்பரும் உளர். வேந்தராய்ப் பணிசெய்தோரும் உளர். புலையராய்த் தொண்டுபட்டோரும் உளர். இவ்விடத்தில் சாக்கியநாயனாரைப் பற்றிச் சிறப்பாகக் கூறுதல் பொருத்தமாகும். அவர் சமயநெறி பலவற்றையும் ஆராய்ந்து பார்த்தவர். சாக்கியசமயத்தைச் சார்ந்து ஒழுகியவர். ஈற்றில் சைவநெறிக்குள்ள தத்துவம் பிறநெறிகளுக்கில்லை எனத் துணிந்தவர். அவர் சிவசிந்தனையே பொருள் எனத் தேர்ந்து கொண்ட பின்னரும் சாக்கிய வேடத்தைத் துறக்கவில்லை. அவர் மேற்கொண்ட சிவபூசை புறப்பார்வைக்கு ஆகம விரோதமானது. அவர் வெளியில் இருந்த சிவலிங்கத்தைக் கல்லால் எறிந்து பூசித்தார். அவர் எறிந்த கல் ஈசர்க்குச் சாத்தும் நன்மலராயிற்று! படிப்பறிவுமிக்க இக்காலத்திலே பலசமய நெறிகளையும் படித்து விசாரம் புரிபவரும், சமயாசாரத்தைக் கைக்கொண்டொழுகுவதில் அத்துணை ஆர்வமில்லாதவரும், உண்மையைத்தேடும் உண்மையான நாட்டமுடையோருமான இந்நாட் சாதகர் சிலருக்குச் சாக்கியநாயனார் குறிகாட்டுபவராய் அமைதல் கூடும் அல்லவா! அருட்பாக்கள் அருளிய அருளாளர் சிலரும் இத்திருக்கூட்டத்துள் உள்ளனர். தேவார முதலிகள், திருமூலர், சேரமான் பெருமாள், காரைக்காலம்மையார் ஆதியோர் இத்தகையோர். இவர்கள் அருளிய திருப்பாடல்களில் ஈடேற்றம் வேண்டியோர்க்கு எப்பரிசாயினும் ஏத்தற்குரிய பல வழிகளும் உள்ளன. இவற்றுக்கும் அப்பால்

'அப்பாலும் அடிசார்ந்தார்' என்னும் ஒரு தொகை அடியாரும் உள்ளனர். இத்தொகைஅடியாருள் அடங்காத மெய்யடியார் எவரும் இந்த இடம் அகன்ற ஞாலத்தில் இருத்தல் இயலாது. அவர்கள் ஒவ்வொருவரதும் முகப்பொலிவு அத்துணைத் தெளிவாகத் தோன்றவில்லை என்பது உண்மையே. ஆயினும் உற்றுநோக்கினால் அத்திருமுகங்கள் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமகம்சராகவோ, பகவான் ரமணராகவோ, யோகசுவாமிகளாகவோ மற்றும் மார்க்க அரேலியராகவோ, பரஞ்சுடரேவழி காட்டு எனப்பாடிய கர்தினாலாகவோ தோன்றுதல் கூடும். ஆகவே பெரியபுராணத் திருக்கூட்டம் திறவோர் அனைவரும் ஒன்று கூடியிருக்கும் ஓர் ஆரணியம் என வருணிக்கத்தக்கது. இத்திருத்தொண்டர் வளாகத்துள் தமக்கு ஒரு வழிகாட்டியைக் காணாதார் காணாதாரே.

உவமையில்லாக் கலைஞானம் முதல் உணர்வரிய மெய்ஞ்ஞானம் வரை ஞானத்தின் பலதுறைகளையும் பரந்துபடக்கூறியிருப்பதனாலும் இத்திருநூலைப் பெரியபுராணம் எனக் கூறலாம். அமுதருந்த அமர்ந்திருக்கும் அடியார் முன் வாழைக்குருத்தின் ஈர்வாயை வலப்பக்கமாக இடுதல் முதல் திருவடிஞானம் வரையான அனைத்தும் இப்பெருநூலிற் செறிந்து கிடக்கின்றன. சேக்கிழார் பெருமான் மூத்ததிருநாவுக்கரசுக்கு விடம் ஏறும் முறையைச் சொல்லுமிடத்து அவர் அவ்வறிவில் தேர்ந்தவராகத் தோன்றுகின்றார். ஆனாயநாயனார் இசைவாசிக்கும் நுட்பத்தை விவரிக்குமிடத்து அவரோர் இசைவாணராகத் தோன்றுகின்றார். பூசலார் நாயனார் அமைத்த மனக்கோயில் ஸ்தபதி ஒருவரின் சிற்பவிற்பன்னத்தைக் காட்டுகிறது. உடுப்பூர் வேட்டுவக்குறிச்சியையும், வேட்டுவர் மொழிவழக்காறு முதலியவற்றையும் கூறுமிடத்துச் சேக்கிழார் ஒரு சமூகவியலாளராகத் தோன்றுகின்றார். நாயன்மாரது தலயாத்திரைபற்றிக் கூறியிருப்பனகொண்டு 'சிவக்கவிமணி' அவர்கள் மிகச்சரியான வரைபடம் வரைந்திருக்கிறார். சாரிபுத்தன் எனும் புத்தனுடன் செய்யும் வாதம் அவரைத் தத்துவ வித்தகராகவும் தருக்க வாதியாகவும் காட்டுகிறது. இவ்விடத்தில் தத்துவம் பலவும் பயின்று பௌத்ததத்துவத்தைச் சார்ந்து ஒழுகிய சாக்கியநாயனார் ஈற்றில் சைவநன்னெறியே பொருள் எனத் தெளிந்து கொண்டமையைக் கூறும் செய்யுளொன்றைக் குறிப்பிடுதல் பொருத்தமாகும்.

செய்வினையும் செய்வானும், அதன்பயனும், சேர்ப்பானும்
மெய் வகையால் நான்காகும் விதித்தபொருள் எனக்கொண்டே
இவ்வியல்பு சைவநெறி அல்லவற்றுக்கு இல்லையென
உய்வகையாற் பொருள் சிவன் என்று அருளாலே உணர்ந்தறிந்தார்.

சிவஞான போதத்தைப் போன்றே பன்னிரு செய்யுள்களாலான திருப்பாசுரத்துக்கு இருபத்துநான்கு செய்யுட்களில் சேக்கிழார் செய்திருக்கும் பேருரை "ஞானம் என்பது ஈசன்மேல் அன்பு" எனும் சித்தாந்தஞானத்தைச் செறிவுபெற உரைப்பது. இவ்வாறெல்லாம் அபரஞானம் பெருக்கக்கூறப்பெற்றிருந்தபோதும் அவற்றைப் பொருந்தியவழிக் கூறிச் சென்றதேயல்லாமல் மற்றும் பௌராணிகர்போலவும், காப்பியப்புலவர் போலவும் கல்விப்பெருமை காட்டவில்லை. அவர்கூறும் அறிவுத்துறைகள் பலவற்றுள்ளும் அவரே பெருமைப்படத்தக்கது திருமுறை ஞானம், இதற்குச் சான்றான அவர்தம் பாயிரப் பாடலொன்றைக் கூறுவது ஈண்டுப்பொருத்தமாகும்.

மதிவளர் சடைமுடி மன்றுளாரை முன்
*துதிசெயும் **நாயன்மார் தூய சொன்மலர்***
பொதி நலன் நுகர்தரு புனிதர் பேரவை
விதிமுறை உலகினில் விளங்கி வெல்கவே.

இப்பாவிலேயுள்ள **நாயன்மார் தூய சொன்மலர் பொதிநலன் நுகர்தரு புனிதர்** என்னும் சிறப்பு சேக்கிழாருக்கும் பொருந்துவதேயாம். சேக்கிழார்தம் திருநூலைத் **தேவாரச் சொற்களை இடையிடையே வைத்துத் தொடுத்த தெய்வீக மணம் கமழும் வாடாதமாலை** என வருணித்தல் தகும். அவர் தேவாரமுதலிகளது வரலாற்றைத் தொடுத்துச் செல்லும் வண்ணத்தைக் கூர்ந்துநோக்குமிடத்துத் திருப்பதிகப் பதக்கத்துக்கு இயைந்த வண்ணமாலை என்னும் வகையிலேயே புனைந்திருக்கின்றார் என்ற எண்ணம் தோன்றும். முதலிமூவரதும் திருச்சரித்தைக் கதையோட்டத்துக்கு முதன்மை கொடுத்து எழுதுவோரும், படிப்போரும் அற்புதசம்பவங்களுக்கு முக்கியம் கொடுத்திருப்பது தெரியவரும். அவற்றில் மலைத்தொடரொன்றைத் தொலைவிலிருந்து நோக்குமிடத்து அம்மலைத்தொடரின் சிகரங்கள் தோன்றுவது போல அற்புதங்கள்

எடுப்பாகத் தெரியும். ஆனால் சேக்கிழார் செய்யுள்களிருந்து அவ்வற்புதங்களிலே குன்றின்மேல் ஒளிரும் அணையாத்தீபம்போல திருப்பதிகச் சுடர் விளங்குவதுதெரிகிறது. இரவிருளில் தீபச்சுடரொன்றே கண்ணைக்கவரும் சோதியாகப் பிரகாசிப்பதுபோல, கதை அற்புதம் அனைத்தும் அடங்க அத்தேவாரத் திருப்பதிகத்திலே கருத்தழிந்து நிற்கும் வண்ணம் சேக்கிழார் செந்தமிழ் அமைந்திருக்கிறது.. சீகாழிப்பிள்ளையார் ஞானப்பாலருந்தியகதையைப் பெரும்பாலும் தோடுடையசெவியன் என்று பாடுவதுடன் உரைநூல்கள் நிறைவு செய்துவிடும். சேக்கிழார் பெருமானோ அத்திருப்பதிகத்துக்கு ஏழு பாடல்களில் சிற்றுரை வரைந்திருக்கிறார். அதில் **தோ** எனத்தொடங்கும் முதலெழுத்தின் தமிழ்வேதக் கருத்தமைதி முதல் திருக்கடைக்காப்பு ஈறான பதிகஅமைப்பு வரை விளக்கம் செய்திருக்கிறார்.

இனி, **பிள்ளைபாதி புராணம்பாதி** என்னும் வழக்காறில் உள்ளபடி பெரியபுராணத்தின் பாதிப்பகுதி சம்பந்தப்பிள்ளையார் வரலாறு ஆகும். மற்றையபாதியில் பெரும்பகுதி சுந்தரமூர்த்திசுவாமிகள், திருநாவுக்கரசுசுவாமிகள், காரைக்காலம்மையார், சேரமான்பெருமாள் நாயனார், திருமூலர் என்போரது வரலாறுகளாகும். இந்நாயன்மாரது பாடல்களே திருமுறையின் பெரும் பகுதி. இதனைச் சிந்திக்குமிடத்து சைவத்திருமுறைகளிற் பெரும்பாலானவை இப் பன்னிரண்டாம் திருமுறையுள் அடக்கம் எனக் கூறத்தோன்றும். திருமுறைக்கலைஞரான பேராசிரியர் வெள்ளைவாரணனாரின் பன்னிரு திருமுறைவரலாறு, 'சிவக்கவிமணி' அவர்களின் தக்க இடங்களில் திருமுறைப்பாக்களை எடுத்தாண்டு எழுதிய பெரியபுராண விரிவுரை என்பவற்றை நோக்குபவர்கள் இதனைத் தெளிவாக விளங்கிக் கொள்வார்கள்.

இனி, நூலறிவாளர் நுணுகியுமறியாத நுட்பங்கள் சில இத்திருநூலிலுள. தமது மனைவியைச் சிவனடியார்க்குக் கொடுத்த இயற்பகையார் நிகழ்ச்சியும், பிள்ளைக்கறிகொடுத்த சிறுத்தொண்டர் செய்கையும் அத்தகையன. இயற்பகையார் செய்கையை உலகியலுக்கு பொருந்தாததெனவும், பெற்றெடுத்த புதல்வனை வெட்டிக் கறிசமைத்தது இழிதகைய செயல் எனவும் சிலர் கூறுவர். நாயனாரது பெயரே இயற்பகையார் என்று இருக்கும் போது அவர் செயலை

உலகியலுக்கு விரோதமாகக் கண்டது அத்துணை விவேகமன்று. பிள்ளைக்கறியமுதைப் பழிப்போர்க்குக் காரைக்காற்பேய்

அண்டர் நாயகனார் என்னை அறிவரேல் அறியாவாய்மை
எண்டிசை மாக்களுக்கு யான் எவ்வுருவாயிலென்'

என்று கூறியதைப்போன்று ஆசிலாநல்லறம் உமக்கு அறியவருமோ என்று அமைவதே தக்கது. ஆனால் மெய்ப்பொருள் காணும் கல்வி அறிவினரும் கல்லாதநல்லவர்களும் என்றுமே சிறுத்தொண்டரின் பத்தித்திறத்தை வியந்து போற்றிவந்தனர். இதற்கு அது நாடகமாக நடிக்கப்பட்டுவந்தமை தக்கசான்று. பத்திப்பித்தேற்றும் இச்சரிதங்களின் நுட்பம் கூர்த்த அறிவு அத்தனையும் கொள்ளைகொடுத்துக் காண்டற்குரியதே. இறைபக்தியில் ஆழ்ந்த ஒரு பெரியார், பித்தரே எனக்குயாவரும் யானுமோர் பித்தரே எவர்க்கும் என்றனர். நாடவர் பழித்துரை பூணதுவாக என்பது மணிவாசகம். பித்தர்செய்கை போன்றே பத்தர் செய்கையும் பிறரால் தெளியொணாத நூதனம் ஆயினும், அது பெருமான் தாமாக வந்து ஆட்கொள்ளவல்ல செயற்கருஞ்செயலே. பெரியபுராணத்துப் பெரியார்பலரும் பெருமான் அருளைத் தேடிச் சேர்ந்தவரல்லர். பெருமான் தாமாகவே தேடிவந்து ஆளும் பாக்கியத்துக்கு ஆளானவர்களே அவர்கள்.

சாதனையில் ஈடுபடுவோர்குப் பெரியபுராணப் பெரியோர் தக்கதிசைகாட்டியாயுள்ளனர். அடியார்க்கு அமுதுசெய்வித்தல் ஓர் சைவ ஒழுக்கம் என்பதை நாம் அடிநாட்தொட்டு அறிந்திருக்கிறோம். குறித்தசில நாள்காளிலாதல் அதைக்கருத்துடன் கடைப்பிடித்தும் வருகின்றோம். ஆயின் இது ஓர் கடன் என்ற அளவிலும், புண்ணியம் தேடும் ஒருபாயம் என்ற அளவிலுமே அமைகிறது. சங்கடமான நிலைஏற்படும் வேளைகளில் இக்கடன்கழித்தலைக் கைவிடுவதில் அத்துணைக்கவலைப்படுவதில்லை. புண்ணியத் தேட்டம் பற்றியும் பொருட்படுத்துவதில்லை. இலாபநட்டக்கணக்கில் கவனமாயிருக்கிறோம். இத்தகைய நமக்கு இளையான்குடிமாறரின் 'மாகேசுரபூசையின் மாண்பு" கலங்கரை விளக்கமல்லவா? கோட்புலிநாயனாரின் செய்கையை மனத்திற்பதிப்போர் கோயிற் சொத்தைக் கையாடுவரோ? மந்திரம் ஒன்றைத் தம்மைக் காக்கும் கவசம் எனக் காதலித்துக் கைக்கொள்வதானால் அது

திருநீலகண்டத்துக் குயவனார் 'தீருநீலகண்டம்' எனும் ஆணைக்குக்-கட்டுப்பட்டது போன்றும் உருத்திரபசுபதியார் ஸ்ரீருத்ரம் ஓதியதுபோன்றும், ஆனாயர் அஞ்செழுத்து மந்திரம் இசைத்ததைப் போன்றும் அமைதலே அழகு. மந்திரங்களை உதட்டளவில் மூலையிலிருந்து முணுமுணுப் போர்க்கு உயிரை எழுப்பிச் செபித்தற்குரிய ஊக்கத்தை இக்கதைகள் தரும் என்பது உறுதி. சிவனடியார் வேடமே மெய்ப்பொருள் எனும் கொள்கையினரான மெய்ப்பொருள் நாயனார், கைதவவேடங்கொண்டு வந்தோன் உயிருண்ணும் தீது புரிந்த வேளையிலும் மெய்த்தவவேடமே மெய்ப்பொருள் எனத்தொழுது வென்ற வீரமும், தீது புரிந்த அம்மாற்றான் மேல் பாய்ந்து வந்த வாயிற் காவலனை ஆவிசோரும் அந்நிலையினும் **தத்தா நமரேகாண்** எனத்தடுத்த ஆண்மையும், அம்மாற்றானைப் பாதுகாப்பாகக் கொண்டுவிடுமாறு பணித்த செந்தண்மையும், பாதுகாப்பாக விட்டுவந்த தத்தனுக்கு இன்றெனக்கு ஐயன் செய்தது யார் செய்யவல்லார் என்ற நன்றித்திறமும் ஆன இவற்றை உருகிஉருகி உணர்வோரெல்லாம் தாமும் செந்தண்மைபூண்ட செல்வராவர் என்பதில் ஐயமில்லை.

சேக்கிழார் பெருமானின் செந்தமிழ் பற்றியும் சிலசொற்கள் கூறுதல் இன்றியமையாதது. தீந்தமிழின் திறமெல்லாம் பொலிவது அவர்தம் செந்தமிழ்க்காப்பியம். இக்காப்பியத்திலே மங்கல வழக்கன்றி அமங்கலவழக்குகளைக் காண்டலரிது. விழுமியது நுவலும் நூற்பொருளுக்கியைந்த இழுமென் மொழியே எங்கும் விளங்கும், இத்திரு நூலிலுள்ள ஈரநன்மொழிகளை நயப்போர் அவருக்கு அருள்மொழித்தேவர் என்ற இயற்பெயரமைந்தமை மிகப்பொருத்தமென நயப்பர். அவர்தம் தெய்வத்தமிழ் எளிமையும் நேர்மையும் பொருந்தியது, அலங்காரம் வேண்டாதது. அலங்காரமின்மையே சான்றோர் செய்யுட்களின் தனித்துவமாகத் திகழ்ந்தது. வடநாட்டினின்றும் வந்தேறிய பண்பே அலங்காரம். இந்த வந்தேறிய வெள்ளப்பெருக்கிலே வைகையில் இட்ட அமணரின் ஏடுபோல் காப்பியப்புலவரெல்லாம் அள்ளுண்டுபோக ஏதிரேறிச் சென்ற திருப்பாசுர ஏடுபோல் சேக்கிழார் பெருமான் தோன்றுகின்றார். சேக்கிழாரின் தெய்வத்தமிழில் ஈடுபடுதலால் செந்தமிழின் திறமும் பெருகுதல் உறுதி.

பாம்பின்கால் பாம்பறியும் என்பர். ஆளுடையபிள்ளையாரின் பெருமையை ஆளுடைய அரசே அறிவார். அவ்வாறறிந்தமையாலேயே ஆளுடைப்பிள்ளை அமர்ந்த சிவிகையை அவர் தாங்கி வந்தார். நாயன்மார்களது திருவடிகளை முடிமிசைச் சூடும் நலத்தினரே எங்கள் சுவாமிகள். எங்கள் சுவாமிகள் சிவதொண்டன் நிலையம் நிறுவுதற்கு முன்னமேயே தக்க அடியவர்களைக் கொண்டு கோயில் தோறும் பெரியபுராண விரிவுரைகள் நிகழச்செய்தார். சிவதொண்டன் நிலையம் நிறுவப்பெற்றதும் பெரியபுராணபடனமும் அதன் ஒரு பணியாயிற்று. இப்புராணபடனத்தாற் பண்பட்டோபலர்.

சிவசிந்தனைக்கும், செந்தமிழ்த் திறத்துக்கும் இத்திருநூலுக்-கிணையான சாதனம் பிறிதில்லை என்பது நாமும் சொந்த அனுபவத்-தினாற் கண்டதொன்றே. குருநாதன் திருவாக்கு, சிவதொண்டன் புராணபடனப்பணி, சொந்த அனுபவம் என்றிவற்றால் இத்திருநூலை உருவாக்கும் எண்ணம் பல ஆண்டுகளுக்கு முன்னமே உதித்தது. ஆறுதலாயிருக்கும் இந்நாளிலேயே அது நிறைவேற வேண்டும் என்பது தெய்வசித்தம் போலும்.

இனி இந்நூலின் வசனநடைபற்றியும், நூல் அமைதி பற்றியும் சில சொற் கூறுதல் வேண்டுவதாகின்றது. ஆறுமுகநாவலரது பெரிய-புராண வசனமே முதலிற்றோன்றியதும், இன்றுவரை அதிகார பூர்வமானதாக உள்ளதுமாகும். சைவஒழுக்கம் யாவரையும் சார்தல் வேண்டுமென்ற உள்ளார்ந்த உணர்ச்சியுடன் அமைத்தனராகையாலே அது உயிர்ப்பும் எளிமையுமுடையதாக விளங்குகிறது. அவர்தம் வசனப்பகுதிகள் சில இன்றும் வியக்கும் வண்ணமான வழங்கு நடையிலுள்ளன. ஆயினும் வடசொற்கள் விரவ நெடிய வசனங்களாக எழுதும் அந்நாள் வழக்கு ஆங்காங்கே காணப்படுகிறது. அது இந்நாளில் விளங்குவதற்குக் கடினமாயுள்ளதெனச் சிலர் கூறுவர். அதனை மறுப்பதற்கில்லை. 'மறுமலர்ச்சி நடை'யில் வெளிவந்த உரைநூல்கள் சிலவும் இந்நாளில் வழங்குகின்றன. மறு எனும் சொல்லின் குற்றம் எனும் பொருளுக்கு இயைந்தனவாக அவற்றுட் பல உள்ளன. திருமுறைக்கலைஞரான பேராசிரியர் வெள்ளைவார-ணனாரின் உரைநடை பெரியபுராணத்தின் பெருமைக்குத் தக்கதாக

உளது. உண்ணும் சோற்றிற் கற்கடிபடுதல் போன்ற இடறுதல் ஏதுமின்றி ஆற்றொழுக்காகச் செல்லும் நடை அவர்தம் நடை. அது நீர்கலந்தபால் போலன்றி முறுகக்காய்ச்சிய பால் போன்ற செறிவினது. அவர் சற்றுச் சுருக்கமாக எழுதியமையால் விவரணப்பகுதிகள் சில விடுபட்டுள்ளன. அவற்றுள் வேண்டுபவற்றை இணைத்தும் கடின சொற்புணர்ச்சிகளைத் தவிர்த்தும் இந்நூலின் சில பகுதிகளை அமைத்திருக்கிறோம். நாயன்மார் சொன்மலர்களை அடிக்குறிப்பாகத் தரமுயன்றுள்ளோம். அடுத்த பதிப்பில் இதனைச் சற்றுவிரிவாக இயற்றுவதற்கு குருவருள் முன்னிற்பதாக.

சரிதங்களின் முதலில், குறித்த சரிதங்களுக்குரிய திருத்தொண்டத்தொகைப்பகுதிகளைக் குறித்திருக்கிறோம். அவை முதல் நூற் பகுதிகள் எனும் முதன்மையுடைமையாலும், சரிதங்களுக்கு மங்கல வாழ்த்துப் போல் அமைந்திருப்பதாலும் நன்கு பொருந்தியிருக்கின்றன. அடுத்து வழிநூலான திருத்தொண்டர் திருவந்தாதியைக் குறித்திருக்கிறோம். அது பாயிரம் போன்று சரிதத்தை முகம் செய்து நிற்கிறது. நடுவணாக அமைந்திருப்பது சரிதப்பகுதி. தொடர்ந்து இடம்பெறுவது திருத்தொண்டர்புராண சாரம். அது சரிதத்தின் சாராம்சத்தை மனதிற் பதித்து வைத்ததற்கு வாய்ப்பாக உள்ளது. தொடர்ந்துவரும் நுண்பொருள் நாவலரது பெரியபுராண சூசனத்தையும், 'சிவக்கவிமணி' அவர்களின் 'கற்பனை'யையும் அடியொற்றியது. இவ்வசனநூல் குருபூசை வேளைகளின் போது படித்தற்கும் பயன்படுமாதலால் பஞ்சாராத்திக்கு முன் பாடுவதற்கான தேவாரம் புராணம் இரண்டையும் குறித்துள்ளோம். தேவாரம் குறிக்கப்படாத இடத்து குறித்த நாயனாருக்கு அடிமைகூறும் திருத்தொண்டத்தொகைத் தேவாரத்தையே பாடி மகிழலாம். சில-சரிதங்களின் கீழ் குறிப்புரை எழுதியிருப்பதும் பூசனையைச் சிரத்தையுடன் செய்தற்கோர் உபாயமாகவேயாம்.

மணிவாசக சுவாமிகளை மூவர் முதலிகளுடன் சேர்த்து நால்வர் என வழங்குதலே பெருவழக்கு. அவ்வாறிருந்தபோதும் நாயன்மார் சரிதம் கூறும் பெரியபுராணத்தில் மணிவாசக சுவாமிகள் சரிதம் இடம் பெறாமைக்கு அவரைத் திருத்தொண்டருள் ஒருவராக அன்றிச் சிவமாகவே கொண்டது ஒரு காரணமென்பர். தாயுமானசுவாமிகளும்

'வாதவூர்த்தேவு' என்றே அழைத்தனர். திருத்தொண்டர்புராணத்து முதல் நூலான திருத்தொண்டத்தொகையில் மணிவாசகசுவாமிகள் வரலாறு இடம் பெறாததால் அதனை அடியொற்றிப் பாடிய திருத்தொண்டர் புராணத்திலும் இடம்பெறவில்லை என்பது இன்னோர் வலுமிக்க காரணம். நாம் இவ்வாத தருக்கங்களில் வீண்காலம் போக்க விரும்பாது நால்வரென்னும் வழக்காற்றின் வழியில் தேவார-முதலிகளுடன் திருவாசகமுதலியையும் இணைத்து நிறைவாகக் காணவே பெரிதும் விரும்புகிறோம். சேக்கிழார்பெருமான் மணிவாசக சுவாமிகள் வரலாற்றைப் பாடியிருப்பரேல் அது ஓர் செம்மையான வர-லாறாயிருக்குமென்பது அறிஞர்பெருமக்களின் கருத்தாகும். இப்போதுள்ள மணிவாசகசுவாமிகள் பற்றிய நூல்களுள் கடவுண்மாமுனிவரின் திருவாதவூரடிகள் புராணமொன்றே அவர் வரலாற்றை முழுமையாகக் கூறும் தனிநூல். பரஞ்சோதிமுனிவரின் திருவிளையாடற் புராணத்திலே சோமசுந்தரப் பெருமான் திருவிளையாடல்களைக் கூறுமிடத்து மணி-வாசகசுவாமிகள் பொருட்டுச் செய்த திருவிளையாடல்களும் கூறப்பட்டி-ருக்கின்றன. அவ்வளவே கூறினரெனினும் அவ்வளவும் திருவாசகச் சொல்லாட்சி செறிந்தனவாயிருக்கின்றன. மாணிக்கவாசகர் என்னும் பெயரும் அப்புராணத்திலேயேயுள்ளது. இவ்விருநூல்களையும் விடக் காலத்தால் முந்தியது பெரும்பற்றப்புலியூர்நம்பி திருவிளையாடற்புராணம். அதிற் புனைவுகள் குறைவு. இவையாவினும் சிறந்தது திருவாசகத்-திற்காணும் மணிவாசகப் பெருமான்வரலாறே. மணிவாசகசுவாமிகள் வரலாற்றையும் இத்திருநூலில் இணைத்துள்ளோம்.

இப்பெருநூலைச் செப்பமாகச் செய்துதந்த எவகிறீன் அச்சக உரிமையாளரான அன்பர்க்கும், ஊழியர்க்கும் திருவருள் பெருகுவதாக.

- செல்லத்துரை சுவாமி.
சிவதொண்டன் நிலையம்.

நூன்முகம்

எழுத்தறிவும், சமயக்கொள்கையும் உடைய சைவத்தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் அவசியம் கற்கவேண்டிய நூல் பெரியபுராணமாகும். பெரிய புராணத்தின் பெருமைபற்றிச் சேக்கிழார் புராணம் இயற்றிய உமாபதிசிவாச்சாரியார் முதல் சமீபத்தில் வாழ்ந்த பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன் வரைப் பெருந்தொகையான அறிஞர்கள் புகழ்ந்து கொண்டாடி மகிழ்ந்து பிரசாரம் செய்திருக்கின்றார்கள். இப்படிப் பலரும் பலகோணங்களில் அணுகிய போதும் தனது பெருமை மகிமைகளில் புத்தம் புதிதாக விளங்கும் அருமை பெரியபுராணத்திற்கு உள்ளது.

பெரியபுராணத்தில் தன்மனதையும் அறிவையும் பறிகொடுத்த சைவப்பேரறிஞரான சோமசுந்தரநாயக்கர் என்பவர் ''சேக்கிழார் திருவாக்குண்மை'' என்னும் தமது நூலில் "உலகெலாம் எனும் சொல்லை அசரீரியாக வெளிப்படுத்திய தில்லைநடராசப் பெருமான் மீதியைச் சேக்கிழாரின் சரீரியாக நின்று அருளியிருக்கின்றார்" என்ற கருத்தைக் கூறியிருக்கின்றார். அதாவது சேக்கிழார் வாக்கும் உலகெலாம் என்பது போல நடராசப்பெருமான் வாக்கே என்பது அவர் முடிவு.

பேராசிரிய அ.ச. அவர்கள் பெரிய புராணத்தை சைவ சமய நூலென்று ஒதுக்காது அனைவரும் கற்று நலம் பெறவேண்டும் என்றும் சமயவரம்பினைத்தாண்டி அனைவருக்கும் மேன்மை தரத்தக்க விடயங்கள் பெரியபுராணத்துள்உள்ளன என்றும் கூறுவர். இவரது கருத்தை வலியுறுத்துவதுபோல பெரியபுராணத்தில் ஒரு பாடல் உள்ளது.

இங்கு இதன் நாமம்கூறின் இவ்வுலகத்து முன்னாள்
தங்கிருள் இரண்டில் மாக்கள்சிந்தையுள் சார்ந்துந்துநின்ற
பொங்கிய இருளைஏனைப் புறஇருள் போக்குகின்ற
செங்கதிரவன் போல்நீக்கும் திருத்தொண்டர்புராணம் என்பாம்.

உலகின் புற இருளைச் சூரியன் போக்குவது போல் மனிதனின் அகஇருளைப் போக்குவது பெரிய புராணம் என இப்பாடல் மூலம் சேக்கிழார் தெரிவிக்கின்றார்.

உலகில் மனிதராக உள்ள அனைவரும் அறியாமை - வஞ்சனை என இருவிதகுறைபாடு உடையவர்களே என்பது ஒரு பெரியாரின் தீர்மானமாகும். சுயநலம் ஆசை - கோபம் - வெறுப்பு முதலிய குணங்கள் எல்லாம் வஞ்சனையில் அடங்கும். எனவே அறியாமை வஞ்சனை என்னும் அகஇருள் உடைய அனைவரும் அவ்விருளைப் போக்க வல்ல பெரியபுராணம் எனும் சூரியனைத் தம் அகத்தில் உதிக்கச் செய்தல் வேண்டும்.

சிவனடியார்பெருமை, சிவனடியார்இயல்பு, இவர்க்குச் சிவபெருமான் அருளும் முறை என்பவற்றையும், திருஞானசம்பந்தர் முதலிய அருளாளர்களின் திருமுறைப் பொருள்களையும் விளங்கிக்கொள்ளப் பெரியபுராண அறிவு அவசியம் என்பது ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் வற்புறுத்தலாகும்.

ஒருகாலத்தவராய் ஒரு தேசத்தவராய் இல்லாது விளங்கும் திருத்தொண்டர்களின் வரலாற்றை விளக்கும் இப்பெரியபுராண அறிவு அனைவரையும் சிவபத்தராக்கி, சிவானந்தத்தை வழங்கவல்லது என்பது பெரிய புராணக் கடைசிப் பாடலின் உட்கிடையாகும்.

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்றுகாதலித்து உள்ளமும் ஓங்கிட
மன்றுளார் அடியாரவர் வான்புகழ்
நின்றதெங்கும் நிலவி உலகெலாம்.

இப்பாடலில் உள்ளம் எனும் சொல் ஆன்மாவைக் குறிக்கும். ஆன்மா, **ஒன்று** எனப்படும் சிவத்தை அன்புசெய்து இன்பம் பெற்று உயர்வடையும் படி நடராசப்பெருமான் அடியவர் புகழ் உலகெங்கும் விளங்குகின்றது.

இத்தகைய பெரிய புராணம் சைவமக்களுக்குக் கிடைத்திருக்கவும் இதைக் கற்று இதனால் அடையத்தக்க பயனைப் பெறாதிருப்பது மிகவும் இரக்கத்துக்குரியதாகும். உலகின் பிற பொருள்களை அன்பு-செய்யும் நிலைமாறி உலகின் கருத்தாவாகிய சிவத்தை அன்பு செய்யச் செய்யும் பெரியபுராணத்தை அன்புடன் அணுகி இன்புறுவோம்.

உ

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய
திருத்தொண்டத்தொகை

திருவாரூர் **பண் - கொல்லிக்கௌவானம்**

திருச்சிற்றம்பலம்

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்
திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்
இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்
இளையான்றன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
விரிபொழில் சூழ்குன்றையார் விறன்மிண்டற் கடியேன்
அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. (1)

இலைமலிந்த வேல்நம்பி எறிபத்தற் கடியேன்
ஏனாதி நாதன்றன் அடியார்க்கும் அடியேன்
கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பற் கடியேன்
கடவூரிற் கலயன்றன் அடியார்க்கும் அடியேன்
மலைமலிந்த தோள்வள்ளல் மானக்கஞ் சாறன்
எஞ்சாத வாட்டாயன் அடியார்க்கும் அடியேன்
அலைமலிந்த புனல்மங்கை ஆனாயற் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. (2)

மும்மையால் உலகாண்ட மூர்த்திக்கும் அடியேன்
முருகனுக்கும் உருத்திர பசுபதிக்கும் அடியேன்
செம்மையே திருநாளைப் போவார்க்கும் அடியேன்
திருக்குறிப்புத் தொண்டர்தம் அடியார்க்கும் அடியேன்
மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினால் எறிந்த
அம்மையான் அடிச்சண்டிப் பெருமானுக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. (3)

திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட
திருநாவுக் கரையன்றன் அடியார்க்கும் அடியேன்
பெருநம்பி குலச்சிறைதன் அடியார்க்கும் அடியேன்
பெருமிழலைக் குறும்பற்கும் பேயார்க்கும் அடியேன்
ஒருநம்பி அப்பூதி அடியார்க்கும் அடியேன்
ஒலிபுனல்சூழ் சாத்தமங்கை நீலநக்கற் கடியேன்
அருநம்பி நமிநந்தி அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. (4)

வம்பறா வரிவண்டு மணம்நாற மலரும்
மதுமலர்நற் கொன்றையான் அடியலாற் பேணா
எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன்
ஏயர்கோன் கலிக்காமன் அடியார்க்கும் அடியேன்
நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்
நாட்டமிகு தண்டிக்கும் மூர்க்கர்க்கும் அடியேன்
அம்பரான் சோமாசி மாறனுக்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. (5)

வார்கொண்ட வனமுலையாள் உமைபங்கன் கழலே
மறவாது கல்லெறிந்த சாக்கியர்க்கும் அடியேன்
சீர்கொண்ட புகழ்வள்ளல் சிறப்புலிக்கும் அடியேன்
செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டர்க் கடியேன்
கார்கொண்ட கொடைக்கழறிற் றறிவார்க்கும் அடியேன்
கடற்காழிக் கணநாதன் அடியார்க்கும் அடியேன்
ஆர்கொண்ட வேல்கூற்றன் களந்தைக்கோன் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. (6)

பொய்யடிமை இல்லாத புலவர்க்கும் அடியேன்
பொழிற்கருவூர்த் துஞ்சிய புகழ்ச்சோழர்க் கடியேன்
மெய்யடியான் நரசிங்க முனையரையர்க் கடியேன்
விரிதிரைசூழ் கடல்நாகை அதிபத்தர்க் கடியேன்
கைதடிந்த வரிசிலையான் கலிக்கம்பன் கலியன்
கழற்சத்தி வரிஞ்சையர்கோன் அடியார்க்கும் அடியேன்
ஐயடிகள் காடவர்கோன் அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. (7)

கறைக்கண்டன் கழலடியே காப்புக்கொண் டிருந்த
கணம்புல்ல நம்பிக்கும் காரிக்கும் அடியேன்
நிறைகொண்ட சிந்தையான் நெல்வேலி வென்ற
நின்றசீர் நெடுமாறன் அடியார்க்கும் அடியேன்
துறைக்கொண்ட செம்பவளம் இருளகற்றுஞ் சோதித்
தொன்மயிலை வாயிலான் அடியார்க்கும் அடியேன்
அறைக்கொண்ட வேல்நம்பி முனையடுவார்க் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. (8)

கடல்சூழ்ந்த உலகெலாங் காக்கின்ற பெருமான்
காடவர்கோன் கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன்
மடல்சூழ்ந்த தார்நம்பி இடங்கழிக்கும் தஞ்சை
மன்னவனாஞ்செருத்துணை தன்அடியார்க்கும்அடியேன்
புடைசூழ்ந்த புலியதள்மேல் அரவாட ஆடி
பொன்னடிக்கே மனம்வைத்த புகழ்த்துணைக்கும் அடியேன்
அடல்சூழ்ந்த வேல்நம்பி கோட்புலிக்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. (9)

பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்
பரமனையே பாடுவார் அடியார்க்கும் அடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்
திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்
முப்போதுந் திருமேனி தீண்டுவார்க் கடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்
அப்பாலும் அடிச்சார்ந்தார் அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. (10)

மன்னியசீர் மறைநாவன் நின்றவூர்ப் பூசல்
வரிவளையாள் மானிக்கும் நேசனுக்கும் அடியேன்
தென்னவனாய் உலகாண்ட செங்கணார்க் கடியேன்
திருநீல கண்டத்துப் பாணனார்க் கடியேன்
என்னவனாம் அரனடியே அடைந்திட்ட சடையன்
இசைஞானி காதலன் திருநாவ லூர்க்கோன்
அன்னவனாம் ஆரூரன் அடிமைகேட் டுவப்பார்
ஆரூரில் அம்மானுக் கன்பரா வாரே. (11)

திருச்சிற்றம்பலம்

பொருளடக்கம்

	பக்கம்
01. தில்லைவாழந்தணர்	01
02. திருநீலகண்டத்துக் குயவனார்	05
03. இயற்பகை நாயனார்	10
04. இளையான் குடிமாறநாயனார்	15
05. மெய்ப்பொருள் நாயனார்	19
06. விறன்மிண்ட நாயனார்	23
07. அமர்நீதி நாயனார்	26
08. எறிபத்த நாயனார்	30
09. ஏனாதிநாத நாயனார்	34
10. கண்ணப்ப நாயனார்	37
11. குங்குலியக்கலய நாயனார்.	44
12. மானக்கஞ்சாற நாயனார்	48
13. அரிவாட்டாய நாயனார்	51
14. ஆனாய நாயனார்	54
15. மூர்த்தி நாயனார்	57
16. முருக நாயனார்	61
17. உருத்திரபசுபதி நாயனார்	63
18. திருநாளைப்போவார் நாயனார்	65
19. திருக்குறிப்புத் தொண்ட நாயனார்	68
20. சண்டேசுர நாயனார்	71
21. திருநாவுக்கரசு நாயனார்	77
22. குலச்சிறை நாயனார்	112
23. பெருமிழலைக் குறும்ப நாயனார்	117
24. காரைக்காலம்மையார்	119
25. அப்பூதி நாயனார்	126
26. திருநீலநக்க நாயனார்	130
27. நமிநந்தி நாயனார்	134
28. திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார்	138
29. ஏயர்கோன் கலிக்காம நாயனார்	194
30. திருமூல நாயனார்	197
31. தண்டியடிகள் நாயனார்	203
32. மூர்க்க நாயனார்	206
33. சோமாசிமாற நாயனார்	208
34. சாக்கிய நாயனார்	210
35. சிறப்புலி நாயனார்	213
36. சிறுத்தொண்ட நாயனார்	215

பக்கம்
37. சேரமான் பெருமாள் நாயனார் 224
38. கணநாத நாயனார் 236
39. கூற்றுவ நாயனார் 238
40. பொய்யடிமையில்லாத புலவர் 240
41. புகழ்ச்சோழ நாயனார் 241
42. நரசிங்கமுனையரைய நாயனார் 244
43. அதிபத்த நாயனார் 246
44. கலிக்கம்ப நாயனார் 248
45. கலிய நாயனார் 250
46. சத்தி நாயனார் 252
47. ஐயடிகள் காடவர்கோன் நாயனார் 253
48. கணம்புல்ல நாயனார் 255
49. காரி நாயனார் 257
50. நின்ற சீர் நெடுமாற நாயனார் 258
51. வாயிலார் நாயனார் 261
52. முனையடுவார் நாயனார் 262
53. கழற்சிங்க நாயனார் 264
54. இடங்கழி நாயனார் 266
55. செருத்துணை நாயனார் 268
56. புகழ்த்துணை நாயனார் 270
57. கோட்புலி நாயனார் 272
58. பத்தராய்ப் பணிவார் 275
59. பரமனையே பாடுவார் 277
60. சித்தத்தைச் சிவன்பால் வைத்தார் 278
61. திருவாரூர்ப் பிறந்தார் 279
62. முப்பொழுதும் திருமேனி தீண்டுவார் 280
63. முழுநீறு பூசிய முனிவர் 281
64. அப்பாலும் அடிச்சார்ந்தார் 283
65. பூசலார் நாயனார் 284
66. மங்கையர்க்கரசியார் 287
67. நேசநாயனார் 293
68. கோச் செங்கட் சோழநாயனார் 294
69. திருநீலகண்டத்துப் பாணர் 297
70. சடையனார் 299
71. இசைஞானியார் 300
72. சுந்தரமூர்த்தி சுவாமிகள் 302
73. இணைப்பு - மாணிக்கவாசக சுவாமிகள் 354



சேக்கிழார்

சேக்கிழார்

ஷ

பாயிரம்

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்

ஊன டைந்த உடம்பின் பிறவியே
தான டைந்த உறுதியைச் சாருமால்
தேன டைந்த மலர்ப்பொழில் தில்லையுள்
மாந டஞ்செய் வரதர்பொற் றாள்தொழ

எடுக்கு மாக்கதை இன்தமிழ்ச் செய்யுளாய்
நடக்கு மேன்மை நமக்கருள் செய்திடத்
தடக்கை ஐந்துடைத் தாழ்செவி நீள்முடி
கடக் களிற்றைக் கருத்துள் இருத்துவாம்

மதிவளர் சடைமுடி மன்று ளாரைமுன்
துதிசெயும் நாயன்மார் தூய சொன்மலர்
பொதிநலன் நுகர்தரு புனிதர் பேரவை
விதிமுறை உலகினில் விளங்கி வெல்கவே

❖ ❖ ❖

திருவாரூர்த்
தேவாசிரிய மண்டபத்துத்
திருக்கூட்டச் சிறப்பு

நிலமகளுக்கு நெற்றித்திலகம் போன்றது திருவாரூர். திருவாரூர்ப் பூங்கோயிலிலே, சிவபெருமான் புற்றிடங்கொண்ட புனிதராக வீற்றிருந்து அருள்பாலிக்கிறார். இத் திருவார்ந்த ஊரின் வீதி, சுந்தரர்க்குத் தூதுசென்ற சிவபெருமானது திருவடிக்கமலத்தின் தெய்வமணம் கமழ்வது. இன்னும், உமையம்மையாரின் திருச்சேடியருள் ஒருவரான அநிந்திதை, பரவைநாச்சியாராக வாழ்ந்த மாளிகையையும் உடையது. இத்திருவாரூரிலே பசுங்கிளிகள் பதிகப்பண் பாடும். பூவைகள் அதனைக் கேட்டு உருகும். மேலும் அது பிறக்க முத்திநல்கும் முத்தித்தலமுமாம்.

இத்தகைய தெய்வத்தன்மைவாய்ந்த திருவாரூர் சோழமன்னர்களின் தலைநகர்களுள் ஒன்றாகவும் திகழ்ந்தது. ஆதலால் தெய்வத்திருவுடன் அரசத்திருவும் பொலிவது. திருவாரூரைத் தலைநகராகக் கொண்டு செங்கோல்செலுத்திய மன்னருள் மனுநீதிகண்ட சோழமன்னர் ஒருவர். அவர், மன்னுயிர்க்கெல்லாம் கண்ணும், உயிரும் போல் காவல் செய்தார். புற்றிடங்கொண்டவர்க்கு ஆகம விதிமுறைப்படி அருச்சனை நிகழ நிபந்தங்கள் விட்டார். மனுதருமசாத்திர நீதி நெறிப்படி முறை செய்தமையால் அவருக்கு மனுநீதி கண்ட சோழன் எனும் பெயர் காரணப்பெயருமாயிற்று. அவரது புண்ணியப்பயனாய் சிங்கக்குட்டி போன்ற ஒரு புதல்வன் அவதரித்தான். அவ்வருந்தவப் புதல்வன் தெய்வநூலுடன் அரசநூலும் கற்று, பண்பிற்சிறந்தோனாய் வளர்ந்தான். பெற்றவர் களிகூரும் வண்ணம் இளவரசனாதற்குரிய பருவத்தை நெருங்கினான்.

இந்நாளில் ஒருநாள் அரமனையினின்றும் புறப்பட்டுப் பரிவாரம் சூழ அரசுலாந்தெருவில் தேரேறிச் சென்றான். அவ்வாறு செல்லும் பொழுது தருமதேவதை சிறிதும் தயவுதாட்சணியமின்றி, மன்னரின் மனுநீதியில் தவறாத மனப்பாங்கைச் சோதித்தது போல், ஒரு தலையீற்றுப் பசுக்கன்று வீதியின் குறுக்கே துள்ளிக்குதித்து ஓடி, தேர்க்காலில் அகப்பட்டு மாண்டுபோனது. அதுகண்ட தாய்ப்பசு துயருற்று ஓடிவந்து அலறியது; சோர்ந்தது; நடுக்கமுற்று வீழ்ந்தது.

அரசிளங்குமரன் அபாயம் வந்துற்றதே என்று துயருற்றான். உணர்விழந்து தேரினின்றும் வீழ்ந்தான். தேறி எழுந்து அலறும் பசுவைப் பார்த்து ஆருயிர் பதைத்துச் சோர்ந்தான். "மனு எனும் மன்னனுக்குப் பழிநேரப் பிறந்தேனே" என வெதும்பினான். இப்பழியினைத் தீர்ப்பதற்கு பிராயச்சித்தம் உளதாயின் அதனைத் தந்தையார் அறிதற்கு முன்னர் செய்துவிடவேண்டும் என்று அந்தணரை நாடிச் சென்றான்.

கன்றையிழந்தபசு, அத்துயரத்தைத் தாங்கொணாது சென்று அரமனை வாயிலிற் கட்டியிருந்த ஆராய்ச்சி மணியைக் கொம்பினால் அடித்தது. அதனைக் கேட்ட மன்னர் சிம்மாசனத்தினின்றும் இறங்கி வாயிலை வந்தடைந்தார். வாயிற்காலவர் "அரசே ஒருபசு தன் கொம்பினால் ஆராய்ச்சிமணியை அடித்தது" எனக் கூறினர். அரசன் வருத்தமுற்று "இப்பசுவுக்கு நேர்ந்தது என்ன?" என்று அசைச்சரைக் கேட்டான். அமைச்சருள் மதிநுட்பமும் நாவன்மையுமுடைய ஓர் அமைச்சன்,

"வளவ! நின் புதல்வன் ஆங்கோர் மணி நெடுந்தேர்மேல் ஏறி
அளவில் தேர்த்தானை சூழ அரசுலாந் தெருவிற் போங்கால்
இளைய ஆன்கன்று தேர்க்கால் இடைப்புகுந்து இறந்ததாக
தளர்வுறும் இத்தாய் வந்து விளைத்தது இத்தன்மை என்றான்."

அதுகேட்ட அரசர் தாய்ப் பசு பட்ட துயரமெல்லாம் தாமும் பட்டார். "இப்பழி நேர்ந்து விட்டதே" "என்செங்கோல் நன்று நன்று;" "யாதுசெய்தால் இத்துயர் தீரும்" என்றெல்லாம் புலம்பினார். அரசன் படும் பாடெல்லாம் பார்த்துப் பரிதவித்த அமைச்சர்கள் அவர்தம் மனத்தளர்ச்சி நீக்கவல்ல மதியுரை கூறினர். அந்தணர்கள் விதித்த விதி முறைப்படி பசுவதைக்குரிய பிராயச்சித்தத்தைச் செய்வதே தருமம்" என அவர்கள் கூறினர். அதற்கு மன்னர் "பிராயச்சித்தம் கன்றை இழந்து அலறும் இப்பசுவின் துயருக்கு மருந்தாகுமா? நான் மைந்தனை இழக்காதிருக்கும் பொருட்டு நீங்கள் சொல்லும் இவ்வார்த்தைக்கு இசைந்தேனாயின் அது மனுநீதிக்கு மாறாகாதா?

"மாநிலம் காவலனாவான் மன்னுயிர்காக்கும் காலை
தானதனுக்கு இடையுறு தன்னால் தன் பரிசனத்தால்
ஊனமிகு பகைத்திறத்தால் கள்வரால் உயிர்தம்மால்
ஆனபயம் ஐந்தும் தீர்த்து அறம் காப்பான் அல்லனோ"

அமைச்சர்களே! நான் என் மகன் பொருட்டுப் பிராயச்சித்தம் செய்து விட்டு, பிறர் பொருட்டுக் கொலைத்தண்டம் வழங்குவேனாயின் மனு, மனுதருமத்தை மீறினான் என உலகோர் உரைத்தற்கு இடமாகு-மல்லவா?" என்று அமைச்சரது மதியுரையை இகழ்ந்துரைத்தார். அப்பொழுது அமைச்சர்கள் "அரசே இவ்வாறு முன்னரும் பிராயச்சித்தம் செய்திருக்கின்றனர். முன்னோர் வழக்கப்படி செய்வதே முறை. இம்முறையிருக்க இளவரசரை இழத்தல் முறையன்று" எனக் கூறினர். அதுகேட்ட அரசர் துயருழந்து "பசு ஆராய்ச்சி மணி அடித்தது எப்போதாவது நிகழ்ந்ததுண்டோ? இப்பசுவின் துயரை நீக்கும் திறன் எனக்கில்லை. ஆதலால் இப்பசு அடையும் துயரை நானும் அடைவதே தருமம். இன்னும் திருவாரூர்ப் பிறந்த உயிரைக் கொன்ற ஒருவனைக் கொல்லுவதே துணிவு" எனக் கூறி எவ்விடத்தும் எவரும் செயற்கரிய செயலைச் செய்யத் துணிந்தார். அது கேட்ட அமைச்சர்கள் அஞ்சி அகன்றார்கள். அரசன் மைந்தனை அழைத்தார். அமைச்சருள் ஒருவரை அவ்வீதியில் மைந்தரின்மேல் தேர் ஊருமாறு பணித்தார். அமைச்சர் அப்பணிசெய்யாது தன் உயிர் மாய்த்தார். மனுநீதி கண்ட சோழமன்னர்,

"ஒருமைந்தன் தன் குலத்துக்குள்ளான் என்பதும் உணரார்
தருமம் தன் வழிச் செல்கை கடனென்று தன்மைந்தன்
மருமம் தன் தேராழி உற ஊர்ந்தார்."

அவரது செயல் கண்டு தரியாத மண்ணவர்கள் கண்மழை பொழிந்தனர். விண்ணவர் பூ மழை பொழிந்தனர். மன்னரின் கண்முன் சிவபெருமான் உமையம்மையாரோடு வெள்ளை எருதின்மேல் தோன்றினார். இறந்த பசுக்கன்று எழுந்து துள்ளிக்குதித்து ஓடியது. இளவரசரும், மந்திரியும் உயிர்பெற்றெழுந்தனர். **முன்னவனே முன்னின்றால் முடியாத-பொருளுளதோ?** இளங்கன்று ஓடிச்சென்று மடிசுரந்தூட்டும் தாயிடத்தே மகிழ்ந்து பாலுண்டது. அடிபணிந்த மைந்தனை அணைத்தெடுத்து மகிழ்ந்தார் அரசர்.

இவ்வண்ணம் அருள்பெருகும் இவ்வற்புதத் திருத்தலத்திலே அரி,அயன் ஆதிய தேவரும் வந்து வழிபாடாற்றிச் செல்வர். அவ்வாறு வரும் தேவர் பூங்கோயில் முன்றிலிலுள்ள மண்டபத்தில் விரும்பி உறைவர். தேவர் விரும்பி உறையும் இடமாதலால் அது **தேவாசிரிய மண்டபம்** எனப் பெயர் பெற்றது.

இத்தேவாசிரிய மண்டபத்திலே திருக்கூட்டத்தினர் வீற்றிருப்பர். அவர்கள் மேனியிற் பூசும் நீறுபோல் உள்ளும் புனிதர்கள்; பூதம் ஐந்தும் தத்தம் நிலையினின்று தலைதடுமாறினாலும் திருவடி நினைவில் மாறாதவர்கள். அவர்கள் "ஆவதோ ஒன்றுமில்லை; அழிவதும் ஒன்றுமில்லை என்றிருப்பவர். ஓட்டைப்போன்றே பொன்னையும் கருதுபவர். பெருகிய அன்பினோடு கும்பிடுதலிற்பெறும் சுவையையே பெரிதாகக் கொள்பவர். பத்திச்சுவையின்முன் வீட்டின்பத்தையும் பெரிதாய்க் கொள்ளாதவர். அக்குமணியும் கந்தைத் துணியும் அணியும் எளிமையர். ஏகனாகி இறைபணி நிற்பவர். செந்தண்மைபூண்ட செல்வர். குறைவொன்றுமில்லை என்று குதூகலிப்பவர்.

"கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்
ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்.

ஆரம் கண்டிகை ஆடையும் கந்தையே
பாரம் ஈசன் பணியல தொன்றிலர்
ஈர அன்பினர் யாதும் குறைவிலர்
வீரம் என்னால் விளம்பும் தகையதோ.

இவர்களது வீரம் விளம்புதற்கு எளியதன்று. இவர்தம் புகழை உலகம் உய்யவும் சைவம் ஓங்கவும் நம்பிஆரூரர் திருத்தொண்டத்தொகையாகப் பாடிவைத்தார். அதனை நம்பியாண்டார்நம்பி வகை செய்து பாடினார். இவர்கள் புகன்றவழியினின்றும் வழுவாது இப்புனிதர் பேரவைப் புகழை இயன்றவண்ணம் கூறுகின்றோம்.

அளவி லாத பெருமைய ராகிய
அளவி லாஅடியார்புகழ் கூறுகேன்
அளவு கூட உரைப்பரி(து) ஆயினும்
அளவில் ஆசை துரப்ப அறைகுவேன்





01. தில்லை வாழந்தணர்

"தில்லைவாழந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்"

- திருத்தொண்டத்தொகை

செப்பத்தகு புகழ்த் தில்லைப்பதியிற் செழுமறையோர்
ஒப்பப் புவனங்கள் மூன்றினும் உம்பரின் ஊரெரித்த
அப்பர்க்கு, அமுதத் திருநடர்க்கு, அந்திப் பிறையணிந்த
தூப்பர்க்கு உரிமைத் தொழில் புரிவோர்தமைச் சொல்லுதுமே"

- திருத்தொண்டர் திருவந்தாதி

"ஆதியாய் நடுவுமாகி அளவிலா அளவுமாகிச்
சோதியாய் உணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியா ஏகமாகிப் பெண்ணுமாய் ஆணுமாகிப்
போதியா நிற்கும் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி"

"கற்பனை கடந்தசோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோலநீடி அருமறைச் சிரத்தின் மேலாஞ்
சிற்பர வியோமமாகும் திருச்சிற்றம்பலத்துள் நின்று
பொற்புடன் நடஞ் செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி"

தில்லைச் சிற்றம்பலவனார்க்குப் பூசனை புரிதற்குரிய புண்ணியர்கள் தில்லைவாழந்தணர்கள். திருவடிமறவாச் சீருடையாளராகிய

இவர்கள் பெருகியஅன்போடு பூசனைத்திரவியங்களை ஏந்திச் சென்று, மங்கலமான பூசைக் கருமங்களையெல்லாம் முறைப்படி புரிவர். வேதமந்திரங்களால் பெருமானைப் போற்றித் துதிப்பர். மூவாயிரவர் என்னும் தொகையினரான இவர்கள் தில்லைப் பதியிலேயே வாழ்ந்து தத்தமக்குரிய அகம்படித் தொழும்பினைக் குறைவறச் செய்வர். செல்வன் கழலேத்தும் செல்வமே செல்வம் எனக் கொள்வர்.

இச்செம்மை வேதியர் மறுவற்ற குடும்பத்திற் பிறந்தவர்கள்; மாசிலா ஒழுக்கத்தினையுடையவர்; செம்மனப் புனிதர். தணிந்த சிந்தையர். தமக்கு அணிகலன் திருநீறும் உருத்திராக்கமுமாகிய சிவசாதனங்களே எனக் கொள்பவர். தாம் பெறுவதற்குரிய பெரும்பேறு சிவ அன்பே எனத் துணிந்தவர்கள். இப்பிறப்பிலேயே அம்பலத்தரசின் அடித்தலம்மறவாத் தவத்தினராயவர். இவர்கள் இனிப் பெறுதற்குரிய பேறொன்றுமில்லை யென்றெண்ணும் பெருமையினர். இதனால் தமக்குத் தாமே ஒப்பாகும் தலைமையினர்.

நான்கு வேதமும் ஆறங்கமும் கற்றவர்; முத்தீ வளர்த்து வேள்வி செய்பவர்; ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்னும் அறுதொழில் ஆட்சியால் கலியின் தீமையை நீக்கியவர். எவ்வுயிர்க்கும் அருளுடையராய் அறத்தையே தமக்குரிய பொருளாகக் கொண்டு தத்துவநெறியில் நிற்பவர். சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நால்வகை நெறியையும் நன்கு தெரிந்து மேம்பட்டவர்கள். தானமும் தவமும் வல்லவர்கள், ஊனம் சிறிதுமில்லாதவர். உலகெலாம் புகழும் வண்ணம் மானமும் பொறையும் தாங்கி மனையறம் புரிபவர்.

'இவ்இருடிகளுள் நாம் ஒருவர்' என்று இறைவனால் அருளிச்செய்யப் பெற்ற பெருமையை உடையவர்கள் இவர்கள். இவர் தம் பெருமையை எம்மால் இயம்புதற்குரியதோ! சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருத்தொண்டத் தொகை பாடுவதற்கு "தில்லைவாழந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்" என்று சிவபெருமானே முதலாவதாகக் கூறிய திருக்கூட்டத்தினர் அன்றோ இவர்கள்!

தில்லைவாழந்தணர்

பெருமைக்கு எல்லையாய தில்லை வாழந்தணர்கள் என்றும் தில்லைச் சிற்றம்பலத்துள் நின்று பொற்புடன் நடஞ்செய்கின்ற பூங்கழல் போற்றி வாழ்வர்.

திருத்தொண்டர் புராணசாரம்

நல்ல வானவர் போற்றும் தில்லைமன்றுள்
நாடகஞ்செய் பெருமானுக்கு அணியார்; நற்பொன்
தொல்லைவான் பணியெடுத்தற்கு உரியார்;
வீடுந்துறந்த நெறியார்; தொண்டத்தொகைமுன் பாடத்
தில்லை வாழந்தணர் என்றெடுத்து நாதன் செப்பும்
அருளுடையார்; முத்தீயார்; பக்திக்கு
எல்லை காண்பரியார்; ஒப்பு உலகில் தாமே
ஏய்ந்துளார்; எமை ஆளவாய்ந்துளாரே'

நுண்பொருள்

1) **தில்லைப் பொது நடம் போற்றுதல்**

சிவபெருமான் ஞானப் பெருவெளியில் ஆடும் ஆனந்தத் தாண்டவத்தை மண்ணுலகோரும் கண்டு உய்யும் வண்ணமாக உலகத்தின் இருதயத்தானமான சிதம்பரத்தில் நின்று ஆடல் புரிகின்றார். இச் சிதம்பர நடனத்தைத்தரிசிக்க முத்தி சித்திக்கும். ஆதலால் சிதம்பரதரிசனம் சிவநெறிச் செல்வோர்க்குப் பெரும் பேறாகும். இப் பெரும் பேற்றினை உணர்த்தும் பொருட்டே சேக்கிழார் பெருமான் **ஆதியாய் நடுவுமாகி, கற்பனை கடந்தசோதி** எனும் திருப் புராணங்களுடன் தில்லை வாழ்அந்தணர் புராணத்தை ஆரம்பித்தனர்.

2) **அகம்படித்தொண்டுசெய்யும் முதற்பொருளாவார்.**

சிதம்பர நடராசருக்கு அகம்படித் தொண்டு (பூசனை) செய்யும் திருவுடை அந்தணர்கள் தில்லைவாழந்தணர்கள். அவர்கள் பூசையன்றிப் பிற தொழில் புரியாதவர். தம்முள் யாரேனும் பிற தொழில் செய்யப் புகுவரேல் அவரைப் பூசனை புரிதற்கு அனுமதியளியாத வழமையைப் பேணுபவர்கள். இவ்வண்ணம் **பூசனைபுரிந்து உலகோம்புதற் பொருட்டு** தில்லைப் பதியில் வாழும் தனிச்சிறப்பே அவர்தம் முதன்மையாகும்.

3) **கணநாதர்**

திருஞானசம்பந்தப்பிள்ளையார் தில்லை வாழந்தணர்களைக் கணந-

ாதர்களாகக் கண்டனர் தாம் கண்ட காட்சியைத் திருநீலகண்ட யாழ்ப்பாணருக்கு காட்டியும் வைத்தனர்.

4) சிவனையும் தம்முள் ஒருவராகக் கொண்டவர்.

சிவபெருமான் தில்லை மூவாயிரவருள் தாமும் ஒருவர் என அருளினர்.

5) திருத்தொண்டர் கூட்டத்து முதற்பொருளாயுள்ளவர்.

சுந்தரமூர்த்திசுவாமிகள் திருத்தொண்டத்தொகை பாடுதற்குச் சிவபெருமான் தில்லைவாழ் அந்தணர்களையே முதற்பொருளாகக் கொண்டு அடியெடுத்துக் கொடுத்தமை இவர் தம் தலையாய தன்மையைத் தெளிவுறக் காட்டுவதாம்.

சிற்றம்பலவரைப் பூசிக்கும் தில்லைவாழந்தணரின் முதன்மையும் இவர்களையே முதற்பொருளாகக் கொண்டு திருத்தொண்டர் சீர் பரவப்படுவதும் ஆதிய இவையெல்லாம் அரன்பூசைநேசத்தை உணர்த்தும் குறிக்கோளுடையன

கற்றாங் கெரி யோம்பிக் கலியை வாராமே
செற்றார் வாழ் தில்லைச் சிற்றம் பலம் மேய
முற்றா வெண்டிங்கள் முதல்வன் பாதமே
பற்றா நின்றாரைப் பற்றா பாவமே -

- தேவாரம்.

பொங்கிய திருவின் நீடும் பொற்புடைப் பணிகள் ஏந்தி
மங்கலத் தொழில்கள் செய்து மறைகளால் துதித்து மற்றும்
தங்களுக் கேற்ற பண்பில் தகும்பணி தலைநின்றுய்த்தே
அங்கணர் கோயிலுள்ளார் அகம்படித் தொண்டு செய்வார்.

- பெரியபுராணம்

❖ ❖ ❖

02. திருநீலகண்ட நாயனார்.

"திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்"

- திருத்தொண்டத் தொகை

"சொல்லைச் சிவன் திரு ஆணைதன் தூமொழி தோள் நசையால்
ஒல்லைத் துறந்து உரு மூத்ததற் பின் உமைகோன் அருளால்
வில்லைப் புரைநுத லாளோடு இளமை பெற்று இன்பம் மிக்கான்
தில்லைத் திருநீல கண்டக் குயவனாம் செய்தவனே"

-திருத்தொண்டர் திருவந்தாதி

சிதம்பரத்திலே குயவர்குலத்திற் பிறந்த ஓர்அடியவர் இருந்தார். அவர் சிதம்பரத்துச் சிற்சபையிலே சிவகாமியம்மையார் காண அற்புதத் தனிக் கூத்தாடும் நடராசவள்ளலை நாளும் வாழ்த்தி வழிபடும் நலத்தின் மிக்கவர். அன்பர்பணி செய்வதும் அவ்வடியவரின் ஓர் அருஞ்செயல். தாம் ஆக்கும் ஓடுகளிற் சிறந்தனவற்றை அடியவர் அமுது செய்வதற்காக இலவசமாக அளிப்பது அவர்தம் வழக்கம். அவர் சிவபெருமானது எண்ணில்லாத சீர்மைகளுள் திருநீலகண்டத்தைப் பெரிதும் நயந்தார். அன்பாளர் அமுது செய்தற் பொருட்டுப் பெருமான் நஞ்சுண்ட பெருங்கருணைத் திறத்தின் அடையாளமல்லவா திருநீல கண்டம்! ஆதலால் அவர் 'திருநீலகண்டம்' என்பதைப் பெருமந்திரமாகக் கொண்டு ஒழுகினார். இதனால் அவருக்குத் திருநீலகண்டக்குயவனார் என்னும் பெயர் வழங்கலாயிற்று. அவருக்கு அருந்ததியைப் போன்ற கற்பிற் சிறந்த மனைவியார் அமைந்தார். அத்துணைவியாருடன் தருமநெறி பிசகாது மனையறம் புரிந்து வந்தாராயினும் அவரிடம் ஒரு பலவீனமும் இருந்தது. இளமை மீதூர்ந்த அவர் இன்பத்துறையில் எளியராயினமையே அது. அவர்தம் புற ஒழுக்கத்தை அறிந்த மனைவியார் மானத்தால் நொந்தார். கணவனுக்கு வேண்டும் பணிகளை எல்லாம் குறைவறச் செய்து உடனுறைவுக்கு இசையாதிருந்தார். ஒரு நாள் நாயனார் அவரது புலவியைத் தீர்த்தற் பொருட்டு அருகணைந்து வேண்டும் இரப்புரைகளைக் கூறித் தீண்டுதற்குச் சென்றார். உடனே "எம்மைத் தீண்டுவீராயின் திருநீலகண்டம்" என அம்மாதரசி ஆணையிட்டார்.

அவ்வாணைக்கு நாயனார் கட்டுண்டார். மனைவியரை அயலவர் போல் நோக்கி எம்மை எனச் சொன்னமையால் "எம் மாதரையும் தீண்டேன்" என உறுதி கூறினார்.

இளமை மிக்க நாயனாரும், மனைவியாரும் உடனுறைவின்றி வேறு வேறாகத் தம் மனையிலே வாழ்ந்தனர். தமது இவ்வொழுக்கத்தை அயலறியாத வண்ணம் பேணி நடந்தனர். ஆண்டுகள் பலவும் செல்ல இளமை நீங்கி முதுமையெய்தினர். முதுமையெய்தி உடல் தளர்ந்த நிலையிலும், திருநீலகண்டத்திற் கொண்ட பற்றுறுதியால் தம் உறுதி தவறாது ஒழுகினர்.

இவர் தம் செயற்கருஞ்செயலை உலகத்தவர்க்கு விளக்கம் செய்ய இறைவர் திருவுளம்பற்றினார். ஒரு சிவயோகியார் வேடம் பூண்டு நாயனாரது மனைக்கு எழுந்தருளினார். நாயனார் அவரை எதிர்-கொண்டு வணங்கி முறைப்படி பூசனைசெய்து "அடியேன் செய்யும் பணி யாது?" என இரந்து நின்றனர். சிவயோகியார் தம்மிடமிருந்த ஓர் ஓட்டினை அன்பரிடம் கொடுத்து "இத்திருவோடு ஒப்பற்றது இதனைப் பாதுகாப்பாக வைத்திருந்து நாம் வேண்டும் போது தருக" எனக் கூறிச் சென்றார். பல நாட் சென்ற பின்னர் ஓட்டினை வைத்த இடத்தில் இராத வண்ணம் மாயஞ்செய்து விட்டுச் சிவயோகியார் மீண்டும் வந்தார். வந்த சிவயோகியாரை வரவேற்றுப் பூசனை செய்து பணிந்து நின்ற நாயனாரிடம் "யான்முன்பு உன்னிடம் தந்த ஓட்டினைத் தருக" எனக் கேட்டார். திருநீலகண்டர் வைத்த இடத்தில் எடுப்பதற்காக விரைந்து சென்றார். அங்கே ஓட்டினைக் காணாது திகைத்தார். அங்கு நின்றவரிடம் கேட்டும் எங்கும் தேடியும் காணாதவராய் யாது செய்வ-தென்றறியாது அயர்ந்து அங்கேயே நின்றார். சிவயோகியார் "நொடிப்பொழுதில் எடுத்து வருவதாகக் கூறிச் சென்றீர்; யாது செய்கின்றீர்" என அழைத்ததும்; அருகே வந்து கைதொழுது "சுவாமி பாதுகாப்பாக வைத்த இடத்தில் ஓட்டினைக் காணவில்லை. வேறிடந்-தேடியும் அகப்படவில்லை, அந்தப் பழைய ஓட்டிற்குப் பதிலாக நல்ல ஒரு புதியஓடு தருகிறேன். அதனை ஏற்று என் பிழையைப் பொறுத்-தருளுங்கள்"என இரந்து நின்றார். சிவயோகியார் "யான் தந்த மண்ணோடன்றிப் பொன்னோடு தந்தாலும் கொள்ளேன், தந்ததையே

கொண்டுவா" எனக் கூறினார். திருநீலகண்டர் "பெரியோய் தங்கள் ஓட்டைத் தரும்வழி காணேன். வேறு நல்ல ஓடு தருகிறேன் என்றாலும் ஏற்றுக் கொள்கின்றீர்களில்லை" எனக்கூறி உணர்வொடுங்கி நின்றார். புண்ணியப் பொருளாக வந்த சிவயோகியார் "யான் தந்த அடைக்கலப் பொருளைக் கவர்ந்து கொண்டு, பாவத்திற்குச்சிறிதும் அஞ்சாது பலபல பொய்மொழிகளைக் கூறுகின்றாய், யாவரும் காணத் தந்த திருவோட்டை வாங்காது இவ்விடம் விட்டுப் போகேன்" என்றார். அதற்குச் "சுவாமி! தேவரீரது ஓட்டை அடியேன் கவரவில்லை. இதை எப்படித் தெரிவிப்பது? சொல்லும்" என நாயனார் கூறினார். "உன் அன்பு மைந்தனைக் கையிற் பிடித்துக் குளத்தில் மூழ்கிச் சத்தியம் செய்" எனச் சிவயோகியார் கூறினார். "அப்படிச் செய்வதற்கு எனக்கு மகன் இல்லையே! என் செய்வது" எனச் சிவயோகியாரை நோக்கினார் திருநீலகண்டர். "உன் மனைவியின் கையைப் பற்றிக் குளத்தில் மூழ்கிச் சத்தியஞ்செய்" எனச் சிவயோகியார் கூறினார். "நானும் என் மனைவியும் எங்களிடையேயுள்ள ஒரு சபதத்தால் கைபிடித்துச் சத்தியம் செய்ய முடியவில்லை. நான் தனியே குளத்தில் மூழ்கிச் சத்தியம் செய்து தருகிறேன், வாரும்" என நாயனார் அழைத்தார். "தந்த ஓட்டைத் தராமலிருக்கின்றாய்; அதனை நீ கவரவில்லை எனின் உன் மனைவியின் கைபிடித்துச் சத்தியஞ்செய்துதரவும் தயங்குகின்றாய். தில்லைவாழந்தணர் கூடியிருக்கும் பேரவையிலே இவ்வழக்கினைச் சொல்லப் போகிறேன்; நீ அங்கு வா" என அழைத்தார் சிவயோகியார். திருநீலகண்டர் அதற்கிசைந்து அவருடன் சென்றார்.

தில்லைவாழந்தணர் சபையை அடைந்த சிவயோகியார் "இந்தக் குயவன் யான் அடைக்கலம் வைத்த ஓட்டைத் தருகின்றானில்லை. அதனை அவன் கவர்ந்துகொள்ளவில்லை என்று மனைவியின் கைப்பிடித்துச் சத்தியம் செய்கிறானுமில்லை" என்று தம் வழக்கினைக் கூறினார். அதுகேட்ட அந்தணர்கள் திருநீலகண்டரை நோக்கி "நீர் நிகழ்ந்ததைக் கூறும்" என்றனர். "திருவுடை அந்தணர்களே! இவர் தந்த திருவோட்டை மிகப் பாதுகாப்பான இடத்திலேயே வைத்தேன்; அது மருமமாய் மறைந்து விட்டது. இதுவே நிகழ்ந்தது" எனத் திருநீலகண்டர் உள்ளதைக் கூறினார். "அப்படியாயின் இவர் கேள்விப்படி உம்முடைய மனைவியின் கைப் பிடித்துக் குளத்திலே மூழ்கிச்

சத்தியஞ் செய்து கொடுத்தலே முறை" எனத் தில்லைவாழந்தணர் தீர்ப்பளித்தனர்.

அது கேட்ட திருநீலகண்டர் தம் மனைவியைத் தான் தீண்ட இயலாத சபதத்தை வெளிப்படுத்த முடியாதவராய் "பொருந்திய வகையால் மூழ்கித் தருகின்றேன்" எனச் சொல்லி சிவயோகியாருடன் தம்வீட்டை அடைந்தார். வீட்டில் இருந்த மனைவியாரையும் அழைத்துக் கொண்டு தில்லைத் திருப்புலீச்சரக் கோயிலின் முன்னுள்ள குள'த்தை அடைந்தார். திருநீலகண்டத்தின் ஆணையினைக் காத்தற் பொருட்டு மூங்கில்த் தடியொன்றின் ஒரு முனையைத் தாமும் மறுமுனையை மனைவியும் பிடித்த வண்ணம் குளத்தில் இறங்கினார். அப்பொழுது சிவயோகியார் "மனைவியின் கையைப்பிடித்து மூழ்குக" என வற்புறுத்தினார். அது செய்யமாட்டாத தமது சபதத்தை அங்குள்ளோர் அனைவரும் கேட்கும் வண்ணம் வெளிப்படுத்தித் திருநீலகண்டர் மனைவியாருடன் குளத்தில் மூழ்கினார். மூழ்கிக் கரையேறும் திருநீலகண்ட நாயனாரும் மனைவியாரும் முதுமை நீங்கி இளமைக் கோலத்தில் தோன்றினார்கள். அந்த அற்புதத்தைக் கண்ட அனைவரும் சிவயோகியாரைக் காணாது மருண்டு நின்றனர். மறைந்த இறையவர் உமையம்மையாரோடு, வெள்ளையெருதின் மீது தோன்றி **'புலனை வென்ற பெரியோர்களே! இவ்வீளமையோடு என்றும் எம்மை நீங்காதிருப்பீர்களாக**" என்றருளி மறைந்தருளினார். நாயனாரும், துணைவியாரும் இவ்வுலகிலே இறைபணியாற்றிச் சிவலோகமடைந்து பெறலரும் இளமை பெற்றுப் பேரின்பமுற்றார்கள்.

திருத்தொண்டர் புராணசாரம்

தில்லைநகர் வேட்கோவர் தூர்த்தராகி,
தீண்டிலெமைத் திருநீல கண்டமென்று
சொல்லும் மனையாள் தனையே அன்றிமற்றும்
துடிமிடையாரிடை இன்பம் துறந்து, மூத்து, அங்(கு)
எல்லையில் ஒடு இறை வைத்து, மாற்றி, நாங்கள்
எடுத்திலம் என்று இயம்பும், என இழிந்து பொய்கை
மெல்லியலாளுடன் மூழ்கி இளமையெய்தி
விளங்கு புலீச்சரத்தரனை மேவினாரே.

திருநீலகண்ட நாயனார்

நுண் பொருள்

"திருநீலகண்டம்" எனும் திருமந்திரப்பெருமை

1. திருநீலகண்டம் தீதினை அகற்றித் திருவாக்கும் திருமந்திரம். (திருஞான-சம்பந்தப்பிள்ளையார் **"திருநீலகண்டத்திருப்பதிகம்"** அருளிச் செய்தமை காண்க.)

2. இன்பத்துறையில் எளியரான குயவனாரை, புலனைவென்ற பெரியோராக்கியது இத்திருநாம மந்திரம். அயலவர் ஐயுறா வண்ணம் கருத்தொருமித்து மனை-யறம் நடாத்திக்கொண்டே அன்புறுபுணர்ச்சியின்றி வாழ்ந்ததும், முதுமையிலும், இவ்விரதம் காத்ததும், தமக்கு நேர்ந்த பழியினின்று நீங்குதற்கு மனைவி-யின் கைப்பிடித்துக்குளத்தில் மூழ்கும் முறை வந்த விடத்தும் கைதீண்டாது மற்றோர் முறையால் மூழ்கியதும், தம் கூடா ஒழுக்கத்தை உலகறியச் சொல்ல நேரிட்டபோதும் விரதம் காத்ததும் ஆதிய இவையெல்லாம் திரு-நீலகண்டம் எனும் இத்திருமந்திரத்தின் ஆற்றலால் விளைந்தனவே.

3. இத்திருமந்திரத்தைத் துணைக்கொள்ளின் எத்தகைய விரதத்தைக் கைக்-கொள்ளலும் அதனைக்காத்தலும் எளிது.

மன்றுளே திருக்கூத்தாடி அடியவர் மனைகள் தோறும்
சென்றவர் நிலைமைகாட்டும் தேவர்கள் தேவர்தாமும்
வென்ற ஐம்புலனால் மிக்கீர் விருப்புடன் இருக்க நம்பால்
என்றும் இவ்விளமை நீங்காது என்றுஎழுந்தருளினாரே.

– பெரிய புராணம்

திருநீலகண்டநாயனாரது குருபூசைநாள் :- தை விசாகம்

திருநீலகண்டத் திருப்பதிகம்

அவ்வினைக்கு இவ்வினையாம் என்றுசொல்லும் அ.·.துஅறிவீர்
உய்வினை நாடாதிருப்பதும் உந்தமக்கு ஊனமன்றே
கைவினை செய்தம் பிரான்கழல் போற்றுதும்
செய்வினை வந்தெமை தீண்டப்பெறா திருநீலகண்டம்

பிறந்த பிறவியிற் பேணி எம்செல்வன் கழலடைவான்
இறந்த பிறவியுண்டாகில் இமையவர் கோனடிக்கண்
திறம்பயின் ஞானசம்பந்தன் செந்தமிழ் பத்தும் வல்லார்
நிறைந்த உலகினில் வானவர் கோனொடும் கூடுவரே.

– திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

03. இயற்பகை நாயனார்

"இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்"
- திருத்தொண்டத் தொகை

செய்தவர் வேண்டியது யாதும் கொடுப்பச் சிவன்தவனாய்
கைதவம் பேசிநின் காதலி யைத்தருக என்றலுமே
மைதிகழ் கண்ணியை ஈந்தவன் வாய்ந்த பெரும்புகழ்வந்து
எய்திய காவிரிப்பூம் பட்டினத்து இயற்பகையே -
- திருத்தொண்டர் திருவந்தாதி

இயற்பகையார் சோழநாட்டிலே காவேரிசங்கமம் என்னும் புனித தீர்த்தத்தினால் புகழ்பெற்ற காவிரிப்பூம்பட்டினத்திலே பிறந்தார். வணிக குலத்தினரான அவர் தம் வணிகத் திறத்தால் பெரும் செல்வராக விளங்கினார். இல்லறத்தின் பெரும்பேறு இறையடியார் தம் குறைமுடிப்பதென்பது அவர் கொள்கை. ஆதலால் சிவனடியார் யாவரெனினும் அவர் வேண்டுவதை இல்லையென்னாது கொடுக்கும் இயல்பினராய் வாழ்ந்துவந்தார். அவ்வாறு வாழ்ந்துவரும் நாளில் அவர் பெருமையை உலகோருக்கு உணர்த்தச் சிவபெருமான் திருவுளம் பற்றினார்.

சிவபெருமான் தூயநீறு பொன்மேனியில் அணிந்து, தூர்த்த வேடமுடைய வேதியர் கோலத்தினராய், இயற்பகையாரது வீட்டினை அடைந்தார். நாயனார் அவ்வடியாரை உளம் நிறைந்த அன்புடன் எதிர்கொண்டு, முனிவர் இங்கு எழுந்தருளியது என் பெருந்தவப் பயனென்று வழிபட்டு வரவேற்றார். வேதியர் அன்பரை நோக்கி, சிவனடியார்கள் வேண்டினவற்றை எல்லாம் ஒன்றும் மறுக்காது உவந்தளிக்கும் உமது கொடைத் திறத்தினைக் கேள்வியுற்று, உம்மிடத்திலே ஒரு பொருளை விரும்பி இங்கு வந்தேன், அதனை நீர் தருதற்கு இணங்குவீராயின் வெளியிட்டுச் சொல்வேன்' எனக் கூறினார். அது கேட்ட இயற்பகையார், 'என்னிடமிருக்கும் எப் பொருளாயினும் அது எம்பெருமானாகிய சிவனடியாரது உடைமை. இதிற் சிறிதும் சந்தேகமில்லை. நீர் விரும்பியதனை அருளிச் செய்வீராக' என்றார். அதுகேட்ட வேதியர், 'உன் மனைவியை விரும்பி வந்தேன்' எனச் சொன்னார்.

நாயனார் முன்னையிலும் மகிழ்ச்சியுடையவராய், 'எம்பிரான் என்னிடம் உள்ள பொருளையே வேண்டியது எனது புண்ணியப் பயனாகும்' என்று கூறி, விரைந்து வீட்டினுட் புகுந்து கற்பிற்சிறந்த மனைவியாரை நோக்கி, 'பெண்ணே! இன்று உன்னை இம் மெய்த்-தவர்க்கு நான் கொடுத்துவிட்டேன்' என்றார். அதுகேட்ட மனைவியார், மனங்கலங்கிப் பின் தெளிந்து தன் கணவரை நோக்கி "என் உயிர்த்-தலைவரே! என் கணவராகிய நீர் எனக்குப் பணித்தருளிய கட்டளை இதுவாயின் நீர் கூறியதொன்றை நான் செய்வதன்றி எனக்கு வேறு-ரிமை உளதோ? என்று சொல்லித் தன் தனிப்பெருங் கணவராகிய இயற்பகையாரை வணங்கினார். இயற்பகையாரும் இறைவனடியார்க்-கெனத் தம்மால் அளிக்கப் பெற்றமை கருதி அவ்வம்மையாரை வணங்கினார். திருவிலும் பெரியாளாகிய அவ்வம்மையார், அங்கு எழுந்தருளிய மறைமுனிவர் சேவடிகளைப் பணிந்து திகைத்து நின்றார்.

மறை முனிவர் விரும்பிய வண்ணம், மனைவியைக் கொடுத்து மகிழும் மாதவராகிய இயற்பகையார், அம்மறையவரை நோக்கி, இன்னும் யான் செய்தற்குரிய பணி யாது? என இறைஞ்சி நின்றார். வேதியராக வந்த இறைவன், 'இந்நங்கையை யான் தனியே அழைத்துச் செல்லுவதற்கு உனது அன்புடைய சுற்றத்தாரையும், இவ்வூரையும் கடத்தற்கு நீ எனக்குத் துணையாக வருதல் வேண்டும்' என்றார். அதுகேட்ட இயற்பகையார் யானே முன்னறிந்து செய்தற்குரிய இப்பணியை விரைந்து செய்யாது எம்பெருமானாகிய இவர் வெளியிட்டுச் சொல்லுமளவுக்குக் காலம் தாழ்த்து நின்றது பிழையாகும் என்று எண்ணி, வேறிடத்திற்குச் சென்று போர்க்கோலம் பூண்டு வாளும் கேடகமும் தாங்கி வந்தார். வேதியரை வணங்கி மாதினையும் அவ-ரையும் முன்னே போகச் செய்து அவர்க்குத் துணையாகப் பின்னே தொடர்ந்து சென்றார்.

இச்செய்தியை அறிந்த மனைவியாரது சுற்றத்தாரும், வள்ளலாரது சுற்றத்தாரும் இயற்பகை பித்தனானால் அவன் மனைவியை மற்றொருவன் கொண்டு போவதோ?' என வெகுண்டனர். தமக்கு நேர்ந்த பழியைப் போக்குவதற்குப் போர்க்கருவிகளைத் தாங்கியவராய் வந்து மறைய-வரை வளைத்துக்கொண்டனர். 'தூர்த்தனே! போகாதே நற்குலத்திற் பிறந்த இப்பெண்ணை இங்கேயே விட்டுவிட்டு எமது பழிபோக

இவ்விடத்தை விட்டுப்போ' எனக் கூறினார். மறைமுனிவர் அதுகண்டு அஞ்சியவரைப்போன்று மாதினைப் பார்த்தார். மாதரும் 'இறைவனே அஞ்ச வேண்டாம்; இயற்பகை வெல்லும்' என்றார். வீரக்கழலணிந்த இயற்பகையார், அடியனேன் அவரையெல்லாம் வென்று வீழ்த்துவேன் என வேதியருக்கு தேறுதல்கூறி, போருக்கு வந்த தம் சுற்றத்தாரை நோக்கி, 'ஒருவரும் எதிர் நில்லாமே ஓடிப் பிழையும். அன்றேல் என் வாட்படைக்கு இலக்காகித் துணிபட்டுத் துடிப்பீர்' என்று அறிவுறுத்தினார். அது கேட்ட சுற்றத்தார், 'ஏடா நீ என்ன காரியத்தைச் செய்து இவ்வாறு பேசுகின்றாய். உன் செயலால் இந்நாடு அடையும் பழிமையும், இது குறித்து நம் பகைவரானவர் கொள்ளும் இகழ்ச்சிச் சிரிப்பினையும் எண்ணி நாணாது உன் மனைவியை வேதியனுக்குக் கொடுத்து வீரம்பேசுவதோ! நாங்கள் போரிட்டு ஒருசேர இறந்தொழிவதன்றி உன்மனைவியை மற்றையவனுக்குக் கொடுக்க ஒரு பொழுதும் இசையோம்' என்று வெகுண்டு எதிர்த்தனர். அது கண்ட இயற்பகையார், 'உங்கள் உயிரை விண்ணுலகுக்கு ஏற்றி இந்த நற்றவரைத் தடையின்றிப் போகவிடுவேன்' என்றுகூறி, உறவினரை எதிர்த்துப் பொருதற்கு முந்தினார். உறவினர்கள் மறையவரைத் தாக்குதற்கு முற்பட்டனர். அது கண்டு வெகுண்ட இயற்பகையார், சுற்றத்தார் மேல் பாய்ந்து இடசாரி வலசாரியாக மாறிமாறிச் சுற்றிவந்து அவர்களுடைய கால்களையும் தலைகளையும் துணித்து வீழ்த்தினார். பலராய் வந்தவர் மீதும் தனியாய் அகப்பட்டவர் மீதும் வேகமாய்ப் பாய்ந்து வெட்டி வீழ்த்தினார். பயந்து ஓடியவர் ஒழிய எதிர்த்தவரெல்லாம் ஒழிந்தே போயினர். எதிர்ப்பவர் ஒருவருமின்றி உலாவித்திரிந்த இயற்பகையார், வேதியரை நோக்கி 'அடிகள் நீர் அஞ்சாவண்ணம் இக்காட்டினைக் கடக்கும்வரை உடன் வருகின்றேன்' என்று கூறித் துணைச்சென்றார். திருச்சாய்க்காட்டைச் சேர்ந்த பொழுதில், மறை முனிவர்' நீர் வீட்டிற்குத் திரும்பிச் செல்லலாம்.' எனக் கூறினார். இயற்பகையாரும் அவரை வணங்கி ஊருக்குத் திரும்பினார்.

மனைவியை உவகையுடன் அளித்துத் திரும்பியும் பாராது செல்லும் நாயனாரது அன்பின் திறத்தை எண்ணி இறைவன் மகிழ்ந்தார். மெய்ம்மையுள்ளமுடைய நாயனாரை மீளவும் அழைக்கத் தொடங்கி "**இயற்பகை முனிவாஓலம்; ஈண்டு நீ வருவாய் ஓலம்; அயர்ப்பிலாதானே ஓலம்; அன்பனே ஓலம் ஓலம். செயற்கருஞ்செய்கை செய்த தீரனே**

ஓலம் ஓலம்" என அழைத்தருளினார். அழைத்த பேரோசையினைக் கேட்ட இயற்பகையார், 'அடியனேன் வந்தேன்; வந்தேன்; தீங்கு செய்தவர் உளராயின் அவர்கள் என் கைவாளுக்கு இலக்காகின்றார்' என்றுகூறி விரைந்து வந்தார். மாதொருபாகனாகிய இறைவனும் தனது தொன்மைக் கோலத்தைக் கொள்ளுதற்கு அவ்விடத்தைவிட்டு மறைந்தருளினார். சென்ற இயற்பகையார் முனிவரைக் காணாது அவருடன் சென்றமாதினைக் கண்டார்.; வான்வெளியிலே இறைவன் மாதொருபாகராக எருதின்மேல் தோன்றியருளும் தெய்வக் கோலத்தைக் கண்டார்; நிலத்திலே பலமுறை விழுந்து தொழுதார்; எல்லையில்லாத இன்ப வெள்ளம் அருளிய இறைவனை உளங்கசிந்து போற்றி வாழ்த்தினார். அப்பொழுது அம்மையப்பராகிய இறைவர், 'பழுதிலா-தாய் உன் அன்பின் திறங்கண்டு மகிழ்ந்தோம். உன் மனைவியுடன் நம்மிடம் வருக' எனத் திருவருள் புரிந்து மறைந்தருளினார். உலகி-யற்கையை மீறிச் செயற்கருஞ் செய்கை செய்த திருத்தொண்டராகிய இயற்பகையாரும், தெய்வக் கற்பினையுடைய அவர் தம் மனைவியாரும் ஞானமாமுனிவர் போற்ற நலமிகு சிவலோகத்தில் இறைவனைக் கும்பிட்டு உடனுறையும் பெருவாழ்வு பெற்றனர். அவர் தம் சுற்றத்தாராய் அவருடன் போர் செய்து உயிர் துறந்தவர்களும் வானுலகமடைந்து இன்புற்றனர்.

திருத்தொண்டர் புராணசாரம்.

"எழிலாரும் காவிரிப்பூம் பட்டினத்துள்
இயல்வணிகர் இயற்பகையார் இருவர்தேட
அழலாயபிரான் தூர்த்த மறையோனாகி
ஆமிழையைத் தரவேண்டி அணைய ஐயன்
கழலாரப் பணிந்து மனைக் கற்பின் மேன்மைக்
காதலியைக் கொடுத்து அமர்செய் கருத்தால் வந்த
பிழையாருஞ் சுற்றமெலாம் துணித்து மீளப்
பிஞ்ஞகனார் அழைத்தருளப் பெற்றுளாரே"

நுண்பொருள்

உலகியலுக்கு மாறும் இறையியலுக்கு இணக்கமும்

சிவபெருமான் ஒருவரே உடையான் எனும் பெயருக்குரியவர். மற்றைய உயிர் உள்ளனவும், இல்லனவுமான எல்லாம் அவர்தம் உடைமைகள்.

சிவனடியார் சிவபெருமானது நடமாடும் வேடமேயாதலால் அவரும் உடையார் எனும் பெயருக்குரியவரே. (இவ்வரலாற்றில் சிவனடியார் வேடத்தில் வந்தவர் சிவபெருமானேயாதலால் இக்கூற்று முற்றும் பொருந்துவதே.) இதுபற்றியே சுந்தரமூர்த்தி சுவாமிகள் **'உடையநம்பி'** என வழங்கப்பட்டார். சிவனடியார் உடையராதலால் நாம் அவரது உடைமைகளே. இதுவே **மெய்யியற்கொள்கை.** இக்கொள்கையுடன் வாழ்ந்தவர் இயற்பகை நாயனார். ஆதலால் சிவனடியார் வேண்டும் எவற்றையும் இல்லையென்னாது கொடுக்கும் இயல்பினராக அவர் ஒழுகினார். அவர் தம் மனைவியை வேண்டி வந்த சிவனடியார்க்கு மனைவியை மகிழ்வுடன் கொடுத்தார். கொடுத்தது மாத்திரமின்றி உறவினர் இடைவிலக்கா வண்ணம் துணைவர வேண்டும் எனச் சிவனடியார் பணித்தபோது 'ஏவுமுன் இப்பணியைச் செய்தேனில்லையே' என நொந்தவராயத் துணைசெல்ல முந்தி நின்றார். உறவினர்கள் ஈதோர் பழியென்றும், இயற்பகை ஒரு பித்தனென்றும் கூறிப் போர்க்கோலம் பூண்டு தடுத்தபோதும் அவர்களைக் கொன்று தள்ளி அன்பர் பணியாற்றும் குற்றேவலாய் ஒழுகினார். அவரினது இத்தகைய ஒழுக்கத்தின் நயத்தகு கருத்தொன்று ஈற்றில் வெளிப்படுகிறது. சிவனடியார் தம்மைத் தடுப்பாரில்லாத சாய்க்காடு சேர்ந்த பின்னர் இயற்பகையாரை "இனி நீர் வீடு செல்லலாம்" எனப் பணித்த சமயம் மனைவியைத் திரும்பியும் பாராமற் சென்றதே அவ்வியத்தகு செய்கை. இ.ஃ.து அவர் சிறிதும் சித்த சலனமின்றி அப்பணி செய்ததனைக் காட்டுவது. இதனைச் சிவபெருமானும் உகந்தமை சேக்கிழார் வாக்காக மேல்வருமாறு அமைகிறது. **"பொய்தரும் உள்ளம் இல்லான் பார்க்கிலன் போனான்"** உலகியலுக்கு மாறான இச்செயலை உள உறுதியுடன் செய்த இயற்பகையாரை இறைவன் **"செயற்கரும் செய்கை செய்த தீரன்"** என்றருளியதும் நாம் நன்கு மனதிற் பதித்துக்கொள்ள வேண்டியதாம்.

"சொல்லுவ தறியேன் வாழி தோற்றிய தோற்றம் போற்றி
வல்லைவந்தருளி என்னை வழித்தொண்டு கொண்டாய் போற்றி
எல்லையில் இன்பவெள்ளம் எனக்கருள் செய்தாய் போற்றி
தில்லையம்பலத்துள் ஆடும் சேவடி போற்றி என்ன".

– பெரியபுராணம்

இயற்பகைநாயனாரது குருபூசைநாள் : மார்கழி உத்திரம்

04. இளையான் குடிமாறநாயனார்

"இளையான்தன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்"

-திருத்தொண்டத்தொகை.

"இயலா இடைச் சென்ற மாதவர்க்கு இன்னமுதா விதைத்த
வயலார் முளை வித்து வாரி மனையலக்கால் வறுத்துச்
செயலார் பயிர் விழுத் தீங்கறி ஆக்கும் அவன் செழுநீர்க்
கயலார் இளையான் குடியுடைமாறன் என் கற்பகமே".

- திருத்தொண்டர் திருவந்தாதி.

இளையான்குடி என்னும் ஊரிலே மாறனார் என்னும் பெயருடைய பெரியாரொருவர் இருந்தார். அவர் உழவுத்தொழிலால் வந்த பெருஞ் செல்வமும், சிவனடியாரிடத்து அன்புள்ளமும் உடையவராய்த் திகழ்ந்தார். சிவனடியார் யாவரேயெனினும் தம் இல்லத்திற்கு வந்தால் எதிரே சென்று கைகூப்பி வணங்கி, இனிய மொழிகளைக் கூறிவரவேற்று அழைத்து வருவார். கரக நீர்கொண்டு அவர்கள் பாதங்களை விளக்கி அத்தீர்த்தத்தைத் தன் தலையில் தெளிப்பதுடன் உள்ளும் பருகுவார். மெல்லிய துணியினால் பாதங்களை ஒற்றி ஆசனத்தில் அமரச்செய்து பூசனை புரிவார். பின்பு கைப்பு, இனிப்பு, புளிப்பு, துவர்ப்பு, கார்ப்பு, உவர்ப்பு என்னும் அறுவகைச் சுவையை உடையனவாய் உண்ணப் படுவது, தின்னப்படுவது, நக்கப்படுவது, பருகப்படுவது, எனும் நால்வகை, உணவுகளை அவரவர் விருப்பப்படி அமுது செய்விப்பார். நாள்தோறும் செய்த இம்மாகேசுரபூசை என்னும் சிவபுண்ணியத்தாலே அவர் செல்வம் நாளுக்குநாள் பெருகிக் குபேரனைப் போன்ற பெரும் செல்வந்தராக வாழ்ந்துவந்தார். அடியார்க்குத் திருவமுதளித்தலாகிய இத்திருப்பணியைச் செல்வக்காலத்திலே மட்டுமன்றி வறுமையுற்ற காலத்திலும் விடாது செய்யவல்லவர் இந்நாயனார் என்னும் உண்மையினை உலகத்தார்க்கு அறிவுறுத்த இறைவர் திருவுள்ளங் கொண்டார். இதனால் இளையான்குடிமாறரது செல்வம் குறைந்து வறுமை உண்டாகியது. இவ்வாறு செல்வவளம் சுருங்கவும், தம்மனஞ்சுருங்குதலின்றித் தம்மிடமிருந்த நிலங்கள் முதலியவற்றை விற்றும், தம்மையே விற்றுக்

கொடுக்கத்தக்க அவ்வளவு கடன்களை வாங்கியும் அடியார்க்கு அமுதளித்தலாகிய பணியை விடாது செய்து வந்தார். இவ்வாறு மாரிக்காலத்தில் ஒருநாள், தாம் உணவின்றிப் பசியால் வாடியபோதும் இரவு வெகுநேரம்வரை சிவனடியார்களை எதிர்பார்த்திருந்து, எவரும் வராமையால் கதவைப்பூட்டி விட்டு வீட்டினுள் சென்றார். நள்ளிரவுப் போதிலே சிவபெருமான் அடியார் கோலங்கொண்டு மாறனாரது மனைக்கு எழுந்தருளிக் கதவைத் தட்டி அழைத்தார். மாறனார் கதவைத் திறந்து அடியாரை வீட்டினுள்ளே அழைத்துச் சென்றார். மழையினால் நனைந்த அடியார் திருமேனியை ஆடைகொண்டு துவட்டி இருத்தற்கு இடங்கொடுத்தார்; அடியார்க்குத் திருவமுது செய்வித்தல் வேண்டும் என்னும் பெருவிருப்புடன் தம் மனைவியாரை நோக்கி, 'சிவனடியார் மிகவும் பசித்துள்ளார். என்ன செய்வது?' முன்னமே நமக்கு இங்கு உணவில்லை. ஆயினும் இறைவனடியார்க்கு அமுதளித்தல் வேண்டுமே? இதற்கு யாது செய்வோம்? என வினாவினார். அதுகேட்ட மனைவியார், 'நம் வீட்டில் ஒன்றும் இல்லை; அயலாரும் இனித் தருவாரில்லை. பகற்பொழுதும் போயிற்று. தேடிப்போதற்குரிய இடமும் வேறில்லை. தீவினையேன் என் செய்வேன்?' என்று சொல்லி, "இன்று பகற் பொழுதிலே வறுமை நீங்க வயலில் விதைத்த செந்நெல் முளையை வாரிக் கொண்டுவந்தால் இயன்ற அளவில் அமுது சமைக்கலாம். இதுவன்றி வேறுவழியறியேன்" என்றார்.

அது கேட்டு மகிழ்ந்த மாறனார், அந்தகாரமான நள்ளிருளிலே இறை கூடையைத் தலையில் கவிழ்த்துக் கொண்டு வயலை அடைந்து காலினால் தடவிச் சென்று மழை நீரில் மிதந்த நெல்முளைகளைத் தம் கைகளால் வாரிக் கூடையில் நிறைத்து விரைவாக வீடு திரும்பினார். வீட்டுவாயிலிலே கணவரை எதிர்நோக்கிநின்ற மனைவியார், நெல்முளையை வாங்கிச் சேறுபோக நீராற்கழுவிச் 'சோறு சமைத்தற்கு விறகு இல்லையே' என வருத்தமுற்றார். மாறனார் தம் வீட்டுக் கூரையில் சிதைந்து விழும் நிலையிலிருந்த வரிச்சுக்களை அறுத்து விழுத்தினார். மனைவியார் அவற்றைக்கொண்டு அடுப்புமூட்டி நெல்முளையை ஈரம்போக வறுத்துக்குற்றி அரிசியாக்கி உலையிலிட்டுச் சோறுசமைத்து, "இனி கறிக்கு யாது செய்வோம்' எனக் கவலையுற்றார்.

அப்பொழுது மாறனார் வீட்டுத் தோட்டத்திற்குச் சென்று குழி நிரம்பாத கீரைப் பயிரினைக் கைகளால் தடவிப்பிடுங்கிக் கொண்டு வந்தார். மனைவியார் அவற்றை வாங்கி ஆய்ந்து தம் கைத்திறத்தால் வெவ்வேறு கறியமுதாகச் செய்து முடித்து 'இனிச் சிவனடியாரைத் திருவமுது செய்ய அழைப்போம்' என்றார். மாறனார் உணர்வினால் உணரஒன்னாத சிவனடியாரைத் துயிலெழுப்பி "அடியனேன் உய்ய என் இல்லம் எழுந்தருளிய பெரியோய்! அமுது செய்தருள்க.' என வேண்டி நின்றார். அப்பொழுது அடியாராக வந்திருந்த பெருமான் சோதிப்பிளம்பாய் எழுந்து தோன்றினார். அது கண்டு மாறனாரும் மனைவியாரும் திகைத்து நின்றனர். சிவபெருமான் உமாதேவியாருடன் எருதின் மேல் தோன்றி, 'அன்பனே! அன்பர் பூசை அளித்த நீ உன் மனைவியோடும் என் பெரும் உலகமாகிய சிவலோகத்தினை அடைந்து பேரின்பம் அனுபவித்திருப்பாயாக' என்று அருள் செய்து மறைந்-தருளினார்.

திருத்தொண்டர் புராணசாரம்.

"மன்னிய வேளாண் தொன்மை இளைசைமாறர்
வறுமையால் உணவு மிக மறந்து வைகி
உன்னருநள்ளிருள் மழைமில் உண்டிவேண்டி
உம்பர் பிரான் அணைய வயல் உழுது வித்தும்
செந்நெல் முளை அமுது மனை அலக்கால் ஆக்கிச்
சிறுபயிரின் கறிஅமுது திருந்தச் செய்து
பன்னலரும் உணவருந்தற்கு எழுந்த சோதிப்
பரலோகம் முழுதாண்ட பான்மையாரே"

நுண்பொருள்

மாகேசுரபூசை மாண்பு

மகேசுரராகிய சிவனை வழிபடும் அடியார்கள் மாகேசுரர். மாகேசுரரை முறைப்படி பூசித்து அறுசுவையன்னம் ஊட்டுதல் மாகேசுரபூசை. மாகேசுரபூசை சிவபூசையினும் சிறந்தது. இது

'படமாடற் கோயிற் பரமற்கொன்று ஈயில்
நடமாடுங் கோயில் நம்பற்கங்கு ஆகா

நடமாடுங் கோயில் நம்பற்கொன்று ஈயில்
படமாடுங் கோயில் பரமற்கங்கு ஆமே'

எனும் திருமந்திரத்தால் அறியப்படும்.

மண்ணினிற் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார்தமை அழுதுசெய்வித்தல்
கண்ணினாலவர் நல்விழாப் பொலிவு கண்டார்தல்
உண்மையாமெனில் உலகர்முன் வருகென உரைப்பார்.

என்பதாலும் இதன் சிறப்பு அறியப்படும்.

இளையான் குடிமாறநாயனார் இம்மாகேசுர பூசையை சிவாகம விதிப்படி மெய்யன்போடு செய்து வந்தனர்.

பெருஞ்செல்வந்தராய் இருந்த காலத்தில் மட்டும் அன்றி, செல்வம் சுருங்கிய காலத்திலும் மனம் சுருங்குதலின்றிச் செய்து வந்தனர்.

தாம் பகல் முழுவதும் உண்ணுதற்குணவின்றிப் பசியினாற் களைப்புற்று இரவுபட்டு இல்லக்கதவு அடைத்துத் துயிலச் செல்லும் வேளையிலும் விருந்தினராய் வந்த மாகேசுரரைப் பூசித்தற்கு விழைந்தார்.

அமுது சமைப்பற்கு வீட்டில் ஒன்றும் இல்லாத நிலையில் பகல் வித்திய முளைகொண்டும், குழிநிரம்பாத குறுங்கீரை கொண்டும், கூரைத்தடியை விறகாகக் கொண்டும் மகிழ்வோடு மாகேசுர பூசை செய்ய முனைந்து நின்றார்.

இவ்வண்ணமான மாகேசுர பூசையைச் சேக்கிழார் **"சீலமார் பூசை"** எனச் சிறப்பித்தார்.

இச்சீலமார் பூசை சிவலோகம் எய்தி இன்புற்றிருப்பதற்கான வழி" என்பது இப்புராண சாரமாக உள்ளது.

"அழுந்திய இடரின் நீங்கி அடியனேன் உய்ய என்பால்
எழுந்தருள் பெரியோய் ஈண்ட அமுது செய்தருள்க என்று
தொழும்பனார் உரைத்த போதில் சோதியாய் எழுந்து தோன்றச்
செழுந்திரு மனைவியாரும் தொண்டரும் திகைத்து நின்றார்.

-பெரியபுராணம்.

இளையான்குடிமாற நாயனாரது குருபூசைநாள் ஆவணிமகம் அன்று முளைக் கீரைக்கறி அமுது நிவேதித்து அண்ணலார் அடியார்தமை அமுது செய்வித்தல் நன்று.

05. மெய்ப்பொருள் நாயனார்.

"வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்"

- திருத்தொண்டத்தொகை.

கற்ற நன் மெய்த்தவன் போலொரு பொய்த்தவன் காய்சினத்தால்
செற்றவன் தன்னை, அவனைச் செறப்புகலும் திருவாய்
மற்றவன் 'தத்தா நமரே' எனச் சொல்லி வானுலகம்
பெற்றவன் சேதிபன் மெய்ப்பொருளாம் என்று பேசுவரே

- திருத்தொண்டர் திருவந்தாதி

மெய்ப்பொருள் நாயனார் சேதிநாட்டுத் திருக்கோவலூரிலிருந்து அரசாண்ட குறுநிலமன்னர் குலத்தில் அவதரித்தார். அக்குறுநில மன்னர்குலம் மாதொருபாகனார்க்கு வழிவழியாக அன்பு செய்து வந்த மலையமான்குலமாகும். நாயனார் அறநெறிதவறாது அரசு புரிந்து வந்தார். பகையரசர்களால் கேடுவிளையாதபடி குடிகளைக் காத்து-வந்தார். ஆலயங்களிலே பூசை விழாக்கள் குறைவற நடைபெற கட்டளை விட்டார். 'சிவனடியார்வேடமே மெய்ப்பொருள் எனச் சிந்தையிற்-கொண்ட அவர் சிவனடியார்க்கு வேண்டுபவற்றைக் குறைவறக் கொடுத்து நிறைவு காணும் ஒழுக்கத்தவராக இருந்தார்.

இவ்வாறு ஒழுகிவந்த மெய்ப்பொருள்நாயனாரிடம் பகைமை கொண்ட ஒரு மன்னனும் இருந்தான். அவன் பெயர் முத்தநாதன். அவன் பலமுறையும் மெய்ப்பொருளாருடன் போரிட்டுத் தோல்வியுற்று அவமானப்பட்டுப்போனான். வல்லமையால் மெய்ப்பொருளாரை வெல்ல முடியாதெனக் கருதிய அவன் வஞ்சனையால் வெல்லத் துணிந்தான். கறுத்த மனத்தவனான அவன் மெய்யெலாம் திருநீறு பூசி, சடைமுடி தாங்கி, ஆயுதத்தை மறைத்து வைத்திருக்கும் புத்தகமுடிப்பு ஒன்றைக் கையிலேந்தியவனாய்க் கோவலூர் அரமனை வந்தான். வாயிற்காவலர் சிவனடியாரென வணங்கி உட்புகவிட்டனர். பல வாயில்களையும் கடந்த முத்தநாதன் பள்ளியறை வாயிலை அடைந்தான். அவ்வாயிற்-காவலனான தத்தன் "தருணமறிந்து செல்ல வேண்டும் அரசர் பள்ளி கொள்ளும் தருணம்" எனத் தடுத்தான். 'வஞ்சமனத்தனான அவன்

அரசர்க்கு ஆகமம் உரைத்தற்கென வந்திருப்பதாயும், தன்னைத் தடைசெய்யக்கூடாதெனவும் கூறி உள்ளே நுழைந்தான். அங்கே அரசர் துயின்று கொண்டிருந்தார். அங்கேயிருந்த அரசி அடியாரின் வரவு கண்டதும் மன்னனைத் துயிலெழுப்பினாள். துயிலுணர்ந்த அரசர் எதிர்சென்று அடியாரை வரவேற்று வணங்கி மங்கலவரவு கூறி மகிழ்ந்தார். அடியவர் வேடத்திருந்தவர் எங்குமிலாததோர் சிவாகமங் கொண்டுவந்திருப்பதாகப் புத்தக முடிப்பைக் காட்டினார். அவ்வாகமப் பொருள் கேட்பதற்கு அரசர் ஆர்வமுற்றார். வஞ்சநெஞ்சினனான அவ்வேடத்தான் தனியிடத்திலிருந்தே ஆகம உபதேசஞ் செய்ய வேண்டும் எனக் கூறினான். மெய்ப்பொருளார் துணைவியரை அந்தப்புரஞ் செல்லுமாறு ஏவிவிட்டு அடியவருக்கு ஓர் ஆசனமளித்து அமரச்செய்தபின் தாம் தரைமேல் இருந்து ஆகமப்பொருள் கேட்க ஆயத்தமானார். அத்தீயவன் புத்தகம் அவிழ்ப்பான் போன்று மறைத்து வைத்திருந்த உடைவாளை எடுத்துத் தான் நினைத்த அத் தீச் செயலைச் செய்துவிட்டான். வாளால் குத்துண்டு விழும் நிலையிலும் சிவவேடமே மெய்ப்பொருள் என்று தொழுதுவென்றனர் மெய்ப்பொருள்நாயனார். முத்தநாதன் நுழைந்த பொழுதிலிருந்து அவதானமாயிருந்த தத்தன், இக்கொடூரத்தைக் கண்ணுற்றதும் கணத்திற் பாய்ந்து தன் கைவாளால் தீயவனை வெட்டச் சென்றான். இரத்தம் பெருகச் சோர்ந்துவிழும் நிலையில் இருந்த நாயனார் **"தத்தா நமரே காண்"** என்று தடுத்து வீழ்ந்தார். விழும் மன்னனைத் தாங்கி தலைவணங்கி நின்ற தத்தன் 'அடியேன் இனிச் செய்ய வேண்டியது யாது? 'என இரந்தான். "இச்சிவனடியாருக்கு ஓர் இடையூறும் நேராதவாறு பாதுகாப்பாக விட்டுவா" என மெய்ப்பொருள் நாயனார் பணித்தார்'. மெய்ப்பொருளாரது பணிப்பின் படியே முத்தநாதனை அழைத்துச் சென்றான் தத்தன். செய்தியறிந்த குடிமக்கள் கொலை பாதகனைக் கொன்றொழிக்கத் திரண்டனர். அவர்களுக்கெல்லாம் "அரசனது ஆணை" எனக் கூறித் தடுத்து நகரைக் கடந்து சென்று நாட்டவர் வராத காட்டெல்லையில் அக்கொடுந் தொழிலனை விட்டு வந்தான் தத்தன். வந்ததும் அரசர்பெருமானை வணங்கி "தவவேடம் பூண்டு வந்து வென்றவனை இடையூறின்றி விட்டு வந்தேன்" எனக் கூறினான். அப்பொழுது மெய்ப்பொருள் நாயனார் "இன்று எனக்கு ஐயன் செய்தது யார்

செய்யவல்லார்" எனக் கூறி அன்பொழுக நோக்கினார். பின்னர் அரசுரிமைக்கு உரியோரிடமும், அன்பாளரிடமும் "திருநீற்று நெறியைக் காப்பீர்" எனத் திடம்படக் கூறி அம்பலத்தரசின் திருவடி நிழலைச் சிந்தைசெய்தார். அம்பலத்தரசு அம்மையப்பராக மெய்ப்பொருளன்பாளருக்குக் காட்சியளித்தனர். மெய்ப்பொருளார் அருட்கழல் நிழல் சேர்ந்து இடையறாது கைதொழுதிருக்கும் பாக்கியரானார்.

திருத்தொண்டர் புராணசாரம்.

சேதிபர் நற்கோவலூர் மலாடமன்னர்
திருவேடம் மெய்ப்பொருளாத் தெளிந்த சிந்தை
நீதியினார் உடன் பொருது தோற்றமாற்றான்
நெடுஞ்சினமும் கொடும் படையும் நிகழாவண்ணம்
மாதவர்போல் ஒருமுறை கொண்டு அணுகி
வாளால் வன்மை புரிந்திட மருண்டு வந்த
தத்தன் காதலுற நமர் தத்தா என்று நோக்கிக்
கடிது அகல்வித்து இறைவனடி கைக்கொண்டாரே

நுண்பொருள்

சிவவேடமே மெய்ப்பொருள்

இந்நாயனார் எதிர்த்தாரை வெல்ல வல்ல விறல் வேந்தர். இவர் தம்மை எதிர்த்த முத்தநாதனைப் பல முறையும் வென்றார். வென்றி மன்னரெனினும், சிவவேடமே மெய்ப்பொருள் என்ற உறுதியினர். முத்த நாதன் வஞ்சனையால் வெல்லக் கருதி சிவவேடம் தாங்கி வந்த பொழுது "மங்கலம் பெருக மற்றென் வாழ்வு வந்தது" எனப் போற்றி வணங்கினரேயன்றி மாற்றான் என்று எண்ணவில்லை.

அவன் "மண்மேல் எங்குமிலாததோர் ஆகமம் கொண்டு வந்தேன்" எனப் புகன்றபோது ஆகமப் பொருளைச் சிந்தை செய்தனரே அன்றி அதற்கு அயலாக ஏதும் அறிந்திலர்.

அவனால் குத்துண்டு சரிந்த வேளையிலும் வஞ்சவலைப்பாடேதுமின்றி மெய்ப்பொருளுணர்ச்சியுடன் தொழுத கையினராகவே இருந்தனர். அவர் வீரத்தால் வென்ற வெற்றியனைத்திலும், இவ்வண்ணம் குருதி சோர விழும் நிலையிலும் தொழுது வென்ற வெற்றியே பெரு வெற்றியாயிற்று. இம்மெய்ப்-

பொருள் வெற்றியை வியந்தே "வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்" எனச்சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடினார்.

இன்னும் வாயிற்காவலன் வாள் கொண்டு பாய்ந்து வந்த வேளையில் அவனைத் தடுத்து "தத்தா நம்மவர்" எனக் கூறியதும் நாயனாரது சொலற்கருஞ் சொல்லேயாம். இதனை நயந்து நம் முன்னோர் இந்நாயனாரை "தத்தா நமரே காண் என்ற மிலாடுடையார்" எனக் கல்வெட்டில் பொறித்து வைத்தனர்.

தன்னுயிர் கொன்ற (கை) தவ வேடத்திலும் மெய்ப் பொருளையே கண்டு தொழுது வென்ற இந்நாயனார் வரலாறு சிவனடியார் வேடம் அரனெனத் தொழற் பாலது என்பதை உணர்த்தி நிற்பது.

உயிர் பிரியும் காலத்துத் திருவடி மறவாச் சிந்தையராய் இருப்பது சிறந்தது இது.

"அங்கத்தை மண்ணுக்காக்கி ஆர்வத்தை உனக்கே தந்து
பங்கத்தைப் போக மாற்றிப் பாவித்தேன் பரமா உன்னைச்
சங்கொத்த மேனிச் செல்வா சாதல்நாள் நாயேன்உன்னை
எங்குற்றாய் என்றபோதால் இங்குற்றேன் என் கண்டாயே.

எனும் அப்பர் தேவாரத்தால் உணரப்படும். இந்நாயனார் ஆவிபிரியும் தருணத்தில் அரசியற் சுற்றத்தார்க்கும், அன்புடைச்சுற்றத்தார்க்கும் கூறுவ கூறிப்பின்னர் **மன்றுளாடும் பூங்கழல் சிந்தை செய்திருந்தமை காண்க.**

கைத்தலத்திருந்த வஞ்சக் கவளிகைமடிமேல் வைத்து
புத்தகம் அவிழ்ப்பான் போன்று புரிந்தவர் வணங்கும் போதில்
பத்திரம் வாங்கித் தான் முன் நினைத்த அப்பரிசே செய்ய
மெய்த்தவ வேடமே மெய்ப் பொருள் எனத் தொழுது வென்றார்.

– பெரியபுராணம்.

மெய்ப்பொருள் நாயனார் குருபூசைநாள் கார்த்திகை உத்திரம்

06. விறன்மிண்ட நாயனார்

"விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டர்க் கடியேன்"

- திருத்தொண்டத் தொகை

பேசும் பெருமை அவ் வாரூரனையும், பிரான் அவனாம்
ஈசன் தனையும் புறகு தட்டு என்றவன் ஈசனுக்கே
நேசன், எனக்கும் பிரான்; மனைக்கே புக நீடுதென்றல்
வீசும் பொழில்திருச் செங்குன்றம் மேய விறன்மிண்டனே".

- திருத்தொண்டர் திருவந்தாதி.

சேரநாட்டுச் செங்குன்றூரில் வேளான்குடி விளங்க அவதரித்தவர் விறன்மிண்டர். அவர் சிவனடியே பற்றாகப் பற்றி மற்றுப்பற்றெல்லா வற்றையும் முற்றத் துறந்தவர். சிவனடியாரிடத்துப் பெரும்பத்தி பூண்டவர்.

திருத்தலந்தோறும் சென்று வழிபாடாற்றும் வழக்கமுடைய இப்பத்தர் முதலில் திருக்கூட்டத்தை வணங்கிப் பின்னரே கோயிலுட் சென்று வழிபடும் நியமத்தினர். இந்நியமத்தின் வழுவாத விறன்மிண்டர் சேரநாட்டுத் தலங்களை வழிபட்டுச் சோழநாட்டுத் திருத்தலங்களையும் வணங்கும் காதலால் திவாரூர்த்தலத்தை அடைந்து அங்கு சில நாள் உறைந்தார். அந்நாளில் திருவாரூர்த் தேவாசிரிய மண்டபத்தில் வீற்-றிருந்த திருக்கூட்டத்தைக் கண்டு ஒருவாறு ஒதுங்கிச் சென்ற சுந்தர-மூர்த்திசுவாமிகளைக் கண்ணுற்றதும், 'இவன் திருக்கூட்டத்தாரை வழிபடாது கோயிலுட் செல்கின்றானாதலால் திருக்கூட்டத்திற்கு இவனும் புறகு; இவனையாண்ட சிவனும் புறகு;' என்று கூறினார். விறன்மிண்டரது அடியார் பத்தியின் திறத்தை அறிந்த சுந்தரமூர்த்தி சுவாமிகள், திருவாரூர் கோயிலுட் புகுந்து தியாகராசப் பெருமானைக் கும்பிட்டு நிற்கும்போது "அடியேன் இவ்வடியார்களுக்கெல்லாம் அடியானாகும் நாள் என்று" என வேண்டுதல் செய்தார். அப்பொழுது பெருமான், "நாம் அடியாருடன் உளோம்; அடியாரைப்பாடு" என்றருளி, "தில்லை-வாழந்தணர்" என அடி எடுத்துக் கொடுத்தார். சுந்தரமூர்த்தி சுவாமி-களும் தேசமெல்லாம் உய்வதற்குக் காரணமானதும், சைவநெறியின்

சீலம் விளங்கச் செய்வதுமான திருத்தொண்டத்தொகைத் திருப்பதிகத்தைத் "தில்லைவாழ்ந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்" என்பதை முதலாகக் கொண்டு பாடிஅருளினார்.

இவ்வண்ணம் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருத்தொண்டத்தொகை பாடுதற்குக் காரணமாய் அமைந்த விறன்மிண்டநாயனார், பெருமான் அருளால் திருவடி நிழலை அடைந்து கணநாதராய் விளங்கும் பேற்றினைப் பெற்றார்.

திருத்தொண்டர் புராணசாரம்.

"விளங்கு திருச் செங்குன்றூர் வேளாண் தொன்மை
விறண்மிண்டர் திருவாரூர் மேவு நாளில்
"வளங்குலவு தொண்டரடி வணங்கா தேகும்
வன்றொண்டன் புறகு அவனை வலிய ஆண்ட
துளங்கு சடை முடியோனும் புறகு" என்று அன்பாற்
சொல்லுதலும், அவர் தொண்டத்தொகை முன்பாட
உளங்குளிர உளதென்றார் அதனால் அண்ணல்
உவகைதர உயர் கணத்துள் ஓங்கினாரே."

நுண்பொருள்

ஒன்றாக நல்லது அடியாருறவு, அதன் பின்சார அரன்பூசை நன்று;

இறைவன் உணர்ந்தாருக்கும் உணர்வரியோன். திருநாவுக்கரசுசுவாமிகள் அருளிய பெரிய திருத்தாண்டகம் "அரியானை" எனத் தொடங்குதல் ஆராலும் அறிதற்கரிய இறைவனின் அருமையை உணர்த்தற் பொருட்டேயாம். ஆராயும் வேதமும் அறியொணாது நிற்கும் அரிய பொருளே இறைவன். ஆயின் அவன் அடியரை அகலாது உடன் உறைபவன். இ.ன்.து இப்புராணத்தில் மேல் வரும் சேக்கிழார் செந்தமிழால் இனிது புலப்படுத்தப்படுகிறது.

"ஞாலமுய்ய நாமுய்ய நம்பிசைவ நன்னெறியின்
சீலமுய்யத் திருத்தொண்டத் தொகை முன்பாடச் செழுமறைகள்
*ஓலமிடவும் உணர்வரியார் **அடியாருடன் நாமுளது** என்றால்*
ஆலம் அமுதுசெய்த பிரான் அடியார் பெருமை யாரறிந்தார்."

ஆதலால் இறைவனோடுறையும் அடியாரைத் துணைக்கொண்டு இறைவனை உணர்தலே நேரிது; இ.ன்.து,

"பற்றற்றார் பற்றும் பரம்பொருள் தன்னை
நற்றவர் தங்கள் உறவினை நாடிப்பற்றுதும்"

எனும் நற்சிந்தனையாலும் நன்கு தெளியப்படும்.

இந்நாயனார் அடியாரை முன் போற்றிப் பின் இறைவனைப் போற்றும் கொள்கையினராய், கோயில் தோறும் சென்று வழிபடும் காலத்து முதலில் திருக்கூட்டத்தைக் கும்பிட்டுப் பின்னரே கோயிலுட் புகுந்து இறைவனைத் தரிசிக்கும் நியமத்தில் உறுதியாயிருந்தார். இத்தகைய ஒழுக்கத்தில் உறைத்து நின்ற விறன்மிண்டருக்கு, சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருக்கூட்டத்தை வழிபடாது ஒருவாறு ஒதுங்கிச் செல்கின்றார் என்றதோர் எண்ணம் எழுந்தபோது அவரை ஒரு பொருட்டாக மதியாததோர் உறைப்பு (விறல்) மிகுந்தது. இவ்விறலினாலே அவர் 'வன்றொண்டன் புறகு' என்றுரைத்தார். அத்துடன் அமையாது அவரைத் தடுத்தாண்ட சிவனும் புறகு என்றுரைத்தார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் இறைவனாற் தடுத்தாட்கொள்ளப்பட்ட அற்புதத்தை அவர் நன்கு அறிவார். ஆயினும் திருக்கூட்டத்தை வழிபடாது செல்கின்றார் என்று அறிந்ததும் நம்பியைச் செந்நெறியினராகக் கொள்ளாது புறம் தள்ளி வைக்கும் விறலே மிண்டியெழுந்தது. விறண்மிண்டர் என்னும் வீரம்மிகுந்த இத்திருத்தொண்டரின் புராணம் அடியரைக்கூடி அரனடிசேரும் சித்தாந்த உண்மையை விளக்கி நிற்பதாம்.

திருவார் பெருமை திகழ்கின்ற தேவாசிரியனிடைப் பொலிந்து
மருவா நின்ற சிவனடியார் தம்மைத் தொழுது வந்தணையாது
ஒருவாறு ஒதுங்கும் வன்றொண்டன் புறகு என்றுரைப்பச் சிவன் அருளால்
பெருகா நின்ற பெரும்பேறு பெற்றார் மற்றும்பெற நின்றார்.

– பெரிய புராணம்.

விறன்மிண்டரது குருபூசைநாள் : சித்திரைத் திருவாதிரை

07. அமர்நீதி நாயனார்

"அல்லிமேன் முல்லையந்தார் அமர்நீதிக்கு அடியேன்"

- திருத்தொண்டத் தொகை

"மிண்டும் பொழிற் பழையாறை அமர்நீதி வெண்பொடியின்
முண்டம் தரித்த பிராற்கு நல்லூரின்முன் கோவணம்நேர்
கொண்டிங்கு அருள் என்று தன்பெரும் செல்வமும் தன்னையும்தன்
துண்டமதி நுதலாளையும் ஈந்த தொழிலினனே."

- திருத்தொண்டர் திருவந்தாதி.

அமர்நீதிநாயனார் சோழநாட்டிலே பழையாறை என்னும் பழம் பதியிலே அவதரித்தார். வணிகத்தால் பெரும் பொருள் தேடிச் செல்வந்தராய் விளங்கிய இவர் செல்வப்பயன் சிவனடியார்க்குப் பணி செய்வதே எனும் தெளிந்த சிந்தையராயிருந்தார். இதனால் சிவனடியார்க்குத் திருவமுது அளித்தல், ஆடை கீழ்கோவணம் அளித்தல் ஆகிய திருத்தொண்டுகளைச் செய்துவந்தார். சிவனடியார்களுக்கு திருவமுது கொடுப்பதற்காக திருநல்லூரில் திருமடம் ஒன்றும் கட்டினார். திருவிழாக் காலங்களில் அம்மடத்தில் தம் சுற்றத்தாரோடு தங்கியிருந்து அடியார்களுக்குத் திருவமுது, உடை, கோவணம் என்பன அளித்து மகிழ்ந்தார்.

அன்பர் பணி செய்யும் அமர்நீதியாருக்குச் சிவபெருமான் அருள் புரியத் திருவுளங் கொண்டார். ஒரு நாள் அந்தணர் குலத்துப் பிரம்மச்சாரியாகக் கோலங்கொண்டார். அவர் நெற்றியில் திருநீறு இலங்கியது. மார்பில் முப்புரிநூல் அசைந்தது. கையில் திருநீற்றுப்பையும் இருகோவணம் முடிந்த ஒரு தண்டு இருந்தது. கோவண ஆடையுடன் நல்லூரிலுள்ள அமர்நீதியார் மடத்தை அடைந்தார். அந்தணப் பிரமச்சாரியைக் கண்டு அமர்நீதியார் அகம் மகிழ்ந்தார். மிக்க முகமலர்ச்சியோடு அவரை எதிர்கொண்டு வரவேற்றார். இன்னுரை கூறி உபசரித்தார். பிரமச்சாரியார் "நீர் அன்போடு அடியவர்க்குத் திருவமுது அளித்து, கந்தையும் கீழ்க்கோவணமும் கொடுப்பதாகக்

கேள்விப்பட்டு உம்மைக் காணவந்தேன்" என்றார். அமர்நீதியார் இத்திருமடத்திலே அந்தணர் அமுது செய்தற்பொருட்டு வேதியர்கள் பாகம் பண்ணுவதுண்டு. தேவரீர் இங்கு திருவமுது செய்தல் வேண்டும் என்று பணிவுடன் வேண்டினார். பிரமச்சாரியார் அவ்வேண்டுகோளுக்-கிசைந்து காவேரியில் நீராடச் சென்றார். செல்லும் பொழுது மழைவரி-னும் வரும் எனக்கூறித் தமது தண்டில் கட்டியிருந்த கோவணங்களில் ஒன்றை அவிழ்த்து அமர்நீதியாரிடம் கொடுத்து அதனைப் பக்குவமாக வைத்திருக்கும்படி கூறினார். அது ஒப்பற்ற ஒரு கோவணம் எனவும் தானிருக்கும் இடத்தைப் புனிதமாக்கவல்லது எனவும் கோவணப் பெருமை கூறிச் சென்றார். அமர்நீதியார் அதனைத் தனியான ஓர் இடத்தில் சேமித்து வைத்தார். சிரத்தையுடன் அறுசுவை அமுது ஆயத்தஞ்செய்து அந்தணரை வரவு பார்த்திருந்தார். அந்தணரோ கோவணத்தை மறையும்படி செய்து மழையில் நனைந்தவராய் வந்தார். அமர்நீதியாரது அன்புநீரில் மூழ்கவிரும்பி வைத்த கோவணத்தைக் கொண்டு வருமாறு கூறினார். கோவணம் கொண்டு வரச் சென்ற தொண்டர் வைத்த இடத்தில் காணாது திகைத்தார். பிற இடங்களிற் தேடியும் காணாது மயங்கினார். பின்னர் பிறிதொரு கோவணத்தை எடுத்துக்கொண்டு பிரமச்சாரியிடம் வந்தார். "அடிகளே! தாங்கள் தந்த கோவணத்தை வைத்த இடத்தில் காணவில்லை. அது மறைந்ததோ பெரும் மாயமாக உள்ளது. இது வேறுஒரு நல்ல கோவணம்; இது ஆடையிற் கிழிக்கப்பட்டதல்ல. கோவணமாகவே நெய்யப்பெற்றது. நனைந்த கோவணத்தைக் கழைந்து இதனை அணிந்து அடியேனது குற்றத்தைப் பொறுத்து அருளுங்கள்' என வேண்டினார். இதனைக் கேட்ட அந்தணர் தீயினைப் போன்று சீறிச்சினந்தார். "அமர்நீதியாரே, நீர் சொல்வது மிக நன்று; உம்மிடம் தந்த கோவணத்தைக் கவர்ந்துகொண்டு வேறொன்றைத் தருதல் தகுமா? நீர் கோவணத் தொண்டு புரிவதாகப் பறைசாற்றுவது எனது கோவணத்தைக் கவர்வதற்கோ? உமது வியாபாரம் நன்றாயிருக்கிறது" எனச் சுடுசொற்களைச் சொரிந்தார். இதனைக் கேட்டு அமர்நீதியார். மனஞ்சோர்ந்தார். உணர்வொடுங்கினார். பிழைபொறுக்குமாறு வேண்டினார். கோவணம் மாத்திரமன்றி நல்ல பட்டாடைகள், மணிகள் போன்றவற்-

றையும் தருவதாகக் கூறி அந்தணரது திருவடிகளில் வீழ்ந்து வணங்கினார். அப்போது அந்தணர் சிறிது கோபம் தணிந்தவராய்த் தோன்றினார். மணியும், பொன்னும் எனக்கு என்ன பயனைச் செய்வன? நாம் உம்மிடம் தந்த கோவணத்திற்கு ஒத்தது தண்டில் உள்ள இந்தக் கோவணம். இந்தக் கோவணத்திற்கு எடையான கோவணத்தைத் கொடுப்பீராக' என்று கூறினார் அந்தணர். 'நன்று' என ஏற்றுக்கொண்ட அமர்நீதியார், ஒரு தராசினை அங்கு கொண்டு வந்து நிறுத்தி, ஒரு தட்டில் அடியார் தந்த கோவணத்தை வைத்து, அதற்கு ஈடாகத் தம்மிடம் உள்ள நெய்த கோவணத்தை மற்றொரு தட்டில் வைத்த பொழுது அது நிறை போதாமையால் மேலெழுந்தது. அதுகண்ட அமர்நீதியார், தாம் அடியார்களுக்குக் கொடுத்தற் பொருட்டு வைத்திருந்த கோவணங்களையும், பூந்துகிற்பொதி முதலியவற்றையும் ஒவ்வொன்றாக இட்டார். அப்பொழுதும் அன்பரது தட்டு மேற்பட அடியாரது கோவணத்தட்டு நிறையால் கீழே தாழ்ந்தது. அந்நிலையில் அமர்நீதியார், அந்தணராகிய அடியாரது உடன்பாடு பெற்றுத் தம்மிடமுள்ள பொன், வெள்ளி, நவமணித் திரள் முதலிய பலவகை அரும்பொருள்களையும், பின்பு தம் மனைவி, புதல்வன் ஆகியவர்களையும் துலையில் அமர்த்தினார். அப்பொழுதும் கூட தட்டு நேர் நிற்கவில்லை. நாயனார் நாங்கள் இழைத்த அன்பினில் இறை திருநீற்று மெய்யடிமை பிழைத்திலோம் என்றால் இத்தராசின் தட்டு சமமாக நிற்பதாகுக' என்று திருவைந்தெழுந்து ஓதித் தாமும் அதன்மேல் ஏறி அமர்ந்தார். அந்நிலையில் இறைவரது திருவரைக் கோவணமும், அமர்நீதியாரது அடிமைத்தொண்டும் ஒத்ததால் அத்தராசுத் தட்டுக்கள் இரண்டும் சமமாய் நேர் நின்றன. அடியாராக வந்த இறைவர், திருநல்லூரிற் பொருந்திய அம்மையப்பராகிய திருக்கோலத்தை அமர்நீதியாருக்குக் காட்டியருளினார். அத்தெய்வக் காட்சியைக் கண்ட அமர்நீதியாரும், மனைவியாரும், மைந்தரும் அம்மையப்பரை வணங்கிப் போற்றித் தாம் அமர்ந்துள்ள தராசுத்தட்டு விமானமாகி மேற்செல்ல, என்றும் இறைவனைக் கலந்து வணங்கி மகிழும் அழிவில்லாத சிவலோக வாழ்வினைப் பெற்று இன்புற்றார்கள்.

அமர்நீதி நாயனார்

திருத்தொண்டர் புராணசாரம்

"பழையாறை வணிகர் அமர்நீதியார் பால்
பரவு சிறு முனிவடிவாய்ப் பயிலும் நல்லூர்க்
குழைகாதர் வந்தொரு கோவணத்தை வைத்துக்
கொடுத்ததனை எடுத்தொளித்துக் குளித்துவந்து
தொழிலாரும் அதுவேண்டி வெகுண்டு நீரித்
துலையிலிடும் கோவணம் நேர் தூக்கு மென்ன
எழிலாரும் பொன் மனைவி இளஞ்சேய் ஏற்றி
ஏறினர் வான் உலகு தொழ ஏறினாரே"

நுண்பொருள்

இறைவனும் இறையடியாரும் ஒரே நிறை

அம்மையப்பரான இறைவனே நம் தலைவர். அவரை பூசித்தல் ஒன்றே தலையாய கருமம். அதன் பின்னாக இக்கருமத்தைச் செய்யும், **தில்லை வாழந்தணரை நம் தலைவராகக் கொள்ளுதல் நன்று, அரன் நாமத்தை மந்திரமாக்கிக் கொள்தலும் நன்று**. ஆயின் இறையடியாரையும் தலைவராகக் கொள்ளுதல் வேண்டுமோ? அவர்தம் உடைமையே அனைத்துமென்று அவர் வேண்டுவதெல்லாம் இல்லையென்னாது கொடுப்பதும் (இயற்பகை) அவரை மாகேசுரராகப் பூசித்தலும் (இளையான் குடிமாறர்) அவர்தம் வேடத்தையே மெய்பொருளெனக் கொள்வதும் (மெய்பொருள் நாயனார்) இறைவனைத் தொழுதற்கு முன் அவர்களைக் கும்பிடுதலும் (விறண்மின்டர்) ஆதிய இவையெல்லாம் எதற்கு? என்பார்க்குரிய விடையாக அமர்நீதி நாயனார் புராணம் அமைந்திருக்கின்றது. வேதப் பொருளான சிவனும், சிவனடியாரும் ஒரே நிறை என்பதே அவ் விடை.

**"நாட்கொண்ட தாமரைப் பூத்தடஞ் சூழ்ந்த நல்லூரகத்தே
கீட் கொண்ட கோவணங் காவென்று சொல்லிக் கிரிபடத்தான்
வாட்கொண்ட நோக்கி மனைவியொடு மங்கொர் வாணிகனை
ஆட்கொண்ட வார்த்தை உரைக்கு மன்றோ இவ் அகலிடமே"**

- தேவாரம்

இழைத்த அன்பினில் இறைதிருநீற்று மெய்யடிமை
பிழைத்தி லோமெனில் பெருந்துலை நேர் நிற்க என்று
மழைத்தடம் பொழில்திரு நல்லூர் இறைவரை வணங்கித்
தழைத்த அஞ்செழுத் தோதினார் ஏறினார் தட்டில் - பெரிய புராணம்

அமர்நீதியார் குருபூசைநாள் ஆனி பூரம்

08. எறிபத்தநாயனார்

"இலை மலிந்த வேல் நம்பி எறிபத்தர்க்கு அடியேன் "
- திருத்தொண்டத் தொகை

"ஊர் மதின் மூன்றட்ட உத்தமர்க் கென்றோர் உயர் தவத்தோன்
தார் மலர் கொய்யா வருபவன் தண்டின் மலர் பறித்த
ஊர் மலை மேற்கொளும் பாகருடல் துணி யாக்குமவன்
நேர்மலி மாமதில் சூழ்கரு வூரில் எறிபத்தனே".
- திருத்தொண்டர் திருவந்தாதி.

எறிபத்த நாயனார் கொங்கு நாட்டிலே உள்ள கருவூரிலே அவதரித்தார். அவர் அவ்வூரிலுள்ள ஆனிலை என்னும் திருக்கோயிலில் எழுந்தருளிய பெருமானை வழிபட்டுச் சிவனடியார்களுக்குத் திருத்தொண்டு செய்து வந்தார். இவர் சிவனடியார்களுக்கு ஓர் இடர் வந்து உற்றவிடத்து உதவும் இயல்பினை உடையவர்; அடியார்களுக்கு இடையூறு வந்த காலத்து அங்கு விரைந்து சென்று அடியார்க்குத் தீங்கு புரிந்த கொடியோரைப் பரசு என்னும் மழுப்படையினால் எறிந்து தண்டிப்பார். அதன் பொருட்டு அவர் கையிலே எப்போதும் மழுப்படை இருக்கும்.

அந்நகரிலே திருவானிலைத் திருக்கோயிலில் வீற்றிருக்கும் இறைவர்க்குப் பள்ளித்தாமப் பணி செய்துவந்த சிவகாமியாண்டார் என்னும் முதிய அடியவர் ஒருவரும் இருந்தார். அவர் ஒருநாள் வைகறையில் துயிலெழுந்து நீராடித் தூய்மை உடையவராய் வாயைத் துணியாற் கட்டித் திருநந்தவனஞ் சென்றார். அங்கு மலர்கொய்து பூக்கூடையில் நிறைத்து பூக்கூடையைத் தண்டின் மேல் உயரத் தாங்கிக்கொண்டு திருக்கோயிலை நோக்கி விரைந்து வந்தார். அன்று மகாநவமியின் முதல் நாள். அந்நகரில் அரசு வீற்றிருக்கும் புகழ்ச்சோழரது பட்டத்து யானை, ஆற்றில் நீராடி அலங்கரிக்கப் பெற்று மதச் செருக்குடன் பாகர்க்கு அடங்காது விரைந்து வந்தது. அது சிவகாமியாண்டாரைப் பின்தொடர்ந்து ஓடி அவர்தம் கையிலுள்ள பூக்கூடையைப் பறித்துச் சிதறியது. யானை மேலுள்ள பாகர்கள் யானையை விரைந்து செலுத்திச் சென்றனர். சிவகாமியாண்டாராகிய அடியவர், இறைவர்க்கு

சாத்தும் திருப்பள்ளித் தாமத்தைச்சிதறிய யானையின் செயல் கண்டு வெகுண்டு அதனைத் தண்டு கொண்டு அடிப்பதற்கு விரைந்து ஓடினார். ஆனால் முதுமை காரணமாக இடறிவிழுந்து நிலத்திலே கைகளை மோதி அழுதார்.

சடாமுடியில் ஏறும் மலரை யானை சிந்துவதோ எனப் புலம்பினார். **'சிவதா, சிவதா'**எனும் அடியாரது ஓலத்தைக் கேட்டு விரைந்து அங்கு வந்த எறிபத்தர் யானையின் செய்கையை அறிந்து வெகுண்டார்; சிவகாமியாண்டாரைக் கண்டு வணங்கி "உமக்கிந்த நிலைமையைச் செய்த யானை எங்கே போய்விட்டது" என்று கேட்டார். சாமிக்குச் சாத்தக் கொண்டு வந்த பூவைச் சிதறிவிட்டு இந்தத் தெரு வழியே-தான் போகிறதெனக் கூறினார். 'இந்த யானை பிழைப்பதெப்படி' என யானையைப் பின்தொடர்ந்து சென்று யானையின் துதிக்கையை மழுவினால் துணித்தார்; அதற்கு முன்னும் இருமருங்கும் சென்ற குத்துக்கோற்காரர் மூவரையும் யானை மேலிருந்த பாகர் இருவரையும் மழுவினால் வெட்டி வீழ்த்தி நின்றார்.

தமது பட்டத்து யானையும், பாகர் ஐவரும் பட்டு வீழ்ந்த செய்-தியைக் கேட்ட புகழ்ச்சோழர் வெகுண்டார். 'இது பகைவர் செயலா-கும்' என்று எண்ணி, நால்வகைச் சேனைகளுடன் அவ்விடத்தை அடைந்தார்; யானையும், பாகரும் வெட்டப்பட்டிருந்த அவ்விடத்தில் பகைவர் எவரையும் காணாதவராய் இருகை யானைபோல் தனித்து நிற்கும் எறிபத்தராகிய சிவனடியாரைக் கண்டார். தம் யானையையும் பாகர்களையும் கொன்றவர் அங்கு நிற்கும் அடியவரே என அருகிலுள்ளார் கூறக் கேட்டறிந்த வேந்தர், 'சிவபெருமானுக்கு அன்பராம் பண்புடைய இச்சிவனடியார் பிழைகண்டாலல்லது இவ்வாறு கொ-லைத்தண்டம் செய்யமாட்டார். எனவே என்னுடைய யானையும், பாகர்களும் பிழை செய்திருத்தல் வேண்டும் எனத் தம்முள்ளே எண்ணியவராய், தம்முடன் வந்த சேனைகளைப் பின்னே நிறுத்தி விட்டுக் குதிரையினின்று இறங்கி, 'மலைபோலும் யானையை இவ்வடியவர் நெருங்கிய நிலையில், அவ் யானையால் இவர்க்கு எத்தகைய தீங்கும் நேராது விட்ட தவப்பேறுடையேன். அம்பலவா-ணரடியார் இவ்வளவு வெகுளியை அடைவதற்கு நேர்ந்த குற்றம் யாதோ? என்று அஞ்சி எறிபத்தரை வணங்கினார். எறிபத்தர், யானையின்

சிவபாதகச் செயலையும், பாகர் விலக்காதிருந்ததனையும் எடுத்துரைத்தார். அதனை உணர்ந்த புகழ்ச்சோழர், 'சிவனடியார்க்குச் செய்த இப்பெருங் குற்றத்திற்கு இத்தண்டனை போதாது; இக் குற்றத்திற்குக் காரணமாகிய என்னையும் கொல்லுதல் வேண்டும். ஆனால் மங்கலம் பொருந்திய மழுப்படையினாற் கொல்வது மரபன்று. வாட்படையாகிய இதுவே என்னைக் கொல்லுவதற்கு ஏற்ற கருவியாம்' என்று தமது உடைவாளை ஏற்றுக் கொள்ளும்படி எறிபத்தரிடம் நீட்டினார்.

அது கண்ட எறிபத்தர் 'கெட்டேன், எல்லையற்ற புகழனாராகிய வேந்தர் பெருமான் சிவனடியார்பால் வைத்த அன்பிற்கு அளவில்லாமையை உணர்ந்தேன்.' என்று எண்ணி, மன்னர் தந்த வாட்படையை வாங்க மாட்டாதவராய்த் தாம் வாங்காது விட்டால் மன்னர் அதனைக் கொண்டு தம்முயிரைத் துறந்துவிடுவார் என்று அஞ்சித் தீங்கு நேராதபடி அதனை வாங்கிக்கொண்டார். உடைவாள் கொடுத்த புகழ்ச்சோழர், அடியாரை வணங்கி 'இவ்வடியார் வாளினால் என் குற்றத்தைத் தீர்க்கும் பேறு பெற்றேன்' என உவந்து நின்றார். அது கண்ட எறிபத்தர் தமது பட்டத்து யானையும், பாகரும் என் மழுப்படையால் மடிந்தொழியவும், உடைவாளைத் தந்து, 'எனது குற்றத்தைப் போக்க என்னையும் கொல்லும், என்று வேண்டும் பேரன்புடைய இவர்க்கு யான் தீங்கு நினைத்தேனே" என்று மனம் வருந்தி, இவ்வாளினால் எனது உயிரை முடிப்பதே இனிச் செய்யத்தக்கது' என்று எண்ணி, வாட்படையினைத் தம் கழுத்திற் பூட்டி அரிதற்கு முற்பட்டார். அந்நிலையிற் புகழ்ச்சோழர், 'பெரியோர் செய்கை இருந்தவாறு இது. கெட்டேன்' என்று எதிரே விரைந்து சென்று வாளையும் கையையும் பிடித்துக் கொண்டார்.

அப்பொழுது சிவபெருமான் திருவருளால் 'யாவராலும் தொழத்தகும் பேரன்புடையவர்களே! உங்கள் திருத்தொண்டின் பெருமையினை உலகத்தார்க்குப் புலப்படுத்தும் பொருட்டு இன்று வெகுளிமிக்க யானை பூக்கூடையைச் சிதறும்படி இறைவனருளால் நிகழ்ந்தது" என்று ஓர் அருள்வாக்கு எழுந்தது. அதனுடனே பாகர்களோடு யானையும் உயிர் பெற்றெழுந்தது. எறிபத்தர் வாட்படையை நெகிழவிட்டுப் புகழ்ச்சோழர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினார். வேந்தரும் வாட்படையைக் கீழே எறிந்து விட்டு எறிபத்தர் திருவடிகளைப் போற்றி நிலமிசை வீழ்ந்து

இறைஞ்சினார். இருவரும் இறைவன் அருள்மொழியினை வியந்து போற்றினர். இறைவர் திருவருளால் சிவகாமியாண்டாரது பூக்கூடையில் முன்போல் தூய நறுமலர்கள் வந்து நிரம்பின. பாகர்கள் யானையை நடத்திக்கொண்டு மன்னரை அணுகினர். எறிபத்தர் புகழ்ச்சோழரை வணங்கி, அடியேன் உளங்களிப்ப இப்பட்டத்து யானைமேல் எழுந்தருளுதல் வேண்டும்' என்று வேண்டிக்கொண்டார். புகழ்ச்சோழர் எறிபத்தரை வணங்கி யானை மேலமர்ந்து சேனைகள்சூழ அரமனையை அடைந்தார். சிவகாமியாண்டார் திருப்பூங்கூடையைக் கொண்டு இறைவர்க்குத் திருமாலை தொடுத்தணிதல் வேண்டித் திருக்கோயிலை அடைந்தார். எறிபத்த நாயனார் இவ்வாறு அடியார்களுக்கு இடர் நேரிடும்போதெல்லாம் முற்பட்டுச் சென்று தமது அன்பின் மிக்க ஆண்மைத் திறத்தால் இடையூறகற்றித் திருக்கயிலையை அடைந்து சிவகணத்தார்க்குத் தலைவராக அமர்ந்தார்

திருத்தொண்டர் புராணசாரம்

திருமருவு கருவூர் ஆனிலையார் சாத்தும்
சிவகாமியார் மலரைச் சிந்த யானை
அரன்நெறியோர் எறிபத்தர் பாகரோடும் அற எறிய
என்னுயிரும் அகற்றீர் என்று
புரவலனார் கொடுத்த படை அன்பால் வாங்கிப்
புரிந்து அரிவாள் புக எழுந்த புனித வாக்கால்
கரியினுடன் விழுந்தாரும் எழுந்தார் தாமும்
கணநாதரது காவல் கைக்கொண்டாரே.

நுண்பொருள்

சிவனடியார்க்கு இடையூறு செய்வாரையும், இடையூறு செய்யும் விலங்கினத்தையும் கொல்லுதல் கொலைபாவமாகாது. அது பாவச் செயலாகாது, புண்ணியமாவதுடன் இடையூறு செய்வார்க்கும் ஈடேற்றமா யமைவது

"களியானையின் ஈருரியாய் சிவதா
எளியார் வலியாம் இறைவா சிவதா
அளியார் அடியார் அறிவே சிவதா
தெளிவார் அமுதே சிவதா சிவதா".

- பெரிய புராணம்

எறிபத்தநாயனாரது குருபூசைநாள் மாசி அத்தம்

09. ஏனாதி நாத நாயனார்

"ஏனாதி நாதன் தன் அடியார்க்கும் அடியேன் "

- திருத்தொண்டத் தொகை

"பத்தனை ஏனாதி நாதனைப் பார்நீடு எயினை தன்னுள்
அத்தனைத் தன்னோடு அமர் மலைந்தான் நெற்றி நீறு கண்டு
கைத்தனி வாள்வீடு ஒழிந்தவன் கண்டிப்ப நின்றருளும்
நித்தனை ஈழக்குலதீபன் என்பர் இந் நீள் நிலத்தே.".

- திருத்தொண்டர் திருவந்தாதி.

ஏனாதி நாத நாயனார் சோழநாட்டில் எயினனூரிலே சான்றார் குலத்தில் தோன்றியவர். தொன்மைத் திருநீற்றுத் தொண்டின் வழிபாட்டில் நிலைத்து நின்ற இவர் அரசர்களுக்கு வாட்படைப் பயிற்சி அளிக்கும் போர்த்தொழில் ஆசிரியராய் கடமையாற்றி வந்தார். அதன்மூலம் வரும் பொருள் வளங்களால் சிவனடியார்களை உபசரிக்கும் பேரன்-பினராய் விளங்கினார்.

ஏனாதிநாதர் வாட்படைபயிற்றும் ஆசிரியத்தொழிலை மேற்கொண்டு வாழும் காலத்தில் போர்ப்பயிற்சி பெற விரும்பிய பலரும் அவரையே சார்ந்து பயின்றனர். இதனால் அவரது தாயமுறையினனான அதிசூரன் என்பானுக்கு அத்தொழிலில் வருவாய் குறைந்தது. அதனால் ஏனாதிநாதர் மீது பொறாமையுற்ற அதிசூரன் வீரர் கூட்டத்தோடு சென்று 'வாள் கொண்ட தாயம் வலியாரே கொள்வது' என அவரைப் போருக்கு அறைகூவியழைத்தான்; ஏனாதியார் போர்க்கோலம்கொண்டு சிங்க ஏறுபோல் புறப்பட்டார். அவரிடம் வாள் வித்தை பயிலும் காளையரும் வாள்வீரரான அவரது சுற்றத்தலைவரும் அவரின் இரு பக்கமும் சூழ்ந்து சென்றனர். 'நாம் இருவரும் சேனைகளை அணிவகுத்துப் போர் செய்வோம். போரில் வென்றார் யாரோ அவரே வாள் பயிற்றும் உரிமையைக் கைக்கொள்ள வேண்டும்' என்று அங்கு அதிசூரன் கூறினான். ஏனாதிநாதரும் அதற்கு இசைந்தார். இருவரிடையேயும் நடந்த வாட் போரில் அதிசூரன் தோற்றோடினான்.

தோற்றோடிய அதிசூரன் மானமழிந்ததற்கு நொந்து, இரவு முழுவதும் நித்திரையின்றி ஆலோசித்தான். இறுதியில் ஏனாதி நாதரை வஞ்சனையாற் கொல்ல எண்ணினான்; "நம் இருவருக்குந் துணை-வருவார் யாருமின்றி நாம் இருவர் மட்டும் நாளை விடியற்காலத்தே வேறோர் இடத்திற் போர் செய்வோம், வாரும்" என்று ஒருவனைக் கொண்டு ஏனாதிநாதருக்குச் சொல்லியனுப்பினான். அதுகேட்ட ஏனாதிநா-தர், சுற்றத்தார் யாரும் அறியாதபடி அவன் குறித்த போர்க்களத்திற் சென்று அவனுடைய வரவை எதிர்பார்த்து நின்றார். தீங்கு குறித்து அழைத்த தீயோனாகிய அதிசூரன், 'திருநீறு தாங்கிய நெற்றியினாரை எவ்விடத்தும் கொல்லாத இயல்புடையார் ஏனாதிநாதர்' என அறிந்து, முன் எப்பொழுதுமே திருநீறிடாத அவன், நெற்றி நிறைய வெண்ணீறு பூசி நெஞ்சத்து வஞ்சனையாகிய கறுப்பினை உட்கொண்டு வாளும் கேடகமும் தாங்கித் தான் குறித்த இடத்திற்குப் போனான். அங்கு நின்ற ஏனாதிநாதரைக் கண்டு அவரை அணுகும் வரை தனது நெற்றியைக் கேடயத்தால் மறைத்துக்கொண்டு அவருக்கு முன்னே முடுகி நடந்தான். ஏனாதிநாதர் சமயந் தெரிந்து அவனை எதிர்த்துப் பொருதற்கு முற்பட்ட அளவில், அதிசூரன் தன் முகத்தை மறைத்த கேடகத்தைச் சிறிது விலக்கினான். அப்பொழுது அவனது நெற்றியிலே திருநீற்றினைக் கண்ணுற்றார் ஏனாதிநாதர். கண்டபொழுதே 'கெட்டேன் இவர் சிவபெருமானுக்கு அடியவராகிவிட்டார். அதனால் இவர்தம் உள்ளக்குறிப்பின் வழியே நிற்பேன்' என்று தம் கையிலுள்ள வாளை-யும், கேடகத்தையும் நீக்கக் கருதினார்.' ஆயினும் ஆயுதம் இல்லாத-வரைக் கொன்றார் என்ற பழி இவரை அடையாதிருத்தல் வேண்டும். என்று எண்ணி, வாளையும், பலகையையும் கையிற்பற்றியபடியே போர் செய்வார் போல் வாளுடன் எதிர்நின்றார். அந்நிலையில் முன்னே நின்ற தீவினையாளனாகிய அதிசூரன் தனது எண்ணத்தை எளிதில் நிறை-வேற்றிக்கொண்டான். சிவபெருமான் ஏனாதிநாதருக்கு எதிரேதோன்றி, பகைவனுடைய கையிலுள்ள வாட்படையினால் பாசம் அறுத்த உயர்ந்த அன்பராகிய ஏனாதிநாதரை என்றும் உடன்பிரியாப் பேறளித்து மறைந்-தருளினார்.

திருத்தொண்டர் புராணசாரம்.

ஈழக்குலச் சான்றார் எமினனூர் வாழ்
ஏனாதி நாதனார் இறைவன் நீற்றைத்
தாழத் தொழுமரபார் படைகளாற்றும்
தன்மைபெறா அதிசூரன்சமரில் தோற்று
வாழத் திருநீறு சாத்தக் கணம்டு மருண்டார்
தெருண்டார் கைவாள் விடார் நேர்
வீழக் களிப்பார் போல் நின்றே யாக்கை
விடுவித்துச் சிவனருளே மேவினாரே.

நுண்பொருள்

நெற்றியிலே நீறிட்ட சிவனடியார்களது குறிப்பின் வழி ஒழுகுதல் சிவநெறி செல்வாரது சீரிய ஒழுக்கம். நீறிட்டு வந்த அதிசூரன் குறி தன் உயிர் கொள்ளல் என்றறிந்த ஏனாதிநாதர் அக்குறி வழியே நின்றதுடன், நிராயுதரைக் கொன்றான் என்ற பழிவராவண்ணம் ஒழுகியதும் பெரும் சிறப்பே.

அந்நின்ற தொண்டர் திருவுள்ளம் ஆரறிவார்
முன்னின்ற பாதகனும் தன்கருத்தே முற்றுவித்தான்
இன்னின்ற தன்மை அறிவார் இவர்க்கருள
மின்னின்ற செஞ்சடையார் தாமே வெளி நின்றார்.

- பெரிய புராணம்

ஏனாதிநாதநாயனார் குருபூசைநாள் புரட்டாதி உத்திராடம்

10. கண்ணப்ப நாயனார்

"கலை மலிந்தசீர் நம்பி கண்ணப்பர்க் கடியேன்"

- திருத்தொண்டத் தொகை

"நிலத்தில் திகழ்திருக் காளத்தியார்திரு நெற்றியின்மேல்
நலத்திற் பொழிதரு கண்ணின் குருதி கண்டு உள் நடுங்கி
வலத்திற் கடுங்கணை யால்தன் மலர்க்கண் இடந்து அப்பினான்
குலத்தில் கிராதன் நம் கண்ணப்பனாம் என்று கூறுவரே".

- திருத்தொண்டர் திருவந்தாதி.

பொத்தப்பி நாட்டிலுள்ள ஓர் ஊர் உடுப்பூர். இவ்வூரில் வேட்டுவ சாதியார் வாழ்வர். இவர்களுக்கு அதிபதியாக நாகனார் என்பவர் இருந்தார். நாகனாரின் மனைவியார் தத்தையார். இவ்விருவரும் முருகப் பெருமானைக் கும்பிட்டு ஒரு திண்ணிய ஆண் குழந்தையைப் பெற்-றெடுத்தனர். அக் குழந்தைக்குத் திண்ணனார் என்ற நாமஞ் சூட்டிச் சீராட்டிப் பாராட்டி வளர்த்தனர். திண்ணனார் வளர்பிறைபோல் வளர்ந்து பதினாறு வயதுப் பருவத்தை அடைந்தார். அவ்வேளை நாகனாரும் முதுமையுற்று முன்புபோல் வேட்டைத் தொழிலாற்றும் வலிமை யற்றவரானார். ஆதலால் தன் மைந்தனுக்கு உடைதோலும் சுரிகை-யும் அளித்து வேட்டுவ குல முதலியாக்கினார்.

குலமுதலியாகிய திண்ணனார் வேட்டைத் தொழில் தாழ்த்திய மையால் காட்டிற் பெருகிய கொடிய மிருகங்களை அழித்தற் பொருட்டு "கன்னி வேட்டை"க்குச் செல்ல ஆயத்தமானார். அவருடன் வேட்டுவ மறவரெல்லாம் திரண்டனர். கடி நாய்கள் முன்னே பாய்ந்து சென்றன. வேட்டுவரோடி வேட்டைக் காட்டை வளைத்து உட்புகுந்து பல்வேறு ஓசைகளை எழுப்பி வேட்டையாடலாயினர். கரடி, புலி, சிங்கம் ஆகியன தாளறுவனவும், தலைதுணிவனவும், குடர்சரிவனவுமாயின. அவ் வேளையில் கடியதோர் பன்றி வேட்டைக் காட்டினின்றும் வெளியேறி ஓடலாயிற்று. அதனைக் கண்ணுற்ற திண்ணனார் அதன் அடிவழியே முடுகிய கடுவிசையில் ஓடலாயினார். நாணன், காடன்

என்போர் அவரைப் பின்தொடர்ந்து சென்றனர். ஓடி இளைத்து ஒரு மரச் சூழலில் ஒதுங்கி நின்ற பன்றியைத் திண்ணனார் தம் சுரிகையை உருவித் துணிபடக் குத்தி வீழ்த்தினார். வீழ்த்தி நின்ற திண்ணனாரைச் சேர்ந்த நாணனும் காடனும் இப்பன்றியைத் தின்று பசியாறி நீரும் குடிப்போம் என்றனர். திண்ணனார் "இக்காட்டில் நீர் எங்கே உள்ளது?" எனக்கேட்டார். நாணன் ஒரு தேக்குமரத்தைக் காட்டி அம்மரத்துக்கப்பால் ஒரு குன்றின் அயலில் குளிர்ந்த பொன் முகலி ஆறு பாய்கின்றது எனக் கூறினான். பன்றியையும் காவிக்கொண்டு அவ்விடம் நோக்கிச் சென்றுகொண்டிருந்தனர். வழியில் திருக்காளத்திமலை திண்ணனார் கண்ணிற்பட்டது. பட்டதும் அம்மலைக்குச் செல்வோம் என்றார். 'மலைக்குச் சென்றால் நல்ல காட்சி காணலாம்; அங்கே குடுமித் தேவர் இருப்பர்; கும்பிடலாம்' என நாணன் சொன்னான். மலையை நெருங்கிச் செல்ல திண்ணனாருக்கு இனம்புரியாததோர் சுக உணர்வு தோன்றியது. அவருக்குத் தன்மேலிருந்த பாரம் போவது போன்ற உணர்ச்சி பெருகியது. மனதில் புதிரானதோர் உணர்வு அரும்பலாயிற்று, தேவர் இருக்கும் இடம் செல்வோம் என விரைந்து நடந்தார். பொன் முகலி ஆற்றை அடைந்ததும், காடனிடம் தீ உண்டு பண்ணுமாறு கூறித் தாம் நாணனுடன் சென்றார். ஆற்றின் தெளிந்த தீர்த்த நீர் அவர் சிந்தை தெளியச் செய்தது. குடுமித்தேவரிடம் பெருகும் அன்பின் சுகமே தனக்கேற்பட்ட 'புதிரான' சுக உணர்வு என்ற விளக்கம் ஏற்படலாயிற்று. மலைச்சாரலை அடைந்தபோது உச்சிக் காலமாயிருந்தது. அவ்வேளையில் தேவர்கள் வந்து காளத்திநாதரை வழிபடுவர். அவ்வாறு வழிபடும்போது தேவதுந்துபி எழும். அந்த வாத்திய ஓசை திண்ணனாருக்குக் கேட்டது. "இது என்ன இசை" என்று கேட்டார். நாணனுக்கோ அது மலைப்பெருந்தேன்வண்டின் இரைச்சலாகவே தோன்றியது. திண்ணனாரது முன்னைத்தவத்தின் பயன் முன்னி எழ முடிவிலா அன்பு பெருகலாயிற்று. அவ்வன்பும் நாணனும் முன்பு செல்லத் தான் மலை ஏறிச் சென்றார். தத்துவப் படிகளைத் தாண்டி சிவதத்துவத்தைச் சாரும் சிவஞானியரைப்போலச் சென்று கொண்டிருந்தார். இவ்வண்ணம் சென்று கொண்டிருந்த அன்பாளர் காணுதற்குமுன்பே காளத்திநாதரின் அருள் திருநோக்கம் திண்ணனார் மேற் பதிந்தது. திண்ணனாரின் முன்னைச்சார்பு முற்றாய் நீங்கியது.

அவர் **ஒப்பற்ற அன்புருவானார்.** அன்புருவான திண்ணனார் மலைக் கொழுந்தாயுள்ள தேவரைக்கண்டார். அன்பின் வேகத்தால் விரைந்து ஓடிச்சென்று தழுவினார். மோந்தார். ஐயர் அகப்பட்டுக்கொண்டார் என ஆனந்தப்பட்டார். "கரடி சிங்கம் திரியும் காட்டில் இப்படித் தனியாக இருப்பதோ" என்று இரங்கினார். இரங்கி நின்ற திண்ணனார் கண்ணில் தேவரின் உச்சியில் பச்சிலை, பூ என்பன தெரிந்தன. இச்செயல் செய்தவர் யார் எனக் கேட்டார். "நான் இது அறிவேன்; முன்னர் உன் தந்தையாரோடு வந்த ஒருநாள் பார்ப்பான் ஒருவன் குளிர் நீராட்டி" இலையும் பூவும் இட்டு, உணவு படைத்து, சில சொற்களும் சொல்லி நின்றான்; இன்றும் அவனே இச்செய்கை செய்தான்" என நாணன் கூறினான். "இதுவே திருக்காளத்தி நாயனார்க்கு இனிய செய்கை" என்று அதனைக் கடைப்பிடிக்கத் திண்ணப்பர் ஆசை கொண்டார். நாயனார் பசியோடிருக்கின்றாரே; இவருக்கு இறைச்சி கொண்டுவர வேண்டுமென விரும்பினார். ஆனால் அவரைத் தனியே விட்டுச் செல்லவும் மனம் ஏவவில்லை. சற்று நேரம் சஞ்சலப்பட்டபின் துணிவுகொண்டு கைகூப்பித் தொழுதுவிட்டு வில்லெடுத்து விரைவுடன் இறங்கிச் சென்றார். பன்றி கிடக்கும் இடத்தை அடைந்து உறுப்பரிந்து வைத்திருந்த இறைச்சியை தீயில் வதக்கி, வாயில் சுவை பார்த்து இனியனவெல்லாம் கல்லையில் சேர்த்தார். இடையில் காடன் ஏதேதோ வினவினான். அவையெல்லாம் திண்ணப்பர் காதில் விழவேயில்லை. நாணன், "குடுமித் தேவரிடத்து வங்கினைப் பற்றி மீளாவல்லுடும்பென்ன நின்ற" அவர்தம் நிலையை காடனுக்கு எடுத்துக் கூறினான். இருவரும் இனிச்செயலில்லை; 'நாகனாரிடம் சொல்வோம்' எனச் சென்றனர். திண்ணப்பர் கல்லையில் சேர்த்த ஊனமுது ஓர் கையிலும், வாயில் பொன் முகலி ஆற்று மஞ்சன நீரும், தலையில் பள்ளித் தாமமும் (பூங்கொத்து) ஆக நாயனார் மிக்க பசியொடிருப்பாரென இரங்கியவராய் விரைந்து வந்தார். வந்து தேவரின் குடுமியிலிருந்த பூக்களைத் தம் செருப்பணிந்த காலினால் துடைத்தார். வாயின் நீரினால் அன்பு உமிழ்வார் போல் அபிடேகமாட்டினார். தலையிலிருந்த பூங்கொத்துக்களை தேவர் குடுமியில் சூட்டினார். கல்லையிலிருந்த ஊனமுதைத் தேவரின் முன்பு வைத்து "இனிய ஊன் நாயனீரே; நானும் சுவைகண்டேன்; அமுது செய்தருளும்" என்று இவ்வாறான மொழிகள்

சொல்லி அமுது செய்வித்தார். அந்தி மாலையாகியதும் இரவில் கொடிய விலங்குகள் வரும் என்று அஞ்சி வில்லுடன் நின்றார். இரவெல்லாம் கண்துயிலாது நின்ற வீரர். விடியற்சாமமானபோது "இன்று நாயனாருக்கு இனிய ஊனமுது படைக்க வேண்டுமென்ற ஆர்வம் கொண்டார். இருள் பிரியாத வேளையிலே காட்டினுள் புகுந்தார். அவரின் முன்னே அவரைப் பிரியாது திரியும் நாயும் சென்றது.

அன்று பகற்போதில் காளத்தி நாதரை அர்ச்சித்து வழிபடும் சிவகோசரியார் எனும் அந்தணர் ஆசாரசீலராய் பூசைத் திரவியங்களுடன் வந்தார். வந்தவர் காளத்தியப்பரின் முன்னிலையில் கிடக்கும் இறைச்சி, எலும்பு என்பவற்றைக் கண்டு திகைத்து கால்களை அகலமித்தபடியே நின்றார். வேட்டுவச்சாதியாரே இவ்வேலையைச் செய்தனராதல் வேண்டும் எனச் சோர்ந்தார். பூசைக்கு நேரம் தாழ்க்கின்றதென்ற உணர்வு எழுந்ததும் இறைச்சி, எலும்பு என்பவற்றை எடுத்து எறிந்து, திருவலகுகொண்டு செருப்பு அடி, நாயடி என்பவற்றையெல்லாம் மாற்றியபின் பொன்முகலி சென்று நீராடினார். மீண்டுவந்து பழுது புகுந்தது தீரப் பவித்தரமாம் செய்கை (பிராயச்சித்தம்) செய்து, ஆகமவிதி முறைப்படியான பூசனை செய்து சென்றார்.

இருள் பிரியாப் போதில் காட்டினுட் புகுந்த திண்ணனார் தாமறிந்த வேட்டைத் திறத்தால் வேறுவேறு மிருகமெல்லாம் கொன்று ஓரிடத்திற் சேர்த்து, வக்குவன வக்குவித்து, கோலினிற் கோர்த்து, தீயினில் காய்ச்சி, தேக்கிலைக் கல்லையில் சேர்த்தார். அதிற் தேனும் பிழிந்து கலந்தார். முன்போன்றே பள்ளித் தாமமும், வாய்க்கலசத்து மஞ்சனமும், ஊனமுதமுமாய் காளத்தியப்பரிடம் விரைந்து வந்தார். 'இது முன்னையிலும் நன்று; நானும் சுவைகண்டேன்; தேனும் கலந்தது; தித்திக்கும்' என மொழிந்து திருவமுது செய்வித்தார்.

இவ்வண்ணம் பகல் வேட்டையாடி இனிய செய்கை செய்வதும், இரவில் கண்ணுறங்காது காவல் புரிவதுமாகத் திண்ணப்பர் இருந்தனர். ஆகமமுறைப்படி பூசனை புரிந்து சிவகோசரியார் ஒழுகினார். நாணன், காடன் என்போர் சென்று சொன்ன சொற்கேட்டு ஆறாக் கவலையுடன் வந்த நாகனாரும், கிளையினரும் முயலும் வகையெல்லாம் முயன்றும் தம் கருத்து வாராமற் கைவிட்டுச் சென்றனர்.

சிவகோசரியார் நாளும் நாளும் நிகழும் அநுசிதம் குறித்து மிகவும் மனம் நொந்தார். அவர் பெருமானை வேண்டிய வண்ணம் துயின்ற வேளையில் பெருமான் கனவிலே தோன்றி 'இச்செய்கை செய்பவனை நீ இகழவேண்டாம். அவனுடைய வடிவெல்லாம் நம்மிடத்-தில் கொண்ட அன்பாயமைவது; அவனுடைய அறிவெல்லாம் நமை அறியும் அறிவு; அவனுடைய செயலெல்லாம் நமக்கினியன. இதனை நாளை உமக்குக் காட்டுவோம். நீர் வந்து ஒளித்திருந்து இதனைக் காண்பாய்' என அருளிச் செய்தார். சிவகோசரியார் பெருமானது அருளிப் பாட்டை நினைந்து உருகிய சிந்தையராய் அற்புதம் அறியும் ஆர்வத்தோடு வந்து பூசனையாற்றி ஒளிந்திருந்தார்.

திண்ணப்பர் திருக்காளத்தி அப்பரைச் சேர்ந்து ஐந்து பகலும், ஐந்து இரவும் கழிந்தன. ஆறாம் நாள் விடியற்போதில் கண் துயிலாது நின்ற கண்ணப்பர் வழமைபோன்று காட்டினுள் சென்று வேட்டையாடி ஊனமுது ஆதியனவற்றுடன் வந்து கொண்டிருந்தார். அவருக்குத் தோன்றிய சகுனங்கள் சஞ்சலந் தருவனவாய் இருந்தன. தீய பறவை-களின் ஒலிகொண்டு 'இது இரத்தப் பெருக்குக்கான துர்க்குறி' எனத் துணுக்குற்றார். நாயனாருக்கு ஏது நேர்ந்ததோ என எண்ணியவராய் விரைந்து வந்தார். வந்தவர் பெருமானது கண்ணிற் பெருகும் இரத்தத்தைக் கண்டார். கண்டதும் பதைபதைத்து மயக்கமெய்தினார். அவரது வாயினீர் சிந்தியது. கைசோர்ந்து இறைச்சி சிதறியது. தலையின் பள்ளித்தாமம் சோர்ந்தது. நிலத்தில் துடித்து வீழ்ந்தார். விழுந்தவர் மயக்கம் தெளிந்து எழுந்து சென்று இரத்தத்தைத் துடைத்துப் பார்த்தார். இரத்தம் நிற்காமல் பெருகிக் கொண்டே இருந்-தது. செய்வதறியாது பெருமூச்சு விட்டு மீளவும் சோர்ந்து விழுந்தார். வீழ்ந்தவர் எழுந்து வில்லும் அம்பும் கொண்டு இத்தீச்செயல் செய்த விலங்குகளுடன் வேடர்கள் உளரோ? என்று எங்கும் தேடிச்சென்றார். எவரையும் காணாது வந்து பெருமானின் பாதங்களைக் கட்டிப்பிடித்துக் கொண்டு அழுது புலம்பினார். ஓர் எண்ணம் எழுந்ததும் வெருண்டதோர் எருதுபோலக் காடெங்கும் திரிந்து பச்சிலைகளைப் பறித்துவந்து கண்ணுட் பிழிந்து பார்த்தார். மருந்து பலன் தராமையால் நொந்தார். "ஊனுக்கு ஊன்" என்றோர் மருந்து நினைவு வரவே கண்ணுக்குக் கண் என்றோர் புத்தி புகுந்தது. ஆதலால் தமது ஒரு கண்ணைத்

தோண்டி இரத்தம் பெருகும் பெருமானின் கண்ணில் அப்பினார். நின்ற செங்குருதி கண்டார்; நிலத்தினின்றும் ஏறப் பாய்ந்தார். தோள் கொட்டினார். நன்று நான் செய்த இந்த மதி என மகிழ்ந்தார். மகிழ்ந்த அன்பாளர் மற்றைக் கண்ணினின்றும், குருதி பெருகுவதைக் கண்டார். கண்டதும் ஒரு கணம் கவலையுற்றார். மறுகணமே இதற்கோர் அச்சம் கொள்ளேன்; மருந்துகை கண்டேன்" என்றவராய் தன் மற்றைக் கண்ணைத் தோண்டமுனைந்தார். கண் அடையாளம் காண்பதற்காகத் தன் இடக் காலைப் பெருமான் கண்ணில் ஊன்றினார். உள்நிறைந்த விருப்பத்தோடு கண்ணைத் தோண்டி எடுப்பதற்காக அம்பினை ஊன்றினார். இச்செய்கை கண்டு தேவதேவர் தரித்திலர். தம் திருக்கையால் தடுத்தனர். **"கண்ணப்ப நிற்க என் வலத்தினில் என்றும் நிற்க"** என்ற அமுதவாக்கு அருளினார். இதனை ஞானமா முனிவர் கண்டனர்; கேட்டனர். தேவர்கள் பூமழை பொழிந்து வாழ்த்தினர். இதனிலும் பெரிய பேறுண்டோ?

திருத்தொண்டர் புராணசாரம்

வேடரதிபதி உடுப்பூர் வேந்தன் நாகன்
விளங்கிய சேய் திண்ணனார் கன்னி வேட்டைக்
காடதில் வாய் மஞ்சனமும் குஞ்சிதரு மலரும்
காய்ச்சின மென்றிடு தசையும் காளத்தியார்க்குத்
தேடரும் அன்பினில் ஆறு தினத்தளவும் அளிப்பச்
சீறு சிவ கோசரியும் தெளிய விழிப் புண்ணீர்
ஓட ஒரு கண்ணப்பி ஒருகண் அப்ப
ஒழிக எனும் அருள்கொடு அருகுற நின்றாரே

நுண்பொருள்

ஈசன்மேல் அன்பு

01. வேட்டுவச் சாதியாருள்ளும் வேதியரும் போற்றிப் பணியவல்ல பக்தர்கள் தோன்றுவர்.
02. தவமும் தவமுடையார்க்கு ஆகும் என்றபடி, கண்ணப்பர்க்கு இத்தீவிரதர-பத்தி முன்னைப் பிறப்பில் முயன்ற தவத்தால் விளைந்ததாம்.
03. புண்ணிய தலங்களைத் தரிசித்தல் தெய்வீக உணர்வைக் கிளர்ந்தெழச் செய்யும்.

04. தீர்த்தம் சிந்தை தெளியச் செய்ய வல்லது.
05. மூர்த்தியின் அருள் நோக்கம் ஒப்பற்ற அன்புருவாக்கும்
06. புவியிலுள்ள புண்ணிய தலங்களில் தேவர் வழிபாடாற்றிச் செல்வர்
07. மெய்யன்பாளருக்கு உலகச் சார்பிராது
08. அறிந்த முறையிற் செய்யும் தீவிரதரமான அன்பு நிறைந்த பூசை, ஆகம நெறியான பூசனையின் உட் பொருளுக்கு இயைந்ததாக அமையும். ஆகம நெறி முறையான பூசனையாளரும் வியந்து போற்றற்குரியதாக அன்பு நெறியாளரது, ஆகம கிரியைகளுக்கு அதீதமான பூசனை அமையும்.
09. பெருமான் மீது கொண்ட பேரன்பின் காரணமாகப் பத்தர் செய்யும் பரித்தியாகமான செயல்களைக் காணப் பெருமான் தரித்திரார்.
10. மெய்யன்பு தலைப்படுமாயின் சில நாள்களிலேயே முத்தி சித்திக்கும்.

வேயனைய தோளுமையொர் பாகமதுவாக விடையேறி சடைமேல்
தூயமதிசூடி சுடுகாடில் நடமாடி மலைதன்னை வினவில்
வாய் கலசமாக வழிபாடு செய்யும் வேடன் மலராகு நயனம்
காய் கணையினால் இடத்து ஈசனடி கூடும் திருக்காளத்தியே

- திருஞானசம்பந்தர் தேவாரம்

காப்பதோர் வில்லும் அம்பும் கையதோர் இறைச்சிப்பாரம்
தோற்பெருஞ் செருப்புத் தொட்டுத் தூயவாய்க் கலசமாட்டி
தீப் பெருங் கண்கள் செய்ய குருதிநீர் ஒழுகத் தன்கண்
கோப்பதும் பற்றிக் கொண்டார் குறுக்கை வீரட்டனாரே.

- திருநாவுக்கரசர் தேவாரம்

பொருள் பற்றிச் செய்கின்ற பூசனைகள்போல் விளங்க
செருப்புற்ற சீரடி வாய்க்கலசம் ஊனமுதம்
விருப்புற்று வேடனார் சேடறிய மெய்குளிர்ந்தங்கு
அருள்பற்றி நின்றவா தோணோக்கம் ஆடாமோ.

- திருவாசகம்

அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கல் அன்பு
அவனுடைய அறிவெல்லாம் நமைஅறியும் அறிவு
அவனுடைய செயலெல்லாம் நமக்கினியவாம்
அவனுடைய நிலையிவ்வாறு அறிக என்று... - புராணம்

கண்ணப்பநாயனார் குருபூசைநாள் தை மிருகசீரிடம்

11. குங்குலியக்கலய நாயனார் புராணம்

"கடவூரிற் கலயன் தன் அடியார்க்கும் அடியேன்"

- திருத்தொண்டத் தொகை

"ஏய்ந்த கபிறு தன் கண்டத்திற் பூட்டி எழிற் பனந்தாட்
சாய்ந்த சிவனிலைத் தான் என்பர். காதலி தாலி கொடுத்து
ஆய்ந்த நற் குங்குலியங் கொண்ட நற்புகை காலனைமுன்
காய்ந்த வரற்கிட்ட தென் கடவூரிற் கலயனையே"

- திருத்தொண்டர் திருவந்தாதி

காவிரி பாயும் சோழவளநாட்டில் திருக்கடவூர் என்ற ஒரு தலமுண்டு. அது இறைவன் வீரஞ் செய்த எட்டுத் தலங்களில் ஒன்றா-தலின் கடவூர் வீரட்டானம் என்று பெயர் பெறும். காலனை உதைத்த வீரம் இங்கு நிகழ்ந்தது. இத்தலத்தில் மறையவர்கள் சிறந்து வாழ்-வார்கள். அவர்களுள் கலயனார் என்ற பெரியார் ஒருவர் இருந்தார். அவர் சிவனடிபேணும் சிறந்த அன்புடையவர். நல்லொழுக்கத்திற் சிறந்தவர். அத்தலத்தே எழுந்தருளியிருக்கும் அமிர்தகடேசருக்கு, பாலன் மார்க்கண்டருக்காக காலனைக் காலால் உதைத்த கருணையை நினைத்து, விதிப்படி தூபம்இடும் திருப்பணியை நியதியாகச் செய்து வந்தார். ஆதலால் அவரைக் குங்குலியக்கலயர் என்று அழைத்தனர்.

அந்நாளில் திருவருளாலே அவருக்கு வறுமை வந்தது. அதன்-பின்னரும் அத்திருப்பணியை வழுவாது செய்து வந்தனர். வறுமை மிகவே தமது நல்லநிலம்முழுவதையும், அடிமைகளையும் விற்றுப் பணிசெய்தனர். வறுமை மேலும் முடுகியதனால் தாமும், மனைவி-மக்களும், சுற்றமும் உணவுக்கான பொருள் ஒன்றுமின்றி இரண்டு நாள் உணவின்றி வருந்தினார்கள். இதுகண்ட மனைவியார் கணவ-னார் கையில் குற்றமற்ற தமது மங்கல நாணில் அணிந்த தாலியை எடுத்துக் கொடுத்து "இதற்கு நெல்கொள்ளும்" என்றனர். அதனைக் கொண்டு அவர் நெல்கொள்ளச் சென்றபோது எதிரில் ஒரு வணிகன் ஒப்பில்லாத குங்கிலியப் பொதிகொண்டு வந்தான். அதனை அறிந்த கலயனார் "இறைவனுக்கேற்ற மணமுடைய குங்கிலியம் இதுவாயின்,

இன்று நல்ல பேறு பெற்றேன். பெறுதற்கரிய இப்பேறு கிட்ட வேறு-கொள்ளத் தக்கது என்ன உள்ளது?" என்று துணிந்து, பொன் பெற்-றுக்கொண்டு குங்கிலியப்பொதியினைத் தருமாறு வணிகனைக் கேட்டார். அவனும் மகிழ்ந்து அவர் தந்த தாலியை ஏற்றுக்கொண்டு குங்கிலியப் பொதியைக் கொடுத்துச் சென்றான். கலயனார் சிந்தை மகிழ்வுடன் விரைந்து சென்று கோயிற் களஞ்சியத்தில் அப்பொதியின் குங்குலி-யத்தைச் சேமித்து வைத்தார். தூபத் திருப்பணி செய்து கொண்டு சிவசிந்தனையுடன் அங்கேயே தங்கினார்.

அன்று இரவு மனைவியாரும், மக்களும் பசியால் மிகவருந்தி அயர்ந்து தூங்கினர். அப்போது இறைவருடைய திருவருளினாலே குபேரன் தனது செல்வத்தைப் பூமியில் கொண்டுவந்து நிறைத்துக் கலயனாரது மனை முழுதும் பொற்குவியலும் நெற்குவியலும் அரிசி முதலிய பிற எல்லா வளங்களுமாக ஆக்கி வைத்தனன். இதனை இறைவர் அம்மையாருக்குக் கனவில் உணர்த்த, அவர் உணர்ந்து எழுந்து செல்வங்களைப் பார்த்தனர்; அவற்றை இறைவரின் அருள் என்று கண்டு கைகூப்பி தொழுதனர்; தனது கணவனார்க்கு திருவ-முது சமைக்கலாயினார். திருக்கோயிலில் இருந்த கலயனார்க்கு "நீ பசித்தனை! உன் மனையினிற் சென்று பாலின் இன் அடிசில் உண்டு துன்பம் நீங்குக" என்று இறைவர் கட்டளை இட்டு அருளினார். அத்திருவருளை மறுப்பதற்கு அஞ்சிக் கலயனார் மனையில் வந்தனர். செல்வமெல்லாங் கண்டனர்; திருமனையாரை நோக்கி "இவ்விளை வெல்லாம் எப்படி விளைந்தன?" என்று கேட்க, அவர் "திரு நீலகண்-டராகிய எம்பெருமானது அருள்" என்றார். கலயனார் கைகூப்பி வணங்கி "என்னையும் ஆட்கொள்ள எம்பெருமான் திருவருள் இருந்தபடி இதுவோ?" என்று துதித்தனர். மனைவியார் பரிகலந்திருத்திக் கணவ-னாரைச் சிவன் அடியார்களோடு இருத்தித் தூபதீபம் ஏந்திப் பூசித்து இன்னமுதூட்டினார். அது நுகர்ந்து கலயனார் இன்பமுற்றிருந்தார். இவ்வாறு இறைவரருளால் உலகில் நிறைந்த செல்வமுடையராகி அடி-யவர்களுக்கெல்லாம் நல்ல இனிய அமுதூட்டியும் உதவியும் வாழ்ந்-திருந்தனர்.

இந்நாளில் திருப்பனந்தாளில் வீற்றிருக்கும் சிவலிங்கத் திருமேனி, தாடகை என்ற அரச மாதுக்கு அருளும் பொருட்டுச் சாய்ந்தது சாய்ந்தவாறே இருந்தது. அதனைச் சாய்வுபோக்கிக் கண்டு கும்பிட-வேண்டுமென்று ஆசை கொண்ட சோழமன்னன் யானைகளையும், சேனைகளையும் ஏட்டித் திருமேனியினை நிமிரப்பண்ண முயன்றனன். இறைவர் நேர் நிற்கவில்லை. யானைகளும் இளைத்து வீழ்ந்தன. அரசன் மிகவும் கவலையோடிருந்தான். இதனைக் கேள்வியுற்ற கல-யனார், நாதனை நேர்காணும் பணியில் நின்ற அரசனை விரும்பித் திருக்கடவூரினின்றும் சென்று திருப்பனந்தாளிற் சேர்ந்தனர். சேனைகள் இளைத்து வீழ்ந்து எழமாட்டாத நிலைகண்டு மனம் வருந்தினார். இவ்விளைப்பிலே நானும் பங்கு கொண்டு இளைப்புறவேண்டும் என்று துணிந்தார். இறைவரது திருமேனிப் பூங்கச்சிற்கட்டிய பெரிய வலிய கயிற்றினைத் தம் கழுத்திற் பூட்டி இழுத்து வருந்தலுற்றார். இவர் இவ்வாறு செய்து இளைத்த பின் இறைவர் சரிந்து நிற்க ஒண்ணுமோ? இவர் தமது அன்பின் ஒருமைப்பாட்டினைக் கண்டபோதே அண்ணலார் நேரே நின்றார். தேவர்கள் விண்ணில் ஆரவாரித்துப் பூமாரி பெய்தனர். வாடியசோலை தலைமழை பெய்து தழைப்பது போல யானை, சேனைகள் களித்தன. சோழமன்னன் கலயனாரது பாதங்களில் வீழ்ந்து வணங்கி மேருவை வில்லாக வளைத்துப் புரமெரித்த கடவு-ளின் செந்நிலை காணச் செய்தீர்! திருமாலுங்காணாத மலரடியி-ணைகளை அன்புடைய அடியாரே அல்லால் நேர்காண வல்லார் யாவர்? என்று துதித்தான். பின்னர் அரசன் இறைவர்க்குப் பிறபணிகள் பலவுஞ்செய்து தனது நகரத்திற்குச் சென்றான். அரசன் போயின பின்னரும் கலயனார் சிலநாள் இறைவனைப் பிரிய ஆற்றாது அங்குதங்கி வழிப்பட்டுப்பின் திருக்கடவூர் சேர்ந்தனர்.

திருக்கடவூரிலே தூபத்திருப்பணிசெய்திருக்கும் நாளில் ஆளுடைய பிள்ளையாரும், ஆளுடைய அரசுகளும் அத்திருத்தலத்துக்கு எழுந்தரு-ளினார்கள். மிக்கமகிழ்ச்சி பொங்கக் கலயனார் அவர்களை எதிர்-கொண்டு அழைத்துவந்தார். தமது திருமனையில் அவர்களது பெருமைக்-கேற்றவாறு இன்னமுது அளித்து வழிபட்டார். அதனால் அவர்களது அருளே அன்றி இறைவரது அருளும் பெற்றார். இவ்வாறு கலயனார்

அரனுக்கும், அடியவர்க்கும் ஏற்றனவாய்த் தமக்கு நேர்ந்த பணிகள் பலவும் செய்து வாழ்ந்திருந்து சிவபெருமானது திருவடிநிழலிற் சேர்ந்தனர்.

திருத்தொண்டர் புராணசாரம்.

சீலமலி திருக்கடவூர்க் கலயனாராந்
திகழ்மறையோர் பணிவதுமை சிதையா முன்னே
தாலியை நெற்கொள என்று வாங்கிக் கொண்டு
சங்கைமில் குங்குலியத்தாற் சார்ந்த செல்வர்
ஞாலநிகழ் திருப்பனந்தாள் நாதர் நேரே
நரபதியும் தொழக்கச்சா நயந்துபோதப்
பால் அமுது உண்டாரும் அரசும் எய்திப்
பரிந்து அமுது செய அருள் சேர் பான்மையாரே

நுண்பொருள்

1. தூபமிடுதல் சிறந்த சிவதொண்டு
2. சிவபூசையில் நேசம் வைத்தோர் பூசைத்திரவியத்தைத் தாலி கொடுத்து வாங்கவும் தயங்கார்.
3. பூசைத்திரவியத்தைப் பெறல் அரும்பேறெனப் பெற்று ஈசனுக்காக்கும் தொண்டினை ஈசனும் பெரிதும் உகந்து இகபரசுகம் இரண்டும் ஈந்தருள்வார்.
4. செம்மைமனத்தவர் வருந்திச் செய்யும் சிவதொண்டுகளில் பண்புடைய அடியவர்கள் பங்கு கொண்டு தாமும் வருந்துதலும், இத்தகைய வருத்தத்தைப் பொறுக்கவொண்ணாத இறைவன் அப்பணியை முற்றுவித்தலும் பெரியவர் வாழ்வில் நிகழ்வனவாம்.
5. தம்மூருக்கு எழுந்தருளும் ஆசாரியரைப் பூசித்தலும் அவர்தம் அருளுக்கு ஆளாதலும் ஈசன் அருளுக்கு ஆளாகும் பேற்றினை நல்கும்.

"காலனைக் காய்ந்த செய்ய காலனார் கலயனாராம்
ஆலும் அன்புடைய சிந்தை அடியவர் அறியுமாற்றல்
சாலநீ பசித்தாய் உன்தன் தடநெடு மனையில் நண்ணிப்
பாலின் இன்னடிசில் உண்டு பருவரல் ஒழிக என்றார்."

– பெரியபுராணம்.

குங்குலியக்கலய நாயனார் குருபூசைநாள் ஆவணி மூலம்
அன்றைய பூசையில் தூபம் சிறப்பிடம் பெறுதல் அழகிது.

12. மானக்கஞ்சாற நாயனார்

"மலைமலிந்த தோள் வள்ளல் மானக் கஞ்சாறன்"
எஞ்சாத வாட்டாயன் அடியார்க்கும் அடியேன்.
- திருத்தொண்டத் தொகை

"கலசமுலைக் கன்னி காதற்புதல்வி கமழ் குழலை
நலஞ்செய் தவத்தவன் பஞ்சவடிக்கு இவை நல்கு எனலும்
அலசும் எனக் கருதாது அவள் கூந்தல் அரிந்து அளித்தான்
மலை செய் மதிற் கஞ்சை மானக் கஞ்சாறன் எனும் வள்ளலே".
- திருத்தொண்டர் திருவந்தாதி.

கஞ்சாறு என்னும் வளம் மிகுந்த ஊரிலே மானக்கஞ்சாறர் அவதரித்தார். அவர் அவதரித்த குடி பரம்பரையாக அரசர்க்குச் சேனாதிபதிப் பதவி வகிக்கும் குடி. வேளாண்மையால் விளைந்த செல்வவளம் பெருகியவராயுமிருந்தார்.

மானக்கஞ்சாறர் மெய்ப்பொருளை அறிந்துணர்ந்தவர். பணிவுடையவர். தான் சிவபெருமானுக்கு ஆளாகும் பேறு பெற்ற சிவனடியான் எனத் தெளிந்து கொண்டவர். தான் ஈட்டிய பெரும்பொருளெல்லாம் சிவனடியார்க்குரியன எனும் தெளிவால் சிவனடியார் வேண்டுபவற்றை அவர் வேண்டுமுன் குறிப்பறிந்து கொடுப்பவர்.

கஞ்சாறர் பேறு பல பெற்றவராயிருந்தும், பிள்ளைப்பேறில்லாத குறையொன்றிருந்தது. இக்குறைதீர இறைவனை வேண்டிப் பிரார்த்தித்தார். இறையருளால் அவர்தம் மனைவியார் பெண் மகவொன்றைப் பெற்றெடுத்தார். பிறப்பு ஒழிக்கப் பிறந்த அப்பெண் கொடி பேரழகுடன் வளர்ந்து திருமணப்பருவம் எய்தினார்.

கஞ்சாறர் குடிக்கு ஒத்த சேனாதிபதி குடியில் தோன்றிய ஏயர்கோன் கலிக்காமர் என்னும் சிவநேசச் செல்வருக்கு, அச்செல்வ மகளை மணம் பேசி, முதியோர் சிலர் வந்தனர். கஞ்சாறர் மனம் மகிழ்ந்து மணத்திற்கு இசைந்தார். முகூர்த்தநாள் குறித்தனர். கஞ்சாறு

மணக்கோலம் பெற்றது. மணமகனான கலிக்காமர் மணமுரசொலிக்க கஞ்சாறூர் எல்லையை வந்தடைந்தார்.

திருமண ஊர்வலம் கஞ்சாறு நகருள் வருவதற்கு முன் கஞ்சாறரது சிந்தையுள் உறையும் சிவபெருமான் மாவிரதி வேடம் பூண்டு அவர்தம் திருமனைக்கு எழுந்தருளினார். நெற்றியில் திருநீற்றுப் பூச்சு, உச்சியில் குடுமி. காதில் வெண்முத்துக் குண்டலம், மார்பில் மயிர்க்கயிற்றுப் பூணூல், கையில் திருநீற்றுப் பொக்கணம். பஞ்ச முத்திரை பதித்த திருவடி என்றவாறு அவர் திருக்கோலம் பொலிந்தது. மாவிரதிக் கோலத்துச் சிவனடியார் அம்மங்கல நாளில் எழுந்தருளியது கண்டு மானக்கஞ்சாறர் மனம்மிக மகிழ்ந்தார். அவரை அன்போடு பணிந்து வீழ்ந்து கும்பிட்டு எழுந்து இன்மொழி கூறி ஆசனமளித்தார். மாவிரதியார் 'இங்கு நிகழும் மங்கலச் செயல் என்ன?' என்று கேட்டார். 'அடியேன் பெற்ற மகளது திருமணம்' எனக் கஞ்சாறர் கூறினார். உடனே 'மங்கலம் உண்டாகுக' என மாவிரதியார் வாழ்த்தினார். கஞ்சாறனார் திருமணக்கோலம் பூண்டிருந்த மகளை அழைத்துவந்து மாவிரதியாரை வணங்கச் செய்தார். திருவடியில் வீழ்ந்து வணங்கிய மணமகளது கருமேகம் போன்ற கூந்தலைப் பார்த்து மாவிரதியார் 'இது நமது **"பஞ்சவடிக்கு"*.** ஆகும்' எனக் கூறினார். அது கேட்ட கஞ்சாறர் பிறப்பறுப்பவர் போன்று தம் மகள் கூந்தலை உடைவாளால் அடியோடு அரிந்து அடியவரிடம் கொடுத்தார். அடியவரும் அதனை வாங்குவார் போன்று மறைந்தருளி வானிலே உமையம்மையாரோடும் வெள்ளை எருதின்மேல் தோன்றினார். அதுகண்டு மெய்ம்மறந்து வீழ்ந்து கும்பிட்டு எழுந்துநின்ற கஞ்சாறருக்கு "உமது மெய்யன்பை உலகமெல்லாம் விளங்கச் செய்தோம்" என அருளினார். உச்சிமேற் குவித்த கையராய்ப் பெருமானது பெருங்கருணைத் திறத்தைப் போற்றும் பேறு பெற்றார் மானக்கஞ்சாறநாயனார். கஞ்சாறர்க்கு அருள் செய்து கண்ணுதலார் மறைந்தருள, ஏயர்கோன் கலிக்காமர் மணமகளைக் கைப்பிடிக்கவந்து சேர்ந்தார். அவர் அங்கு நிகழ்ந்த அற்புதத்தைக்

*. பஞ்சவடி :- மயிரினாலே அகலமாகச் செய்யப்பட்டு மார்பிலே பூணூலாகத் தரிக்கப்படும் வடம்.

கேட்டறிந்தார். அவ்வற்புதத்தைக் காணாமல் போனதற்கு மனந்தளர்ந்-தார். இறைவர் அருளிய சோபன வார்த்தையின் திறம் கேட்டு தளர்ச்சி நீங்கினார். வானவர் நாயகர் அருளால் மலர் புனைந்த கூந்தல் வளரப்பெற்ற பூங்கொடி போல்வாளாகிய மங்கையை மணம் புணர்ந்து தம் மூதூருக்குச் சென்றணைந்தார்.

திருத்தொண்டர் புராணசாரம்

"கஞ்சநகர் மானக்கஞ் சாறனார்சீர்க்
காதன்மகள் வதுவை மணம்காண நாதன்
வஞ்சமலி மாவிரதத் தலைவனாகி
வந்து புகுந்து அவள் அளகம் மகிழ்ந்து நோக்கி
பஞ்சவடிக்கு ஆமென்ன அரிந்து நீட்டும்
பத்தரெதிர்மறைந்து இறைவன் பணித்த வாக்கால்
எஞ்சலில் வண்குழல் பெற்ற பேதை மாதை
ஏயர்பிரான்கு உதவி அருள் எய்தினாரே"

நுண்பொருள்

மெய்யுணர்வாவது, அடியவர்க்கு அவர் வேண்டுவது அளித்தல்

மெய்யுணர்வுடையார் தமதென்றிருப்பனவெல்லாம் சிவனடியாரது உடை-மைகளே என்ற தெளிந்த காட்சியுடையவர். ஆதலால் அவர் வேண்டுமவற்றை விருப்புடன் கொடுப்பர். தேவையைப் பொறுத்தே பொருளின் தலைமை துணியப்படும். தலையாய பொருளை அளிப்பது தலையன்பு. மணமகளுக்கு மலர்க்கூந்தல் தலையாய தேவை. அதுவே சிவனடியார்க்குப் பஞ்சவடிக்குத் தேவையாமெனின் அதனை அரிந்து கொடுப்பது பிறப்பரியும் பெருஞ்செயலேயாம்.

"தொண்டனார் தமக்கருளிச் சூழ்ந்திமையோர் துதிசெய்ய
இண்டைவார் சடைமுடியார் எழுந்தருளிப் போயினார்
வண்டுவார் குழற்கொடியைக் கைப்பிடிக்க மணக்கோலம்
கண்டவர்கள் கண்களிப்பக் கலிக்காமனார் புகுந்தார்.

- பெரியபுராணம்

மார்கழிச் சுவாதி நாள் மானக்கஞ்சாறர் குருபூசை நாள்.

13. அரிவாட்டாய நாயனார்

"எஞ்சாத வாட்டாயன் அடியார்க்கும் அடியேன்"

- திருத்தொண்டத்தொகை

"வள்ளற் பிராற்கு அமுதேந்தி வருவோனு கலுமிங்கே
வெள்ளச் சடையாய் அமுது செய்யா விடில்என்தலையைத்
தள்ளத் தகுமென்று வாட்பூட்டிய தடங்கையினன் காண்
அள்ளற் பழனக்கண மங்கலத்து அரிவாட்டாயனே"

- திருத்தொண்டர் திருவந்தாதி

சோழர்களது காவிரி நாட்டிலே கணமங்கலம் எனும் ஓர் ஊர் உளது. அது நீர்வளம் , நிலவளம் முதலியவற்றாற் சிறந்து விளங்குவது. அவ்வூரிலே வாழ்ந்த வேளாளரின் தலைவராகத் தாயனார் எனும் செல்வந்தர் இருந்தார். அவர் சிவபாதம் மறவாத சீருடையாளர். மனையறம் பூண்டுவாழ்ந்த அவர் சிவபெருமானுக்கு ஏற்றன என்று செந்நெல் அரிசியும், செங்கீரையும், மாவடுவும் நாள்தோறும் கொண்டு வந்து திருவமுது செய்விப்பார்.

இத்திருத்தொண்டினை அவர் வறுமை வந்த காலத்தும் விடாது செய்து வருவார் என உலகுக்குக் காட்டி, அது கொண்டு உலகை உய்விக்கும் பொருட்டு, இறைவர் அவரது வழிவழி வந்த செல்வத்தை சென்றவழிதெரியாது மாற்றினார். அதனால் அவரது செல்வம் யானை உண்ட விளாங்கனி போல உள்ளீடற்று மறைந்தது. அப்போதும் தாயனார் உமையொருபாகருக்குத் தாம் முன்செய்து வந்த திருப்பணியை முட்டாது செய்து வருவாராயினர். கூலிக்கு நெல்லறுத்து வாழ்பவராய்க் கூலியாகக் கிடைத்த செந்நெல்லைக் கொண்டு இறைவருக்குத் திருவமுது ஆக்கினார். கார்நெல்லரிந்து கார்நெற்கூலிகொண்டு தாம் உண்டு வந்தனர். இந்நிலையினையும் மாற்ற இறைவர் திருவுளம் பற்றவே வயல்களில் எல்லாம் நல்ல நீண்ட செந்நெல்லேயாகி விளைந்தன. அவற்றை அறுத்த நெற்கூலியினைக் கொண்டு "இ.ந்து அடியேன் செய்த புண்ணியமே ஆகும்" என்று சிந்தை மகிழ்ந்து,

அக்கூலியெல்லாம் திருவமுதுக்கே ஆக்கினார். தாம் வீட்டுக்கொல்லையில் வளர்த்த கீரை வகைகளைக் கொய்து மனைவியார் சமைத்துத்தர அதனை உணவாகக் கொண்டார். வீட்டுத் தோட்டத்தில் உள்ள கீரை வகைகள் தீரவே அருந்ததி அனைய மனைவியார் தண்ணீரை வார்க்க அதனை அன்பாளர் அமுது செய்து முன்போலப் பணிசெய்து வந்தனர்.

ஒருநாள் தொண்டனார் இறைவர்க்கு ஊட்ட அவரது அன்பு போன்ற தூய செந்நெல்லரிசியும், பசிய மாவடுவும், மென் கீரையும் கூடையிற் சுமந்து செல்ல, மனைவியார் அவர் பின்பு மட்கலத்தில் ஆனைந்து ஏந்திச் சென்றனர். இவ்வாறு செல்லும் பொழுது திருமேனி வாடியதனால் கால் தளர்ந்து தப்பித் தாயனார் வீழ்ந்தார். மட்கலம் மூடும் கையினால் காதல் மனைவியார் அணைத்தும், கூடையிற் கொண்டவை எல்லாம் கமரிற் சிந்தின. அது கண்டு, தாயனார், "இனி அங்கு ஏன் போதல் வேண்டும்?" என்று வருந்தினார். "அளவில்லாத தீமையுடையேன், இறைவன் அமுது செய்யும்பேறு பெற்றிலேன்" என்று உறுபிறப்பினை அரிவார் போன்று அரிவாள் கொண்டு உள்ளந்தண்டு அறும்படி கழுத்தினை அரியத் தொடங்கினார்.

அப்பொழுது கமரினின்றும், அம்பலத்தாடும் ஐயரது வீசிய கையும் மாவடு அருந்தும் "வீடேல் வீடேல்" என்ற ஓசையும் உடனே ஒருங்கு எழுந்தன. இறைவரது திருக்கை அன்பரது கழுத்தரியும் திண்ணிய கையினைப் பிடித்துக் கொள்ளவே, அவரும் அச்செயல் தவிர்ந்தனர். அரிந்த ஊறும் நீங்கியது.

அன்பனார் அஞ்சலி கூப்பி நின்று "அடியேனது அறிவில்லாமையைக் கண்டும் என் அடிமை வேண்டிக் கமரில் வந்து இங்கு அமுது செய்தருளும் பரனே போற்றி" என்று பலவாறு துதித்து வணங்கினார். இறைவர் இடபவாகனாராய்த் தோன்றி 'நீ புரிந்த செய்கை நன்று! உன் மனைவியுடனே கூட நம் உலகில் என்றும் வாழ்வாயாக!" என்று அருளிச் செய்து, அவர் உடனே அடிசேர, திரு அம்பலத்தில் எழுந்தருளினார். தாயனார் தம் கழுத்தை அரிவாள் பூட்டி அறுத்த காரணத்தால் அரிவாட்டாய நாயனார் எனும் திருநாமத்தைப் பெற்றார்.

அரிவாட்டாய நாயனார்

திருத்தொண்டர் புராணசாரம்.

தாவில் கண மங்கலத்துள் வேளாண் தொன்மைத்
தாயனார் நாயனார் தமக்கே செந்நெல்
தூ அரிசி எனவிளைவதவையேயாகத்
துறந்துணவு வடுஅரிசி துளங்குகீரை
ஆவினின்ஐந்துடன் கொணரவோர் கமரிற் சிந்த
அழிந்து அரிவாள் கொண்டுட்டி அரியாமுன்னே
மாவடுவின் ஒலியும் அரன் கரமுந் தோன்றி
வாள்விலக்கி அமரர் தொழவைத்தார் அன்றே

நுண்பொருள்

1. இறைவனுக்குத் திருவமுது செய்வித்தல் சிறந்த சிவபுண்ணியம். உள்ளனவற்றுட் சிறந்தன வற்றையே திருவமுதுக்கு என்றமைத்தலும், அவற்றினும் குறைந்தனவற்றையே தாமுண்ணலும் அடிமைத் திறத்திற்கு அழகிதாம்.
2. செந்நெல்லரிசி இறைவனது அமுதுபடிக்குச் சிறந்தது.
3. தான் பசியால் தளர்ந்து போமிடத்தும் அமுது படிக்கானதைத் தான் உண்ணாது இருப்பதும், பணியை நியமமாகச் செய்தலும் சீரிது.
4. திருத்தொண்டர்கள் தமது பணிக்கு முட்டுப்பாடு நேருமிடத்து உயிர் வாழத்தரியார்.

அடியனேன் அறிவிலாமை கண்டும் என் அடிமைவேண்டிப்
படிமிசைக் கமரில் வந்து இங்கு அமுதுசெய்பரனே போற்றி
துடியிடை பாகமான தூயநற் சோதி போற்றி
பொடியணி பவளமேனிப் புரிசடைபாக போற்றி

– பெரியபுராணம்

தைமாதத் திருவாதிரைநாள் அரிவாட்டாய நாயனாரது குருபூசை நாளாம். அன்றைய நாளில் நாயனாரது புராணத்தினைப் பாடி முடித்து செந்-நெல்லரிசி அமுதும், மாவடு சேர்த்துப் பாகம் செய்த செங்கீரைக் கறியமுதும் நிவேதனம் செய்து வழிபடுதல் சாலச் சிறந்தது.

14. ஆனாய நாயனார்

"அலைமலிந்த புனல் மங்கை ஆனாயற் கடியேன்"

- திருத்தொண்டத் தொகை

"தூயவன் யாவுக்குந் தாழ்சடை மேல் தனித் திங்கள் வைத்த
தூயவன் பாதந் தொடர்ந்து தொல் சீர்துளையாற் பரவும்
வேயவன் மேன்மழநாட்டு விரிபுனல் மங்கலக்கோன்
ஆயவன் ஆனாயன் என்னையும் வந்தாண்டருளினனே.

- திருத்தொண்டர் திருவந்தாதி.

சோழவளநாட்டு மேன்மழநாடு மண்ணுலகிற்கு அருங்கலம் போன்றது. அதற்கு மங்கலமாகியது திருமங்கலம் என்ற மூதூர். அம்மூதூரில் வாழும் பெருங்குடிகளுள் ஒன்றாகிய ஆயர் குலத்தின் குலவிளக்குப் போல ஆனாயர் என்ற பெரியார் அவதரித்தார். அவர் தூய திருநீற்றினை விரும்பும் திருத்தொண்டில் நின்றவர்; மனம், மொழி, மெய் என்ற முக்கரணங்களாலும் சிவபெருமான் திருவடிகளை அல்லாது வேறு ஒன்றினையும் பேணாதவர்; தமது குலத்தொழிலாகிய பசுக்காத்தலைச் செய்பவர். பசுக்களைச் சேர்த்து, அகன்ற புல்வெளியிற் கொண்டு சென்று, அச்சமும், நோயும் அணுகாமற்காத்து, அவை விரும்பிய நல்ல புல்லும், நன்னீரும் ஊட்டிப், பெருகுமாறு காத்துவருவார். இளங்கன்றுகள், பால்மறை, தாயிளம்பசு, கறவைப்பசு, சினைப்பசு, புனிற்றுப்பசு, விடைக்குலம் என்பனவாக அவற்றை வெவ்வேறாகப் பகுத்துக் காவல் புரிவார். ஏவலாளர்கள் அவர் எண்ணிய வண்ணம் பணிவிடை செய்வர். தாம் பசுக்களை மேயவிட்டு, புல்லாங்குழலிலே பெருமானாரது அஞ்செழுத்தைப் பொருளாகக் கொண்ட கீதமிசைத்து இன்புற்றிருப்பார்.

இப்படி நியதியாக ஒழுகுபவர், ஒருநாள், தமது குடுமியிற்கண்ணி செருகி, நறுவிலி புனைந்து, கருஞ்சுருளின் புறங்காட்டி, வெண்காந்தட்பசிய இலைச்சுருளிற் செங்காந்தட் பூவினை வைத்துக் காதில் அணிந்து, கண்டோர் மனம் கவரத் திருநெற்றியில் திருநீற்றினை ஒளிபெறச் சாத்தி, அதனைத் திருமேனியிலும் மார்பிலும் பூசி, முல்லை மாலை அணிந்து, இடையில் மரவுரி உடுத்து, அதன்மேல் தழைப்பூம்பட்டு மேலாடையினை அசையக்கட்டி, திருவடியில் செருப்புப

பூண்டு, கையினில் மென்கோலும் வேய்ங்குழலும் விளங்கக் கொண்டு, கோவலரும், ஆவினமும் சூழப் பசுகாக்கச் சென்றார். சென்ற அவர் அங்கு மாலை தொடுத்தது போன்ற பூங்கொத்துக்களும், புரிசடை போல் தொங்கும் கனிகளும் நிறைந்த ஒரு கொன்றையினைக் கண்டார். அது மனத்துள்ளே எப்பொழுதும் கண்டுகொண்டிருந்த கொன்றை-மாலை சூடிய சிவபெருமானைப்போல அவருக்குத் தோன்றிற்று. தோன்றவே அதனை நேர்நோக்கி நின்று உருகினார். ஒன்றுபட்ட சிந்தையில் ஊன்றிய அன்பு தம்மை உடையவர்பால் மடைதிறந்த நீர்போலப் பெருகிற்று. அன்பு உள்ளூறிப் பொங்கிய அமுத இசைக்குழல் ஓசையில் சிவபெருமானது திருவைந் தெழுத்தினையும் உள்ளுறையாக அமைத்து, எல்லா உயிர்களும் எலும்புங்கரையும்படி வாசிக்கத் தொடங்கினார். நூல் விதிப்படி அமைந்த வங்கியம் என்னும் வேய்ங்குழல் தனித் துளையில், ஆனாயர் மணியதரம் பொருந்தவைத்து, ஏழிசை முறைப்படி இசை இலக்கணம் எல்லாம் அமையச் செய்து, திருவைந்-தெழுத்தை உள்ளுறையாகக் கொண்ட வேய்ங்குழல் இசை ஒலியை எம்மருங்கும் பரப்பினார். அது கற்பகப்பூத்தேனும் தேவாமுதமும் கலந்து வார்ப்பதுபோல எல்லா உயிர்களுக்குள்ளும் புகுந்து உருக்கிற்று.

மடிமுட்டிப் பால் குடித்து நின்ற பசுக்கன்றுகள் பால் நுரைவாயுடன் அவர் பக்கதில் வந்து கூடின. எருதுக் கூட்டங்களும் காட்டுவிலங்கும், இசைவயப்பட்டுத் தம் உணவு மறந்து மயிர்சிலிர்த்து வந்து சேர்ந்தன. ஆடும் மயிலினமும் மற்றைய பறவை இனமும் தம்மை மறந்து நிறைந்த உள்ளமோடு பறந்துவந்தணைந்தன. ஏவல்புரி கோவலரும் தமது தொழில் செய்வதை மறந்து நின்றனர். பாதலத்தின் நாகர்கள்; மலையில் வாழ் அரமகளிர், விஞ்சையர், கின்னரர் முதலிய தேவ-கணங்கள் - தேவமாதர்கள் என்றிவர்களும் குழலிசையின் வசப்பட்ட-வராகித் தத்தம் உலகங்களினின்றும் வந்து அணைந்தனர். நலிவாரும், மெலிவாரும், தம்மியல்பு மறந்து இசையுணர்வினாலாகிய உணர்ச்சி ஒன்றேயாகி நயத்தலினால் பாம்பும், மயிலும், சிங்கமும், யானையும், புலியும், மானும் என்றித் திறத்தனவாகிய உயிர்வகைகள் தத்தமது பகைமையை மறந்து, ஒன்றுசேர்த்து வந்து கூடின. காற்றும் அசையா, மரமும் சலியா, மலைவீழ் அருவிகளும் காட்டாறும் பாய்ந்தோடா, வான்முகிலும் ஆழ்கடலும் அசையா. இவ்வாறு நிற்பனவும், இயங்கு-வனவும் ஆகிய எல்லாம் இசைமயமாகி ஐம்புலனும் அந்தக் காண-மும் ஒன்றாயின.

ஆனாயர் இசைத்த குழலிசையானது, வையத்தை நிறைத்தது; வானத்தையும் தன் வசமாக்கிற்று. இதற்கெல்லாம் மேலாக இறைவரது திருச்செவியின் அருகணையவும் பெருகிற்று. சிவபெருமான் இடப வாகனத்தின்மேல் உமையம்மையாருடன் எழுந்தருளி எதிர்நின்று காட்சி தந்தனர். அக்குழல் வாசனையை என்றும் கேட்பதற்கு "இந்நின்ற நிலையே நம்மிடத்தில் அணைவாய்" என்று அருளிச் செய்தனர். தேவர்கள் பூமழை பொழிய, முனிவர்கள் துதிக்கக் குழல் வாசித்துக்கொண்டே அந்நின்ற நிலையோடு ஆனாயநாயனார் அரனாரின் அருகு அணைந்தார்.

திருத்தொண்டர் புராணசாரம்.

மங்கலமாமழநாட்டு மங்கல மாநகருள்
மருவுபுகழ் ஆனாயர் வளர் ஆ மேய்ப்பார்.
கொங்கலர் பூந்திருக்கொன்றை மருங்குசார்ந்து
குழலிசையில் ஐந்தெழுத்துங் குழையவைத்து
தங்கு சராசரங்களெல்லா முருகா நிற்பத்
தம்பிரான் அணைந்து செவிதாழ்த்தி வாழ்ந்து
பொங்கிய வான்கருணை புரிந்து என்றுமூதப்
போதுக வென்றருள உடன் போயினாரே.

நுண்பொருள்

1. பூச் சொரியும் கொன்றை சிவ நினைவைப் பெருக்குவது
2. அஞ்செழுத்துள் அனைத்தும் அடக்கம். ஆதலால் அஞ்செழுத்து இசையமுதம், நிற்பனவும் இயங்குவனவுமான சராசரங்களை எல்லாம் தன்வயப்படுத்த வல்லது.
3. அஞ்செழுத்து மந்திரத்தை வேய்ங்குழலில் இசைத்தல் இசை விரும்பும் இறைவர்க்கு உகப்பானது.

முன்னின்ற மழ விடைமேல் முதல்வனார் எப்பொழுதும்
சென்னின்ற மனப்பெரியோர் திருக்குழல் வாசனை கேட்க
இந்நின்ற நிலையேநம் பாலணைவாய் என அவரும்
அந்நின்ற நிலைபெயர்ப்பார் உ மர்திரு மருங்கணைந்தார்.

–பெரிய புராணம்.

கார்த்திகை அத்தம் ஆனாயர் குருபூசை அன்றைய நாளில் இறைவனுக்குக் கொன்றைப்பூச் சூட்டுதலும் ஐந்தெழுத்துத் திருப்பதிகங்கள் ஓதுவதும் அவற்றை வேய்ங்குழலில் இசைத்துப் பாடுவதும் அழகிதாம்.

15. மூர்த்தி நாயனார்

"மும்மையாலுல காண்ட மூர்த்திக்கு மடியேன்"

- திருத்தொண்டத் தொகை

"அவந்திரி குண்டமண் ஆவதின் மாள்வன் என்று அன்றாலவாய்ச்
சிவன் திருமேனிக்குச் செஞ்சந்தனமாச் செழுமுழங்கை
உவந்தொளிர் பாறையில் தேய்த்துலகாண்டவொண்
மூர்த்தி தன்னூர்
நிவந்தபொன் மாட மதுராபுரி என்னும் நீள்பதியே"

- திருத்தொண்டர் திருவந்தாதி.

மூர்த்தி நாயனார் பாண்டி நாட்டிலே உள்ள மதுரை மாநகரில் வணிகர் குலத்தில் அவதரித்தார். அவர் சிவபெருமான் திருவடிகளையே மெய்ப்பற்றாகப் பற்றினவர். அத்திருவடிகளே தமக்குத் துணையும், தாம் அடையும் பொருளும் எனக் கொண்டகொள்கையினராய் வாழ்ந்தவர். அவர் திருவாலவாயில் உறையும் சொக்கலிங்கப் பெருமான் திருமேனிக்குத் தினமும் மெய்ப்பூச்சுக்குச் சந்தனக்காப்பு அரைத்துக் கொடுக்கும் திருப்பணியை வழுவாமற் செய்து வந்தார்.

அந்நாளில் வடுகக் கருநாட அரசன் ஒருவன் நீதிவகையாலன்றிப் படைவலிமையினாலே வலிந்து மண்கவரும் ஆசையால் பெரும் படை கொண்டு வந்தான். பாண்டியனோடு போர் செய்து வெற்றிகொண்டு பாண்டி நாட்டின் அரசாட்சியைக் கவர்ந்து கொண்டான். அவன் நன்னெறியாகிய திருநீற்றுச்சார்புடைய சிவநெறியிற் செல்லாது தீ நெறியாகிய சமணர் திறத்தில் ஆழ்ந்து சிவனடியார்களையும் அவர்களது அடிமைத்திறம் செல்லவொட்டாது தீங்கு செய்வானாயினான். அவ்வாறு சமணத்திற்கு உட்படுத்த எண்ணி, மூர்த்தியாரையும் பல கொடுமைகள் செய்தான். அவர் அவற்றால் ஒன்றும் தடைப்படாது தமது நியதியான திருப்பணியைச் செய்து வருவாராயினர். தத்தம் பெருமைக்கு அளவாகிய சார்பினின்றொழுகும் எமது பெருமக்களை யாவர் தடுக்க வல்லவர்? அது கண்டு பொறாத அக்கொடியோன் அவருக்குச் சந்தனக்கட்டை கிடைக்காதவாறு செய்தான். அவர் சிந்தை

நொந்து 'இக்கொடும் பாதகன் மாய்ந்திடத் திருநீற்று நன்னெறியைத் தாங்கும் மன்னவனை இந்நாடு பெறுவதென்றோ?' என எண்ணினர். அன்று பகல் முழுவதும் சந்தனக்கட்டை தேடியும் பெறாது வருந்தி மனந்தளர்ந்து இறைவரது திருக்கோயிலுக்கு வந்தார். இன்று இறைவரது மெய்ப்பூச்சுக்குச் சந்தனம் முட்டுப்படினும் அதனைத் தேய்க்கும் இந்தக் கையினுக்கு முட்டில்லை' என்று துணிந்து, சந்தனப்பாறையில் தமது முழங்கையைத் தேய்த்தார். இரத்தம் பெருகிற்று. தோலும் தசையும் நரம்பும் எலும்பும் தேய்ந்தன. எலும்பு திறந்து மூளை சொரிந்தது. "ஐயனே! அன்பின் துணிவினால் இச்செயல் செய்யாதே! உன்னை வருத்திய தீயோன் ஆண்ட நாடு முற்றும் நீயே ஆண்டு, முன்பு வந்த துன்பமெல்லாம் போக்கி உலகத்தைக் காத்து உன் திருப்பணி செய்து நம் உலகு சேர்வாயாக!" என்று இறைவரது அசரீரீயாகிய திருவாக்கு எழுந்தது. அதனை மூர்த்தியார் கேட்டனர். கையினது ஊறும் நீங்கி முன்போல் அழகும் வண்ணமும் நிரம்பின. சிவமணங்கமழும் ஒளிபெற்ற திருமேனியுடன் மூர்த்தியார் விளங்கினார்.

அன்று இரவே அடியாரை அழித்த அந்தக் கொடிய மன்னன் இறந்து விரைந்துபோய் எரிவாய் நரகில் வீழ்ந்தான்.அவன் மனைவியரும் சுற்றத்தாரும் ஏங்கினர். அமைச்சர் கூடி அவனுக்குரிய முறைப்படி ஈமக்கடன்களைக் காலையே செய்து முடித்தனர். அவனுக்கு மக்களில்லை. கூழும் குடியும் பிற எல்லா வளனும் உடையதாயினும் அரசனது காவலில்லாவிடின் நாடு நல்வாழ்வில் வாழமுடியாதென்று அமைச்சர் கவலையுற்றனர். யானையைக் கண்கட்டிவிட்டால் அதனால் ஏந்திவரப்பட்டவரை அரசராகக் கொள்ளத் தக்கதென்று துணிந்து அவ்வண்ணமே செய்தனர்.

அன்றிரவில் நிகழ்ந்தவற்றைக் கண்ட மூர்த்தியார் "எம்பெருமான் அருள் அதுவாகில் உலகாளும் செயல் பூண்பேன்" என்று கொண்டு உள்ளத்தளர்ச்சி நீங்கித் திருவாலவாய்த் திருக்கோயிலின் முன்வந்து நின்றனர். யானை அங்குச் சென்று மூர்த்தியாரைத் தாழ்ந்து எடுத்துப் பிடரிமேற் தரித்துக்கொண்டது. அது கண்ட நகர மாந்தர்கள் வாழ்த்தி மங்கல வாத்தியங்கள் முழங்கினர். மூர்த்தியாரை யானையிலிருந்து இறக்கி முடிசூட்டு மண்டபத்திற்குக் கொண்டு சென்று முடிசூட்டுதற்குரிய

சடங்குகள் செய்யலாயினர். "சமண் போய்ச் சைவம் ஓங்குமாகில் நான் அரசாட்சியினை ஏற்றுப் புவி ஆள்வேன்; முடி சூட்டுதற்குரிய சடங்குக்கு திருநீறே அபிடேகமாகவும் உருத்திராக்கமணியே அணிகலனாகவும், சடைமுடியே முடியாகவும் இருக்கக்கடவன" என்று மூர்த்தியார் அருளினார். அது கேட்ட அமைச்சரும் உண்மை நூலறிவோரும் நன்று என்று பணிந்து, அவ்வாறே உரிய சடங்குகளை எல்லாம் செய்தனர். மூர்த்தியாரும் மங்கல ஓசைகளும் மறை முழக்கமும் வாழ்த்தொலியும் மல்க நாட்டின் அரசராக முடி சூடினார்.

முடிசூட்டு மண்டபத்தினின்றும் மூர்த்தியார் முதலில் திருவாலவாய்த் திருக்கோயிலுக்குச் சென்று தாழ்ந்து வணங்கினர். பின் அங்கு நின்றும் யானை மீதேறி நகர வீதியில் பவனி வந்து அரண்மனை வாயிலை அடைந்தனர். யானையினின்றும் இறங்கிச்சென்று அரசமண்டபத்தில் சிங்காசனத்தில் அரச கொலு வீற்றிருந்தனர். அவரது குறிப்பின்படி அமைச்சர்கள் ஒழுகினர். சமண் கட்டு நீங்கித் திருநீற்று நெறி நீடுவாழவும், உலகெங்கும் சைவம் உயர்ந்து விளங்கவும், சிவாகமங்களின் பொருள் விளங்கவும், பாவங்கள் மாறவும் **திருநீறு உருத்திராக்கமணி, சடாமுடி** என்ற மும்மையினால் உலகாண்டனர் மூர்த்தியார். பெண்ணாசையிற் சிறிதும் படாது முழுத் துறவொழுக்கம் பூண்ட மூர்த்தியார் ஐம்புலப் பகையாகிய உட்பகையையும், சமணர், வேற்றரசர் முதலிய புறப்பகையையும் நீக்கி உலகத்தை நெடுங்காலம் அருளாட்சி புரிந்த பின்னர் திருவடி நீழலில் உறையும் பெருவாழ்வு பெற்றார்.

திருத்தொண்டர் புராணசாரம்

வழங்குபுகழ் மதுரைநகர் மூர்த்தியாராம்
வணிகர் திருவாலவாய் மன்னர் சாத்தத்
தழங்குஉதிர முழங்கை தரத்தேய்த்த ஊறும்
தவிர்ந்து அமணர் வஞ்சனையும் தவிர மன்னன்
இழந்த உயிரினனாக ஞாலம்நல்க எழில்வேணி
முடியாக இலங்கு வேடம்
முழங்கு புகழ் அணியாக விரை நீராக
மும்மை யுலகு ஆண்டு அருளின் முன்னினாரே.

நூன்பொருள்

1. இறைவற்குச் சந்தனக் காப்பு அணிதல் சிறந்த சிவபுண்ணியம், இச்சிவ-புண்ணியத்தை அரசினால் இடையூறு நேர்ந்த காலத்தும், தாம் அரசபதம் அடைந்த காலத்தும் சரீரப் பற்றின்றியும், பெருமிதமின்றியும் செய்தல் சிறப்பு.
2. சிவனடியார்க்குத் தீங்கு செய்தோர் நரகம் புகுவர்.
3. அடியவர் அரசவாழ்வில் விருப்பிலாதவராயினும் சைவமோங்குதற் பொருட்டு அவ்வரசபாரத்தையும் தாங்குவர்.
4. அரசு கட்டிலில் அமர்ந்திருக்கும்போதும் சிவசின்னங்கள் திகழ இருப்பது சிறப்பாகும்.

வையம் முறை செய்குவனாகில் வயங்கு நீறே
செய்யும் அபிடேகமுமாக செழுங்கலங்கள்
ஐயன் அடையாளமுமாக அணிந்து தாங்கும்
மொய் புன் சடைமுடியே முடியாவ தென்றார்.

- பெரிய புராணம்

ஆடிக்கார்த்திகை மூர்த்தியார் குருபூசைநாள்.
அன்று பெருமானைப்பூசித்துச் சந்தனக்காப்பிடல் சாலச்சிறந்தது.

16. முருக நாயனார்

"முருகனுக்கும் (உருத்திர பசுபதிக்கும்) அடியேன்".

- திருத்தொண்டத் தொகை.

"பதிகம் திகழ்தரு பஞ்சாக்கரம் பயில் நாவினன் சீர்
மதியம் சடையார்க்கு அலர் தொட்டு அணிபவன் யான் மகிழ்ந்து
துதிஅம் கழற் சண்பைநாதர்க்குத் தோழன் வன்தொண்டன் அம்பொன்
அதிகம் பெறும் புகலூர் முருகன் எனும் அந்தணனே."

- திருத்தொண்டர் திருவந்தாதி.

சோழநாட்டிலே திருப்புகலூரில் அந்தணர் மரபில் தோன்றியவர் முருகநாயனார். ஞான வரம்பின் தலை நின்ற இப்பெருந்தகையார், இறைவன் திருவடிக்கீழ் ஊனமின்றி நிறைஅன்பால் உருகும் மனத்தார். நாள்தோறும் விடியற்காலையில் எழுந்து நீரில் மூழ்கிக் கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, நிலப்பூ எனப்படும் நால்வகைப் பூக்களில் உரிய பூக்களைக் கொய்து திருப்பூங்கூடைகளிற் கொணர்ந்து தனியிடத்திலிருந்து கோவை, இண்டை, தாமம், மாலை, கண்ணி, பிணையல், தொடையல் எனப் பலவகைப்பட்ட திருமாலைகளாகத் தொடுப்பார். ஆறுகாலப் பூசைக்கும் அவ்வக் காலப்பூசைக்கேற்பத் தொடுத்த அவற்றை திருப்புகலூர் வர்த்தமானீச்சரத் திருக்கோயிலில் உள்ள சிவபெருமானுக்குச் சாத்தி அர்ச்சனைசெய்தும், திருவைந் தெழுத்து ஓதியும் வழிபடும் இயல்பினராய் வாழ்ந்தார். இவர், திருப்புகலூர்ப் பெருமானை வழிபடத் திருஞானசம்பந்தப் பிள்ளையார் எழுந்தருளிய போது பிள்ளையாரை எதிர்கொண்டழைத்து வந்தார். சிலநாள்கள் தமது திருமடத்தில் அமர்த்தி உபசரித்துப் போற்றும் பேறும், சம்பந்தப் பிள்ளையாருடன் கூடிச் சென்று வர்த்தமானீசுரப் பெருமானை நாளும் வழிபடும் பாக்கியமும் பெற்றார். திருநாவுக்கரசு சுவாமிகள் புகலூருக்கு வந்த பொழுது பிள்ளையாருடன் சென்று அவரை வரவெதிர்கொள்ளும் புண்ணியம் பெற்றார். அவர்தம் திருமடத்திலே ஆளுடையரசும் ஆளுடையபிள்ளையும் சிலநாள் உறைந்தனர். அந்நாளில் நீலநக்கர். சிறுத்தொண்டர் ஆகிய பெருமக்களும் அங்கு வந்து சேர்ந்தனர். அவர்களோடெல்லாம் அளவளாவி மகிழ்ந்திருந்தார்.

திருஞானசம்பந்தப் பிள்ளையாருக்கு நண்பராம் பெருமை பெற்ற முருகநாயனார், திருநல்லூர்ப் பெருமணத்தில் நிகழ்ந்த திருமண விழாவிற் கலந்து கொண்டு தங்கள் பெருமானடி நீழலில் தலையாம் நிலைமை சார்வுற்றார்.

திருத்தொண்டர் புராணசாரம்

மன்னுதிருப்புகலூர்வாழ் முருகனாராம்
மறையவர்கோ வர்த்தமானீச்சரத்தார்
சென்னிமினுக்கு அழகமரும் மலர்கள் கொய்து
திருமாலை புகழ்மாலை திகழச்சாத்தி
கன்னி மதிற் கழுமல நாடுடையநாதன்
காதல் மிகு மணம் காணும் களிப்பினாலே
இண்ணல்கெட உடன்சேவித்து அருளால் மீளாது
இலங்கு பெருமணத்தானை எய்தினாரே.

நுண்பொருள்

1. பூமாலை புனைந்தேத்துதல், அஞ்செழுத்தோதுதல் ஆகியன தகைசான்ற சைவ ஒழுக்கங்கள்
2. இத்தகைமைகள் சிவஞானியர் நட்பினைத்தரும்
3. சிவஞானியர் நட்பு திருவடிநீழலில் இருக்கும் தலைமையைத் தரும்

"தொண்டர் தண்கயம் மூழ்கித் துணையலுஞ் சாந்தமும் புகையும்
கொண்டு கொண்டடி பரவிக் குறிப்பறி முருகன் செய்கோலம்
கண்டு கண்டு கண்குளிரக் களிபரந் தொளிமல்கு கள்ளார்
வண்டு பண்செய்யும் புகலூர் வர்த்தமானீச்சரத்தாரே."

– தேவாரம்

அங்கண் அமரும் திருமுருகர் அழகார் புகலிப் பிள்ளையார்
பொங்கு மணத்தின் முன்செய்த பூசை அதனால் புக்கருளி
செங்கண் அடலேறு உடையவர்தாம் சிறந்த அருளின் பொருளளிக்க
தங்கள் பெருமான் அடிநீழல் தலையாம் நிலைமை சார்வுற்றார்.

– பெரியபுராணம்

முருகநாயனார் குருபூசைத்தினம் வைகாசி மூலம்

17. உருத்திரபசுபதி நாயனார்

"முருகணக்கும் உருத்திர பசுபதிக்கு மடியேன்"

- திருத்தொண்டத் தொகை

"அந்தாழ் புனல்தன்னில் அல்லும் பகலும் நின்று ஆதரத்தால்
உந்தாத அன்பொடு உருத்திரஞ் சொல்லிக் கருத்தமைந்த
பைந்தார் உருத்திர பசுபதி தன்நற்பதி வயற்கே
நந்தார் திருத்தலையூர் என்று உரைப்பார் இந்நானிலத்தே."

- திருத்தொண்டர் திருவந்தாதி.

பொன்னி நதியால் வளம் சிறந்து விளங்கும் சோழ நாட்டில் தலைசிறந்து விளங்கும் ஓரூர் திருத்தலையூர். இத்திருத்தலையூரிலே அந்தணர் குலத்தில் பசுபதியார் என்னும் பெரியார் அவதரித்தார். இவர் சிவபெருமானது திருவடிகளில் நிறைந்த அன்பினையே பெருஞ்-செல்வமெனக் கொண்டிருந்தார். இவ்வன்புச் செல்வத்தால் ஸ்ரீ உருத்திர மந்திரத்தைக் காதலித்தோதி வந்தார். இவர் தொடர்ந்து சில நாள்கள் தாமரைத் தடாகத்திலே கழுத்தளவு தண்ணீரில் இரவு பகலாக நின்றுகொண்டு இரு கைகளையும் தலைமேற் குவித்துச் சிவனை மறவாத சிந்தையராய் அருமறைப் பயனாகிய திருவுருத்திரத்தை வழுவாது ஓதும் நியதியடையவராய் இருந்தார். இவர் தம் அருந்தவப் பெருமையையும் வேதமந்திர நியதியின் மிகுதியையும் விரும்பிய இறைவர் இந்நாயனாருக்குத் தீதிலாச் சிவலோக வாழ்வினை நல்கி-யருளினார்.

திருத்தொண்டர் புராணசாரம்

பங்கமில்வண் புகழ்நிலவு தலையூர் வாழும்
பசுபதியார் எனும் மறையோர் பணிந்து செந்தேன்
அங்கமல மடுவினிடை அல்லும் எல்லும்
அகலாதே ஆகளமாய் அமர்ந்து நின்று
திங்கள் வளர் சடைமுடியான் அடிகள் போற்றித்
திருவெழுத்தும் உருத்திரமும் திகழ்ஓதி

மங்கைஇடம் உடையபிரான் அருளால் மேலை
வானவர்கள் தொழும் உலகின் மன்னினாரே.

நுண்பொருள்

ஸ்ரீ உருத்திரம் ஓதல்

ஸ்ரீ உருத்திரம் வேதபுருடனின் கண் எனச் சிறப்பிக்கப் பெறுவது. இதனை மென்மேலும் வளரும் அன்போடு ஓதுபவர் திருவடிப் பேறடைவர்.

நீடும் அன்பினில் உருத்திரம் ஓதிய நிலையால்
ஆடு சேவடி அருகுற அணைந்தனர். அவர்க்குப்
பாடு பெற்றசீர் உருத்திர பசுபதி யாராம்
கூடு நாமமும் நிகழ்ந்தது குவலயம் போற்ற.

- பெரிய புராணம்

ஸ்ரீ உருத்திரத்தின் தமிழ் வேதத் திருப்பதிகம் அப்பரடிகளது நின்ற திருத்தாண்டகம். இத்திருத்தாண்டகத்தின் ஓர் பாடல் கீழ்வருவது :-

இருநிலனாய்த் தீயாகி நீருமாகி
இயமானனாய் எறியும் காற்றுமாகி
அருநிலைய திங்களாய் ஞாயிறாகி
ஆகாசமாய் அட்ட மூர்த்தியாகி
பெருநலமும் குற்றமும் பெண்ணும் ஆணும்
பிறருருவும் தம்முருவும் தாமேயாகி
நெருநலையாய் இன்றாகி நாளையாகி
நிமிர் புன்சடையடிகள் நின்றவாறே.

- திருநாவுக்கரசு சுவாமிகள்

புரட்டாதி அச்சுவினிநாள் உருத்திர பசுபதியார் குருபூசைநாள். அன்று "ஸ்ரீருத்ரம்" ஓதி வழிபடுதல் அழகிது.

18. திருநாளைப் போவார் நாயனார்.

"செம்மையே திருநாளைப் போவார்க்கும் அடியேன்"

- திருத்தொண்டத் தொகை

"நாவார் புகழ்த்தில்லை அம்பலத் தான்அருள் பெற்று நாளைப்
போவான் அவனாம் புறத்திருத் தொண்டன்தன் புன்புலை போய்
மூவாயிரவர் கைகூப்ப முனியாயவன் பதிதான்
மாவார் பொழில் திகழ் ஆதனூர் என்பரிம் மண்டலத்தே"

கொள்ளிடநதியால் வளம்பெற்ற ஓர்ஊர் ஆதனூர், அவ்வூர்ச் சேரியிலே புலைப்பாடி ஒன்று இருந்தது. அப்புலைப்பாடியில் வாழ்ந்-தோர்களின் தலைவராக 'நந்தனார்' என்றோர் நல்லவர் இருந்தார். அவர் பிறந்து அறிவறிந்த காலந்தொட்டு சிவபிரானிடத்து மிகுந்த அன்புடையவரானார். திருவடி நினைவன்றி மறந்தும் மற்றைய நினைவு கொள்ளாதவர் அவர். அவர் தமது குலப்பிறப்புக்கேற்ற கொள்கையால் 'புறத்தொண்டு' புரிந்து வந்தார். கோயில் பேரிகைகளுக்காக போர்வைத்-தோல், விசிவார் என்பன கொடுப்பார். வீணைக்கும் யாழுக்கும் தந்திரி கொடுப்பார். அருச்சனைக்காக கோரோசனை கொடுப்பார். பேரன்புப் பெருக்கால் ஆடுதலும் பாடுதலும் செய்வார்.

ஒரு நாள் அருகேயுள்ள திருப்புன்கூருக்குச் சென்று வழிபட விரும்பினார். விருப்பம் போல் சென்று வாயிலினின்று இசைபாடி நின்றார். அப்பொழுது பெருமானை நேரில் கும்பிடவேண்டுமென்ற ஆசை பெரு-கியது. அன்பரின் ஆசை தீர்த்தற்குப் பெருமான் நந்தியை விலகுமாறு செய்து நேரே தரிசனம் அளித்தார். நேர்த்தரிசனம் பெற்றுப் பரவசத்தரான நந்தனார் பணிந்தெழுந்து வீதிவலம் வரும் போது பள்ளமான ஓரிடத்தைக் கண்டார். அவ்விடம் குளம் தோண்டுவதற்கு அமைவாயிருப்பது கண்டு குளம் அமைத்தார். பின் கோயிலை வலம் வந்து நடமாடி விடைபெற்று தம்மூர் சேர்ந்தார். இவ்வாறு அயலூர்களிலேயுள்ள திருக்கோயில்கள் பலவற்றுக்கும் சென்று திருத்தொண்டு புரிந்து வந்த நந்தனாருக்கு ஒருநாள் தில்லைத் தரிசனம் செய்யும் ஆசை பெருகியது. அதனால் அன்றிரவு கண்துயிலாது கழித்தார். விடிந்ததும் தில்லைப்பதியின் பெருமையையும் தம்குலப்பிறப்பையும் நினைந்து போவது தவிர்த்தார்.

மீண்டும் ஆசை அளவின்றிப் பெருகவே "நாளைப்போவேன்" என்று கூறி நாட்கழித்தார். இவ்வாறு நாள் கழிதல் பொறாதவராய் ஒருநாள் தில்லைத்திருத்தல எல்லையைச் சென்று சேர்த்தார். சேர்ந்தவர் எல்லையில் வணங்கி நின்று அங்கு எழும்வேள்விப் புகையைக்கண்டார். வேதம் ஓதும் ஒலியையும் கேட்டார். தாம் பிறந்த குலத்தினை நினைத்து அதனுள்ளே புகுதற்கு அஞ்சி நின்றார். 'அந்தணர் மாளிகைகள் வேள்வி மண்டபங்கள் நிறைந்த இவ்விடத்தில் எனக்கு அடைதல் அரிது' என்று அப்பதியின் மதிற் புறத்தே ஆராத பெருங்காதலால் உள்ளுருகிக் கைதொழுது வலங்கொண்டு சென்றார். இவ்வாறு இரவு பகல் தில்லைத்-திருப்பதி வீதியை வலம்வந்தவர் 'மை வண்ணத் திரு மிடற்றார் மன்றில் நடங்கும்பிடுவது எவ்வண்ணம்?' என்று எண்ணி ஏக்கத்துடன் துயில் கொண்டார். 'இன்னல்தரும் இழிபிறப்பாகிய இது இறைவன் ஆடல் புரியும் பொன்னம்பலத்தை வழிபடுவதற்குத் தடையாயுள்ளதே?' என்று வருந்தித் துயில் கொள்பவராகிய நந்தனாரது வருத்தத்தை நீக்கியருளத் திருவுளங்கொண்ட தில்லைக்கூத்தப்பெருமான், 'என்று வந்தாய்' என்னும் புன்முறுவற் குறிப்புடன் நாளைப்போவாரது கனவில் தோன்றினார். "இப்பிறவி போய் நீங்க எரியினிடை நீ மூழ்கி, முப்புரிநூல் மார்புடன் முன்னணைவாய்" என மொழிந்து, அவ்வண்ணமே வேளிவித்தீ அமைக்கும்படி தில்லைவாழந்தணர்க்கும் கனவில் தோன்றி அருள்புரிந்து மறைந்தருளினார்.

அந்நிலையில் தில்லைவாழந்தணர்கள் விழித்தெழுந்து கூத்தப்-பெருமானது கட்டளையினை உணர்ந்து 'எம்பெருமான் அருள் செய்த பணிசெய்வோம்' என்று ஏத்திப் பெருங்காதலுடன் வந்து திருத்தொண்ட-ராகிய திருநாளைப்போவாரை அடைந்து, 'ஐயரே, அம்பலவர் திருவரு-ளால் உமக்கு வேள்வித் தீ அமைத்துத் தரவந்தோம்' என்றார்கள். அதுகேட்டநந்தனார் 'நான் உய்ந்தேன்' என வணங்கினார். தெய்வமறை முனிவர்களும் தென்திசையின் மதிற்புறத்துத் திருவாயில் முன்பு தீயமைத்தார்கள். நாளைப்போவார், இறைவன் திருவடிகளை நினைத்து அத்தீக்குழியினை அடைந்தார். எரியை வலம் கொண்டு கைதொழுது அதனுள்ளே புகுந்து புண்ணிய மாமுனி வடிவாய் செங்கமல மலரில் உதித்த பிரமதேவனைப்போன்று செந்தீயில் வந்தெழுந்த அந்தணனாகத் தோன்றினார். அதுண்டு தில்லை வாழந்தணர்கள் கைதொழுதார்கள். திருத்தொண்டர்கள் வணங்கி மனிங்களித்தார்கள். வேள்வித் தீயில்

திருநாளைப்போவார் நாயனார்.

மூழ்கி வெளிப்பட்ட தீருநாளைப் போவாராம் மறைமுனிவர் அருமறைசூழ் திருமன்றில் ஆடுகின்றகழல் வணங்க, தில்லைவாழந்தனர் உடன்செல்லத் திருக்கோயிலின் கோபுரத்தைத் தொழுது உள்ளே சென்றார். உலகுய்ய நடமாடும் எல்லையினைத் தலைப்பட்டார். உடன் வந்தோர் யாவரும் அவரைக் காணாதவராயினர். நாளைப்போவார் அம்பலவர் திருவடியிற் கலந்து மறைந்தமை கண்டு தில்லைவாழந்தணர்கள் அதிசயித்தார்கள். முனிவர்கள் துதித்துப் போற்றினார்கள். வந்தணைந்த திருத்தொண்டராகிய நந்தனாரது வினைமாசறுத்துத் தம்முடைய திருவடிகளைத் தொழுது இன்புற்றிருக்க அந்தமிலா ஆனந்தக் கூத்தர் அருள்புரிந்தார்.

திருத்தொண்டர் புராணசாரம்

நன்மைதிகழ் மேற்காநாட்டு ஆதனூர்வாழ்
நத்தனார் புறத்தொண்டர் நாளைப்போகப்
பொன்மலிதென் புலியூர்க்கென்றுரைப்பார் புன்கூர்
பொய்கையமைத்து அடலேறுபிரியநோக்கி
வன்மதில் சூழ் தில்லையிறை அருளால் வாய்ந்த
வண்தழலின் இடைமூழ்கி மறையோர் போற்ற
மின் மலிசெஞ்சடைமுனியாய் எழுந்து நாதன்
விளங்கு நடம் தொழ மன்றுள் மேவினாரே.

நுண்பொருள்

1. புலையரேனும் அரனடிக்கன்பு செய்வரேல் புண்ணியரே
2. புலையராய்ப் பிறந்த ஒருவரைச் சிவனருள் பிரமதேவனைப் போன்ற மறை முனிவராக்கியது.
3. தத்தம் குல ஒழுக்கத்துக்கேற்பப் பத்திசெய்து மேம்படுதல் முறை.
4. சிவபெருமானுக்குக் குடிகுலம் என்ற பேதமொன்றும் இல்லை. ஆயினும் அன்பரானோர் தம் இழிந்த பிறப்புப் பற்றிக் கவலையுறுவரேல் அப்பிறப்பறுத்து ஆண்டு கொள்வார்.
5. புனிதரான அன்பர் கோயிலை வலம் வருதல் ஆதிய ஆசாரமெதுவுமில்லாமலே நேராகத் தரிசனம் செய்து திருவடிக் கலப்புறுவர்.

திருவுடைய தில்லைவாழந்தணர்கள் கைதொழுதார்
பரவரிய தொண்டர்களும் பணிந்து மனம் களி பயின்றார்
அருமறை சூழ் திருமன்றில் ஆடுகின்ற கழல் வணங்க
வருகின்றார் திருநாளைப் போவாராம் மறை முனிவர். - பெரியபுராணம்

திருநாளைப்போவார் குருபூசை நாள் : புரட்டாசி உரோகிணி

19. திருக்குறிப்புத் தொண்ட நாயனார்

"திருக்குறிப்புத் தொண்டர் தம் அடியார்க்கும் மடியேன்"
- திருத்தொண்டத் தொகை

"மண்டும் புனற்சடையான் தமர் தூசுஎற்றி வாட்டும்வகை
விண்டு மழைமுகில் வீடாது ஒழியின் யான்வீவன் என்னா
மிண்டும் படர்பாறை முட்டும் எழிலார் திருக்குறிப்புத்
தொண்டன் குலம் கச்சி ஏகாலியர் தங்கள் தொல்குலமே"
- திருத்தொண்டர் திருவந்தாதி.

திருக்குறிப்புத் தொண்ட நாயனார் தொண்டை நன்னாட்டில் காஞ்சி மாநகரத்திலே ஏகாலியர் மரபில் தோன்றினார். இவர் செவ்விய அன்புடையவர்; நல் ஒழுக்க நெறி நிற்பவர்; சிவனடித்தொண்டு புரிபவர்; மன, மொழி, மெய்யாகிய முக்கரணங்களும் அண்ணலார் சேவடியின் சார்பாக அணைவிப்பவர்; சிவனடியார் குறிப்பறிந்து போற்றும் உள்ளத்திண்மை கொண்டவர்; இத்திருக்குறிப்புத் தொண்டர் சிவனடியார்களது ஆடையினைத் துவைத்துக் கொடுத்தலைத் தமது முதற்பணியாகக் கொண்டிருந்தார். இப்பணியால் துணி அழுக்குப் போவதுபோல் மும்மலப் பிறப்பழுக்கும் போக்குவார் ஆயினர். இவ் அடியவரது அன்பின் பெருமையை உலகத்தார்க்கு அறிவிக்கத் திருவுளங்கொண்டார் திருவேகம்பப் பெருமான். குளிர் மிகுந்த ஒருநாள் திருமாலும் காணமுடியாத திருவடிகளை மண்மீது பதித்து ஓர் ஏழைபோன்று மெலிந்த மேனியும், வெண்ணீற்று மேனியில் அழுக்கடைந்த கரிய கந்தைத் துணியுமாய் குறுகிய நடையுடன் வந்தார். தளர்ந்த திருமேனியுடைய சிவனடியாராகிய அவரைக் கண்ட திருக்குறிப்புத் தொண்டர், அன்பினால் எதிர்கொண்டு உரோமம் சிலிர்ப்ப நிலமுற விழுந்து வணங்கினார். எழுந்து நின்று இன்மொழிகள் பல கூறினார். "திருமேனி இழைத்திருக்கின்றதே, ஏன்?" என இரக்கத்துடன் கேட்டார். பின்னர் கூப்பிய கையுடன் 'தாங்கள் உடுத்துள்ள இக்கந்தையைத் துவைத்தற்குத் தாருங்கள்' என்று கேட்டார். வந்த சிவனடியார் 'நான்

உடுத்துள்ள இக்கந்தை அழுக்கேறி எடுத்தற்குத் தகுதியில்லாத நிலையிலிருப்பினும் உடம்பினை வருத்தும் குளிருக்குப் பயந்து கைவிடாது உடுத்துள்ளேன். மாலைப் பொழுதாவதற்குள் தருவீராயின் விரைந்து கொண்டுபோய்த் துவைத்துத் தருவீராக' என்று கூறினார். அதுகேட்ட திருக்குறிப்புத் தொண்டர் அடியேன் காலந்தாழ்த்தாமல் மாலைப்பொழுதிற்குள் விரைவில் வெளுத்துத் தருகின்றேன், தந்தருள்வீராக' என்று வேண்டினார். வந்த அடியவர், "கந்தையாகிய இதனை விரைவிற் துவைத்து உலர்த்தித் தாராதொழிவீராயின், இந்த உடம்பிற்கு இடர் செய்தீராவீர்' என்று சொல்லித் தாம் உடுத்திருந்த கந்தையை அவர் கையிற் கொடுத்தார். அதனைப் பெற்றுக்கொண்ட திருக்குறிப்புத் தொண்டர், குளத்திற்குச் சென்று முன் சிறிது அழுக்கைப் போக்கி வெள்ளாவியில் வைத்துப் புளுக்கித் துவைக்கத் தொடங்கினார். அப்பொழுது பெருமழை விடாது பெய்வதாயிற்று. அதுகண்ட திருக்குறிப்புத் தொண்டர் சிவனடியார்க்கு தாம் சொன்ன உறுதிமொழியை எண்ணி 'இனி நான் யாது செய்வேன்' என்று கவலையுற்று மழைவிடுவதை எதிர்பார்த்து அங்கேயே நின்றார். மழையோ நிற்கவில்லை. இரவுப் பொழுதும் நெருங்குவதாயிற்று. திருக்குறிப்புத் தொண்டர் "ஐயோ குளிரால் திருமேனி நடுங்குகின்ற சிவனடியார்க்கு நான் செய்யவிரும்பிய அடிமைப்பணி தவறிப்போயிற்றே' என்று சோர்ந்து வீழ்ந்தார்; மழையோ விடவில்லை; அடியார் சொல்லிய கால எல்லையும் முடிந்து விட்டது. முன்னமே அவரது உடையினை வீட்டிலேயே துவைத்துக் காற்றில் உலர்த்திக் கொடுப்பதற்கு அறியாது போயினேனே; அடியார் திருமேனி குளிரால் வருந்தத் தீங்கு புரிந்த கொடியேனுக்கு இனி இதுவே செயல்' என்று எழுந்து 'துணி துவைக்கும் கற்பாறையிலே எனது தலையைச் சிந்தும்படி மோதுவேன்' என்று தமது தலையை மோதினார். அப்போது அப்பாறையின் அருகே திருஏகம்பரது திருக்கை தோன்றி அவரைப் பிடித்துக்கொண்டது. வானத்தில் விடாது பெய்த நீர்மழை நீங்க மலர்மழை பொழிந்தது. உமையொருபாகராய் இறைவன் விடைமேல் எழுந்தருளி, காட்சி கொடுத்தருளினார். அத்தெய்வக் காட்சியைக் கண்ட திருக்குறிப்புத் தொண்டர் அன்புருகக் கைதொழுது தனிநின்றார். சிவபெருமான்

அவரைநோக்கி, 'உனது அன்பின் திறத்தை மூவுலகத்தாரும் அறியச் செய்தோம்." இனி நீ நம்முடைய உலகத்தை அடைந்து நம்மைப் பிரியாது உறைவாயாக' என்று திருவருள் புரிந்து மறைந்தருளினார்.

திருத்தொண்டர் புராணசாரம்

கொந்தலர் பூம் பொழிற்கச்சி நகர் ஏகாலிக்
குலத்தலைவர் தவர் குறிப்புக் குறித்துளார்பால்
வந்து இறைவர் நமக்கின்று தாரீர் ஆகின்
வருந்தும் உடல் என வாங்கி மாசுநீத்த
கந்தை புலராதொழிய மழை அம்மாலைக்
கடும்பொழுதும் வரக்கண்டு கலங்கிக் கல்மேல்
சிந்தமுடி புடைப்பளவில் திருவேகம்பர்
திருக்கைகொடு பிடித்துயர்வான் சேர்த்தினாரே.

நுண்பொருள்

1. மனம் மொழி மெய் என்பன சிவச் சார்பினவாகச் சிவனடியார் குறிப்பறிந்து பணி செய்தல் சிவதொண்டு..
2. தத்தம் தொழில்முறை எதுவோ அதனையே சிவன்பணியாய்க் கொள்வது சீரியது.
3. ஆடையின் அழுக்ககற்றும் தொழில் மலஅழுக்கு அகற்றும் சிவபணியே
4. அன்பர் பணி செய்தற்காய் வாய்த்த உடலை அது செய்ய முடியாதவிடத்து மாய்ப்பதே மேல்.

"கந்தைபுடைத்திட எற்றும் கற்பாறைமிசைத் தலையைச்
சிந்த எடுத்தெற்றுவன் என்று அணைந்து செழும் பாறைமிசை
தன்தலையைப் புடைத்தெற்ற அப்பாறை தன்மருங்கு
வந்தெழுந்து பிடித்தது அணிவளைத்தழும்பர் மலர்ச்செங்கை"

- பெரிய புராணம்.

திருக்குறிப்புத்தொண்டர் நாயனார் குருபூசைநாள் : சித்திரைச் சுவாதி

20. சண்டேசுர நாயனார்

"மெய்மையே திருமேனி வழிபடாநிற்க வெகுண்டெழுந்த தாதைதாள்
மழுவினாலெறிந்த
அம்மையான் அடிச்சண்டிப் பெருமானுக் கடியேன்"

- திருத்தொண்டத் தொகை

"குலமேறிய சேய்ஞலூரில் குரிசில் குரைகடல் சூழ்
தலமேறிய விறல் சண்டி கண்டீர் தந்தை தாளிரண்டும்
வலமேறிய மழுவால் எறிந்து ஈசன் மணிமுடிமேல்
நலமேறிய பால்சொரிந்து அலர் சூட்டிய நன்னிதியே"

- திருத்தொண்டர் திருவந்தாதி.

சண்டேசுர நாயனார் பொன்னி நாட்டில் சேய்ஞலூரிலே வேதியர் மரபில் காசிபகோத்திரத்து எச்சதத்தன் என்பானுக்கு அவன் மனைவி பவித்திரை வயிற்றில் தோன்றினார். இவரது இயற்பெயர் விசாரசருமன். விசாரசருமருக்கு ஐந்து வயது நிரம்பிய அளவில் முந்தை அறிவின் தொடர்ச்சியினால் வேத, சிவாகமங்களின் உணர்வு சிந்தையில் தோன்றி வளர்ந்தது. பெற்றார்கள் ஏழாம் வயதில் உபநயனம் முடித்துக் கல்விப் பயிற்சியைத் தொடங்குவித்தார்கள். குலவுமறையும், பல கலையும் சொல்லிக்கொடுப்பதற்கு முன்னமே விரைந்து மனங்கொள்ளும் அக்குழந்தையின் அறிவின் திறங்கண்டு அந்தணர்கள் அதிசயமடைந்தார்கள். சிறிய பெருந்தகையாராகிய விசாரசருமனார் **அளவில்லாத கலைகளின் பொருட்கெல்லாம் எல்லையாய் விளங்குவது அம்பலவரது எடுத்த பொற்பாதமே** எனத் தம் சிந்தையில் தெளிந்துணர்ந்தார். 'நடமே புரியும் சேவடியார் ஆகிய இறைவன் உயிர்களாகிய நம்மை ஆளாகவுடையார்' என்னும் உறுதிப்பாட்டினையுடையவராய் ஒழுகிவரும் நாளில் ஒரு நாள், வேதம் ஓதுகின்ற இடத்திற்கு மறைச் சிறுவர்களுடன் சென்றார். அப்பொழுது தெருவில் ஊர்ப்பசுக்களை மேய்த்தற் பொருட்டு ஓட்டிச்செல்லும் இடைச்சிறுவன் தன்னைக் கொம்பால் முட்டவந்த ஈற்றுப் பசுவைக் கோலினால் நையப்புடைத்தான். அதுகண்டு பொறாத விசாரசருமர், அவனை வெகுண்டு விலக்கி, இறைவனுக்கு திருமஞ்சனத்-

திற்குப் பால், தயிர், நெய் முதலிய ஐந்தினை அளிக்கும் பசுவின் பெருமையினை உள்ளவாறு உணர்ந்து தாமே அவ் ஆனிரைகளை மேய்க்க விரும்பி அவ்விடையனை நோக்கி 'நீ பசுநிரை மேய்த்தலை ஒழிவாயாக; இன்று முதலாக யானே இவற்றை மேய்ப்பேன்' என்றார். அதைக்கேட்ட இடைச்சிறுவன் அஞ்சி அகன்றான். விசாரசருமர் பசுக்களை அவற்றிற்குரிய அந்தணர்களின் இசைவு பெற்று மேய்த்து வரலாயினார். நாள்தோறும் மண்ணியாற்றின் கரையிலுள்ள காடுகளிலும், வயலோரங்களிலும் உள்ள புல் நிறைந்த இடங்களில் வயிறார மேயவிட்டு தண்ணீரூட்டி, உச்சி வேளையில் நிழலில் தங்கச் செய்து, நன்றாகக் காப்பாற்றிச் சமித்துக்கள் ஒடித்துக்கொண்டு மாலையில் அப்பசுக்களை அவரவர் வீட்டுக்கு ஓட்டிப்போய் விட்டுத் தனது வீட்டிற்குச் செல்லுதலை வழக்கமாகக் கொண்டார். இவ்வாறு அந்தணச் சிறுவரால் மேய்க்கப்பெற்ற பசுக்கள் மடிசுரந்து பாலை மிகப் பொழிந்தன. அப்பசுக்கள் தம் கன்றைப் பிரிந்தாலும் தம்மை அன்புடன் மேய்த்துக் காக்கும் மறைக்கன்றாகிய விசாரசருமரைப் பிரிய மனமில்லாதனவாய் அவரருகே சென்று அன்பினாற் கனைத்துத் தாமே மடிசுரந்து பால்பொழியும் தாயன்புடையனவாயின. தம்மால் மேய்க்கப்பெறும் பசுக்கள் கறவாமலே பால் பொழியக்கண்ட விசாரசருமனார், அவற்றின் பால் நிலத்தில் வீழ்ந்து வீணாகாமல் இறைவனுக்குத் திருமஞ்சனமாதல் வேண்டும் என எண்ணினார். தொட்டகுறை விட்டகுறையாக அவருள்ளத்திலே சிவபூசனை செய்யும் பேரார்வம் தலைப்பட்டது. உடனே அவர் மண்ணியாற்றின் கரையில் அமைந்த மணல் திட்டிலே திருவாத்தி மரத்தின்கீழே வெண்மணலால் சிவலிங்கம் அமைத்து, திருக்கோயிலும், கோபுரமும், சுற்றாலயங்களும் மதிலும் வரைந்து கொண்டார். அருகிலுள்ள சோலையில் திருவாத்திப்பூ முதலிய நறுமலர்களைப் பறித்து இலைப்பூங் கூடையிற் கொணர்ந்தார். புதிய குடங்களைத் தேடிக்கொணர்ந்து பசுக்கள் ஒவ்வொன்றினிடமும் ஒருமுறை சென்று முலையைத் தீண்டிய அளவில் அவை குடம் நிறையப் பாலைப் பொழிந்தன. அப்பாற் குடத்தினைக் கொண்டுபோய் மணலால் அமைத்த ஆலயத்தில் தாபித்தார். வெண்மணலால் அமைத்த சிவலிங்கப் பெருமானுக்குத் திருமஞ்சனம் ஆட்டி நைவேத்தியம் ஆகியவற்றை மனத்தினால் நிரப்பி மலர்தூவி அருச்சித்து வழிபாடு செய்தார்.

அடியார் அன்புக்கு எளிவரும் சிவபெருமானும் அவ்விலிங்கத் திருமேனியில் நின்று விசாரசருமரது நிறைவான பூசைனையை ஏற்றருளினார்.

இவ்வாறு விசாரசருமர் பல நாட்களாகப் பார்ப்பவர்களுக்கு விளையாட்டுப் போலத் தோன்றுகின்ற சிவபூசையைச் செய்துவரும் பொழுது அதனைக்கண்ட ஒருவன் அதன் உண்மையை அறியாது அச்செய்தியை அவ்வூர் அந்தணர்களிடம் தெரிவித்தான். அவர்கள் ஊர்ச்சபையாரிடம் கூறினர். சபையார் எச்சதத்தனை அழைத்து 'அந்தணர் ஆகுதியின் பொருட்டுப் பால் கறக்கும் பசுக்களை உன் மைந்தன் மேய்ப்பதாகச் சொல்லிக் கொண்டு சென்று பாலைக்கறந்து வீணே மணலிற் கொட்டுகின்றான்' என்றனர். அது கேட்டு அஞ்சிய எச்சதத்தன் 'சிறுபிள்ளை செய்த இக்குற்றத்தைப் பொறுத்தருள வேண்டும்' என்று இரந்து வணங்கி, 'இனி அவன் அவ்வாறு செய்தால் அது என் குற்றமாம்' என்று சொல்லிவிட்டு வீடு திரும்பினான்.

எச்சதத்தன் மறுநாட்காலை அதன் உண்மையை அறிந்து கொள்ள எண்ணிப் பசு மேய்க்கச் செல்லும் விசாரசருமர் அறியாதபடி அவர் பின்னே சென்று அங்கு நிகழ்வதை அறிய ஓர் குராமரத்தில் ஏறி ஒளிந்திருந்தான். விசாரசருமர் நீராடி முன்போல மணலால் சிவலிங்கம் அமைத்து மலர்பறித்துவந்து பாற்குடத்தினைக் கொணர்ந்து அருச்சனைக்கு வேண்டிய பிறவற்றையும் அமைத்துச் சிவபெருமானுக்குப் பாலைத் திருமஞ்சனமாக ஆட்டினார். குராமரத்திலே ஒளிந்திருந்த எச்சதத்தன் வெகுண்டு இறங்கிச் சென்று தன் கையிலுள்ள தண்டினால் விசாரசருமருடைய முதுகிலே அடித்துக் கொடுஞ் சொற் கூறினான். அவருடைய மனம் சிவபூசையில் ஒன்றியிருந்தமையால் அவன் செய்த எதுவும் அவருக்குத் தோன்றவில்லை. மேலாம் பெரியோர், தந்தை வெகுண்டு பலகால் தன்னை அடிக்கவும் அதனையுணராராகி இறைவனுக்குப் பாலால் திருமஞ்சனம் ஆட்டும் பணியிற் சலியாதிருந்தார்.. அதுகண்டு கோபம் கொண்ட எச்சதத்தன் திருமஞ்சனக் குடப்பாலை காலால் இடறித் தள்ளினான். பால் சிந்தியது கண்ட விசாரசருமர் அதனை இடறித்தள்ளியவன் தன் தந்தை என்று அறிந்தும். அவனுடைய கால்களைத் துணித்தல் தகுதி என்று எண்ணி அருகே கிடந்த கோலொன்றை எடுத்தார். இறைவரருளால் அதுவே மழுப்படையாயிட, அதுகொண்டு தந்தையின் கால்களை வெட்டி வீழத்தினார்.

மறையோனும் வீழ்ந்தான். சிவபூசைக்கு நேர்ந்த இடர் அகற்றிய விசாரசருமர் மீண்டும் சிவபூசையினைச் செய்யலுற்றார். அந்நிலையிற் சிவபெருமான் உமையம்மையாரோடும் விடைமேல் எழுந்தருளினார். பூதகணங்கள் புடைசூழ முனிவர் முதலோர் போற்றிசைப்ப இறைவன் வெளிப்பட்டு அருளுவது கண்டு பத்தி முதிர்ந்த பாலகனார், இறைவன் பாத மலர்கள் மேல் விழுந்து வணங்கினார். சிவபெருமானும் தம் திருவடிக்கீழ் வீழ்ந்த விசாரசருமரை வாரி எடுத்து அருள் நோக்கஞ் செய்து, **'நம்பொருட்டு உன்னைப் பெற்ற தந்தையை மழுவினால் எறிந்தாய். இனி உனக்கு அடுத்த தந்தை நாம்'** என்று அருள்செய்து அணைத்தருளிக் கருணையால் தடவி உச்சிமோந்து மகிழ்ந்தருளினார்.

சிவபெருமானது திருக்கைகளால் தீண்டப்பெற்ற வேதியச் சிறுவராய விசாரசருமர் மாயை உடம்பின் கருவி கரணங்களெல்லாம் சிவமயமாகித் திருவருளில் மூழ்கிப் பேரொளிப் பிழம்பாகத் தோன்றினார். அண்டர் பிரானாகிய சிவபெருமானும், அவரைத் தொண்டர்க்குத் தலைவனாக்கி, 'அனைத்தும் நாம் உண்ட கலமும் உடுப்பனவும் சூடுவனவும் உனக்காகச் சண்டீசனும் ஆம் பதம் தந்தோம்' என்று திருவாய் மலர்ந்து தம்முடைய சடையில் அணிந்துள்ள கொன்றை மலர் மாலையை எடுத்து அப்புதல்வர் திருமுடியிற் சூட்டியருளினார். சேய்ஞலூர்ப் பிள்ளையார், தொண்டர்கணத் தலைவராகி எல்லாவுயிரும் மகிழச் சிவகணங்கள் பாடியாடிக் களிகூரச் சைவசமயம் நிலை பெற்றோங்க இறைவனைத் தொழுது சண்டீசுர பதத்தை அடைந்தார். தந்தையாகிய எச்சதத்தர் சிவபூசைக்குக் கேடு சூழ்ந்தும் சண்டீசநாயனாராலே தண்டிக்கப் பெற்றமையால் அக்குற்றம் நீங்கிச் சுற்றத்துடன் சிவலோகத்தை அடைந்தார்

திருத்தொண்ட புராணசாரம்.

வேதமலி சேய்ஞலூர் எச்சதத்தன்
விளங்கியசேய் மறைபயிலும் விசாரசன்மர்
கோதனம் மேய்ப்பவன் கொடுமை பொறாது தாமே
கொண்டு நிரை மண்ணியின் தென்கரையில் நீழல்
தாதகியின் மணலில் லிங்கத்து ஆன்பால்ஆட்ட
தாதைபொறாது அவைஇடறும் தாள்கள்மாளக்

சண்டேசுர நாயனார்

காதி மலர்த் தாமம் உயர் நாமம் உண்ட
கலம் மகனாம்பதம் அருளால் கைக்கொண்டாரே.

நுண்பொருள்

1. பசு ஓம்பல்
   * பசு சிவபூசையின் பொருட்டுப் பாற்கடலினின்றும் உதித்தது.
   * பசுவின் அங்கமெல்லாம் தேவர் வீற்றிருப்பர்
   * பசுக்காத்தற் பொருட்டு வேதம் ஒதுதலையும் விட்டுச் செல்வதானது வேதப்பயனை அறிந்ததின் துணிவென்றே கொள்ளப்பட வேண்டியது.
   * பசுவை இதமாக வளர்த்தல் வேண்டும்.

2. சிவபூசை
   * ஆகமத்தின் முடிந்த முடிபு சிவபூசையாதலால் பெறுதற்கரிய மானிடப் பிறப்பெடுத்துச் சைவமாம் சமயம் சார்ந்தோர் சிவபூசை செய்தல் வேண்டும்.
   * பசுவின் பால் கொண்டு அபிடேகமாட்டிப் பூசித்தல் சிறந்த சிவபூசை.
   * பூசைப் பொருள்களுள் பெற்றது கொண்டும், பெறாததை மனதினால் நிரப்பியும் (பாவனை) பூசனையாற்றுவதில் குறையொன்றுமில்லை.
   * பூசனை மெய்யன்போடு செய்தல் வேண்டும்.
   * தன் உடம்பை மறந்து பூசனையில் ஒன்றுதல் சிறப்பு.
   * பூசைனைக்கு இடையூறு நேருமிடத்து அவ்விடையூறு தந்தையால் நேருவ தெனினும் அதனைத் தந்தையைக் கொன்றேனும் விலக்கிச் சஞ்சலமில்லா மனத்தோடு பூசனை புரிதல் வேண்டும்.
   * இவ்வாறு சிவபூசை நேசத்தால் சிவ அபராதம் தடுக்கும் பாதகமும் பெரும்பேறளிக்கும். அது சிவ அபத்தம் செய்தோர்க்கும் அவ்வபராதம் நீக்கும் செயலாக முடியும்.

"பீரடைந்த பாலதாட்டப் பேணாதவன் தாதை
வேரடைந்து பாய்ந்ததாளை வேர்த்தடிந்தான் தனக்குத்
தாரடைந்த மாலைசூட்டித் தலைமை வகுத்ததென்னே
சீரடைந்த கோயில் மல்கு சேய்ஞலூர் மேயவனே"

– தேவாரம்.

"அண்டர் பிரானும் தொண்டர் தமக்கதிபனாக்கி அனைத்து நாம்
உண்டகலமும் உடுப்பனவும் சூடுவனவும் உனக்காகச்
சண்டீசனுமாம் பதம் தந்தோம் என்றங்கவர் பொற்றட முடிக்குத்
துண்டமதிசேர் சடைக்கொன்றை மாலை வாங்கிச் சூட்டினார்.

– பெரிய புராணம்

சண்டேசுர நாயனார் குருபூசைநாள் : தை உத்திரம்



21. திருநாவுக்கரசு நாயனார்

திரு நின்ற செம்மையே செம்மையாய்க் கொண்ட
திருநாவுக் கரையன்றன் அடியார்க்கும் அடியேன்.
- திருத்தொண்டத்தொகை

நற்றவன் நல்லூர் சிவன் திருப் பாதம் தன் சென்னி வைக்கப்
பெற்றவன் மற்றிப் பிறப்பற வீரட்டர் பெய்கழல்தாள்
உற்றவன் உற்றவிடம் அடையார் இட ஒள்ளமுதாய்த்
துற்றவன் ஆமூரின் நாவுக்கரசு என்னும் தூமணியே.

மணியினை, மாமறைக்காட்டு மருந்தினை, வண்மொழியால்
திணியன நீள்கதவம் திறப்பித்தன. தெண்கடலில்
பிணியன கல் மிதப்பித்தன. சைவப் பெருநெறிக்கே
அணியன. நாவுக்கரையர்பிரான் தன்அருந்தமிழே.
திருத்தொண்டர் திருவந்தாதி

திருமுனைப்பாடி நாட்டுத் திருவாமூரிலே, வேளாள குலத்துக் குறுக்கையர் குடியில் புகழனார் எனும் பெரியாரொருவர் இருந்தார். மாதினியார் எனும் இனிய மாதரார் அவர்தம் மனைவியார். இவ்விருவருக்கும் திருமகளாகத் திலகவதியார் அவதரித்தார். திலகவதியார் பிறந்து சில ஆண்டுகளின் பின் கலைத்துறை தழைக்கவும், தவநெறி வாழவும், உலகிருள் நீக்கும் கதிரொளி போல ஓர் ஆண்குழந்தை அவதரித்தது. அக்குழந்தைக்கு மருள்நீக்கியார் எனத் திருநாமம் சூட்டினார்கள். மயிர்நீக்குதல் முதலான மங்கல காரியங்களையெல்லாம் செய்து சீராட்டிப் பாராட்டி வளர்த்தார்கள். பருவம் வந்ததும் கலை பயில்வித்தார்கள். அவரும் செழுங்கலையின் திறமெல்லாம் பயின்று முதிரும் அறிவினரானார். இந்நிலையில் திலகவதியாரும் திருமணப் பருவத்தை அடைந்தார்.

உருவும் திருவும் வாய்ந்த கலிப்பகையார் என்னும் வேளாண்குடித்தலைவர், திலகவதியாரை மணந்து கொள்ள விரும்பிப் பெரியோர் சிலரை மணம்பேச அனுப்பினார். குணமுங் குலமும் ஒத்தமை கேட்டு மகிழ்ந்த புகழனார், தம் அருமைத் திருமகளார் திலகவதியா-

ரைக் கலிப்பகையார்க்கு மணஞ்செய்து கொடுப்பதற்கு உடன்பட்டார். மணம் பேசிய பெரியோர், புகழனாரது இசைவினைக் கலிப்பகையார்க்குத் தெரிவித்தார்கள்.

இவ்வாறு இருதிறத்தாராலும் உறுதிசெய்யப்பட்ட திருமணம் நிகழ்வதற்குள், வடநாட்டுப் பகைமன்னர் சேனை, தமிழ் நாட்டின் மீது போர் குறித்துப் புறப்படுவதாயிற்று. இப்படையெழுச்சியை முன்னமே உளவறிந்த தமிழ் நாட்டு வேந்தன், போராற்றல் மிக்க கலிப்பகையாரைச் சேனைத்தலைவராக நியமித்துப் படைகளுடன் வட நாட்டிற்கு அனுப்பினான். இவ்வாறு நாடாளும் வேந்தனுக்கு உதவுதற்பொருட்டுச் சேனைகளுடன் வடநாடு சென்ற கலிப்பகையார், நீண்ட நாட்கள் அங்கே தங்கியிருந்து போர்புரிவாராயினர். இந்நிலையில் ஊழ்வினைப் பயனால் புகழனார் நோய்வாய்ப்பட்டு இறந்து விண்ணுலகடைந்தார். அவர்தம் இன்னுயிரனைய மனைவியாரும் சுற்றமுடன் மக்களையும் துகளாக எண்ணி உயிர் நீத்துக் கற்புநெறி வழுவாது கணவருடன் சென்றார். தந்தையும் தாயும் வாழ்வை நீத்த துன்ப நிலையுட்பட்டுத் திலகவதியாரும் மருள்நீக்கியாரும் ஆற்றொணாத் துயரில் அழுந்தினார்கள். பெரியோர்கள் உலகியல்பினை எடுத்துரைத்துத் தேற்ற ஒருவாறு மனந்தெளிந்து தம் தந்தை தாய்க்குச் செய்ய வேண்டிய செய்கடன்களைச் செவ்வனே செய்து முடித்தார்கள்.

இவர்கள் இவ்வாறிருக்க வடநாட்டிற் போர் புரியச் சென்ற கலிப்பகையார் பகைவரது போர்க்களத்திலே மாற்றாரை அழித்து வீரமரணமெய்தினார். இத்துயரச்செய்தி திலகவதியார் செவிக்கு எட்டியது. இதனைக்கேள்வியுற்ற திலகவதியார், 'என் தந்தையும், தாயும் என்னை அவர்க்கே கொடுப்பதாக இசைந்தார்கள். ஆதலால் இவ்வுடம்பைத் துறந்து என்னுயிரை அவருயிரோடு இசைவிப்பேன்' எனத் தமது உயிரை விடத் துணிந்தார். இந்நிலையில் தம்பியாராகிய மருள்நீக்கியார் தமக்கையாரின் பாதங்களில் வீழ்ந்து புலம்பினார்; 'தந்தையும், தாயும் இறந்த பின்னரும் தமக்கையாகிய உம்மை வணங்கப் பெறுதலினால் நான் இதுநாள்வரை உயிர் தரித்திருக்கின்றேன். இப்பொழுது ஒன்றுமறியாத என்னைக் கைவிட்டுச் செல்வீராயின் நான் உமக்கு முன்பே உயிர் துறப்பேன்' எனக் கூறி வருந்தினார்.

தம்பியாராகிய மருள்நீக்கியாரின் இடர்நிலை கண்டு திலகவதியார் உள்ளங்கலங்கினார். தன் தம்பியார் வாழ வேண்டும் எனும் தயாள சிந்தையாலே, தான் உயிர்வாழ உறுதி கொண்டார். பொன்னினும் மணியினுமாகிய அணிகலன்களை அணியாது அனைத்துயிரையும் வாழ்விற்கும் அருளையே அணிகலனாகக் கொண்டு மனையில் இருந்தே தவப்பெருஞ்சீலராய்த் தம்பியைப் பேணி வளர்ப்பாராயினர்.

இவ்வாறு திலகவதியாரால் வளர்க்கப்பெற்ற மருள்நீக்கியார் பருவம் நிரம்பி அறிவு வளரப்பெற்று உலகியலுணர்வும் நன்கு வாய்க்கப் பெற்றார். இளமையும், யாக்கையும், செல்வமும் நிலையற்றன என உணர்ந்து நில்லாத இவை நீங்குதற்கு முன்னரே நிலையுடைய நல்லறங்களைச் செய்ய எண்ணினார். வெய்யில் வெம்மை தணியச் சோலைகள் அமைத்தார்; குளங்கள் பலவற்றைத் தோண்டினார்; ஏழைகள் கேட்பவற்றை வழங்கினார்; இல்லையென்னாது ஈந்து மகிழும் ஈதலறத்தில் தலை சிறந்து திகழ்ந்தார்.

அக்காலத்தில் சமணசமயத்துறவிகள் பலர் அவர்கள் சமயத்தைத் தமிழகத்திற் பரப்பும் பொருட்டுப் பாடலிபுத்திரம் முதலிய பதிகளில் வாழ்ந்தார்கள். அவர்கள் தம் அருளொழுக்கத்தினைப் போற்றி உரைக்கும் அறிவுரைகளால் மதம் பரப்பும் தொழிலில் ஈடுபட்டு இருந்தனர். நில்லாத உலகியல்பு கண்டு, இனி நிலையா வாழ்க்கையில் ஈடுபடுவேனல்லேன் எனத் துணிந்த மருள்நீக்கியார் துறந்தார் தம் தூநெறியிற் செல்ல விரும்பினார். சிவபெருமானின் நல்லருள் வாய்க்கப்பெறாமையால் நல்லறப் போர்வையில் மறைந்துலவும் சமண சமயத்திற் சேரக்கருதி பாடலிபுத்திரம் சென்றார். அங்கு சமணசமயத் துறவிகளின் அறிவுரையில் ஈடுபட்டு அச்சமயத்தைத் தழுவினார். அரிய பல சமணசமய நூல்களைப் பயின்று தேர்ந்தார். மகிழ்ச்சி அடைந்த சமணர் அவரைத் **தருமசேனர்** என்ற சிறப்புப் பெயரிட்டுப் போற்றினர். தரும சேனர் புத்தசமயத் தேரர்களை வாதில் வென்று சமண சமயத்தலைவர்களில் ஒருவராய் மேம்பட்டு விளங்கினார்.

"தம்பியார் உளராக வேண்டும்" என்ற பேருளால் மனையில் இருந்து மருள்நீக்கியாரை வளர்த்துவந்த திலகவதியார் அவர் சமணசமயத்தைத் தழுவியதைக் கேள்வியுற்றார். இயற்கையிலேயே சுற்றத்

தொடர்பொழியுங் கருத்தினராகிய திலகவதியார், தூய சிவ நன்னெறியே சார்வதற்குத் திருவதிகைத் திருவீரட்டானத் திருக்கோயிலை அடைந்து சிவசின்னங்கள் அணிந்து திருவலகிடுதல், மாலைகள் தொடுத்தல் முதலிய திருப்பணிகளை விருப்புடன் செய்து போற்றியிருந்தார்.

இவ்வாறு நாடோறும் இறைவனை வழிபட்டிருக்கும் திலகவதியார் தம் தம்பியார் தீவினைத் தொடர்பால் புறச்சமயத்தைத் தழுவியமையை எண்ணிப் பெரிதும் வருந்தினார். அதிகைப்பெருமானை வணங்கி நின்று, "என்னை ஆண்டருளினீராகில், அடியேன்பின் பிறந்தவனைப் புறச் சமயப் படுகுழியினின்றும் எடுத்தாளவேண்டும்" எனப் பல முறை விண்ணப்பஞ் செய்தார். திருவதிகைப் பெருமான் திலகவதியாரது கனவில் தோன்றி "நீ உன்னுடைய மனக்கவலையைத் தவிர்வாயாக; உன்னுடன் பிறந்த தம்பி முன்னமே முனியாகி எம்மை அடையத் தவமுயன்றான்; அவனை இனிச் சூலை நோயைத் தந்து ஆட்கொள்வோம்" என அருள் செய்து அவ்வண்ணமே தருமசேனர் வயிற்றிற் சூலைநோயினைப் பற்றச் செய்தார்.

இறைவனருளால் தருமசேனரைச் சூலைநோய் பற்றி வடவைப் பெருந்தீயும், ஆலகாலமாகிய நஞ்சும், வச்சிரப் படையும் என இவ்வாறு கொடுமை விளைவிப்பன எல்லாம் ஒன்றாகத் திரண்டு வருத்தினாற் போல் குடரைக் குடைந்து வருத்திற்று. அவர் தாம் கற்ற மருந்துகளால் அந்நோயினைத் தடுக்க முயன்றும் அது தணியாது மேன்மேலும் வருத்துவதாயிற்று. தருமசேனர் படும் துன்பத்தைக் கண்ட சமணர்கள் தமக்குத் தெரிந்த மந்திரங்களைப் பிரயோகித்து மயிற்பீலி கொண்டு காலளவும் தடவினார்கள். அந்நிலையில் சூலைநோய் முன்னிலும் பன்மடங்கு அதிகரிப்பதாயிற்று. அது கண்டு சோர்வுற்ற சமணர்கள், 'ஐயோ இனி நாம் என்ன செய்வோம்' எனக் கலக்கமுற்று, "இது நம்மாற் போக்குதற்கரிய நோயாகும்" எனத் தருமசேனரைக் கைவிட்டகன்றனர்.

சூலை நோயாற் சோர்வுற்ற தருமசேனருக்கு, தம்மைச் சமணர்களெல்லாருங் கைவிட்டு அகன்ற நிலையில் தம்முடைய பழைய உறவினரைப் பற்றிய நினைவுண்டாயிற்று. தமக்கு உணவு பாகஞ் செய்யும் பணியாளை அழைத்துத் தாம் படும் துன்பத்தைத்

தமக்கையாருக்குச் சொல்லி வரும்படி அனுப்பினார். அவனும் அவ்வாறே திருவதிகை அடைந்து, அவரை வணங்கி "உம்முடைய தம்பியார் ஏவலால் நான் இங்கு வந்தேன்" எனக் கூறினான். அதுகேட்ட திலகவதியார் "தீங்குளவோ" என வினவினார். 'சூலைநோய் உயிரை மட்டும் போக்காமல் நின்று குடரை முடக்கித் துன்புறுத்தலால் சமணர்களெல்லாரும் என்னைக் கைவிட்டு விட்டார்கள். இச்செய்தியை எமது தமக்கையாருக்குச் சொல்லி விட்டு இருளாகும் நேரத்தில் திரும்பிவா' என்று உம்முடைய தம்பியார் என்னை இங்கு அனுப்பினார் என்று பணியாளன் கூறினான். அது கேட்ட திலகவதியார் 'நன்றறியா அமண்பாழிக்கு நான் வரேன்' என்று அவனுக்கு உரைப்பாயாக" என மறுமொழி கூறி அனுப்பினார். அவனும் அங்கிருந்து சென்று தருமசேனரை அடைந்து தமக்கையார் கூறியதனைத் தெரிவித்தான்.

அவன் கூறியதனைக் கேட்ட தருமசேனர், இனி இதற்கு யாது செய்வேன்" என அயர்வுற்றார். அப்பொழுது இறைவனது திருவருள் கைகூடப் பெற்றமையால், இம்மை மறுமை வாழ்வுக்கு ஒரு சிறிதும் ஒவ்வாத இச் சமண சமயத்தால் தீராத சூலை நோயின் துயர் கெடச் செம்மை நெறியிலொழுகும் திலகவதியாருடைய திருவடிகளை வணங்கி உய்வேன்' எனக்கருதினார். அவ்வாறு கொண்ட மனக்கருத்துத் தம்மைப் பிடித்து எழுப்ப ஒருவாறு சோர்வகன்று எழுந்தார். உடுத்த பாயும், பிடித்த குண்டிகையும், தொடுத்த மயிற்பீலியும் அறவே விட்டு நீங்கத் தூய வெள்ளைத் துணியினை இடையில் உடுத்து நள்ளிரவில் ஒருவரும் காணாவண்ணம் பாடலிபுத்திரத்தினின்றும் புறப்பட்டார். சூலைநோய் பின்தொடரத் தமக்கையாரை அடைந்துய்வேன் என்ற பெருவிருப்பம் முன் இழுத்துச் செல்லத் திருவதிகையில் திலகவதியார் இருந்த திருமடத்தை அடைந்தார்.

திருமடத்தினுட் சென்ற மருள்நீக்கியார், தம் தமக்கையாராகிய திலகவதியார் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி, "நம் குலத்தில் தோன்றிய முன்னோர்கள் செய்த நற்றவத்தின் பயனாகத் திகழும் பெரியீர்! இவ்வுடம்பைப்பற்றிய சூலை நோயினைப் பொறுக்காது உம் திருவடிகளைச் சரணடைந்தேன். இனி நான் அறியாமையிற் பட்டு மயங்காமல் துன்பக்கடலினின்றும் பிழைத்துக் கரையேறுதற்குரிய நன்னெறியினை

உபதேசித்தருள்வீராக" என விண்ணப்பஞ் செய்தார். தம்பியாரது மன நிலையினை உணர்ந்த திலகவதியார், சிவபெருமானது திருவருளை நினைந்துருகிக் கைதொழுது தம்பியாரைநோக்கி 'உறுதிப் பொருளாகிய தெய்வக் கொள்கையில்லாத புறச் சமயப் படுகுழியில் விழுந்து பெருந் துயருழந்தீர்; எழுந்திரீர்' என மொழிந்தார். அது கேட்ட மருள்நீக்கியார், சூலை நோயுடன் நடுக்கமுற்று எழுந்து தொழுதார். திலகவதியாரும் அவரை நோக்கி "உம்மைப் பற்றிய சூலைநோய் இறைவனது திருவருளே என அறிவீராக. தன்னைச் சரணடைந்தாரது பாசத்தளையை நீக்கி இன்னருள் புரியும் இறைவனடிகளைப் பணிந்து பணிசெய்யும்" எனப்பணித்தார். பின் அவர் கயிலைப் பெருமானை நினைந்து திருநீற்றினைத் திருவைந்தெழுத்து ஓதிக் கொடுத்தருளினார். திருவாளன் திருநீறாகிய அதனைத் தன் உருவார அணிந்தார். திருப்பள்ளியெழுச்சி வேளைவந்ததும் திலகவதியார் திருவலகும், தோண்டியும் கொண்டு மருள்நீக்கியாருடன் திருவதிகை வீரட்டானத் திருக்கோயிலுட் புகுந்தார். உடன் சென்ற மருள்நீக்கியார், திருக்கோயிலைத் தொழுது வலங்கொண்டு நிலமிசை வீழ்ந்து இறைஞ்சினார். இந்நிலையில் இறைவன் திருவருளால் திருப்பதிகங்களைப் பாடிப் போற்றும் உணர்வு அவர்க்கு உண்டாயிற்று. அவ்வுணர்வால் தூண்டப்பெற்ற மருள்நீக்கியார், தம்மை வருத்தும் சூலைநோய் நீங்கும் பொருட்டுப் புரமெரித்த திருவதிகை இறைவனை நினைந்து ®**"கூற்றாயின வாறு விலக்க கிலீர்....."** எனத் தொடங்கும் திருப்பதிகத்தினைப் பேரன்பு பொங்கப்பாடினார். நிலைபெற்ற பெருவாழ்வைத் தரும் இப்பதிகத்தைப் பாடிய பொழுது அவரின் வயிற்றில் புகுந்து வருத்திய சூலை நோய் நீங்கியது.

® கூற்றாயின வாறு விலக்ககிலீர்
கொடுமை பலசெய்தன நானறியேன்
ஏற்றாயடிக்கே யிரவும் பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றினகம் படியே
குடரோடு குடக்கி முடக்கியிட
ஆற்றே னடியேன் அதிகைக்கெடில
வீரட்டானத் துறை யம்மானே

சிவனருள் பெற்ற மருள்நீக்கியார் 'இறைவனது திருவருள் அடியேற்கு உயிருடன் நலத்தையும் அருளியது' என ஆனந்தபரவச முற்றுக் கருணைக் கடலில் மூழ்கி இன்புற்றார். 'என்றும் வெள்ளம் ஏறாத பெருந்திடரென அமைந்த எளியேனுக்கு இவ்வாறு உன் திருவருட் பெருவெள்ளத்தைப் பெருகவிடுதல் தகுமோ' என இறைவனை உளங்கசிந்து போற்றினார். புறச் சமயப் படுகுழியில் வீழ்ந்து கிடக்கும் எளியேன், சிவபெருமான் திருவடிகளை அடைந்து உய்யும் வண்ணம் இத்தகைய நல்வாழ்வைத் தந்த சூலைநோய்க்கு என்ன கைம்மாறு செய்வேன்? எனச் சூலைநோய்க்கு நன்றி தெரிவித்து இறைவனைத் தொழுதார். அந்நிலையில் "செந்தமிழ்ச் சொன்மலர்களால் இயன்ற திருப்பதிகமாகிய பாமாலையை நீ பாடிய தன்மையினால் உன்பெயர் **"நாவுக்கரசு"** என உலகேழினும் நிலை பெற்று வழங்குக" என இறைவனது திருவருள் வாக்கு யாவருங்கேட்க வானிலே எழுந்தது.

அத்திருவருள் மொழியினைக் கேட்ட திருநாவுக்கரசராகிய பெருந்தகையார், இத்தனை நெடுங்காலமாக இறைவனை மறந்திருந்த தீவினையாளனாகிய எளியேனுக்கு இத்திருவுடைய பெருவாழ்வு அடைவதற்குரியதோ என வியந்தார். கயிலையை எடுத்த இராவணனது பிழையைத் திருவுளங்கொள்ளாது அவனுக்கு வாழ்நாளும் வாட்படையும் தந்த பெருங்கருணைத்திறத்தினை உணர்ந்து போற்றுதலையே தமக்குரிய கடமையாகக் கொண்டு அதிகை வீரட்டானத்துப் பெருமானை வணங்கித் துதித்தார்.

இவ்வாறு சிவநெறியை மேற்கொண்டு திருநாவுக்கரசராகத் திருவருள் பெற்றதனால் உலகம் உய்ந்த தென்று திருவதிகையில் உள்ளோர் மகிழ்ச்சியுற்றனர். திருநாவுக்கரசர், சிவசின்னங்களை அணிந்து இறைவன் திருவடிகளை இடையறாது நினைக்கும் **நல்லுணர்வும்,** அப்பெருமானார் பெருங்கருணைத் திறத்தை விரித்துரைக்கும் **நற்சொல்லும்,** திருக்கோயிலில் **கைத்தொண்டு புரியும் உழவாரப் படை**யும் உடையராய், மனம், மொழி, மெய் ஆகிய முக்கரணங்களாலும் சிவநெறித்தொண்டு புரிவாராயினர். திலகவதியார் திருவீரட்டானப் பெருமானை வணங்கி "பொய்மை மிக்க புறச்சமயத் தொடக்கினின்றும் என் தம்பியை மீளும்படி செய்து எங்களைப் பொருளாக ஆட்கொண்-

டருளிய திருவருட்திறனை இவ்வுலகில் வேறு யார் பெற்றனர்" என வியந்து நெஞ்சம் நெக்குருகிப் போற்றிமகிழ்ந்தார்.

இவ்வாறு திருநாவுக்கரசர் சிவநெறியிற் சேர்ந்து வாழுந்திறத்தினைப் பாடலிபுத்திரத்திலுள்ள சமணர்கள் கேட்டு மனம் பொறாராயினர். 'உய்யும் நெறியை நாடித் திருவதிகை சென்று சைவராகிச் சூலை நோய் நீங்கி உய்ந்தனர். இனி நமது சமயம் அழிந்தது' என வருத்தமுற்று ஓரிடத்தில் ஒன்று கூடினர். 'தருமசேனருக்கு வந்த சூலை நோய் தங்கள் எவராலும் நீங்காமல் அவர் சிவநெறியை மேற்கொண்டதனால் நீங்கிய செய்தியை வேந்தன் அறிந்தால் நம்மை வெகுண்டு தானும் சைவனாகி நமக்குத் தந்துவரும் உணவு முதலிய சகல வசதிகளையும் நிறுத்திவிடுவான். இதற்கு நாம் யாது செய்வோம்' என்று சொல்லி ஆராய்ந்து தமக்குள் வஞ்சனையாகிய ஒரு உபாயத்தை தேர்ந்து கொண்டனர். 'நம் சமண சமயத் தலைவராக விளங்கிய தருமசேனர் தமது தமக்கையார் சைவசமயத்தை மேற்கொண்டிருந்தமையால், தாமும் அவர் போல் ஆகவிரும்பித் தமக்கு சூலை நோய் வந்ததாகப் பொய்யே காட்டி, அந்நோய் நம்மால் தீரவில்லை எனப்பொய் கூறிச் சைவராகி நம் சமயத்தெய்வத்தையும் இகழ்ந்துரைத்தனர்." என்றதொரு பொய் வழக்கினைச் சித்திரித்து வேந்தனிடம் முன்னமே சென்று முறையிடுவதே செய்யத்தக்கதெனத் துணிந்தார்கள்.

இவ்வாறு முடிவு செய்த அவர்களெல்லாரும் பல்லவ வேந்தனது தலைநகரை அடைந்தார்கள். அரண்மனையுட் சென்று அரசனை நோக்கித் தாங்கள் தீட்டிய உபாயத்தை அவ்வாறே கூறித் "தருமசேனர் உனது சமயத்தை ஒழித்தார்" என்று கூறினார்கள். அவ்வுரை கேட்டு வெகுண்ட அரசன், "அடிகளே இத்தகைய குற்றத்திற்கு நம்மால் தரப்படும் தண்டம் யாது?" என வினவினான். அதுகேட்ட சமணர்கள் கொல்லாமையாகிய நல்லறத்தினை மேற்கொண்டு நடிக்கும் இயல்பினராகையால், உயர்ந்த நெறியாகிய நமது சமயத்தை அழித்து அரச நீதியாகிய உன்னுடைய ஆணையையுங் கடந்த அவனை நீ தண்டித்து ஒறுத்தல் வேண்டும் என்றார்கள். அப்பொழுது பல்லவ மன்னன் தன் அமைச்சர்களை நோக்கி, 'இம்முனிவர்களால் சுட்டப்பட்ட தீயோனைப் பிடித்து என்னிடம் கொண்டுவாருங்கள்" எனப் பணித்தான்.

அரசனது பணியினை மேற்கொண்ட அமைச்சர்கள் சேனை வீரருடன் திருவதிகை சென்று திருநாவுக்கரசரை அடைந்து 'ஐயன்மீர், உம்மை அழைத்து வரும்படி எம்மை அரசன் ஏவினான்' எனக் கூறினர். அதுகேட்ட நாவுக்கரசர் 'தனக்குவமை இல்லாத தலைவனாகிய சிவபெருமானுக்கு **மீளா ஆளாய்** அவன் திருவடிகளை இடைவிடாது சிந்திக்கும் இயல்புடைய நாம், இவ் உலகில் வேந்தர் யார்க்கும் குடியாக அடங்கும் எளிமையுடையோமல்லோம். நமனைக்கண்டு சிறிதும் அஞ்சோம். வஞ்சனை, பொய் அற்றோமாதலின் நரகத்தில் துன்புறோம். எனக் கூறி ❀**"நாமார்க்கும் குடியல்லோம்....."** எனும் திருத்தாண்டகத்தைத் திருவாய் மலர்ந்தருளினார்.

திருநாவுக்கரசரது மறுமாற்றத்தினைக் கேட்ட அமைச்சர்கள், அவரது திருவடிகளை வணங்கி நின்று, 'பெருந்தகையீர்! அரச தண்டனையினின்றும் நாங்கள் உய்யுமாறு தாங்கள் எம்முடன் வந்தருளவேண்டும்' என வேண்டிக் கொண்டார்கள். இணங்கிய திருநாவுக்கரசர், "ஈண்டு வரும் வினைத் துன்பங்களைப் போக்குதற்கு எம் இறைவனாகிய சிவபெருமானுளன்' எனும் உறுதியுடன் அமைச்சர்களுடன் சென்றார். அமைச்சர்கள் நாவுக்கரசரை அழைத்துவந்த செய்தியைப் பல்லவ மன்னனுக்குக் கூறினர். பல்லவன், சமணர்களை நோக்கி 'இவனுக்குரிய தண்டனை யாது' என வினாவினான். சமணர்கள், 'அவரை நீற்றறையில் இடுதல் வேண்டும்' எனக் கூறினர். அரசன் பணித்த வண்ணம் ஏவலாளர் அவரை வெம்மை மிக்க நீற்றறையினுள்ளே அடைத்துத் தாளிட்டுப் பூட்டினர். நீற்றறையுட் பூட்டப்பெற்ற நாவுக்கரசர், தில்லையம்பலத்தில் தாண்டவம் புரியும் தம்பிரானது திருவடி நீழலைத் தலைக்கொண்டு 'ஈசனடியார்க்கு ஈண்டுவரும் துயருளவோ' எனச்

❀ நாமார்க்கும் குடியல்லோம் நமனையஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலையில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோமல்லோம்
இன்பமே எந்நாளுந் துன்பமில்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மையான
சங்கரனற் சங்கவெண் குழையோர்காதிற்
கோமார்க்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடியிணையே குறுகினோமே

சிவபெருமானைத் தியானித்து வழிபட்டு இருந்தார். வெம்மை மிக்க அந்நீற்றறையானது, இளவேனிற் பருவத்திலே முழுநிலவெறிக்கும் மாலைப் பொழுதிலே தென்றல் வீசும் செங்கழுநீர்த் தடாகம் போல் குளிர்ச்சியுடையதாய், இனிய யாழொலியினதாய், இறைவன் திருவடி நீழலாகிய அருளின் நீர்மையதாய்த் திருநாவுக்கரசர்க்குப் பேரின்பம் தருவதாயிற்று. ஆனந்த வெள்ளத்தினிடை மூழ்கி அம்பலவர் திருவடித் தாமரையின் அருளாரின்பத் தேனமுதுண்டு தெளிவெய்திய திருநாவுக்கரசர், தம் திருமேனிக்கு எத்தகைய துன்பமுமின்றி இனிதமர்ந்திருந்தார். ❀1.

ஏழு நாட்கள் சென்றபின் பல்லவ மன்னன் சமணர்களை அழைத்து 'நீற்றறையைத் திறந்து பாருங்கள்' என்றான். அவர்கள் நீற்றறையைத் திறந்த பொழுது அதனுள்ளே திருநாவுக்கரசர் எத்தகைய துன்பமுமின்றி இனிதிருத்தலைக் கண்டு தமக்குள்ளே வியந்தனர். எனினும் அரசனிடம் சென்று "அரசே அவன் நம்முடைய சமயத்தில் இருந்து பெற்ற மந்திர வலிமையினாலே வெந்து போகாமல் பிழைத்திருந்தான். இனி அவனுக்கு நஞ்சூட்டுவதே தகும்" எனக் கூறினர். அரசனும், "அவ்வாறே செய்யுங்கள்" எனப் பணித்தான். சமணர்கள் வஞ்சனையால் நஞ்சு கலந்த பாற்சோற்றை உண்ணக் கொடுத்தார்கள். சமணர்கள் வஞ்சனையைத் தெரிந்து கொண்ட நிலையிலும் ❀2. **'நாதனடியார்க்கு நஞ்சும் அமுதாம்'** என்று கூறி நஞ்சு கலந்த பாற்சோற்றை உண்டு இறைவனருளால் எத்தகைய தீங்குமின்றி இனிதிருந்தார்.

உயிர் பிழைத்திருந்த நாவுக்கரசரைக் கண்ட சமணர்கள் இவனுக்கு நஞ்சும் அமுதாயிற்று. இனி இவன் பிழைப்பானாகில்

❀ மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈச னெந்தை யிணையடி நீழலே

❀2. துஞ்சிருள் காலைமாலை தொடர்ச்சியை மறந்திராதே
அஞ்செழுத் தோதின் நாளும் அரனடிக் கன்பதாகும்
வஞ்சனைப் பாற்சோறாக்கி வழக்கிலா அமணர்தந்த
நஞ்சமு தாக்குவித்தார் நனிபள்ளி யடிகளாரே

நமக்கெல்லாம் நாசமே' என்று நடுக்கமுற்றனர். அரசனிடம் சென்று நாம் நஞ்சு கலந்து உண்பிக்கவும் நமது சமயத்தில் கற்றுக்கொண்ட மந்திர வலிமையினால் நஞ்சு தன்னைக் கொல்லாதபடி தடுத்துவிட்டான். அவன் இறவாதிருப்பானாயின் எம்முடைய உயிரும் உனது ஆட்சியும் அழிவது திண்ணம் என முறையிட்டார்கள். அவ்வுரைகேட்ட பல்லவன் 'இனி அவனைக் கொல்லுதற்குரிய உபாயம் யாது?' என வினவினான். 'உன் பட்டத்து யானையைக் கட்டவிழ்த்து அவனுக்கு எதிரே விடுவதே செய்யத்தகுவது.' என்று சமணர் கூறினர். அரசனும் அவ்வாறே செய்யப் பணித்தான். கொடியோர் திருநாவுக்கரசருக்கு எதிரே சினம்மிக்க மத யானையை ஏவினர். திருநாவுக்கரசர் தன்மேல் யானை வரக்கண்டு சிறிதும் அஞ்சாது சிவபெருமானைத் தியானித்து * **'சுண்ணவெண் சந்தனச்...''** எனத் தொடங்கும் பாடல் பாடத்தொடங்கி ஒவ்வொரு பாட்டினிறுதியிலும் **'கெடிலப் புனலும் உடையாரொருவர் தமர் நாம், அஞ்சுவது யாதொன்றுமில்லை, அஞ்சவருவதுமில்லை** என்று பாடியருளினார். கண்டோர் அஞ்சும்படி அங்குவந்த யானையானது, அன்புருவாகிய திருநாவுக்கரசரை வலஞ் செய்து அவர்க்கெதிரிலே நிலத்தில் தாழ்ந்து இறைஞ்சி அவ்விடத்தை விட்டகன்றது. விட்டகன்ற பட்டத்து யானையைப் பாகர்கள் அங்குசத்தினாற் குத்தி அவர் மேற் செலுத்த அவ்யானை உடன் வந்த பாகர்களைக் கொன்றது. அத்துடன் சமணர்கள் மேற்சென்று அவர்களிற் சிலரை மிதித்து அங்குள்ளோர் யாவர்க்கும் தீராக் கவலையை உண்டாக்கிற்று. மானமிழந்த சமணர்கள் மன்னனை அடைந்து முன்னர் பலமுறை முறையிட்டாற் போலவே கூறி 'நம்வலிமையைச் சிதைத்து உனது புகழுக்கும் இழிவினையுண்டாக்கினான்' எனக் கூறிப் புலம்பினார்கள். அரசன் சினமுற்று 'இனி அவனுக்குச் செய்தற்குரிய தண்டனை யாது?' என வினவினான். அது கேட்ட சமணர் 'அவனைக் கல்லொடு சேர்த்துக் கடலில் தள்ளுக.' என்றனர். அக்கொடுந்தொழிலுக்கு உடன்பட்ட பல்லவன், கொலைத்

---

* சுண்ணவெண் சந்தனச் சாந்தும் சுடர்த்திங்கட் சூளாமணியும்
வண்ணவுரிவை யுடையும் வளரும் பவள நிறமும்
அண்ணலரன் முரணேறும் அகலம்வளாய அரவும்
திண்ணன் கெடிலப் புனலும் உடையாரொருவர் தமர்நாம்
அஞ்சுவதி யாதொன்றுமில்லை அஞ்ச வருவதுமில்லை

தொழிலாளரை நோக்கித் "தீங்கு புரிந்த தருமசேனனைக் காவலொடும் கொண்டு சென்று கருங்கல்லோடு சேர்த்துக் கயிற்றாற் பிணித்துப் படகிலேற்றிச் சென்று கடல் நடுவே தள்ளி விடுங்கள்' எனக் கட்டளையிட்டான். அரச ஆணையினை மேற்கொண்ட ஏவலாளர் சமணர்கள் தம்முடன்வர அரசன் பணித்த வண்ணம் நாவுக்கரசரை அழைத்துச் சென்று கடல்நடுவிலே தள்ளிவிட்டுத் திரும்பினர். மெய்த் தொண்டராகிய நாவுக்கரசர் திருவைந்தெழுத்தோதிச் ❀ 1. **"சொற்றுணை வேதியன்..."** எனத் தொடங்கும் நமச்சிவாயத் திருப்பதிகத்தினைப் பாடிப்போற்றினார். அப்பொழுது அவரோடு பிணிக்கப்பட்டுக் கடலில் தள்ளப்பட்ட கருங்கல்லானது மிதப்பதாயிற்று. அத்துடன் பிணிக்கப்பட்ட கயிறும் அறுந்தொழிந்தது. அந்நிலையில் அக்கருங்கல்லே தெப்பமாக அமைய, கடலினின்றும் கரையேறிய நாவுக்கரசர் திருப்பாதிரிப்புலியூரை அடைந்தார். சிவனடியார்கள் எதிர்கொள்ளத் தமக்குத் தோன்றாத் துணையாயிருந்து இன்னருள் புரியும் தம்பிரானைத் திருப்பாதிரிப்புலியூர் திருக்கோயிலுட் சென்று ❀ 2. **"ஈன்றாளு மாய் ..."** எனும் திருப்பதிகம் பாடிப் போற்றினார்.

திருப்பாதிரிப் புலியூரில் வழிபட்டிருந்த திருநாவுக்கசரர், திருவீரட்டானப் பெருமானை இறைஞ்ச வேண்டும் என்னும் பெரு வேட்கை உடையவராய்த் திருமாணிக்குழி முதலிய தலங்களை வணங்கி திருவதிகையை அடைந்தார். சமணர்கள் செய்த இடர்களை எல்லாம் இறைவனருளால் வென்ற நாவுக்கரசரின் வருகை அறிந்த திருவதிகை மாந்தர் அனைவரும் நகரை அலங்கரித்து மங்கல வாத்தியம் முழங்க எதிர்கொண்டு போற்றினார்கள். தூய்மை தரும் வெண்ணீறணியப்பட்ட

❀ 1. சொற்றுணை வேதியன் சோதிவானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற்பாய்ச்சினும்
நற்றுணையாவது நமச்சிவாயவே

❀ 2. ஈன்றாளு மாயெனக் கெந்தையு மாயுடன் தோன்றினராய்
மூன்றாயுலகம் படைத்துகந்தான் மனத் துள்ளிருக்க
ஏன்றான் இமையவர்க் கன்பன் திருப்பாதிரிப்புலியூர்த்
தோன்றாத் துணையாய் இருந்தனன் தன்னடியோங்களுக்கே

பொன்மேனியும், திருவுடையாள மாலையாகிய தாழ்வடமும், திருப்பதிகமாகிய பாமாலை பொருந்திய மலர் போலுஞ் சிவந்த திருவாயும் உடையவராய்த் திருநாவுக்கரசர் திருவதிகை வீதியினுள்ளே புகுந்தார்.

"தூயவெண்ணீறு துதைந்தபொன் மேனியும் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவருசிந்தையும் நைந்துருகிப்
பாய்வதுபோல் அன்புநீர் பொழிகண்ணும் பதிகச்செஞ்சொல்
மேயசெவ்வாயு முடையார் புகுந்தனர் வீதியுள்ளே"

ஆளுடையரசர் திருவதிகை வீரட்டானத் திருக்கோயிலிற்புகுந்து திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளை வணங்கி நின்று, தாம் முன்னர்ச் சமணசமயத்திற் சார்ந்த காலத்தில் சிவபெருமானைப் போற்றாது இகழ்ந்திருந்த தமது அறியாமையை நினைந்து வருந்தி ❀**"வெறிவிரவு..."** எனத் தொடங்கும் திருத்தாண்டகம் பாடிப் பரவினார்.

சமணர் சொற்கேட்டு நாவுக்கரசரைத் துன்புறுத்திய பல்லவ மன்னன், தான் செய்த துன்பங்களை யெல்லாம் வென்றேறிய திருநாவுக்கரசரது பெருமையினைக் கேள்வியுற்றான். தன் பிழையறிந்த வேந்தன் திருவதிகை அடைந்து நாவுக்கரசர் திருவடிகளை இறைஞ்சிச் சிவநெறியை மேற்கொண்டான். அத்துடன் சமணர் அறிவுறுத்திய நெறிபொய்யென்று உணர்ந்து பாடலிபுத்திரத்திலுள்ள பள்ளிகளையும் பாழிகளையும் இடித்து அவற்றிலுள்ள கற்களைக் கொண்டு திருவதிகையிலே சிவபெருமானுக்குக் **'குணதரவீச்சரம்'** எனும் திருக்கோயிலை அமைத்து வழிபட்டு வந்தான்.

திருவதிகையில் திருவீரட்டானத்திறைவர்க்குத் தொண்டு புரிந்திருந்த திருநாவுக்கரசர் திருத்தலங்கள் பலவற்றையும் வழிபட விரும்-

❀ வெறிவிரவு கூவிளநற் றொங்கலானை
வீரட்டத்தானை வெள்ளேற்றினானைப்
பொறியரவி னானைப் புள்ளூர் தியானைப்
பொன்னிறத்தினானைப் புகழ்தக்கானை
அறிதற் கரியசீர் அம்மான்றன்னை
அதியரைய மங்கை அமர்ந்தான்றன்னை
எறிகெடிலத்தானை இறைவன் றன்னை
ஏழையேன் நான்பண் டிகழ்ந்த வாறே

பினார். திருவதிகையில் இருந்து புறப்பட்டுத் திருக்கோவலூர் முதலிய தலங்களை வணங்கித் திருப்பெண்ணாகடத்தையடைந்தார். அங்கு தூங்கானை மாடம் எனும் திருக்கோயிலில் வீற்றிருக்கும் இறைவனை வணங்கி 'எம்பெருமானே, புன்மை மிக்க நெறியாகிய சமண சமயத்தில் தொடக்குண்டு வருந்திய இவ்வுடம்புடனே இனி உயிர் வாழ்ந்திருக்கத்தரியேன். அடியேன் இவ்வுடம்பினைப் பொறுத்திருப்பதற்கு இசைவாக உன்னுடைய சூலமும் இடபமும் ஆகிய இலச்சினையை என்மேற் பொறித்தருள வேண்டும்' என வேண்டிப் ®"**பொன்னார் திருவடிக்கொன்றுண்டு....**" எனவரும் திருவிருத்தத் திருப்பதிகத்தைப் பாடிப் போற்றியருளினார். அப்பொழுது. இறையருளால் ஒரு சிவபூதம் பக்கத்திலுள்ளார் யாவரும் அறியாதபடி அங்கு தோன்றி ஆளுடைய அரசர் திருத்தோள்களில் மூவிலைச்சூலமாகிய இலச்சினையை இடப இலச்சினையுடன் பொறித்துச் சென்றது. அதனையுணர்ந்த திருநாவுக்கரசர் மகிழ்ந்து சிவபெருமான் திருவருளை நினைந்து கண்ணீர் சொரிய நிலத்தில் வீழ்ந்தெழுந்து ஆர்வம் பெருக **உய்ந்தேன்** என மொழிந்து இறைவன் திருவடிகளைப் பரவி இன்புற்றார்.

தூங்கானை மாடச் சுடர்கொழுந்தாகிய இறைவனை வணங்கி இனிதுறையும் வாகீசர் திருநெல்வாயில்அரத்துறை முதலிய தலங்களைப் பணிந்து திருத்தில்லையின் அருகணைந்தார். அறிவிற்பெரியவர் ஆகிய அடிகளார், பெரும்பற்றப்புலியூராகிய தில்லைப்பதியின் மேற்குவாயிலாக உட்சென்று, சிவமேநிலவிய திருவீதியை வலம் வந்து எழுநிலைக்கோபுரத்தினை இறைஞ்சிப் பொன் மாளிகையினை வலங்கொண்டு கனகசபையினைக் கண்ணுற்று மன்றுள் நடமாடும் அண்ணலார் திருமுன் அடைந்தார்.

"கையுந்தலைமிசை புனைஅஞ்சலியன கண்ணும் பொழிமழை ஒழியாதே பெய்யுந்தகையன கரணங்களும் உடன் உருகும் பாரிவின பேறெய்தும்

® "பொன்னார் திருவடிக்கொன்றுண்டு விண்ணப்பம் போற்றி செய்யும்
என்னாவி காப்பதற்கு இச்சையுண்டேல் இருங்கூற்று அகல
மின்னாரும் மூவிலைச் சூலம் என்மேற் பொறிமேவு கொண்டல்
துன்னார் கடந்தையுள் தூங்கானைமாடச் சுடர்க்கொழுந்தே

மெய்யும் தரைமிசைவிழுமுன் பெழுதரும்மின் தாழ்சடையொடு நின்றாடும் ஐயன்திருநடம் எதிர்கும்பிடுமவர் ஆர்வம் பெருகுதல் அளவின்றால்" என்னும் திருவிருத்தப்பா பாடிப் போற்றினார்.

அப்பொழுது கூத்தப்பெருமான் திருநாவுக்கரசரை நோக்கி 'என்று வந்தாய்?' என வினாவும் அருள் நோக்கத்துடன் காட்சி கொடுத்தருளினார். அத்திருக்குறிப்பையுணர்ந்த திருநாவுக்கரசர் கைதலை மேற்குவிய கண்களினின்றும் ஆனந்தக்கண்ணீர் சொரிய, மனங்கசிந்துருக, உடல் நிலமிசைப் பலமுறை பணிந்தெழ, மன்றாடும் ஐயன் திருக்கூத்தை எதிர்கண்டு ஆர்வத்தோடு வழிபட்டார். **'கருநட்ட கண்டனை'** என்னுந் திருவிருத்தமும் *"**பத்தனாய்ப்பாடமாட்டேன்..**" எனும் திருநேரிசையும் பாடிப்போற்றினார்.

பின்பு திருவேட்களம் எனும் திருப்பதியை அடைந்து இறைவனைப்பரவித் திருக்கழிப்பாலையை அணுகி மணவாள நம்பியாகிய பெருமானை வணங்கி **"வனபவள வாய்திறந்து வானவர்க்குந் தானவனே என்கின்றாளால்"** எனத் தொடங்குந் திருப்பதிக முதலாகப் பலபதிகம்பாடி அங்கே சில நாள் அமர்ந்திருந்தார். அங்கிருந்து **'பனைக்கை.....'** எனும் திருக்குறுந்தொகை பாடிக்கொண்டு தில்லைப்பதியை அடைந்தார். **'அரியானை அந்தணர்தஞ்சிந்தையானை'** எனும் பெரிய திருத்தாண்டகம் பாடித் தில்லைச் சிற்றம்பலத்தினை இறைஞ்சினார். **'செஞ்சடைக் கற்றை...'** எனும் திருநேரிசையினைப் பாடி உழவாரத்திருத்தொண்டு புரிந்தார்.

இவ்வாறு மகிழ்ந்திருந்த நாளில் சீகாழிப் பதியிலே உமையம்மையார் அளித்த ஞானப்பாலுண்டு தோடுடைய செவியன்' எனும் திருப்பதிகம் பாடிய திருஞானசம்பந்தரைப் பற்றிக் கேள்வியுற்றார். ஆளுடைய பிள்ளையாரை வணங்க வேண்டுமென்னும் பெருங்காதலால்

---

* பத்தனாய்ப்பாடமாட்டேன் பரமனே பரம யோகீ
எத்தினாற் பத்தி செய்கேன் என்னைநீ யிகழவேண்டாம்
முத்தனே முதல்வாதில்லை யம்பலத் தாடுகின்ற
அத்தாவுன் ஆடல்காண்பான் அடியனேன் வந்தவாறே

அப்பொழுதே தில்லைக்கூத்தனை இறைஞ்சி விடைபெற்று சீகாழிப்-பதியைச் சென்றடைந்தார்.

சூலைநோயினைத் தந்து சிவபெருமானால் நேரே ஆட்கொள்ளப்-பெற்ற திருநாவுக்கரசராகிய பெருந்தகையார் சீர்காழிப்பதியை நோக்கி வருகின்றார் என அறிந்த பிள்ளையார், அடியார்களுடன் அரசரை எதிர்கொண்டழைத்தனர். திருஞானசம்பந்தரைக் கண்டு அளவிலா ஆர்வமுற்ற திருநாவுக்கரசர், எதிர்சென்று அவர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினார். ஆளுடைய பிள்ளையார் மலர்போலும் மெல்லிய கைகளால் எடுத்து இறைஞ்சி 'அப்பரே' என அன்பினால் அழைத்தார். அவரும் 'அடியேன்' என்றார். பெருமக்கள் இருவரும் தாங்கள் ஒருவரை ஒருவர் காணப் பெற்றதற்கு மிகவும் மகிழ்ந்து உள்ள நிறை காதலினால் ஒருவரொருவரிற் கலந்த நட்புரிமையுடையராய் அருட்பெருகு-கடலும், அன்புசெறிகடலும் போலவும் சைவசமயத்தின் இரு கண்கள் போலவும், திருத்தோணிபுரத் திருக்கோயிலை அடைந்தார்கள். ஆளு-டைய பிள்ளையார் அப்பரை நோக்கி, 'உங்கள் தம்பிரானாரைப் பாடுவீராக' என வேண்டிக் கொண்டார். நாவுக்கரசரும் பெரியபெரு-மாட்டியுடன் தோணிமீது வீற்றிருக்கும் பெருமானைப் **'பார்கொண்டு மூடி'** எனும் திருவிருத்தப்பதிகம் பாடிப் போற்றினார். பின்பு ஆளுடையபிள்ளையாரது திருமடத்தில் எழுந்தருளி அவர் அன்புடன் விருந்து செய்து உபசரிக்க அவருடன் அளவளாவி மகிழ்ந்திருந்தார்.

இவ்வாறு பலநாள் சீகாழிப்பதியிலே ஆளுடைய பிள்ளையாருடன் சிவபெருமானைப் போற்றி மகிழ்ந்த நாவுக்கரசர், சோழநாட்டிலுள்ள சிவத்தலங்களெல்லாவற்றையும் வழிபடும் தன் விருப்பத்தைத் திரு-ஞானசம்பந்தரிடம் கூறி அவருடன் திருக்கோவிலுக்குச் சென்று இறை-வனை இறைஞ்சிப் போற்றினார். பின்பு ஞானசம்பந்தரிடம் விடைபெற்று அங்கிருந்து புறப்பட்டுக் கருப்பறியலூர் முதலிய தலங்களை வழிபட்டுக் காவிரியாற்றின் இருகரையிலுஞ் சென்று மயிலாடுதுறைமுதலிய தலங்களை வழிபட்டுத் திருச்சத்தி முற்றத்தைச் சென்று அடைந்தார். அங்கு சிவக்கொழுந்தீசரை இறைஞ்சி நின்று 'எம்பெருமானே கூற்றுவன் என் உயிரைப் பிரித்து வருத்துதற்கு முன்னமே உன்னுடைய

செந்தாமரை மலர் போலும் அழகிய திருவடிகளை என் தலைமேற்சூட்டி அருள்வாயாக' எனவேண்டி ❀1. **"கோவாய் முடுகி யடுதிறல்..."** எனும் திருப்பதிகம் பாடினார். இவ்வேண்டுகோளைச் செவிமடுத்த இறைவன் "நல்லூருக்குவா" எனப்பணித்தருளினார். அவ்வருள் மொழிகளால் மனமகிழ்ந்த அப்பரடிகள் சிவக்கொழுந்தீசரை மகிழ்ந்திறைஞ்சி, திருநல்லூரை அடைந்தார். அங்கு இறைவரை வணங்கி மகிழ்ந்தெழுந்தார். அப்பொழுது சிவபெருமான், "உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம்' என உணர்த்தி, அவர் தம் சென்னிமிசைப்பாதமலர் சூட்டியருளினார். திருநாவுக்கரசர் தமக்கு அருள் புரிந்த இறைவரது பெருங்கருணைத்திறத்தை வியந்து, ❀2. **'நினைந்துருகும் அடியாரை..."** எனும் திருத்தாண்டகம் பாடிப்பரவிப் போற்றினார்.

சிவபெருமானால் திருவடிசூட்டப்பெற்ற திருநாவுக்கரசர் திருநல்லூரினின்றும் புறப்பட்டுத் திருப்பழனப் பெருமானை வழிபட்டுத் திங்களூரின் வழியாகச் சென்றார். அப்பொழுது வழியிடையே அமைந்த தண்ணீர்ப் பந்தரை அடைந்தார். அதில் 'திருநாவுக்கரசர் தண்ணீர்ப்பந்தர்' என எழுதப்பட்டிருத்தலைக் கண்டார். "இத்தண்ணீர்ப்பந்தரை இப்பெயருடன் இங்கு அமைத்தவர் யார்?" என அங்குள்ளவர்களை நோக்கி வினவினார். அது கேட்ட அங்குள்ளவர்கள், 'அப்பூதியடிகள் என்பார் செய்தமைத்தார்' எனக் கூறினார்கள். அப்பரடிகள் 'இவ்வறங்களைச் செய்த அப்பூதியடிகள் எவ்விடத்துள்ளார்' என அவர்களை வினவி-

---

❀1. கோவாய் முடுகி யடுதிறற் கூற்றம் குமைப்பதன் முன்
பூவாரடிச் சுவ டென்மேற் பொறித்துவை போகவிடில்
மூவா முழுப்பழி மூடுங்கண்டாய் முழங்குந் தழற்கைத்
தேவா திருச்சத்தி முற்றத் துறையுஞ் சிவக்கொழுந்தே

❀2. நினைந்துருகும் அடியாரை நைய வைத்தார்
நில்லாமே தீவினைகள் நீங்க வைத்தார்
சினந்திருகு களிற்றுரிவை போர்வை வைத்தார் வானோர்
செழுமதியின் தளிர்வைத்தார் சிறந்து வானோர்
இனந்துருவி மணிமகுடத் தேறத்துற்ற
இனமலர்கள் போதவிழ்ந்து மதுவாய்ப்பில்கி
நனைந்தனைய திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்லவாறே

னார். 'அவர் இத்திங்களூரில் வாழ்பவரே. இப்பொழுதுதான் இங்கிருந்து தம் இல்லம் சென்றுள்ளார். அவ்வீடும் அண்மையிலேயே உள்ளது' என அருகே நின்றவர்கள் கூறினர். அது கேட்ட நாவரசர் அப்பூதியடிகளின் மனைக்கு எழுந்தருளினார். சிவனடியாராகிய அவரது வருகையை உணர்ந்த அப்பூதியடிகள் 'அடியேன் மனையில் தாங்கள் எழுந்தருளியது என் முன்னைத் தவப்பயனே' என மகிழ்ந்துரைத்து அவர்திருவடிகளில் வீழ்ந்து வணங்கினார். திருநாவுக்கரசர் "நாம் இவ்வழியாக வரும்பொழுது வழியிலே நீர் அமைத்த தண்ணீர்ப் பந்தரைக் கண்டும், இவ்வாறு நீர் செய்கின்ற பிற அறங்களைக் கேட்டும் உம்மைக் காணவிரும்பி இங்கே வந்தோம்' எனக் கூறினார். பின்னர் "அடியார்கள்பொருட்டு நீர்வைத்த தண்ணீர்ப்பந்தரிலே உம்முடைய பெயரை எழுதாது வேறொரு பெயரை எழுதியதன் காரணம் யாது?" என வினவினார் அவ்வுரை கேட்டு மனங்கலங்கிய அப்பூதியடிகளார், சிவனடியாரைநோக்கி, 'நீர் நன்மொழிகளைக் கூறவில்லை. சமணர்களாகிய கொடியவர்களோடு கூடிப் பல்லவமன்னன் செய்த வஞ்சனைகளையெல்லாம் சிவதொண்டின் வலிமையினாலே வென்ற திருநாவுக்கரசரது பெயரோ வேறொருபெயர்? சிவபெருமான் திருவடிக்குப் புரியும் திருத்தொண்டினால் இப்பிறப்பிலே இடர்களை எல்லாம் வென்று உய்யலாம் என்று, எம்மைப்போன்ற எளியோர்கள் தெளிந்துய்யும் வண்ணம் சிவதொண்டு புரிந்து வந்த திருநாவுக்கரசரது பெயரை நான் எழுத இக்கொடுஞ்சொல்லை கேட்கும்படி நீர் கூறினீர். கல்லையே தெப்பமாகக் கொண்டு கரையேறிய அவருடைய பெருமையை அறியாதார் யாருளர்? சிவவேடத்துடன் நின்று இவ்வார்த்தை பேசிய நீர் யார்? நீர் எங்குறைவீர்? கூறும்' எனச் சினந்துரைத்தார். அப்பூதியடியாரது அன்பின் திறத்தை அறிந்த திருநாவுக்கரசர் "இறைவன் சூலை நோய்தந்து ஆட்கொண்ட சிறியேன் நான்" என்று கூறியருளினார். அவர் கூறியதைக் கேட்ட அப்பூதியடிகளார் தம் குலதெய்வமாகிய நாவுக்கரசரே எழுந்தருளினாரெனத் தெளிந்து பெருமகிழ்ச்சியுற்றார். மனைவி மக்கள், முதலிய சுற்றத்தாருடன் அவர் திருவடிகளை வணங்கித் திருவமுது செய்தருள வேண்டும் என வேண்டிக் கொண்டார். அப்பரும் அவர் பேரன்பிற்கு இசைந்தருளினார்.

அப்பூதியார் விரும்பிய வண்ணம் அவர் மனைவியார் அறுசுவை அமைந்த தூயநற்கறிகளாக்கித் திருவமுது சமைத்தார். நாவுக்கரசர் அமுது செய்தருள வாழைக்குருத்து அரிந்து வரும்படி தம் புதல்வன் மூத்த திருநாவுக்கரசினை அனுப்பினார். அவனும் தோட்டத்தினுட் சென்று வாழைக்குருத்தை அரிந்தான். அப்பொழுது மறைந்திருந்த பாம்பு அவனைத் தீண்டியது. விடவேகத்தால் தான் கீழே விழுவதற்கு முன், தான் அரிந்த குருத்திலையை வீட்டிற் சேர்க்கும் நோக்குடன் விரைந்தோடி வந்தான். 'அரசர் அமுது செய்வதற்கு தடையாகப் பாம்பு தீண்டிய செய்தியைப் பெற்றோருக்குச் சொல்லுதல் கூடாது' எனும் துணிவுடன் வீட்டை அடைந்தான். விடம் ஏழாம் வேகம் கொண்டு தலைக்கேறுதலால் கண்ணும் மேனியும் கருகத் தான் கொணர்ந்த வாழைக்குருத்தைத் தாய் கையிற் கொடுத்துக் கீழே வீழ்ந்தான்.

இவ்வாறு விழுந்த மகனை நோக்கிய பெற்றோர் அவன் உடம்பில் குருதி வழியும் நிலையினையும், கறுத்த நிறத்தையும் கண்டு விடமேறி இறந்தான் என்றறிந்து திருநாவுக்கரசர் அமுதுசெய்-தருளத் தடையாகுமே' எனக்கலக்கமுற்றனர். இந்நிலையில் தம்மகனின் இழப்புச் சிறிதும் புலனாகாவண்ணம் அடிகளை அமுது செய்விப்போம் எனும் உறுதியுடன் புதல்வனது உடம்பை மறைத்து வைத்துவிட்டு, திருநாவுக்கரசரை அடைந்து வணங்கி நின்று "எம் குடிமுழுவதும் உய்யக்கொள்வீர் அமுது செய்ய எழுந்தருள வேண்டும்" என அழைத்-தனர்.

அப்பரடிகளும் அதற்கிசைந்து ஆசனத்தில் அமர்ந்தார். அப்பூதி-யார்க்கும், மனைவியார்க்கும் திருநீறளித்து அவர்களின் புதல்வர்க-ளுக்கும் கொடுக்கும் போது மூத்ததிருநாவுக்கரசினைக் காணாது 'உமது மூத்த புதல்வனை அழையும்' என்றார். 'இப்போது அவன் இங்கே உதவான்' என்றார் அப்பூதியார். அதுகேட்ட நாவுக்கரசரது சிந்தையில் ஒருவகைத் தடுமாற்றம் ஏற்பட்டது. திருவருளால் நிகழ்ந்ததை அறிந்து கொண்ட அப்பர் அப்பூதியாரது அன்பின் திறத்துக்கு இரங்கி உயிர் நீத்த மைந்தனின் உடம்பினைத் திருக்கோயிலின் முன்

கொண்டுவரச் செய்தார். சிவபெருமானை நினைந்துருகி ❀1. **"ஒன்று-கொலாம்....."** எனும் திருப்பதிகத்தைப் பாடியருளினார். அப்போது உயிர்நீத்த மூத்ததிருநாவுக்கரசு உறக்கம் நீங்கி எழுபவனைப் போன்று எழுந்து திருநாவுக்கரசர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினான். அப்பர்பெருமான் அன்புடன் அவனுக்குத் திருநீறு அளித்து அருளினார்.

பெற்றோர் தம் மைந்தன் உயிர்பெற்று எழுந்தமை கண்டு மகிழாது நாவுக்கரசர் அமுது செய்தருளக் காலந்தாழ்ந்ததே என மனம் நொந்தார்கள். அப்பர் அவர்களின் மனக்கருத்தறிந்து அமுது செய்தருள மனைக்கு எழுந்தருளினார். திருநாவுக்கரசருக்கு கைவிளக்க வாச நன்னீர் கொடுத்து திருவமுது செய்தருளும்படி வேண்டினர். அப்பொழுது அப்பரடிகளின் வேண்டுகோளுக்கு இணங்க அப்பூதியடிகளும் அவருடைய புதல்வர்களும், தம் இருமருங்கிலும் அமர்ந்து அமுது செய்யத் திருநாவுக்கரசர் அவர்களுடன் திருவமுது செய்தருளினார். பின்னர் திருப்பழனப் பெருமானை வழிபட்டு **'சொன்மாலை பயில்கின்ற குயிலினங்காள் சொல்லீரே'** ❀2. எனத் தொடங்கும் பாமாலை பாடிப்போற்றினார். அத்திருப்பதிகத்திலே அப்பூதியாரைச் சிறப்பித்துப் பாடினார்.

திருப்பழனத்திறைவரை மனம், மொழி, மெய்களால் திருத்-தொண்டு செய்து மகிழ்ந்திருந்த நாயனார் தமக்குத் திருவடி சூட்டியருளிய நல்லூர்ப்பெருமானைக் காண விரும்பித் திருநல்லூரையடைந்தார். அங்கு இறைவனைப் பரவிய அப்பரடிகள் திருவாரூர் தொழநினைந்து வலஞ்சுழி, குடமூக்கு முதலான தலங்களைப் பணிந்து திருவாரூர் அடைந்தார். நாவுக்கரசரது வரவைப் பெரும்பேறாகக் கொண்ட நகர மக்கள்

❀1. ஒன்று கொலாமவர் சிந்தை யுயர்வரை
ஒன்று கொலா முயரும்மதி சூடுவர்
ஒன்று கொலாமிடு வெண்டலை கையது
ஒன்று கொலா மவர் ஊர்வது தானே

❀2. வஞ்சித்தென் வளைகவர்ந்தான் வாரானே யாயிடினும்
பஞ்சிக்காற் சிறகன்னம் பரந்தார்க்கும் பழனத்தான்
அஞ்சிப்போய்க் கலிமெலிய அழலோம்பும் அப்பூதிக்
குஞ்சிப் பூவாய் நின்ற சேவடியாய் கோடியையே

அப்பரடிகளை எதிர்கொண்டழைத்துப் போற்றினார்கள். 'அன்பின் பிணிப்புச் சிறிதும் அற்ற சமணர்களுடன் கூடி, வந்தடைந்த சூலைநோயினால் அவர்களை விட்டு நீங்கிய எளியேனாற் பெறத்தக்கதோ புற்றிடங்கொண்ட பெருமானது தொண்டர்க்குத் தொண்டராகும் பெரும் புண்ணியம்' என உணர்த்தும் **'குலம்பலம் பாவரு.....**" என வரும் திருவிருத்தம் பாடித் திருவாரூர்த் திருவீதியுட் சென்றார். திருமாளிகை வாயிலுட்புகுந்து பெருமானை நினைத்துத் திருத்தாண்டகம் பாடித் துதித்தார். திருக்கோயிலை வலம்வந்து வெளிவந்து தேவாசிரிய மண்டபத்தை அடைந்தார். தம் செயலற்ற தன்மையைப் புலப்படுத்தும் நோக்குடன் * **"மெய்யெலாம்.....**" எனும் பழமொழித் திருப்பதிகம் பாடியருளினார்.

ஆரூர்ப் பெருமானை நாள்தோறும் வணங்கித் திருப்பணி புரியும் நாவுக்கரசர், **'பாடிளம் பூதத்தினான்'** எனும் முதற்குறிப்புடைய பதிகம் முதலாகப் பலபதிகங்களைப் பாடிப்போற்றினார். பின் ஆரூரில் உள்ள அரனெறி எனும் கோயிலை அடைந்து இறைவரைப் போற்றி வணங்கினார். அத்திருக்கோயிலில் நீரால் திருவிளக்கெரித்து திருவாரூரிற் பெருமானுக்கு பங்குனிஉத்தரப் பெருவிழாவைச் சிறப்புற நிகழ்த்திய நமிநந்தியடிகளை, **"தொண்ட ராணிப்பொன்..."** எனப் பாடிப் போற்றினார். திருவாதிரை நாளில் வீதிவிடங்கப் பெருமானின் திருவுலாவைக் கண்டு வணங்கி மகிழ்ந்திருந்தார்.

பின்பு திருப்புகலூர்ப் பெருமானை வணங்க விரும்பிய நாவரசர் ஆரூரரைத் தொழுது நீங்கிப் பல தலங்களையும் வழிபட்டு அங்கு சென்றார். அங்கு முருகநாயனாரின் மடத்தில் எழுந்தருளி இருந்த ஆளுடைய பிள்ளையார், அடியார்களுடன் அப்பமூர்த்திகளை எதிர்கொண்டு வரவேற்று மகிழ்ந்தனர். ஆளுடைய பிள்ளையார் நாவுக்கரசரை நோக்கி, 'திருவாரூரில் நிகழ்ந்த பெருமையினை விரித்துரைப்பீராக' என வேண்டினர். அப்பரடிகளும் வீதிவிடங்கப் பெருமானது ஆதிரை

---

* மெய்யெலாம் வெண்ணீறு சண்ணித்த மேனியான் தாள் தொழாதே
உய்யலாம் என்றெண்ணி உறிதூக்கி உழிதந்தென் உள்ளம் விட்டு
கொய்யுலா மலர்ச்சோலைக் குயில்கூவ மயிலாலும் ஆரூராரைக்
கையினால் தொழாதொழிந்தே கனியிருப்பக் காய்கவர்ந்த கள்வனேனே.

நாளின் பெருமையினை * **"முத்துவிதான மணிப்பொற் கவரி..."** எனும் திருப்பதிகத்தைப் பாடிப் போற்றினார்.

இப்பதிகத்தைக் கேட்டு மகிழ்ந்த சம்பந்தப்பிள்ளையார் 'திருவாரூர் கும்பிட்டு இங்கு வந்து உம்மொடும் உடனமர்வேன்" எனக் கூறி அப்பரிடம் விடைபெற்றுச் சென்றார். திருநாவுக்கரசர் திருப்புகலூரை அடைந்து கைத்தொண்டு புரிந்து, தமிழ் மாலைகள் சாத்தி வழிபட்டிருந்தார். இந்நிலையில் ஆளுடைய பிள்ளையாரும் திருவாரூர்ப் பெருமானை இறைஞ்சி, பல தலங்களையும் வழிபட்டு திருப்புகலூரை வந்தடைந்தார்.

சில நாட்களின் பின்னர் இருவரும் திருப்புகலூரினின்றும், புறப்பட்டுத் திருக்கடவூர் சென்று மார்க்கண்டேயர் பொருட்டு காலனையுதைத்த கடவுளைப் பணிந்தனர். குங்குலியக் கலயநாயனாரால் உபசரிக்கப் பெற்று அவர் திருமடத்தில் அமுது செய்தருளினர். அங்கு விடைபெற்று திருவீழிமிழலையை அடைந்து விண்ணிழி விமானத்தில் வீற்றிருந்த பெருமானை வணங்கி மகிழ்ந்தனர். அப்பரடிகள் **"செய்ய சடையார் தமைச்சேரார்..."** எனும் திருத்தாண்டகத்தைத் திருவீழிமிழலையானை நினைத்து பாடியருளினார்.

திருவீழிமிழலையிலிருக்கும் நாளில் மழையின்மையால் பஞ்ச முண்டாயிற்று. மக்களெல்லாம் பசியால் வருத்தமுற்றனர். அந்நிலையில் சிவபெருமான் இவ் இரு பெருந்தகையாரினதும் கனவில் தோன்றி 'நீங்கள் காலவேறுபாட்டினால் வாட்டமடையமாட்டீர்கள்; எனினும் உங்களைச் சார்ந்து வழிபடும் தொண்டர்களுக்கு உணவளிக்கும் பொருட்டு உங்களுக்குப் படிக்காசு தருகின்றோம்" என்று கூறி விண்ணிழி விமானத்தின் மேற்கு, கிழக்குப் பீடங்களில் அவ்விருவருக்கும் நாள்தோறும் படிக்காசு வைத்தருளினார். அவர்களிருவரும் அப் படிக்காசினைக் கொண்டு அமுது செய்வித்துப் பசித்துன்பத்தைப் போக்கினர்.

---

* "முத்துவிதான மணிப்பொற்கவரி முறையாலே
பத்தர்களோடு பாவையர் சூழப் பலிப்பின்னே
வித்தகக் கோல வெண்டலை மாலை விரதிகள்
அத்தன் ஆரூர் ஆதிரை நாளால் அதுவண்ணம்.. '

திருநாவுக்கரசர் சிவபெருமானுக்குத் தொண்டுபுரியும் அடியவர் ஆதலால் அவர் பெறும் வாசி இல்லாக்காசு வணிகர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதனால் அவரது திருமடத்தில் நாள்தோறும் உரிய காலத்தில் திருவமுது செய்தனர். சம்பந்தப்பிள்ளையார், இறைவருக்குத் திருமகனாதலால் அவர் பெறும் காசு வணிகர்களிடம் வட்டம் கொடுத்து மாற்ற வேண்டியிருந்தது. அதனால் அடியார்கள் காலந்தாழ்த்தே அமுது செய்ய வேண்டியிருந்தது. அதனை உணர்ந்த காழிப்பிள்ளையார் 'வாசி தீரவே காசு நல்குவீர்" என வீழிமிழலைப் பெருமானை இறைஞ்சி வாசியில்லாக் காசு பெற்று உரிய நேரத்தில் திருவமுது செய்வித்தருளினார்.

திருநாவுக்கரசரும், திருஞானசம்பந்தரும் திருவீழிமிழலையினின்றும் புறப்பட்டு திருமறைக்காட்டை அடைந்தனர். திருக்கோயிலை வலம் வந்து, வேதங்களால் அடைக்கப்பட்டிருந்த திருக்கதவமைந்த திருவாயிலை அடைந்தனர். திருக்கதவு வேதங்களில் வல்ல அன்பரொருவரும் வராமையால் நெடுநாள் திறக்கப்படாதிருந்தது. அதனால் வேறொரு வழியினூடாக வேதவனப்பெருமானை வழிபட்டு வந்தார்கள். இச்செய்தியை அறிந்த சம்பந்தப்பிள்ளையார், "அத்திருக்கதவு திறக்கும்படி நீவீர் திருப்பதிகம் பாடியருளும்' எனவேண்டினர். அவர் விருப்பத்திற்கிசைந்த அப்பரடிகள், "**பண்ணி னேர்மொழியாள்.....**" என்ற திருப்பாட்டைப் பாடினார். செந்தமிழ் பாடல்களாகிய அவற்றின் சுவை நலன்களை விரும்பிய மறைக்காட்டீசர், திருக்கதவு திறக்க சற்றுக் காலந்தாழ்த்தினார். வருத்தமுற்ற நாவுக்கரசர், "**அரக்கனை விரலால் அடர்த்திட்ட நீர்...**" எனும் திருப்பதிகத்தின் இறுதித் திருப்பாட்டினைப் பாடத் தொடங்கினார். அந்நிலையில் அடைக்கப்பட்ட திருக்கதவு திறக்கப்பட்டது.

அப்பொழுது ஆளுடையபிள்ளையாரும், நாவுக்கரசரும் நிலத்தில் வீழ்ந்திறைஞ்சி நேர்முகவாயில் வழியாக உட்சென்று மறைக்காட்டீசரைப் போற்றி வெளிவந்தனர். அந்நிலையில் நாவுக்கரசர் பிள்ளையாரை நோக்கி "**இந்நிறைக்கதவம் அடைத்திடும்படி பாடியருளும்**" என

* பண்ணி னேர்மொழியாள் உமை பங்கரோ
மண்ணி னார்வலஞ்செய் மறைக்காடரோ
கண்ணி னால் உமை காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்ம்மினே

வேண்டிக்கொண்டார். அது கேட்ட சம்பந்தர் 'சதுரம்மறை' எனும் திருப்பதிகத்தினைத் தொடங்கி முதற்பாடலைப்பாட, திருக்கதவம் விரைவில் அடைக்கப்பெற்றது. அது கண்டு பெருந்தகையார் இருவரும் "நம்பெருமான் அருள் செய்யப் பெற்றோம்" என மகிழ்ந்து இறைவனைப் போற்றினர்.

மறைக்காட்டீசர் அருள் பெற்ற ஆளுடைய பிள்ளையாரும், அப்பரும் திருமறைக்காட்டிலுள்ள திருமடத்தில் அடியார்களுடன் அமர்ந்திருந்தனர். பிள்ளையார் விரைவில் அடைக்கப்பாடிய எளிமையினைக் கருதிய நாவுக்கரசர் "திருக்கதவு திறக்கத் தாழ்ந்ததன் காரணம் இறைவனது திருக்குறிப்பினைத் தான் உணராது அயர்ந்தமையே' எனக் கவலையுடன் துயில் கொண்டார்.

இவ்வாறு அப்பரடிகள் மறைக்காட்டிறைவரை நினைந்து உறங்கும் பொழுது, சிவபெருமானார் வெண்ணீறு இலங்கும் பொன்மேனியராய்க் கனவில் தோன்றி 'அன்ப நாம் திருவாய்மூரில் இருப்போம். நீ நம்மைத் தொடர்ந்து வருவாயாக' என்று கூறி முன் சென்றார். அந்நிலையில் மெய்யுணர்வு பெற்று விழித்தெழுந்த நாவுக்கரசர், **"எங்கே என்னை .இருந்திடந் தேடி..."** என்னுந் திருக்குறுந்தொகை பாடிக்கொண்டு, "எம்பெருமானின் விருப்பம் இதுவாயின் நானும் உடன் போவேன்" என எழுந்து திருமறைக்காட்டினை நீங்கி விரைந்து சென்றார். இறைவர் கனவில் தனக்குக் காட்டிய திருக்கோலத்தோடு விரைந்து சென்றார். தான் விரைந்து நடந்தும் தனக்கு முன் நடந்த வாய்மூர்த் தலைவரை அவரால் அணுக முடியவில்லை. அந்நிலையில் சிவபெருமான் அண்மையிலே காட்சி கொடுப்பவர் போல திருக்கோயிலை எதிரேகாட்டி, உள்ளே சென்று மறைந்தார். தமக்கு வழிகாட்டிய இறைவர் இடைவழியில் மறைந்தமை எண்ணி அப்பரடிகள் மனங்கலங்கினார்.

இந்நிலையில் ஆளுடைய பிள்ளையார் அப்பரைக் காணாது. அவர் திருவாய்மூர்க்குச் செல்கின்றார் என அடியார்கள் சொல்லக்கேட்டு, அத்திருத்தலத்தைச் சென்று அடைந்தார்.

தம்மேல் கொண்ட பேரன்பினால் தம்மைப் பின் தொடர்ந்து வந்த பிள்ளையாரைக் கண்டு மகிழ்ந்த நாவுக்கரசர், பிள்ளையார்

தமக்கு அருகில் வந்த நிலையில், எளியேனுக்கு அல்லாவிடினும் இப் பெருந்தகையார்க்கும் தம்மை மறைக்கும் இயல்புடையரோ? எனும் குறிப்புடன் "**திறக்கப்பாடிய என்னினுஞ் செந்தமிழ் உறைப்பப்பாடி அடைப்பித்தாரும் நின்றார்**" எனும் திருப்பாடலாற் போற்றிப்பாடினார். அப்பொழுது உமையொரு பாகராகியஇறைவர் ஆளுடை பிள்ளையார் காண ஆடல் காட்டி அருள் புரிந்தார். அவ்வழகிய தெய்வக் காட்சியினைக் கண்ட பிள்ளையார் அக்காட்சியினை "தளரிளவள-ரென வுமை பாட" எனும் திருப்பதிகம் பாடித் தம் அருமை நண்ப-ருக்குக் காட்டினார். அக்காட்சியைக் கண்டு மகிழ்ந்த அப்பரடிகள் ❀ "**பாட அடியார்....**" எனும் பதிகம் பாடினார்.

பெருந்தகையார் இருவரும் திருவாய்மூரிறைவரை வழிபட்டு விடை பெற்றுத் திருமறைக் காட்டில் எழுந்தருளி இருந்தனர். இவ்வாறு இருக்கும் நாளில் மதுரையில் இருந்து பாண்டிமாதேவியாராகிய மங்-கையர்க்கரசியாரும், அமைச்சர் குலச்சிறையாரும் அனுப்பிய தூதர்கள் திருமறைக்காட்டினை அடைந்தனர். அவர்கள் ஞானசம்பந்தரைக் கண்டு வணங்கி நின்று, பாண்டிநாட்டிற் சமணர்கள் சைவர்களுக்குச் செய்யும் இடையூறுகளை எடுத்துரைத்தனர். அதுகேட்ட பிள்ளையார் அந்நாட்டிற் சிவநெறியை நிலைநாட்டப் புறப்படுவதற்கு ஆயத்தமானார். அப்பொழுது அப்பரடிகள் "பிள்ளாய் சமணர் செய்யும் வஞ்சனைக்கு அளவில்லை. அன்றியும் இப்பொழுது நாளும் கோளும் தீயனவாக உள்ளன. இந்நிலையில் புறப்படுதல் பொருந்தாது' எனத் தடுத்தருளினார். அந்நிலையில் திருஞானசம்பந்தர் **"வேயுறுதோளிபங்கன்..."** எனும் கோ-ளறு பதிகம்பாடினார். பதிகம் பாடியதும் நாவரசர் "நீர் அங்குபோதல்

❀ பாட அடியார் பரவக்கண்டேன்
பத்தர் கணங் கண்டேன் மொய்த்த பூகம்
ஆடல் முழவம் அதிரக் கண்டேன்
அங்கை அனல் கண்டேன் கங்கையாளைக்
கோடல் அரவார் சடையிற் கண்டேன்
கொக்கின் இதழ்கண்டேன் கொன்றை கண்டேன்
வாடல் தலையொன்று கையிற் கண்டேன்
வாய்மூர் அடிகளை நான் கண்டவாறே

வேண்டாம்; நானே சென்று சமணரைச் சிதைத்துவருகிறேன் என்று அவருக்குமுன்னே புறப்பட்டார். பிள்ளையார் அவரைத் தேற்றி, அவரிடம் விடை பெற்றுப் பாண்டிநாடு புறப்பட்டார்.

பின்பு திருநாவுக்கரசர் பழையாறை எனும் தலத்தை அடைந்து சமணர்களால் மறைக்கப்பட்ட வடதளி' எனும் கோயிலை அடைந்த பொழுது அவருடைய கைகள் தாமாகவே தொழுதன. அப்பொழுது அங்கு எதிர்ப்பட்டோர் சிலர் 'இது சிவபெருமானுக்குரிய திருக்கோயிலே, இவ்விமானம் அமணர்களால் வடதளி ஈசரை மறைத்துக் கட்டப்பட்ட பொய்யான விமானம்' எனக் கூறினர். அதுகேட்டு மனம் பொறாத வாகீசர், அவ்விமானத்தின் அருகில் அமர்ந்து இறைவன் திருவடிகளைச் சிந்தித்து, "எம்பெருமானே, அமணரால் மறைக்கப்பட்ட மறைப்பினை அகற்றி அவர்கள் ஆற்றலைச் சிதைத்துவிடுவீராக. அடியேன் உமது திருவடி காணாது போகேன்' என உண்ணா நோன்பு இருந்தார்.

சிவபெருமான், பழையாறை நகர மன்னன் கனவில் தோன்றி, "நாம் சமணர்களால் மறைக்கப்பட்டுள்ளோம்' என்று சொல்லி 'நம்மை நாவுக்கரசு வெளிப்படக் கண்டு கும்பிடும் வண்ணம் நீ முறையற்ற சமணர்களை அழித்துப் போக்குவாயாக" என உரைத்து மறைந்தருளினார். விழிப்புற்ற மன்னன் தனது கனவினை அமைச்சர்களுக்குச் சொல்லி வடதளி அடைந்து அமணர்கள் செய்த வஞ்சனையைக் கண்டறிந்தான். வாகீசர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினான். அத்துடன் சமணர்களை யானைகளால் அழித்துப் போக்கியதுடன் பொய்யான விமானத்தை நீக்கிப் புதியதொரு விமானம் அமைத்து வடதளி இறைவரை வணங்கி மகிழ்ந்தான். இவ்வாறு தமது எண்ணம் இனிது நிறைவேறியமை கண்டு மகிழ்ந்த நாவுக்கரசர், * **"தலையெலாம் பறிக்கும் சமண்...."** எனும் பதிகம் பாடிச் சில நாள் அங்கு அமர்ந்திருந்தார்.

---

* "தலையெலாம் பறிக்கும் சமண் கையருள்
நிலையினான் மறைத்தான் மறைக் கொண்ணுமே
அலையினார் பொழில் ஆறை வடதளி
நிலையினான் அடியே நினைந்துய்ம்மினே"

பின்னர் பழையாறையிலிருந்து காவிரியின் இருகரையிலும் அமைந்த கோயில்களை வழிபடப் புறப்பட்டார். திருவானைக்கா முதலிய தலங்களில் சிவபெருமானை வழிபட்டுத் திருப்பதிகங்கள் பாடித் திருப்பைஞ்ஞீலியை வழிபடச் சென்றார். செல்லும் வழியில் பசியாலும், தாகத்தாலும் மிகவும் இளைப்புற்றார். அந்நிலையில் அவரது பசி வருத்தத்தை நீக்கத் திருவுளம் கொண்ட சிவபெருமான், வழியிலே ஒரு சோலையையும் குளத்தையும் உண்டாக்கி ஒரு வழிப்பயணம் செய்யும் அந்தணரைப் போல் திருவுருத்தாங்கி கையிற் பொதிசோறு கொண்டு தங்கியிருந்தார். நாவரசர் அவரை அண்மித்ததும், மறையவர் அவரை நோக்கி 'நீர் மிகவும் இளைத்திருக்கின்றீர்; நான் கொடுக்கும் பொதிசோற்றை உண்டு பசிதீர்த்துத் தண்ணீர் பருகி இளைப்பாறிச் செல்வீர்' என்றார். 'பொதிசோறு உண்டு பசிதீர்ந்திருந்த அப்பரைநோக்கி 'நீர் எங்கே போகின்றீர்" என வினவினார். திருப்பைஞ்ஞீலிக்குப் போகின்றேன் என்றார் வாகீசர். அதுகேட்ட அந்தணர் நானும் அங்கேதான் செல்கின்றேன் எனக் கூறி அவருடன் சென்று அத்தலத்தை நெருங்கியதும் மறைந்தருளினார். அதுகண்டு வியப்புற்ற வாகீசர், தன்னையும் ஒரு பொருட்டாகக் கொண்டு அருள்புரிந்த திறத்தினை நினைந்து நெஞ்சுருகி கண்ணீர் சொரிந்தார். திருப்பைஞ்ஞீலித் திருக்கோயில் சென்று திருப்பதிகம் பாடிக் கைத்தொண்டு செய்திருந்தார்.

சில நாட்சென்றபின் அங்கிருந்து புறப்பட்டுப் பல தலங்களையும் பணிந்து திருவண்ணாமலையை அடைந்தார். அங்கு அன்பினாற் கும்பிட்டுப் போற்றி வீடுபேற்றினும் சிறந்த பேரின்பத்தை எய்தினார். பின்பு தொண்டை நாடு செல்லும் ஆர்வமுடன் காஞ்சிமாநகரை அடைந்தார். அவரது வருகையறிந்த காஞ்சி மக்கள் அவரை வரவேற்றுப் போற்றி மகிழ்ந்தனர். வாகீசப் பெருந்தகை திருக்கோயிலை அடைந்து கச்சியேகம்பப் பெருமானை நினைந்து "**கரவாடும் வன்னெஞ்சர்க் கரியானை....**" * எனும் பதிகம் பாடிப்போற்றினார். அங்குறையும்

---

* "கரவாடும் வன்னெஞ்சர்க் கரியானைக் கரவார்பால்
விரவாடும் பெருமானை விடையேறும் வித்தகனை
அரவாடச் சடைதாழ அங்கையினில் அனலேந்தி
இரவாடும் பெருமானை என்மனத்தே வைத்தேனே."

நாளில் திருமாற்பேறு எனும் தலத்தை அடைந்து வழிபட்டார். அங்கிருந்து காஞ்சியில் வைத்த காதலால் **'ஏகம்பன் காண் அவன் என் எண்ணத்தான்"** எனும் பதிகம் பாடிக் கொண்டு வந்தார். பின் பல தலங்களையும் வழிபட்டு திருக்காளத்தி மலையை அடைந்தார். அங்கு குடுமித்தேவரைப் பணிந்து கும்பிட்டு **"காளாத்தியான் என் கண்ணுள்ளான்"** எனும் திருத்தாண்டகம் பாடி அன்புருவாகிய கண்ணப்ப நாயனாருடைய திருவடிகளை வணங்கி சில நாட்கள் கைத்தொண்டு புரிந்திருந்தார். தென்கயிலை எனப் போற்றப் பெறும் திருக்காளத்தி இறைவரைப் பணிந்தமையால் திருக்கைலாய மலையில் வீற்றிருக்கும் திருக்கோலத்தினைக் காணும் பெருவிருப்பு உண்டாயிற்று.

கயிலைக் கோலம் காணவிரும்பிய அப்பர் காளத்தி நாதரை வணங்கி, காடு, மலை, ஆறு, நாடு ஆகியவற்றைக் கடந்து திருப்பருப்பதத்தை அடைந்து இறைவனைச் சொன்மாலைகளால் துதித்தார். பின் அங்கிருந்து மாளவதேசத்தை அடைந்தார். அங்கிருந்து வெம்மை மிக்க சுரங்களைக் கடந்து காசியினை அடைந்தார். வாரணாசியாகிய அத்திருப்பதியில் எழுந்தருளியிருக்கும் இறைவனைப் போற்றித் தன்னுடன் வந்த அடியார்களை அங்கு தங்கியிருக்குமாறு பணித்தார்.

தாம் அதற்கப்பால் உணவுண்பதைத் தவிர்த்து இரவு பகலாக ஓயாமல் யாத்திரை செய்தார். அதனால் அவர் பாதங்கள் தேய்ந்தன. அந்நிலையிலும் கயிலைப் பெருமானைக் காணும் ஆர்வத்தால் தனது இரண்டு கைகளாலும் தாவிச் சென்றார். அவரது மணிக்கட்டுக்கள் கரைந்து சிதைந்தன. ஆர்வமிகுதியால் கற்கள் நிறைந்த பாதையில் மார்பினால் உந்தினார். மார்புத் தசை சிதைந்து எலும்புகளும் முரிந்தன. பின் புரண்டு புரண்டு போனார். அவரது உடம்பு முழுதும் சிதைந்து தேய்ந்தும், அவரது உள்ளம் கொண்ட உறுதியில் சிறிதும் மாற்றமேற்படவில்லை. அவ்வுறுதியினால் மெல்ல நகர்தற்கு முயன்றார் ஆயின் சிறிதும் நகரக் கூட முடியாமல் செயலற்றுத் தங்கினார்.

அப்பொழுது சிவபெருமான், நாவுக்கரசரின் விருப்பத்தை நிறைவேற்றத் திருவுளம் கொண்டார். அவ்விடத்தில் ஒரு தடாகத்தை உண்டாக்கி சடாமுடியுடைய முனிவர் வடிவுடன் அவர் முன் சென்று நொந்து நோக்கினார். "உம்முடைய அங்கங்கள் எல்லாம் சிதைய

இவ்வெம்மையுடைய நாட்டிற்கு ஏன் வந்தீர்?" என வினவினார். திருநீறணிந்த முனிவரின் இன்னுரை கேட்டு நாவுக்கரசரின் உடம்பின் சிதைவாலுண்டாகிய சோர்வு சிறிது நீங்கியது. பெருமானே, "வடகயிலையில் அண்டர் நாயகனாகிய சிவபெருமான் உமையம்மையாருடன் எழுந்தருளியிருக்கும் கோலத்தினைக் காண நான் விருப்புடன் வந்தேன்" எனக் கூறினார். அது கேட்ட முனிவர், "கயிலாயமலை தேவர்களாற் கூட அணுகுதற்கரியது. மனிதர்களால் அடைவதற்கு எளிமையுடையதன்று. இங்கிருந்து திரும்பிச் செல்லுதலே உம்மாற் செய்யத்தக்கது" என மொழிந்தார்.

இவ்வாறு முனிவர் கூறியதைக் கேட்ட நாவுக்கரசர், "**ஆளும் நாயகன் கயிலையில் இருக்கை கண்டல்லால் மாளும் இவ்வுடல் கொண்டு மீள்கிலேன்**" என மறுத்தார். வாகீசரின் உறுதியை உணர்ந்த முனிவராய் வந்த சிவபெருமான் விண்ணிலே மறைந்து நின்று, 'ஓங்கு **நாவினுக்கரசனே** எழுந்திரு;' என உரைத்தருளினார். தீங்கு நீங்கி எழில் பெற்ற திருமேனியுடன் எழுந்து

"அண்ணலே எனை ஆண்டுகொண்டருளிய அமுதே
விண்ணிலே மறைந்தருள்புரி வேத நாயகனே
கண்ணினால் திருக்கயிலையில் இருந்த நின்கோலம்
நண்ணி நான் தொழ நயந்தருள் புரி எனப் பணிந்தார்"

அப்பொழுது சிவபெருமான் அருள் வாக்கினால் அப்பரை அழைத்து "நீ இப்பொய்கையில் மூழ்கி நாம் கயிலையிலிருந்த காட்சியை திருவையாற்றில் கண்டு மகிழ்வாயாக" எனப் பணித்து அருளினார்.

இறைவனது அருள்வாக்கினைத் தலைமேற் கொண்ட அப்பர், இறைவர் காட்டிய பொய்கையிலே **"வேற்றாகி விண்ணாகி...."** எனத்

* வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
மீளாமே ஆளென்னைக் கொண்டாய் போற்றி
ஊற்றாகி உள்ளே ஒளித்தாய் போற்றி
ஓவாத சத்தத் தொலியே போற்றி
ஆற்றாகி அங்கே அமர்ந்தாய் போற்றி
ஆறங்கம் நால்வேதம் ஆனாய் போற்றி
காற்றாகி எங்கும் கலந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

துதித்து திருவைந்தெழுத்து ஓதி மூழ்கித் திருவையாற்றிலுள்ள ஓர் தடாகத்தில் கரையேறினார். எம்பிரான் தரும் கருணையே இதுவென்று உணர்ந்தார். கண்களில் அன்புநீர் சொரிய இறைவனை வணங்கிச் செல்லும் நாவுக்கரசர் அத்திருப்பதியில் எல்லா உயிர்களையும் சத்தியும் சிவமுமாகக் கண்டு பணிந்து கோயிலுக்கு முன்னே சென்றார், அங்கே திருமால், பிரமன், இந்திரன் முதலான தேவர்கள் இறைவனைப் போற்றிசைக்கும் தோத்திர வொலியும், மறைமுழக்கமும், எல்லாப்-பக்கமும் முழங்கின. தவமுனிவர்களும், கணங்களும் எவ்விடத்தும் நெருங்கிப் போற்றினர். அரம்பையர் முதலியோர் இசைபாடினர். இறைவ-ரின் முன்னால் அவரது வாகனமாகிய செங்கண்மால் விடைநின்றது. பெரிய தேவராகிய நந்தியெம்பெருமான் பிரம்புடன் பணிசெய்து உலா-வினார். வெள்ளி மலையின் மீது பவளமலையொன்று மரகதக் கொடியுடன் விளங்குவது போன்று, செம்மேனியம்மானாகிய சிவன், நீல மேனியுடைய உமாதேவியாருடன் வீற்றிருந்தருளினார். கயிலைக்-கோலங்கண்ட நாவினுக்கரசர் பாமாலைபாடி ஆடிக் களிப்புற்றார்.

இவ்வாறு அப்பர் கயிலைக் காட்சியினைக் கண்டு மகிழ்ந்திருந்த போது இறைவர், தாம் காட்டிய கயிலைக் காட்சியை மறைத்து திருவையாறு இருந்த பழைய நிலையினைப் புலப்படுத்தினார். அந்-நிலையில் பெரிதும் வருந்திப் பின் தெளிந்த வாகீசர், தாம் கண்ட கயிலைக் காட்சியினை உலகமக்கள் உணர்ந்து மகிழும் வண்ணம் ❀**"மாதர்ப் பிறைக் கண்ணி...."** எனவரும் பதிகம் பாடிப்போற்றினார்.

திருவையாற்றிறைவனைப் போற்றி மகிழ்ந்திருந்த நாவுக்கரசர் அங்கிருந்து புறப்பட்டுத் திருப்பூந்துருத்தியை அடைந்தார். பூந்துருத்தி மகிழும் பொய்யிலியாகிய பெருமானைத் திருத்தாண்டகம், திருவிருத்தம், திருக்குறுந்தொகை முதலிய திருப்பதிகங்களாற் போற்றி இறைவனை

❀ மாதர்ப் பிறைக்கண்ணி யானை மலையான் மகளொ டும்பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவாரவர்பின் புகுவேன்
யாதும் சுவடுபடாமல் ஐயாறடைகின்ற போது
காதன் மடப்பிடியோடும் களிறுவருவன கண்டேன்
கண்டேன் அவர்திருப் பாதம் கண்டறியாதன கண்டேன்.

வழிபடும் நோக்குடன் திருமடம் ஒன்றைக் கட்டுவித்து, திருவங்கமாலை முதலிய செந்தமிழ்ச் சொல்மலர்களால் அருச்சித்துப் போற்றி இருந்தார்.

திருநாவுக்கரசர் இவ்வாறிருக்க, திருமறைக் காட்டில் இவரிடம் விடைபெற்றுச் சென்ற சம்பந்தர், பாண்டிநாட்டில் திருநீற்றின் மகிமையை உணர்த்தி சமணர்களை வாதில் வென்று, பாண்டியனது கூனையும் நிமிர்த்தி அருளிப் பின் சோழநாட்டுத் தலங்களை வணங்கி, தம் நண்பராகிய அப்பரடிகளைக் காணும் விருப்புற்றார். அவ்விருப்பினால் அடியார்களை வினவினார். 'அப்பர் திருப்பூந்துருத்தியில் இருக்கின்றார்' என அவர்கள் கூறினர். அது கேட்ட பிள்ளையார் அடியார்களுடன் திருப்பூந்துருத்தியை அடைந்தார்.

ஞானசம்பந்தர் தன்னைக் காணவருவதை அறிந்த நாவுக்கரசர், பிள்ளையாரை எதிர்கொண்டு போற்ற விரும்பி யாரும் அறியாவண்ணம் சம்பந்தர் அமர்ந்து வந்த சிவிகையினைத் தாங்கிவந்தார். அப்பொழுது சம்பந்தர் அடியார்களை நோக்கி, "அப்பர் எங்குற்றார்" என வினவினார். பிள்ளையாரின் அன்பின் திறத்தை அறிந்த அப்பரடிகள், 'உம் **அடியேன் உம் அடிகள் தாங்கிவரும் பெருவாழ்வு வந்தெய்தப் பெற்று இங்குற்றேன்'** எனக் கூறினார். பிள்ளையார் அச்சமும் வியப்புமெய்திச் சிவிகையினின்று கீழே குதித்து அப்பரடிகளை வணங்கினார். அவரும் சம்பந்தர் வணங்கு முன்பே விரைந்து வணங்கினார். இருவரின் நட்பின் திறத்தை அடியார்கள் கண்டு உளமுருகித் தொழுதனர். பின்னர் பெருந்தகையார் இருவரும் திருப்பூந்துருத்தித் திருக்கோயிலை அடைந்து சிவபெருமானைப் போற்றி மடத்தில் இருந்தனர்.

பாண்டிநாட்டில் நிகழ்ந்த சம்பவங்களை திருஞானசம்பந்தர், அப்பரடிகளுக்கு எடுத்துரைத்தார். அவற்றைக் கேட்டு மகிழ்ந்த நாவுக்கரசர் செந்தமிழ்ப் பாண்டி நாட்டினைக் காண ஆசைப்பட்டார். தாம் தொண்டை நாடு சென்ற சேதியைக் கூறி, அக்கோயில்களுக்குச் சென்று தமிழ் மாலைகளாற் போற்றும் வண்ணம் சம்பந்தர்க்கு எடுத்துரைத்தார். அவரும் அவ்வாறே விடைபெற்றுத் தொண்டைநாடு சென்றார்.

திருநாவுக்கரசர் திருப்பூந்துருத்தியிறைவரிடம் விடைபெற்றுப் பாண்டி நாட்டையடைந்து மதுரை சென்றார். திருவாலவாய் திருக்கோயிலை அடைந்து வலம்வந்து சொக்கலிங்கப் பெருமானை வழிபட்டு **"முளைத்தானை எல்லார்க்கும் முன்னே"** எனும் பாடலால் போற்றிப் பரவினார். பாண்டிமாதேவியாராகிய மங்கையர்க்கரசியாரும், கணவரான நின்றசீர்நெடுமாறனாரும், மந்திரியார் குலச்சிறையாரும் அப்பர் பெருமானை வரவேற்று அவரை வணங்கி மகிழ்ச்சியுடன் உபசரித்தனர். பின்பு நாவுக்கரசர் திருப்பூவணத்தை வழிபடச் சென்றார். பூவணத்திறைவர் தமது தெய்வத்திருக்கோலத்துடன் திருநாவுக்கரசர்க்கு எதிரே தோன்றிக் காட்சி தந்தருளினார். அவ்வழகிய தெய்வக் காட்சியைக் கண்டு மகிழ்ந்த அப்பரடிகள், **'வடிவேறுதிரிசூலம்'** எனும் திருப்பதிகத்தால் பூவணத்திறைவரை வாழ்த்திப் போற்றினார். அங்கிருந்து இராமர் இராவணனைக் கொன்ற பாதகம் தீர்ந்த பதியான இராமேச்சுரத்தை அடைந்தார். இராமேச்சுரத்தில் அமர்ந்த இறைவரைப் பதிகங்கள் பாடி வழிபட்டு அப்பதியிலே சிலநாள் பணிசெய்து கிடந்தார். பின் திருநெல்வேலி ஆகிய தலங்களையும் வழிபட்டு சோழநாட்டை அடைந்தார். அங்கு பலதலங்களையும் வழிபட்டு திருப்புகலூர் அடைந்தார். அவர் புகலூர்ப் பெருமானை வழிபட்டு உழவாரத் திருத்தொண்டு செய்து பல்வேறு பாமாலைகள் பாடித்துதித்தார்.

திருநாவுக்கரசரது உள்ளத்துறுதியை உலகத்தார்க்குப் புலப்படுத்தத் திருவுளம் கொண்ட இறைவர், அவர் உழவாரத் தொண்டு புரியும் போது அவ் வுழவாரம் புகுந்த இடமெல்லாம் பொன்னும் நவமணிகளும் தோன்றும்படி செய்தார். ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்கிய வாகீசர் அவற்றைப் பருக்கைக் கற்களுடன் ஒப்பிட்டு வீசி எறிந்தார். அழகிற்சிறந்த ஊர்வசி போன்ற தேவ மாதர்கள் அப்பரைப் பெரிதும் மயக்குதற்கு முயன்றார்கள். திருவடிகளை மறவாத மெய்யுணர்வுடைய தவச்செல்வராகிய நாவுக்கரசர் தம் ஒருமை நிலையிற் சிறிதும் தவறாது தான் செய்யும் திருப்பணியிலேயே கருத்து உடையவராய் விளங்கினார். தம்மை மயக்கி நிற்றற்குக் காரணமாகிய இருவினைகளை நோக்கி, "நான் திருவாரூரில் உறையும் இறைவனுக்கு ஆட்பட்டேன் உம்மால் அலைக்கப்படும் எளிமையுடையேனல்லேன்; நீவிர் என்னை துன்புறுத்தாதீர்' எனக் கூறி **"பொய்ம்மாயப் பெருங்கடலில்"** எனும் திருத்தாண்டகம் பாடினார்.

தங்களால் எதுவும் செய்ய முடியாது என உணர்ந்த அரம்பையர் அவரை வணங்கிச் சென்றனர். திருப்புகலூரில் தொண்டு புரிந்த அப்பரடிகள் தம் அந்தக்கரணங்கள் புறத்தே செல்லாது உள்ளே ஒடுங்கப்பெற்று இறைவன் திருவடியினைத் தலைப்படும் நிலையை எய்தினார். 'புகலூர்ப் பெருமான், தன்னுடைய அடியவனாகிய எளியேனை இனித் தன் திருவடியின் கீழ் இருத்தி அருள்புரிவன்' எனும் உணர்வுடன் * **"தன்னைச் சரணென்று தாளடைந்தேன்...."** எனும் திருப்பதிகத்தைப் பாடிப் போற்றினார். இறைவன் தம்மைத் திருவடிக்கீழ் விரைவில் சேர்த்துக் கொள்வான் எனும் முன்னுணர்வு பெற்ற நாவரசர், * **"எண்ணுகேன் என்சொல்லி எண்ணு கேனோ"** எனும் திருத்தாண்டகம் பாடிப் புகலூர்ப்பெருமானை நினைந்து சித்திரைத் திங்கள் சதயத்-திருநாளில் அண்ணலார் சேவடிக்கீழ் எய்தி இன்புற்றார்.

---

* "தன்னைச் சரணென்று தாளடைந்தேன் தன் அடியடையப்
புன்னைப் பொழிற்புக லூரண்ணல் செய்வன கேண்மின்களோ
என்னைப் பிறப்பறுத் தென்வினை கட்டறுத் தேழ் நரகத்
தென்னைக் கிடக்கலொட் டான்சிவலோகத் திருத்திடுமே"

* "எண்ணுகேன் என்சொல்லி எண்ணு கேனோ
எம்பெருமான் திருவடியே எண்ணி னல்லால்
கண்ணிலேன் மற்றோர் களைகண் இல்லேன்
கழலடியே கைதொழுது காணி னல்லால்
ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க அடைக்கும்போ துணரமாட்டேன்
புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே"

* ஒருவனையும் அல்லா துணரா துள்ளம்
உணர்ச்சித் தடுமாற்றத் துள்ளே நின்ற
இருவரையும் மூவரையும் என்மேல் ஏவி
இல்லாத தரவறுத்தாய்க் கில்லேன் ஏலக்
கருவரைசூழ் கானல் இலங்கை வேந்தன்
கடுத்தேர்மீ தோடாமைக் காலாற் செற்ற
பொருவரையாய் உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே.
திருச்சிற்றம்பலம்

திருத்தொண்டர் புராண சாரம்

போற்று திருவாமூரில் வேளாண்தொன்மைப்
பொருவில் கொறுக்கையர் அதிபர் புகழனார்பால்
மாற்றரும் அன்பினில் திலகவதியாம் மாது
வந்துதித்த பின்பு மருணீக்கியாரும்
தோற்றி அமணச்சமயம் உறுதுயர நீங்கத்
துணைவர் அருள் தரவந்த சூல நோயால்
பாற்றரு நீளிடர் எய்திப் பாடலிபுரத்தில்
பாழியொழித்து அரன் அதிகைப்பதியில் வந்தார்

வந்து தமக்கையர் அருளால் நீறு சாத்தி
வண்டமிழால் நோய் தீர்ந்து வாக்கின் மன்னாய்
வெந்த பொடி விடம் வேழம் வேலை நீந்தி
வியன் சூலம் கொடி இடபம் விளங்கச் சாத்தி
அந்தமில் அப்பூதி மகன் அரவு மாற்றி
அருட்காசு பெற்று மறை அடைப்புநீக்கி
புந்தி மகிழ்ந்து ஐயாற்றில் கமிலைகண்டு
பூம்புகலூர் அரன்பாதம் பொருந்தினாரே

நுண்பொருள்

01. விதிவசத்தால் பெற்றாரை இழந்து ஆற்றொணாத் துயரில் உழன்றபோதும், நில்லாத உலகியல்பு கண்டு நிலையான பொருளில் நாட்டம் கொள்வதன்றிச் சோர்ந்துவீழ்தல் ஆகாது.

02. மாதர்கள் கைம்மைநிலை ஏற்படுமிடத்து உடன் பிறந்தார் பொருட்டு உயிர்வாழ்தலும், சுற்றப்பற்று ஒழிந்தவிடத்துத் தவவாழ்வு வாழ்தலும் தக்கது. தம்பியார் வாழவேண்டுமென்ற தயாவுடைய தபோதனியர், தம்பியர்க்குத் திருநீறும் அஞ்செழுத்தும் அருளும் குருவாகவும் அமைவர்.

03. சிவனருளின்றிச் சிவநெறி சேர்தல் இயலா. அவநெறியில் உழலவேண்டியும் நேரிடும்.

04. வருத்தம் வரப்பிரசாதம்.

05. பிழைபுரிவரேனும், பிழைக்குக் கழிவிரக்கப்பட்டுக் கழலடியைச் சரண்புகுந்து நினைந்துருகுவரேல், அருளாளனான இறைவன் அப்பிழை பொறுப்பதுடன்

தீராநோய் தீர்த்தும், பாடிப்பரவும் பாக்கியமருளித் திருநாமமும் சூட்டியருள்வார்.

06. சிவனடியார்கள் மண்ணாள்வான் குடியல்லர். அவர்களைத் தீசுடா. கடல் தாங்கும்; கொலையானை கொன்றிடா; நஞ்சும் அமுதாகும்.

07. கைத்தொண்டுபுரிதல் தலையாய அடியாராய் விளங்கும் தகைமையளிக்கும்.

08. தலையாய அடியார் மற்றைச் சிவனடியார் முன் தாழ்ந்தொழுகுவார்.

09. திருநாவுக்கரசு சுவாமிகள் தம்மைக் காணாமலேயே தலையன்பு பூண்டிருந்த அப்பூதியடிகள் குடிமுழுவதையும் ஆண்டார்.

10. சினடியார்கள் ஒருவரோடொருவர் கலந்து உறவாடிவாழ்தல் எத்துணைச் சிறப்புடையதாக உளது.!

11. பஞ்சம் வந்துற்றகாலத்து திருவருளால் அடியார்க்கு அமுதளித்தலும், திருவருள்கூடுமெனில் மடம் அமைத்துப் பணிசெய்தலும் சமயாசாரியாரின் சிவதொண்டில் அடங்குவன.

12. சிவதரிசனம் நாடும் அடியார்கள் உடலெல்லாம் தேய்ந்து சிதைந்து அழிந்தாலும் சித்த உறுதி தளராது நாட்டத்தில் கருத்தாயிருப்பர்.கயிலைக் காட்சி புண்ணிய தலம் ஒன்றில் சித்தித்தல் கூடும்.

13. அடியர் ஒடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்குபவர். அவரை மாதராசை மயக்கச் செய்வதில்லை.

கையும் தலைமிசை புனைஅஞ்சலியன கண்ணும் பொழிமழை ஒழியாதே
பெய்யும் தகையன கரணங்களும் உடன் உருகும் பரிவின பேறெய்தும்
மெய்யும் தரைமிசை விழுமுன்பு எழுதரும் மின்றாள் சடையொடு நின்றாடும்
ஐயன் திருநடம் எதிர்கும்பிடுமவர் ஆர்வம் பெருகுதல் அளவின்றால்

- பெரியபுராணம்

திருநாவுக்கரசுநாயனார் குருபூசைநாள் :- சித்திரைச் சதயம்

22. குலச்சிறை நாயனார்

"பெருநம்பி குலச்சிறை தன் அடியார்க்கும் அடியேன்"

- திருத்தொண்டத் தொகை

"அருந்தமிழாகரன் வாதில் அமணைக் கழுநுதிமேல்
இருந்தமிழ் நாட்டிடை ஏற்றுவித்தோன் எழிற் சங்கம் வைத்த
பெருந்தமிழ் மீனவன் தன் அதிகாரி பிரசம் மல்கும்
குருந்தவிழ் சாரல் மணமேற்குடி மன் குலச்சிறையே

- திருத்தொண்டர் திருவந்தாதி.

பழம்பெரும் சிறப்புடைய பாண்டிநாட்டின் வளம்பல பெருகிய ஓர்ஊர் மணமேற்குடி. இவ்வூரினது தலைவராகத் திகழ்ந்தவர் குலச்சிறையார். இவர் நம்பியாரூரரால் **பெருநம்பி** எனப் போற்றப்பட்ட பெருந்தகையாளர். திருத்தொண்டிற் சிறந்த இத் தொண்டர் சிவனடியார்களை **முத்திகாரணர்** எனத் துணிந்தவர். ஆதலால் சிவனடியார்களிடத்து மிகுந்த வாரப்பாடு உடையவராயிருந்தார். சிவனடியார்களைக் காணின் ஆராஅன்போடும் வீழ்ந்து வணங்கி எழுந்து நின்று கைகூப்பித் தொழுது **'சரநன்மொழி'** கூறி வரவேற்பார். சிவனடியார் யாவரேயெனினும் அவர்தம் குலநலம் பாராது கும்பிடுவார். நல்லவர் தீயவரென நாடாது பணிந்து வணங்குவார். ஒருவராய் வரினும் பலராய் வரினும் எதிர்கொண்டு வரவேற்று இன்னமுது ஊட்டுவார். திருநீறும், உருத்திராக்கமும் அணிந்தவரும் அஞ்செழுத்தோதுபவருமான அடியவர் பாதத்தை அவர் வழிபடாத நாளில்லை.

இத்தகைய அடியவர்க்கு அன்பு பூண்ட அகத்தினரான குலச்சிறையார் நின்றசீர்நெடுமாறன் எனும் பாண்டிய மன்னனின் முதலமைச்சராக அரசகருமம் செய்தார். பாண்டியமன்னன் சமண சமயத்தவனாகவும், குடிகளெல்லாம் அவன் வழியினராகவும் நின்ற போதும் பெருமானம் உடையவரான அவர் சைவத்தின் வழி நின்றார்.

இவ்வாறு சிவநெறியினராய் அரசகருமம் பார்க்கும் நாளில் சிவநெறி விளக்கும் திருஞானசம்பந்தர் பாண்டி நாட்டிற்கு அருகே திரு-

மறைக்காட்டில் எழுந்தருளியிருப்பதான செய்தியைக் கேள்வியுற்றார். இச்செய்தியைக் கேள்விப்பட்ட அளவிலேயே அவரை நேரிற் கண்டு அடிபணிந்தது போல் ஆனந்தமடைந்தார். பாண்டிய நாடெங்கும் சைவம் ஓங்கவேண்டுமென்ற எண்ணத்தோடிருந்த பாண்டிமாதேவியாரோடு ஆலோசித்துப் பரிசனங்களை திருஞானசம்பந்தரிடம் சென்று சேதி சொல்வதற்கென அனுப்பிவைத்தார். சம்பந்தப்பெருமான் பாண்டி நாட்டுக்கு எழுந்தருளும் செய்தி எட்டுமுன்னமே நன்னிமித்தங்கள் பல தோன்ற 'இவை சண்பை அரசு வரும் நற்குறி' எனத் தெளிந்தார். எழுந்தருளும் செய்தி கேட்டதும் பாண்டிமாதேவியாரிடம் சென்று அவர் பணிப்பினைப் பெற்று வரவெதிர்கொள்ளச் சென்றார். செல்லும் அவர் தம் எதிரே புண்ணியத்தின் படையெழுச்சி போன்றும், ஞானமணி விளக்கு எழுந்து வருவது போன்றும் அடியவர் சூழ வரும் ஆளுடைய பிள்ளையைக் கண்டார். பரசமய கோளரி வந்தான் எனும் முத்துச்சின்ன ஓசை செவிநிறை அமுதென அவரை விம்மிதமுறச் செய்தது. கண்வழியு-டாகவும், செவி வழியூடாகவும் உளம் நிறைந்த அன்பு வெள்ளத்தாலே கைகள் சிரமிசை ஏறிக்குவிய அவ்விடத்திலே நிலமிசை வீழ்ந்து வணங்கினார். பின் எழுந்து நெருங்கிச் சென்று வீழ்ந்து வணங்கிக் கிடந்தார். ஆளுடைய பிள்ளையாரைச் சூழ்ந்து வந்த தொண்டர் குழாம், பாண்டியனது முதல் மந்திரிப் பாங்குடன் வந்த அவரைப் பணிந்தபோதும் அவர் எழாதவகையைக் கண்டு சிரபுரச் செல்வரிடம் சென்று கூறினர். சிவஞானச்செல்வரும் முத்துச் சிவிகையினின்றும் இறங்கிவந்து தம் கைமலர்களால் அணைத்தெடுத்தார். அவர்தம் அரவணைப்பினால் எழுந்த குலச்சிறையார் கைதொழுது நின்றார். அப்போது ஆளுடையபிள்ளை உமக்கும் மானியாருக்கும் **'திருவருள் பெருகும் நன்மைதான் வாலிது'** என மதுரவாக்கு அருளினார். இம்-மதுரவாக்கின் பேற்றினால் மீண்டும் வீழ்ந்து வணங்கி நின்று

> "சென்ற காலத்தின் பழுதிலாத்திறமும் இனி எதிர்காலத்தின் சிறப்பும் இன்று எழுந்தருளப்பெற்ற பேறிதனால் எற்றைக்கும்
>
> - திருவருளுடையோம்
>
> நன்றியில் நெறியில் அழுந்திய நாடும் நற்றமிழ்வேந்தனும் உய்ந்து வென்றிகொள் திரு நீற்றொளியினில் விளங்கும்
>
> - மேன்மையும் படைத்தனம்'

எனப் போற்றினார். ஆளுடைய பிள்ளையாரோடு கூடிச்சென்று ஆலவாயில் உறையும் அவிர்சடைக் கடவுளை வழிபடும் பாக்கியம் பெற்றார். சம்பந்தப்பெருமானைத் திருமடத்தில் உறையச் செய்து, அவர்க்கும் பரிசனத்தார்க்கும் திருவிருந்தளிக்கும் பேறும் அவருக்கே வாய்த்தது. இவற்றையெல்லாம் செவ்வனே செய்தனரெனினும், தீயவை புரியும் அமணரால் தீங்கேதும் நிகழுமோ என அஞ்சினார். அவ்வாறு தீதேதும் நிகழின் உயிர் துறப்பதே தக்கதென்ற துணிவும் கொண்டார். அவர் அஞ்சிய வண்ணமே அமணர் ஆளுடைய பிள்ளையார் உறைந்த மடத்துக்குத் தீக்கொளுவிய செய்தி அவரை மனம் பதைக்கச் செய்தது. ஆயினும் பிள்ளையார்க்கு தீங்கேதும் நிகழாதது குறித்து ஆறுதல் அடைந்தார். அமணர் மடத்திற்கு வைத்த தீ மறைச்சிறுவர் ஆணையால் மன்னனை வெப்பு நோயாய் வருத்திய வேளையில் அதற்குரிய தீர்வு திருஞானசம்பந்தரேயென மதியுரை கூறினார். மன்னனும் அவர் ஆலோசனைப்படி திருஞானசம்பந்தரை அழைத்து வருமாறு பாண்டிமாதேவியாரையும், அவரையும் பணித்தான். பணிப்பின்படி பாண்டிமாதேவியார் சிவிகையில் வரக் குதிரையேறிச் சென்ற குலச்சிறையார் சம்பந்தப் பிள்ளையார் திருமடத்தை அடைந்தார். அங்கே ஞானத்தின் திருவுருவாய் நின்ற ஞானசம்பந்தரைக் கண்டார். கண்ட பொழுதே அமண்கொடியோரின் கொடுந்தொழில் நினைந்து கண்ணருவி பாய கைகுவித்திறைஞ்சி திருவடியில் வீழ்ந்து அழுதார். திருவடியைப் பற்றிய கைவிடாது புரண்டயரும் அவரைப் புகலியர்கோன் அருட்கையால் அணைத்தெடுத்துத் 'தீங்குளவோ' என வினவ நிகழ்ந்ததெல்லாம் மொழிந்தார். மொழிந்ததுகேட்ட புகலிவேந்தர் 'ஒன்றுக்கும் அஞ்சாதீர்' என்று அபயமளித்தார். அபயமளித்த அவர் சிவிகையில் ஏறிவர அவரை அரச மாளிகைக்கு அழைத்துச் சென்று அரசனது தலைமாட்டில் பொற்பீடத்தில் அமர்வித்தார். அவர் அமணர்களுடன் புரிந்த சுரவாதம், அனல்வாதம், புனல்வாதம் யாவினும் அமைச்சராம் பாங்குடன் ஒழுகினார். புனல்வாதத்தின்போது எதிரேறிச் சென்ற திருப்பாசுர ஏட்டைக் குதிரையேறிச் சென்று ஏடகத்திலே எடுத்துத் தலைமிசைஏந்தி வந்தார். வாதில் தோற்ற அமணரையெல்லாம் அவர் உடன்பட்டவாறே கழுவிலேற்றி முறை செய்யுமாறு அரசன் பணிக்க அப்பணிப்பின்படியே எண்ணாயிரம் அமணரைக் கழுவில் ஏற்றினார்.

திருநீறணிந்த பாண்டிய மன்னனுடனும் பாண்டிமாதேவியாருடனும் பரசமய கோளரியாரை அழைத்துச் சென்று ஆலவாய் அண்ணலைப் போற்றுதல் செய்தார். சிவம் வளர்க்கும் செம்மலார் ஆலவாயில் அமர்ந்திருந்த நாளெல்லாம் நாடொறும் சென்று அவரைப் போற்றி வேண்டும் பணியெல்லாம் செய்தார். காழியர்பெருமானைப் பாண்டி நாட்டுத் திருத் தலங்கள் பலவற்றுக்கும் அழைத்துச் சென்று ஈற்றில் தம் சொந்த ஊரான மணமேற்குடிக்கும் எழுந்தருளச் செய்தார். சீகாழி மன்னர் சோழ நாட்டுக்குப் புறப்படத் திருவுளம் பற்றியபோது அவரோடு கூடிச்செல்வதே குலச்சிறையாரின் ஆசையாக இருந்தது. சிரபுரச் செல்வரோ "இங்கு சிவநெறி போற்றியிருங்கள்" என்று பணித்தார். அவர் பணிவழியொழுகும் கருத்தால் பாண்டி நாட்டில் சிவநெறி விளங்குமாறு அரசகருமம் செய்து ஆலவாய் இறைவனின் அருட்தாள் சேர்ந்தார்.

திருத்தொண்டர் புராணசாரம்.

கோதில்புகழ் தருமணமேற்குடியார் கோவண்
குலச்சிறையார் தென்னர்குல அமைச்சர் குன்றா
மாதவர்கள் அடிபரவும்மரபார் பாண்டி
மாதேவியார் அருள்வான் பயிர்க்கு வேலி
காதல்மிகு கவுணியர்கோன் வாதில் தோற்ற
கையரை வைகைக்கரைசேர் கழுவில் ஏற்றும்
நீதியினார் ஆலவாய் நிமலர்ச் சேர்ந்த
நின்மலனார் என்மலங்கள் நீக்கினாரே.

நுண்பொருள்

1. அகந்தையின்றித் தாழ்மையாம் தன்மையினராய் வாழ்தல் (இந்நாயனார் பாண்டியன் முதன்மந்திரியாராயிருந்தனராயினும் சிவனடியாரது திருவடியில் வீழ்ந்து கிடக்கும்விருப்பினராயிருந்தனரென்பதை அவர்தம் வாழ்வில் பலவிடத்தும் காணக்கூடியதாயிருக்கிறது.)
2. அரசகாரியம் பார்க்கும் அதிகாரிகள், தம் அதிகாரத்தைத் துணைக்கொண்டு சைவநன்னெறி தழைத்தோங்கப் பாடுபடும் சிந்தையராயிருத்தல்.
3. அவ்வாறான சிந்தையுடையோர்க்குச் சமயாசாரியர் துணைநின்று அவர் சிந்தையில் நினைந்தது கைகூட அருள் செய்வர்.

பெரியபுராணம்

"வெற்றவே அடியார் அடிமிசை வீழும் விருப்பினன்
வெள்ளை நீறணியும்
கொற்றவன் தனக்கு மந்திரியாய குலச்சிறை
குலாவிநின் றேத்தும்
ஒற்றைவெள் விடையன் உம்பரார் தலைவன்
உலகினில் இயற்கையை ஒழித்திட்டு
அற்றவர்க்கு அற்றசிவன் உறைகின்ற
ஆலவாயாவதும் இதுவே".

- திருஞானசம்பந்தர்.

புன்னயத்து அருகந்தர் பொய் நீக்கவும்.
தென்னன் நாடு திருநீறு போற்றவும்
மன்னு காழியர் வள்ளலார் பொன்னடி
சென்னி சேர்த்து மகிழ்ந்த சிறப்பினார்.

- புராணம்.

குலச்சிறையாரது குருபூசை நாள் - ஆவணி அநுடம்

அன்றைய நாளில் ஆளுடைய பிள்ளையார் தம் ஆலவாய்ப்பதிகத்தில் குலச்சிறையாரைப் புகழ்ந்து பாடிய தேவாரங்களையும், குலச்சிறையார் புராணத்துப் பாக்களையும் பாடிப் பூசித்தல் சிறந்தது.

23. பெருமிழலைக் குறும்ப நாயனார்

"பெருமிழலைக் குறும்பர்க்கும் அடியேன்"

- திருத்தொண்டத்தொகை

சிறை நன் புனல் திருநாவலூராளி செழுங்கயிலைக்கு
இறை நன் கழல் நாளை எய்தும் இவனருள் போற்ற இன்றே
பிறை நன் முடியன் அடிஅடைவேன் என்று உடல் பிரிந்தான்
அறை நன் மலர்த்தார் மிழலைக்குறும்பன் எனும் நம்பியே.

- திருத்தொண்டத் திருவந்தாதி

சோழநாட்டின் உள்நாடாகிய மிழலைநாட்டிற் பெருமிழலை என்னும் ஊரின் தலைவராய் விளங்கியவர் மிழலைக்குறும்பனார் ஆவர். இவர் சிவனடியார்க்கான திருப்பணிகளை விருப்புடன் செய்பவர்; சிவபெருமான் திருவடிகளை நெஞ்சத்தாமரையில் இருத்தி வழிபாடு செய்பவர். இறைவனது திருவைந்தெழுத்தினை இடைவிடாது நினைந்து போற்றுபவர். இவ்வாறு சிவபத்தியிலும், சிவனடியார்பத்தியிலும் சிறந்து வாழும் நாளில் மெய்யடியார்கள் சித்தம் நிலவும் திருத்தொண்டத்தொகை பாடிய நம்பியாரூரரின் பெருமையைக் கேள்வியுற்றார். அவரைப் பணிந்து அவருடைய திருவடிகளை நினைந்து போற்றுதலை நியமமாகக் கொண்டார். நம்பியாரூரர் திருவடிகளைக் கையால் தொழுது வாயால்வாழ்த்தி மனத்தால் நினைக்குங் கடப்பாட்டினால் இதுவே சிவபெருமான் திருவடிகளை அடைவதற்குரிய நெறியாகும் என்று அன்பினால் மேற்கொண்டார். நம்பியாரூரர் திருப்பெயரினை நாளும் நவின்ற நலத்தால் அணிமா முதலிய எண்வகைச் சித்திகளும் கைவரப்பெற்றார்.

இத்தகைய நியமங்களையுடையராய்ப் பெருமிழலைக்குறும்பர் வாழ்ந்துவரும் நாளில், சுந்தரமூர்த்தி நாயனார் திருவஞ்சைக்களத்திற் சென்று திருப்பதிகம் பாடஅவருக்குச் சிவபெருமான் அருளால் வடகயிலையை அடையும் பேறு மறுநாள் கிடைக்க இருப்பதனைத் தம்முடைய ஊரில் இருந்து கொண்டே யோகக் காட்சியால் அறிந்து கொண்டார். "திருநாவலூரர் திருக்கயிலை நாளை எய்த நான்

அவரைப்பிரிந்து கண்ணிற் கரியமணி கழிய வாழ்வார் போல வாழேன்" என்று எண்ணி 'இன்றே யோகத்தால் சிவன் தாள் சென்றடைவேன்' என்று சொல்லி, நாற்கரணங்களாலும் ஒரு நெறிப்பட்டு நல்லறிவு மேற்கொண்டு, பிரமநாடியின் வழியே கருத்தைச் செலுத்த, யோக முயற்சியினாலே பிரமரந்திரம் திறப்ப, உடலினின்றும் பிரிந்து திருக்கயிலையில் வீற்றிருந்து அருளும் சிவபெருமானது திருவடி நீழலை அடைந்தார்.

திருத்தொண்டர் புராணசாரம்

கொண்டல்பணி வளர்சோலை மிழலைநாட்டுக்
கோதில்புகழ்ப் பெருமிழலைக் குறும்பனார்சீர்
அண்டர்பிரான் அடியவர்க்கு அடியாராகும்
ஆதரவால் அணுக்கவன் தொண்டர்க்காளாய்
மண்தொழும் எண்டருசித்தி வாய்த்துள்ளார் தாம்
வன்றொண்டர் வடகயிலை மருவுநாள்முன்
எண்டிகழும் மறைமூல நெறியூடேகி
இலங்கொளிசேர் வடகயிலை எய்தினாரே.

நுண்பொருள்

1) நம்பியாரூரரின் நாமம் நவிலும் நலம், அட்டமா சித்திகளையும் அருளவல்லது.
2) அரன் அடிசேர்தலே பெரும்பேறென்பர். அரனடிசேர்தல் அடியரைப்-போற்றுதற்கே எனும் அற்புதத்தை நம்பி பாதத்தை வழிபடும் ஆசையினாலே நம்பன் பாதத்தை அடைய நாடிய பெருமிழலைக்குறும்பரின் பத்தித்திறம் காட்டுகிறது.
3) நம்பியிடத்துக் கொண்ட பத்தி, நம்பி கைலைசேர்தற்கு முன்னரே, நம்பி-யின் அடியாரைக் கைலைசேர்த்தது!

மண்ணில் திகழும் திருநாவலூரில் வந்த வன்றொண்டர்
நண்ணற் கரிய திருக்கயிலை நாளை எய்த நான்பிரிந்து
கண்ணிற் கரிய மணி கழிய வாழ்வார்போல வாழேனென்று
எண்ணிச் சிவன்தாள் இன்றே சென்றடைவன் யோகத்தாலென்பார்.

- பெரிய புராணம்

பெருமிழலைக்குறும்பர் குருபூசைநாள் - ஆடிச்சித்திரை

24. காரைக்காலம்மையார்

"பெருமிழலைக் குறும்பற்கும் பேயார்க்கு மடியேன்"

- திருத்தொண்டத் தொகை

"நம்பன் திருமலை நான் மிதியேனென்று தாளிரண்டும்
உம்பர் மிசைத்தலை யால்நடந்தேறஉமை நகலுஞ்
செம்பொன் உருவன் என் அம்மை எனப்பெற்றவள் செழுந்தேன்
கொம்பினுகு காரைக்காலினின் மேயகுலதனமே"

- திருத்தொண்டர் திருவந்தாதி.

சோழநாட்டில் கடற்றுறைப் பட்டினமாய்த் திகழும் காரைக்கால் என்னும் வளம்பதியிலே தனதத்தன் என்ற பெயருடைய வணிகனொருவன் வாழ்ந்திருந்தான். பெருஞ்செல்வமுடைய அவ்வணிகனுக்குத் திருமகளையொத்த பேரழகையுடைய பெண்மகவொன்று பிறந்தது. தவப்பயனாகத் தோன்றிய அக்குழந்தைக்குப் புனிதவதி எனப் பெயர் இட்டார்கள். புனிதவதியார் பிள்ளைமைப் பருவத்திலேயே சிவபெருமான் திருவடிகளுக்குத் தொண்டுபட்டொழுகும் அன்புரிமையுடையராயும், சிவனடியார்களைக் கண்டால் சிவனெனவே தெளிந்து, வழிபடுந்திறம் வாய்க்கப் பெற்றவராயும் இருந்தார். அவர் அழகின் கொழுந்தென வளர்ந்து திருமணப் பருவமடைந்தார்.

நாகபட்டினத்திலே வாழும் நிதிபதியென்ற வணிகன் தன் மகன் பரமதத்தனுக்குப் புனிதவதியாரை மணஞ் செய்விக்க எண்ணி முதியோர் சிலரைத் தனதத்தனாரிடம் அனுப்பினான். வந்த மூதறிவோரை வரவேற்று உபசரித்த தனதத்தரும் தன்மகளைப் பரமதத்தனுக்குத் திருமணஞ் செய்து தருவதாக இசைந்தார். இருமுதுகுரவர் இசைவினால் திருமணம் காரைக்காலிற் சிறப்பாக நிறைவேறியது. தனதத்தருக்குப் புனிதவதியாரைத் தவிர வேறு பிள்ளைப் பேறில்லாமையால் அவர் தன் மகளையும் மருமகனையும் நாகப்பட்டினத்திற்கு அனுப்பமனமின்றி அவர்களிருவரும் காரைக்காற் பதியிலேயே தங்கியிருந்து மனையறம் நிகழ்த்துவதற்கு வேண்டிய தனிவீடும் பெரும்பொருளும் தந்து தன்னூரிலே இருக்கச் செய்தார்.

புனிதவதியாருடைய கணவனாகிய பரமதத்தன், தன் மாமன் தந்த பெரும்பொருளை வணிகத்தின் முதலாகக் கொண்டு அதனைப் பன்மடங்காகப் பெருக்கி வணிகத் துறையில் மேம்படுவானாயினன். அவன் மனைவியார் புனிதவதியார், எவ்வுயிர்க்கும் தாயும் தந்தையுமாகி, இறைவன் திருவடிகளிலே வைத்த அன்பு மேன்மேற் பெருகி முதிரச் சிவனடியார்களுக்குத் திருவமுதளித்தும், வேண்டும் பொருள் கொடுத்தும் இல்லறத்திற்குத் தக்க நற்குண நற்செய்கைகளையுடையவராய்த் தமக்கும் தன் உயிர்த்துணைவனாகிய கணவனுக்கும் புகழ் பெருக மனையறம் நிகழ்த்துவாராயினர்.

இவ்வாறு நிகழும் நாட்களில் ஒரு நாள் பரமதத்தனைக் காண வந்தவர்களிற் சிலர் அவனுக்கு இரண்டு மாங்கனிகளைக் கொடுத்தார்கள். அக்கனிகளைப் பெற்று அவர்கள் வேண்டும் காரியத்தை முடித்தனுப்பிய பரமதத்தன் மாங்கனிகள் இரண்டையும் தன் வீட்டிற்கு அனுப்பி வைத்தான். புனிதவதியார் அப்பழங்களை வாங்கி வைத்தார். அவ்வேளை சிவனடியாரொருவர் பசியால் வருந்தி இளைப்புற்றவராய் அவ்வீட்டிற்குச் சென்றார். அடியவருடைய தளர்வைக் கண்ட புனிதவதியார், அவர்க்கு உணவளிக்க எண்ணினார். அந்நேரத்திலே திருவமுதுமட்டும் சமைக்கப் பெற்றிருந்தது. கறியமுது பாகம் பண்ணப்பெறவில்லை. இந்நிலையிற் சிவனடியவரே பெறுதற்கரிய விருந்தினராய் வந்தபொழுது இதனிலும் பெறத்தக்க பேறு பிறிதொன்றில்லையெனத் தெளிந்த பேரறிவினராகிய புனிதவதியார், தம் கணவன் அனுப்பிய மாங்கனிகள் இரண்டினுள் ஒன்றைக் கொண்டு வந்து திருவமுதுடன் படைத்து அடியவரை உண்ணச் செய்தார். பசி தீர்ந்த அடியவர் புனிதவதியாரது அமுதூட்டும் அன்பின் திறத்தையுணர்ந்து உளமகிழ்ந்து போயினார்.

பரமதத்தன் நண்பகலில் வீட்டிற்கு வந்து வழக்கம்போல் நீராடி உணவுண்ண அமர்ந்தான். புனிதவதியார் தம் கணவனுக்குத் திருவமுது, கறியமுது முதலியவற்றைப் படைத்து அவன் அனுப்பிய மாங்கனிகள் இரண்டில் அடியார்க்களித்தது போக எஞ்சியிருந்த மற்றொரு கனியைக் கொண்டு வந்து வைத்து உண்ணச் செய்தார். அப்பழத்தினை அருந்திய பரமதத்தன், அதன் இனிய சுவையில்

அடங்காத ஆசையுடையவனாகி, இதனை யொத்த சுவையும் மணமு-முடைய மற்றொரு பழம் உளது. அதனையும் கொண்டுவந்து வைப்பாயாக' எனப் பணித்தான். கணவனது சொல்வழியொழுகும் கற்பிற்சிறந்த புனிதவதியார், கணவனாற் குறிப்பிடப்படும் மாங்கனியைத் தாம் முன்னமே அடியார்க்கு அளித்திருந்தும் அதனை எடுத்துக்கொண்டு வரச்செல்பவர்போல் மனையினுள்ளே சென்றார். ஆயினும் மனை-யிலே பழத்துக்கு யாது செய்வார்? ஒரு புறம் நின்று வருந்தினார்; அன்புடையார்க்குத் துன்பம் வந்துற்ற காலத்து அத்துன்பத்தைத் துடைத்து வேண்டுவன புரிந்துதவும் சிவபெருமானுடைய திருவ-டிகளைத் தம்மனதுட் சிந்தித்துப் போற்றினார். அப்போது இறைவனது திருவருளால் அவர் கையிலே சுவைமிக்கதொரு மாங்கனி வந்தமர்ந்தது. அதனைக் கொணர்ந்து கணவனுடைய உண் கலத்திலே மகிழ்ச்சியுடன் படைத்தார். அதனையுண்ட பரமதத்தன் அதன் சுவை தேவரமிழ்தினும் மேற்பட்டமையுணர்ந்து, 'இது முன் நான் தந்த மாங்கனியன்று. இது மூவுலங்களிலும் பெறுதற்கரியது. இதனை நீ வேறு எங்கே பெற்றாய்' எனத் தம் மனைவியாரை நோக்கி வினவினான். அதனைக் கேட்ட புனிதவதியார் அருளேயுருவாகிய இறைவனது திருவருட் செயல் பிறர்க்கு விளங்க எடுத்துரைக்கும் எளிமையதன்று என்பது கருதி அதனைத் தம் கணவனுக்குச் சொல்லமாட்டாமலும், கணவனது சொல்வழியொழுகாமை நல்வழியன்று என்னுங் கருத்தினால் சொல்லாமல் விடுதற்கியலாமலும், சங்கடப்படுவாராயினர். முடிவில் நடந்தபடி சொல்லு-வதே கடனென்று துணிந்த புனிதவதியார். நிகழ்ந்ததை நிகழ்ந்தபடி எடுத்துரைத்தார். அது கேட்ட பரமதத்தன், புனிதவதியார் குறித்த திருவருள் நிகழ்ச்சியைத் தெரிந்து தெளிதற்குரிய ஆற்றலில்லாதவ-னாதலால் 'இந்தக் கனி சிவபெருமானுடைய திருவருளினாலே உனக்குக் கிடைத்ததாயின். இது போன்ற இன்னுமொரு கனியை அவனருளால் அழைத்து அளிப்பாயாக' எனக் கூறினான். புனிதவதியார் அவ்விடத்தை-விட்டுத் தனியிடத்திற் சென்று நின்று சிவபெருமானைஇறைஞ்சி 'இன்னம் ஒரு பழத்தை இப்பொழுதே தந்தருளாதொழியின் ஈசனருள் என்னும் உண்மை மறுக்கப்பட்டு அடியேனுடைய வார்த்தை பொய்யாய்விடும்' என விண்ணப்பஞ் செய்தார். அடியார்க்கெளிய பெருமானாகிய இறைவனது திருவருளால் அவர் கையகத்தே மற்றொரு மாங்கனியும் வந்திருந்தது. அதனைக் கணவன் கையிற்கொடுக்க,

அவனும் வியப்புற்று வாங்கினான். அக் கனி சிறிது நேரத்திற்குள் அவன் கையினின்று மறைந்து விட்டது. அதுகண்டு அஞ்சிய பரமதத்தன் மனத்தடுமாற்ற மெய்தித் தன் மனைவியாரை வேறொரு தெய்வமென்றே கருதினான். அவரைப் பிரிந்து வாழவேண்டுமென்னுந் துணிவுடையவனானான். தன் கருத்தினை பிறரொருவர்க்கும் வெளிப்படுத்தாமல் மனைவியென்னும் உறவுத் தொடர்பின்றியொழுகினான்.

இக்கருத்துடைய பரமதத்தன் கடல்கடந்து வணிகஞ் செய்து வருவேன் எனச் சுற்றத்தார்க்குச் சொல்லி, அவர்கள் அமைத்துத் தந்த மரக்கலத்தில் வெளிநாட்டார் விரும்பி வாங்கும் அரிய பண்டங்களை நிரம்ப ஏற்றிக்கொண்டு கடல்கடந்து வெளிநாடு சென்றான். சில நாள் அங்கிருந்து பெரும் பொருளீட்டிய பின்பு மீண்டும் அம்மரக்கலத்திலேறிப் பாண்டி நாட்டிலுள்ள துறைமுகப் பட்டினமொன்றை அடைந்தான். அங்கு ஓர் வணிகன் மகளை மணந்து செல்வச் சிறப்புடன் வாழ்ந்தான். இரண்டாம் முறையாக மணந்து கொண்ட அம்மனைவி வயிற்றில் ஒரு பெண்குழந்தை பிறந்தது. அம்மகவுக்குத் தான் தெய்வமெனக் கருதி விலகிய முதல் மனைவியாரது பெயராகிய புனிதவதியார் என்ற பெயரையே இட்டு வளர்த்து வந்தான்.

இவ்வாறாகப் புனிதவதியாருடைய சுற்றத்தார்கள் வணிகத்தின் பொருட்டுக் கடல்கடந்து சென்ற பரமதத்தன் பாண்டி நாட்டிலேயுள்ள பட்டினமொன்றில் வாழ்கின்றானெனக் கேள்வியுற்றுச் சிலரையனுப்பி அவனுடைய நிலையுணர்ந்து வருத்தமுற்றார்கள். புனிதவதியாரை அவனிடம் கொண்டுபோய்விட வேண்டும் என நினைத்து அவரைச் சிவிகையிலேற்றிக்கொண்டு அவனிருக்கின்ற நகரத்தை அணுகினார்கள். அவர்களது வருகையை அறிந்த பரமதத்தன் அச்சமுடையவனாகித் தன்னுடைய இரண்டாம் மனைவியோடும் மகளோடும் புனிதவதியாரையடைந்து 'அடியேன் உம்முடைய அருளால் வாழ்கின்றேன். இவ்விளங்குழந்தைக்கும் உம்முடைய பெயரையே இட்டேன்' எனச் சொல்லி அவருடைய திருவடிகளில் விழுந்து வணங்கினான். இதுகண்ட புனிதவதியார் தன்னுடைய சுற்றத்தார் பக்கம் அச்சத்தோடு ஒதுங்கி நின்றார். அந்நிலையிற் சுற்றத்தார்கள் நாணமுற்றுப் பரமதத்தனை நோக்கி 'நீ உன் மனைவியை வணங்குவது எது கருதி?' என வினவினார்கள். அது கேட்ட பரமதத்தன் இவர் நம்போன்ற மக்கட்

பிறப்பினரல்லர். கருதியது அளிக்க வல்ல தெய்வம். இவர் தெய்வம் என்பதை அறிந்து இவருடன் வாழ அஞ்சி விலகினேன். பின்பு என்னாற் பெறப்பட்ட இப் பெண்மகவுக்கு இவர்தம் அருமைத் திருப்பெயரையிட்டுப் போற்றியுள்ளேன். ஆதலால் நீங்களும் இவருடைய திருவடிகளைப் போற்றி வழிபடுங்கள்' என்றான்.

சுற்றத்தார்கள் இது என்ன வியப்பு எனத் திகைத்து நின்றார்கள். கணவன் சொல்லிய வார்த்தையைக் கேட்ட புனிதவதியார், சிவபெருமானுடைய திருவடிகளை ஒன்றிய சிந்தையினாற் போற்றி 'இறைவ, என் கணவனாகிய இவன் கருதிய கொள்கை இதுவாகும். இனி இங்கு இவன் பொருட்டுச் சுமந்துள்ள அழகுமிக்க தசைப்பொதியைக் கழித்து நீக்கி, சொல்லும் மனமுங்கடந்து அப்பாற்பட்டுத் திகழுந் தூயோனாகிய உன் திருவடிகளைச் சூழ்ந்து போற்ற வல்ல உன் கணங்களுள் ஒன்றாகிய பேய் வடிவினை தந்தருளல் வேண்டும்' எனப் பரமர்தாள் பரவி நின்றார். அந்நிலையில் அம்பலத்து ஆடல்புரியும் அண்ணலார் திருவருளால் வேண்டிய வேண்டியாங்கெய்தும் தவச்செல்வியாராகிய புனிதவதியார், தம் உடம்பின் ஊன்பொதிந்த தசைப் பொதியினை உதறிவிட்டு, எலும்புடம்பே கொண்டு, வானுலகத்தவரும் மண்ணுலகத்தவரும் வணங்கிப் போற்றும் பேய்வடிவம் பெற்று விளங்கினார். அவ்வடிவத்தைக் கண்டு அஞ்சிய சுற்றத்தார்கள் அவரை வணங்கி அகன்று போனார்கள்.

பின்னர் புனிதவதியார், இறைவன் திருவருளாலே தம்முள்ளத்துத் தோன்றி யெழுந்த சிவஞானத்தின் ஒருமைப்பாட்டினால் **அற்புதத் திருவந்தாதி**யெனும் பிரபந்தத்தைப் பாடிப் போற்றிச் சிவபெருமான் வீற்றிருந்து அருள் புரியுஞ் சிறப்பமைந்த திருக்கயிலையையடைவதற்கு இறைவனது திருவருள் துணை நின்றமையால் அத்திருமலையை வழிபடுவதற்கு வடக்கு நோக்கிப் புறப்பட்டார். புனிதவதியாரது பேய் வடிவத்தைக் கண்ட மக்கள், அவர் பேய் வடிவங்கொண்ட கருத்தை உள்ளபடி சொல்லக் கேட்டு வியப்பும் அச்சமும் கொண்டு ஓடினார்கள். அதுகண்ட புனிதவதியார் அண்டங்களெல்லாவற்றுக்குந் தலைவனாகிய சிவபெருமான் என்னை அறிந்து அருள்புரிவாராயின் உண்மையுணராத இவ்வுலகத்தார்களுக்கு யான் எவ்வுருவாய்த் தோன்றினாலென்ன' எனக் கூறி வடதிசைத் தேசமெல்லாம் மனத்தினும் வேகமா-

கச் சென்றார். இறைவன் எழுந்தருளிய திருக்கயிலையில் அருகு சென்ற அவர் தூய்மையுடைய இத்திருமலையைத் தம் கால்களால் மிதித்தேறுதல் கூடாதெனக் கருதித் தலையினால் நடந்தார். இங்ஙனம் தலையினால் நடந்து திருக்கயிலை மலையின்மேல் ஏறும்பொழுது இறைவனது திருவருள் நோக்கம் அவர்மேற் பொருந்தியது. மேலான சுகசொரூபமாகிய சிவபோகத்தைத் தன்னடியார்களுக்கு அளித்தருளும் அருட்சத்தியாகிய மலைமகளார் புனிதவதியாரது அன்பின் திறத்தைக் கண்டு வியந்தருளி இறைவனை நோக்கி 'எம்பெருமானே, தலையினால் நடந்து இம்மலையின்மேல் ஏறிவரும் எலும்புடம்பின் அன்பின்திறம் என்ன?' என வினவினார். அது கேட்ட சிவபெருமான் 'உமையே இங்கு வரும் இவள் நம்மை அன்பினாற் பேணும் அம்மையாவாள். இப்பெருமை பொருந்திய பேய்வடிவத்தையும் நம்மிடம் தானாகவே வேண்டிப் பெற்றனள்' என்று சொல்லி அருகு வந்தணைந்த புனிதவதியாரை நோக்கி 'அம்மையே' என்னும் செம்மொழியால் உலகெல்லாம் உய்ய அழைத்தருளினார். அருட்கடலாகிய இறைவன் அம்மையே யென்று அழைக்கக்கேட்ட புனிதவதியார் 'அப்பா' என்று சொல்லிக்கொண்டு அவருடைய திருவடிகளில் வீழ்ந்து வணங்கினார். இறைவன் அவரை நோக்கி 'நம்மிடம் இங்கு வந்து நீ வேண்டிப் பெறக் கருதியது யாது?' என வினவக் காரைக்காலம்மையாரும் இறைவனைப் பணிந்து "அருட்கடலாகிய பெருமானே! உன் திருவடிக்கண் குறையாத பேரன்பு என்பாலமைதல் வேண்டும். எனது பிறவி நோய் ஒழிதல் வேண்டும். மீண்டும் வினைவயத்தால் எனக்குப் பிறப்பு நேருமாயின் உன்னை மறவாது போற்றும் மெய்யுணர்வினை அடியேற்கு வழங்கியருளுதல் வேண்டும். நீ திருநடனஞ் செய்யும்பொழுது யான் உனது திருவடிக்கீழ் இன்புற்றிருத்தல் வேண்டும்.' எனவேண்டிப் போற்றினார். அம்மையார் வேண்டினவெல்லாம் அவர்க்குக் கூடுமாறு அருள்செய்த இறைவன், அம்மையாரை நோக்கித் 'தென்னாட்டிற் சிறப்புற்று விளங்குந் திருவாலங்காட்டில் யாம் ஆடியருளுந் திருக்கூத்தினைக் கண்டு நீ என்றும் எம்மைப் பாடிப் போற்றியிருப்பாயாக' எனப் பணித்தருளினார். அம்மையார் கயிலைப் பெருமானிடம் விடைபெற்றுத் தென்னாடடைந்து திருவாலங் காட்டிற்குத் தலையால் நடந்து சென்றார். அண்டமுற நிமிர்ந்தாடும் ஆலங்காட்டிறைவனது திருக்கோலத்தைக் கண்டு உளமுருகி வழிபட்டுக் **'கொங்கைதிரங்கி'** யென்ற முதற்குறிப்புடைய

மூத்த திருப்பதிகத்தையும் 'எட்டியிலவம்' என்ற முதற்குறிப்புடைய திருப்பதிகத்தையும் பாடிப் போற்றினார். கண்ணுதற் பெருமான் இனிய தமிழால் அம்மையேயென அழைக்கப்பெற்ற காரைக்காலம்மையார் ஆலங்காட்டடிகளது தூக்கிய திருவடிக்கீழ் என்றும் நீங்காதுறைகின்றார்.

திருத்தொண்டர் புராணசாரம்.

தங்குபுகழ்க் காரைக்கால் வணிகன் மிக்க தனதத்தன்தரும் புனிதவதியார்மாவின் செங்கனிகள் திருவருளாலமைப்பக் கண்டு திகழ்கணவன் அதிசயித்துத் தேச நீங்க அங்கவுட லிழந்துமுடி நடையா லேறியம்மையே யெனநாதனப்பா வென்று பொங்குவட கயிலை பணிந்தாலங் காட்டிற் புனிதன்நடம் அனவரதம் போற்றினாரே.

நுண்பொருள்

1. மங்கலமாம் மனை வாழ்க்கை வாழும் மகளிர் மனைத்தக்கமாண்புடன், சிவபத்தியையும், சிவனடியார் பத்தியையும் சிந்தையிற் கொண்டிருத்தல் சிறப்பு.
2. சிவபத்தியும், மாகேசுரபூசையும் அற்புதங்கள் ஆற்றவல்லன.
3. மகளிர் விதிவசத்தாற் கணவனைப் பிரிந்து வாழ நேருமிடத்து உடல்-முகை உதறி எறிந்துவிட்டு இறைவனையே நினைந்திருக்கும் ஒருமை மனத்தினராய் வாழ்தல் தக்கது..
4. உமையம்மையாரும் வியக்கும் வண்ணம் இறைவனைப் பேணும் மாதரை இறைவன் 'அம்மையே' என்று அழைத்துச் சிறப்பித்து வேண்டும் வரமெல்லாம் ஈந்தருளுவார்.
5. இறவாத இன்ப அன்பு, பிறவாமை, பிறப்புண்டேல் இறைவனை மறவாதி-ருத்தல், மகிழ்ந்து பாடி தூக்கிய பாதத்தின் கீழ் அமர்ந்திருத்தல் என்னும் இவையே உத்தமமான பிரார்த்தனைகள்.

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும்இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்துபாடி
அறவாநீ ஆடும்போதுன் அடியின் கீழிருக்க என்றார்.

– புராணம்

ஒன்றே நினைந்திருந்தேன் ஒன்றே துணிந்தொழிந்தேன்
ஒன்றே என்உள்ளத்தின் உள்ளடைந்தேன் – ஒன்றேகாண்
கங்கையான் திங்கட்கதிர் முடியான் பொங்கொளிசேர்
அங்கையாற் காளாம் அது. – அற்புதத்திருவந்தாதி

கரைக்காலம்மையார் குருபூசை நாள்: பங்குனிச் சுவாதி. அன்று இரு மாங்கனிகளும் நிவேதித்து அம்மையைப் பூசித்தல் நன்று.

25. அப்பூதியடிகள் நாயனார்

"ஒரு நம்பி அப்பூதி அடியார்க்கும் அடியேன்"

- திருத்தொண்டத் தொகை

"தனமாவது திருநாவுக்கரசின் சரணமென்னா
மனமார் புனற்பந்தர் வாழ்த்தி வைத்து ஆங்கவன் வண்டமிழ்க்கே
இனமாத் தனது பெயரிடப் பெற்றவன் எங்கள் பிரான்
அனமார் வயல் திங்களூரினில் வேதியன் அப்பூதியே"

- திருத்தொண்டர் திருவந்தாதி.

அப்பூதியார் சோழ நாட்டுத் திங்களூரிலே அந்தணர் குலத்தில் தோன்றினார். எல்லையில்லாத தவத்தின் மிக்கவராகிய அவர், தாண்டவம் புரிய வல்ல தம்பிரானுக்கு அன்பர். திருநாவுக்கரசரைக் காணுதற்கு முன்னமே அவருடைய திருவடிகளைத் துணையாகக் கொண்டு அவரைக் காணவேண்டும் என்னும் ஆர்வம் மேற்பட உள்ளம் கலந்த அன்பினராயிருந்தார். களவு, பொய், காமம், கோபம் முதலிய குற்ற ங்களைக் கழைந்து வாழ்ந்த அவர் தம்மனையிலுள்ள அளவைகள், நிறைகோல், மக்கள், பசு, எருமை மற்றும் உள்ள பொருள்களெல்லா-வற்றையும் திருநாவுக்கரசரின் பெயரிட்டழைத்தார். திருநாவுக்கரசர் இறைவனிடம் கொண்டுள்ள அடிமைத் திறமும், அவர்க்கு இறைவன் அருளும் பெருங்கருணைத் திறமும் ஆகியவற்றை அறிந்தோர் சொல்லக்கேட்டுத் திருநாவுக்கரசர் திருப்பெயரால் திருமடங்கள், தண்ணீர்ப் பந்தர்கள் முதலாகவுள்ள அளவில்லாத நல்லறங்கள் பல செய்து வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து வந்தார். அவ்வாறு வாழ்ந்து வரும் நாளில் ஒரு நாள் திருநாவுக்கரசர் திருப்பழனம் என்னும் திருத்தலத்தை வணங்கிக்கொண்டு பிறதலங்களையும் வணங்கும் பொருட்டுத் திங்களூரின் அருகே வந்தருளினார். வரும் வழியிற் தம் பெயரால் தண்ணீர்ப்பந்தல் இருப்பதைக் கண்டு அதனை அமைத்தவர் யார்? என அங்குள்ளவர்களைக் கேட்டறிந்து அப்பூதியடிகளது திருமனையின் வாயிலை அடைந்தார். உள்ளிருந்த அப்பூதியார், சிவனடியாரொருவர் வாயிலில் வந்துள்ளார் என்று அறிந்து விரைந்து

சென்று அவர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினார். திருநாவுக்கரசர் அப்பூதியடிகளை நோக்கி 'வழிக்கரையில் நீர் வைத்த தண்ணீர்ப்-பந்தரைக் கண்டும், அத்தகைய அறம்பிறவும் கேட்டும் உம்மைக் காண வந்தோம்.. சிவனடியார் பொருட்டு நீர் வைத்த தண்ணீர்ப்பந்தரில் உம்முடைய பெயர் எழுதாது வேறொரு பெயர் எழுத வேண்டிய காரணம் யாது?' என வினவினார். அதுகேட்ட அப்பூதியார் 'நீர் நன்மொழியினைக் கூறவில்லை. நாணமில்லாத கொடியோராகிய அமணர்களுடன் கூடிய மன்னன் செய்த கொடுமைகளை யெல்லாம் திருத்தொண்டின் உறைப்பாலே வென்றவர்தம் திருப்பேரோ **வேறொரு பேர்?**' என்று கோபித்து 'சிவனடித் தொண்டினாலே இம்மையிலும் பிழைக்கலாம் என்னும் உண்மையினை என்போல்வாரும் தெளியும் பொருட்டு அருள்புரிந்த திருநாவுக்கரசர் திருப்பெயரை யான் எழுத இந்தக் கொடுஞ்சொல்லைக் கேட்கும்படி கூறினீர். கல்லே மிதவையா-கக் கொண்டு கடலைக்கடந்த அப்பெருந்தகையாரது பெருமையினை இவ்வுலகில் அறியாதார் யார்? மங்கலமாம் சிவவேடத்துடன் நின்று இவ்வாறு பேசும் நீர் எங்குறைவீர்? நீர் தாம் யார்?' என்றார். அப்பூதியாரது அன்பின் பெருமையறிந்த திருநாவுக்கரசர், 'புறச்சமயச் சூழலில் நின்றும் ஏற, அருளும் பெருஞ்சூலையினால் ஆட்கொள்ள அடைந்துய்ந்த உணர்வில்லாத சிறுமையேன் யான்' என்றார். அதுகேட்ட அப்பூதியார், இரு கைகளும் தலைமேற்குவிய, கண்ணீர் சொரிய, உரைதடுமாற நிலமிசை வீழ்ந்து திருசாவுக்கரசரின் திருவடித்தாமரை-களைப் பூண்டார். அப்பரடிகள் அவரை எதிர்வணங்கி எடுத்தருளினார். அப்பூதியடிகள் வறியோர் பெருஞ்செல்வம் பெற்றாற் போன்று மகிழ்ந்து ஆடிப்பாடினார்; வீட்டினுள்ளே சென்று மனைவி மக்கள் முதலிய சுற்றத்தார்க்குத் திருநாவுக்கரசரின் வருகையுரைத்து அவரை உள்ளே அழைத்துச் சென்று அவர் திருவடிகளை விளக்கி விளக்கிய திருவ-டிநீரை உள்ளும் பருகிப் புறமும்தெளித்து உளமகிழ்ந்தார்; தேசமுய்ய வந்த திருநாவுக்கரசரை தம் மனையில் திருவமுது செய்தருள வேண்ட அரசரும் அதற்கு இசைந்தார். அப்பூதியாரும் அவர் தம் மனைவியாரும் அரசர் அமுது செய்யும் பேறுபெற்றோம் என்னும் உவகையுடன் திருவமுதமைத்து மூத்த திருநாவுக்கரசரை வாழைக்

குருத்தரிந்து வரும் பொருட்டு அனுப்பினர். அவர் விரைந்து தோட்டத்துட் சென்று இலையினை அரியும் பொழுது, ஒரு பாம்பு அவரைத் தீண்டி, அவரது கையிலே சுற்றிக்கொண்டது. மூத்த திருநாவுக்கரசு அதனை உதறி வீழ்த்திவிட்டு விடத்தின் வேகம் தலைக்கேறுவதன் முன் விரைந்து ஓடி வாழையிலையினைத் தாயிடம் தந்து கீழே வீழ்ந்து இறந்தார். அடியார் திருவமுது செய்தற்குத் தடையாகும் என்றெண்ணிய பெற்றோர், மைந்தனது உடம்பினை வீட்டுப்புறத்தில் பாயில் மறைத்து வைத்துவிட்டுத் திருநாவுக்கரசரை அமுது செய்ய அழைத்தனர். அரசரும் இசைந்து ஆசனத்திலமர்ந்து திருநீறளிக்கும் பொழுது, மூத்த திருநாவுக்கரசரைக் காணாது 'அவனை அழையும்" என்றார். அது கேட்ட அப்பூதியார் 'அவன் இங்கு இப்போது உதவான்' என்றார். அந்நிலையில் இறைவனருளால் நாவுக்கரசர் திருவுள்ளத்தே ஒரு தடுமாற்றம் தோன்ற, அரசர் அப்பூதியாரை நோக்கி, 'அவன் ஏன் வரான்? உண்மையைச் சொல்வீராக' என்றார். அவரும் அஞ்சி நடுங்கி நிகழ்ந்தது கூறினார். அது கேட்ட நாவுக்கரசர் 'நன்று நீ புரிந்த வண்ணம், யார் இத்தன்மை செய்வார்?' என்று எழுந்து சென்று மூத்த திருநாவுக்கரசரின் உயிர் நீங்கிய உடம்பினை நோக்கி இறைவன் அருள்புரியும் வண்ணம் **'ஒன்று கொலாம்'** என்னும் திருப்பதிகம் பாடி விடந் தீர்த்தருளினார். அந்நிலையில் உறக்கம் நீங்கி எழுபவனைப் போன்று உயிர் பெற்றெழுந்த மூத்த திருநாவுக்கரசு, திருநாவுக்கரசு நாயனார் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினான். திருநாவுக்கரசர் திருநீறளித்தருளினார். அப்பூதி நாயனாரும் அவர் மனைவியாரும் தம் மைந்தன் உயிர்பெற்றெழுந்தமை குறித்து மகிழாமல் நாயனார் திருவமுது செய்தருளத் தாழ்த்தமை குறித்து மனம் வருந்தினர். அவர்களது வருத்தமறிந்து நாவுக்கரசர் வீட்டினுட் சென்று அப்பூதியாரோடும் அவர் தம் மக்களுடனும் ஒருங்கமர்ந்து திருவமுது செய்தருளினார். திங்களூரில் சிலநாள் தங்கிய திருநாவுக்கரசு சுவாமிகள். திருப்பழனப் பெருமானை வழிபட்டுப் பாடிய திருப்பதிகத்தில் அப்பூதியடிகளைச் சிறப்பித்துப் போற்றினார். அப்பூதியடிகள் திருநாவுக்கரசர் திருப்பெயரையே ஏத்தி, அவர் திருவடிகளே எல்லாப் பொருளுமாம் எனக்கொண்டு போற்றி தில்லைமன்றுள் ஆடும் திருவடிகளை அடைந்தார்.

அப்பூதியடிகள் நாயனார்

திருத்தொண்டர் புராணசாரம்.

அந்தமில் நல்திங்களூர் வரும் அப்பூதி
அருமறையோர் திருநாவுக்கரசின் நாமம்
பந்தரிடை எழுதக்கண்டு அரசும் எய்தப்
பணிந்து பரிகலம் நேடிப் படப்பை சேர்ந்த
மைந்தனுயிர் உயர்கதலி இலைமேல் துஞ்சும்
வாளரவு கவர உடல் மறைத்தல்கேட்டுச்
சிந்தைமகிழ்ந்து உயர்பதிக மருந்தால் தீர்த்து
திருவமுது செயவருளைச் சேர்ந்துளாரே.

நுண்பொருள்

1. சிவநாமம் போலச் சமயகுரவர் நாமமும் உபாசனைக்குரியது
2. சமயகுரவரைக் காணாமலேயே பக்தி செய்தல் பாக்கியம். அது அப்பூதியடிகளுக்கு இடம்அகன்றமையால் நிகழ்ந்தது. அதுபோல நம்மவர்க்குக் காலமகன்றமையால் நிகழவல்லது.
3. அன்பர் பணிசெய்வோர் மைந்தர் மரணத்தையும் பொருட்படுத்தார்.
4. நம் சைவகுரவர் குடிமுழுதும் ஆளும் பெருங்கருணைத் திறத்தினர்.

வஞ்சித்தென் வளை கவர்ந்தான் வாரானே யாயிடினும்
பஞ்சிக்காற் சிறகன்னம் பரந்தார்க்கும் பழனத்தான்
அஞ்சிப்போய்க் கலிமெலிய அழலோம்பும் அப்பூதி
குஞ்சிப்பூவாய் நின்ற சேவடியாய் கோடியையே

- தேவாரம்

நாவினுக்கரசர் கேளா நன்று நீர் புரிந்த வண்ணம்
யாவரித்தன்மை செய்தார் என்று முன் எழுந்து சென்றே
ஆவிதீர் சவத்தை நோக்கி அண்ணலார் அருளும் வண்ணம்
பாவிசைப் பதிகம்பாடிப் பணிவிடம் பாற்றுவித்தார்.

- புராணம்

அப்பூதி அடிகள் குருபூசைநாள் - தைச்சதயம்.

26. திருநீலநக்க நாயனார்

"ஒலிபுனல் சூழ் சாத்தமங்கை நீலநக்கற்கு அடியேன்"

- திருத்தொண்டத் தொகை

"பூதிப் புயத்தர் புயத்திற் சிலந்தி புகலும் அஞ்சி
ஊதித் துமிந்த மனைவியை நீப்ப உப்பாலவெல்லாம்
பேதித் தெழுந்தனகாண் என்று பிஞ்ஞகன் காட்டும் அவன்
நீதித் திகழ் சாத்தை நீல நக்கன் என்னும் வேதியனே

- திருத்தொண்டர் திருவந்தாதி.

காவிரி நாடாகிய சோழநாட்டில் சாத்தமங்கை என்னும் பதியிலே அந்தணர் குலத்தில் திருநீலநக்கர் அவதரித்தார். இப்பெருந்தகையார் வேதத்தின் உள்ளுறையாவது சிவபெருமானையும், சிவனடியார்களையும் அன்பினால் அருச்சித்து வணங்குதலே எனத் தெளிந்து கொண்டார். அதனால் நாள்தோறும் சிவாகம விதிப்படி சிவபூசை செய்து அயவந்தி ஈசரை வழிபட்டுச் சிவனடியார்களுக்குத் திருவமுது செய்வித்தல் முதலாக எவ்வகைப்பட்ட திருப்பணிகளையும் செய்து வந்தார். இவ்வாறு ஒழுகும் திருநீலநக்கர் திருவாதிரை நட்சத்திரம் கூடிய ஒரு நாளிலே சிவபூசையை முடித்துக்கொண்டு சாத்தமங்கையில் அயவந்தி என்னும் திருக்கோயிலிலே எழுந்தருளியுள்ள பெருமானை அருச்சிக்க விரும்பினார். பூசைக்கு வேண்டும் பொருள்களைத் தம் மனைவியார் எடுத்துக்கொண்டு உடன்வரத் திருக்கோயிலை அடைந்து அயவந்தி ஈசரை முறைப்படி பூசித்து இறைவர் திருமுன் இருந்து திருவைந்தெழுத்தினைச் செபித்தார். அப்பொழுது சிலந்தி ஒன்று அயவந்தி ஈசர் திருமேனியில் விழுந்தது. அதுகண்ட நீலநக்கரின் மனைவியார் விரைந்து சென்று அதனைப் போக்க வாயினால் ஊதித் துமிந்தார். நாயனார் அச்செயலைக்கண்டு தன் கண்ணை மறைத்து 'அறிவிலா தாய்! நீ இவ்வாறு செய்தது ஏன்?' என்று சினந்தார். 'சிலந்தி விழுந்தமையால் ஊதித்துமித்தேன்' என்றார் மனைவியார். 'நீ சிவலிங்கத்தின் மேல் விழுந்த சிலந்தியை வேறொரு வகையால் விலக்காமல் எச்சில்பட ஊதித்துமிந்தாய். இத்தகைய அருவருக்குஞ் செய்கை செய்த உன்னை யான் இனித் துறந்தேன். நீங்கி விடு' என்றார்.

மனைவியரும் அதுகேட்டு அஞ்சி ஒரு பக்கம் ஒதுங்கினார். நீலநக்கர் 'பழுது தீர் பூசையை' முடித்துக்கொண்டு வீட்டிற்குத் திரும்பினார். மனைவியார் அவருடன் வீடு செல்ல அஞ்சி ஆலயத்தில் தங்கியிருந்தார். அன்று இரவு நீலநக்கர் துயிலும் பொழுது அயவந்திப் பெருமான் கனவில் தோன்றித் தம் திருமேனியைக் காட்டி "உன் மனைவி ஊதித்துமிந்த இடம் தவிர மற்றைய எல்லா இடங்களிலும் சிலந்தியின் கொப்புளம்" என்று அருளினார். நீலநக்கர் வணங்கி விழித்தெழுந்து ஆடிப்பாடி இறைவனது திருவருளை வியந்து உள்ளமுருகினார். விடிந்தபின் ஆலயத்திற்குச் சென்று இறைவனை இறைஞ்சி மனைவியாரையும் உடனழைத்துக் கொண்டு வீட்டிற்குத் திரும்பினார்.

அயவந்திப் பெருமானைக் கனவினிற் காணும் பேறுபெற்ற நீலநக்கர் முன்னரிலும் மகிழ்ந்து அரன்பூசை நேசமும், அடியாருறவும் கொண்டவராய் வாழ்ந்து வந்தார்.

அந்நாளில் சீகாழிப் பிள்ளையாரின் சீரை உலகெலாம் போற்றுவதை அறிந்தார். தாமும் சம்பந்தப்பெருமானின் திருப்பாதத்தைத் தம் தலைமிசைச் சூடிக்கொள்ள வேண்டுமெனும் விருப்புடையவரானார். இவ்வாறு விரும்பியிருந்த வேளையில் சண்பையர் மன்னர் திருத்தலங்கள் பலவற்றையும் வழிபட்டுவரும் வழியில் சாத்தமங்கையைச் சார்ந்தார். சம்பந்தப்பிள்ளையார் வரும் செய்தியறிந்த திருநீலநக்கர் அப்பொழுதே மகிழ்ந்தெழுந்து கொடிகள் தூக்கி, தோரணம் நாட்டி, நடைப்பந்தலிட்டு வீதியெல்லாம் அலங்கரித்தார். தாமும் சுற்றமுமாய்ச் சென்று சம்பந்தப்பெருமானின் திருவடியில் வீழ்ந்து வணங்கி அழைத்து வருவோமென ஆசை கொண்டார். களிமிகுதியால் ஆடியும், பாடியும், தொழுதும் அழைத்துக் கொண்டு தம் இல்லம் வந்தார். பிள்ளையார் எழுந்தருளிய பெருமைக்குத் தக திருவமுது செய்வித்து மகிழ்ந்தார். அன்றிரவில் ஆளுடைய பிள்ளையார் தம் மனையில் தங்குவதற்கு வேண்டுவ தெல்லாம் அமைத்தார். சம்பந்தப் பிள்ளையார், திருநீலகண்டத் திருப்பாணர் தங்குதற்கோர் இடம் கொடுத்தருளுமாறு பணித்தார். அப்பணிப்பிற்கு இன்புற்றுத் தாம் வேள்வி செய்யும் வேதிகையின் அருகிலேயே பாணருக்கும், பாடினியாருக்கும் இடம் கொடுத்தார் அவ்வந்தணனார். அப்பொழுது வேதிகையிலுள்ள நித்தியாக்கினி

முன்னரிலும் மேலாக வலஞ்சுழித்து எரிந்தது. பாணர் மனைவியாருடன் வேதிகையருகில் பள்ளி கொண்டார்.

சம்பந்தப் பிள்ளையார் மறுநாள் எழுந்து அயவந்திப் பெருமானை வழிபட்டுத் திருப்பதிகம் பாடினார். அத்திருப்பதிகத்திலே நீலநக்கரையும் சிறப்பித்துப் பாடியருளினார்.

சம்பந்தப்பெருமான் சாத்தமங்கையினின்றும் புறப்பட்டபோது அவரோடு தொடர்ந்து செல்லவே நீலநக்கர் விரும்பினார். ஆனால் பிள்ளையார் அவரை அங்கேயே இருந்து அயவந்திப் பெருமானைப் பூசிக்குமாறு அருளிய வாக்கினை மீறவியலாது தம் உள்ளத்தைப் பிள்ளையாருடன் செல்லவிட்டுத் தான் அயவந்தியில் உறைந்தார். சம்பந்தர் திருப்பாதம் நினைந்த சிந்தையராய் பூசனையை முன்னரிலும் சிறக்கச் செய்தார். முருகனார் மடத்தில் சம்பந்தப் பிள்ளையார் உறைந்த காலத்தில் அங்கு சென்று பிள்ளையார், முருகனார், ஆளுடையஅரசு, சிறுத்தொண்டர் ஆகிய நாயன்மாருடனெல்லாம் அளவளாவி உடனுறையும் இன்பம் பெற்றார்.

இவ்வண்ணம் ஞானசம்பந்தப்பிள்ளையாரால் பேரன்பு அருளப்பெற்ற திருநீலநக்கனார் அவர் தம் திருமணத்துக்குப் புரோகிதம் பார்க்கும் பேறு பெற்றார். அந்த நல்லூர்ப் பெருமணத்திலேயே சோதியுட் புகுந்தார்.

திருத்தொண்டர் புராணசாரம்.

நீதிதருமறையோர்வாழ் சாத்தமங்கை
நீலநக்கர் அயவந்தி நிமலர்மேனி
ஊதிவிழுஞ் சிலம்பி கடிந்தவளை நீத்தார்க்கு
உமியாத இடம் நாதன் உறுநோய்காட்டக்
காதல்மிகு மனைவியையும் மகிழ்ந்து மேவிக்
காழியர்கோன் அமுதுசெயக்களித்து வாழ்ந்து
வேதிகைமிற் பாணனார்க்கு இடமும்நல்கி
விளங்குபெரு மணத்தரனை மேவினாரே

நுண்பொருள்

1. வேத உள்ளுறை அரனையும், அரனடியாரையும் பூசித்தல். ஆகம விதிமுறையான பூசனையில் ஈடுபடுவோர் அநுசிதம் பொறார்.

2. இறைவனிடம் கொண்ட மெய்யன்பினால் செய்யும் செயல் அநுசிதமேயாயினும், அன்போடு, விதிமுறை பிசகாமற் செய்யும் பூசனையையும் விட இறைவனுக்கு உகப்பாக அமையும்.
3. மெய்யன்போடு சிவபூசை புரிவார்க்கு அவர்காலத்தே நடமாடும் பரமாசாரியர் சம்பந்தம் வாராவரவாக வந்தமையும்.
4. தொண்டர் குலத்துள் சாதிவேறுபாடென்பது இல்லை.
5. நீலநக்கர்தம் அரன் பூசை நேசமும் அடியார் உறவும் சம்பந்தப் பிள்ளையா ருடன் சேர்ந்து சோதியுட் கலக்கும் பாக்கியத்தை ஈந்தன.

மறையினார் மல்குகாழித் தமிழ் ஞானசம்பந்தன் மன்னும்
நிறையினார் நீலநக்கன் நெடுமாநகர் என்று தொண்டர்
அறையுமூர் சாத்தமங்கை அயவந்திமேல் ஆய்ந்தபத்தும்
முறைமையால் ஏத்தவல்லார் இளையோரிலும் முந்துவரே.

– தேவராம்

மின்னெடுஞ்சடை விமலர் மேல்விழுந்த நூற்சிலம்பி
தன்னை வேறொரு பரிசினால் தவிர்ப்பது தவிர
முன்னணைந்துவந்து ஊதிவாய்நீர்ப்பட முயன்றாய்
உன்னை யான்இனித் துறந்தனன் ஈங்கென உரைத்தார்.

– பெரிய புராணம்

திருநீலநக்கநாயனார் குருபூசைநாள்: வைகாசி மூலம்.

27. நமிநந்தியடிகள் நாயனார்

"அருநம்பி நமிநந்தி அடியார்க்கும் அடியேன்"
- திருத்தொண்டத் தொகை

"வேத மறிக்கரத்து ஆரூர் அரற்கு விளக்கு நெய்யைத்
தீது செறி அமண்கையர் அட்டாவிடத் தெண்புனலால்
ஏத முறுக அருகரென்று அன்று விளக்கெரித்தான்
நாதன் எழில் ஏமப்பேறூர் அதிபன் நமிநந்தியே"
- திருத்தொண்டர் திருவந்தாதி.

சோழ நாட்டு ஏமப் பேறூரிலே அந்தணர் குலத்தில் தோன்றியவர் நமிநந்தியடிகள். அவர் இரவும் பகலும் பிரியாது சிவபெருமானைப் பூசித்து மகிழும் ஒழுக்கமுடையவர். நாள்தோறும் திருவாரூர்க்குச் சென்று புற்றிடங்கொண்ட பெருமானைப் போற்றி வருவார். ஒரு நாள் திருவாரூர்த் திருக்கோயிலின் ஒரு பக்கத்தே அமைந்த அரனெறி என்னும் திருக்கோயிலை வழிபடச் சென்றார். வழிபட்ட மகிழ்ச்சியில் எழுந்த அன்பினாலே கோயில் தொண்டுகள் பலவும் செய்து கொண்டிருந்தார். அங்கு விளக்கேற்றி வழிபட வேண்டும் என்ற விருப்பம் அவருள்ளத்தெழுந்தது. அப்பொழுது மாலைக்காலம் ஆனமையால் தம்மூருக்குச் சென்று எண்ணெய் கொணர எண்ணாது, திருவாரூரிலேயே ஒரு வீட்டிற்குச் சென்று விளக்கிற்கு எண்ணெய் வேண்டினார். அவர் சென்று கேட்ட வீடு சமணர்கள் வீடு. அங்குள்ள சமணர்கள் நமிநந்தியடிகளை நோக்கி, 'கையிலே ஒளி விட்டு விளங்கும் தீயினை ஏந்திய உங்கள் இறைவனுக்கு விளக்குத் தேவையற்றது. நெய் இங்கு இல்லை. விளக்கெரிப்பீராகில் நீரை அள்ளி எரிப்பீராக' என்றனர். அது கேட்டுப் பொறாத நமிநந்தியடிகள் அரனெறிப் பெருமான் திருமுன் சென்று வீழ்ந்து வணங்கினார். அப்பொழுது 'நமிநந்தியே! உனது கவலையை ஒழிக. இதன் அயலேயுள்ள குளத்தில் நீரை முகந்து வந்து வார்த்து விளக்கேற்றுக' என்றதொரு அருள்மொழி ஆகாயத்தில் தோன்றியது. அது கேட்டு மகிழ்ந்த நமிநந்தியடிகள், இறைவனருளே இதுவாம் என்றெண்ணிக் குளத்தின் நடுவே சென்று நாதர் நாமமாகிய திருவைந்தெழுத்தோதி நீரை அள்ளிக்கொண்டு கரையேறிக் கோயிலையடைந்தார். உலகத்தார் அதிசயிக்கும் வண்ணம் அகலில் திரியிட்டு

நீர் வார்த்து விளக்கேற்றினார். அந்த விளக்கு சுடர்விட்டொளிர்வது கண்டு கோயில் முழுவதும் திருவிளக்கேற்றினார். திருவிளக்குகள் பல விடியுமளவும் எரிதற்கு நீரால் நிறைத்தார்.

இவ்வாறு ஆரூர் அரனெறியப்பர்க்கு நாளும் இரவில் நீரால் திருவிளக்கிட்டுத் தம்முடைய ஊராகிய ஏமப் பேறூருக்குச் சென்று சிவபூசை முடித்து திருவமுது செய்து துயில் கொள்ளும் வழக்கமுடையவராயிருந்தார். அப்பொழுது தண்டியடிகள் நாயனாரால் சமணர்கள் கலக்கம் விளைத்து அவ்வூரைவிட்டு அகன்றனர். திருவாரூர் திருநீற்றின் பெருமை பெற்று விளங்கியது. சோழ மன்னன் ஆரூர்ப்பெருமானுக்கு அறக்கொடைகள் பல அளித்து அவற்றை சைவ ஆகம விதிப்படி நடத்த நமிநந்தி அடிகளையே தலைவராக நியமித்தான்.நமிநந்தி அடிகள் நாள் பூசைகளுடன் பங்குனியுத்தரப் பெருவிழாவைச் சிறப்புறச் செய்வதற்கு உறுதுணையாக விளங்கினார். திருவாரூர்ப்பெருமான் பங்குனி உத்தரத் திருவிழா நாட்களில் ஒரு நாள் மணலி என்ற ஊருக்குத் திருவுலா எழுந்தருளினார். எல்லாக் குலத்து மக்களும் இறைவனை உடன் தரிசித்துச் சென்றார்கள். நமிநந்தியடிகளும் அவர்கள் எல்லாருடனும் உடன் சென்று திருவோலக்கம் கண்டு மகிழ்ந்தார். இறைவர் திரும்பித் திருக்கோயிலுக்குச் செல்ல மாலைப்பொழுதாயிற்று. நமிநந்தியடிகள் நள்ளிருளில் தமது ஊரையடைந்து வீட்டினுள்ளே புகாமல் புறத் திண்ணையிலே படுத்துத் துயின்றார். அப்பொழுது அவர் மனைவியார் வந்து அவரைத் 'துயிலுணர்த்தி வீட்டினுள்ளே எழுந்தருளிச் சிவார்ச்சனையையும் தீவளர்த்தலையும் முடித்துக்கொண்டு பள்ளிகொள்ளலாம்' என்றார். அதுகேட்ட நமிநந்தியடிகள், 'இன்றைய தினம் ஆரூர்ப்பெருமான் திருமணலிக்கு எழுந்தருளியபோது யானும் உடன் சேவித்துச் சென்றேன். அக்கூட்டத்தில் எல்லாச் சாதியாரும் கலந்திருந்தமையால் தீட்டுண்டாயிற்று. ஆதலால் நீராடிய பின்னரே மனைக்குள் வருதல் வேண்டும். குளித்தற்குத் தண்ணீர் கொண்டுவா' என்று சொல்ல மனைவியாரும் விரைந்து சென்றார். அதற்கிடையில் நமிநந்தியடிகளுக்குச் சிறிது உறக்கம் வந்தது. அப்பொழுது வீதிவிடங்கப் பெருமான் கனவில் தோன்றி, 'அன்பனே! திருவாரூரிலே பிறந்தார் எல்லோரும் நம்முடைய கணங்கள். அதை நீ காண்பாய்' என்று சொல்லி மறைந்தருளினார். உறக்கம் நீங்கி விழித்தெழுந்த நமிநந்தியடிகள், தாம் அடியார்களிடையே சாதிவேறுபாடு நினைந்தது தவறென்றுணர்ந்து எழுந்தபடியே வீட்டினுள்ளே சென்று சிவபூசையை

முடித்து மனைவியார்க்கு நிகழ்ந்ததைச் சொல்லினார். பொழுது விடிந்தபின் திருவாரூருக்குச் சென்றார். அப்பொழுது திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லாரும் சிவசாரூபம் பெற்றவர்களாகத் தோன்றக்கண்டார். 'அடியேன் செய்த பிழையினைப் பொறுத்தருள வேண்டும்' என்று ஆரூர்ப்பெருமானை இறைஞ்சிப் போற்றினார். நமிநந்தியடிகள் பின்பு திருவாரூரிலேயே குடிபுகுந்து தம்முடைய திருத்தொண்டுகளைச் செய்து-கொண்டிருந்தார். இவ்வாறு சிவனடியார்களுக்கு வேண்டுவன எல்லாம் நியதியாக நெடுங்காலம் செய்திருந்து திருநாவுக்கரசரால் 'தொண்டர்க்கு ஆணி' எனச் சிறப்பிக்கப்பெறும் பேறு பெற்றுத் திருவாரூர்ப் பெருமான் திருவடி நிழலையடைந்தார்.

திருத்தொண்டர் புராணசாரம்.

நண்ணுபுகழ் மறையோர்வாழ் ஏமப்பேறூர் நமிநந்தியடிகள் திருவிளக்கு நல்க
எண்ணெய் அமணர்கள் விலக்க நீரால் ஆரூரில் இலங்கும் அரனெறியாருக்கு
– ஏற்று நாளில்
கண்அமணர் கெடக்கண்பெற்று அடிகள்வாழக் காவலனால் நிபுந்தங்கள் கட்டுவித்தே
அண்ணலருள் கண்டாரூர் அமர்ந்து தொண்டர்க்கு ஆணி' எனும் அரசி
–னருள் அடைந்துளாரே.

நுண்பொருள்

1. திருவிளக்குத் திருத்தொண்டு சிவஞானம் அளிக்கவல்ல சிறந்த தொண்டு.
2. சிவபெருமான் அன்பாளர் தொண்டினை அதிசயிக்கும்படி முற்றுவிப்பார்.
3. திருவாரூர் பெருமானைச் சேவிக்கும் திருக்கூட்டத்துள் தீட்டு உண்டாதற்கு இடமில்லை.
4. திருவாரூர் பிறந்தார்கள். சிவகணத்தவர்கள்.
5. நமிநந்தியடிகள் திருத்தொண்டர்க்கு ஓர் உரைகல்.

ஆராய்ந் தடித்தொண்டர் ஆணிப்பொன் ஆரூர் அகத்தடக்கி
பாரூர்ப் பரிப்பத்தம் பங்குனி உத்தரம் பாற்படுத்தான்
ஆரூர் நறுமலர்நாதன் அடித்தொண்டன் நம்பி நந்தி
நீரால் திருவிளக் கிட்டமை நீள்நாடறியுமன்றே.

– தேவாரம்

நீறு புனைவார் அடியார்க்கு நெடுநாள் நியதியாகவே
வேறு வேறு வேண்டுவன எல்லாம் செய்து மேவுதலால்
ஏறு சிறப்பின் மணிப்பற்றில் இருந்தார் தொண்டர்க்கு ஆணி எனும்
பேறு திருநாவுக்கரசர் விளம்பப் பெற்ற பெருமையினார்

– பெரியபுராணம்

நமிநந்தியடிகள் நாயனார் குருபூசைநாள் : வைகாசிப் பூசம்.
அன்று நெய்விளக்கு நிறைய ஏற்றி விழிபாடாற்றல் நன்று.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்.



28. திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்.

"வம்பறா வரிவண்டு மணம் நாறமலரும்
மதுமலர்நற் கொன்றையான் அடியலாற் பேணா
எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன்

- திருத்தொண்டத் தொகை

வையம் மகிழ யாம் வாழ அமணர் வலி தொலைய
ஐயன் பிரம புரத்து அம்மென் குதலைச் செவ்வாய்
பைய மிழற்றும் பருவத்துப் பாடப் பருப்பதத்தின்
தையல் அருள் பெற்றனன் என்பர் ஞானசம் பந்தனையே

பந்தார் விரலியர் வேள் செங்கட் சோழன் முருகன் நல்ல
சந்தார் அகலத்து நீலநக்கன் பெயர் தான் மொழிந்து
கொந்தார் சடையர் பதிகத்தில் இட்டு அடியேன் கொடுத்த
அந்தாதி கொண்ட பிரான் அருட் காழியர் கொற்றவனே.

- திருத்தொண்டர் திருவந்தாதி

"வேத நெறி தழைத்தோங்க மிகுசைவத்துறை விளங்க
பூத பரம்பரை பொலியப் புனிதவாய் மலர்ந்தமுத
சீதவள வயற் புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்.

- திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் புராணம்.

பொன்னிநதி வளம் பெருக்குவதால் பொலிவுபெற்ற ஊர் கழுமலமூதூர். அம்மூதூருக்குப் பிரமபுரம் முதலான பன்னிரு திருப்பெயர்கள் உள்ளன. அவ்வூரிலே அந்தணகுலத்துக் கௌணிய கோத்திரத்திலே சிவபாதவிருதயர் என்னும் அருந்தவத்தோர் ஒருவர் இருந்தார். அவரது திருமனைவியார் பகவதியார். இவ்விருவரும் சிவபாதம் மறவாத சீருடையாளர்கள். இப்புண்ணியர்கள், சமண சாக்கிய சமயங்களால் வேதவழக்கும், சைவ ஒழுக்கமும் விளக்கம் பெறாதிருத்தல் கண்டு மனம் வருந்தினார்கள். ஆதலால் அப்புறச் சமயங்களை நீறாக்கும் புதல்வன் ஒருவனைப் பெறும் பொருட்டுப் பிரமபுரம் மேவிய பெம்மானைப்

பூசித்து வந்தார்கள். பெம்மான் அருளாலே கிரகங்களெல்லாம் உச்ச-நிலையில் இருந்த திருவாதிரைத் திருநாளில் திருநீற்று நெறிவிளங்கச் சிவம் பெருக்கும் பிள்ளையார் திருவவதாரம் செய்தார். அவ்வேளையிலே தேவர்கள் பூமாரி சொரிதல் முதலாய நன்னிமித்தங்கள் பல தோன்றின. சீகாழிப்பதியிலுள்ளோர் **"கவுணியர் குலத்தில் ஒரு காதலன் உதித்தான்"** என்று களிகூர்ந்தார்கள். நாமகரணஞ் சூட்டுதல் ஆகிய சடங்குகள் யாவற்றையும் தங்கள் குல வழக்கப்படி சீர்பெறச் செய்தார்கள். பிள்ளையார் தொட்டிற்பருவம், தளர் நடைப்பருவம் ஆகிய பருவம் எல்லாம் கடந்து மூவாண்டுப் பருவத்தினரானார். இவ்வயதிலே இடை-யிடையே காரணமின்றித் துணுக்குற்று அழுவார். **'பண்டு திருவடிம-றவாப் பான்மையராதலாலே'** இப்பொழுது ஒரொருகால் பிரிவுணர்வு எழ இவ்வாறு வெருக்கொண்டாற் போல அழுவார்.

இவ்வாறிருக்கும் நாளில் ஒருநாள் சிவபாதவிருதயர் நீராடும் பொருட்டுப் புறப்பட்டார். அப்பொழுது திருவருள் கூடப் பிள்ளையாரும் அழுது பின் சென்றார். சிவபாதவிருதயர் கோபக்குறிகாட்டியபோதும் பிள்ளையார் தொடர்ந்து அழுது மீளாது நின்றார். ஆதலால் அவரை அழைத்துக் கொண்டு தோணிபுரத்துப் பிரமதீர்த்தக் குளத்தை அடைந்தார். பிள்ளையாரைக் கரையில் நிறுத்தித் தோணிபுரத்துப் பெரிய பிரா-னையும், பிராட்டியையும் வழிபட்டு **அகமருடமந்திர செபத்தின்** பொருட்டு நீரில் மூழ்கினார். அச்செபம் குறித்த கால அளவு செய்ய வேண்டியதா-தலால் அக்கால அளவுவரை அவர் நீரில் மூழ்கியிருந்தார். மூழ்கியவ-ரைக் காணாதபிள்ளையார் முன்னுணர்வு மூள. கண்மலர்கள் நீர்ததும்ப, கைமலர்களாற் பிசைந்து பொருமி அழலானார். சுற்றிவரப்பார்த்து அழுத பின், திருத்தோணிச் சிகரத்தைப் பார்த்து 'அம்மே! அப்பா!' என்று அழுது அழைத்தார். அப்பொழுது பிரமபுரத்தீசர் அம்மையும் அப்பருமாய் பிரமதீர்த்தக் கரையை அடைந்தார். அழுதபிள்ளையை அருளொழுகப் பார்த்த இறைவர் உமை அம்மையை நோக்கி 'பொற்-கிண்ணத்திலே பாலமுதூட்டு' எனப் பணித்தார். அம்மையார் திருமுலைப்-பாலைப் பொற்கிண்ணத்தில் கறந்து சிவஞானத்தின்னமுதும் குழைத்துப் பிள்ளையாரின் கண்மலர் நீர் துடைத்து 'உண்ணுக' என ஊட்டிய-

ருளினார். சிவஞானப் பாலமுது அருந்திய பிள்ளையார் 'சிவஞான சம்பந்தர்' ஆயினார். அந்நிலையில்

"சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கியஞானம்
உவமையில்லாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்"

ஆதிய ஞானம் யாவையும் உணர்ந்தனர்.

நீராடும் நியமம் முடித்துக் கரையேறிய சிவபாதவிருதயர் பாலறாவாயும் சிவஞானப்பொலிவுகாட்டும் திருமுகமுமாய்நின்ற பிள்ளையாரைக் கண்டார். "எச்சில்பட இப்பாலளித்தோர் யார்? காட்டு" என்று சிறியதோர் கோல் எடுத்து ஓங்கினார். அப்பொழுது சிவஞான சம்பந்தப்பிள்ளையார் ஆனந்தக்கண்ணீர் துளிப்ப உச்சியின் மேல் தூக்கிய ஒரு திருவிரலால் விடைமேலிருந்த அம்மையப்பரைச் சுட்டிக்காட்டி எம்மை இது செய்த பெம்மான் இவன் என்று * **"தோடுடைய செவியன்..."** என்னும் திருப்பதிகம் பாடலானார். திருக்கடைக்காப்புப் பாடித் திருப்பதிகத்தை நிறைவு செய்த வேளையில் தேவர்கள் தேன்சிந்தும் தெய்வ மலர்களைச் சொரிந்தார்கள். கணநாதர் "அரகர' என்று ஒலித்தனர். விடைமேலிருந்த பெருமான், பெருமாட்டியுடன் தோணிபுரக்கோயிலை அடைந்தார். அது கண்ட சிவஞானசம்பந்தர் தாமும் கோயிலுட் புகுந்தார். பெருந்தவத்தோரான சிவபாத விருதயர் பிள்ளையார் போன்று பெருமானைக் காணாதவராயினும் தமிழ் வேதம் பாடியதைக் கண்ட பெருவியப்பால் கையிலெடுத்த கோல் சோர்ந்து வீழக்கைகூப்பித் தொழுது ஆடிப்பாடி ஆனந்தமுற்றார். பிள்ளையார் சென்ற வழித் தாமும் தொடர்ந்து கோயிலுட்புகுந்தார். அங்கு நிகழ்ந்தவற்றைக் கண்டவரும், காணாது கேள்விப்பட்டவரும் கோயிற் புறத்தே 'சூழ்ந்து 'இப்படி அற்புதம் எங்கு நிகழ்ந்தது" என்று மயிர் சிலிர்த்து நின்றனர். கோயிலுட் சென்ற பிள்ளையார், அங்கு வீற்றிருந்த அம்மையப்-

---

* தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப் பொடி பூசி என் உள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட் பணிந்து ஏத்த அருள்செய்த
பீடுடைய பிரமா புரமேவிய பெம்மானிவன் அன்றே.

பரைத் தரிசித்து இங்கு "என்னை ஆளுடையான் உமையோடும் இருந்தான்" எனத் திருப்பதிகம் பாடினார். பாடிமகிழ்ந்த பின் கோயிலினின்றும் புறப்பட்டுக் கோபுரவாயிலை அடைந்தார். கோபுரவாயிலில் நின்ற பிரம புரத்தவர்கள் ஆனந்த பரவசத்தராய் ஆளுடைய பிள்ளையாரைப் போற்றித் துதித்துப் பாடிப்பரவலாயினர்.

காழியர் தவமே! கவுணியர் தனமே! கலைஞானத்(து)
ஆழிய கடலே! அதனிடை அமுதே! அடியார் முன்
வாழிய வந்திம் மண்மிசை வானோர் தனிநாதன்
ஏழிசை மொழியாள் தன்திருவருள் பெற்றனை என்பார்"

மறைவளர் திருவே வைதிகநிலையே வளர்ஞானப்
பொறையணி முகிலே புகலியர் புகலே பொருபொன்னித்
துறைபெறு மணியே சுருதியின் ஒளியே வெளியே வந்து
இறையவன் உமையாளுடன் அருள்தர எய்தினை என்பார்

புண்ணிய முதலே புனை மணி அரைஞாணொடு போதும்
கண்ணிறை கதிரே கலைவளர்மதியே கவின்மேவும்
பண்ணியல் கதியே பருவமதொரு மூவருடத்தே
எண்ணிய பொருளாய் நின்றவர் அருள் பெற்றனை என்பார்"

இவ்வாறு துதித்துப் பிள்ளையார் பாதங்களிலே வீழ்ந்து வணங்கினார்கள். சிவபாதவிருதயர் ஆளுடையபிள்ளையாரைத் தூக்கித் தம் தோள்மேல் ஏற்றிக் கொண்டு வீடு நோக்கிச் சென்றார். வீதியிற் கூடிய தொண்டர் கூட்டம் சிவானந்தவெள்ளம் பெருகிச் செல்வதுபோல பக்கமெல்லாம் சூழ்ந்து சென்றனர், நகர்வலமாகச் சென்று வீட்டைச் சேர்ந்ததும் மாதர்கள் மங்கலவாழ்த்தெடுத்தனர். சங்கநாதமும் தேவதுந்துபியும் முழங்க பாலறா மதுரமொழிப் பவளவாயர் வீட்டினுட் புகுந்தார். அன்றிரவு தோணிபுரத்திறைவரையே நினைந்த கருத்தினராயிருந்து, கதிரவன் உதிக்கும் பொழுதில் கோயிலைச் சேர்ந்தார். பெருமானையும் திருமுலைப்பாலமுது தந்த பெரிய பிராட்டியாரையும் போற்றி அருகேயுள்ள திருக்கோலக்கா என்னும் கோயிலுட் சென்று வணங்கத் திருவுளம் பற்றினார்.

திருக்கோலக்கா சென்று கோயிலை வலம்வந்து உள்புகுந்து முன்நின்று ® **"மடையில் வாளை"** எனும் திருப்பதிகம் பாடத் தொடங்கினார். அவ்வாறுபாடும் போது கைகளினால் ஒத்தறுத்துப் (தாளமிட்டுப்) பாடினார். அதுகண்டு கருணைகூர்ந்த ஓசைகொடுத்த நாயகியுடன் வீற்றிருக்கும் சத்தபுரீசர் ஐந்தெழுத்துப் பொறித்த பொற்றாளம் பிள்ளையார் கையில் வந்தருளத் திருவருள் பாலித்தார். கையில் வந்திருந்த திருத்தாளத்தைக் கண்ட பிள்ளையார் அதனைத் திருமுடிமேற்கொண்டு மனம் களித்துப் பொற்றாளமிட்டுத் திருப்பதிகத்தைப் பாடி நிறைவு செய்தார். கோலக்காவுளானைப் பாடிப்பரவிப் போற்றிய பின்னர் சீகாழிக்கு மீளச் சிந்தைவைத்தார். பிள்ளையார் பொற்றாளத்தோடும் நடந்து செல்வதைப் பொறாத தந்தையார் அவரைத் தோள்மேல் ஏற்றிக் கொண்டார். தந்தையாரது தோளிலமர்ந்து தொண்டர்கள் புடைசூழவந்து திருத்தோணிபுரக் கோயிலை அடைந்தார். கோயிலை வலம் வந்து பெருமான் முன்னிலையிலே நின்று **பூவார்கொன்றை** எனத் தொடங்கும் திருப்பதிகத்தைப்பாடினார். இத்திருப்பதிகத்தைப் பாடும் பொழுது பெருமானருளிய பொற்றாளத்தால் ஒத்தறுத்துப்பாடினார். அன்போடு பாடிப்பணிந்த பின்னர். இல்லம் சென்று சீகாழிப்பதியிலுள்ளாரெல்லாம் தம் பிள்ளைமைக்கோலத்தைக் கண்டு இன்புறும் வண்ணமாக வீற்றிருந்தார்.

இவ்வாறிருக்கும் பொழுது பிள்ளையாரின் தாயார் அவதரித்த திருநனிபள்ளியில் வாழும் அந்தணர்கள் மங்கல வாத்தியங்கள் ஒலிக்க வேதமந்திரங்களை ஓதிக் கொண்டு சீகாழியை அடைந்தனர். அவர்கள் ஞானஆரமுதுண்டபிள்ளையாரின் கழல்களை வாழ்த்தி வணங்கினர். பிள்ளையார் சிவஞானம் பெற்ற பெரு வார்த்தை கேள்வியுற்று அயலூர்களிலுள்ள அந்தணர்களும், தொண்டர்களும் வந்து வணங்கினார்கள். அவர்களுக்கெல்லாம் சிவபாதவிருதயர் இன்சொற்கூறி அவரவர் விருப்பிற்

® "மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக் காவுளான்
சடையும் பிறையும் சாம்பற் பூச்சுங்கீழ்
உடையும் கொண்ட உருவ மென்கொலோ"

கேற்ப இன்னமுது அளித்தார். இதனால் சீகாழி சிவலோகம் போல விளங்கிற்று. நனிபள்ளி அந்தணர்கள் "எங்கள்பதியில் எழுந்தருளியிருக்கும் திங்கட்சடையாரை வணங்குதற் பொருட்டு எழுந்தருள வேண்டும்." என சம்பந்தப்பிள்ளையாரை வேண்டினர். இவ்வேண்டுகோளுக்கு இசைந்து தோணிபுரத்தீசரை வணங்கி நனிபள்ளியில் மாத்திரமன்றி மற்றும் தலங்களிலும் எழுந்தருளியிருக்கும் பெருமானை வழிபடுதற் பொருட்டுத் தம் தாமரை மலர் போன்ற திருவடிகள் சிவக்க நடந்து சென்றார். சிறிய திருவடிகளால் நடந்து செல்வதையும், பிறரெவரும் தாங்குவதையும் பொறாத தந்தையார் சிறிய பெருந்தகையாரைத் தம் தோள் மீதில் ஏற்றிச் சென்றார். பிள்ளையார் தோள்மீதிருந்து சிவசிந்தனையுடன் சென்றார். திருநனிபள்ளியைச் சமீபித்தபோது "அம்மலர்ச் சோலை தோன்றும் ஊர் எது?' என்று கேட்கத் தந்தையார் "அதுவே திருநனிபள்ளி" என்று சொன்னார். அப்பொழுதே நனிபள்ளி ஈசரை நினைந்து **"காரைகள் கூகை முல்லை"** எனத் தொடங்கும் ஆணைமொழியை அருளிச்செய்தார். அன்புகூரக் கோயிலுட் சென்று நியமப்படி வழிபட்டு நனிபள்ளி இறைவரின் அருள் பெற்று வந்தார். தம்மைச் சூழ்ந்து போற்றும் நனிபள்ளி ஊரவரின் அன்பின் திறத்தை நினைந்து அவ்வூரில் சில நாள் தங்கியிருந்தார்.

ஆளுடையபிள்ளையார் நனிபள்ளியில் அமர்ந்திருக்கும் நாளில் அருகேயுள்ள திருத்தலைச்சங்காட்டு அந்தணர்கள் ஆராத காதலுடன் வந்து வணங்கினார்கள். அவர்கள் ஆளுடையபிள்ளையாரை அழைத்துக்கொண்டு வாழை கமுகு தோரணங்களால் அலங்கரிக்கப்பட்ட தம் தலத்திற்குச் சென்றனர். அங்கு ஆளுடையபிள்ளையார் வலம்புரிச் சங்குவடிவிலே அமைக்கப்பட்ட கோயிலில் விரும்பி உறையும் சிவபெருமானைத் திருப்பதிகம் பாடி வழிபட்டார். அங்கிருந்து அன்பர்கள் சூழ்ந்துவர திருவலம்புரம் என்னும் திருத்தலத்தைச் சேர்ந்து **'கொடியுடை'** எனும் திருப்பதிகம் பாடித்துதித்தார். வலம்புரத்திறைவரை வழிபட்டபின் திருப்பல்லவனீச்சரம் எனும் பதியை வணங்கித் திருந்திசைத் திருப்பதிகம் பாடித் திருச்சாய்க்காடு செல்ல நினைத்தார். திருச்சாய்க்காட்டுத் தொண்டர்கள் அவரை மகிழ்ச்சியோடு வரவேற்றுச் சென்றனர்.

பிள்ளையார் கோயிலை வலம் வந்து *"மண்புகார்..." எனத் தொடங்கும் திருப்பதிகம் பாடி, ஊன் எலாம் உருகும் படி துதித்து, உச்சிமேற் கைகூப்பி வணங்கினார். இடர்கெடும் அத்திருப்பதிகம் பாடித்துதித்த அப்பொழுதே வெண்காட்டிறைவரை வணங்கும் காதல் கொண்டு அத்திருத்தலத்தை அடைந்தார். திருவெண்காட்டுத் திருத்தொண்டர் சிவம்பெருக்கும் பிள்ளையாரை எதிர்கொண்டழைத்து வந்தனர். பிள்ளையார் பத்தராம் அடியார் சூழப் பரமர்கோயிலை வலம் வந்து நிலமுறத் தொழுது வீழ்ந்தார். எழுந்து நின்று *"கண்காட்டு..." எனும் திருப்பதிகத்தைப் பாடத் தொடங்கி திருவெண்காட்டீசரையும் வெண்காட்டு முக்குள நீரையும் போற்றி செய்தார். அங்கிருந்து திருமுல்லைவாயில் சென்று முல்லைவனநாதரைப் பாடித்துதித்து மறையவர் ஏத்திச் சூழ்ந்துவர சீகாழிப்பதியை வந்தடைந்தார். வந்து தோணிவீற்றிருந்தாரைத் தொழுது நாள்தோறும் போற்றி வழிபட்டிருந்தார். அந்நாளில் அருகேயுள்ள மயேந்திரப்பள்ளி, திருக்கருகாவூர், திருமுல்லைவாயில் ஆகிய தலங்களுக்கும் சென்று தமிழ்மாலைபாடி வழிபட்டார்.

இவ்வாறு சீகாழிப் பெருமானை நாளும்போற்றி, சீகாழியைச் சூழ்ந்திருக்கும் தலங்களையும் தரிசித்து மண்ணுளோர் உய் வகையான திருப்பதிகங்களைப் பாடியிருக்கும் பொழுது திருநீலகண்டத்துப் பெரும்பாணர், மதங்கசூளாமணியாரோடு பிள்ளையார் கழல் வணங்க வந்தணைந்தார். பெரும்பாணர் வரவறிந்து பிள்ளையார் எதிர்கொண்டார். பிள்ளையாரது செங்கமல மலர்ப்பாதம் தொழுதெழுந்தார் பெரும்பாணர். பெரும்பாணருக்கு மன மகிழ்ச்சியோடு முகமும்மலர்ந்து இன்சொற் கூறி கோயில் வாசலுக்கு அழைத்துச் சென்றார். தோணிபுரத்தீசரைக்

---

* "மண்புகார் வான்புகுவர் மனமிளையார் பசியாலும்
கண்புகார் பிணிஅறியார் கற்றாரும் கேட்டாரும்
விண்புகார் எனவேண்டா வெண்மாட நெடுவீதித்
தண்புகார்ச் சாய்க்காட்டெம் தலைவன்தாள் சேர்ந்தாரே'

* "கண்காட்டு நுதலானும் கனல் காட்டும் கையானும்
பெண்காட்டும் உருவானும் பிறைகாட்டும் சடையானும்
பண்காட்டும் இசையானும் பயிர்காட்டும் புயலானும்
வெண்காட்டில் உறைவானும் விடைகாட்டும் கொடியானே"

கும்பிடுவித்து "உங்கள் பெருமானுக்கு யாழிசை பாடுங்கள்" எனப்பணித்தார். யாழ்ப்பாணர், பிள்ளையார் பணியாற்றும் பெருவிருப்பால் பாடினியாரும் தாமுமாய் மிடற்றிசை இசைந்தொலிக்கக் கந்தருவரும் வியக்குமாறு யாழிசை பாடினர். பாடல் கேட்டு மகிழ்ந்த பிள்ளையார் தமது இல்லத்துக்கு அழைத்துச் சென்று அங்கே பாணரும், பாடினியும் தங்கத் தனியிடம் அமைத்துக்கொடுத்து நல்விருந்தளித்தார். பாணனார் பிள்ளையார் அருளிய திருப்பதிகங்களை அடியார்கள் பாடக்கேட்டு நல்லமுதம் அருந்தியவர் போல் மகிழ்ந்து அவற்றை யாழில் இசைத்து இன்புற்றார். பின்னர் "பிள்ளையாரிடம் நீர் அருள் செய்யும் திருப்பதிக இசையை அடியேன் யாழில் இசைக்கவேண்டும்" எனக் கூறித் தொழுதார். பிள்ளையாரும் இது தம்பிரான் அருள் என மகிழ்வுடன் இசைந்தார்.

இவ்வாறு சிரபுரத்தில் அமர்ந்திருந்த திருஞானசம்பந்தர் தில்லை நடம்பயில்வாரைப் பணிந்தேத்தும் பெருங்காதல் கொண்டார். அதனைத் தந்தையாருக்கு உரைத்தார். பெருந்தவத்துத் தந்தையாரும் பிள்ளையாருடன் செல்வதற்கு மகிழ்ந்தார். அப்பொழுதே தோணியப்பரைத் தொழுது புறப்பட்டார். பாணரும், தந்தையும், தாமுமாய் அடியார்களும் சூழ்ந்துவர தில்லைவழியிற்சென்றார். வழி இடையேயுள்ள திருத்தலங்களை வழிபட்டுத் தில்லை எல்லையைப் பணிந்தார்.

திருமுலைப்பாலுண்ட திருஞானசம்பந்தர் வருகின்றார் என்பதைக் கேள்வியுற்ற தில்லைவாழந்தணர்கள் மங்கலவாத்திய ஓசையும், மறைமுழக்கமும் சேர எதிர்கொண்டு அழைத்தனர். பிள்ளையார் தென்திருவாசலாலே புகுந்து வீதியை வலம் வந்து எழுநிலைக் கோபுரத்தை வணங்கி, உள்புகுந்து செம் பொன்மாளிகையை வலம் வந்து நடராசப்பெருமானின் திருமுன்பு சேர்ந்தார். ஆடுகின்றவரை நெருங்கி திருஅணுக்கன் திருவாயிலினூடாக சிவந்த சிறுகைகள் சிரமிசைக்குவிய, கண்களிகொள்ள, நெஞ்சம் நெக்குருக உட்புகுந்தார். கண்ணீர் மழைபொழிய "உள்ளுணர்விற்பெறும் சிவபோகத்தைப் புலக்காட்சியிலும் பெறுமாறு அருளினையே" எனப் போற்றி செய்தார். உடலையும் உயிரையும் கரைந்துருகச் செய்யும் கண்ணாரமுதக் கூத்தினைக் கண்டு களிகூர்ந்தார்.

❀ **"கற்றாங்கெரியோம்பி"** என எடுத்துத் தில்லைவாழ் அந்தணரை முன்வைத்துப் பண்ணார்ந்த செந்தமிழ் பாடினார். பாடிப்பரவிய பின் வலம்வந்து புறத்தணைந்தார். வாயிலின் நின்று வணங்கி அந்த அருந்தவத் தலத்திலே உறைவதற்கு அஞ்சி அருகேயிருந்த திருவேட்களத் திருத்தலத்தைச் சேர்ந்தார். திருவேட்களத்துப் பாசுபதேசுரரைக் கும்பிட்டுப் பதிகம்பாடி அங்கே உறைந்தார். உறையும் இடம் அதுவாய், ஐயன் திருநடம் கும்பிடும் இடம் சிற்றம்பலமாய் சிலநாள் கழித்தார். அவ்வாறு கழித்திருந்த நாள்களில் கழிப்பாலை ஆதிய தலங்களுக்கும் சென்று பதிகம் பாடிவழிபட்டார். நாள்தோறும் சிற்றம்பலத்து நட்டம் போற்றிவந்த திருஞானசம்பந்தர் சிற்றம்பலவனார்க்கு அணுக்கத்தொண்டராய்ப் பூசனைபுரிகின்ற தில்லைவாழ் அந்தணரின் பேற்றினை நினைந்து அதிசயித்தார். ஒரு நாள் பாணனாருடன் வரும் பொழுது அத்தில்லைவாழந்தணர்கள் கணநாதராய்த் தோன்றுதல் கண்டு அதனைக் காட்டியருளினார். திருக்களிற்றுப்படியின் கீழ்நின்று மாணிக்கக் கூத்தர் ஆடும் அபிடேகத் திறம் கண்டார். அதனை **"ஆடினாய் நறுநெய்யொடு பால் தயிர்"** என்றெடுத்துப் பதிக விசைபாடினார். அப்பதிகத்திலே தில்லைவாழ் அந்தணர் தொழுதேத்தும் திறத்தினையும் போற்றினார். இவ்வண்ணம் மாணிக்கக்கூத்தரின் ஆனந்தநடனமும் அந்தணரின் அணுக்கத் தொண்டும் கண்டு ஆனந்த வெள்ளத்தில் திளைத்துப் பெருமானிடம் பிரியாதவிடை பெற்றுப் புறத்தே வந்தார்.

புறம் வந்த போதில் திருநீலகண்டப்பாணர் வணங்கி "அடியனேனுடைய பதி முதலாய தலங்களை வழிபட வேண்டும்." எனக் கூறினார். அவரது வேண்டுகோளுக்கிசைந்து தந்தையார், பரிசனங்கள், பாணர், மதங்கசூளாமணியார் ஆதிய திருக்கூட்டத்துடன் மேற்றிசையாக வந்தார். எருக்கத்தம்புலியூரை நெருங்கியபோது பாணர் "இப்பதி அடியனேன்பதி" எனக்கூறினார். ஆளுடைப்பிள்ளையார் "ஐய! நீர்

❀ "கற்றாங்கெரியோம்பிக் கலியை வாராமே
செற்றார் வாழ் தில்லைச் சிற்றம்பலம் மேய
முற்றா வெண்டிங்கள் முதல்வன் பாதமே
பற்றா நின்றாரைப் பற்றா பாவமே"

அவதரித்திட இப்பதி அளவிலாத மாதவம் செய்திருத்தல் வேண்டும்" எனச் சிறப்புரை கூறி அவ்வருந்தவப் பதியில் எழுந்தருளியிருக்கும் திருநீலகண்டப் பெருமானைச் செழுந்தமிழ்ப்பதிகம் பாடி வழிபட்டார். அங்குநின்று உமையொருபாகர் இனிதுறையும் பதிபலவும் வணங்கிப் பதிகம் பாடி முதுகுன்று அடைவோம் எனவந்தார். திருமுதுகுன்றில் சிலநாள் உறைந்து திருப்பதிகம் பல பாடினார். அங்கு நின்றும் திருப்பெண்ணாகடம் ஆதிய தலங்களை வழிபட்டுத் 'திருவரத்துறை சேர்வோம்' எனச் சென்றார். அரத்துறை ஈசரை நடந்து சென்று தரிசிக்கும் ஆர்வத்தால் தந்தையார் தோளில் இருப்பதைத் தவிர்த்து பாததாமரை நோவப் பையப்பையச் சென்றார். மாறன்பாடியை வந்துற்ற-போது மாலைப்பொழுதாயிற்று. வெம்பகற் போதிலும் வழிநடந்த பரிசனத்தார் இளைப்பாறும்பொருட்டு அஞ்செழுத்தோதி அப்பதியில் தங்கினர். அரத்துறை அண்ணல் பூந்தராய் மன்னரின் வழி வருத்தத்தை ஆற்றத் திருவுளம் செய்தார். ஏறுதற்குச் சிவிகையும், பிடித்தற்குக் குடையும், ஊதுதற்குச் சின்னங்களும் அருளும் பொருட்டு அரத்துறை அந்தணர் கனவில் தோன்றி "ஞானசம்பந்தன் நம்மிடம் வருகின்றான். அவரிடம் முத்துச்சிவிகை ஆகியவற்றைக் கொண்டு சென்று கொடுங்கள்" என்று அருளினார். அந்தணர்கள் ஒருங்குகூடி அதிசயத்துடன் கோ-யில் சென்று திருப்பள்ளிஎழுச்சிக்காலம் வந்ததும் காப்புநீக்கி உட்புகுந்-தனர். அங்கு முத்துச்சிவிகை, முத்துக்குடை, முத்துச்சின்னங்கள் இருப்பதைக் கண்டனர். கண்டு கைதலைமேற் குவித்து அவற்றை எடுத்துக்கொண்டு மங்கலவாத்தியங்கள் முழங்கச் சண்பை மன்னரை வரவெதிர்கொள்ளச் சென்றனர். அரத்துறை வள்ளலார் சண்பை மன்னர் கனவிலும் தோன்றி தாம் மகிழ்ந்தளிக்கும் அவற்றைக் கொள்ளுமாறு கூறினார். பிள்ளையார் துயிலுணர்ந்து கண்டகனவைத் தந்தையாராதியோருக்குக் கூறி அருள் வியந்து தொழுதனர். பொழுது புலர அஞ்செழுத்தோதி எழுந்து, நீறணிகோலமேனியராய் அரத்துறை செல்லத் தொடங்கினர். அப்பொழுது 'அரகர' என்ற ஒலியோடு முத்துச்சிவிகை, முத்துக்குடை, முத்துச்சின்னம் என்பவற்றை ஏந்திய-வர்களாய் அந்தணர் வந்தனர். வந்த அந்தணர் "அரத்துறை ஈசர் தந்தபேருள், இவற்றை ஏற்றுக்கொள்ளுங்கள்" என்று பணிந்தனர்.

புகலிமன்னர் * **"எந்தைஈசன்..."** என்றெடுத்துத் திருப்பதிகம் பாடி முத்துச்சிவிகையை வலம்வந்து அஞ்செழுத்தோதி உலகெலாம் உய்ய ஏறி அருளினார், தொண்டர் ஆரவாரித்தார்கள். அண்டரும் ஆரவாரித்-தார்கள். பிடித்த வெண்குடையின். முத்துக்களும் ஆரவாரித்தன. முத்துச்சின்னங்கள்

"ஞானசம்பந்தன் வந்தான்
பாலறாவாயன் வந்தான்
முத்தமிழ் விரகன் வந்தான்."

என்றென்று ஊதின. எழுதுமறை அருளும் சண்பையர் மன்னர் திருவரத்துறையை வந்து சேர்ந்தார். கோபுரவாயிலில் சிவிகையினின்றும் இறங்கிக் கோயிலை வலம் வந்து திருமுன்பு வீழ்ந்து **"பொன்னடித்தாமரை போற்றி"** என்று எழுந்து திருப்பதிகம் பாடினார். பாடிப்புறம் வந்து அப்பதியிலே சிலநாள் உறைந்தார். அவ்வாறு உறையும் நாளில் அருகேயுள்ள திருநெல்வெண்ணெய் முதலாம் திருத்தலங்களுக்கும் சென்று திருப்பதிகம் பாடி வழிபட்டு வந்தார். பின் தோணிபுரத்துப் பெருமான் அருள் நினைந்து அரத்துறையிறைவரை வணங்கி விடைபெற்றுச் சிவிகை ஏறினார். வரும் வழியெங்கும் தொண்டர்கள் நிறைகுடம் விளக்கு ஆகியவற்றுடன் மங்கலமாகவரவெதிர் கொண்டனர். பிள்ளையாரும் வழியில் எதிர்ப்பட்ட பழுவூர் ஆதிய தலங்களைத் திருப்பதிகம் பாடி வழிபட்டுத் திருச்சேய்ஞலூரை அடைந்தார். சேய்ஞலூர் அந்தணர்கள் அவ்வூரை அலங்கரித்து மங்கலவாத்தியங்களுடன் வரவெதிர்கொள்ள முந்திநின்றனர். ஞானசம்பந்தர், சண்டேசுரநாயனார் அவதரித்த பதி எனும் ஆதரவால் சிவிகையினின்றும் இறங்கி அப்பதியை வணங்கிக் கோயிலுட் சென்று வணங்கித் திருப்பதிகம் பாடினார். அப்பதிகத்தில் தாதை தாள் தடிந்த கண்டீசப்பிள்ளையார் பாதகப்பயன் பெறும் பரிசினைச் சிறப்பித்துப் பாடினார்.

---

* "எந்தைஈசன் எம்பெருமான் ஏறமர்கடவுள் என்றேத்திச்
சிந்தை செய்பவர்க் கல்லால் சென்று கைகூடுவதன்றால்
கந்தமாமலர் உந்திக் கடும்புனல் நிவா மல்குகரைமேல்
அந்தண் சோலை நெல்வாயில் அரத்துறை அடிகள் தம் அருளே"

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்.

சேய்ஞலூரினின்றும் புறப்பட்டுப் பந்தணை நல்லூர் ஆகிய தலங்களை வழிபட்டுப் பதிகம் பாடிப் பிரமபுரத்தை நெருங்கிய போது பிள்ளையார் எழுந்தருளும் செய்தியை அத்திருப்பதியுள்ளார் கேள்வியுற்றனர். ஊரினை அலங்கரித்து மங்கலப் பொருட்களுடன் சென்று வெண்குடை நிழற்கீழ் முத்துச்சிவிகையில் ஏறிவரும் ஞான போனகரைக் கண்டனர். கண்டபொழுதே கைகுவித்து, கண்களித்து, காதல் பொங்கி, ஆடைகளைவீசி ஆரவாரித்துச் சென்று அடிவணங்கி அவரோடு கூடி மகிழ்ந்து புகலியுள் புகுந்தனர். புகலிவேந்தர் மாடவீதியிலே மாதர் இருமருங்கும் நெருங்கி மங்கல வாழ்த்திசைபாட கோயிலைச்சேர்ந்து கோபுரத்தை வணங்கி உள்புகுந்து வலம் வந்து தோணிபுரத்தீசர் முன் தாழ்ந்து எழுந்து நின்று தமிழ் வேதம் பாடினார். பெரிய பெருமானின் பரங்கருணைத் திருவருளைப் போற்றிப் புறம்வந்து இல்லம் சேர்ந்தார். இல்லத்தில் தாயார் திருநீற்றுக்காப்பினைச் சாத்திப் போற்றினார்.

இவ்வாறு உறையும் நாளில் உபநயனப் பருவம் வந்துற்றது. ஒருபிறப்புமில்லாதவரை இருபிறப்பாளராக்கும் அச்சடங்கினை உலகியல் வழக்கப்படி செய்யத் தொடங்கினார்கள். அச்சடங்கிலே நால் வேதமும் தந்தோம், என்ற வேதியர்க்கு புகலிவந்த புண்ணியனார் எண்ணிறந்த வேதம் ஓதியருளினார். வியப்புற்ற வேதியரும் அவரைக் கண்கண்ட தியானப் பொருள் எனத் துணிந்து அவரிடம் வேதம் கேட்டு ஐயம் தீர்ந்தார். அவர்களுக்கு *"**அந்தியுள்மந்திரம் அஞ்செழுத்தும்மே**" என பஞ்சாக்கரத் திருப்பதிகம் ஓதி உபதேசித்தார்.

உபநயனச்சடங்குமுடிந்து சீகாழிப்பதியில் இருக்கும் பொழுது தில்லைத்தரிசனம் செய்திருந்த திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் சிவஞானம் பெற்ற அற்புதத்தைக் கேள்வியுற்றார். கேள்வியுற்றதும் அவரைத் தரிசிக்கும் ஆர்வத்தால் சீகாழி வந்தார். திருநாவுக்கரசர் வருகிறார். என்ற செய்தி கேட்ட சீகாழிப்பிள்ளையார் "இது ஓர் நல்-

* துஞ்சலும் துஞ்சலில்லாத போழ்தினும்
நெஞ்சகம் நைந்து நினைமின் நாள்தொறும்
வஞ்சகம் அற்றடி வாழ்த்த வந்த கூற்று
அஞ்ச உதைத்தன அஞ்செழுத்துமே

வினைப்பேறு என்று அன்பர் கூட்டத்தோடும் எதிர்கொள்ளச் சென்றார்" சென்ற பிள்ளையார்

"சிந்தை இடையறா அன்பும், திருமேனி தன்னில் அசைவும்
கந்தை மிகையாம் கருத்தும், கையுழவாரப் படையும்
வந்திழி கண்ணீர் மழையும், வடிவிற்பொலி திருநீறும்
அந்தமிலாத் திருவேடத் தரசும் எதிர் வந்தணைய"

கண்டு, தொண்டர் திருவேடம் தோன்றியதெனத் தொழுது அண்மையிற் சென்றார். நாவுக்கரசர் எதிரேவந்து பணிந்தார். அவரை இன்னுரைகூறி வரவேற்றுத் தம்முடன் அழைத்துக்கொண்டு கோயிலுட் புகுந்துகும்பிட்டார். பின் தமது இல்லத்துக்குக் கொண்டு சென்றார். அன்போடு அமுது செய்வித்து உடனுறையும் இன்பம் கண்டார். சிலநாள் செல்ல திருத்தலங்கள் கும்பிடும் பெருவிருப்பாலே சீகாழிப்பிள்ளையாரின் இசைவுபெற்றுப் பிரியாத நண்போடும் புறப்பட்டார். திருநாவுக்கரசருடன் பிள்ளையார் சீகாழி எல்லை வரைச் சென்று மீண்டுவந்தார்.

திருஞானசம்பந்தர் சீகாழியில் தங்கியிருந்த நாட்களில் திருவெழுகூற்றிருக்கை, மொழிமாற்று, மாலைமாற்று, இயமகம், ஏகபாதம், ஈரடிமேல் வைப்பு, நாலடிமேல் வைப்பு, ஆகிய சித்திரகவிகளைப் பாடியருளினார்.

இவ்வாறு சீகாழிப்பதியில் சிலநாள் உறைந்த திருஞானசம்பந்தர் தமிழ்நாட்டுத் திருத்தலங்கள் பலவற்றையும் தரிசித்துத் தமிழ்மாலை பாடத் திருவுளம் பற்றினார். தமது எண்ணத்தைத் தந்தையாருக்கு எடுத்துரைத்தார். சிவபாதவிருதயரும் "அருமையாற் பெற்ற உன்னைப் பிரிந்திருக்கவும் முடியாது. இருமையும் பயக்கும் யாகம் செய்யும் நாளும் நெருங்கிவிட்டது. ஆதலால் உம்மோடு சிலநாள்கள் வருதற்கு இசைதல் வேண்டும்" எனக் கூறினார். பிள்ளையார் அவருக்கு அவ்வாறே இசைவு அருளிச் சீகாழிப்பெருமான் கோயில் சென்று வழிபாடுசெய்தார். வழிபாடுசெய்து விடைபெற்றுக் கொண்டு தந்தையாரும், தானும், பாணரும், பாடினியும், தொண்டர் கூட்டமுமாய் சீகாழிப்பதியந்தணருள் உடன் வருவார் வர, வராதார் நீங்காவிடை கொண்டு திரும்ப திருத்தலயாத்திரையைத் தொடங்கினார். சின்னங்கள் சிரபுரத்தாண்டகை

வந்தார் என்று ஊதின. சங்கநாதம் முதலான மங்கல வாத்தியங்கள் ஒலித்தன. வேத ஒலி முழங்கியது. வீதியின் இருமருங்கும் குழுமிய அன்பர்களின் மங்கல வாழ்த்துரை எங்கும் நிறைந்தது. சண்பையராளி திருக்கண்ணார் கோயிலைப் பெருவிருப்போடு பணிந்தார். அருகேயுள்ள பிறகோயில்களையும் ஆர்வத்துடன் பணிந்து தமிழ்மாலை சாத்தினார். காவிரியின் வடகரைப்பக்கமாய் மேற்றிசை நோக்கிச் செல்லலாயினர். செல்லும் வழியில் திருப்புள்ளிருக்கு வேளூர் தோன்றியது. உள்ளுருகும் அன்பு பெருகச் சென்று முக்கண்ணப்பரைப் பாடிப்பரவி வழிபட்டார். அப்பாடலில் சம்பாதி, சடாயு என்னும் பறவைவேந்தர்கள் பூசனை செய்த திறத்தையும் பொறித்து வைத்தார். பின்னர் அங்கு நின்றும், திருநின்றியூர், திருப்புன்கூர் ஆகிய தலங்களை வழிபட்டுத் திருப்பதிகங்கள் பாடித் திருந்துதேவன்குடி என்னும் திருத்தலத்தைச் சேர்ந்தார். பொருந்திய காதலுடன் அக்கோயிலை வணங்கி *"**மருந்து வேண்டில் இவை..**" எனும் அருந்தமிழ் மாலை பாடினார். அங்கிருந்து திருஇன்னம்பர், வடகுரங்காடுதுறை ஆகிய தலங்களை வழிபட்டுத் திருப்பதிகம் பாடிச் சென்று திருவையாறை அடைந்தார். திருவையாற்றிலே வாழும் திருத்தொண்டர்கள் அத்திருநகரை அலங்கரித்து ஞானபோனகரை எதிர்கொண்டு அழைத்து வந்தனர். ஞானபோனகர் சிவிகையினின்றும் இறங்கித் திருத்தொண்டரோடு கலந்து செல்லும் பொழுதில் *"**புலனைந்தும் பொறிகலங்கி...**" எனும் சந்தவிசைத் திருப்பதிகம் பாடிச் செல்லலாயினர். கோபுரத்தை வணங்கி உள்சென்று வலமாக வந்து பெருமான் திருமுன்னிலையில் வீழ்ந்திறைஞ்சி நின்றார். பெருமான் ஆடும் திருக்கூத்து நிலைமை தோன்ற **"ஆடுமாறது வல்லான் ஐயாற்று எம் ஐயனே"**

---

* "மருந்து வேண்டில் இவை மந்திரங்கள் இவை
புரிந்து கேட்கப்படும் புண்ணியங்கள் இவை
திருந்து தேவன்குடித் தேவர்தேவெய்திய
அருந்தவத் தோர்தொழும் அடிகள் வேடங்களே

* "புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி அறிவழிந்திட்டைம்மேலுந்தி
அலமந்த போதாக அஞ்சேலென்றருள் செய்வான் அமருங்கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட முழவதிர மழையென்றஞ்சிச்
சிலமந்தி அலமந்து மரமேறி முகில்பார்க்கும் திருவையாறே

எனத் திருப்பதிகம் பாடினார். ஆடினார்; கண்ணீர் பொழியப் பலமுறை-யும் பணிந்தெழுந்தார். இவ்வாறு வழிபட்டு அத்திருத்தலத்தில் சில-நாள் உறைந்தார். அந்நாளில் அருகிலுள்ள திருத்தலங்களுக்குச் சென்று வழிபட்டுத் தமிழ் மாலைகளும் சாத்தி வந்தார். பின்னர் அங்கிருந்தும் மேற்றிசைப் பக்கமாகச் செல்ல விரும்பிப் பெருமான் அருள் கொண்டு திருநெய்த்தானம் எனும் திருத்தலத்தை அடைந்தார். அங்கு நெய்யாடியப்பரை வழிபட்டு **நெய்யாடிய பெருமானிடம் நெய்த்-தானம்** என்று திருப்பதிகம் பாடினார். அங்கிருந்தும் திருமழபாடி சென்று மழபாடி வைரத்தூணைப் பாடிப்பரவினார். அப்பால் திருக்கானூர், அன்பிலாலந்துறை ஆகிய தலங்களை வழிபட்டுப் பொன்னிநதியின் வடகரையிலுள்ள திருத்தலங்களை வணங்கும் கருத்தினராய்த் திருப்-பாச்சிலாச்சிரமம் சென்றார். திருப்பாச்சிலாச்சிரமத்திலே கொல்லிமழவன் என்றோர் குறுநிலமன்னன் இருந்தான். அவனது அழகுமிகுந்த மகள் முயலகன் என்னும் கொடியநோயால் பிடியுண்டாள். அதனால் அவனும் சுற்றத்தினரும் மனந்தளர்வுற்றனர். மருத்துவங்கள் பல செய்தும் அந்நோய் தணியவில்லை. அவன் சிவபிரான் திருவடியையே துணையெனக் கொண்டு வாழும் குலத்திலே தோன்றியவனாதலால் பாச்சிலாச்சிரமத்து இறைவனே துணை என்று கோயிலின் முன் மகளைக் கொண்டுவந்தான். அவ்வளவில் "திருஞானசம்பந்தர் வந்தார்" எனும் காளம் ஊதும் ஓசைகேட்டு, மகளை அவ்விடத்திலேயே விட்டுவிட்டு சம்பந்தப்பிள்ளை-யாரை வரவெதிர்கொள்ள விரைந்தான். "நகரமெங்கும் அலங்கரியுங்கள்; மகரதோரணம் நாட்டுங்கள். பூரணகும்பமும் திருவிளக்கும் வையுங்கள். மற்றும் அணிகளும் செய்யுங்கள்" என்று குடிகளை ஏவித் தான் பிள்ளையாரை நாடிச் சென்றான். பிள்ளையார் எழுந்தருளப்பெற்றேன் என்ற ஆனந்தத்தால் காதல் வெள்ளம் கண்வழிப்பொழிய சிவிகை-யின் முன் வீழ்ந்து வணங்கினான். அப்பொழுது பூதபரம்பரை பொ-லியப் புனிதவாய் மலர்ந்தழுத வள்ளலார் 'எழுக'. என மொழிந்தார். அந்த எழுச்சி மொழியால் எழுந்து பிள்ளையாருடன் மங்கல வாத்தியம் முழங்கும் வீதியூடாகச் சென்றான். பிள்ளையார், கோபுரத்தை அணுகி-யதும் சிவிகையினின்றும் இறங்கிக் கோயிலை வலம் வந்து பெருமான் திருமுன்னிலையைச் சேர்ந்தார். திருமுன்னிலையிலே ஒரு சிறுமி உணர்வற்றுக் கிடப்பதைக் கண்டு இரங்கி 'இது என்ன' என வினவி-

னார். அப்பொழுது மழவன் பிள்ளையாரை வணங்கி "இவள் அடியேன் பெற்ற மகள். இவளை முயலகன் நோய் வருத்துவதால் இறைவர் முன் இட்டுவைத்தேன்" எனக் கூறினான். அருள் கூர்ந்த ஆளுடைய பிள்ளளையார் பாச்சிலாச்சிரமத்துப் பரமரைப் பணிந்து * **"துணிவளர் திங்கள்..."** எனத் தொடங்கும் **தணிவில் பிணிதவிர்க்கும் திருப்பதிகம்** பாடலானார். திருக்கடைக்காப்புப்பாடி நிறைவுறும் தருணத்தில் அச்சிறுமி உறங்கி எழுவாள் போல எழுந்து தந்தையின் பக்கத்தே வந்து நின்றாள். பெருமகிழ்வடைந்த மழவன் மகளாருடன் பிள்ளையாரடியில் வீழ்ந்து வணங்கினான். பிள்ளையார் ஒன்றிய சிந்தையுடன் பாச்சிலாச்-சிரமத்துப் பரமரைப் பணிந்தார். தொண்டரெல்லாம் 'அர' வெனும் ஒலி எழுப்பி ஆரவாரித்தனர்.

காழிக் கற்பகனார் பாச்சிலாச்சிரமத்து இறைவரிடம் அருள் பெற்றுத் திருப்பைஞ்ஞீலித்தலத்துக்குச் சென்றார். பைஞ்ஞீலிப்பரமரைப் பணிந்து உலகினில் **ஓங்கிவாழும் திருப்பதிகம்** பாடி திருஈங்கோய்-மலையைச் சென்று சேர்ந்தார். ஈங்கோய்மலை இறைவரைப் பணிந்து இசைப்பதிகம் பாடினார். பின்னர் கொங்கு நாட்டின் மேற்குப்புறத் திருத்தலங்களையும். பொன்னித்தென்கரையிலுள்ள கொங்குநாட்டுத், திருத்தலங்களையும் வழிபட்டுக் கொடிமாடச் செங்குன்றூரை அடைந்தார். அவ்வூரிலுள்ள அடியவர்கள் தோரணம் முதலாய அலங்காரங்களுடன் தலைமேற்குவித்த கையராய்ச் செங்குன்றூர் நின்ற அந்தணரைப் பாடிப்பரவிவழிபட அழைத்துச் சென்றனர். செங்குன்றூரை ஏத்தி **நலம்மலிபாடல்** பாடிய பின்னர் அருகேயுள்ள பல தலங்களையும் சென்று வழிபட்டு மீண்டும் செங்குன்றூரில் வந்து உறைந்தார்.

அப்போது மழைக்காலம் நீங்கி முன்பனிப்பருவம் வந்தது. அதனால் தாமரைமலர்கள் கருகின. அறுகுப்புல்லின் நுனியில் பனிமுத்துக்கள் தங்கின. மலைகள் பனிப்புகார் மூடி வெண் சீலையாற் போர்த்தனபோல் தோன்றின. குளிர்ந்த வாடைக்காற்று இரவு பகலாக

---

* "துணிவளர் திங்கள் துளங்கி விளங்கச் சுடர்ச்சடை சுற்றி முடித்துப்
பணிவளர் கொள்கையர் பாரிடம் சூழ ஆரிடமும்பலி தேர்வர்
அணிவளர் கோலமெல்லாஞ்செய்து பாச்சில் ஆச்சிராமத்துறைகின்ற
மணிவளர் கண்டரோ மங்கையை வாடமயல் செய்வதோ இவர் மாண்பே"

வீசியது. சூரியன் தன் கதிர்களை விரிக்க அஞ்சினான். வீடுகளெங்கும் குளிர்காய்வதன் பொருட்டு இரும்புக் கனற்சட்டிகளை வைத்தனர். அப்பகுதியில் பலநாள் தங்கியிருந்ததால் பிள்ளையாருடன் வந்த பரிசனங்கள் குளிர்சுரத்துக்கு ஆளாயினர். அதனை அவர்கள் பிள்ளையாரிடம் விண்ணப்பித்த பொழுது பிள்ளையார் இறைவனைத் தொழுது * **"அவ்வினைக்கு இவ்வினையாம்....."** எனும் திருநீலகண்டத் திருப்பதிகத்தை ஆணைமொழியாக அருளிச் செய்தனர். அவ்வாணை மொழியால் கொடிமாடச் செங்குன்றூரில் மாத்திரமன்றி கொங்குநாடு அடங்கலும் சுரநோய் தீர்ந்தொழிந்தது. அப்பதியில் சில நாள் உறைந்த பின்னர் திருப்பாண்டிக்கொடுமுடி என்னும் திருத்தலத்தையடைந்தார். பாண்டிக்கொடுமுடியாரைப் பணிந்து பதிகம் பாடித் திருவெஞ்சமாக்கூடல் ஆதிய பலபதிகளையும் கடந்து கிழக்குநோக்கித் திரும்பினார். செல்வக் கருவூர்த்திருவானிலையைச் சென்றிறைஞ்சிச் செந்தமிழ்மாலை சாத்திக் கொங்குநாட்டினின்றும் நீங்கி சோழநாட்டையடைந்தார்.

சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் திருத்தலங்களை வழிபட்டுத் திருப்பராய்த்துறையை வந்து சேர்ந்தார். பராய்த்துறைப் பெருமானைக் கண்பனிமாரிதூவ **கோதில் தமிழ்ச் சொன்மாலை** பாடிப் பரவினார். பராய்த்துறை அண்ணல் அருள்பெற்று திருவாலந்துறை, திருச்செந்துறை ஆகிய தலங்களை வழிபட்டுத் திருக்கற்குடிமலையை அடைந்தார். கற்குடிமலையில் எழுந்தருளியிருக்கும் கனகக் கொழுந்தினைக் கும்பிட்டு மூக்கீச்சரம் பணிந்து திருச்சிராப்பள்ளிக் குன்றினை அடைந்தார். சிராப்பள்ளிமேவிய சென்றடையாத திருவுடையானைச் செந்தமிழ்ப்பதிகம் பாடி உளம்குளிர்ந்து திருஆனைக்காவைச் சென்று சேர்ந்தார். திருவானைக்காவிலே வெண்ணாவலின் கீழ் வீற்றிருக்கும் மெய்ப்பொருளைப் பணிந்து நான்குகொம்புள்ள யானைபணிந்ததனையும், கோச்செங்கணான் கோயில் செய்தமையையும் பாடிப்பணிந்தார். அத்திருப்பதி திருக்கயிலாயம், திருமயேந்திரம், திருவாரூர் எனும், திருத்தலங்களைத் தன்னுட்-

---

* "அவ்வினைக்கு இவ்வினையாம் என்று சொல்லும் அஃது அறிவீர்
உய்வினை நாடா திருப்பது உந்தமக்கு ஊனமன்றே
கைவினைசெய்து எம்பிரான் கழல் போற்றுதும் நாமடியோம்
செய்வினை வந்தெமை தீண்டப்பெறா திருநீலகண்டம்"

கொண்ட "கூடற்சதுக்கம்" எனக் கொண்டு ❀**"மண்ணது உண்டரி..."** எனும் முதலையுடைய திருப்பதிகம் பாடினார். ஆனைக்கா அண்ணலைப் பாடிப்பரவி அப்பதியிலே சில நாள் உறைந்த பின் திருத்தவத்துறை, திருப்பாற்றுறை, எறும்பியூர்மாமலை ஆகிய தலங்களைக் கும்பிட்டுத் திருநெடுங்களத்தைச் சேர்ந்தார். நெடுங்களம் மேயவரைப் பணிந்து ❀**"மறையுடையாய்..."** எனும் **இடர்களையும் திருப்பதிகம்** பாடிக் காட்டுப்பள்ளியை அடைந்தார். காட்டுப்பள்ளி இறைவரைப் பணிந்து, **பாவம் பறையும் திருப்பதிகம்** பாடித் திருவாலம் பொழில் இறைவரை கும்பிட்டுத் திருப்பூந்துருத்திப் பொய்யிலியார் மீது திருப்பதிகம்பாடித் திருக்கண்டியூர் தொழச்சென்றார். கண்டியூர் வீரட்டானேசுரரின் கழல்-பணிந்து அவ்வூர் அன்பரிடம் பெருமான் பெருமைகளை வினவும் முறையாக **வினாவுரைத் திருப்பதிகம்** பாடியருளினார். அப்பால் சோற்றுத்துறை அடைவோம் எனப் பாடியவண்ணம் திருச்சோற்றுத்துறை அடைந்தார். அப்பதியைக் கும்பிட்டு திருவேதிக்குடியைச் சேர்ந்து நாதர் கோயிலுட் புகுந்து பாதபங்கயம் போற்றித் தமிழ் வேதம் பாடினார். வேதிக்குடிமேவிய ஆதிப்பொருள் மீது எழுது மாமறை பாடிப்பரவியபின் திருவெண்ணிப் பதியைச் சேர்ந்தார். திருவெண்ணி-மேவிய இறைவரை நண்ணிப் **பண்ணின் நீடிய பதிகம்** பாடிய பின் அருகேயுள்ள பலபதிகளையும் பணிந்து சக்கரப்பள்ளியை அடைந்தார். சக்கரப்பள்ளியார் கோயிலுட் புகுந்து சொற்றமிழ் வேதம்பாடி திருவாலந்-துறையை அடைந்தார். அங்கிருந்து பாலைத்துறை ஆகிய பதிகளுக்குச் சென்று பதிக இசைபாடித் திருநல்லூரை அடைந்தார். நல்லூர் வாழ் அந்தணர்கள் அவரை மங்கலமாக வரவேற்றனர். சிவிகையினின்றும் இறங்கி அக்கோயிலை வலம் செய்து பதிகம் பாடிச் சில நாள்

❀ "மண்ணது உண்டரி மலரோன்காணா
வெண்ணாவல் விரும்பு மயேந்திரரு
கண்ணது வோங்கிய கயிலையாரும்
அண்ணல் ஆரூர் ஆதி ஆனைக்காவே"

❀ "மறையுடையாய் தோலுடையாய் வார்சடைமேல் வளரும்
பிறையுடையாய் பிஞ்ஞகனே என்றுனைப் பேசினல்லால்
குறையுடையார் குற்றமோராய் கொள்கையினாலுயர்ந்த
நிறையுடையார் இடர்களையாய் நெடுங்கள மேயவனே"

அங்குறைந்தார். அங்கிருந்து திருக்கருகாவூரை அடைந்தார். கருகாவூர் இறைவரின் கழல் பணிந்து **"அந்தமில் அவர்வண்ணம் அழல் வண்ணம்"** என்று செந்தமிழ்ப் பதிகம் பாடினார். பின்னர் பூவணூர், ஆவூர் ஆகிய பதிபலவும் பாடிப்பணிந்து திருவலஞ்சுழியை வந்தடைந்தார். வலஞ்சுழியில் வாழும் முதிரும் அன்பர்கள் வரவெதிர்கொள்ள சிவிகையினின்றும் இறங்கி அவர்களைக் கைதொழுது வலஞ்சுழி-வாணரின் கோயிலுட்புகுந்து வழிபட்டார். அத்திருப்பதியிலே பலநாள் உறைந்து வழிபடும் புண்ணியம் பெற்ற சம்பந்தப்பிள்ளையார் பலதிருப்-பதிகங்கள் பாடிப்பரவினார். அப்பாடல்களைப் பாடிப்பணிவோர் அடி-சேர்வர் என்று ஆணை கூறினார். வலஞ்சுழி வாணனை * **"என்ன-புண்ணியம் செய்தனை...."** என வாயாரப் பாடி வழிபட்டிருக்கும் நாளில் முதுவேனிற் பருவம் வந்துற்றது. வேனில் வெம்மையைப்பாராது பல பதிகளையும் பணிந்து பாடிப்பரவி உமையம்மையார் வழிபட்ட திருச்சத்திமுற்றத்தை அடைந்தார். அம்மையார் அருச்சித்த திருவ-டிகளை ஆர்வமுறப்பணிந்து பாடிமகிழ்ந்த பின்னர் திருப்பட்டீச்சரம் பணியச் சென்றார். செல்லும் வழியிலே சிவபூதங்கள் வானில் மறைந்து நின்று முத்துப்பந்தர் பிடித்தனவாய் பட்டீசத்திறைவர் எம்மைவிடுத்து அருள்புரிந்தார் என்று கூறின. அவ்வானொலியும், முத்துப்பந்தரும் ஆகாயத்தே தோன்றக் கண்ட ஆளுடைய பிள்ளையார் இது இறைவன் திருவருளெனில் ஏற்றுக்கொள்ளத் தகுவதே" எனக் கருதி நிலத்தின் மீது இறங்கிப்பணிந்தார். வானிலிருந்து இறங்கிய முத்துப்பந்தரினை அடியார்கள் கைக்கொண்டு விரித்துப் பிடித்தார்கள். ஞானசம்பந்தர் அவ்வழகிய பந்தரின் நிழலை ஈசன் எந்தை இணையடி நீழலெனக் கருதி இனிதமர்ந்தார். அடியார் புடை சூழப் பட்டீசர் கோயிலடைந்து பண் இசைபாடிப் பரவினார்.

பட்டீசர் திருவருள் வெள்ளத்தில் திளைத்த திருஞானசம்பந்தர். திருப்பழையாறை, திருஇரும்பூளை, திருச்சிவபுரம் ஆகிய தலங்களை

---

* "என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே இருங்கடல் வையத்து
முன்ன நீபுரி நல்வினைப் பயனிடை முழுமணித் தரளங்கள்
மன்னுகாவிரி சூழ்திரு வலஞ்சுழி வாணனை வாயாரப்
பன்னி ஆதரித் தேத்தியும் பாடியும் வழிபடும் அதனாலே"

வழிபட்டுத் திருக்குடமூக்கினை அடைந்தார். திருக்குடமூக்கினில் வாழும் செல்வவேதியர்கள் வேதவொலி பெருக. மங்கலவாத்தியங்கள் முழங்க வேந்தரை எதிர்கொள்வது போலத் திருஞானசம்பந்தப் பெருமானை வரவெதிர்கொண்டனர். அத்திருப்பதியைப் பாடிப்பணிந்த பின்னர் திருநாகேச்சரம் ஆகிய தலங்களை வழிபட்டுத் திருவிடை மருதூரைச் சேர்ந்தார். அங்கிருந்து பலதிருத்தலங்களையும் வழிபட்டுத் திருவாவடுதுறையை அடைந்தார். அப்போது சிவபாதவிருதயர் தாம் வேள்வி செய்தற்குரிய காலம் நெருங்கியது எனத் தெரிவித்து அதற்குப் பொருள் வேண்டுமெனக் கூறினர். அவ்வேண்டுகோளுக்கு இசைந்த பிள்ளையார் ஆவடுதுறை அரனை வேண்டி * **"இடரினும் தளரினும்..."** எனும் திருப்பதிகத்தைப் பாடியருளினார். அப்பொழுது, சிவபூதம் ஒன்று தோன்றி ஆயிரம் பொன் அடங்கிய பொற்கிழி ஒன்றை இறைவர் சந்நிதியிலுள்ள பீடத்தில் வைத்து "இப்பொற்கிழியானது எடுக்க எடுக்கக் குறையாத உலவாக்கிழி, இறைவர் அருளால் உமக்கு அளிக்கப் பெற்றதாகும்." எனக் கூறி மறைந்தது. ஆவடுதுறை அரனார் அருளிய அவ்வுலவாக் கிழியை உச்சியில் வைத்து மெச்சிய ஆளுடைய பிள்ளையார் அதனைத் தந்தையாரிடம் கொடுத்து "நீவிர் மட்டுமன்றி சீகாழிவாழும் வேதியர் யாவரும் சிவவேள்வி செய்தற்கு வேண்டும் பொருள்களை மென்மேலும் தந்துவளர்வது இவ்வுலவாக்கிழி" என்றருளினார். பொற்கிழியைப் பெற்ற சிவபாதவிருதயர் சிவஞானக்கன்றினிடம் விடைபெற்றுச் சீகாழிப்பதியை அடைந்தார்.

திருஞானசம்பந்தர் திருவாவடுதுறையினின்றும் திருக்கோழம்பம் வைகல் மாடக்கோயில் ஆகிய தலங்களைப் பாடித்துதித்துத் தருமபுரம் பதியை அடைந்தார். அப்பதி திருநீலகண்ட யாழ்ப்பாணரின் தாயாரின் பிறந்தகம் ஆகும். அங்குவாழ்ந்த பாணரின் உற்றார் சம்பந்தப் பிள்-

---

* "இடரினும் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோ எமை ஆளுமாறு ஈவதொன்றெமக்கில்லையேல்
அதுவோ உனதின்னருள் ஆவடுதுறை அரனே"

ளையாரை எதிர்கொண்டு போற்றினார்கள். பெரும்பாணரும் தாம் ஆளுடையபிள்ளையார் **அருளிச் செயல்களான** திருப்பதிகங்களை யாழிலிட்டு வாசிக்கும் பேறு பெற்றமையைச் சுற்றத்தார்க்கு எடுத்துரைத்தனர். அதனைக்கேட்ட உறவினர் "நீவிர் தக்கமுறையில் யாழிலிட்டு வாசிப்பதால் பதிக இசை எங்கும் பரவுவதாயிற்று" என்று முகமனுரை கூறினர். அதுகேட்டுத் திடுக்குற்ற திருநீலகண்டப் பெரும்பாணர் ஞானசம்பந்தப் பெருமானைப் பணிந்து திருப்பதிகம் யாழிசையில் அடங்காத தென்பதை உற்றாரும் உலகோரும் அறிந்து உய்யும்படி ஒரு திருப்பதிகம் பாடுமாறு வேண்டினார். வித்தகப் பிள்ளையாரும் * **"மாதர் மடப்பிடியும்...."** எனும் யாழ்மூரி பாடினார். அது பாணனார் யாழிசையில் அடங்கவில்லை. பாணனார் நடுக்கமுற்று "பதிக இசையை யாழிலிட்டுப் பாடத்துணிந்தமை இந்தயாழினைத் தொடுதலினால் நேர்ந்த பிழை" என நினைந்து யாழினை உடைத்தற்கு ஓங்கினார். அதனைத் தடுத்துத் தம் கையில் வாங்கிக் கொண்ட பாலறாவாயர் "ஐயரே! அருளின் பெருமை இக்கருவியில் அடங்குமோ? நம் இயல்பிற்கேற்ப இயற்றலே முறைமை; ஆதலால் இந்தயாழ் கொண்டு இறைவர் திருப்பதிக இசையை **வந்தவாறு** பாடுக" என்று பாணரிடம் கொடுத்தார். பாணரும் அதனைத் தொழுது கைக்கொண்டார். தருமபுரத்தில் சிலநாள் தங்கியிருந்த பிள்ளையார் பிறதலங்களையும் வணங்கப் புறப்பட்டு திருநள்ளாற்றை அடைந்தார். நள்ளாற்று நம்பரைப் **போகமார்த்த பூண்முலையாள்** என்னும் திருப்பதிகம் பாடிப் போற்றினார். அதனைத் தாம் தாளமிட்டவாறே, யாழில் இசைக்குமாறு பாணரை வேண்டினார். பாணரும் அதனைச் சண்பை வள்ளலாரும் தொண்டர் குழாமும் மகிழும்வண்ணம் யாழில் இசைத்தனர்.

---

* "மாதர் மடப்பிடியும் மடஅன்னமும் அன்னதோர்
நடையுடைம் மலைம்மகள் துணையென மகிழ்வர்
பூதவினப்படை நின்றிசை பாடவும் ஆடுவர்
அவர் படர் சடை நெடு முடியதொர் புனலர்
வேதமொ டேழிசை பாடுவர் ஆழ்கடல் வெண்டிரை
இரைந் நுரை கரைபொரு துவிம்மிநின் றயலே
தாதவிழ் புன்னை தயங்கு மலர்ச்சிறை வண்டறை
எழில் பொழில் குயில்பயில் தருமபுரம் பதியே"

நள்ளாற்றிறைவரைப் பாடிப்பணிந்த ஆளுடைய பிள்ளையார் திருநீலநக்கநாயனாரின் ஊரான சாத்தமங்கையை அடைந்தார். திருநீலநக்கநாயனார் ஆளுடைய பிள்ளையாரையும் அடியார் கூட்டத்தையும் எதிர்கொண்டழைத்துத் திருவமுதளித்து உபசரித்தார். சம்பந்தப்பிள்ளையார் சாத்தமங்கையில் எழுந்தருளியுள்ள அயவந்திப் பெருமானைப் போற்றிப்பரவிய திருப்பதிகத்தில் **"நக்கன் பரவ அயவந்தி அமர்ந்தவனே"** எனத் திருநீலநக்கரின் பூசனையையும் மெச்சிப் பாடியருளினார். பின்பு பலபதிகளையும் பணிந்து சிறுத்தொண்டர் ஊரான திருச்செங்காட்டங்குடியை அடைந்தார். சிறுத்தொண்டர் பிள்ளையாரை எதிர்கொண்டு போற்றினார். பிள்ளையாரும் சிறுத்தொண்டருடன் அளவளாவி மகிழ்ந்து கணபதீச்சரப்பெருமானைப் பணிந்து பாமாலைபாடினார். அப்பாமாலையில் சிறுத்தொண்டரின் திருத்தொண்டின் பெருமையினையும் சிறப்பித்தருளினார்.

சிறுத்தொண்டரால் உபசரிக்கப்பெற்ற சிரபுரத்துப்பிள்ளையார் திருமருகலுக்குச் சென்று இறைவரை வணங்கி அங்கு சில நாள் அமர்ந்தார். அந்நாளில் கன்னியொருத்தியுடன் உடன் போக்கில் வந்த வணிகன் ஒருவன் திருக்கோயிலருகிலுள்ள மடமொன்றில் துயின்றிருக்கும் பொழுது அரவம் தீண்டி இறந்தான். அத்துயர் பொறாத கன்னிப் பெண் அவனைத் தீண்டவும் மாட்டாதவளாய் அழுதரற்றினாள். அறிவுடைய அப்பெண் "சடையாய் நீயே சரண்" என்று இறைவனை வேண்டி அழுதாள். அவளது அவ்வழுகை ஓசை வைகறைப் போ;தில் மருகல் பெருமானை வழிபட வந்த வள்ளலார் செவியிற் புகுந்தது. அவர் அழுதரற்றும் அப்பெண்ணிடம் சென்று "நீ அஞ்சாதே உன் துன்பம் என்ன எனக்குக் கூறு" என அபயமொழி புகன்றார். அம்மங்கை தான் அவ்வணிகனுடன் வந்த வரலாற்றினைக் கூறி தனியளாயானமைக்கு இரங்கினாள். அத்துயரச் செய்தியைக் கேட்ட சம்பந்தப்பிள்ளையார் ❀**"சடையாய் எனுமால் ...."** எனத் திருப்பதிகம் பாடிப் போற்றினார். அப்பொழுது வணிகன் விடம் தீர்ந்து உயிர்பெற்றெழுந்தான். கன்னி,

❀ "சடையாய் எனுமால் சரண் நீ எனுமால்
விடையாய் எனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவள் உண்மெலிவே"

வணிகனுடன் பிள்ளையார் அடியில் வீழ்ந்து வணங்கினாள். புகலி-வேந்தராகிய பிள்ளையார் அவ்விருவருக்கும் மணம் புணரும் பெரு-வாழ்வை வகுத்தருளினார். திருஞானசம்பந்தர் திருமருகலில் தங்கியிருக்-கும் பொழுது சிறுத்தொண்டநாயனார் அங்கு வந்து திருச்செங்காட்டங்-குடிக்கு மீண்டும் எழுந்தருளல் வேண்டுமெனப் பணிந்தார். பிள்ளையார் இவ்வேண்டுகோளுக்கிசைந்து மருகற்பெருமானை வணங்கி விடைபெ-றச் சென்றார். அப்பொழுது திருச்செங்காட்டங்குடிக் கணபதீச்சரத்தில் வீற்றிருக்கும் கோலத்தை மருகற்பெருமானில் கண்டார். அதுகண்ட பிள்ளையார். * **"அங்கமும் வேதமும்..."** எனும் திருப்பதிகத்தைப் பாடிப் பணிந்தார். சிறுத்தொண்டர்க்கு விடையருளித்துத் திருப்புகலூரை அடைந்தார்.

திருப்புகலூரையடைந்த புகலியர்கோனை முருகநாயனார் எதிர்-கொண்டு அழைத்துச் சென்றார். திருப்புகலூர் வர்த்தமானீசர் கழலை வாழ்த்தி வணங்கி முருகர் திருமடத்தில் அமர்ந்திருந்தார். அங்கு அமர்ந்திருக்கும் நாளில் வர்த்தமானீச்சரப் பெருமானைப் போற்றிப் பரவிய திருப்பதிகத்தில் முருகநாயனாரது பத்திமையையும் ஏற்றிப் பாடினார். இந்நாளில் திருநாவுக்கரசர் திருவாரூர் புற்றிடம் கொண்டாரைப் போற்றித் திருப்புகலூர் வந்தனர். அரசர் வருகையுணர்ந் ஆளுடைய பிள்ளையார் அடியார் குழுவுடன் சென்று அவரை எதிர்கொண்டு அழைத்தனர். அப்பரும் பிள்ளையாரும், அளவளாவி மகிழ்ந்தனர். ஆளுடையபிள்ளையார், ஆரூரரைத் தொழுதவண்ணம் எவ்வண்ணம் எனக் கேட்டார். அப்பர் **"முத்துவிதானமணிப் பொற்கவரி"** என்றெடுத்து ஆதிரைநாள் வண்ணம் பாடினர். அதுகேட்ட ஆளுடையபிள்ளையார் ஆரூர்ப்பெருமானைத் தொழுது வணங்கும் ஆசைகொண்டார். அப்பொழுதே "ஆரூரரைத் தொழுது வந்து உம்முடன் அணைவேன்" எனக் கூறி அப்பரிடம் விடைபெற்று ஆரூர் சென்றார். திருஆரூரில் பிறந்தாரெல்லாம் அவரை வரவேற்றுப் போற்றினர். பிள்ளையார் ஆரூர் எல்லையில்

---

* "அங்கமும் வேதமும் ஓதும் நாவர் அந்தணர் நாளும் அடிபரவ
மங்குல் மதிதவழ் மாடவீதி மருகல் நிலாவிய மைந்தசொல்லாய்
செங்கய லார்புனல் செல்வமல்கு சீர்கொள் செங்காட்டங் குடியதனுள்
கங்குல் விளங்கெரி ஏந்தியாடும் கணபதீச்சரம் காமுறவே"

சிவிகையில் நின்றும் இறங்கி **"சித்தந் தெளிவீர்காள்"** என்ற முதற்குறிப்புடைய திருப்பதிகம் பாடி மலர்தூவி வழிபட்டார். தம்மை எதிர்கொள்ள வந்த திருக்குழாத்தை நோக்கி **"எந்தைதான் எனை ஏன்று கொளுங்கோலோ?"** என வினவி ஆராத காதலுடன் சென்று தேவாசிரிய மண்டபத்தின் முன் நின்று இறைஞ்சினார். திருவாரூர் பூங்கோயிலுட் புகுந்து புற்றிடங்கொண்ட புனிதரைப் போற்றிப் பரவினார். அங்கு அரநெறி எனும் கோயிலிலுறையும் இறைவரையும் பாடிப்பணிந்தார். அருகேயுள்ள திருப்பதிகளையும் சென்று தொழுதார். திருநாவுக்கரசரது பேரன்பின் திறத்தை நினைந்து பூம்புகலூர் வருவதற்காகத் திருவாரூரினின்றும் புறப்பட்டபோது அத்திருவாரூரைப் பிரிதலாற்றாதவராய் "நெஞ்சே நீ மறவாது ஆரூர் தொழுவாயாக" என கைகூப்பித் தொழுதார். தொழுது அமைதியடைந்த ஆளுடையபிள்ளையார் புகலூர் அடைந்தார். புகலூரில் திருநாவுக்கரசர், முருகர் ஆகிய அடியார்கள் பிள்ளையாரை எதிர்கொண்டு அழைத்தனர். பிள்ளையார் முருகநாயனார் திருமடத்தில் உறைந்தார். நீலநக்கர் சிறுத்தொண்டர் ஆகியோரும் அங்குவந்து சேர்ந்தனர். நாயன்மார் பலரும் உடனுறைவின் இன்பம் பெற்றோராய் ஒருவரொருவருடன் உட்கலந்து அளவளாவி மகிழ்ந்திருந்தனர்.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசருடன் இணைந்து இறைவன் வீற்றிருக்கும் திருப்பதிகளை வணங்க எண்ணித் திருப்புகலூரினின்றும் புறப்பட்டார். சிறுத்தொண்டரும், திருநீலநக்கரும் விடைபெற்றுத் தத்தம் ஊருக்குச் சென்றனர். பிள்ளையார் அப்பரைப் பிரிதற்கு மனமில்லாதவராய் முத்துச்சிவிகையின் பின்வரத் தாம் அப்பருடன் சேர்ந்து நடந்து சென்றார். அப்பொழுது அப்பரடிகள் சிவம் பெருக்கும் பிள்ளையாரைப் பார்த்து "சிவபெருமான் உமக்களித்த முத்துச்சிவிகையில் எழுந்தருள்வாயாக" எனப் பணித்தார். அது கேட்ட பிள்ளையார் "பெருமான் திருவருள் அதுவாயின் நீவிர் செல்லுமிடமெல்லாம் யானும் அடியருடன் பின்வரக்கருதுகிறேன்" எனக் கூறினார். அப்பரும் அதற்கிசைந்து முன்சென்றார். பிள்ளையார் பரிசனங்களுடன் பின் சென்றார். அரசும் ஆளுடையபிள்ளையும் திருக்கடவூரை அடைந்த போது அத்தலத்தில் இருந்த குங்குலியக்கலயநாயனார் அவர்களை ஆராத காதலுடன்

எதிர்கொண்டு அழைத்தார். அங்கு காலனைக் காலால் உதைத்த கடவூர் வீரட்டானப் பெருமானைப் பாடிப்பரவிக் கலயனார் இல்லத்தில் அமுது செய்திருந்தனர். அங்கிருந்து ஆக்கூர் ஆகிய தலங்களை வழிபட்டுத் திருவீழிமிழலையை அடைந்தனர். திருமாலின் வழிபாட்டிற்கு உகந்து விண்ணின்றிழிந்த விமானத்தில் வீற்றிருந்தருளும் மணவாளநம்பியின் திருவடிகளைப் போற்றிப்பரவி மகிழ்ந்தனர். திருநாவுக்கரசு சுவாமிகள் உடன் வந்த அடியார்களுடன் கோயிற் புறத்தமைந்த மடத்தில் தங்க திருஞானசம்பந்தப் பிள்ளையார் தம் பரிசனங்களுடன் கோயில் வடபுறத்துத் திருமடத்தில் தங்கியிருந்தனர். பிள்ளையார் திருவீழிமிழலையில் தங்கியிருந்த வேளையில் சீகாழியிலுள்ளார் வந்து கைதொழுது காழிப்பதிக்கு எழுந்தருள வேண்டுமென வேண்டுதல் செய்தனர். அவர்கள் விருப்பத்தை உணர்ந்த பிள்ளையார் இன்று பொறுத்து நாளை வீழிமிழலையிறைவரின் விடைபெற்றுச் செல்வோம் என்றருளினர். அன்றிரவு துயில்கொள்ளும் பொழுது "யாம் தோணியில் அமர்ந்த வண்ணத்தை வீழிமிழலையில் காண்பாய்" எனக் கனவுகாட்டினர் வீழிமிழலைப்பெருமான். கண்விழித்து எழுந்த பிள்ளையார் கைகுவித்து இறைஞ்சி வீழிமிழலைக் கோயில் சென்று அங்கு வீற்றிருக்கும் பெருமானிடத்தில் திருத்தோணிபுரப் பெரிய பெருமானின் கோலத்தைக் கண்டு மகிழ்ந்து **"மைம்மருபூங் குழல்"** என்ற திருப்பதிகத்தைப் பாடிப்பரவினார். காழிமாந்தரை விடைகொடுத்தனுப்பிவிட்டுத் தாம் அப்பருடன் வீழிமலையில் தங்கி இருந்தனர். அக்காலத்தில் மழையின்மையால் பஞ்சமுண்டாயிற்று. சிவனடியார்களையும் பசி நோய் வருத்திற்று. அதுகண்டுபொறாத அரசும், பிள்ளையும் "கண்ணுதலோன் திருநீற்றுச் சார்வினருக்கும் கவலைவருமோ?" என மனம் நொந்து துயின்றனர். துயிலின்போது வீழிமிழலையிறைவர் கனவில் தோன்றி "அடியார் வருத்தம் நீங்குதற் பொருட்டு இப்பஞ்சம் நீங்கும் வரை நாம் நாடோறும் கிழக்குப்பீடத்தில் ஒன்றும், மேற்குப்பீடத்தில் ஒன்றுமாகப் பொற்காசுதருவோம். பஞ்சம் நீங்கிய பின் அக்காசும் தவிரும்" என்று அருளினார். ஆளுடையபிள்ளையார் விழித்தெழுந்து திருநாவுக்கரசருடன் கோயிலுட் புகுந்து ஈசர் அருளிய வண்ணமே பொற்காசு இருக்கக் கண்டனர். அதனைத் தொழுது எடுத்துத் தத்தம் மடங்களுக்கு வந்து

அடியார்களுக்கு அமுது செய்வித்து மகிழ்ந்தனர். திருநாவுக்கரசரது மடத்து அடியார்கள் வாசிதீர்ந்த காசுபெற்றமையால் உரிய காலத்தில் அமுது செய்தனர். திருஞானசம்பந்தர் மடத்து அடியார்கள் பழம் காசு பெற்றமையால் காலம் தாழ்ந்தே அமுது செய்யலாயினர். இதனையறிந்த பிள்ளையார் "வாசிதீரவே காசுநல்குவீர்" எனவேண்டி உரியகாலத்தில் அமுது செய்வித்தார்.

ஆளுடைய பிள்ளையாரும், அப்பரடிகளும் அடியார் கூட்டத்துடன் திருவீழிமிழலையினின்றும் புறப்பட்டுத் திருவாஞ்சியம் முதலிய பலதலங்களைப் பணிந்து பாடி, அன்பர்கள் எதிர்கொண்டு போற்றத் திருமறைக்காட்டை அடைந்தார்கள் அப்பெருமக்கள் இருவரும் திருமறைக்காட்டிலுள்ள திருக்கோயிலை வலஞ்செய்து கோபுரத்துள் நுழைந்து முன்றில் வாயிலை அணுகினார்கள். முன்னாளிலே அருமறைகள் சிவபெருமானை வழிபாடு செய்து திருக்காப்பிடப் பெற்ற திருக்கதவு அம்மறைகளை அன்புடன் ஓதும் அடியார்கள் வந்து திறக்கப்பெறாமையினால் அடைக்கப்பட்டே இருந்தது. அந்நிலையில் அன்பர்கள் வேறோர் பக்கத்தில் வாயிலமைத்து அதன்வழியே சென்று வழிபட்டு வந்தனர். அச்செய்தியினை அடியார்கள் சொல்லக்கேட்ட ஆளுடைய பிள்ளையார், திருநாவுக்கரசரை நோக்கி "அப்பரே! வேதவனப்பெருமானை எப்படியும் இவ்வாயில் வழியாகச் சென்று நாம் வழிபடுதல் வேண்டும். இத்திருக்கதவு திறக்கும்படி நீரே செந்தமிழ்பதிகம் பாடியருளும் என வேண்டிக் கொண்டார். அப்பரும் பிள்ளையார் வேண்டுகோட்கிசைந்து **"பண்ணினேர் மொழியாள் உமைபங்கரோ"** என்ற திருப்பதிகம் பாடிப்போற்றினார். அப்பதிகப் பாடல்களின் பொருட்சுவையினைத் துய்க்க விரும்பிய மறைக்காட்டு இறைவர், பதிகம் முழியுமளவும் திருக்கதவைத் திறக்கத்தாழ்த்தியருளினார். அதுகண்டு வருத்தமுற்ற அப்பமூர்த்திகள் **'அரக்கனை விரலாலடர்த்திட்டநீர், இரக்க மொன்றிலீர் எம்பெருமானீரே'** எனப் பத்தாம் பாடலைப் பாடினார். அடைக்கப்பட்டிருந்த திருக்கதவு இறைவர் அருளால் விரைவில் திறந்து கொண்டது. இரு பெருமக்களும் அளவிலா மகிழ்ச்சியுடையராய் அடியார்களுடன் கோயிலினுள்ளே புகுந்து இறைவன் திருமுன்னர் வீழ்ந்திறைஞ்சித் திருப்பதிகங்கள் பாடிப்போற்றினர். மறைக்காட்டீசரை வழிபட்டு வெளியே வந்த பின்

திருநாவுக்கரசர் ஆளுடைய பிள்ளையாரை நோக்கி, "இத்திருக்கதவம் இறைவனருளால் அடைக்கவும் திறக்கவும் அமையும்படி தாங்கள் இப்பொழுது அடைக்கப்பாடியருளுதல் வேண்டும்." என வேண்டிக் கொண்டார். அதற்கிசைந்த பிள்ளையார் * **"சதுரம்மறை தான் துதி"** என்ற திருப்பாடலைப் பாட அந்நிலையில் முன் திறந்திருந்த கதவு தானே அடைத்துக் கொண்டது. அது கண்டு நாவுக்கரசரும் அங்கிருந்த அடியார்களும் இறைவன் திருவருட்திறத்தினை வியந்து போற்றினார்கள். பிள்ளையார் அத்திருப்பதிகத்தின் ஏனைய பாடல்களையும் பாடித் திருக்கடைக்காப்புச் சாத்தினார். பின்பு இரு பெருமக்களும் அடியார்க-ளுடன் அங்குள்ள திருமடத்தில் தங்கியிருந்தனர்.

அருமறைகளால் திருக்காப்புச் செய்யப்பட்ட திருக்கதவு தம்மால் அரிதில் திறக்கப்பெற்றதும் பிள்ளையாரால் எளிதில் அடைக்கப் பெற்றதும் ஆகிய இரு நிகழ்ச்சிகளையும் எண்ணிய நாவுக்கரசர், தாம் இறைவன் திருக்குறிப்பறியாது திறக்கப்புகுந்தது தவறெனக்கருதிய உள்ளத்தினராய்த் திருமடத்தின் ஒருபால் துயில் கொண்டிருந்தார். அப்பொழுது சிவபெருமான் சைவவேடத்துடன் அரசர் முன்தோன்றி "நாம் திருவாய்மூரில் இருப்போம் எம்மைப் பின்தொடர்ந்து வருக" எனக் கூறிப் போயினார். அவரைக் கண்டபொழுதே கைகளைத் தலைமேல் குவித்தெழுந்த அப்பரடிகள், பேரார்வத்துடன் அவரைப் பின்தொடர்ந்து சென்றார். இவ்வாறு அப்பரடிகளை அழைத்துச் சென்ற இறைவர், அண்மையிலுள்ளார் போற்காட்டி நெடுந்தூரஞ்சென்று வழி-யிடையே மறைந்தருளினார். அந்நிலையில், திருமறைக்காட்டில் திருமடத்தில் தங்கியிருந்த ஞானசம்பந்தப் பிள்ளையார் திருநாவுக்கரசரைக் காணாது "அவர் திருவாய்மூருக்கு எய்தினார்" என அடியார்கள் சொல்லக்கேட்டு அவரைத் தேடிச் சென்றார். வழியிடையே தம்மை அழைத்து வந்த இறைவரைக் காணாது வருத்தமுற்ற நாவுக்கரசர், தம்மை ஆரா அன்பினால் தேடிவரும் கெழுதகை நண்பராகிய

---

* சதுரம் மறைதான் துதிசெய்து வணங்கும்
மதுரம் பொழில்சூழ் மறைகாட்டுறை மைந்தா
இது நன்கு இறை வைத்தருள் செய்க எனக்குன்
கதவம் திருக்காப்புக் கொள்ளும் கருத்தாலே.

ஞானசம்பந்தரைக் கண்டு மகிழ்ந்தார். "அருமறைகளால் அடைக்கப்பெற்ற திருக்கதவை குறிப்பறியாது திறக்க முற்பட்ட என்னைப்போலன்றித் திருத்தொண்டின் நிலைமை நன்கு செறியப்பாடி அடைப்பித்த செழித்த மொழிவளமுடைய திருஞானசம்பந்தப் பிள்ளையார் இதோ வந்து நிற்கின்றார். திருவாய்மூர்ப் பெருமான் என்னையன்றி இவரையும் மறைந்து நிற்க வல்லரோ" என வினவும் முறையில் **"திறக்கப்பாடிய"** என்ற குறுந்தொகையைப் பாடிப்போற்றினார். அப்பொழுது திருவாய்மூரிறைவர் திருஞானசம்பந்தப் பிள்ளையார்க்கு முன் தோன்றி ஆடல் காட்டியருள் புரிந்தார். பிள்ளையார் தாம் கண்ட அற்புதக் காட்சியை, **"தளரிள வளரெனவுமைபாட'** எனும் திருப்பதிகத்தாற் போற்றித் தெய்வக்காட்சியாகிய அதனை அப்பரடிகளுக்கும் காட்டி மகிழ்ந்தார்.

பாண்டி நாட்டிலுள்ள ஆனைமலை முதலிய மலைகளைத் தங்களுக்குரிய இருப்பிடமாகக் கொண்டு வாழ்ந்த சமணர்கள் தங்கள் சமயத்தைப் பரப்புவதுடன் பிற சமயத்தவர்களை இகழ்ந்தும் வந்தனர். அந்நாளிற் பாண்டி நாட்டை அரசு புரிந்தவன் கூன்பாண்டியன் என்பவன். அவன் சமணசமயத்தவர் சூழ்ச்சியிற்பட்டுச் சமணனாயினான். பாண்டி நாட்டுக் குடிமக்களிற் பலரும் சமணசமயத்தை மேற்கொண்டனர். அங்குள்ள திருக்கோயில்களிற் பல அமணப் பாழிகளாகவும், பள்ளிகளாகவும் மாற்றப்பட்டன. மதுரைநகர மாந்தரில் பாண்டிமாதேவியாராகிய மங்கையர்க்கரசியாரும் அமைச்சர் பெருமானாகிய குலச்சிறையாரும் தமக்குரிய சிவநெறியை நெகிழவிடாது கடைப்பிடித்து ஒழுகினார்கள். அவ்விருவரும் திருஞானசம்பந்தப்பிள்ளையார் திருமறைக்காட்டில் எழுந்தருளியிருத்தலைக் கேள்வியுற்று மகிழ்ந்தனர். பிள்ளையாரை வணங்கிவரும்படி தம் பரிசனத்தார் சிலரை மறைக்காட்டிற்கு அனுப்பினார்கள்.

பாண்டி நாட்டிலிருந்து திருமறைக்காட்டிற்கு வந்த பரிசனங்கள் திருஞானசம்பந்தப்பிள்ளையாரைப் பணிந்து தம் நாட்டின் நிலைமையையும் மங்கையர்க்கரசியார், குலச்சிறையார் ஆகிய இவர்களது அன்பு வணக்கத்தையும் தெரிவித்து நின்றார்கள். உடனிருந்த அடியார்கள் சிவநெறிபரப்பப் பாண்டிநாட்டிற்கு எழுந்தருள வேண்டும் எனப் பிள்ளையாரை வேண்டிக் கொண்டார்கள். அது கேட்டு ஆளுடைய

பிள்ளையார் திருநாவுக்கரசரைத் தனியே அழைத்துக்கொண்டு திருமறைக்காட்டுத் திருக்கோயிலுட் சென்று இறைவரைப் பணிந்து மதுரைக்குச் செல்ல வேண்டுமென்னும் பெருவிருப்பத்தை நாவரசர்க்குத் தெரிவித்தார். அதனையுணர்ந்த வாகீசர், பிள்ளையாரை நோக்கிப் "பிள்ளாய், அந்த அமணர்கள் செய்யும் வஞ்சனைக்கு ஓர் எல்லையில்லை என்பதை நானே அனுபவித்திருக்கின்றேன். அன்றியும் ஞாயிறு முதலிய கோள்களும் இப்பொழுது நல்ல நிலைமையில் இல்லை. ஆகவே இப்பொழுது பாண்டி நாட்டுக்கு எழுந்தருள உடன்படுவது ஆகாது," என்று கூறித் தடுத்தருளினார். அது கேட்ட பிள்ளையார் நாம் போற்றுவது நம் பெருமான் திருவடிகளாதலால் நம்பால் எத்தகைய தீங்கும் வராது' எனக் கூறி * **"வேயுறுதோளிபங்கன்..."** எனத் தொடங்கும் கோளறு திருப்பதிகத்தைப் பாடி, நாளும் கோளும் தீயவேனும் இறைவனடியார்களுக்கு நன்காம் எனக் கூறினார். இத்திருப்பதிகத்தைச் செவிமடுத்து மகிழ்ந்த நாவுக்கரசர், மதுரைப் பயணத்திற்கு உடன்பட்டுப் பிள்ளையார்க்கு முன்னே தாம் புறப்படத் துணிந்தார். அதனையுணர்ந்த சம்பந்தர், "அப்பரே! நீர் இச்சோழநாட்டிலே இறைவரைத் தொழுதிருப்பீராக" எனக் கைகூப்பி வணங்கித் தடுத்தனர். அப்பரடிகளும் பிள்ளையாரது விருப்பத்திற்கிணங்கித் தமது பயணத்தை நிறுத்திக் கொண்டார்.

திருஞானசம்பந்தர் நாவுக்கரசரிடம் விடைபெற்று அடியார்கள் புடைசூழச் சிவிகையிலமர்ந்து அகத்தியான் பள்ளி, கோடிக்குழகர் முதலிய தலங்களை வணங்கிச் சோழநாட்டிலிருந்து தென்மேற்றிசையை நோக்கிச் சென்று தென்பாண்டி நன்னாட்டையடைந்தருளித் திருக்கொடுங்குன்றத்து இறைவனை வணங்கி மதுரை நகரத்தின் அருகே வந்தடைந்தார். பிள்ளையார் வருகையை அறிந்து மகிழ்வுற்ற மங்கையர்க்கரசியார், பிள்ளையாரை எதிர்கொண்டழைக்கும்படி குலச்சிறையாரை அனுப்பினார். மந்திரியாராகிய அவரும் மதுரை நகர எல்லையிற் சென்று,

---

* "வேயுறுதோளிபங்கன் விடமுண்ட கண்டன் மிகநல்ல வீணைதடவி
மாசறுதிங்கள் கங்கைமுடிமேலணிந் தென்உளமே புகுந்த அதனால்
ஞாயிறுதிங்கள் செவ்வாய்புதன்வியாழன்வெள்ளி சனிபாம்பிரண்டு முடனே
ஆசறுநல்ல நல்ல அவைநல்ல நல்ல அடியாரவர்க்கு மிகவே"

ஆளுடைய பிள்ளையாரைக் கண்டு நிலமுறப் பணிந்து வீழ்ந்தார். பிள்ளையார் சிவிகையினின்றும் இறங்கி அவரைத் தமது கைகளாற் பற்றியெடுத்து, "செம்பியர் பெருமான்குலமகளாகிய மங்கையர்க்கரசியாருக்கும் திருந்திய தூய நெஞ்சமுடைய அமைச்சராகிய உமக்கும் நம் சிவபெருமானது திருவருள் பெருகும் நன்மைதான் வாலிதே?" என வினவினார். அதனைக் கேட்ட குலச்சிறையார் பிள்ளையாரைப் பணிந்து நின்று "அடியேங்கள் சென்ற காலத்திலே பெற்றுள்ள பழுதடையாத்திறமும், இனி எதிர்காலத்திலே பெறுஞ் சிறப்பும் தேவரீர் இத்தென்தமிழ் நாட்டிற்கு எழுந்தருளிய இந்நிகழ்கால நிகழ்ச்சியினாலே பெற்ற பேறாகும். இதனால் அடியேங்கள் எக்காலத்தும் திருவருளுடையேம் ஆயினோம். நன்மையில்லாத நெறியில் அழுந்திக்கிடக்கும் இந்நாடும் நல்ல தமிழ் வேந்தனாகிய எங்கள் பாண்டியவேந்தனும் வெற்றிபொருந்திய திருவெண்ணீற்றினாலே விளங்கும் மேன்மையையும் பெற்றோம். பாண்டிமாதேவியாகிய அரசியாரும் தாங்கள் இங்கு எழுந்தருளியது அறிந்து அடியேனை இங்கு தங்கள் திருமுன் அனுப்பினார்கள்" எனக்கூறினார். பிள்ளையார் மதுரையை நெருங்கிய நிலையில் திருவாலவாய் எம்மருங்குள்ளது என வினவினார். அங்கு நின்ற அடியார்கள், கோபுரத்துடன் தோன்றும் அதுவே திருவாலவாய் எனக்கூறினார்கள். அதனைக்கண்ட பிள்ளையார் நிறைந்த பேரன்பினால் நிலமுறப்பணிந்து 'அன்பராயினர் பரவும் ஆலவாயாவதும் இதுவே" என வியந்து *"**மங்கையர்க்கரசி...**" என்ற முதற்குறிப்புடைய திருப்பதிகம் பாடிப்போற்றினார். பின்பு குலச்சிறையாருடன் கோயிலை வலம் வந்து இறைவர் திருமுன்னின்றும் **"நீலமாமிடற், றாலவாயிலான் பாலதாயினார் ஞாலமாள்வரே"** என்ற திருப்பதிகத்தைப் பாடிப் போற்றினார்.

ஆலவாயிறைவரைப் பணிதற்குத் திருக்கோயிலினுள்ளே புகும் மங்கையர்க்கரசியார், இறைவரைக் கும்பிட்டுக் கோயில் முன்றிலில் அணைந்த திருஞானசம்பந்தப் பிள்ளையாரைக் கண்டு அவருடைய திருவடித் தாமரைகளில் வீழ்ந்து பணிந்தார். பிள்ளையார், எழுதரிய

---

* "மங்கையர்க்கரசி வளவர்கோன் பாவை வரிவளைக்கைமட மானி
பங்கயச்செல்வி பாண்டிமாதேவி பணிசெய்து நாள்தொறும் பரவப்
பொங்கழலுருவன் பூதநாயகனால் வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற் கண்ணிதன்னொடும் அமர்ந்த ஆலவாயாவதும் இதுவே"

மலர்க்கையால் அவரை எடுத்தார். "நானும் என் நாயகனும் செய்த தவம் என்கொலோ" என அரசியார் மனமுருகிப் போற்றினார். "புறச்சமயச் சூழலினுள்ளே இருந்தும், சிவனடித் தொண்டினை மறவாது வாழும் பெருந்தகையீர், உம்மைக்காணும் பொருட்டே நாம் இங்குவந்தோம்" எனக்கூறிப் பிள்ளையார் பாண்டிமாதேவியார்க்கு விடைகொடுத்து அனுப்பினார். செல்வமல்கிய திருவாலவாய்த் திருக்கோயிலில் தங்கித் தொண்டுபுரிந்துவரும் அடியார்கள் பிள்ளையாரை அணுகிப் "புறச்சமய இருள்கெடத் தாங்கள் இங்கெழுந்தருளுதற்கு அடியேங்கள் அளவிறந்த தவமுடையோம்" எனக் கூறிப் போற்றினார்கள். அவர்களுக்கு அருளுரை கூறிய ஆளுடைய பிள்ளையார், திருக்கோயிலின் வெளியே சென்று குலச்சிறையார் காட்டிய திருமடத்தில் அடியார்களுடன் அமர்ந்து இருந்தார். பாண்டிமாதேவியார் ஆணையின்படி அமைச்சராகிய குலச்சிறையார் ஆளுடைய பிள்ளையார்க்கும் அடியார்களுக்கும் நல்விருந்து அளித்தார்.

பகற்பொழுதுபோய் இராப்பொழுது தொடங்கியது. ஞானசம்பந்தருடன் வந்த அடியார்கள் பாடும் திருப்பதிகத்தின் இன்னிசை முழக்கம் மதுரை நகரெங்கும் பரவுவதாயிற்று. அதுகண்டு பொறாத சமணர்கள், கூட்டமாகச் சேர்ந்து பாண்டியனை அடைந்து 'மதுரையிற் சைவவேதியர்கள் கூட்டமாக வந்திருத்தலைக் கண்டமையால் உண்ணாநிலையினர் ஆயினோம்" என அறிவிக்கும் முறையில் "நாங்கள் கண்டு முட்டு" என்றனர். இத்துன்பச் செய்தியினைக் கேட்டமையால் நானும் உண்ணா நிலையினனாயினேன் என உணர்த்த "நானும் கேட்டு முட்டு" என்றான் பாண்டியன். சினமுற்ற அவ்வேந்தன் "சிவனடியார்கள் இங்கு வந்திருப்பதன் நோக்கம் யாது?" என வினவினான். 'சோழ நாட்டிலே சீகாழிப்பதியிலே பிறந்த பார்ப்பனச் சிறுவனொருவன் சிவனிடத்திலே ஞானம் பெற்றவனென்று முத்துச்சிவிகையிலே ஏறியமர்ந்து எங்களை வாதில் வெல்லும் பொருட்டு அடியார்களுடன் இங்கு வந்துள்ளான்" எனச் சமணர்கள் கூறினார்கள். "இதற்கு நாம் யாது செய்வோம்" என்றான் பாண்டியன். 'சம்பந்தன் எனும் அவ்வந்தணன் தங்கியிருக்கும் மடத்தில் மந்திரவித்தையினாலே தீப்பற்றும்படி நாம் செய்வோமானால் அவன் இந்நகரத்தில் இருத்தற்கு அஞ்சி ஓடி-

விடுவான்' எனச் சமணர் கூறினர். **"ஆவது இதுவேயாகில் அதனைச் செய்யுங்கள்"** என்று கூறி அரசன் அவர்களை அனுப்பினான். அரச ஆதரவு பெற்றுச் சென்ற சமணர், தம் மந்திரவன்மையால் பிள்ளையார் மடத்தில் தீ மூட்டமுனைந்தார்கள். மந்திரங்களெல்லாவற்றிலும் மிக்கதாகிய திருவைந்தெழுத்தினை ஓதும் சிவனடியார்கள் தங்கியிருக்கும் திருமடத்தில், சமணர்களின் மந்திரங்கள் பயன்படாதொழிந்தன. வலியற்ற சமணர் இரவில் மறைந்து சென்று சம்பந்தர் திருமடத்தில் தாமே தீமூட்டினர். மடத்தில் ஒருபகுதி தீப்பற்றியெரிந்தது. அதுகண்டு அஞ்சிய சிவனடியார்கள் விரைந்து தீயினை அணைத்து ஞானசம்பந்தர் முன்சென்று முறையிட்டார்கள். அ.ஃதுணர்ந்த பிள்ளையார், சிவனடியார்கள் துயிலும் மடத்தில் பாவிகள் இவ்வாறு பழுதுசெய்தல் முறையாகுமோ? இது என்பொருட்டு அவர்களாற் செய்யப்பட்டதாயினும் இறைவனடியார்களைப் பற்றியதல்லவோ? இத்தீங்கு அரசன் முறைசெய்யாததால் நேர்ந்ததாகும். எனச்சிந்தித்து, * **"செய்யனே திருவாலவாய்"** எனும் திருப்பதிகம் பாடியருளினார். மங்கையர்க்கரசியாரின் மங்கல நாணைப் பாதுகாத்தற் பொருட்டும், குலச்சிறையார் மன்னவனிடம் வைத்த அன்பினைக்கருதியும் பாண்டியன் அபராதமுறுதலையெண்ணியும், அவன் மீண்டும் சிவநெறியிற் சேர்தற்குரிய நற்பேற்றினை நினைந்தும் பிள்ளையார், தீப்பிணியைப் பையவேசெல்க எனப் பணித்தருளினார். இத்திருப்பதிகத்திற் பணித்தவாறு விரிந்த வெந்தழல் வெம்மை போய்த் தென்னவனாகிய பாண்டியனை மெல்லப் பொருந்தி வெப்பு நோயாக மாறியது.

சம்பந்தர் தங்கிய திருமடத்தில் இரவில் சமணர்கள் தீயிட்டசெய்தி பொழுது புலர்ந்ததும் வெளிப்படுவதாயிற்று. அது கேள்வியுற்ற மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் மனநடுக்கமுற்றனர். 'இக்கொடியோர் வாழும் நாட்டிலே ஞானசம்பந்தப் பிள்ளையாரை வரவழைத்த நாம் இறப்பதே நன்று' எனத் துணிந்தனர். பின்பு திருமடத்தில் தீதின்மை அறிந்து ஒருவாறு ஆறுதலடைந்தனர். இந்நிலையிலே பாண்டியமன்னனை வெப்புநோய் பற்றிவருத்தும் செய்தியினைக் காவு-

* செய்யனே திருவாலவாய் மேவிய
ஐயனே அஞ்சல் என்றருள் செய் எனைப்
பொய்யராம் அமணர் கொளுவுஞ் சுடர்
பையவே சென்று பாண்டியற் காகவே

லாளர்கள் பாண்டிமாதேவியாருக்கும் அமைச்சர்க்கும் விரைந்து தெரிவித்-தார்கள். அதுகேட்ட இருவரும் உளநடுக்கமுற்று மன்னனையடைந்-தார்கள். மருத்துவர்கள் தாம் கற்ற பல கலைகளால் மன்னனது நோயைத் தணிக்க முயன்றும் அந்நோய் தணியவில்லை. தங்கள் சமயப்புரவலனாகிய பாண்டியன் சுரநோயால் வருந்துவதையறிந்த சமணர்கள், மன்னனையடைந்து அவனது நோய்க்குக் காரணம் தமது தீச்செயலே என உணராதவர்களாய், நோய்தணிக்கும் மந்திரங்களைச் சொல்லி மயிற் பீலியால் தடவினார்கள். தம்கையிலுள்ள குண்டிகை நீரைத் தெளித்தார்கள். அதனால் மன்னனது வேதனை பன்மடங்காயிற்று. அதுகண்டு வருத்தமுற்ற பாண்டியன், அவர்களைப்பார்த்து "நீங்கள் ஒருவரும் இங்கே தங்காது போய்விடுங்கள்' எனவெகுண்டு கூறி உணர்விழந்து சோர்ந்தான்.

மன்னனது சோர்வு கண்டு அச்சமுற்ற மங்கையர்க்கரசியார், அமைச்சரைநோக்கி 'நேற்றிரவு திருஞானசம்பந்தர்க்குச் சமணர் செய்த தீமைதான் இப்படி முடிந்ததோ' என வருந்திக்கூறினார். குலச்சிறையார் பாண்டியனைப் பணிந்து "ஞானசம்பந்தர்க்கு அருகர்கள் செய்த தீங்கே இவ்வாறு வந்து மூண்டது. ஞானசம்பந்தப்பிள்ளையாரை அழைத்தால் இந்நோய்தீரும்' என மொழிந்தார். ஞானசம்பந்தர் என்னும் **நாமமந்திரம்** தன் செவியகத்துச் சென்ற அளவிலே அயர்வு நீங்கி உணர்வுபெற்ற மன்னன், சமணர்கள் செய்யும் தீச்செயலே தனது நோய்க்கு ஏதுவாயிற்று என எண்ணினான். 'திருஞானசம்பந்தர் அருளால் இந்நோய் அகலுமேல் அறிவேன். யானுற்ற பிணியைத் தீர்த்து வென்றவர் பக்கமே சார்தற்குரியேன். அவ்வாறாயின் அவரை அழைப்-பீராக' எனப் பணித்தான். அதுகேட்ட மங்கையர்க்கரசியாரும். குலச்-சிறையாரும் மன்னனுக்குத் திருவருட்பேறுண்டாதலையுணர்ந்து மன-மகிழ்ச்சியுடையவராய், திருஞானசம்பந்தப் பிள்ளையாரை நாடிச்சென்றார். அங்கே,

ஞானத்தின் திருவுருவை நான்மறையின் தனித்துணையை
வானத்தின் மிசையின்றி மண்ணில் வளர்மதிக் கொழுந்தை
தேனக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையர் சீர்தொடுக்கும்
கானத்தின் எழுபிறப்பை.....

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளாக கண்டனர். கண்டபொழுது இக்கருணைத் திருவுருவுக்குக் கொடியோர் செய்த கொடுந்தொழில் நினைந்து கண்ணருவி பொழிந்தனர். அவரது திருவடித்தாமரை-களைப் பணிந்து நின்று, "சமணர்கள் செய்த தீத்தொழில்கேட்டு மிகவும் அஞ்சி வருந்தினோம். அவர்கள் செய்த தீங்கு வெப்புநோயாகி அரசனைப்பற்றி நின்று மிகவும் வருத்துகின்றது. அமணர்கள் தீர்க்கப்-போகும் அளவில் அந்நோய் மேலும் பெருகி வருத்துவதாயிற்று. ஆதலால் தாங்கள் அரசர் முன்னர் அமணர்களை வென்றருளின் வேந்தனுயிரும் அடியேங்களது உயிரும் உய்யும்" என விண்ணப்பஞ் செய்தார்கள். அது கேட்ட பிள்ளையார், "நீவிர் சிறிதும் அஞ்சவேண்டாம் யாவரும் கண்டு மகிழும் வண்ணம் அமணர்களை இன்றே வாதில் வென்று தென்னவர் கோமானைத் திருநீறு அணிவிப்போம்' என மொழிந்தருளினர்.

"ஆவதும் அழிவதும் ஆகிய எல்லாம் இறைவன் செயல்" என்னும் உறுதியுடன் திருமடத்திலிருந்து புறப்பட்ட திருஞானசம்பந்தர் திருவாலவாய்க் கோயிலையடைந்தார். கண்ணாற் பார்க்கத்தகாத கொடியோரை நேரிற்கண்டு வாது செய்தல் ஆலவாய்ப் பெருமானா-கிய உனது திருவுளத்திற்கு இயைந்த செயலாகுமா? என இறைவ-னது திருக்குறிப்பை அறிந்து கொள்ளும் விருப்பத்துடன் **"காட்டுமாவ துரித்துரி"** என்ற திருப்பதிகம் பாடி இறைவனது திருவுளக்குறிப்பினை உணர்ந்து கொண்டார். பின்பு சமணர்களை வாதில் வென்று அழித்தற்பொருட்டும், சிவபெருமானது திருப்புகழை உலகமெல்லாம் பரவச்செய்தற் பொருட்டும் ஆலவாய் இறைவனது உடன்பாடு பெற்று, அப்பெருமானிடம் விடைபெறும் கருத்துடன், **"வேதவேள்வியை நிந்தனை செய்துழல்"** என்ற திருப்பதிகத்தைப் பாடி அடியார்கள் புடைசூழ சிவிகையிலேறியமர்ந்து பாண்டியனது அரண்மனையை அடைந்தருளினார்.

---

* வேத வேள்வியை நிந்தனை செய்துழல்
ஆத மில்லி அமணொடு தேரரை
வாதில் வென்றழிக்கத் திரு வுள்ளமே
பாதி மாதுடன் ஆய பரனே
ஞாலம் நின் புகழே மிக வேண்டும் தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே

பிள்ளையாரது வருகையை அமைச்சர் பாண்டியனுக்குத் தெரிவித்தார். அதனையறிந்த வேந்தன், தனது நோய்த்துன்பம் சிறிது தணியப்பெற்றவனாய்ப் பிள்ளையார் அமர்தற்கு எனத் தவிசொன்றை இடும்படி சொல்லி அவரை எதிர்கொண்டழைக்குமாறு ஏவினான். அவனது செய்கையைக் கண்டு பொறாமையுற்ற சமணர்கள், 'அரசே, நமது சமயத்தை நிலைநிறுத்தும் முறை இதுவோ? உனது தரும நெறியை நீயே காத்தல் வேண்டும். ஞானசம்பந்தரை நோய் தீர்க்க இங்கு அழைத்தனையாயின் அவரும் நாங்களும் சேர்ந்து தீர்க்கும் படி சொல்லி, அவராலே உனது நோய் தீர்க்கப்பட்டதாயினும் எங்களாலும் தீர்க்கப்பட்டதெனச் சொல்லுக' எனக் கேட்டுக்கொண்டார்கள். அவர்களது சூழ்ச்சியை அறிந்த பாண்டியன், "நீங்கள் இருதிறத்தீரும் உங்கள் தெய்வச்சார்பினாலே தீருங்கள். நான் நடுவுநிலை நின்று வஞ்சகம் பேசமாட்டேன்' எனத் தெளிவாகக் கூறினான். அவ்வுரைகேட்டுச் சமணர்கள் கலக்கமுற்றார்கள். அந்நிலையில் ஞானசம்பந்தர் அங்கு எழுந்தருளினார். வேந்தன் தன் முடியின் பக்கத்தில் இடப்பெற்றிருந்த மணியாசனத்தைப் பிள்ளையாருக்குக் காட்ட அவரும் அதன்மேல் அமர்ந்தருளினார். அதுகண்ட சமணர்கள் அச்சமுற்றனர். ஞானசம்பந்தரைக் காணப்பெற்ற நற்பேற்றினால் நோய் வருத்தம் சிறிது தணியப் பெற்ற மன்னன் 'உமது ஊர்யாது' என வினவினான். அதற்கு அவர், ❀"**பிரமனூர் வேணுபுரம்...**' எனும் திருப்பதிகம் பாடித் திருக்கழுமலமே நாம் கருதுமூர் என மறுமொழி கூறியருளினார்.

அருகேயிருந்த சமணர்கள், தம் உள்ளத்திற் கொண்ட அச்சத்தை மறைத்துக் கொண்டு கோலும் நூலும் காட்டிப் பிள்ளையாரை வாதுக்கு அழைத்தனர். சம்பந்தர் அவர்களை நோக்கி 'உங்கள் சமய நூற்றுணிபினை உள்ளவாறு பேசுங்கள்' என்றார். அருகர் கூட்டமாக எழுந்து பிள்ளையாரைச் சூழ்ந்து கொண்டு பேசத்தொடங்கினார்கள். அதுகண்டு அச்சமுற்ற பாண்டிமாதேவியார் மன்னனை நோக்கி "ஞானசம்பந்தரோ சிறு பாலர், சமணர்களோ பலர், உனது வெப்புநோயை இவர் தீர்த்தபிறகு சமணர்கள் வல்லமையுடையவராயின் வாது செய்ய-

❀ "பிரமனூர் வேணுபுரம் புகலிவெங்குருப பெருநீர்த்தோணி
புரமன்னு பூந்தராய் பொன்னஞ்சிரபுரம் புறவம்சண்பை
அரன்மன்னு தண்காழி கொச்சைவயம் உள்ளிட்டங் காதியாய
பரமனூர் பன்னிரண்டாய் நின்ற திருக் கழுமலம் நாம்பரவு மூரே"

லாம்' எனக்கூறினார். பாண்டியன் மங்கையர்க்கரசியாரை நோக்கி 'நீ வருந்தற்க' என்று கூறிச் சமணர்களைப் பார்த்து நீங்கள் செய்தற்குரிய வாதம் வேறு என்ன இருக்கிறது? நீங்களும் சிவபத்தராகிய இவரும் என்னுடைய சுரநோயைத் தீர்த்து நீங்கள் தெளிந்துணர்ந்த தெய்வத்-தன்மையை என்னிடம் தெரிவிப்பீராக' என்றான். பிள்ளையார், தம்மிடம் தாயினும் சாலப்பரிவுடைய மங்கையர்க்கரசியாரை நோக்கி 'பாண்டி-மாதேவியே, என்னைப் பால்மணம் மாறாத பாலன் எனக் கருதி நீ அஞ்சவேண்டாம். திருவாலவாய் இறைவன் நிலைபெற்ற துணையாய் என் நெஞ்சத்துள் எழுந்தருளியிருக்கும் பொழுது இச்சமணர்களுக்கு நான் எளியேனல்லேன்' எனும் கருத்தமைய *"**மானினேர் விழி**" என்ற பதிகத்தைப் பாடி அவரது அச்சத்தைப் போக்கினார்.

கூன்பாண்டியன் சம்பந்தரையும் சமணர்களையும் நோக்கி, 'நீங்கள் என்னுடைய வெப்புநோயைத் தீருங்கள். தீர்த்தவர் எவரோ அவரே வாதில் வென்றவர்' என்றான். ஆண்மக்களுக்கு இடப்பாகத்திலுற்ற நோயைத் தீர்த்தல் எளிதெனவுணர்ந்த அமணர்கள், மன்னனை நோக்கி 'அரசே உனது இடப்பாகத்து வெப்பினை எங்கள் சமய மந்திரத்தினால் தீர்ப்போம்' என்று சொல்லி இடப்பாகத்தைப் பீலி கொண்டு தடவினார்-கள். அதனால் மன்னனுக்கு முன்னையிலும் சுரநோய் அதிகப்பட்டது. அதுகண்ட வேந்தன் பிள்ளையாரை நோக்க, அரசனது குறிப்புணர்ந்த சம்பந்தர், அவனது வலப்பக்கத்தில் அடைந்து 'திருவாலவாயண்ணல் திருநீறே மருந்தும் மந்திரமுமாகி எல்லாப்பிணிகளையும் போக்கவல்லது' எனுங்கருத்தினால், *"**மந்திரமாவது...**" என்ற திருநீற்றுப் பதிகத்தை அருளிச் செய்து தென்னவன் மேனியில் திருவளர் நீறுகொண்டு தமது திருக்கரத்தாற் பூசினர். அந்நிலையில் வலப்பாகத்தின் வெம்மை நீங்கியது. இடப்பாகத்தில் முன்னையினும் வெப்பம் இருமடங்காக

---

* "மானினேர் விழி மாதராய் வழுதிக்கு மாபெருந் தேவிகேள்
பானல்வாய் ஒரு பாலன் ஈங்கிவன் என்றுநீ பரிவெய் திடேல்
ஆனைமாமலை ஆதியாய இடங்களிற் பல அல்லல் சேர்
ஈனர்கட்கெளி யேனலேன் திருஆலவாய் அரன் நிற்கவே.

* "மந்திரமாவது நீறு வானவர் மேலதுநீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்திலுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவாலவாயான் திருநீறே"

அதிகரித்தது. அது கண்ட அருகர்கள் நடுக்க மெய்தித் தூரத்தே சென்றனர். அரசன் அவர்களை நோக்கி 'நீங்கள் தோற்றீர்கள். என்னை விட்டு அகலப்போங்கள்' எனக் கூறிப் பிள்ளையாரை நோக்கி "இடப்பாகத்து வெம்மையையும் தாங்களே தீர்த்தருள வேண்டும்' என வேண்டிக் கொண்டான். சம்பந்தர் திருநீறு கொண்டு ஒருமுறை மன்னனது இடப்பாகத்திலே பூசியருளினார். அந்நிலையில் இருபக்கத்து வெம்மையும் நீங்கிச் சுரநோய் அறவே தீர்ந்தொழிந்தது. அரசனும் உய்ந்தனன். பாண்டிமாதேவியாரும், அமைச்சரும் பிள்ளையார் திருவடிகளை வணங்கிப் போற்றினார்கள். வெப்பு நீங்கப் பெற்ற பாண்டியன் எழுந்து தலைமேல் கைகுவித்து ஞானசம்பந்தர் திருவடிகளை வணங்கி 'நான் உய்ந்தேன்' என்றான்.

பாண்டியனது வெப்பு நோயை நீக்கும் ஆற்றலில்லாத சமணர்கள் ஞானசம்பந்தரைத் தருக்கவாதத்தால் வெல்லுதல் இயலாதெனத் தெரிந்து தீயிலும் நீரிலும் வெல்ல எண்ணினார்கள். அவர்களை நோக்கிய திருஞான சம்பந்தர், 'இனி உங்கள் வாய்மையைப் பேசுமின்' என்றார். அது கேட்ட சமணர்கள் 'தருக்கம் பேசி வெல்ல வேண்டியதில்லை; காட்சியளவையினாலேயே நிறுவுதல் இயலும். இருதிறத்தாரும் தாம் கண்ட பேருண்மையினை ஏட்டில் எழுதி அதனை நெருப்பிலிட்டால் எரியாத ஏட்டினையுடைய சமயமே மெய்ச்சமயம் என்றனர். திருஞானசம்பந்தர் அவர்களை நோக்கி, 'நீர் உரைத்தது நன்று, அவ்வாறே செய்வோம்' என்றார். அவர் பணித்த வண்ணம் பாண்டியன் தன் பேரவை முன்னர் தீக்குண்டம் அமைத்து அதில் தீ மூட்டச் செய்தான். திருஞானசம்பந்தர் சிவபெருமானே மெய்ப்பொருளென உணர்ந்து தாம் பாடிய திருப்பதிகங்கள் எழுதப்பெற்ற அடங்கன் முறையினைக் கொணரச் செய்து இறைவனே பொருளெனத் தொழுது அத்திருமுறையினை முடிமிசைக் கொண்டு போற்றித் திருக்காப்பு நாணாகிய கயிற்றை அவிழ்த்து அத்திருமுறை ஏட்டினை விரித்துப் பார்த்தருளினார். அவ்வளவில் * **"போக மார்த்த பூண் முலையாள்..."** என்ற பாடலை

---

* "போக மார்த்த பூண் முலையாள் தன்னொடும் பொன்னகலம்
பாக மார்த்த பைங்கண் வெள்ளேற் றண்ணல் பரமேட்டி
ஆக மார்த்த தோலுடையன் கோவண ஆடையின்மேல்
நாகமார்த்த நம்பெருமான் மேயது நள்ளாறே"

முதலாக உடைய திருநள்ளாற்றுப் பதிகம் தேர்பட்டது. அதுகண்ட பிள்ளையார் அத்திருப்பதிகத்தினையே விரும்பித் திருநள்ளாற்றுப் பெருமானை நினைந்து அப்பதிக ஏட்டினைக் கழற்றிக் கையிலே எடுத்துக் கொண்டார். என்னை ஆளுடைய இறைவனது திருநாமமே என்றும் நிலைபெற்ற மெய்ப்பொருளாகும் என உலக மாந்தர்க்கு அறிவுறுத்தும் நிலையில் இத்திருப்பதிக ஏடு தீயில் வேவாது நிலைபெறுக' என்று சொல்லித் *"**தளரிள வளரொலி...**" என்ற திருப்பதிகத்தினைப் பாடி இறைவனை வழிபட்டுப் "போக மார்த்த பூண் முலையாள்" என்னுந் திருப்பதிக ஏட்டினை யாவரும் காணத் தீயினில் இட்டார்.

இவ்வாறு ஞானசம்பந்தப் பிள்ளையாரால் தீயிலிடப் பெற்ற ஏட்டில் எழுதப் பெற்ற திருப்பதிகம், பரஞானம், அபரஞானம் என்னும் இருதனங்களையுடைய உமாதேவியாரை ஒரு பாகத்திற்கொண்டு விளங்கும் எண் பேருருவினனாகிய சிவபெருமானைப் பொருளாகக் கொண்டமையால், கொழுந்து விட்டெரியும் அத்தீயினுள்ளே எரிந்து சாம்பலாகாது பச்சையாய் விளங்கிற்று. அது கண்ட சமணர்கள் தங்கள் நூற்பொருள் எழுதப்பட்ட ஏட்டினை "இ.ஃது என்னாகுமோ" என்ற கவலையுடன் நெருப்பிலிட்டார்கள். அவர்களால் இடப்பட்ட அவ்வேடு தீயில் வெந்து சாம்பலாயிற்று. ஞானசம்பந்தர், தாம் தீயில் இட்ட ஏட்டினைக் குறித்த நாழிகை வரை பார்த்திருந்து அதற்கு அழிவின்மை கண்டு, அதனை யாவருங்காண எடுத்து அருளினார். அவ்வேடு முன்னையினும் பசுமையும் புதுமையும் உடையதாய் விளங்கிற்று. பிள்ளையார் தாம் நெருப்பிலிட்ட திருப்பதிக ஏட்டினை அவையத்தார் முன்னே காட்டித் திருமுறையிலே முன்போலக் கோத்தருளினார். இவ்வாறு தீயில் இட்டும் பச்சையாய் விளங்கியதனால் இது **பச்சைப்பதிகம்** எனப் போற்றப் பெறுவதாயிற்று.

திருஞானசம்பந்தர் தீயிலிட்டு எடுத்தருளிய ஏடு எரிந்து சிதையாது பச்சையாய் விளங்கியது கண்டு வியப்புற்ற பாண்டியன்,

---

* "தளரிள வளரொலி தனதெழில் தருதிகழ் மலைமகள்
குளரிள வளரொலி வனமுலை இணையவை குலவலின்
நளரிள வளரொளி மருவுநள் ளாறர்தம் நாமமே
மிளரிள வளரொரி யிடிலிவை பழுதிலை மெய்ம்மையே"

சமணர்களை நோக்கி 'நீவிர் இட்ட ஏட்டினை எடுத்துக் காட்டுங்கள்' என்றான். சமணர்கள் தாம் இட்ட ஏட்டினை எடுக்க எண்ணித் தீயருகே சென்ற பொழுது தீ முன்னையினும் கொழுந்துவிட்டெரிந்தமை கண்டு அஞ்சிவிலகினர். அது கண்ட மன்னன் தண்ணீரைக் கொணர்ந்து தீயினை அவிக்கச் செய்தனன். பின்பு சமணர்கள் தீக்குண்டத்தை அணுகித் தாம் இட்ட ஏட்டினைத் தேடிப்பார்த்தனர்; சாம்பலுங்கரியுமன்றி மற்றொன்றையும் காணாது திகைத்து நின்றார்கள். அவர்களை நோக்கிய அரசன் 'இப்பொழுது நீவிர் தோற்றிலீரோ' என நகைத்துரைத்தான். அந்நிலையில் அவர்கள் வேந்தனை நோக்கி, "மன்னவ! ஓர் வாதினை மும்முறை செய்து உண்மை காணுதலே முறையாகும். இருதிறத்தாரும் தத்தம் சமயவுண்மைகளை எழுதிய ஏட்டினை ஆற்று வெள்ளத்திலிட்டால் எவரதுஏடு வெள்ளத்தில் எதிரேறிச் செல்கின்றதோ அவ்வேட்டிற்குரியவரே வென்றவர் ஆவர்' எனக்கூறினார்கள். அப்பொழுது அமைச்சராகிய குலச்சிறையார் அவர்களைநோக்கி 'இனிமேற் செய்யக்கருதும் வாதில் தோற்றவர்கள் தம் தோல்விக்கு அடையாளமாகப் பெறும் இழப்பு இன்னது என்பதனை இப்பொழுதே உறுதி செய்து கொள்ளுதல் வேண்டும்' என்றார். அது கேட்டுக் கோபமுற்ற சமணர் 'நாம் இவ்வாதில் தோற்றோமானால் எங்களை இவ்வேந்தனே கழுவேற்றுங் கடமை-யுடையான்' என வெகுண்டு கூறினர். இச் சபதமொழியினைக் கேட்ட மன்னன், சமணர்களை நோக்கி 'நீவிர் உம் செய்கையினை மறந்து கோபத்தால் வாய் சோர்ந்து பேசிவிட்டீர்கள். இனி வைகையாற்றில் ஏட்டினை இடப்போதல் முறை' என்று கூறினான். அரசன் பணித்த வண்ணம் இரு திறத்தாரும் வைகையாற்றின் கரையை அடைந்தார்கள்.

முன்னே தோல்வியுற்றவர்கள் பின்னும் தோல்வியடைய-மாட்டார்கள் என நம்பிய சமணர்கள், அரசனது முன்னிலையில் தங்கள் சமயவுண்மையென '**அஸ்திநாஸ்தி**' என்ற வடமொழி வசனத்தை ஏட்டிலெழுதி, அதனை வைகையாற்றில் இட்டனர். அவர்களால் இடப்பட்ட ஏடு, ஆற்று வெள்ளத்தில் எதிரேறிச் செல்லமாட்டாது அவ்வெள்ளத்தால் விரைந்து தள்ளப்பட்டுக் கடலை நோக்கிச் சென்றது. ஏட்டினைத் தொடர்ந்து கரைவழியே ஓடியசமணர்கள் அதனைத் தொடர முடியாது திரும்பி வந்து ஞானசம்பந்தரை நோக்கி 'நீவிரும் உமது சமய உண்மையை ஏட்டி லெழுதி ஆற்றிலிட்டால் உண்மை

காண்போம்' எனவுரைத்தனர். அந்நிலையில், பாண்டியன், ஞானசம்பந்தரை நோக்கினான். பிள்ளையாரும் சைவசமய உண்மைகளைத் தொகுத்து ❀1. **"வாழ்க அந்தணர்..."** என்று தொடங்கும் திருப்பாசுரத்தைப் பாடியருளி ஏட்டில் எழுதி அவ் ஏட்டினைத் தமது திருக்கரத்தால் வைகையாற்றில் இட்டருளினார். பிறவி எனும் பேராற்றை அருந்தவருள்ளம் எதிர்த்து எதிர்செல்வது போன்று அவ்வேடு வைகைப் பெருவெள்ளத்தைக் கிழித்து எதிர்ஏகியது. குலச்சிறையார் குதிரை மீது ஏறி வைகையாற்றின் கரைவழியாக அதனைத் தொடர்ந்து சென்றார்.

தம்மால் வைகையாற்றில் இடப்பட்ட ஏடு எதிரேறிவிரைந்து செல்லக்கண்ட பிள்ளையார், ❀ 2. **"வன்னியு மத்தமும்....."** எனத் தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடிப்போற்றினார். அப்பொழுது அவ்வேடு வைகையின் வடகரையிலமைந்த ஏடகம் என்னும் திருக்கோயிலின் பக்கத்தில் தேங்கிய நீர் நடுவே வந்து நின்றது. அதுகண்ட குலச்சிறையார் குதிரையை விட்டிறங்கி ஆற்றில் இறங்கி ஏட்டினையெடுத்துத் தலைமேற் கொண்டு, அங்கு வைகைக் கரையிற் கோயில் கொண்டருளிய சிவபெருமானை இறைஞ்சி விரைந்து மீண்டார். ஞானசம்பந்தப் பிள்ளையாரை வணங்கித் தாம் கொணர்ந்த ஏட்டினை நின்றசீர்நெடுமாறன் முதலிய யாவரும் காணக் காட்டினார். அதனைக் கண்டு அங்குள்ளார் அனைவரும் மகிழ்ந்து இறைவனது திருவருளை வியந்து போற்றினார்கள். இத்திருப்பாசுரத்தில் 'வேந்தனும் ஓங்குக' எனப் பிள்ளையார் பாடியதனால் முன்பு கூனாயிருந்த பாண்டியன் கூன் நீங்கி, நின்ற சீர்நெடுமாறன் ஆயினான்.

நின்றசீர் நெடுமாறனாகிய பாண்டியன், தன் அமைச்சரை நோக்கி 'வாதிற் சூளுரைத்துத் தோல்வியுற்ற சமணர்கள் முன்னமே

❀ 1. வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயது எல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

❀ 2. வன்னியு மத்தமு மதிபொதிசடையினன்
பொன்னியல் திருவடி புதுமலரவை கொடு
மன்னிய மறையவர் வழிபட அடியவர்
இன்னிசை பாடலார் ஏடகத்தொருவனே

ஞானசம்பந்தருக்குத் தீங்குவிளைவித்தோராதலின் அவர்கள் செய்துகொண்ட சபதத்தின்படி அவர்களைக் கழுவேறச்செய்தலே முறையாகும்' எனக்கூறினான். ஞானசம்பந்தப் பிள்ளையார் சமணர்கள் மேல் சிறிதும் பகைமையில்லாதவராயினும் அவர்கள் சிவனடியார்கள் இருந்த மடத்திலே தீவைத்த காரணத்தால் அவர்களுக்கு விதிக்கப்பட்ட தண்டனையை விலக்காதிருந்தார். அமைச்சர் குலச்சிறையார் கழுத்தறிகளை நாட்டிய பின் தோல்வியுற்று நின்ற சமணர் அனைவரும் அத்தறிகளில் தாமே ஏறி உயிர்துறந்தனர். பின்னர் பாண்டியனுக்கு ஆளுடைய பிள்ளையார் திருநீறளிப்ப அவன் பணிந்து பெற்றுத் தன்மேனி முழுதும்பூசி மகிழ்ந்தான். அதனைக் கண்ட மதுரை நகரத்தார் அனைவரும் பிள்ளையார் அளித்த திரு நீறணிந்து சிவநெறியினை மேற்கொண்டார்கள். புறச்சமய இருள் நீங்கித் திருநீற்றின் ஒளி பாண்டிய நாடு எங்கும் பரவியது. அங்கயற்கண்ணியொடும் அமர்ந்த ஆலவாய்ப் பெருமானது திருவருளைஎண்ணி உளமுருகிய ஆளுடைய பிள்ளையார், பாண்டியனும், பாண்டிமாதேவியாரும், அமைச்சரும், அடியார்களும் புடைசூழ்ந்துவர மதுரைத் திருக்கோயிலை வலம்வந்து இறைவன் திருமுன்னர் நின்று **'கூடலாலவாயிலாய்'** எனும் திருப்பதிகம் பாடிப் போற்றினார். சிவநெறியினை மேற்கொண்டபாண்டியன், சொக்கலிங்கப்பெருமானை இறைஞ்சி, 'சமணரது மாயையால் மதிமயங்கி மன்னுயிர்த்தலைவனாகிய உன்னை அறியாதிருந்த எளியேனை, ஆட்கொள்ளும் வண்ணம் இனிய அருளாளராகிய ஞானசம்பந்தப்பிள்ளையாரைத் தந்தருளினை' எனப் போற்றிசெய்தான். அரசனும் அரசியும் அமைச்சரும் பிள்ளையாரிடம் விடைபெற்றுத் தத்தமக்குரிய மாளிகையை அடைந்தார்கள். பிள்ளையார், **'ஆல நீழலுகந்தது இருக்கையே'** என்ற முதற்குறிப்புடைய திருவியமகப் பதிகத்தைப் பாடி, முன்னொருநாளில் சோமசுந்தரக்கடவுள் திருநீலகண்ட யாழ்ப்பாணர்க்குப் பொற்பலகை இட்டருளிய திறத்தைப் போற்றி அவ்வாறு அருள் பெற்ற சிறப்புடையவராகிய பெரும்பாணரோடும் அளவளாவி இருந்தருளினார்.

ஆளுடைய பிள்ளையார் மதுரையில் தங்கியிருக்கும் நாளில், அவரைக் காணவிரும்பிய அவருடைய தந்தையார் சிவபாதவிருதயர் சீகாழியினின்று புறப்பட்டு மதுரைக்கு வந்து சேர்ந்தார். அப்பொழுது பிள்ளையார் தம் தந்தையாரை நோக்கி, அருந்தவத்தீர், குழந்தை

பருவத்தில் பொற் கிண்ணத்தில் பாலடிசில் ஊட்டி என்னை ஆட்கொண்டருளிய தோணியப்பர் எம்பெருமாட்டியுடன் இனிதிருக்கின்றாரோ" எனக் கழுமலப் பெருமானின் நலத்தினை [1] **"மண்ணினல்ல வண்ணம்.."** எனும் திருப்பதிகத்தின் மூலம் வினவினார். திருவாலவாய் இறைவரை வழிபட்டு மதுரையில் தங்கியிருந்த பிள்ளையார், பாண்டி நாட்டின் ஏனைய தலங்களை வழிபடப் புறப்பட்டார். அவரைப் பிரிய மனமில்லாத மங்கையர்க்கரசியாரும், பாண்டியனும், குலச்சிறையாரும் அவருடன் தொடர்ந்து சென்றார்கள். ஞானசம்பந்தர் திருப்பரங்குன்றம் முதலிய தலங்களை வணங்கித் தமிழ்மாலை பாடிப்போற்றி இராமேச்சுரத்தை அடைந்தனர். அங்கு இராமபிரான் இராவணனைக் கொன்ற பழி நீங்க சிவபெருமானைப் பூசனை புரிந்த தொன்மை வரலாற்றை நினைந்து திருப்பதிகம் பாடி அடியார்களுடன் தங்கியிருந்தார். அங்கிருக்கும் நாளில் பிள்ளையார் ஈழத்திலுள்ள [2] திருகோணமலை, [3] திருக்கேதீச்சரம் ஆகிய தலங்களை நினைந்து திருப்பதிகம் பாடிப் போற்றினார்.

பின்பு இராமேச்சுரத்திலிருந்து புறப்பட்டு வடதிசை நோக்கித் திருவாடானை முதலிய தலங்கைளை வணங்கிக் குலச்சிறையார் பிறந்த பதியாகிய மணமேற்குடியில் எழுந்தருளி இருந்தனர். அங்கிருந்து கொண்டே சோழநாட்டுத்தலங்களை வணங்கப்புறப்பட்டார். அது கண்ட அம்மூவரும் பிரியா அன்புடன் தொழுது அவருடன் செல்லவிரும்பினர்.

---

[1] "மண்ணில்நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணின்நல் லகதிக்கி யாதுமோர் குறைவிலைக்
கண்ணினல் லஃதுறும் கழுமல வளநகர்ப்
பெண்ணினல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே"

[2] நிரைகழ லரவஞ் சிலம்பொலி யலம்பு நிமலர்நீ றணிதிரு மேனி
வரை கெழு மகளொர் பாகமாப் புணர்ந்த வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவும் அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகட லோதம் நித்திலங்கொழிக்கும் கோணமாமலை யமர்ந்தாரே.

[3] விருது குன்றமா மேருவி னாணர வாவனலெரி யம்பாப்
பொருது மூவெயில் செற்றவன் பற்றிநின் றுறைபதி யெந்நாளும்
கருது கின்றவூர் கனைகடற் கடிகமழ் பொழிலணி மாதோட்டம்
கருதநின்றகே தீச்சரங் கைதொழக் கடுவினை யடையாவே

அது உணர்ந்த பிள்ளையார், அவர்களது அன்பிற்கு உளமுவந்தனராயினும் அவர்களது கடமையினை வற்புறுத்தும் முறையில், அவர்களை நோக்கி, 'நீங்கள் பாண்டிநாட்டில் இருந்து சிவநெறியைப் போற்றுவீர்களாக' எனப் பணித்தருளினர். ஆளுடைய பிள்ளையாரது ஆணையை மறுத்தற்கு அஞ்சிய வேந்தன் முதலியோர் பிரிவாற்றாது தொழுது நின்றனர். பிள்ளையார் அவர்களிடம் விடைபெற்று பாண்டி நாட்டை அகன்று அடியார்களுடன் திருப்பாதாளீச்சரம் முதலிய தலங்களை இறைஞ்சி முள்ளியாற்றின் கரையை அடைந்தார்.

அப்பொழுது முள்ளியாற்றில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின் காரணமாக ஓடம் விடுவோர் ஓடங்களைக் கரையிலே பிணித்து விட்டுப் போய்விட்டார்கள். அங்கு நின்ற ஞானசம்பந்தப்பிள்ளையார், ஆற்றுக்கு அப்பால் தோன்றிய திருக்கொள்ளம்பூதூரிற் கோயில் கொண்டருளும் பெருமானைத் தொழவேண்டும் என்ற பேரார்வத்தால் கரையினில் கட்டப்பெற்றிருந்த ஓடத்தைக் கட்டவிழ்த்து அதன்மேல் அடியார்களை ஏற்றி, ❀ **"கொட்டமே கமழும்.."** எனும் திருப்பதிகம் பாடிப் போற்றித் தமது நாவன்மையினையே கோலாகக் கொண்டு ஓடத்தினைச் செலுத்துவாராயினர். எடுத்த திருப்பதிகம் முடிவதற்குள் ஓடம் அக்கரையினை அடைந்தது அடியார்களுடன் திருக்கொள்ளம் பூதூரை அடைந்த பிள்ளையார் ஆற்றில் ஓடம் செலுத்தும் வண்ணம் தமக்கு அருள் புரிந்த பெருமானைப் பரவி மகிழ்ந்தனர்.

பாண்டியன் அவையிற் சமணரொடு தாம் செய்த அனல் வாதத்திலே எரியில் வேகாத பதிகமுடைய இறைவராகிய நள்ளாற்றீசரை வணங்கவிரும்பிய ஞானசம்பந்தர், திருக்கொள்ளம்பூதூரிலிருந்து புறப்பட்டு வழியிலுள்ள பல தலங்களையும் வழிபட்டுப் பணிந்து திருநள்ளாற்றினை அடைந்தார். இறைவன் திருமுன் நின்று "எந்தாய் தென்னவன் முன்னிலையில் அமணரோடு செய்த அனல் வாதத்திலே தீயிலிட்ட ஏடு எரியாது பச்சையாகத் திகழும்படி என்னுள்ளத் துணையாய்த்

❀ கொட்டமே கமழும் கொள்ளம் பூதூர்
நட்டமாடிய நம்பனை யுள்க
செல்லவுந்துக சிந்தையார் தொழ
நல்குமாறருள் நம்பனே

திருவாலவாயில் அமர்ந்தருளியவாறு எவ்வாறு" என வியந்து **'பாடக மெல்லடி'** எனும் திருப்பதிகம் பாடிப்போற்றினார்.

பின்பு திருஞானசம்பந்தர் திருத்தெளிச்சேரியை வணங்கிப் புத்தர்கள் வாழும் போதிமங்கை அருகே வந்தார். சிவனடியார்கள் 'பரசமய கோளரி வந்தான்' என்று சின்னம், காளம் முதலிய வாத்தியங்களை இயம்பி ஆரவாரித்தனர். இவ் ஆரவாரத்தினைக் கேட்கப்பொறாத புத்தர்கள் புத்தநந்தியென்பவனை அடைந்து முறை-யிட்டார்கள். இச்செய்தியைக் கேட்ட புத்தநந்தி தேரர் கூட்டத்துடன் அங்கு விரைந்து வந்தான். சிவனடியார்களை நோக்கி, நீங்கள் எங்களை வாதில் வென்றபின் அல்லவா உமது வெற்றிக்கு அடை-யாளமாகிய சின்னம் முதலியவற்றைப் பிடித்தல் வேண்டும்' எனக் கூறித் தடுத்தான். அந்நிகழ்ச்சியை ஞானசம்பந்தரிடம் சென்று முறையிட்டனர். ஞானசம்பந்தர் 'புத்தர்கள் வாதிற்பொருமிடத்து அறி-வோம்' என அமைதியாகக் கூறினார். அந்நிலையில் பிள்ளையார் அருளிய திருமுறையினை ஏட்டில் எழுதும் பெருமையுடைய அடியார் ஒருவர், பிள்ளையாரது திருவாக்காகிய **"புத்தர் சமண் கழுக்கையர் பொய்கொளார்"** எனும் திருப்பாட்டினை ஓதி, இடியிடித்து விழுதலாற் புத்தன் தலை உருண்டு வீழ்க' என வெகுண்டுரைத்தார். அவ்வாணை மொழியால் இடிவிழவே புத்த நந்தியின் தலை அறுபட்டு வீழ்ந்தது. அதனைக் கண்டு திடுக்குற்று அஞ்சிய புத்தர்கள் சிதறுண்டு ஓடினார்கள். அது உணர்ந்த பிள்ளையார், அடியார்களை நோக்கி **'அரன் நாமமே ஓதுமின்'** எனப் பணித்தருளினார். அரகர முழக்கங் கேட்ட புத்தர்கள் மீண்டும் கூடிச் சாரிபுத்தன் என்பவனை அழைத்து வந்து பிள்ளையாரை அணுகி மந்திர வாதமின்றித் தர்க்க வாதமே செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொண்டனர். பிள்ளையாரும் அதற்கு இசைந்தருளினார். சந்திரமண்டபத்தில் சிவனடியார்களும், புத்தர்களும் குழுமியிருந்தனர், புத்த நந்தியின் சிரத்தின் மேல் இடிவிழச் செய்த அன்பரும் சாரிபுத்தனும் நிகழ்த்திய வாதத்தில் சாரிபுத்தன் தோல்வியுற்றான். அது கண்ட புத்தர்கள் தங்கள் கொள்கை தவறு என உணர்ந்து திருஞானசம்பந்தர் திருவடிகளை வணங்கிச் சைவராயினர்.

போதிமங்கையில் சிவநெறி பரப்பிய திருஞானசம்பந்தர் திருக்-கடவூரிறைவரைப் பணிந்து அங்கு அமரும் நாளில் திருநாவுக்கரசரை

நினைந்து 'அப்பர் எங்குற்றார்' என அடியார்களை வினவினார் "அப்பர் திருப்பூந்துருத்தியிலுள்ளார் என அடியார்கள் சொல்லக் கேட்டு அவரைக் காணும் விருப்புடன் பலதலங்களையும் வணங்கிக் காவிரித் தென்கரையை அடைந்து திருப்பூந்துருத்தியை அடைந்தார். ஆளுடைய பிள்ளையார் வருகின்றார் என அறிந்த நாவுக்கரசர், திருப்பூந்துருத்தி எல்லையிலேயே முன் சென்று திருத்தொண்டர் கூட்டத்துடன் தாமும் ஒருவராகக் கலந்து பிள்ளையாரது முத்துச்சிவிகையினைத் தாங்கி வந்தனர். அப்பொழுது ஞானசம்பந்தருள்ளத்திலே ஏதோ ஒருவகை உணர்ச்சியுண்டாக 'அப்பர் தாம் எங்குற்றார் இப்பொழுது' என அடியார்களை வினவினார். அவ்வுரை கேட்ட நாவுக்கரசர், நெஞ்சம் நெக்குருகி நின்று 'உம் அடியேன் உம் அடிகள் தாங்கி வரும் பெருவாழ்வு வந்தெய்தப்பெற்று இங்குற்றேன்' என்றார். ஞானசம்பந்தர் விரைந்து சிவிகையை விட்டிறங்கி 'இவ்வாறு செய்தருள்வ தென்ன' எனக்கூறி அப்பரடிகளை வணங்கினார். 'ஞானசம்பந்தர்க்கு எளியேனாற் செய்யத்தக்கது வேறுயாதுளது' எனக்கூறி அப்பரும் உடன் வணங்கினார். அங்கு நின்ற தொண்டர்கள் யாவரும் பெருமக்களிருவரது நண்பின் திறத்தைக் கண்டு உளமுருகி இறைஞ்சிப் போற்றினார்கள்.

நண்பிற் சிறந்த நாவரசருடன் திருப்பூந்துருத்திப் பெருமானைப் பணிந்தேத்திய ஞானசம்பந்தர், நாவுக்கரசரின் திருமடத்தில் அமர்ந்திருந்தார். அப்போது அப்பர், பிள்ளையாரை நோக்கி, போக்கும் வரவுமாகிய நிகழ்ச்சியை வினவினார். பிள்ளையார் பாண்டிநாட்டில் நிகழ்ந்த செயல்களை அரசர்க்கு விரித்துரைத்தார். அவற்றைக் கேட்ட நாவுக்கரசர் பிள்ளையாரை நோக்கித் **'திருநெறித் தொண்டெனும் வான்பயிர் தழைக்கச் சூழும் பெருவேலி யாயினீர்'** எனத் தொழுது போற்றினார். அன்பின் பெருவெள்ளம் அனைய மங்கையர்க்கரசியாரது மாட்சியையும், குலச்சிறையாரது சிறப்பையும் பிள்ளையார் எடுத்துரைத்தார். பாண்டிமாதேவியார், குலச்சிறையார் என்னும் இவர்களின் தொண்டின் சிறப்பைக் கேட்டு மகிழ்ந்த திருநாவுக்கரசர் அவ்விருவரின் தொண்டினை ஏற்று மகிழும் ஆலவாய் இறைவனைப் பணியும் பெருவிருப்புடையவராயினர். அப்பரடிகள் தொண்டைநாட்டின் சிறப்பினைச் சொல்லக் கேட்ட ஞானசம்பந்தர், சான்றோர் வாழும் அந்நாட்டிலுள்ள திருத்தலங்களை வணங்க

விரும்பினார். வாகீசர் பிள்ளையாரிடம் விடைபெற்றுப் பாண்டி நாட்டிற்குப் புறப்பட்டார். பிள்ளையார் தொண்டைநாட்டிற்குப் புறப்பட்டார்.

பின்பு திருஞானசம்பந்தர் அடியார்களுடன் காவிரியின் வடகரை-யை அடைந்து நெய்த்தானம், ஐயாறு, பழனம் முதலிய தலங்களைப் பணிந்து பாடி மறையவர் மகிழ்ந்து எதிர்கொள்ளக் காழிப்பதியை அடைந்தார். சிவிகையில் இருந்து இறங்கித் திருத்தோணிபுரக் கோயிலுட்புகுந்து மாதொரு பாகனார் மலரடி பணிந்து **"உற்றுமை சேர்வது மெய்யினையே"** என்னும் திருப்பதிகத்தைப் பாடினார். 'மதுரை மன்னவனாகிய பாண்டியனது பேரவையின் முன்னர்த் திருப்பதிகம் எழுதப்பெற்ற ஏடானது நதியின் மீது எதிரேறிச் செல்லுதற்கு அருளிய இறைவனே' என இத்திருப்பதிகத் திருக்கடைக் காப்பில் பிரமபுரத்-திறைவனைப் போற்றி மகிழ்ந்தார். பின்பு தம்மைப் பிரியாது உடன் வரும் நட்பினராகிய திருநீலகண்டயாழ்ப்பாணரை விறலியாருடன் அவரது மாளிகையிற் செல்லப்பணித்துத் தம்மைப் பெற்றெடுத்த தாயார் மகிழ்ந்தெதிர் கொள்ளத் தமது திருமாளிகையிற் சென்றமர்ந்தார்.

திருவேகம்பப் பெருமானை வணங்க விரும்பிய ஞானசம்பந்தர், தம் தந்தையாரை நோக்கி, 'தந்தையே, நீர் அருமறை முறைப்படி வேள்வி செய்து இங்கு அமர்ந்திருப்பீராக' எனக் கூறி அடியார் குழாத்துடன் சீகாழிப்பதியிலிருந்து புறப்பட்டுத் தில்லைக்கூத்தப் பெருமானைப் பணிந்து தினைநகர், மாணிகுழி முதலிய தலங்களை இறைஞ்சித் திருவதிகை வீரட்டானத்தையடைந்தார். அப்பொழுது வீரட்டானத்திறைவர், பூதம் பாட நின்றாடும் தமது ஆடற் கோலத்தினைப் பிள்ளையார்க்கு காட்டியருளினார். அத்தெய்வக்காட்சியைக் கண்டு உளமுருகிய ஞானசம்பந்தர், * **"குண்டைக் குறட்பூதம்..."** எனும் திருப்பதிகம் பாடிப்போற்றினார்.

பின்னர் ஆமாத்தூர் ஆகியதலங்களை இறைஞ்சி அண்ணாமலை இதுவென்று அன்பர்கள் காட்டக் கண்டார். திருவண்ணாமலை அழல்

---

* "குண்டைக் குறட்பூதங் குழும அனலேந்திக்
கெண்டைப் பிறழ் தெண்ணீர்க் கெடில வடபக்கம்
வண்டு மருள்பாட வளர்பொன் வீரிகொன்றை
வின்ட தொடையலான் ஆடும் வீரட்டானத்தே"

வண்ணனாகிய சிவபெருமானது வடிவுபோன்று தோன்றிய தோற்றத்தைக் கண்ணாற் பருகிக் கைதொழுது மகிழ்ந்த ஞானசம்பந்தர், [1] **"உண்ணா-முலையுமையாளொடும் உடனாகிய ஒருவன்"** எனும் திருப்பதிகம் பாடினார். பின்னர் அண்ணாமலை மீது வீற்றிருந்தருளும் இறைவனது திருவடித்தாமரைகளைத் தம் முடிக்கணிந்து பேரின்பமடைந்தார். **"பூவார் மலர் கொண்டு"** எனும் பதிகம் பாடிச் சிலநாள் அங்கு அமர்ந்திருந்தார்.

பின்பு வடதிசை நோக்கிச் சென்று தொண்டைநாட்டில் திருவோத்-தூரை அடைந்து இறைவனைப் போற்றியிருந்தார். அந்நாளில் சிவன-டியார் ஒருவர் சம்பந்தரை வணங்கி நின்று 'எளியேன் இறைவனுக்கு அடித்தொண்டன். சிவனடியார்களுக்கெனத் தண்ணீர் இறைத்து வளர்த்த பனைகளுள் ஒன்றேனும் காய்க்கவில்லை. இதனையறிந்த சமணர்கள் இப்பனைகளைச் சிவனருளால் காய்க்கும்படி செய்ய முடியுமா என வினவி, என்னை இகழ்ந்துரைக்கின்றார்கள்' என முறையிட்டார். அதுகேட்ட பிள்ளையார் திருக்கோயிலினுள்ளே புகுந்து [2] **"பூத்தேர்ந் தாயன கொண்டு நின் பொன்னடி"** எனும் பதிகம் பாடி திருக்கடைக்-காப்பில், 'குரும்பை யாண்பனை யீன்குலை யோத்தூர்' என முடிக்கு-மளவில் அங்கிருந்த ஆண்பனைகளெல்லாம் பெண்பனைகளாக மாறிக் குரும்பையீன்று காய்த்தன. இத்திருவருள் நிகழ்ச்சியை நேரிற்கண்ட சமணர்கள் பலரும் தமது சமயத்தை வெறுத்துச் சிவநெறியை மேற்கொண்டு பிள்ளையாரைப் பணிந்தார்கள்.

திருவோத்தூரிறைவரைப் பணிந்த ஞானசம்பந்தர், திருமாக-றல், குரங்கணிமுட்டம் ஆகிய பதிகளைப் பணிந்து காஞ்சி நகர

---

[1] உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள் மழலைம் முழுஅதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ணம் அறுமே.

[2] பூத்தேர்த்தாயன கொண்டுநின் பொன்னடி
ஏத்தாதாரில்லை எண்ணுங்கால்
ஓத்தூர்மேய ஒளிமழுவாளங்கைக்
கூத்தீர் ரும்ம குணங்களே

மக்கள் முகமலர்ந்து எதிர்கொள்ளக் கச்சி மாநகரிற் புகுந்தார். திருவேகம்பத் திருக்கோயிலை வலம் வந்து மங்கை தழுவக் குழைந்த திருவேகம்பப் பெருமானை வணங்கி 'மறையானை' எனும் பதிகம் பாடித் திருவேகம்பத்து உறைவானையல்லது என்னுள்ளம் உள்காது' என நெஞ்சம் கசிந்து போற்றினார். அறப்பெருஞ்செல்வியாகிய உமையம்மையார் எழுந்தருளிய திருக்காமக்கோட்டத்தை இறைஞ்சி மகிழ்ந்தார். காஞ்சியில் அமர்ந்திருக்கும் பொழுது திருவியமகம், திருவிருக்குக்குறள் முதலிய இன்னிசைப் பதிகங்களால் இறைவனைப் போற்றி இன்புற்றார். பின்னர் திருமாற்பேறு, திருவல்லம் முதலிய தலங்களைப் பணிந்து பாடிப் பழையனூர்த் திருவாலங்காட்டின் எல்லையிலே வந்தணைந்தார்.

"இம்மையிலே இவ்வுலகத்தவர் யாவருங்காண எம்மையாளும் காரைக்காலம்மையார் தம் தலையாலே நடந்து போற்றும் அம்மையப்பர் எழுந்தருளிய திருவாலங்காடு இதுவாகும்' எனக்கருதிய ஞானசம்பந்தர், அம் மூதூரினை மிதிக்க அஞ்சி அப்பதியின் அருகிலுள்ளதோர் ஊரிலே அன்றிரவு துயில் கொள்வாராயினர். அந்நிலையில் திருவாலங் காட்டு இறைவர் பிள்ளையாரது கனவில்தோன்றி "நம்மைப் பாடுதற்கு மறந்தனையோ" என வினவினார்.இடையாமத்தில் துயிலுணர்ந்தெழுந்த ஆளுடையபிள்ளையார், இறைவரது திருவருளை உணர்ந்து. "**துஞ்ச வருவாருந் தொழுவிப்பாரும்**" எனும் பதிகம் பாடிப் போற்றினார்.

பொழுது புலர்ந்தபின் ஞானசம்பந்தர் திருவாலங்காட்டு இறை-வனை வணங்கித் திருப்பாசூர், வெண்பாக்கம் ஆகிய தலங்களை இறைஞ்சினார். அன்புருவாகிய கண்ணப்பர் வழிபட்ட காளத்தியிறை-வனைக் காணவிரும்பித் திருக்காரிகரையைப் பணிந்து செல்லும்போது அடியார்களை நோக்கி 'எதிரே தோன்றுவதாகிய இம்மலையாது?' எனவினவ அவர்கள் 'அது திருக்காளத்தி மலை' என்றனர். அது கேட்ட பிள்ளையார் **"வானவர்கள் தானவர்கள்"** எனப் பதிகம் பாடி கண்ணப்ப நாயனாரது அன்பின் திறத்தைச் சிறப்பித்துப் போற்றினார். பொன் முகலி ஆற்றின் கரையை அடைந்து காளத்தி மலை மீதேறிச் சிவபெருமானைப் பணிந்து வீழ்ந்தெழும் பிள்ளையார் தாம் கும்பிட்ட பயன் காண்பார்போல் வில்வேடர் பெருமானாகிய கண்ணப்ப நாயனா-

ரைக் கண்டு தாழ்ந்தார். உள்ளத்தில் தெளிகின்ற அன்பின் மெய்ம்மையுருவினையும் அத்தகைய அன்பினுள்ளே நிலைபெற்றுத் தோன்றும் சிவபரம்பொருளையும் ஒருங்கே கண்ட விருப்பம் பொங்கப் புகலிப்பிள்ளையார் பலமுறையும் வீழ்ந்து வணங்கினார். பின்பு காளத்தி மலையினின்று இறங்கி அங்குள்ள மடமொன்றில் அமர்ந்து பெருமானைக் காலங்கள் தோறும் வழிபட்டு இருந்தார். அங்கிருக்கும் நாட்களில் வடதிசையிலுள்ள திருக்கயிலாயம் முதலிய தலங்களை நினைந்து செந்தமிழ்ப் பாடல்கள் பாடிப்பரவினார். பின்பு 'சந்தமாரகிலொடும்' என்ற பதிகம்பாடி 'எந்தையார் இணையடி என்மனத் துள்ளவே' எனக் காளத்தி இறைவனைப் போற்றிப்பரவினர். அங்கிருந்து புறப்பட்டுப் பாலாற்றின் வடகரையையடைந்து திருவேற்காடு எனும் தலத்தை இறைஞ்சினார். பின்னர் அன்பர்கள் எதிர்கொள்ளத் திருவொற்றியூரையடைந்து உம்பர் பிரானைத் தமிழ் மாலைகளாற் போற்றிப்பரவி அப்பதியில் தங்கி இருந்தார்.

மயிலாப்பூரிலே, சிவநேசர் எனும் பெயருடைய வணிகர் பெரும் செல்வந்தராகக் காணப்பட்டார். இவர் சிறந்த உள்ளம் கொண்டவராகவும், சிவனடித் தொண்டில் ஈடுபட்டு இளகிய மனமுடையவராகவும் திகழ்ந்தார். அவ்வணிகர் உண்மையற்ற புறச்சமயங்களைத் தமிழ் நாட்டை விட்டு அகற்ற வேண்டும் எனும் உறுதியுடையவராக விளங்கினார். இவ்வாறிருக்கும் நாளில் ஞானசம்பந்தப்பிள்ளையாரது பெருமையினை அடியார்கள் சொல்லக் கேட்டு பிள்ளையார் திருவடிக்கீழ் எல்லையிலாத பேரன்புடையவராயினார். அந்நாளில் சிவநேசர்க்குப் பெண் குழந்தை ஒன்று பிறந்தது. அக்குழந்தைக்குப் பூம்பாவை எனப் பெயரிட்டார். பூம்பாவை வளர்ந்து மணப்பருவமெய்தினாள். திருஞானசம்பந்தர் மதுரையில் கூன்பாண்டியனது வெப்பு நோயையும் கூனையும் தவிர்த்துச் சமணர்களை வாதில் வென்று சிவநெறிபரப்பிய செய்தியையும் அடியார்கள் சிவநேசர்க்குக்

---

* சந்தமார் அகிலொடு சாதிதேக் கம்மரம்
உந்துமா முகலியின் கரையினில் உமையொடும்
மந்தமார் பொழில்வளர் மல்குவண் காளத்தி
எந்தையார் இணையடி என்மனத் துள்ளவே

கூறினர். அளவிலா மகிழ்ச்சியுற்ற வணிகர், "காழி நாடுடையவற்கு அடியேன், நான் பெற்ற பூம்பாவையையும் பெருநிதியையும், என்னையும் அவர்க்கே உடைமையாகக் கொடுத்தனன்' எனக் கூறினார்.

இவ்வாறு சம்பந்தருக்கு உரியளான பூம்பாவை நறுமலர் கொய்தற்காகப் பூஞ்சோலை சென்றாள். சென்ற பூம்பாவையின் விரலைப் பாம்பு தீண்டியது. அதனை அறிந்த தந்தையார், விடந்தீர்க்கும் வன்மையுடைய மருத்துவர், மந்திரவல்லார் போன்றோரை அழைத்து வந்து வேண்டுவன செய்து பார்த்தார். எனினும் விடம் தலைக்கேறியதால் அவள் இறந்தாள். சிவநேசர் இது கண்டு கலக்கமுற்றார். ஆயினும் "திருஞானசம்பந்தர்க்கு இவள் உரியள்" எனக் கூறியமையால் இனித் துன்பமுறத்தேவையில்லை.' எனத் தெளிந்து பிள்ளையார் இங்கு வரும் வரையிலும் "இவளுடம்பைத் தகனஞ்செய்து சாம்பலையும், எலும்பையும் ஒரு குடத்திலிட்டுச் சேமித்து வைப்பேன்" எனத் துணிந்தார். அவ்வாறே சாம்பலையும் எலும்பையும் குடத்திலிட்டு கன்னிமாடத்தில் வைத்துப் பூசனை செய்து வந்தார். அந்நிலையில் திருஞானசம்பந்தர் திருவொற்றியூரில் எழுந்தருளிய செய்தியைக் கேள்விப்பட்டு மகிழ்ச்சியுடன் மயிலாப்பூரை அணிசெய்து பிள்ளையாரை வரவேற்கச் சென்றார். திருஞானசம்பந்தரும் மயிலாப்பூர்இறைவரை வணங்கும் பெருவிருப்புடன் திருவொற்றியூரிலிருந்து எதிரேவந்தருளினார். சிவநேசராகிய வணிகர் காழிப்பிள்ளையார் அமர்ந்திருந்த சிவிகை-யின் முன் விழுந்து வணங்கினார். பிள்ளையார் தம்மை வீழ்ந்து வணங்கிய சிவநேசரது செயல்களை அடியார்கள் சொல்லக்கேட்டு அவருடன் மயிலாப்பூரை அடைந்தார்.

ஆளுடையபிள்ளையார் கபாலீச்சரத்திறைவனை வணங்கி வெளியே வந்து சிவநேசரை நோக்கி, ஒருமைவைத்த நல்லுணர்வு உடையீர், உமது மகளின் சாம்பலும், எலும்பும் கொண்ட குடத்தினை உலகவர் அறிய இத்திருக்கோயிலின் வெளிவாயிலிற் கொணர்வீராக' எனப்பணித்தார். சிவநேசரும் அக்குடத்தினைச் சிவிகையில் வைத்துக் கொண்டுவந்து கோயில் வாயிலில் வைத்து வணங்கினார். உலகமாந்தர்க்கு உறுதிப் பொருளை உணர்த்தத் திருவுளம் கொண்ட

பிள்ளையார், மயிலைநகரத்தாரும், புறச்சமயத்தாரும் காணக் கோயில் வாயிலில் குடத்தைப்பார்த்து இறைவனை நினைந்து, 'மக்கள் அடைதற்குரிய பயன் சிவனடியார்களை அமுது செய்வித்தலும், இறைவனது திருவிழாப் பொலிவு கண்டு மகிழ்தலுமே என்பது உண்மையானால் பூம்பாவையே நீ உலகர் முன் உயிர்பெற்று வருக" என பூம்பாவையை அழைக்கும் முகமாக * **"மட்டிட்ட புன்னையங்.."** எனும் திருப்பாடலை முதலாகக் கொண்டு திருப்பதிகம் பாடினார். அப்பொழுது என்புகள் அனைத்தும் ஒருருவாய் நிரம்பின. வடிவு பெற்ற பூம்பாவை இப்பதிகத்தின் 2 - 9 வரையான பாடல்களைப் பாட பன்னிரண்டு வயதுடையவளானாள். சிந்தை தெளிவற்ற சமணரும், புத்தரும் இச்செய்கை இயல்வதன்று என்று கூறுவார்கள் எனும் கருத்துடன் 'உரிஞ்சாய வாழ்க்கை அமண்....." என்ற பத்தாம் பாடலைப் பாடிய அளவில் குவித்த செங்கையுடன் பூம்பாவை குடம் உடைய எழுந்து தோன்றினாள். பிள்ளையார் திருக்கடைக்காப்புச் சாத்தி இறைவனைப் பரவினார். பூம்பாவையைக் கண்ட சிவநேசர் பிள்ளையார் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினார். பூம்பாவையும் இறைவரைத் தொழுது ஞானசம்பந்தரை வணங்கி நின்றாள்.

சிவநேசர் திருஞானசம்பந்தரை வணங்கித் தனது மகளைத் தேவீர் திருமணஞ்செய்தருளல் வேண்டுமெனப் பணிந்தார். அதுகேட்ட ஆளுடையபிள்ளையார், அவரைநோக்கி, "நீவீர் பெற்ற பெண் விடத்தினால் இறந்த பின்பு இறைவன் திருவருளால் நாம் மீண்டும் பிறப்பித்தோம் ஆதலால் இவள் எமக்கு மகளாவாள்" என மறுத்துரைத்தார். சிவநேசர்க்கும் சுற்றத்தார்க்கும் மறைமுறையினை எடுத்துரைத்து மயக்கம் நீக்கினார். பிள்ளையார் கூறும் மறைக்கருத்தினை உணர்ந்து ஏற்றுக் கொண்ட சிவநேசர், பூம்பாவையை வேறு எவருக்கும் மணஞ் செய்து கொடுக்க இசைவின்றிக் கன்னிமாடத்திலே இருக்கச் செய்தனர். இறைவன் திருவருளின் வண்ணமாகிய பூம்பாவையும் சிவனருளைச் சிந்தித்திருந்து சிவத்தைச் சேர்ந்தாள்.

---

* "மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச்சரமமர்ந்தான்
ஓட்டிட்ட பண்பின் உருத்திர பல்கணத்தார்க்கு
அட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்"

கபாலீச்சரப் பெருமானைப் பணிந்து போற்றிய பிள்ளையார் சிவநேசர் முதலானோரிடம் விடைபெற்றருளி திருவான்மீயூரையடைந்து அங்கு இறைவனைச் சில நாள் போற்றி இருந்த பின் திருக்கழுக்குன்றம் முதலான பதிகளைப்பரவிப் போற்றித் தேவர் பிரான் நடம்பயிலும் திருத்தில்லையை அடைந்தார். தில்லைவாழ் அந்தணர்கள் எதிர்கொண்டு போற்றத் தில்லைச்சிற்றம்பலவனை இறைஞ்சிப் போற்றி எல்லையில்லா இன்பமுற்றார். பின் தில்லைக்கூத்தனிடம் விடைபெற்றுப் பல தலங்களையும் வணங்கி **'வண்டார் குழலரிவையொடும்'** எனும் பதிகம் பாடி சீகாழிப்பதியின் எல்லையை அடைந்தார். நறுமலர் கொண்டு அருச்சித்து அந்நகரைத் தொழுது **'நம்பன்மேவும் நன்னகர் நலங்கொள் காழிசேர்மினே'** எனப்பாடிப் பிரமபுரத்துட்புகுந்தார். தோணிபுரத் திருக்கோயிலை வலம் வந்து கோயிலுட் புகுந்து பெரிய பெருமாட்டியுடன் வீற்றிருக்கும் தோணியப்பரைப்போற்றித் தமது திருமாளிகையில் அமர்ந்திருந்தார்.

இவ்வாறு இருக்கும் நாளில் பிள்ளையாரை வணங்கும் விருப்புடன் முருகநாயனார், நீலநக்க நாயனார் ஆகியோர் தம் சுற்றத்தாருடன் சீகாழிப்பதிக்கு வந்து சேர்ந்தனர். இந்நிலையில் சிவபாதவிருதயரும், சுற்றத்தாரும் பிள்ளையாருக்குத் திருமணம் செய்து கொடுக்க இதுவே பருவம் என எண்ணிப் பிள்ளையாரை அணுகி, 'மறை முறைப்படி வேள்விகள் பல செய்வதற்கு ஒரு கன்னியை மணம் புரிந்தருள வேண்டும்' என வேண்டிக் கொண்டார்கள். அது கேட்ட சம்பந்தர் சுற்றத் தொடர்ச்சியினை விட்டு நீங்கும் நினைவினராய் 'அது கூடாது' என மறுத்தருளினார். மறையவர்கள் மீண்டும் கைதொழுது 'பெருந்தகையீர், வேதநெறியை மீண்டும் இவ் உலகில் நிலைபெறச் செய்த பெருமை தங்களுக்குரியது. ஆதலால் அவ்வேத விதிப்படி அந்தணர்க்குரிய அறு தொழில் இயற்றத் திருமணம் செய்யத் தாங்கள் திருவுளங் கொள்ள வேண்டும்' என வேண்டினர். ஞானசம்பந்தரும் இறைவனது திருவருளை நினைந்து திருமணத்திற்கு உடன்பட்டார். அது கண்டு மகிழ்ச்சியுற்ற தந்தையார் தம்மோடு ஒத்த குலத்தவரான திருநல்லூரில் வாழும் நம்பாண்டார்நம்பியின் திருமகளே திருஞானசம்பந்தருக்கு ஏற்ற துணையெனக் கருதி நம்பாண்டார்நம்பியிடம் மகட்பேசச் சென்றார். அவரும் தமது மகளைத் திருமணம் செய்துதர உடன்பட்டார். சிவபாத விருதயரும் சீகாழிவந்து திருமண நாளை உறுதிசெய்து கொண்டு நம்பாண்டார்நம்பிக்கு அறிவித்தார். அவரும் ஏழு நாட்களுக்கு முன்

முளைப்பாலிகை அமைத்துத் திருநல்லூரில் திருமணப் பொலிவு எங்கணும் விளங்க மங்கல அணி செய்தார்.

திருஞான சம்பந்தப் பிள்ளையார் தோணியப்பரிடம் விடைபெற்றுச் சிவிகை மீதமர்ந்து சுற்றம் புடைசூழ திருநல்லூரை அடைந்தார். சிவிகையினின்றும் இறங்கிப் 'பெருமணம்' எனும் திருக்கோயிலில் வீற்றிருந்தருளும் சிவபெருமானைப் பணிந்து போற்றினார். அன்பர்களின் வேண்டுகோளுக்கிணங்க திருமணக்கோலம் பூணச் சம்மதித்தார். பின் மணக்கோலம் புனைய வேண்டிப் புறத்தில் ஒரு மடத்திலே புகுந்தனர். அவரை வாச நீராட்டி, வெண்பட்டாடையும் உத்தரீயமும் சாத்தினர். உருத்திராக்க மாலையினைத் தாம் எடுத்துப் பூண்டு திருவெண்ணீற்றினை அஞ்செழுத்தோதிச் சாத்திச் சிவபெருமானை மனத்துள் வைத்து வணங்கி சிவிகையில் மேற்கொண்டருளினார். பூம்பந்தர்முன்பு சென்று சங்கங்கள் முழங்கச் சிவிகையினின்றும் இறங்கிப் பொற்சுண்ணம் பரந்தபாவாடை மீது திருவடி பதித்து வந்தார். மாந்தர்கள் மங்கலப் பொருட்கள் ஏந்தி முன் செல்லச் சென்று பிள்ளையார் செம்பொன்மடத்துள் ஆதி பூமியினுட் சென்றருளி விதானத்தின் கீழ் வீற்றிருந்தார்.

மங்கல மகளிர் மணப்பெண்ணை அழைத்து வந்து திருஞான-சம்பந்தரின் வலப்பக்கத்தில் அமரச் செய்தனர். திருநீலநக்க நாயனார் சம்பந்தர் முன் இருந்து திருமணச் சடங்குகளை நிகழ்த்தி வைத்தார். ஞானசம்பந்தர் வெண்பொரியினைத் தூவித் தீவலம் வருதலாகிய சடங்கினை நிறைவேற்றும் நிலையில், மணமகளது மலர்க்கையைப் பற்றி **'விருப்புறும் அங்கியாவார் விடையுயர்த்தவரே'** எனும் தெளிவு-டைய சிந்தையராய், மந்திர முறையால் வளர்த்த எரியினை வலம் வந்து, இருவினைக்கு வித்தாகிய இந்த இல்வாழ்க்கை வந்து என்னைச் சூழ்ந்து கொண்டதே, இனி இவளோடும் சிவன்தாள் சேர்வேன்' எனும் உறுதிகொண்டு திருப்பெருமணக் கோயிலையடைந்தார். உறவினரும் அடியார்களும், பிறரும் அவரைத் தொடர்ந்து வந்தனர்.

திருப்பெருமணத் திருக்கோயிலை அடைந்த பிள்ளையார், இறைவன் திருமுன்னர் நின்று 'எளியேனை முன்னை நாளில் ஆட்கொண்-

டருளிய திருவருட்பண்பு இப்பொழுது இறைவனது திருவடியிற் சேர்த்தருளும்' எனும் நல்லுணர்வுடன் தமது திருமணத்தைக் கண்டோரது பிறவிப்பாசத்தை நீக்கும் பொருட்டு, * **"கல்லூர்ப்பெருமணம் வேண்டா"** எனும் திருப்பதிகம் பாடி, 'நாதனே, நல்லூரில் எழுந்தருளியிருக்கும் நம்பனே உனது திருவடிநீழலில் எளியேன் சேரும் பருவம் இதுவாகும்' என உளமுருகிப் போற்றினார்.

அப்பொழுது சிவபெருமான் பெருமணக்கோயிலில் தூய பெருஞ் சோதிப்பிழம்பாகத் தோன்றி, 'ஞானசம்பந்தனே, நீயும் உன் மனைவியும், உனது திருமணங்காண வந்தோர் யாவரும் இச்சோதியினுள் வந்து சேர்மின்' என திருவாய்மலர்ந்து சோதியுட்புக வாயிலொன்றையும் வகுத்துக் காட்டினார். அது கண்ட ஞானசம்பந்தர் உலகத்தார் உய்யும் பொருட்டு நன்னெறியினை அறிவுறுத்தத் திருவுளங் கொண்டு

'ஞான மெய்ந் நெறிதான் யார்க்கும் நமச்சிவாயச் சொல்லாம் என்று'
ஆனசீர் நமச்சிவாயத் திருப்பதிகத்தை ஆங்கண்
வானமும் நிலனும் கேட்க அருள்செய்து இம் மணத்தில் வந்தோர்
ஈனமாம் பிறவி நீங்க யாவரும் புகுத என்று

எனும் **நமச்சிவாயத் திருப்பதிகம்** * பாடிப் போற்றி, இம்மணத்தில் வந்தோர் யாவரும் இழிதகைப் பிறவி நோய்தீர* இச்சோதியினுட் புகுமின்' என எல்லோரையும் அன்பால் அழைத்தார். பிறவிப் பெருங்கடலிற் பட்டுக் கரைகாணாது வருந்தும் இயல்பினராகிய மக்கள் திருஞானசம்பந்தரது திருமணங்கண்டு உடன்சேவித்துச் செல்லும் நற்பேற்றினால் தோன்றிய ஈறில்பெருஞ்சோதியுட் புகுந்து பிறவா நெறியாகிய பேரின்ப

---

* "கல்லூர்ப்பெருமணம் வேண்டா கழுமலம்
பல்லூர்ப் பெருமணம் பாட்டு மெய்யாய்த்தில
சொல்லூர்ப் பெருமணம் சூடலரே தொண்டர்
நல்லூர்ப் பெருமணம் மேயநம்பானே"

* "காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சிவாயவே"

வாழ்வைத் தலைப்பட்டார்கள். திருநீலநக்கநாயனார், முருகநாயனார், சிவபாதவிருதயர், நம்பாண்டார்நம்பி, திருநீலகண்டப்பெரும்பாணர் முதலியோர் தம் துணைவிமாருடன், சோதியுட்புகுந்தனர். பிள்ளையாரின் பரிசனங்களும், ஆறுவகைச் சமயத்தினராகிய அருந்தவர்களும், முனிவர்களும், அடியார்களும், பிறரும் சோதியுட் புகுந்து இன்புற்றனர். இவ்வாறு திருமணங்காண வந்தோர் அனைவரும் சோதியுட்புகுந்த பின்னர் திருஞானசம்பந்தர் தம் காதலியாரைக் கைப்பிடித்து இறைவனது எழில்வளர் சோதியை வலஞ்செய்து அதனுள்ளே புகுந்து சிவபெருமானுடன் ஒன்றியுடனானார். உடனே அச்சோதி மறையத் திருப்பெருமணத் திருக்கோயில் முன்போலவே தோன்றியது.

திருத்தொண்டர் புராணசாரம்

காழிநகர்ச் சிவபாதவிதயர்தந்த
கவுணியர்கோன் அழுது உமையாள் கருதிஊட்டும்
ஏழிசை அமுதுண்டு தாளம்வாங்கி
இலங்கிய நித்திலச் சிவிகை இசைய ஏறி
வாழும் முயலகன் அகற்றிப் பந்தர் ஏய்ந்து
வளர்கிழி பெற்று அரவின்விடம் மருகல்தீர்த்து
வீழிநகர் காசு எய்தி மறைக்கதவம் பணித்து
மீனவன் மேனியின் வெப்புவிடுத்தாரே.

ஆரெரியில் எடுத்த ஏடு அவைமுன் ஏற்றி
ஆற்றில் இடு ஏடு எதிர்போயணைய ஏற்றி
ஓரமணர் ஒழியாமே கழுவிலேற்றி
ஓது திருப்பதிகத்தால் ஓடமேற்றி
காருதவும் இடிபுத்தன் தலையில் ஏற்றி
காயாத பனையின் முதுகனிகள் ஏற்றி
ஈரமிலா அங்கம் உயிரெய்த ஏற்றி
இலங்கு பெருமணத்து அரனை எய்தினாரே.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்.

நுண்பொருள்

1. சிவம்பெருக்கும் பிள்ளை வேண்டுமென மெய்யன்புடன் பிரார்த்திக்கும் பெற்றோர், சிவஞானசம்பந்தராய் வளரும் பிள்ளையினைப் பெற்றெடுப்பர்.
2. பண்டு திருவடிமறவாப்பான்மையோர்க்கு இப்பிறப்பிலும் அத்திருவடி நினைவு வந்து மூழும்
3. திருவடியைப் பிரிந்திருக்கலாற்றாது அழும்பிள்ளை அம்மை ஊட்டும் ஞானப்பால் அருந்தி சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம் பெறும்.
4. அம்மையப்பரின் அருள்பெற்றோர் பிள்ளைப்பருவத்திலேயே அருட்பாக்கள் பாடுவர்.
5. அம்மையப்பர் ஆளுடையபிள்ளைகட்கு வேண்டும்போது வேண்டுவதை அருள்வர்.
6. சம்பந்தப்பிள்ளையார் சைவசிகாமணியாவர்.
7. வேதநெறியைத் தழைத்தோங்கச்செய்வதும், மிகுசைவத்துறையை விளங்கச் செய்வதும் சைவசமயாசாரியாரின் பணிகளாகும்.
8. சமயாசாரியர் மன்னுயிர்படும் துயரம் பொறார்.
9. மெய்ந்நெறிக்குப் பொய்ந்நெறி இடையூறாய்த் தோன்றுமிடத்துப் பொய்ந்நெறியை நிராகரித்து மெய்ந்நெறியை நிலைநிறுத்துதற்குச் சமய குரவர் தயங்கார்.
10. 'திருநீலகண்டம்' தீதகற்றும், ஒப்பற்ற மந்திரம்
11. நமச்சிவாய மந்திரம், வேத நான்கினும் மெய்ப்பொருளாயமையும் மந்திரம்
12. மெய்யடியார்க்கு நாளும் கோளும் நலம் செய்யும்.
13. இறைவன் திருத்தலந்தோறும் திடமாய் உறைகின்றார். திருத்தலதரிசனம் திருவெல்லாம் தரும். திருத்தலத்தை வலம்வந்து நிலமுற வீழ்ந்து வணங்கி, எழுந்து நின்று பதிகவசைப் பாடிப் பரவுவது சம்பந்தப்பிள்ளையார் காட்டிவைத்த நெறிமுறையாகும்.
14. திருநீறு மந்திரமும், தந்திரமும், மருந்துமாயமைவது.
15. திருஞான சம்பந்தரின் அருளிச் செயல்கள் 'தமிழ்வேதம்' ஆகும்.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் குருபூசைநாள் :- வைகாசி மூலம்

29. ஏயர்கோன் கலிக்காம நாயனார்

ஏயர்கோன் கலிக்காமன் அடியார்க்கும் அடியேன்

– திருத்தொண்டத்தொகை

கொற்றத் திறலெந்தை தந்தைதன் தந்தை எம் கூட்டமெல்லாம்
தெற்றச் சடையாய் நினதடியேம். திகழ் வன்றொண்டனே
மற்றிப் பிணிதவிர்ப்பான் என்றுடைவாளுருவி அந்நோய்
செற்றுத் தவிர் கலிக்காமன் குடி ஏயர்சீர்க் குடியே

– திருத்தொண்டர் திருவந்தாதி

சோழநாட்டில் காவிரி வடகரைக் கீழ்ப்பாலுள்ள திருப்பெருமங்கலம் என்னும் பதியில் வேளாண்மையிற் சிறந்த ஏயர்கோக்குடியில் தோன்றியவர் கலிக்காமநாயனார். இவர் சிவபத்தியிலும் அடியார்பத்தியிலும் சிறந்து விளங்கினார். கலிக்காமனார் மானக்கஞ்சாறனாரது மகளைத் திருமணம் செய்தார். ஏயர்கோன் கலிக்காமர் திருப்புன்கூர்ப் பெருமானுக்குப் பல திருப்பணிகள் புரிந்தார். "நிதியமாவன நீறுகந்தார் கழல்" என்று சிவபெருமானைத் துதியினாற் பரவித்தொழுது இன்புறுந்தன்மையராய் வாழ்ந்தார். அங்ஙனம் வாழும் நாளில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் சிவபெருமானைப் பரவையாரிடத்துத் தூதுவிட்ட செய்தியைக் கேள்வியுற்று, ஆண்டவனை அடியான் ஏவும் செயல் நன்று என வெகுண்டு நம்பியாரூரர் மேற் கோபங்கொண்டார். "ஆண்டவன் ஏவல் செய்பவனே தொண்டன். ஆண்டவனை ஏவுபவனும் தொண்டனாவானா? இது என்னபாவம்! இப்பெரும் பிழையினைக் கேட்டபின்னரும் இறவாதிருக்கின்றேனே! பெண்ணாசை காரணமாக ஒருவன் ஏவினால் அவ்வேவலைச் செய்தற்காக ஓரிரவெல்லாம் தேரோடும் வீதியில் வருவது போவதாகத் திரிவதோ? நான்முகன் மால் ஆதிய தேவரெல்லாம் தொழும் தேவதேவன் தூதுசெல்ல இசைந்தாலும் அவ்வாறு ஏவலாமா? இப்பாவச் செயலைச் செய்தவனைக் காண்பேனாயின் என்ன நிகழுமோ?" என்று பலவாறு எண்ணி மனம் புழுங்கினார். இதனைக் கேள்வியுற்றுத் தன்பிழையினை உணர்ந்த வன்றொண்டர் ஆரூரிறைவரை நாளும் போற்றிக் கலிகாமரது கோபத்தைத் தீர்த்தருளும்படி வேண்டிக்கொண்டார். சிவபெருமான் அவ்விருவரையும் நண்பராக்கத் திருவுளம் கொண்டார். ஏயர்கோன் கலிக்காமனார்க்குச் சூலை நோயினை ஏவினார். அச்சூலை

ஏயர்கோனை வருத்திற்று. வருத்தம் தாங்காது சிவபெருமான் திருவடியை நினைத்து சூலை நீங்குமாறு வேண்டினார். அப்போது சிவபெருமான் அவர் முன்பு எழுந்தருளி "உன்னை வருத்தும் சூலை வன்றொண்டன் தீர்த்தாலன்றித் தீராது" எனக் கூறினார். அதுகேட்ட கலிக்காமர் வழிவழி அடியனான என் வருத்தத்தை வம்பனான அவ்வன்றொண்டனோ தீர்ப்பவன்? அவன் தீர்க்கத் தீர்வதைக்காட்டிலும் அந்நோய் என்னை வருத்துதலே நன்று' என்றார். சிவபெருமான் வன்றொண்டர் முன்தோன்றி, 'இன்று நம் ஏவலாலே ஏயர்கோன் உற்ற சூலை சென்று நீ தீர்ப்பாய்' எனப் பணித்தருளினார். நம்பியாரூரரும் பணிந்து விரைந்து தாம் சூலைநோயை மாற்ற வருஞ் செய்தியை ஏயர்கோனார்க்குச் சொல்லியனுப்பினார். அதனைக் கேட்ட கலிக்காமர் 'மற்றவன் வந்து நீக்குதன் முன்னம் என்னை நீங்காப் பாதகச்சூலை தன்னை உற்ற இவ் வயிற்றினோடும் கிழிப்பேன்' என்று உடைவாளாற் கிழித்திட உயிரினோடு சூலையும் தீர்ந்தது.

கலிக்காமர் இறத்தல் கண்டு மனைவியார் உடனுயிர் விடத்துணிந்தார். அப்பொழுது சுந்தர மூர்த்தி சுவாமிகள் அண்மையில் வந்துவிட்டார் என்று வந்தோர் சொல்லக்கேட்டார். தம் கணவர் உயிர் துறந்த செய்தியை மறைத்து நம்பியாரூரரை எதிர்கொள்ளும்படி சுற்றத்தார்களை ஏவினார். அவர்களும் நம்பியாரூரரை எதிர்கொண்டு அழைத்து வந்து ஆசனத்தில் இருத்தி வழிபட்டுப் போற்றினர். அவர்களது வழிபாட்டினை ஏற்றுக்கொண்ட சுந்தரர் 'கலிக்காமனாருடைய சூலைநோயை நீக்கி அவருடன் இருத்தற்கு மிக முயல்கின்றேன்' என்றார். அப்பொழுது கலிக்காமரது மனைவியார் ஏவலால் வீட்டிலுள்ள பணியாளர்கள் வணங்கி நின்று 'சுவாமி! அவருக்குத் தீங்கேதுமில்லை உள்ளே பள்ளி கொள்கின்றார்' என்றனர். அதுகேட்ட வன்றொண்டர், 'தீங்கொன்றுமில்லை என்றீர்கள், ஆயினும் என்மனம் தெளிவு பெறவில்லை. ஆதலால் அவரை நான் விரைந்து காணுதல் வேண்டும்' என்றார். அதுகேட்டு அவர்கள் கலிக்காமரைக் காட்டினர். கலிக்காமர் குடர் சொரிந்து உயிர் மாண்டு கிடத்தலைக் கண்ட சுந்தரர் 'நிகழ்ந்-தது நன்று; யானும் இவர்போல் இறந்தொழிவேன்' என்று குற்றுடை-வாளைப் பற்றினார். அப்பொழுது இறைவர் அருளால் கலிக்காமர் உயிர்பெற்றெழுந்து "கேளிரேயாகிக்கெட்டேன்" என்று சுந்தரர் கையிலுள்ள வாளைப்பிடித்துக்கொள்ள, ஆரூரர் விழுந்து வணங்கினார். கலிக்காமரும் வாளை விட்டொழித்து நம்பியாரூரர் திருவடிகளில்

வீழ்ந்து வணங்கினார். இருவரும் எழுந்து ஒருவரைஒருவர் அன்பினால் தழுவிப் பிரியா நண்பராகித் திருப்புன்கூர்ப் பெருமான் திருவடிகளை வணங்கிப் போற்றினார்கள். நம்பியாரூரருடன் சென்று திருவாரூர்ப் பெருமானை வழிபட்டு அங்குத் தங்கிய ஏயர்கோன் கலிக்காமர் ஆரூரர் இசைவு பெற்றுத் தம்முடைய ஊர்க்குத் திரும்பினார். அங்குத் தமக்கேற்ற திருத்தொண்டுகளைப் புரிந்திருந்து சிவபெருமான் திருவடியைச் சேர்ந்து இன்புற்றார்.

திருத்தொண்டர் புராணசாரம்

ஏதமில் வேளாளர் பெரு மங்கலத்துள் ஏயர்கோன் கலிக்காமர் இறையை நேரே
தூதுகொளும் அவனணுகில் என்னாம் என்னும் துணிவினர்பால் இறைவன்
– அருஞ்சூலை ஏவி
வேதனை வன்றொண்டன் வரின் நீங்குமென வெகுண்டு உடல் வாள்கொடு
– துறந்து மேயநாவல்
போதகமும் உடலிகழ எழுந்து தாழ்ந்து போற்றி அதுவிலக்கி அருள் பொருந்தினாரே.

நுண்பொருள்

சிவதொண்டர், சிவனைப் பணிசெய்ய ஏவும் பிழைபுரிவரேனும் அவர் சிவபத்தியிற் சிறந்தோரால் பத்திசெய்தற்குரியர்.
சிவநிந்தை பொறாத சிந்தை பெரிது.
அமங்கலம் நேர்ந்த விடத்தும் சிவதொண்டர் எழுந்தருள்வரேல் அவரை மங்கலமாக வரவேற்று உபசரித்தலே முறைமை

வையகமுற்றும் மாமழை மறந்து வயலில் நீரிலை மாநிலந்தருகோம்
உய்யக் கொள்க மற்றெங்களை என்ன ஒளிகொள்வெண்முகிலாய்ப்
பரந்தெங்கும்
பெய்யு மாமழைப் பெருவெள்ளம் தவிர்த்தும் பெயர்த்தும்
பன்னிருவேலிகொண்டருளும்
செய்கைகண்டு நின் திருவடியடைந்தேன் செழும்பொழில் திரு
புன்கூருளானே

– கந்தரர் தேவாரம்

(பன்னிருவேலிநிலம் அளித்தவர் ஏயர்கோன் ஆவர்)

நாயனை அடியான் ஏவும் காரியம் நன்று சால
ஏயும் என்றிதனைச் செய்வான் தொண்டனாம் என்னே பாவம்
பேயனேன் பொறுக்க வொண்ணாப் பிழையினைச் செவியாற் கேட்பது
ஆயினன் பின்னும் மாயா திருந்ததென் ஆவி என்பார்

பெரிய புராணம்

ஏயர்கோனின் குருபூசைநாள் - ஆனிரேவதி

30. திருமூல நாயனார்.

"நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்"

- திருத்தொண்டத் தொகை

"குடிமன்னு சாத்தனூர்க் கோக்குல மேய்ப்போன் குரம்பைபுக்கு
முடிமன்னு கூனற் பிறையாளன் தன்னை முழுத்தமிழின்
படிமன்னு வேதத்தின் சொற்படியே பரவிட்டு என் உச்சி
அடி மன்ன வைத்தபிரான் மூலன் ஆகின்ற அங்கணனே"

- திருத்தொண்டர் திருவந்தாதி

திருக்கயிலாயத்திலே சிவபெருமானது திருக்கோயிலுக்கு முதற்-பெரும் காவல்பூண்ட திருநந்தி தேவரது திருவருள்பெற்ற மாணாக்கருள் அணிமா முதலிய எண்வகைச் சித்திகளும் கைவரப்பெற்ற சிவயோ-கியார் ஒருவர் இருந்தார். அவர் அகத்திய முனிவரிடத்திற் கொண்ட நட்பினால் அவரோடு சிலநாள் தங்குதற்கு எண்ணி அம்முனிவர் எழுந்தருளிய பொதியமலையை அடையும் பொருட்டுத் திருக்கயிலை-யினின்றும் புறப்பட்டுத் தென்திசை நோக்கிச் சென்றார். செல்லும் வழியில் திருக்கேதாரம், பசுபதிநேபாளம், அவிமுத்தம் (காசி), விந்த-மலை, திருப்பருப்பதம், திருக்காளத்தி, திருவாலங்காடு ஆகிய திருத்-தலங்களைப் பணிந்தேத்திக் காஞ்சி நகரையடைந்து திருவேகம்பப் பெருமானை இறைஞ்சிப் போற்றி, அந்நகரிலுள்ள சிவயோகியர்களா-கிய தவமுனிவர்களுடன் அன்புடன் அளவளாவி மகிழ்ந்தார். பின்னர்த் திருவதிகையையடைந்து முப்புரமெரித்த பெருமானை வழிபட்டுப் போற்றி, இறைவன் அற்புதத் திருக்கூத்தாடியருளும் திருவம்பலத்தினைத் தன்ன-கத்தே கொண்டு திகழும் பொற்பதியாகிய பெரும்பற்றப்புலியூரை வந்-தடைந்தார். எல்லாவுலகங்களும் உய்யும்படி ஐந்தொழில் திருக்கூத்து இயற்றியருளும் கூத்தப் பெருமானை வணங்கித் துதித்துச் சிந்தை களிகூர்ந்தார். பசுகரணங்கள் சிவகரணங்களாகிய தூய நிலையில் தம்முள்ளத்தே பொங்கி யெழுந்த சிவபோதமாகிய மெய்யுணர்வினால் சிவானந்தத் திருக்கூத்தினைக் கண்டுகளித்து ஆராத பெரு வேட்கை-யினால் அத்திருத்தலத்தில் தங்கியிருந்தார்.

தில்லைத் திருநடங் கண்டு மகிழ்ந்த சிவயோகியார், அங்கிருந்து புறப்பட்டுக் காவிரியில் நீராடி அதன் தென்கரையினையடைந்து, உமையம்மையார் பசுவின் கன்றாக இருந்து இறைவனை வழிபாடு செய்து அம்முதல்வனுடன் எழுந்தருளியிருந்து அருள் புரியும் திருவாவடு துறையினை அடைந்தார். திருக்கோயிலை வலம்வந்து பசுபதியாகிய இறைவனை வழிபட்டு, அத்திருப்பதியினை விட்டு நீங்காததொரு கருத்தும் தம் உள்ளத்தே தோன்ற அங்கே தங்கியிருந்தார். ஆவடுதுறையிறைவரை வழிபடுதலில் ஆராத பெருங் காதலையுடைய சிவயோகியார், அத்தலத்தை அகன்று செல்லும் பொழுது காவிரிக்கரையிலுள்ள சோலையிடத்தே பசுக் கூட்டங்கள் கதறி அழுவதனைக் கண்டார். அந்தணர்கள் வாழும் சாத்தனூரிலே தொன்று தொட்டு ஆனிரை மேய்க்கும் குடியிற் பிறந்த ஆயனாகிய மூலன் என்பவன், விடம்தீண்டி இறந்தமையால் அதனைத் தாங்காத பசுக்கள் உயிர் நீங்கிய அவனது உடம்பினைச் சுற்றிச் சுழன்று வந்து மோப்பனவும் கதறுவனவுமாகி வருந்தின.

மேய்ப்பவன் இறந்தமையால் பசுக்களடைந்த துயரத்தினைக் கண்ட அருளாளராகிய சிவயோகியாரது உள்ளத்தில் 'இப்பசுக்கள் உற்ற துயரத்தை நீக்குதல் வேண்டும்' என்றதோர் எண்ணம் திருவருளால் தோன்றியது. 'இந்த இடையன் உயிர்பெற்றெழுந்தாலன்றி இப்பசுக்கள் துயரம் நீங்கா' எனத் திருவுளத்தெண்ணிய தவமுனிவர், தம்முடைய திருமேனியைப் பாதுகாவலானதோரிடத்து மறைத்து வைத்து விட்டுக் கூடுவிட்டுக் கூடு பாய்தல் (பரகாயப்பிரவேசம்) என்னும் பவன வழியினாலே தமது உயிரை அவ்விடையனது உடம்பிற் புகுமாறு செலுத்தித் திருமூலராய் எழுந்தார். எழுதலும் பசுக்களெல்லாம் தம் துயரம் நீங்கி அன்பினால் அவரது உடம்பினை நாத்தழும்ப நக்கி மோந்து கனைத்து மிகுந்த களிப்பினாலே வாலெடுத்துத் துள்ளிக்கொண்டு தாம் விரும்பிய இடத்திற் சென்று புல் மேய்ந்தன. திருமூலநாயனார் அதுகண்டு திருவுளம் மகிழ்ந்து ஆனிரைகள் மேயுமிடங்களிற் சென்று நன்றாக மேய்த்தருளினார். வயிறார மேய்ந்த அப்பசுக்கள், கூட்டமாகச் சென்று காவிரியாற்றின் முன்துறையிலேயிறங்கி நன்னீர் பருகிக் கரையேற, அப்பசுக்களைக் குளிர்ந்த நிழலிலே தங்கி இளைப்பாறும்படி செய்து பாதுகாத்தருளினார்.

சூரியன் மேற்றிசையை அணுக மாலைப்பொழுது வந்தது. பசுக்கள் தத்தம் கன்றுகளை நினைத்துத் தாமே மெல்ல நடந்து சாத்தனூரை அடைவனவாயின. அப்பசுக்கள் செல்லும் வழியிலே தொடர்ந்து பின்சென்ற சிவயோகியார், பசுக்கள் யாவும் தத்தமக்குரிய வீடுகளிற் சென்று சேர்ந்த பின்னர் அவ்வூர் வழியில் தனியே நிற்பாராயினர்.

அந்நிலையில், மூலனுடைய மானமிகு மனையறக் கிழத்தியாகிய நங்கை, 'என் கணவர் பொழுது சென்ற பின்னரும் வரத் தாழ்ந்தனரே அவர்க்கு என்ன நேர்ந்ததோ' என்று அஞ்சியவளாய்த் தன் கணவனைத் தேடிக்கொண்டு சென்று, சிவயோகியார் நின்ற இடத்தையடைந்தாள். தன் கணவனது உடம்பிற்றோன்றிய உணர்வு மாற்றத்தைக் கண்டு 'இவர்க்கு ஏதோ தீங்கு நேர்ந்திருத்தல் வேண்டும்' என்று எண்ணி அவரைத் தளர்வின்றி இல்லத்திற்கு அழைத்துச் செல்லும் கருத்துடன் அவருடம்பினைத் தொடுதற்கு நெருங்கினாள். திருமூலராகிய சிவயோகியார், அவள் தம்மைத் தீண்டவொண்ணாதவாறு தடுத்து நிறுத்தினார். தன் கணவனையன்றி மக்கள் முதலிய நெருங்கிய சுற்றத்தார் ஒருவருமின்றித் தனியளாகிய அவள், அவரது தொடர்பற்ற நிலைகண்டு அஞ்சி மனங் கலங்கினாள். 'உமது அன்புடைய மனைவியாகிய எளியேனை வெறுத்து நீங்குதலாகிய இதனால் எனக்கு எத்தகைய பெருந் துன்பத்தைச் செய்து விட்டீர்' என்று கூறிப்புலம்பி வாட்டமுற்றாள். அந்நிலையில் நிறைதவச்செல்வராகிய திருமூலர், அவளைநோக்கி 'நீ எண்ணியவாறு இங்கு உனக்கு என்னுடன் எத்தகைய உறவும் இல்லை' எனக் கூறிவிட்டு, அவ்வூரில் அருந்தவர் பலரும் தங்கியிருத்தற்கென அமைந்துள்ள பொதுமடத்திற் புகுந்து சிவயோகத்தில் அமர்ந்திருந்தார்.

தன் கணவனது தன்மை வேறுபட்டதனைக்கண்ட மூலன்மனைவி, அதுபற்றி யாரிடத்தும் சொல்லாமலும், தவ நிலையினராகிய அவர்பால் அணையாமலும் அன்றிரவு முழுவதும் உறங்காதவளாய்த் துயருற்றாள். பொழுது விடிந்ததும் தன் கணவர் நிலையை அவ்வூரிலுள்ள நல்லோரிடம் எடுத்துரைத்தாள். அதுகேட்ட சான்றோர், திருமூலரையணுகி அவரது நிலைமையை நாடி, 'இது பித்தினால்

விளைந்த மயக்கமன்று; பேய் பிடித்தல் முதலாகப் பிறிதொரு சார்பால் உளதாகியதும் அன்று; சித்த விகாரக் கலக்கங்களையெல்லாம் அறவே களைந்து தெளிவு பெற்ற நிலையில் சிவயோகத்தில் அழுந்திய கருத்து உடையவராய் இவர் அமர்ந்துள்ளார். இந்நிலைமை யாவராலும் அளந்தறிதற்கரியதாம்' எனத் தெளிந்தனர். "இவர் இருவகைப்பற்றுக்களையும் அறுத்து ஞானோபதேசத்தால் பரமர் திருவடியைப் பெற்ற சீவன் முத்தர்களைப் போன்று எல்லாவற்றையும் ஒருங்கேயறியவல்ல முற்றுணர்வுடையவராக விளங்குகின்றார். ஆகவே முன்னை நிலைப்படி உங்கள் சுற்றத் தொடர்பாகிய வாழ்க்கையில் ஈடுபடுவார் அல்லர்' என மூலன்மனைவிக்கு எடுத்துரைத்தார்கள். அதுகேட்ட அவள், அளவிலாத்துயரத்தால் மயக்கமுற்றாள். அருகேயுள்ளவர்கள் அவளைத்தேற்றி அவளது மனைக்கு அழைத்துச் சென்றார்கள்.

சாத்தனூர்ப் பொதுமடத்தில் சிவயோக நிலையில் அமர்ந்திருந்த திருமூலர், யோகம்கலைந்து எழுந்து முதல் நாளிலே பசுக்கள் வந்த வழியே சென்று தம்முடம்பினைச் சேமமாக வைத்த இடத்திற்குச் சென்று பார்த்தார். அங்கு அதனைக் காணாதவராகி, அதுமறைந்த செயலை மெய்யுணர்வுடைய சிந்தையில் ஆராய்ந்து தெளிந்தார். பிறைமுடிக்கண்ணிப் பெருமானாகிய இறைவன், உயிர்களிடம் வைத்த பெருங்கருணையினாலே அருளிய சிவாகமங்களின் அரும் பொருள்களை இந்நிலவுலகில் திருமூலரது வாக்கினால் தமிழிலே வகுத்துரைக்கக் கருதிய திருவருட்டிறத்தால் சிவயோகியாரது முந்தைய உடம்பினை மறைப்பித்தருளினார். இம்மெய்மையினைத் திருமூலர் தமது முற்றுணர்வினால் தெளியவுணர்ந்தார். அந்நிலையில் தம்மைப் பின் தொடர்ந்து வந்த ஆயர்குலத்தவர்கட்கும் தமக்கும் எத்தகைய தொடர்பும் இல்லையென்பதனை அவர்கட்கு விளங்க அறிவுறுத்தினார்; அவர்கள் எல்லோரும் தம்மைவிட்டு நீங்கியபின் சிவபெருமான் திருவடிகளைச் சிந்தித்து அவ்விடத்தை விட்டகன்று திருவாவடுதுறைத் திருக்கோயிலை அடைந்தார். அத்திருக்கோயிலில் வீற்றிருந்தருளும் அம்மையப்பராகிய இறைவரை வணங்கி அத்திருக்கோயிலின் மேற்கில் மதிற்புறத்தேயுள்ள அரசமரத்தின்கீழ்த் தேவாசனத்தில் சிவயோகத்து அமர்ந்து, உள்ளக்-

கமலத்தில் வீற்றிருந்தருளும் அரும்பொருளாகிய சிவபரம்பொருளோடு இரண்டறக்கூடி ஒன்றியிருந்தார்.

இங்ஙனம் சிவயோக நிலையில் அமர்ந்திருந்த திருமூலநாயனார், ஊனொடுதொடர்ந்த இப்பிறவியாகிய தீய நஞ்சினாலுளவாம் துயரம் நீங்கி இவ்வுலகத்தார் உய்யும் பொருட்டு ஞானம், யோகம், கிரியை சரியை என்னும் நால்வகை நன்னெறிகளும் நால்வகை மலர்களாக விரிந்து விளங்கும் நல்ல திருமந்திரமாலையாகிய நூலை இறைவன் திருவடிக்கு அணிந்து போற்றும் நிலையில்

ஒன்றவன் தானே இரண்டவன் இன்னருள்
நின்றனன் மூன்றினுள் நான்குணர்ந்தான் ஐந்து
வென்றனன் ஆறு விரிந்தனன் ஏழும்பர்ச்
சென்றனன் தானிருந் தானுணர்ந் தெட்டே.

என்னும் திருப்பாடலைத் தொடங்கி ஓராண்டுக்கு ஒரு திருப்பாடலாக இவ்வாறு மூவாயிரம் ஆண்டுகள் இவ்வுலகில் சிவயோக நிலையில் அமர்ந்திருந்து மூவாயிரம் திருப்பாடல்களை அருளிச் செய்தார். தமிழ் மூவாயிரமாகிய திருமந்திரத் திருமுறையினை நிறைவுசெய்து சிவபெருமான் திருவருளாலே திருக்கயிலையை அடைந்து அம்முதல்வனுடைய திருவடி நிழலில் என்றும் பிரியா துறையும் பேரின்பப் பெருவாழ்வினைப் பெற்று இனிதிருந்தார்.

திருத்தொண்டர் புராணசாரம்

கமிலாயத்தொருசித்தர் பொதிமிற் சேர்வார் காவிரிசூழ் சாத்தனூர் கருதுமூலன்
டமிலா நோயுடன் வீயத்துயரம் நீடும் பசுக்களைக் கண்டு அவனுடலிற் பாய்ந்துபோத
அயலாகப்பண்டையுடல் அருளால் மேவி ஆவடு தண்டுறையாண்டுக்கு ஒருபாவாகக்
குமிலாரும் அரசடியில் இருந்து கூறிக்கோதிலா வடகயிலை குறுகினாரே

நுண் பொருள்

1) சித்தர்கள் பசுக்களின் துயர் பொறார். அவற்றின் துயர் தீர்த்தற்குத் தம் சித்தினைத் துணைக் கொள்வர்.
2) சித்தர்க்குத் தெய்வசித்தம் புலனாகும்.
3) சித்தர் தமக்குப் புலனாகிய தெய்வ சித்தத்தின் வழி நிற்பர்.

4) காற்றைப்பிடிக்கும் கலையறிந்த சிவயோகியர் காலனை வென்றவர்கள். அவர்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் வாழ்வதில் நூதனமொன்று மில்லை.

5) சிவபெருமான் அருளிய சிவாகமப்பொருளைத் தமிழ்செய்த புண்ணியர் திருமூலர்.

அப்பனை நந்தியை ஆரா அமுதினை
ஒப்பிலா அப்பனை ஊழி முதல்வனை
எப்பரி சாயினும் ஏத்துமின் ஏத்தினால்
அப்பரி சீசன் அருள்பெற லாமே.

திருமந்திரம்

ஆவடுதண்துறை அணைந்து அங்கு அரும் பொருளை உறவணங்கி
மேவுவார் புறக்குடபால் மிக்குயர்ந்த அரசின் கீழ்
தேவிருக்கை அமர்ந்தருளிச் சிவயோகம் தலைநின்று
பூவலரும் இதயத்துப் பொருளோடும் புணர்ந்திருந்தார்.

- புராணம்.

திருமூலநாயனார் குருபூசை நாள் : ஐப்பசி அசுவதி

31. தண்டியடிகள் நாயனார்

"நாட்டமிகு தண்டிக்கும்... அடியேன்"

- திருத்தொண்டத் தொகை

"கண்ணார் மணியொன்றும் இன்றிக் கயிறு பிடித்து அரற்குத்
தண்ணார் புனல்தடம் தொட்டலும் தன்னை நகும் அமணர்
கண்ணாங்கு இழப்ப அமணர் கலக்கம் கண்டு அம்மலர்க்கண்
விண்ணாயகனிடம் பெற்றவன் ஆரூர் விறல் தண்டியே"

- திருத்தொண்டர் திருவந்தாதி.

தண்டியடிகள் திருவாரூரில் பிறந்த பெரும் பேறுடையவர். இவர் 'இறைவன் திருவடிகளை மனத்துட் கொண்டு நோக்கும் அகநோக்கு ஒன்றே போதும்' என்ற கருத்தினை வலியுறுத்துவது போன்று, பிறக்கும் போதே பார்வையை இழந்திருந்தார். தண்டியடிகள் திருவாரூர்ப் பூங்கோயிலில் தேவாசிரியமண்டபத்திலுள்ள அடியார்களை வணங்கிவிட்டு, இறைவன் முன் வலம் வந்து, காதலாகி, நமச்சிவாய நற்பதமே எடுத்தோதி, திருவாரூர்ப் பெருமானடிகள் திருவடிக்கே அன்புடையவராய்த் திருத்தொண்டுகள் பல செய்து வந்தார். ஆரூர்த் திருக்கோயிலின் மேற்புறத்திலுள்ள திருக்குளத்தின் பக்கம் எங்கும் சமணர்களுடைய பாழிகள் பெருகிக் குளத்தின் இடம் வரவரக் குறைவடைந்தது. இதனை அறிந்த தண்டியடிகள், திருக்குளத்தை முன்போற் பெருகத் தோண்ட எண்ணினார். குளத்தில் தறி நட்டுக் கயிறு கட்டி கரையிலும் தறிநட்டு அக்கயிற்றை வலிந்து கட்டி மண்வெட்டியும் கூடையும் கொண்டு குளத்தில் இறங்கி மண்ணை வெட்டியெடுத்துக் கயிற்றைப் பற்றி ஏறிக் கரையிலே போடுவாராயினார். இவ்வாறு நாள்தோறும் தண்டியடிகள் குளத்தினைத் தோண்டக்கண்டு சமணர்கள் பொறாது அவரை அடைந்து 'மண்ணைத் தோண்டினால் சிற்றுயிர்கள் இறந்துபடும், வருத்தல் வேண்டாம்' என்றனர். அதுகேட்ட தண்டியடிகள் 'திருவில்லாதவர்களே, இந்தச் சிவதொண்டின் பெருமை உங்களுக்குத் தெரியவருமோ' என்றார். அமணர்கள் அவரை நோக்கி, 'சிந்தித்து இந்த அறத்தினைக் கேளாத

நீ செவியும் இழந்தனையோ' என்று இகழ்ந்துரைத்தனர். அதுகேட்ட தண்டியடிகள் **'மந்த உணர்வும், விழிக்குருடும், கேளாச் செவியும்'** உமக்கே உள்ளன. நான் சிவனுடைய திருவடிகளை அல்லால் வேறு காணேன்; அதனை அறிதற்கு நீர் யார்? உங்கள் கண்கள் குருடாகி உலகெல்லாம் காண யான் கண்பெற்றால் நீர் என் செய்வீர்?' என்றார். அதனைக் கேட்ட சமணர், 'நீ உன் தெய்வத்தருளால் கண் பெற்றாயாகில் நாங்கள் இந்த ஊரில் இருக்கமாட்டோம்' என்று சொல்லி அவர் கையிலுள்ள மண்வெட்டியைப் பறித்து நட்டதறிகளையும் பிடுங்கி எறிந்தனர். தண்டியடிகள் ஆரூர்பெருமான் முன் சென்று, 'ஐயனே! இன்று அமணர்களால் அவமதிக்கப்பட்டு வருந்தினேன். இவ்வருத்தத்தைத் தீர்த்தருளல் வேண்டும்;' என முறையிட்டுத் தமது மடத்திற்குச் சென்றார். இன்று பணிசெய்ய முடியவில்லையே என்ற வருத்தத்தால் அழுதுகொண்டு துயின்றார். அன்றிரவு ஆரூரிறைவர் அவரது கனவில் தோன்றி, 'தண்டியே உன் மனக்கவலை ஒழிக! உன் கண்கள் காணவும், அமணர் கண்கள் மறையுமாறும் செய்கின்றோம்' என்று அருள்செய்து, சோழ மன்னனிடம் கனவில் தோன்றி 'தண்டி என்பவன் நமக்குக் குளந்தோண்ட அதற்குச் சமணர்கள் இடையூறு விளைத்தனர். நீ அவனிடத்திலே சென்று அவன் கருத்தை முடிப்பாயாக'. என்று பணித்து மறைந்தருளினார்.

வேந்தன் விழித்தெழுந்து இறைவர் திருவருளைப் போற்றிப் பொழுது புலர்ந்ததும் தண்டியடிகளை அடைந்து, அவர் நிகழ்ந்தன சொல்லக்கேட்டு அமணர்க்கும், தண்டிக்குமிடையே நிகழ்ந்த அவ்வழக்கைத் தீர்க்க எண்ணினான். அமணர்களை அழைத்து அவர்கள் கருத்தையும் அறிந்துகொண்டான். பின்னர் அமணர் தன்னுடன் வரத் தண்டியடிகளாருடன் குளக்கரையை அடைந்தான். வேந்தன் தண்டியாரை நோக்கி, 'பெருகும் தவத்தீர்! நீர் சிவனருளால் கண் பெறுதலைக் காட்டுவீராக' என்றான். அதுகேட்ட தண்டியடிகளார், 'தான் சிவனுக்குப் பொருந்திய அடியேன் என்றால் இன்று எண் கண்கள் ஒளி விளங்கப் பெற்று அமணர்கள் தங்கள் கண்களை இழப்பர். அதனால் ஆராய்ந்த மெய்ப்பொருளும் சிவபதமே ஆகும்' என்று சொல்லித் திருவைந்தெழுத்தை எடுத்தோதிக் குளத்தில் மூழ்கிக் கண்ணொளி பெற்று எழுந்தார். அங்கிருந்த அமணர்கள் கண் ஒளி இழந்து வழி தெரியா-

மல் தடுமாற்றமுற்றனர். 'பழுது செய்து அமண் கெட்டது' என்றுணர்ந்த மன்னன், தன் ஏவலாளரரைப் பார்த்து, 'தண்டியடிகளோடு ஒட்டிக் கெட்ட சமணர்களைத் திருவாரூரினின்றும் அகன்று போம்படி தூரத்து-வீராக' எனப் பணித்தான். கண் கெட்ட சமணர்கள் குழியில் விழு-பவரும், புதரில் முட்டுபவரும், உடுத்த பாய்களை இழப்பவரும், பிடித்த பீலியை இழப்பவருமாய் ஓட்டமெடுத்தனர். பின் திருக்குளத்தின் கரைகளைச் செம்மைபெறக் கட்டித் தண்டியடிகளை வணங்கிச் சென்றான். அகக்கண்ணேயன்றிப், புறக்கண்ணும் பெற்று 'நாட்டமிகு தண்டி' என நம்பியாரூரராற் போற்றப்பெறும் சிறப்பு வாய்ந்த தண்டிய-டிகளார் இறைவனைப் போற்றித் திருவைந்தெழுந்தோதித் திருப்பணிகள் பல புரிந்து திருவடி அடைந்தார்.

திருத்தொண்ட புராணசாரம்

திருவாரூர் வரும் தண்டியடிகள் காட்சி
சேராதார் குளம்தொட்டற்கு அமணர் சீறிக்
குருடா நீ முன் செவிடும் கூடிற் றென்று
குறித் தறியைப் பறித்தெறியக் கொதித்துத்தம்கண்
அருளாலே விழித்து எவரும் அந்தராக
அமணர் கலக்கம் பல கண்டு அவர்கள் பாழிப்
பருவான கற்பறித் துவாவிக் கரையும்கட்டி
பரனருளால் அமருலகம் பற்றினாரே.

நுண் பொருள்

1. அகநோக்கு உடையார்க்குப் புறநோக்கு மிகை.
2. சிவதொண்டு ஆசிலா நல்லறம். அதில் மண்ணைக்கல்லில் பிராணிபடும், வருந்தும் என்பன இல்லை.
3. குளம் அமைத்தல், தூர்ந்து போகாது பேணுதல் என்பன சிறந்த சிவதொண்டுகள்.
4. சிவதொண்டு செய்வார்க்குச் சிவம் துணை நிற்கும்.

ஏய்ந்த அடிமை சிவனுக்கு யான் என்னில் இன்று என்கண் பெற்று
வேந்தனெதிரே திருவாரூர் விரவும் சமணர் கண் இழப்பர்
ஆய்ந்த பொருளும் சிவபதமே ஆவதென்றே அஞ்செழுத்தை
வாய்ந்த தொண்டர் எடுத்தொதி மணிநீர் வாவி மூழ்கினார்.

- பெரிய புராணம்

தண்டியடிகள் குருபூசைநாள் : பங்குனி சதயம்

32. மூர்க்க நாயனார்.

"மூர்க்கற்கும் அடியேன்" - திருத்தொண்டத் தொகை.

தண்டலை சூழ்திரு வேற்காட்டுர் மன்னன், தகு கவற்றால்
கொண்ட வல்லாயம் வன்சூதரை வென்று முன் கொண்ட பொருள்
முண்ட நல் நீற்றன் அடியவர்க்கு ஈபவன்; மூர்க்கன் என்பர்
நண்டலை நீரொண் குடந்தையில் மேவு மூர்க்கனையே.
- திருத்தொண்டர் திருவந்தாதி.

தொண்டைவள நாட்டின் பாலியாற்றின் வடக்கில் உள்ளது திருவேற்காடு என்னும் திருத்தலம். அதிற் சிவனடிமைத் திறத்தில் சிறந்து வழிவழி வந்த வேளாண் மரபில் அவதரித்த ஒரு பெரியவர் இருந்தார். அவர் திருநீற்றின் அடைவே பொருள் என்று அறிந்து அடியார்க்கு அறுசுவை அமுது முன் ஊட்டி மகிழ்ந்து, பின் தாம் அமுது செய்யும் நியதியில் வழுவாத நிலையில் ஒழுகினார்.

இவ்வாறு ஒழுகும் நாளில் அடியவர்கள் நாளும் நாளும் மிகவும் பெருகி வந்தமையாலே தமது உடைமை முழுதும் மாள விற்றும் அப்பணி செய்தனர். மேலும் செய்து வருவதற்கு அவ்வூரில் ஒரு வழியும் இல்லாமையால் தாம் முன்பு கற்ற நற்சூதினாற் பொருளாக்க முயன்றனர். தம்மூரில் தம்முடன் சூது பொருவார் இல்லாமையால் அங்கு நின்று வேற்றூர்க்குப் போவாராயினர்.

பல பதிகளிலும் சென்று சிவனை உள்ளுருகிப் பணிந்து அங்கங்கும் சூதாடுதலினால் வந்த பொருளினைக் கொண்டு தமது நியமமாகிய அடியார் பணியினைச் செய்து வந்தார். கும்பகோணத்தைச் சேர்ந்து அங்குத் தாம்வல்ல சூதினால் வந்த பொருளைத் தாம் தீண்டாது திருவமுது ஆக்குவோரிடம் கொடுத்து, அவர்களைக் கொண்டு நாடோறும் அடியார்க்கு அமுதூட்டி இருந்தனர். சூதினில் வல்ல இவர், முதற்சூது தாம் தோற்றுப் பிற்சூது பலமுறையும் தாம் வென்று பெரும் பொருள் ஆக்கினார். சூதினால் மறுத்தாரைச் சுரிகை உருவிக் குத்துதலினால் இவர் நற்சூதர்- மூர்க்கர் - என்னும் பெயர்களைப் பெற்று உலகில் விளங்கினார்.

மூர்க்க நாயனார்.

இவ்வாறு பணி செய்து அருளாலே குற்றங்கள் போய் அகல - இவ்வுலகை விட்டதற்பின், இறைவரது சிவபுரம் அடைந்தனர்.

திருத்தொண்டர் புராணசாரம்

தொண்டைவளநாட்டு வளர் வேற்காட்டூர் வாழ்
தொல்லுழவர் நற்சூதர் சூதுவென்று
கொண்ட பொருள் கொண்டன்பர்க்கு அமுதளிக்கும்
கொள்கையினார் திருக்குடந்தை குறுகியுள்ளார்.
விண்டிசைவு குழறு மொழி வீணர் மாள
வெகுண்டிடலால் மூர்க்கரென விளம்பநாமம்
எண்டிசையும் மிகவுடையார் அண்டர் போற்றும்
ஏழுலகும் உடனாளும் இயல்பினரே.

நுண்பொருள்

தன்செயல் அற்றுச் சிவன் செயலாக நிகழுமிடத்து சூதாடுதலோ, சூதில் வாது செய்வோரை மாளச் செய்தலோ பாவமாகாது. ஈசனடியார் அமுதுகொள்ள வேறுவழியின்றி ஆடிய சூது நற்சூதேயாம்.

நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தன்
நாவினுக்கரையன் நாளைப் போவானும்
கற்றசூதன் நற்சாக்கியன் சிலந்தி
கண்ணப்பன் கணம்புல்லன் என்றிவர்கள்
குற்றம் செயினும் குணமெனக் கருதும்
கொள்கை கண்டு நின் குரைகழலடைந்தேன்
பொற்றிரள் மணிக் கமலங்கள் மலரும்
பொய்கை சூழ் திருப் புன் கூருளானே.

- தேவாரம்.

இருளாரும் மணிகண்டர் அடியார்க் கின்னமுதாக்க
பொருளாயம் எய்துதற்குப் புகழ்க்குடந்தை அம்பலத்தே
உருளாயச் சூதாடி உறு பொருள் வென்றன நம்பர்
அருளாகவே கொண்டங்கு அமுது செய்வித்து இன்புறுவார்.

- பெரிய புராணம்.

மூர்க்கநாயனார் குருபூசைநாள் : கார்த்திகை மூலம்

33. சோமாசிமாற நாயனார்

"அம்பரான் சோமாசி மாறனுக்கும் அடியேன்"

- திருத்தொண்டத் தொகை

"சூதப்பொழில் அம்பர் அந்தணன் சோமாசி மாறன் என்பான்
வேதப் பொருள் அஞ்செழுத்தும் விளம்பிஅல்லான் மொழியான்
நீதிப் பரன் மன்னு நித்தநியமன் பரவை என்னும்
மாதுக்குக் காந்தன் வன்தொண்டன் தனக்கு மகிழ் துணையே"

- திருத்தொண்டர் திருவந்தாதி.

சோமாசிமாற நாயனார் சோழநாட்டில் திருவம்பர் என்னும் ஊரிலே அந்தணர் குலத்திலே தோன்றினார்.

சிவபக்தி உடையவராய்ச் சிவனடியார்களுக்குத் திருவமுதளிக்கும் இயல்புடையவராயிருந்தார்.

உமையொரு பாகனாகிய சிவபெருமானையே முதல்வன் எனக்கொண்டு போற்றும் வேள்விகள் பலவற்றை உலகங்கள் ஏழும் உவப்ப விதிப்படி செய்தார்.

ஈசனுக்கு அன்பர் என்போர் எக்குலத்தவராயினும் அவர்கள் தன்னை ஆளாகவுடையவர்கள்' என்று உறுதியாகத் தெளிந்திருந்தார்.

சிவன் அஞ்செழுத்தும் சித்தந் தெளிய ஓதும் நித்த நியமம் உடைய இந்நாயனார் சீரும், திருவும் பொலியும் திருவாரூரை அடைந்து, தம்பிரான் தோழராகிய வன்றொண்டர்க்கு அன்பினால் நெருங்கிய நண்பரானார்; திருவாரூரில் ஐம்புலச் சேட்டைகளையும், காமம் முதலிய அறுவகைக் குற்றங்களையும் நீக்கிய இவர் அத்திருவாரூரில் தங்கி ஆரூரர்தம் திருவடிகளைப் பணிந்து போற்றிய சிறப்பினால் என்றும் நின்று நிலவும் சிவலோகத்தில் இன்பம் உற்றார்.

திருத்தொண்டர் புராணசாரம்

அம்பர்நகர் அந்தணர் சோமாசிமாறர்
அன்பர்களாம் யாவர்க்கும் அன்பின் அமுதளிப்பார்

சோமாசிமாற நாயனார்

உம்பர் நிகழ்வகை யாகம் பலவுஞ்செய்யும்
உண்மையினார் ஐந்தெழுத்தும் ஓவாநாவார்
நம்பர் திகழ் திருவாரூர் நயந்துபோற்றும்
நாவலர்கோன் அடிபரவும் நன்மையாலே
இம்பர்தொழ உம்பர்பணிந்து ஏத்த மேலை
ஏழுலகும் உடனாளும் இயல்பினாரே

நுண் பொருள்

அந்தணர் குலத்துதித்தோர் தம் குல ஒழுக்கத்துக்கேற்ப பத்தியுடன் சிவ-வேள்வி புரிதல் சிவலோகத்தில் இன்புற்றிருப்பதற்கு உதவும் சாதனையாக அமையும்.

அஞ்செழுத்தோதலும் அடியாரைப் பணிதலும் சிவநெறிச் செல்லும் அந்தணர்க்-குரிய செய்கைகள்.

சிவவேள்வி, அஞ்செழுத்தோதல், அன்பர்பணி யாவும்சேர்ந்து நம்பி ஆரூரருக்கு ஆளாகிவாழும் பாக்கியத்தை ஈந்தன. அப்பாக்கியம் சிவலோகம் சேர்ப்பதாயிற்று.

துன்றும் புலன் ஐந்துடன் ஆறு தொகுத்த குற்றம்
வென்று இங்கிது நன்னெறி சேரும் விளக்கமென்றே
வன்றொண்டர் பாதம் தொழுதான சிறப்பு வாய்ப்ப
என்றும் நிலவும் சிவலோகத்தில் இன்பமுற்றார்.

-பெரிய புராணம்

சோமாசிமாற நாயனார் குருபூசைநாள் :- வைகாசி ஆயிலியம்

34. சாக்கிய நாயனார்.

வார்கொண்ட வனமுலையாள் உமைபங்கள் கழலே
மறவாது கல்லெறிந்த சாக்கியர்க்கும் அடியேன்.

– திருத்தொண்டத் தொகை

தகடன ஆடையன் சாக்கியன் மாக்கல் தடவரையின்
மகள் தனம் தாக்கக் குழைந்த திண்தோளர் வண்கம்பர் செம்பொன்
திகழ் தரு மேனியினில் செங்கல் எறிந்து சிவபுரத்துப்
புகழ் தரப் புக்கவன் ஊர் சங்கமங்கை புவனியிலே-

– திருத்தொண்டர் திருவந்தாதி.

சாக்கிய நாயனார் திருச்சங்கமங்கையில் வேளாளர் குடியில் தோன்றினார். எவ்வுயிர்க்கும் அருளுடையராய்ப் பிறவாநிலை பெற விரும்பிக் காஞ்சி நகரத்தை அடைந்து புத்தசமயத்தை மேற்கொண்டிருந்தார். இறைவன் திருவருள் கூடுதலாற் புத்தம் முதலிய புறச்சமயச் சார்புகள் பொருள் அல்ல என்றும், ஈறில் சிவநன்னெறியே பொருளாவதென்றும் துணியும் நல்லுணர்வு கைவரப்பெற்றார். **"செய்யப்படும் வினையும், அவ்வினையைச் செய்கின்ற உயிரும், அவ்வினையின் பயனும், அப்பயனைச் செய்த உயிருக்கே சேர்ப்பிக்கும் இறைவனும் எனச் சைவசமயத்தில் கூறப்பட்ட பொருள் நான்காகும். இப்பொருட்பாகுபாடு சிவநெறியல்லாத பிறசமயத்தில் இல்லை"** எனத் தெளிந்துகொண்டார். உயிர்களை உய்விக்கும் மெய்ப்பொருள் சிவமே. எந்த நிலையில் நின்றாலும் எக்கோலங்கொண்டாலும் சிவனடியினை மறவாது போற்றுதலே உறுதிப்பொருளாகும்" என்று ஆராய்ந்து துணிந்து தாம் கொண்ட புத்தசமய வேடத்துடனேயே சிவபெருமானை மறவாது போற்றுவாராயினர்.

அருவமாகியும், உருவமாகியும் உள்ள எல்லாப் பொருள்களுக்கும் காரணமாய் இறைவனுக்குத் திருமேனியாகிய சிவலிங்கத்தின் பெருமையுணர்ந்து நாள்தோறும் அதனைக் கண்டு வழிபட்ட பின்னரே உண்ணுதல் வேண்டும் என விரும்பினார். தாம் இருக்கும் இடத்திற்கு அண்மையில் வெட்ட வெளியிலே அமைந்துள்ள சிவலிங்கத்தினைச்

சென்று கண்டு பெருமகிழ்ச்சி கொண்டவராய், அம்மகிழ்ச்சியின் விளைவாக ஒன்றுந் தோன்றாது அருகிற்கிடந்த செங்கற்சல்லியை எடுத்து அதன்மேல் எறிந்தார். இளம்புதல்வர் இகழ்வனவே செய்தாலும் அச்செயல் தந்தையர்க்கு உவப்பானாற்போன்று, சாக்கியர் செய்த இதுவும் சிவபெருமானுக்கு உவப்பாயிற்று. இறைவன் அவர் அன்பினால் எறிந்த கற்களை நறுமலர்களாகவே ஏற்றுக்கொண்டார். சாக்கியர் அன்று போய் மறுநாள் அங்கு வந்தபொழுது முதல் நாள் தாம் சிவலிங்கத்திருமேனியின் மேல் செங்கல் எறிந்த குறிப்பினை எண்ணி, 'நேற்று இந்த எண்ணம் நிகழ்ந்தது இறைவன் திருவருளே" என்று துணிந்து அதனையே தாம்செய்யும் வழிபாடாகக் கருதி எப்பொழுதும் அப்படியே செய்து வந்தார்.

ஒருநாள் சாக்கியர் அச்செயலை மறந்து உணவு உண்ண ஆயத்தமான போது இன்று எம் பெருமானைக் கல்லால் எறிய மறந்து விட்டேன்' என்று விரைந்தோடிச் சிவலிங்கத்தின் முன்சென்று ஆராத-வேட்கையினால் ஒரு கல்லை எடுத்து அதன்மேல் எறிந்தார். அவரது அன்பிற்கு உவந்த சிவபெருமான் நெடுவானில் விடைமீது உமையம்மை-யாருடன் தோன்றி அருளினார். அத்தெய்வக்காட்சியைக் கண்ட சாக்கியநாயனார், தலைமேல் இருகைகளையும் குவித்து நிலமிசை வீழ்ந்திறைஞ்சினார். சிவபெருமான் சிவலோகத்தில் தம்பக்கத்தேயிருக்கும் பெருஞ்சிறப்பினை அவர்க்கு அருளினார்.

திருத்தொண்ட புராணசாரம்.

சங்கமங்கை வரும் வேளாண் தலைவர் காஞ்சிச்
சாக்கியரோடு இயைந்து அவர்தம்தவறும் சைவத்
துங்கமலி பொருளும் உணர்ந்து அந்த வேடம் துறவாதே
சிவலிங்கம் தொழுவோர் கண்டோர்
அங்கல் மலர் திருமேனி அழுந்தச் சாத்தி அமரும்நாள்
மறந்தொரு நாள் அருந்தா தோடிச்
செங்கல் எறிந்திடு மளவில் மகிழ்ந்த நாதன்
திருவருளால் அமருலகம் சேர்ந்துளாரே.

நுண்பொருள்

1. பிறவித்துன்பத்தினின்றும் விடுபட நாடுவோர் பிறவாப்பெருநிலை அடைவிக்கும்

மெய்ந்நெறியை அறிய விழைதல் இயல்பு. அதன் பொருட்டு வேறுவேறு சமய நெறிகள் பலவற்றைச் சார்ந்து தொழுகினாலும் ஈற்றில் சைவநெறியே மெய்ந்நெறியெனக்காணும் பேற்றினைப் பெறுவர்.

2. சிவ பூசை செய்து உணவுண்ணல் சிவத்தைச் சாரும் விருப்பினர்க்குரிய ஒரொழுக்கம்.
3. காணாத அருவினுக்கும், காணும் உருவுக்கும் காரணமாவது சிவலிங்கம்.
4. வேடத்திலும் மெய்யன்பே மேன்மையானது.

எந்நிலையில் நின்றாலும் எக்கோலம் கொண்டாலும்
மன்னிய சீர் சங்கரன்தாள் மறவாமை பொருளென்றே
துன்னிய வேடம் தன்னைத்துறவாதே தூய சிவம்
தன்னைமிகும் அன்பினால் மறவாமை தலை நிற்பார்.

- புராணம்.

சாக்கியநாயனார் குருபூசைநாள் : மார்கழி பூராடம்

35. சிறப்புலி நாயனார்.

"சீர் கொண்ட புகழ் வள்ளல் சிறப்புலிக்கும் அடியேன்"

- திருத்தொண்டத் தொகை

புவனியிற் பூதியும் சாதனமும் பொலிவார்ந்து வந்த
தவ நியமற்கு சிறப்புச்செய் தத்துவ காரணனாம்
அவனியிற் கீர்த்தித் தென் ஆக்கூர் அதிபன் அருமறையோன்
சிவன் நியமம் தலைநின்ற தொல்சீர்நம் சிறப்புலியே

- திருத்தொண்டர் திருவந்தாதி

பொன்னி நன்னாட்டில் இன்மையாற் சென்று இரந்தவர்களுக்கு இல்லையென்னாது ஈயும் தன்மை உடையவர்கள் வாழும் ஊர் திருஆக்கூர். அவ்வூரிலே அந்தணர் குலத்தில் தோன்றியவர் சிறப்புலி நாயனார்.

இப்பெருந்தகையார் "நிதி மழை மாரி போல்" ஈந்து உவக்கும் வள்ளலாய் திகழ்ந்தார்.

சிவனடியார்கள் மேல் பேரன்புடையவராய் விளங்கினார். அடியார்களை எதிர்கொண்டு வணங்கி இன்சொல் கூறித் திருவமுது அளிப்பார். அவர்கள் விரும்புவதை குறைவறக் கொடுத்து மகிழ்வார்.

இவர் திருவைந்தெழுத்தோதிச் சிவபெருமானைக் குறித்து யாகங்கள் பல புரிந்து இடையறாத பேரன்பால் சிவபெருமான் திருவடி நீழலை அடைந்தார்.

திருத்தொண்டர் புராணசாரம்

திருவாக்கூர் அருமறையோர் உலகமேத்தும்
சிறப்புலியார் மறப்புலியார் உரிமேற் செங்கண்
அரவார்த்தார் வரும் ஏற்றார்க்கு அன்பராணார்க்கு
அமுதளிப்பார் ஒளிவெண்ணீறு அணிந்த மார்பர்
பெருவாக்கால் மறைபரவி யாகம் போற்றும்
பெற்றியினார் ஐந்தெழுத்தும் பிறழா தோதிக்
கரு ஆக்கா இறைவன்தாள் இணைகள் சேர்ந்த
கருத்தினார் எனையாவும் திருத்தினாரே.

நுண்பொருள்

1. அந்தணர்க்குரிய ஒழுக்கம் **அங்கிவேட்டல்**. அங்கி வேட்டலில் அஞ்செழுத்-தோதுதல் இன்றியமையாதது. இந்நாயனார் **அஞ்செழுத்தோதி** அங்கிவேட்-டுச்சிவவேள்வி செய்யும் சீலராய் விளங்கினார்.
2. இரப்பவர்க்கு இல்லையென்னாது கொடுக்கும் **ஈதலறம்** இறையடிநாடுவோர் கடைப்பிடிக்கவேண்டிய அறமாகும்.
3. இவ்வீதலறம் சிவனடியார்க்கு அமுதளிக்கும் **மாகேசுரபூசை**யாயமையுமிடத்து அது மேலும் சிறப்பினதாக அமையும்.
4. இம்மூன்றையும் கடைப்பிடித்தொழுகுவோர் இயல்பான வழியில் ஈசன் அடியினை சேர்வர்.

அஞ்செழுத்தோதி அங்கிவேட்டு நல்வேள்விஎல்லாம்
நஞ்சணி கண்டர் பாதம் நண்ணிடச் செய்து ஞாலத்து
எஞ்சலில் அடியார்க்கு என்றும் இடையறா அன்பால் வள்ளல்
தஞ்செயல் வாய்ப்ப ஈசர் தாள் நிழல் தாங்கினாரே.

- பெரியபுராணம்

சிறப்புலி நாயனார் குருபூசைநாள் : கார்த்திகை பூராடம்

36. சிறுத்தொண்ட நாயனார்.

"செங்காட்டங்குடிமேய சிறுத்தொண்டர்க் கடியேன்"

- திருத்தொண்டத் தொகை.

புலியின் அதளுடைப் புண்ணியற்கு இன்னமுதாத் தனதோர்
ஒலியின் சதங்கைக் குதலைப் புதல்வன் உடல் துணித்துக்
கலியின் வலிகெடுத் தோங்கும் புகழ்ச் சிறுத்தொண்டன் கண்டீர்
மலியும் பொழில் ஒண் செங்காட்டங்குடியவர் மன்னவனே.

- திருத்தொண்டர் திருவந்தாதி.

காவிரி வளநாட்டில் திருச்செங்காட்டங்குடியில் மாமாத்திரர் குலத்தில் தோன்றியவர் பரஞ்சோதியார். இவர் ஆயுள் வேதக்கலையிலும், வடநூற்கலையிலும், படைக்கலத் தொழிலிலும் நிரம்பிய பயிற்சியுடையவர்; யானையேற்றம், குதிரையேற்றம் ஆகியவற்றிலும் வல்லவர். உள்ளம் நிறைந்த கலைத்துறைகள் ஒழிவின்றிப் பயின்றதனால் சிவன்கழலைச் சிந்தித்துப் போற்றுதலே மெய்ந்நெறியாவதெனத் தெளிந்தவர்; ஈசனடியார்க்குப் பணிசெய்தலை இயல்பாகக் கொண்டவர். இவர், மன்னனுக்குச் சேனாதிபதியாய்ப் போர்முனையிற் பகையரசர்களை வென்று அரசனால் நன்கு மதிக்கப் பெற்றார். இவர் மன்னன் பொருட்டு வட திசையில் படையெடுத்துச் சென்று, வாதாபி நகரத்தை அழித்து அங்கிருந்து பலவகை நன்மணிகளையும், செல்வங்களையும், யானை, குதிரை முதலியவற்றையும் கைப்பற்றித் தம் வேந்தனிடம் கொணர்ந்தார். அரசன் இவரது வீரத்தையும், ஆண்மையினையும் அதிசயித்துப் புகழ்ந்து பாராட்டினான். அந்நிலையில் பரஞ்சோதியாரை நன்குணர்ந்த அமைச்சர்கள், 'அரசே! இவரிடம் சிவபெருமானுக்குத் திருத்தொண்டு செய்யும் இயல்பு நிரம்பியிருப்பதால் போரில் இவரை எதிர்க்கவல்லார் எவருமில்லை என்றனர். இச்செய்தியைக் கேள்வியுற்ற வேந்தன், "உம்பர் பிரான் அடியாரை உணராதே கெட்டொழிந்தேன், வெம்பு கொடும் போர்முனையில் விட்டிருந்தேன், என அஞ்சிப் பரஞ்சோதியாரை நோக்கி, எம்பெருமான்; எனது பிழையைப் பொறுத்தருள வேண்டும்" என இறைஞ்சினான்.

மன்னன் இறைஞ்சியதும் பரஞ்சோதியாரும் முன் வணங்கி 'அரசே! எனது தொழிலுக்கேற்ற பணியினைச் செய்வேன். அதற்கு என்ன தீங்கு' என்றார். அறம்புரி செங்கோலனாகிய வேந்தன், அவருக்கு நிறைந்த நிதிக்குவையும், நீடு விருத்திகளான நல்நிலம், ஆனிரை ஆகியவற்றையும் அளித்து வணங்கி, நீர் உம்முடைய திருத்தொண்டின் நிலைமையினை நானறியாதபடி கொண்டு நடத்தினீர். இனி உம்முடைய மனக்கருத்துக்கு இசையத் திருத்தொண்டு செய்வீராக' என விடை கொடுத்தனுப்பினான்.

மன்னவனிடம் விடைபெற்ற பரஞ்சோதியார், தமது பதியாகிய திருச்செங்காட்டங்குடியினை அடைந்தார். அங்கு கணபதீச்சரத்து இறைவரை இறைஞ்சிச் சிவநெறித் தொண்டுகளை வழுவாது செய்திருந்தார். இவர் திருவெண்காட்டு நங்கையை மணம் முடித்தார். நங்கையாருடன் மனையறத்தினை இனிதே நிகழ்த்தி நாள்தோறும் சிவனடியார்களுக்குத் திருவமுது செய்வித்துப் பின் தாம் உண்ணலை வழக்கமாகக் கொண்டிருந்தார். பரஞ்சோதியார் சிவனடியார்களை விரும்பி வழிபடும் பொழுது அவர் முன் மிகச் சிறியராய்ப் பணிந்து ஒழுகினமையால் சிறுத்தொண்டர் என அழைக்கப்பட்டார். இவருக்கு சீராளதேவர் என்னும் திருமைந்தர் அவதரித்தார். அப்பிள்ளைக்கு ஐந்து வயது வந்தபொழுது பள்ளியிற் கல்வி பயிலவைத்தார். அந்நாளில் திருஞானசம்பந்தப் பிள்ளையார் இறைவனை வழிபடத் திருச்செங்காட்டங்குடிக்கு எழுந்தருளினார். சிறுத்தொண்டர் சம்பந்தரை எதிர்கொண்டு அழைத்துப்போற்றினார். ஆளுடைய பிள்ளையாரும் பேரன்பிற் சிறந்த சிறுத்தொண்டருடன் நண்பினால் அளவளாவி மகிழ்ந்தனர். கணபதீச்சரப் பெருமானைத் தாம் பாடிய 'பைங்கோட்டு மலர்ப்புன்னை' என்னும் முதற்குறிப்புடைய திருப்பதிகத்தில் சிறுத்தொண்டரைச் சிறப்பித்துப் பாடினார்.

சிறுத்தொண்டரது உண்மை அன்பை நுகர்ந்தருள விரும்பிய சிவபெருமான், பைரவ அடியாராக வேடந்தாங்கித் திருச்செங்காட்டங்குடியை அடைந்தார். பைரவசுவாமியார் செஞ்சடையினைக் காளமேகம் போன்று கருமயிர்த்திரளாக முடித்திருந்தார். அக்கருங்குஞ்சியிலே தும்பைப்பூக்களைச் சூடியிருந்தார். திருச்சடையிலுள்ள இளம்பிறையைத்

திருநீற்றுப் பொட்டாக நெற்றியிலிட்டார். செக்கர் வானத்தை அந்தி இருள் மறைப்பது போல, செம்மேனியை மூடிக் கருஞ்சட்டை அணிந்தார். இடக்கையிற் சூலம் ஏந்தினார். இத்தகைய கோலத்துடன் சிறுத்தொண்டரது வீட்டு வாயிலை அடைந்து 'தொண்டர்க்குச் சோறளிக்கும் சிறுத்தொண்டர் இவ்வீட்டில் உள்ளாரோ?' என வினவி நின்றார். அம்மொழியினைக் கேட்ட சந்தனத்தாதியார் முன்வந்து வணங்கி, 'அவர் அடியாரைத் தேடி வெளியே சென்றுள்ளார். எம்மை ஆளான உடையவரே! வீட்டினுள் எழுந்தருள்வீராக' என வேண்டினார். வந்த பைரவர் அவரை நோக்கி, 'மாதர்கள் இருக்கும் இடத்தில் நாம் தனியே புகமாட்டோம்' என்றார். அதுகேட்ட திருவெண்காட்டு நங்கையார் 'இவ்வடியவர் போய்விடுவாரோ' என்று அஞ்சி விரைந்து உள்ளிருந்து வீட்டு வாயிலுக்கு வந்து 'எம்பெருமானே! அம்பலவர் அடியாரை அழுது செய்விப்பதற்கு அடியார் யாவரையும் காணாமல் வெளியே சென்றுள்ளார்; தேவரீர் இங்கு எழுந்தருளியதனைக் கண்டால் தாம்பெற்ற பெரும் பேறெனக் கொள்வார். இனிச் சிறிதும் தாமதிக்கமாட்டார்; இப்பொழுதே வந்துவிடுவார். தேவரீர் வீட்டினுள் எழுந்தருளி இருப்பீராக' என இறைஞ்சினார். அது கேட்ட பைரவர் 'மாதரசியே நாம் உத்தராபதியுள்ளோம். சிறுத்தொண்டரைக் காணவந்தோம். அவரின்றி இங்குத் தங்க மாட்டோம். கணபதீச்சரத்து ஆத்தி மரத்தின் கீழ் இருக்கின்றோம். அவர் வந்தால் நாம் வந்த செய்தியைச் சொல்வீராக' என்று கூறிச் சென்று திருவாத்தி மரநிழலின் கீழ் அமர்ந்தருளினார்.

அடியார்களைத் தேடி வெளியெ சென்று திரும்பிய சிறுத்தொண்டர் அடியார் ஒருவரையும் காணாமையை மனைவியார்க்குச் சொல்லி வருந்தினார். அப்பொழுது மனைவியார், 'உத்தராபதியாராகிய பைரவ அடியார் ஒருவர் வந்த செய்தியைக் கூறினார். சிறுத்தொண்டர் விருப்புடன் விரைவாகச் சென்று ஆத்தியின் கீழமர்ந்த அடியார் திருவடிகளைப் பணிந்து நின்றார். பணிந்து நின்ற சிறுத்தொண்டரை நோக்கிய பைரவ சுவாமியார் "நீரோ பெரிய சிறுத்தொண்டர்?" என வினவினார். சிறுத்தொண்டர் அவரை நோக்கி வணங்கி, 'திருநீறு, உருத்திராக்கமுடைய அடியார்களைப் பணிந்து போற்றுவதற்குரிய தகுதி இல்லாதவனாயினும் சிவனடியார்கள் கருணையினால் என்னை

அவ்வாறு அழைப்பர்'' என்று கூறிப் பின் ''இன்று சிவனடியார்களை அமுது செய்விக்க விரும்பி எங்குதேடியும் காணப்பெற்றிலேன்; தவத்தால் உம்மைக்கண்டேன். அடியேன் வீட்டில் எழுந்தருளி அமுது செய்தருளல் வேண்டும்' என்று வேண்டிக் கொண்டார். அதுகேட்ட பைரவர், சிறுத்தொண்டரை நோக்கி, 'தவச்செல்வரே! உம்மைக் காணும் விருப்புடன் இங்கு வந்தோம். நாம் உத்தராபதியோம். எம்மைப் பரிவுடன் உண்பிக்க உம்மால் முடியாது; செய்கை அரியது;' என்று கூறினார். 'தேவரீர் அமுது செய்யும் இயல்பினை அருளிச் செய்யும். விரைந்து உணவு அமைக்கச் செய்வேன். சிவனடியார் கிடைக்கப் பெற்றால் தேட ஒண்ணாதனவும் எளிதில்உளவாகும்; அருமையில்லை' என்று சிறுத்தொண்டர் உரைத்தார். அதனைக் கேட்ட பைரவக்கோலப் பெருமான், 'எம் அன்புக்குரிய தொண்டரே! நாம் ஆறுமாதத்திற்கு ஒருதடவை பசுவைக் கொன்று உண்ணுவது; அதற்குரிய நாளும் இன்றேயாகும். உம்மால் எம்மை உண்பிக்கமுடியாது' என்றார். அதுகேட்ட சிறுத்தொண்டர், 'மிகவும் நன்று. மூவகைப் பசு நிரையும் என்னிடமுள்ளன. பெரியீர்! உமக்கு அமுதாகும் பசு இதுவெனத் தெரிவித்தால் நான் போய் விரைந்து சமைத்துக் காலம் தப்பாமல் வருவேன்' என்று கைதொழுதார். பைரவர் அவரை நோக்கி, 'நாம் உண்ணக் கொல்லும் பசு நரபசு; உண்பது அஞ்சு பிராயத்துள்; அது உறுப்பில் மறு இல்லாதிருத்தல் வேண்டும்;' எனக் கூறினார். பின்னர். 'புண்ணில் வேலெறிந்தாற் போன்று மேலும் சொல்ல வேண்டியது ஒன்றுண்டு'. என்றார். கேட்ட சிறுத்தொண்டர் 'யாதும் அரியதில்லை அருளிச்செய்யும்' என்றார். பைரவரும், ஒரு குடிக்கு ஒருமகனான சிறுவனை மனமுவந்து தாய் பிடிக்கத் தந்தை அரிந்து குற்றமின்றி அமைத்த கறியினை நாம் உண்பது' எனக்கூறினார். அதைக்கேட்ட சிறுத்தொண்டர் எம்பெருமான் அமுது செய்யப்பெறில் அதுவும் அரிதன்று' என்றார். அடியவர் இசையப்பெற்ற களிப்பால் அவர் திருவடிகளை வணங்கி விரைந்து வீட்டை அடைந்தார்.

வீட்டு வாயிலில் கணவர் வருகையை எதிர்பார்த்துநின்ற மனைவியார், அவரது மலர்ந்த முகங்கண்டு வந்த அடியாரைப் பற்றி வினவினார். சிறுத்தொண்டர், 'ஒரு குடிக்கு ஒரு மகனாயும் ஐந்து

வயதுடையவனாயும் உறுப்பில் ஊனமற்றவனாயுமுள்ள பிள்ளையைத் தாய்பிடிக்க தந்தை மகிழ்ச்சியுடன் அரிந்து கறிசமைத்தால் தாம் திருவமுது செய்வதாகக் கூறினர்' என்றார். அதுகேட்ட கற்பிற்சிறந்த மனைவியார், பெரிய பைரவத் தொண்டர் அமுது செய்யப்பெறுவதற்கு இங்கு உரிய வகையால் அமுதமைப்போம்.' எனத் தமது சம்மதத்தை முன்னர் புலப்படுத்தி பின்னர் ஒருவனாகி ஒருகுடிக்கு வரும் அச்சிறுவனைப் பெறுவது எவ்வாறு? என வினவினார். சிறுத்தொண்டர் மனைவியாரின் முகத்தை நோக்கி, 'இத்தன்மையுடைய பிள்ளையை நினைவு நிரம்ப நிதி கொடுத்தாலும் தருவார் இல்லை? நேர்நின்று தம்பிள்ளையைத் தாமே அரியும் தாய் தந்தையர் இருக்கமாட்டார்கள். ஆகவே நான் உய்ய நீ பெற்ற மைந்தனை இங்கு அழைப்போம்' என்றார். மனைவியார் கணவனைநோக்கி, 'நம்மைக் காக்கவரும் மைந்தனைப் பள்ளியிற் சென்று அழைத்துவாரும்' என்றார். சிறுத்தொண்டர் மனமகிழ்ந்து தம் மைந்தர் வேதம் ஓதச் சென்ற பள்ளிக்குச் சென்றார். பாதச்சதங்கை மணியொலிப்பச் சீராளதேவர் ஓடிவந்து தந்தையைத் தழுவிய நிலையில், சிறுத்தொண்டர் மைந்தனை எடுத்துக் கொண்டு வீட்டிற்கு விரைந்தார். மைந்தனை எதிர்ச்சென்று வாங்கிய வெண்காட்டு நங்கையார் பிள்ளையைத் தலைசீவி, முகம் துடைத்துத் திருமஞ்சனமாட்டிக் கோலஞ் செய்து கணவர் கையிற் கொடுத்தார்.

பிள்ளையைக் கையிற்கொண்ட சிறுத்தொண்டர், அடியார்க்குக் கறியமுதாம் என்று மைந்தனை உச்சிமோவாது, மார்பிலணைத்து முத்தங் கொள்ளாது, அடியார்க்கு அமுதமைக்க அடுக்களையிற் செல்லாது, வேறிடத்திற் செல்வாராயினர். ஒன்றிய உள்ளத்தாராகிய சிறுத்தொண்டரும் அவருடைய மனைவியாரும் தாம் செய்யப்போகும் செயலின் உண்மையினை உலகத்தார் உள்ளவாறு அறியும் உணர்வுடையாரல்லர் என்று கருதி, மறைவிடத்திற் சென்று புகுந்தனர். பிள்ளையைப் பெற்ற தாயார் பாத்திரங்களைக் கழுவிக் கொணர்ந்தார். உலகை வென்ற தந்தையார் பிள்ளையின் தலையைப் பிடித்தார். மெய்த்தாயார் பிள்ளையின் கிண்கிணிக்கால் இரண்டினையும் மடியின் புடையில் இடுக்கிக் கொண்டார். அதனைக் கண்ட மைந்தன் பெற்றோர் முகம் நோக்கி மகிழ்ந்து நகைத்தனன். தனிமா மகனைத் தந்தையார்

கருவிகொண்டு தலையரிவாராய் இருவர் மனமும் பேருவகை எய்தி அரியசெயல் செய்தார்கள். வெண்காட்டு நங்கையார், அறுத்த தலையின் இறைச்சி அமுதுக்கு ஆகாதென்று கழித்து அதனை மறைத்து நீக்குமாறு சந்தனத் தாதியார் கையில் கொடுத்துவிட்டு மற்றை உறுப்புக்களின் இறைச்சிகளெல்லாவற்றையும் அறுத்துப் பாகம்பண்ணி வேறு கறிகளும் சமைத்துச் சோறும் சமைத்துக் கணவர்க்குத் தெரிவித்தனர்.

சிறுத்தொண்டர், ஆர்வத்துடன் விரைந்து சென்று திருவாத்தியின் கீழிருந்த பைரவ சுவாமிகளை வணங்கி, 'தேவரீர் அடியேன் இல்லத்திற்கு எழுந்தருளி அமுது செய்தருள வேண்டும்' என்று ஆர்வத்தோடு அழைத்தார். 'தேவரீர் பசித்தருளக் காலந்தாழ்த்தினேன் ஆயினும், தேவரீர் சொல்லியவண்ணம் திருவமுது சமைத்தேன். எண்ணம் வாய்ப்ப எழுந்தருள வேண்டும்' என வேண்டினார். வறியோன் இருநிதியும் பெற்று உவந்தாற்போல அடியவரைத் தம் வீட்டிற்கு அழைத்து வந்தார். வெண்காட்டு நங்கையார் கொணர்ந்த தூய நீரால் அடியார் பாதங்களை விளக்கிய சிறுத்தொண்டர் அந்நீரை உள்ளும் பருகிப் புறம்பும் தெளித்தார். தூப தீபங்காட்டி வணங்கினார். மனைவியுடன் அடியவரை வணங்கி நின்று 'திருவமுது படைக்கும் வகை எவ்வாறு' என வினவினார். 'இனிய அன்னமுடன் கறிகள் எல்லாம் ஒக்கப்படைக்க,' என்றார் பயிரவர். அவர் கூறிய வண்ணம் திருவெண்காட்டு நங்கையார் பரிகலந்திருத்தி வெண்துகில் விரிப்பில் செந்நெற்சோறும் கறியமுதும் படைத்தார். அதனைக்கண்ட பைரவர் அவரை நோக்கி, 'சொன்ன முறையிற் கொன்றபசுவினது உறுப்பு எல்லாவற்றையும் கொண்டு சுவை நிரம்பக் கறியாக்கி வைத்தீரோ?' என்றார். தலை இறைச்சி திருவமுதுக்கு ஆகாதென்று கழித்துவிட்டோம்' என்றார் வெண்காட்டு நங்கையார். 'அதுவும் கூட நாம் உண்பது' என்றார் பைரவர். அதுகேட்டுச் சிறுத்தொண்டரும், மனைவியும் திகைத்து நின்றனர். அப்பொழுது சந்தனத்தாதியார், 'அந்தத் தலையிறைச்சி, வந்த தொண்டர் அமுது செய்யும் பொழுது நினைக்கவரும்' என்றுமுன்னரே கறியாக்கி வைத்துள்ளேன்' என்று சொல்லி எடுத்துக் கொடுத்தார். திருவெண்காட்டு நங்கையார் முகமலர்ந்து அதனை வாங்கிப் பரிகலத்திற்

படைத்தார். அதன்பின் பைரவர், சிறுத்தொண்டரைப் பார்த்து 'இங்கு நமக்குத் தனியே உண்ண ஒண்ணாது, இறைவனடியார் இப்பக்கத்தே உள்ளாரை அழைத்து வாரும்' என்றார். அதுகேட்ட சிறுத்தொண்டர் 'அடியார் அமுது செய்ய இடையூறு இதுவோ' என்று வருந்தினார். வீட்டின் புறத்தே சென்று பார்த்தார். அடியார் ஒருவரை-யும் காணாது முகத்தில் வாட்டம் பெருக முதல்வரை வணங்கி 'இகத்தும் பரத்தும் இனியாரைக் காணேன். நானும் திருநீறு இடுவாரைக்கண்டு இடுவேன்' என்றார். அதுகேட்ட பைரவர் 'உம்மைப் போல நீறிட்டார் உளரோ? நீர் உடன் உண்பீர்,' என்று கூறித் திருவெண்காட்டு நங்கையாரைநோக்கி, வேறொரு பரிகலம் இடச்செய்து 'வெம்மை இறைச்சிச்சோறு இதனில் மீட்டுப்படையும்' என்றார். அவரும் அவ்வாறே படைத்தார். உடனமர்ந்த சிறுத்தொண்டர், அடியாரை உண்பிக்க வேண்டித் தாம் உண்ணப்புகுந்தார். அதுகண்ட பைரவர் அவரைத் தடுத்தருளி, 'ஐயா, நாம் ஆறுமாதம் கழித்து உண்போம். நாம் உண்ணுமளவும் பொறுத்திராது நாளும் சோறு உண்ணும் நீர் முன்பு உண்பது ஏன்? நம்முடன் இருந்துண்ண மகவினைப் பெற்றீராயின் அம்மைந்தனை அழையும்' என்றார். அதனைக் கேட்ட சிறுத்தொண்டர் 'இப்போது அவன் உதவான்' என்றார். 'நாம் உண்பது அவன் வந்தாலேதான் நாடி அழையும்' என்றார் பைரவர். அச்சொற்கேட்டுத் தரியாது சிறுத்தொண்டர் மனைவியாரொடும் புறத்தே போய் அழைத்தனர். சிறுத்தொண்டர் 'மைந்தா! வருவாய்' என அழைத்தார். அவர் மனைவியாரும் தலைவர் பணியில் தலைநிற்பவராய் 'செய்யமணியே! சீராளா! வாராய். சிவனார் அடியார் நாம் உய்யும் வகையால் உடனுண்ண அழைக்கின்றார்' என்று ஓலமிட்டழைத்தார். அப்பொழுது பரமர் அருளால் பள்ளிக்கூடத்தினின்று ஓடிவருபவனைப் போன்று சீராள தேவர் வந்தார். வந்த புதல்வரைத் தாயார் தழுவியெடுத்தார். 'சிவனடியார் அமுது செய்யப் பெற்றோம்' என்னும் மகிழ்ச்சியால் கணவனார் கையிற் கொடுத்தார்.

வந்த மைந்தரை அழைத்துக் கொண்டு அடியாரை அமுது செய்வித்தற்கு உள்ளே புகுந்த சிறுத்தொண்டர் பைரவக்கோலத் தொண்டரைக் காணாதவராய்ச் சிந்தை கலங்கித் திகைத்து வீழ்ந்தார்;

மனஞ்சுழன்றார். வெந்த இறைச்சிக் கறியமுதினையும் கலத்திற் காணாது வெருவுற்றார். 'செய்ய மேனிக் கருங்குஞ்சிச் செழுங்கஞ்சுகத்துப் பயிரவர் நாம் உய்ய அமுது செய்யாது ஒளித்தது எங்கே?' எனத்தேடி மயக்கங் கொண்டு வெளியே சென்று பார்த்தார். அப்பொழுது மறைந்த அம்முதல்வர் உமையம்மையாரோடும், முருகனாகிய குழந்தையுடனும் விடை மீது அமர்ந்து இனிய கறியும், திருவமுதும் அமைத்தார் காண எழுந்தருளித் திருவருள் புரிந்தார். அன்பின் வென்ற தொண்டராகிய சிறுத்தொண்டரும், அவர் மனைவியாரும், சீராளதேவரும் தம் முன்னே தோன்றிய பெருமானை என்பும், மனமும் கரைந்துருக நிலமிசை வீழ்ந்து துதித்துப் போற்றினார்கள்.

சிவபெருமானும், உமாதேவியாரும், முருகவேளும், அங்குத் தம்மை வழிபட்டு நின்ற சிறுத்தொண்டர், மனைவியார், மகனார், தாதியார் நால்வரையும் தம்மை என்றும் பிரியாது இறைஞ்சியிருக்கும் வண்ணம் உடன் கொண்டு திருக்கயிலையை அடைந்தருளினார்.

திருத்தொண்ட புராணசாரம்.

பல்கு மருத்துவரதிபர் செங்காட்டம் குடிவாழ்
படைத்தலைவர் அமுதளிக்கும்பரஞ்சோதியார் மெய்
செல்வமிகு சிறுத்தொண்டர் காழிநாடன்
திருவருள் சேர்ந்தவர் வளரும் சீராளன் தன்னை
நல்குதிரு வெண்காட்டு நங்கை சமைத்திடப் பின்
நன்மதிச் சந்தனத்தாதி தலைக்கறியிட்டு உதவப்
புல்க வரும் பமிரவர் தாம் மகிழ்ந்து மகவருளப்
போற்றியவர் சிவனருளே பொருந்தினாரே.

நுண்பொருள்

1. குடிக்கொரு புதல்வனை மகிழ்ச்சியான மனத்துடன் குரூரமாகக் கொன்று உறுப்பரிந்து கறியமுது செய்யும் வல்வினை செயற்கரியதும் காரணம் காண்டற்கரியதுமான சிவதொண்டேயாகும்.அது ஈசனடியார்க்காயின் எச்செயலும் அரியதில்லை எனக் காணும் உறைத்த மெய்த் தொண்டர்க்கு மிக இயல்பாகக் கைவரும் கருமமாகும்.
2. கல்வி, வீரம், செல்வம், அரச அதிகாரம், சிவபத்தி என்பவற்றில் சிறந்திருக்கும் பெரியோர் சிவனடியாரிடத்தில் சிறிய தொண்டராய் குழைந்து ஒழுகுவர்.

3. சிவதொண்டியற்றுவார்க்கு நேரும் சோதனைகள் அவர்தம் இயல்புக் கேற்ற வண்ணமேயமையும், போர்க்களத்திலே கொலைத்தொழில் இயற்றவல்ல தொண்டர்க்கு அவ்வண்ணமான ஒரு சோதனையே நேர்ந்தது. சோதனை அளிக்க வரும் பெருமானும் அதற்கேற்ற கோலமே பூண்டு வருவர். இங்கு உத்தராபதிப் பைரவ அடியார் கோலம் பசு இறைச்சி வேண்டுதற் கேற்ற ஓர் கோலமே.
4. அரசரானோர் தொண்டுறுதிபடைத்தோரை அத்தொண்டுறுதி துலங்கும் வண்ணம், இயன்றவசதிகள் அளித்து அரசகருமத்தினின்றும் ஓய்ந்திருக்கச் செய்தல் சிறந்தது.
5. அருள் தருதற்குப் பெருமான் கொள்ளும் கோலம் அன்பர் நிலைக்குப் பொருந்தியதாக அமையும். சிறுத்தொண்டர், வெண்காட்டுநங்கை. சீராளர் என்போர்க்கு அருள்புரியக் கொண்டகோலம் சோமாஸ்கந்த மூர்த்தமாயிருத் தல் காண்க. சந்தனத்தாதியார்க்கும் திருவடிப்பேறு அருளியமையும் சிறப்பே.
6. சோதனைகள் எல்லாம் வரப்பிரசாதமாக நிறைவுறும்.

பைங்கோட்டு மலர் புன்னைப் பறவைகாள் பயப்பூரச்
சங்காட்டம் தவிர்த்தென்னைத் தவிராநோய் தந்தானே
செங்காட்டம் குடிமேய சிறுத்தொண்டன் பணிசெய்ய
வெங்காட்டுள் அனலேந்தி விளையாடும் பெருமானே.

- திருஞானசம்பந்தப் பெருமான்.

கொன்றை வேணியார் தாமும் பாகம்கொண்ட குலக்கொடியும்
வென்றி நெடுவேல் மைந்தரும் தம் விரைப்பூங்கமலச் சேவடிக்கீழ்
நின்ற தொண்டர் மனைவியார் நீடு மகனார் தாதியார்
என்றும் பிரியாதே இறைஞ்சி இருக்க உடன் கொண்டேகினார்.....

- பெரியபுராணம்.

சிறுத்தொண்ட நாயனார் குருபூசைநாள் :- சித்திரை பரணி

37. சேரமான் பெருமாள் நாயனார்

"கார்கொண்ட கொடைக் கழறிற்றறிவார்க்கும் அடியேன்"
- திருத்தொண்டத் தொகை

"மன்னர் பிரானெதிர் வண்ணான் உடல்உவர் ஊறிநீறார்
தன்னர் பிரான்தமர் போல வருதலும் தான் வணங்க
என்ன பிரான் அடி வண்ணான் என அடிச் சேரனென்னும்
தென்னர் பிரான் கழறிற் றறிவான் எனுஞ் சேரலனே"

"சேரற்குத் தென்நாவலர் பெருமாற்குச் சிவனளித்த
வீரக் கடகரி முன்புதன் பந்தி இவுளிவைத்த
வீரற்கு வென்றிக் கருப்புவில் வீரனை வெற்றிகொண்ட
சூரற்கு எனதுள்ளம் நன்றுசெய்தாயின்று தொண்டுபட்டே"
- திருத்தொண்டர் திருவந்தாதி.

சோழ நாட்டிலே சேரமன்னர் குலமும் உலகும் செய்த பெரும் தவப்பயனாகப் பெருமாக்கோதையார் அவதரித்தார். அரச குமாரராகிய அவர், மண் மேற் சைவநெறி வாழ வளர்ந்து, முன்னைப் பல பிறவிகளிலும் பெற்ற பேரன்பினாற் கண்ணுதற் பெருமானாகிய சிவபெருமானுடைய திருவடிகளையே பரவும் கருத்துடையராயினார். தமக்குரிய அரசியற்றொழிலை விரும்பாமல் திருவஞ்சைக்களமென்னுந் திருக்கோயிலையடைந்து சிவபெருமானுக்குத் திருத்தொண்டு புரிந்துறைதலை விரும்பினார். உலகின் இயல்பும் அரசியல்பும் உறுதியல்ல எனவுணர்ந்த அப்பெருந்தகையார், நாடோறும் விடியற்காலத்தே நித்திரைவிட்டெழுந்து நீராடித் திருவெண்ணீறணிந்து மலர் கொய்து மாலை தொடுத்தமைத்துத் திருவஞ்சைக்களத் திருக்கோயிலுக்குச் செல்வார். அங்கு திருவலகும் திருமெழுகுமிட்டுத் திருமஞ்சனங் கொணர்ந்து இறைவனுக்கு நீராட்டி, முன்னை அருளாசிரியர் திருவாய் மலர்ந்தருளிய திருப்பாட்டினை ஒருமை மனத்துடன் ஓதி அருச்சித்து வழிபாடு புரிந்து வருவார். இங்ஙனம் நிகழும் நாளில் மலைநாட்டையாட்சிபுரிந்த செங்கோற்பொறையன் என்ற சேரவேந்தன் தனது அரச பதிவியினைத் துறந்து தவஞ்செய்தற் பொருட்டுக் கானகஞ் சென்றான்.

இந்நிலையில் அரசியல் நூல் நெறியில் வல்ல அமைச்சர்கள் சேர நாட்டின் அரசியல் நலங்குறித்துச் சிலநாள் ஆராய்ந்தனர். பண்டைச் சேர மன்னர் மேற்கொண்டொழுகிய பழைய முறைமைப்படி அந்நாட்டின் ஆட்சியுரிமை திருவஞ்சைக்களத்திலே திருத்தொண்டு புரிந்துவரும் சேரர்குலத் தோன்றலாகிய பெருமாக்கோதையாருக்கே உரியதெனக் கண்டனர். திருவஞ்சைக்களத்தையடைந்து பெருமாக்-கோதையாரை வணங்கி இச்சேரநாட்டின் ஆட்சியுரிமை தங்களுக்குரியதா-தலால் தாங்களே இந்நாட்டினைக்காக்கும் ஆட்சிபுரிந்தருளுதல் வேண்டும்' என வேண்டினர். பெருமாக்கோதையார் 'மென்மேலும் பெருகும் இன்ப மயமாகிய சிவதொண்டுக்கு இடையூறான ஆட்சியுரிமையை ஏற்றுக்-கொள்ளும்படி இவ்வமைச்சர்கள் என்னை வற்புறுத்துகின்றார்கள். இச்சிவதொண்டிற்குச் சிறிதும் தடை நேராதபடி அடியேன் இந்நாட்டை ஆட்சிபுரிய இறைவனது திருவருள் துணைபுரிவதானால் அப்பெருமானது திருவுள்ளக் கருத்தையுணர்ந்து நடப்பேன்' எனத் தமதுள்ளத்தில் எண்ணிக் கொண்டு திருவஞ்சைக்களத் திருக்கோயிலிற் புகுந்து இறைவன் திருமுன்னர் பணிந்து நின்றார். இறைவனது திருவருளால் தமக்குரிய அரசுரிமையில் வழுவாது ஆட்சிபுரிந்து இறைவனைப் பேரன்பினால் விரும்பி வழிபடுமியல்பும், புல் முதல் யானையீறாகவுள்ள எவ்வுயிர்களும் மக்கள்யாவரும் தம்நாட்டு அரசியலின் நன்மை குறித்துக் கூறுவனவற்றை மனத்தினால் உய்த்துணர்ந்துகொள்ளும் நுண்ணுணர்வும், கெடாத வலிமையும், கைம்மாறு கருதாது இரவலர்க்கீயவல்ல கொடை குறையாத வண்மையும், நாடாள் வேந்தர்க்கு இன்றியமையாத படை ஊர்தி முதலிய அரசுறுப்புக்களும் ஆகிய எல்லா நலங்களும் தம்பால் வந்து பொருந்தப்பெற்றார். இங்ஙனம் அ.'.றிணை உயிர்களும் உயர் திணை மக்களும் **கழறிய சொற்பொருளை உய்த்துணரும் நுண்ணறிவினைப் பெற்றவர் பெருமாக்கோதையாராதலின் அவர்க்குக் கழறிற்றறிவார்** என்பது காரணப்பெயராயிற்று.

உலகுயிர்கள் கழறுஞ்சொற்கள் அனைத்தையும் உணரும் ஆற்றல்-பெற்ற பெருமாக்கோதையார், தாம் முடிசூடிச் சேரநாட்டினை ஆட்சிபுரி-தல் வேண்டுமென்பது சிவபெருமான் திருவுள்ளக் கருத்தாதலை உணர்ந்து வணங்கி அமைச்சர் வேண்டுகோளுக்கு இசைந்தருளினார். அவரது இசைவுபெற்று மகிழ்ந்த அமைச்சர்கள் வேண்டுவன செய்ய

உரிய நன்னாளில் திருமுடிசூடி இவ்வுலகத்தை ஆட்சி புரியும் பெருவேந்தராயினார். மலைநாட்டரசராய் மணிமுடி சூடிய சேரமான் பெருமாள் நாயனார், திருவஞ்சைக்களத் திருக்கோயிலை வலம் வந்து வணங்கிப் பட்டத்துயானை மீது அமர்ந்து வெற்றிக்குடையும் வெண்சாமரையும் பரிசனங்கள் தாங்கிவர, நகரில் திருவுலா வந்தனர். அப்பொழுது உவர்மண் பொதியைத் தோளிலே சுமந்து கொண்டுவரும் உடைவெழுப்போன் ஒருவன் கண்ணெதிர்ப்பட்டான். மழையில் நனைந்து வந்த அவனது சரீரம் உவர்மண் படிந்து வெளுத்திருந்தமையால் உடல் முழுதும் திருநீறுபூசிய சிவனடியார் வேடத்தைப் போன்று விளங்கியது. அதனைச் சிவனடியார் திருவேடம் எனக்கொண்ட சேரமான் பெருமாள் விரைந்து யானையினின்றும் இறங்கிச் சென்று வணங்கினார். அரசர் பெருமான் தன்னை வணங்கக்கண்டு சிந்தை கலங்கி அச்சமுற்ற அவன், அரசரைப் பணிந்து அடியேன் தங்கள் அடித்தொழில் புரியும் வண்ணான்' எனறான். அதுகேட்ட சேரர்பிரான் 'அடியேன் அடிச்சேரன் காதலாற் பணிந்து போற்றுதற்குரிய சிவனடியார் திருவேடத்தை அடியேன் நினைக்கும்படி செய்தீர். இதுபற்றி மனம் வருந்தாது செல்வீராக' என அவனுக்குத் தேறுதல் கூறி அனுப்புவாராயினர். அன்பு நிறைந்த சேரமான் பெருமாளது அடியார் பத்தியைக் கண்டு வியந்த அமைச்சரனைவரும் அப்பெருந்தகையாரை வணங்கிப் போற்றினார்கள்.

சேரமான் பெருமாள் யானைமீது அமர்ந்து நகர்வலஞ் செய்து அரண்மனையையடைந்து அரியணையில் வீற்றிருந்து அரசுபுரிந்தருளினார். மேற்றிசை வேந்தராகிய இப்பெருந்தகையார் கீழ்த்திசை வேந்தராகிய சோழ மன்னரோடும் தென்திசை வேந்தராகிய பாண்டிய மன்னரோடும் நண்பராக விளங்கினார். மூவேந்தரும் தமிழகத்தின் அகத்தும் புறத்தும் உள்ள பகைகளைக் களைந்து திருநீற்றொளியாகிய சிவநெறி வளரவும், வேதநெறி வளரவும் அறநூல் முறையே ஆட்சி புரிந்தனர்.

பெருமாக்கோதையார் தாம் பெற்ற அரசபதவியின் பயனும், நிறைந்த தவமும், தேடும் பொருளும், பெருந்துணையும் ஆகிய இவையெல்லாமாக விளங்குவது தில்லைச் சிற்றம்பலத்தில் ஆடல் புரிந்தருளும் திருவடித்தாமரையெனத் தெளிந்தார். ஆதலால் நாள்தோறும்

சிவபூசை செய்வதை, தமக்குரிய கடமையாக மேற்கொண்டார். திருமஞ்சனம், பூ, புகை, ஒளி ஆகியவற்றுடன் செய்யும் அன்பு நிறைந்த சிவபூசையை ஏற்றுக்கொண்ட இறைவர், தமது திருவடிச் சிலம்பின் ஒலியினைச் சேரமான் செவிகுளிரக் கேட்டின்புறும் வண்ணம் ஒலிப்பித்தலை வழக்கமாகக் கொண்டருளினார்.

இவ்வாறு சிவபூசையிலீடுபட்ட சேரமான் பெருமான் சிவனடியார்களுக்கு வரையாது கொடுத்தும், சிவவேள்விகள் செய்தும் எவ்வுயிர்க்கும் நலஞ்செய்து வந்தார். இந்நிலையில் பாண்டியனது தலைநகராகிய மதுரையம்பதியிலே திருவாலவாயென்னுந் திருக்கோயிலிலே எழுந்தருளியிருக்கும் சோமசுந்தரக் கடவுள், தம்மை இன்னிசையாற் பரவிப்போற்றும் பாணபத்திரனென்னும் இசைப் பாணரது வறுமையை நீக்கத் திருவுளங் கொண்டு அவரது கனவிலே தோன்றி 'அன்பனே, என்பாற் பேரன்புடைய சேரமான் பெருமாளென்னும் வேந்தன் உனக்குப் பொன், பட்டாடை, நவமணிக்கலன்கள் முதலாக நீ வேண்டியதெல்லாங் குறைவறக் கொடுப்பான். அவனுக்கு ஒரு திருமுகம் எழுதிக் கொடுத்திருக்கின்றோம். நீ அதனைப் பெற்றுக்கொண்டு மலைநாடு சென்று பொருள் பெற்று வருவாயாக' எனக் கூறி **'மதிமலிபுரிசை'** யெனத் தொடங்கும் திருப்பாடல் வரையப் பெற்ற திருமுகத்தைக் கொடுத்தருளினார். திருவாலவாயுடையார் அருளிய **திருமுகப்பாசுரத்தைப்** பெற்ற பாணபத்திரர், சேர நாட்டையடைந்து சேரமான் பெருமாளைக் கண்டார். பாணர் தந்த திருமுகத்தை வாங்கி முடிமேற் கொண்ட சேரர் பெருமான் அப்பாசுரத்தைப் பலமுறை படித்து உள்ளமுருகினார். அமைச்சர் முதலியோரையழைத்துத் தமது நிதியறையிலுள்ள பலவகைப் பொருள்களையும் பொதி செய்து கொணரச் செய்து 'இப்பெரும்பொருள்களையும் யானை, குதிரை முதலிய சேனைகளையும், இம்மலைநாட்டு ஆட்சியுரிமையினையும் தாங்களே ஏற்றருள வேண்டும்' எனப் பாணபத்திரரை வேண்டி நின்றார். அவரது கொடைத் திறத்தைக் கண்டு வியந்த பாணபத்திரர் 'என் குடும்ப வாழ்விற்குப் போதுமான பொருள்களை மட்டும் அடியேன் தங்கள்பால் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பது இறைவனது ஆணை. ஆதலின், அரசாட்சியும் அதற்கு இன்றியமையாத அரசுறுப்புக்களுமாகிய இவற்றைத் தாங்களே

கைக்கொண்டருளுதல் வேண்டும்' என்று கூறினார். இறைவரது ஆணை-யைக் கேட்ட சேரமான்பெருமாள், அவ்வாணையை மறுத்தற்கு அஞ்சிப் பாணபத்திரரது வேண்டுகோளுக்கிசைந்தனர். பாணரும் தமக்கு வேண்டிய பொருள்களை மட்டும் பெற்றுக்கொண்டு அன்பினால் தம்மைப் பின்-தொடர்ந்து வந்து வழியனுப்பிய சேரமானிடம் விடைபெற்று மதுரை நகரத்தையடைந்தார்.

கழறிற்றறிவராகிய சேரமான்பெருமாள், என்றும் போல ஒரு நாள் சிவபூசை செய்துகொண்டிருந்த பொழுது, வழிபாட்டில் நாடோறுங்கேட்டின் புறுவதாகிய திருச்சிலம் பொலியை அன்று கேட்கப் பெறாது பெரிதும் மனங்கலங்கினார். அடியேன் என்ன பிழை செய்தேனோ எனப் பொருமினார். இறைவனை வழிபடும் ஆசை காரணமாக யான் சுமந்துள்ள இவ்வுடம்பினால் அடியேன் பெறுதற்குரிய இன்பம் வேறென்ன இருக்கிறது எனக் கலங்கித் தம் உயிரைப் போக்கிக்கொள்ளும் எண்ணத்துடன் உடை வாளையுருவித் தம் மார்பிலே நாட்டப் புகுந்தார். அந்நிலையில் அருட்கடலாகிய கூத்தப்பெருமான் விரைந்து தனது திருவடிச்சிலம்பொலியைச் சேரமான்பெருமாள் செவிகுளிரக் கேட்டு மகிழும் வண்ணம் ஒலிக்கச் செய்தார். சிலம்பொலியைக் கேட்டு மகிழ்ந்த சேரவேந்தர் தமது கையிற் கொண்ட உடைவாளைக் கீழே எறிந்து விட்டுத் தலைமேல் கைகுவித்து வணங்கி நின்று, 'தேவர்க-ளும் தேடிக் காணுதற்கரிய பெருமானே! இத்திருவருளை முன்பு செய்யாது தவிர்ந்தது எது கருதி? என வினவினார். அந்நிலையில் தோன்றாத் துணையாக மறைந்து நின்றருளிய இறைவர் "சேரனே!, வன்றொண்டனாகிய சுந்தரன் தில்லையம்பலத்திலே நாம் புரியும் திருக்கூத்தினைக் கண்டு ஐம்புலன்களும் ஒன்றியவுணர்வுடன் நின்று புகழமைந்த திருபதிகத்தால் நம்மைப் பரவிப் பாடினான். அவன் பாடிய தீஞ்சுவைப் பாடலில் நாம் திளைத்திருந்தமையால் இங்கு நீ புரியும் வழிபாட்டிற்கு உரிய நேரத்தில் வரத் தாழ்ந்தோம்' எனத் திருவாய் மலர்ந்தருளினார். அவ்வருள் மொழியைச் செவிமடுத்த சேரமான்பெருமாள் 'அடியார்களுக்கு அருள் புரியும் இறைவனது கருணைத்திறம் என்னே' என வியந்து உளமுருகினார். இறைவன் திருநடம்புரிந்தருளும் பெரும்பற்றப் புலியூரிலமைந்த பொன்னம்பலத்தையும் அங்கே இறைவனது

ஆடல் கண்டு மகிழ்ந்த தன்னேரில்லாப் பெரியோராகிய வன்றொண்டரையும் கண்டு வழிபடுதல் வேண்டுமெனக் கருதிச் சோழ நாட்டிற்குச் செல்ல விரும்பினார். திருவஞ்சைக் களத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவனை வழிபட்டுச் சேனைகளுடன் புறப்பட்டுக் கொங்கு நாட்டைக் கடந்து சிவனடியார்கள் எதிர்கொண்டு போற்றச் சோழநாட்டை அடைந்தார். காவிரியில் நீராடி அதனைக் கடந்து தில்லைமூதூரின் எல்லையையணுகினார். அந்நிலையில் தில்லை வாழ்ந்தணர்களும் சிவனடியார்களும் எதிர்கொண்டு வரவேற்றனர். அடியவர்களோடு தில்லைத் திருவீதியை வலம்வந்து எழுநிலைக் கோபுரத்தை வணங்கி உட்புகுந்த சேரமான்பெருமாள்நாயனார் திருப்பேரம்பலத்தை இறைஞ்சி உட் புகுந்து இறைவன் ஆடல் புரியும் திருச்சிற்றம்பலத்தின் முன் அணைந்தார். அளவிலின்பப் பெருங்கூத்தராகிய இறைவரது திருக்கூத்தினை ஐம்புலனும் ஒன்றிய ஒருமையுணர்வாற் கண்டு உருகிப் போற்றித் திருவருளின்பக்கடலில் திளைத்து இன்புற்றார். தாம் பெற்ற பேரின்பத்தினை வையத்தாரனைவரும் பெற்று மகிழும் வண்ணம் கூத்தப்பெருமானது கீர்த்தியை விரித்துரைக்கும் செந்தமிழ்ப் பனுவலாகிய **பொன்வண்ணத்** திருவந்தாதியினைப் பாடியருளினார். சேரர் பாடிய திருவந்தாதியினைக் கேட்டு மகிழ்ந்த தில்லையம்பலவர் அதற்குரிய பரிசிலாகத் தூக்கிய திருவடியிலணியப் பெற்ற திருச்சிலம்பொலியை நிகழ்த்தியருளினார். ஆடற்சிலம்பினொலியினைச் செவிமடுத்து அளவிலாப் பேருவகையுற்ற சேரமான்பெருமாள் காலந்தோறும் கூத்தப்பெருமானைக் கும்பிட்டுத் தில்லைப்பதியிற் சில நாள் தங்கியிருந்தார்.

பின்பு நம்பியாரூரரைக் கண்டு வணங்குவதற்கு விரும்பித் தில்லையினின்றும் புறப்பட்டுப் பல தலங்களை வணங்கி திருவாரூரையடைந்தார். சேரமான்பெருமாளது வருகையையுணர்ந்த நம்பியாரூரர், சிவனடியார்களுடன் அவரை எதிர்கொண்டழைத்தார். நம்பியாரூரரைக் கண்ட சேரவேந்தர் நிலமிசை விழுந்திறைஞ்சினார். தம்மை வணங்கிய சேரமான் பெருமாளைத் தாமும் வணங்கித் தம் இரு கைகளாலும் தூக்கியெடுத்துத் தழுவிக் கொண்டார் சுந்தரர். இவ்விரு பெருமக்களும் ஒருவரொருவரிற் கலந்த பெரும் நட்பினராய்ப் பெருமகிழ்ச்சியுற்றார்கள். இங்ஙனம் இருவரும் உயிர் ஒன்றி உடம்பும் ஒன்றாம் என அன்பினால்

அளவளாவி மகிழும் தோழமைத் திறத்தைக் கண்ணுற்ற சிவனடியார்-கள், நம்பியாரூரரைச் **'சேரமான் தோழர்'** என்ற பெயரால் அழைத்து மகிழ்ந்தார்கள். சேரமான் தோழராகிய சுந்தரர் சேரமான்பெருமாளது கையினைப் பற்றி அழைத்துச் சென்றார். இருவரும் திருவாரூர்த் திருக்கோயிலையடைந்து அடியார்கள் வீற்றிருக்கும் தேவாசிரிய மண்ட-பத்தைப் பணிந்து திருக்கோயிலை வலம் வந்தனர். சேரமான் பெருமாள் உடைய நம்பியாகிய சுந்தரரைத் தொடர்ந்து சென்று பூங்கோயிலமர்ந்த பெருமானை நிலமிசைப் பல முறை விழுந்திறைஞ்சினார். புற்றிடங்கொண்ட பெருமானைப் போற்றிக் கண்களில் அன்பு நீர் பொழியத் **திருமும்மணிக்கோவையென்னுஞ்** செஞ்சொல் மாலை புனைந்-தேத்தினார். தாம் பாடிய செந்தமிழ் நூலைத் தம் தோழராகிய சுந்தரர் திருமுன்பு நன்மை விளங்கக் கேட்பித்தார். ஆரூரிடங்கொண்ட இறை-வரும் சேரவேந்தர் பாடிய தெய்வப் பாமாலையை விரும்பியேற்றுக் கொண்டருளினார். பின்பு சுந்தரர் சேரமான் பெருமாளை அழைத்துக்கொண்டு நங்கை பரவையார் திருமாளிகைக்குச் சென்றார். பரவையார், திருவிளக்கு நிறைகுடம் முதலிய மங்கலப் பொருள்களுடன் சேரமான் பெருமாளை வரவேற்று வணங்கிச் சேரர் பெருமானுக்கும் சிவனடியார்களுக்கும் உடன் வந்த பரிசனங்களுக்கும் தக்கவகையால் திருவமுது அமைத்து அன்புடன் உபசரித்தார். ஆண்டநம்பியும் சேரமான் பெருமாளும் உடனிருந்து திருவமுது செய்தருளினார்கள்.

இவ்வாறு சேரமான்பெருமாளும் நம்பியாரூரரும் திருவாரூரில் தங்கியிருக்கும் பொழுது பாண்டி நாட்டிலுள்ள திருவாலவாய் முத-லிய திருத்தலங்களை வழிபடவேண்டும் என்ற எண்ணம் சுந்தரர்க்கு உண்டாயிற்று. அவர்தம் விருப்பத்தினைச் சேரமான்பெருமாளுக்குத் தெரிவித்தார். வன்றொண்டரைப் பிரியாத பெருமானாகிய சேரமான் பெருமாள் தமக்குத் திருமுகப் பாசுரம் அனுப்பியருளிய திருவாலவாய்ப் பெருமானைப் போற்ற வேண்டுமெனும் பேரார்வத்தால் தாமும் அவருடன் செல்லத் துணிந்தார். ஒத்த உள்ளமுடையார் இருவரும் அடியார் புடைசூழத் திருமறைக்காடு முதலிய தலங்களை வணங்கித் தென்தமிழ்ப் பாண்டி நாட்டின் தலைநகராகிய மதுரையை அடைந்தார்கள். அப்போது நாடாள் வேந்தனாகிய பாண்டியனும், பாண்டியன் மகளை மணந்து

மதுரையில் தங்கியிருந்த சோழ மன்னனும் எதிர் சென்று இவ்விரு பெருமக்களையும் வரவேற்றுத் திருவாலவாய்த் திருக்கோயிலுக்கு அழைத்துச் சென்றனர். நம்பியாரூரருடன் திருவாலவாய்ப் பெருமானைக் கண்டு மகிழ்ந்த சேரமான்பெருமாள், 'அடியேனையும் ஒரு பொருளாக எண்ணித் திருமுகம் அருளிய பேரருளின் எல்லையை அறிந்திலேன்' என உரை தடுமாறிக் கண்ணீரரும்ப ஆலவாய்க் கடவுளைப் பரவிப்போற்றினார். பாண்டியன் இவ்விரு பெருமக்களையும் தன் அரண்மனைக்கு அழைத்துச் சென்று உபசரித்துப் போற்றினான்.

இங்ஙனம் சேர சோழ பாண்டியர்களாகிய தமிழ் வேந்தர் மூவரும் நம்பியாரூரராகிய சுந்தரரும் ஒருவரோடொருவர் அன்பினால் அளவளாவிப் பாண்டி நாட்டுத் தலங்களைப் பணிந்து இன்புற்றனர். சேரமான் பெருமாளும், சுந்தரரும், பாண்டியர் சோழராகிய இருபெருவேந்தர்களிடத்தும் விடைபெற்றுத் திருவாரூரை அடைந்தனர். சேரமான் பெருமாள் அங்குச் சில நாள் தங்கியிருந்து தம் தோழராகிய நம்பியாரூரரைத் தங்கள் நாட்டிற்கு எழுந்தருள வேண்டுமென்று பல முறையும் வேண்டிக்கொண்டார். அவ்வேண்டுகோளுக்கிணங்கிய சுந்தரர், பரவையாரது இசைவு பெற்றுச் சேரவேந்தருடன் புறப்பட்டார். இருவரும் வழியிலுள்ள தலங்களை வணங்கிப் போற்றி மலைநாட்டவர் எதிர்கொள்ளக் கொடுங்கோளூரை அடைந்தனர். சேரமான் பெருமாள் தம் ஆருயிர்த் தோழராகிய நம்பியாரூரரை அரியணையில் அமரச் செய்து, தம் தேவிமார்கள் பொற்குடத்தில் நன்னீர் ஏந்தி நிற்க நம்பியாரூரருடைய திருவடிகளை விளக்கி மலர்தூவி வழிபட்டார். அவருடன் உடனிருந்து அமுதருந்தி உபசரித்தார். செண்டாடுந் தொழில் மகிழ்வும் சிறுசோற்றுப் பெருவிழாவும் பாடல் ஆடல் இன்னியங்கள் முதலாக பலவகை வாத்தியங்கள் விளையாடல்களும் நிகழச்செய்து தம் தோழரை மகிழ்வித்து அளவளாவி மகிழ்வாராயினர்.

இங்ஙனம் நண்பர் இருவரும் அளவளாவி மகிழும் நாட்களில் நம்பியாரூரர்க்குத் திருவாரூர்ப் பெருமானைக் கண்டு வணங்க வேண்டுமென்ற நினைவு தோன்றியது. அந்நினைவு மீதூரப் பெற்ற சுந்தரர், 'பொன்னும் மெய்பொருளுந் தந்து போகமும் திருவும் புணர்த்தருளும் ஆரூர்ப் பெருமானை மறத்தலும் ஆமே' எனப் பாடித் தமது ஆற்றாமை-

யைத் தம் தோழராகிய சேரமானுக்கு உணர்த்தி விடைபெற முயன்றார். சுந்தரரின் உளக்குறிப்பறிந்த சேரமான் பெருமாள், 'இன்று உமது பிரிவாற்றேன் என்செய்வேன்' என்றுரைத்து மிகவும் வருந்தினார். நம்பியாரூரர் தம் தோழரை நோக்கி 'இந்நாட்டிற்கு உளவாம் இடர்நீங்கப் பகைநீக்கி அரசாளுதல் உமது கடன்' என அறிவுறுத்தினார். அதனைக் கேட்ட வேந்தர் பெருமான் 'இவ்வுலக ஆட்சியும் வானுலக ஆட்சியுமாக அமைந்து எனக்கு இன்பஞ் செய்வன உம்முடைய திருவடித் தாமரைகளே. திருவாரூர்க்கு எழுந்தருள வெண்ணிய உமது மனவிருப்பத்தை நீக்கவும் அஞ்சுகின்றேன்' என்றார். 'என்னுயிர்க்கு இன்னுயிராம் எழிலாரூர்ப் பெருமானை வன்னெஞ்சக் கள்வனேன் மறந்திரேன். நீவிர் சிவபெருமான் திருவருளால் அரசு புரிந்து இங்கிருப்பீராக' என்றுரைத்து வணங்கினார் வன்றொண்டர். சேரர் பெருமானும் வன்றொண்டரை வணங்கித் தம்முடைய திருமாளிகையிலுள்ள பெரும் பொருள்களைப் பொதிசெய்து ஆட்களின்மேல் ஏற்றுவித்து நெடுந்தூரஞ் சென்று வழியனுப்பினார். சுந்தரரும் தம் தோழரைத் தழுவி விடை பெற்றுத் திருவாரூரை அடைந்தார். சேரமான்பெருமாள் தம் தோழராகிய நம்பியாரூரரை மறவாத சிந்தையுடன் கொடுங்கோளூரிலிருந்து மலைநாட்டை ஆட்சி புரிந்திருந்தார்.

நெடுநாளாயின பின் சுந்தரர் மீண்டும் கொடுங்கோளூருக்கு வந்து தம் தோழராகிய சேரமான் பெருமாளுடன் பல நாட்கள் அளவளாவி மகிழ்ந்திருந்தார். ஒருநாள் சேரமான் பெருமாள் திருமஞ்சனச்சாலையில் நீராடிக் கொண்டிருந்த பொழுது சுந்தரர் திருவஞ்சைக்களத் திருக்கோயிலையடைந்து அஞ்சைக்களத்து இறைவனை வழிபட்டுத் 'தலைக்குத் தலைமாலை' என்ற முதற் குறிப்புடைய திருப்பதிகத்தை பாடிப் போற்றி நின்றார். அந்நிலையில் அவரது பாசத்தளையை அகற்றிப் பேரருள் புரிய விரும்பிய சிவபெருமான், சுந்தரரை அழைத்துவருமாறு திருக்கயிலாயத்திலிருந்து வெள்ளையானையுடன் தேவர்களை அனுப்பியருளினார். வெள்ளை யானையுடன் திருவஞ்சைக்களத் திருக்கோயில் வாயிலையடைந்த தேவர்கள் நம்பியாரூரரைப் பணிந்து நின்று 'தாங்கள் இவ் வெள்ளை யானையின்மீது அமர்ந்து திருக்கயிலைக்கு உடனே புறப்பட்டு வருதல் வேண்டுமென்பது இறைவரது அருளிப்பாடு' என விண்ணப்பஞ் செய்தார்கள். இந்நிலையில்

நம்பியாரூரர் செய்வதொன்றும் அறியாது தம் உயிர்த்தோழராகிய சேரமான்பெருமாளைத் தம் மனதிற் சிந்தித்துக் கொண்டு வெள்ளை யானையின்மீது ஏறிச் செல்வாராயினர்.

இவ்வாறு தம் உயிர்த்தோழராகிய சுந்தரர் தம்மை நினைத்துச் செல்லும் பேரன்பின் திறத்தைத் திருவாற்றலால் விரைந்துணர்ந்த கழறிற்றறிவாராகிய சேர வேந்தர், பக்கத்தில் நின்ற குதிரையின் மீது ஏறித் திருவஞ்சைக்களத் திருக்கோயிலுக்கு விரைந்து சென்றார். வெள்ளை யானையின் மீதமர்ந்து விண்ணிற் செல்லும் தம் தோழரைக் கண்டார். தமது குதிரையின் செவியிலே மந்திரவைந்தெழுத்தினை உபதேசித்தார். அவ்வளவில் குதிரை வானமீதெழுந்து வன்றொண்டர் ஏறிச்செல்லும் வெள்ளையானையை வலம் வந்து அதற்கு முன்னே சென்றது. அப்பொழுது சேரமான் பெருமாளைப் பின்தொடர்ந்து சென்ற படைவீரர்கள், குதிரை மீது செல்லும் தம் வேந்தர் பெருமானைக் கண்ணுக்குப் புலப்படும் எல்லை வரையிற் கண்டு பின் காணப்பெறாது வருத்தமுற்றார்கள். தம் வேந்தர் பெருமானைத் தொடர்ந்து செல்ல வேண்டுமென்ற மனத்திட்பமுடையராய் உடைவாளினால் தம் உடம்பை வெட்டி வீழ்த்தி வீர யாக்கையைப் பெற்று விசும்பின் மீதெழுந்து தம் அரசர் பெருமானைச் சேவித்துச் சென்றனர். சேரமான்பெருமாளும் சுந்தரரும் திருக்கைலாயத்தின் தெற்கு வாயிலை யணுகிக் குதிரையி-லிருந்தும் யானையிலிருந்தும் இறங்கி வாயில்கள் பலவற்றையுங் கடந்து திருவணுக்கன் திருவாயிலை அடைந்தார்கள். சேரமான் பெருமாள் உள்ளே புக அனுமதியின்றி வாயிலில் தடைப்பட்டு நின்றார். அவருடைய தோழராகிய சுந்தரர் உள்ளே போய்ச் சிவ-பெருமான் திருமுன்னர் பணிந்தெழுந்தார். 'கங்கை முடிக்கணிந்த கடவுளே! தங்கள் திருவடிகளை இறைஞ்சுதற் பொருட்டுச் சேரமான் பெருமாள் திருவணுக்கன் திருவாயிலின் புறத்திலே வந்து நிற்கின்றார்' என விண்ணப்பஞ் செய்தார். சிவபெருமான், பெரிய தேவராகிய நந்தியை அழைத்துச் 'சேரமானைக் கொணர்க' எனத் திருவாய்மலர்ந்த-ருளினார். அவரும் அவ்வாறே சென்று அழைத்து வந்தார்.

சேரமான் பெருமாள் இறைவன் திருமுன்பு பணிந்து போற்றி நின்றார். இறைவன் புன்முறுவல் செய்து சேரமானை நோக்கி, 'இங்கு

நாம் அழையாதிருக்க நீ வந்தது எது கருதி' என வினவியருளினார். அதுகேட்ட சேரவேந்தர் இறைவனைப் பணிந்து "செஞ்சடைக் கடவுளே! அடியனேன் நம்பியாரூரருடைய திருவடிகளைப் போற்றி அவர் ஏறிவந்த வெள்ளை யானைக்கு முன் அவரைச் சேவித்துக்கொண்டு வந்தேன். தங்களது திருவருட் பெருவெள்ளம் அடியேனை முன்கொண்டு வருதலால் இங்கு உம் திருமுன்பு வரப்பெற்றேன். அடியேன் இங்கு தெரிவித்துக்கொள்ளும் வேண்டுகோள் ஒன்றுள்ளது. எனது பாசத்தளையை அகற்றுதற் பொருட்டு வன்றொண்டரது தோழமையை அருளிய பெருமானே! மறைகளாலும் முனிவர்களாலும் அளவிடுவதற்கரிய பெரியோனாகிய உன்னைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு திருவுலாப்புறம் என்ற செந்தமிழ் நூல் ஒன்றைப் பாடி வந்துள்ளேன். இத்தமிழ் நூலைத் தேவரீர் திருச்செவி சாத்தியருளல் வேண்டும் என்பதே எனது வேண்டுகோளாகும்' என்று விண்ணப்பஞ்செய்தார். அப்பொழுது சிவபெருமான், 'சேரனே அவ்வுலாவைச் சொல்லுக' எனப் பணித்தருளினார். சேரமான்பெருமாள்நாயனாரும் தாம் பாடிய திருக்கைலாய ஞான உலாவை கயிலைப் பெருமான் திருமுன்னர் எடுத்துரைத்து அரங்கேற்றினார். சேரர்காவலர் பரிவுடன் கேட்பித்த திருவுலாப்புறத்தை ஏற்றுக்கொண்ட இறைவன், அவரை நோக்கி சேரனே நம்பியாரூரனாகிய ஆலாலசுந்தரனுடன் கூடி நீவிர் இருவீரும் நம் சிவகணத்தலைவராய் இங்கு நம்பால் நிலைபெற்றிருப்பீராக' எனத் திருவருள் செய்ய, வன்றொண்டர் அணுக்கத் தொண்டு புரியும் ஆலாலசுந்தரராகவும் சேரமான்பெருமாள் சிவகணத் தலைவராகவும் கயிலையில் திருத்தொண்டு புரிந்திருப்பாராயினர்.

திருத்தொண்டர் புராணசாரம்.

காவலர் மகோதையார் கொடுங்கோளூர்க்கோக்
கழறியவை அறிந்தகோச் சிலம்போசைக் கருத்தார்
நாவலர்கோன் நண்பர்அடிச் சேரனென்றே
நவின்றுவரும் வண்ணானை நயந்தகோநற்
பாவலர்கோப் பாணபத்திரனால் வாய்ந்த
பரமர் திருமுகம் வாங்கிப் பணிகோ வெற்பின்
மேவியகோ வானைக்குக் குதிரைவைத்த
வீரர்கோஎனை யாளுஞ் சேரர்கோவே.

சேரமான் பெருமாள் நாயனார்

நுண்பொருள்

1. அரசவாழ்விலும் சிவதொண்டுபுரியும் வாழ்வு மேலானது.
2. தெய்வசித்தமாகச் சிவதொண்டுக்கு இடையூறாய் அமையாத அரச வாழ்வு பொருந்துமெனின் அதுவும் கொள்ளற்குரியதே.
3. குலமிலராயினும் தொண்டர் குலத்துளராயின் அவர் தொழுகுலத்தவரே.
4. அரசபண்டாரம் அடியவர்க்குரியது.
5. விழுப்பம் மிக்க பெருமக்களுடன் கூடிவாழுதல் விழுப்பமானதேயாம்.
6. நாயன்மார் தம் அன்பாளரை முத்திப்பதத்துக்கு அழைத்துச் செல்லும் ஆர்வமுடையார்.
7. ஆரூரர் கழல்போற்றும் திறம் ஒன்றினாலேயே கயிலைசேரும் பேறுவாய்க்கும்
8. அஞ்செழுத்து, மருளும் குதிரையை விண்மீது தாவச் செய்யும்.

திருச்சிற்றம்பலம்

பொன்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம் மேனிபொலிந்திலங்கும்
மின்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம் வீழ்சடை வெள்ளிக்குன்றந்
தன்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம் மால்விடை தன்னைக்கண்ட
என் வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம் ஆகிய ஈசனுக்கே.

– பொன்வண்ணத்தந்தாதி

அளவில் இன்பப் பெருங்கூத்தர் ஆடஎடுத்த கழல்காட்ட
உளமும் புலனும் ஒருவழிச்சென்று உருகப்போற்றி உய்கின்றார்
களனில்விடம் வைத்து அளித்த அமுதன்றி மன்றிற் கழல்வைத்து
வளரும் திருக்கூத்தமுது உலகுக்கு அளித்த கருணை வழுத்தினார்.

– பெரிய புராணம்

சேரமான் பெருமாள் நாயனார் குருபூசைநாள் :- ஆடிச்சுவாதி

38. கணநாத நாயனார்

"கடற்காழிக் கணநாதன் அடியார்க்கும் அடியேன்"

- திருத்தொண்டத் தொகை

தொண்டரை ஆக்கி அவரவர்க்கேற்ற தொழில்கள் செய்வித் (து)
அண்டர்தங் கோன்அக்கணத்துக்கு நாயகம் பெற்றவன்காண்
கொண்டல் கொண்டேறிய மின்னுக்குக் கோல மடல்கள்தொறுங்
கண்டல் வெண் சோறளிக்குங் கடற்காழிக்கணநாதனே"

- திருத்தொண்டர் திருவந்தாதி

ஆளுடைய பிள்ளையார் அவதரித்த சீகாழிப்பதியில் அந்தணர் குலத்தில் அவதரித்தவர் கணநாத நாயனார்.

அவர் திருத்தோணியப்பருக்கு நாளும் அன்பொடு தொழும்பு செய்தார். தொழும்பு செய்தலில் தேர்ச்சி பெற்றிருந்த இத்தொண்டரை நாடிப்பலரும் தொண்டு பயிலவந்தனர். தம்மிடம் வந்த நந்தவனப்பணி செய்வோர், மலர்பறிப்போர், மாலைபுனைவோர், திருமஞ்சனம் கொணர் வோர், திருவலகு திருமெழுக்கமைப்போர், திருமுறை எழுதுவோர், வாசிப்போர் என்றிவர்களையெல்லாம் அவரவர்துறையில் திறமை மிகுமாறு பயிற்றுவித்தார். அவர்களுக்குள்ள குறையெல்லாம் முடித்தார். வேண்டும் வசதிகளைச் செய்து கொடுத்தார். இவ்வாற்றால் கைத்திருத் தொண்டில் தேர்ந்த சரியையாளர்களை உருவாக்கினார்.

இல்லறத்தில் வாழ்ந்த இவர் அடியார்களை வழிபட்டார். ஆளுடையபிள்ளையார் திருவடியில் மூண்ட அன்பொடு நாளும் முப்போதும் வழிபாடு செய்தார். ஞானசம்பந்தப் பெருமாளை நாளும் வழிபட்ட நலத்தால் இறைவரது திருக்கயிலை மாமலையில் சேர்ந்து கணங்களுக்கு நாதராகி வழித்தொண்டின் நிலை பெற்றார்.

கணநாத நாயனார்

திருத்தொண்டர்புராணசாரம்

கந்தமலி வயற்காழி மறையோ ரேத்தும்
கணநாதர் திருத்தோணிக் கடவுளார்க்கு
நந்தவனம் பலவமைத்து மலருங் கொய்து
நற்றாமம் சொற்றாமம் நயந்து சாத்தி
வந்தவரைத் தொண்டாக்கிப் பணிகள் பூட்டி
வாது செய்த வாரணத்தை மகிழ்ந்து வாழ்த்தி
புந்தி மகிழ்ந்து அரனருளால் கயிலை மேவி
பொருவில் கணத்தவர் காவல் பொருந்தினாரே.

நுண்பொருள்

1. எத்தொழிலுக்கும் பயிற்சி வேண்டுவது போல சரியைத் தொழும்புக்கும் மிக்க பயிற்சி வேண்டுவதாம். சிவபணி செப்பம் மிக்கதாயிருக்க வேண்டுமாதலால் சிவன்பணி செய்வார்க்கு இப்பயிற்சியை நிறைவுற வழங்குதல் சிறந்த புண்ணியம்.
2. தொண்டுறுதியும், தொண்டுறுதியில் பயிற்றுதலும் அடியாரை வழிபடும் திறத்தைத் தரும்.
3. அடியார் வழிபாடு சற்குரவரைச் சாரச் செய்யும். அது இங்கு ஞான சம்பந்தப் பெருமானை வழிபடுதலாயிற்று.
4. ஞானசம்பந்தப் பெருமானை வழிபடுவது எளிதில் சிவனடிசேர்க்கும்.

முத்தன்ன வெண்ணகையார் மயல்மாற்றி, முறைவழுவாது
எத்தனை காலம் நின்று ஏத்தும் அவரினும், என்பணிந்த
பித்தனை எங்கள் பிரானை அணைவது எளிது கண்டீர்
அத்தனை ஞானசம பந்தனைப் பாதம் அடைந்தவர்க்கே.

ஆனதொண்டினில் அமர்ந்த பேரன்பரும் அகலிடத்தினில் என்றும்
ஞானமுண்டவர் புண்டரீகக்கழல் அருச்சனை நலம் பெற்றுத்
தூ நறுங் கொன்றை முடியவர் சுடர் நெடுங்கயிலை மால்வரைஎய்தி
மானநற்பெருங் கணங்கட்கு நாதராம் வழித்தொண்டில் நிலைபெற்றார்.

– பெரியபுராணம்.

கணநாத நாயனார் குருபூசைநாள் : பங்குனி திருவாதிரை.

39. கூற்றுவ நாயனார் புராணம்

"ஆர்கொண்ட வேல் கூற்றன் களந்தைக் கோன் அடியேன்"
- திருத்தொண்டத் தொகை

"நாதன் திருவடி யேமுடியாகக் கவித்துநல்ல
போதங்கருத்திற் பொறித்தமை யாலது கைகொடுப்ப
ஓதந் தழுவிய ஞாலமெல்லாமொரு கோலின் வைத்தான்
கோதை நெடுவேற் களப்பாள னாகிய கூற்றுவனே"
- திருத்தொண்டர் திருவந்தாதி

களந்தை என்னும் பதியிலே கூற்றுவர் என்னும் குறுநில மன்னர் ஒருவர் இருந்தார். அவர் சிவபெருமானது திருநாமத்தினை நாடோறும் ஓதியும் சிவனடியார் பாதம் பணிந்தும் ஒழுகினார். அவ்வொழுக்கத்தின் வலிமையாலே நால்வகைச் சேனையும் சிறக்கப் பெற்று மாற்றார்க்குக் கூற்றுவன் போல விளங்கினார். தம் தோள் வல்லமையால் பல போர்களிலும் பல அரசர்களையும் வென்று அவர்களது வளநாடுகளையெல்லாம் கவர்ந்தார். மணிமுடி ஒன்றொழிய அரசர் திருவெல்லாமுடையராய் விளங்கினார்.

மணிமுடி சூட்டிக் கொடுக்கும்படி அதனைச் சூட்டும் உரிமையுடைய தில்லைவாழந்தணர்களைக் கேட்டார். அவர்கள் சோழர் குல முதல்வர்களுக்கு அன்றி முடி சூட்டமாட்டோம் என்று மறுத்துத் தம்மில் ஒரு குடியை மணி முடியைக் காவல் செய்யும்படி வைத்து, இவராணைக்கு அஞ்சிச் சேர நாட்டிற்குச் சென்றுவிட்டனர்.

அது கண்ட கூற்றனார் மனம் தளர்ந்து "முடியாக உமது பாதம் பெற வேண்டும்" என்று ஆடல்வல்லானைப் பரவி, அந்நினைவுடன் துயின்றனர். அன்றிரவு மன்றிலாடும் பெருங்கூத்தர் எழுந்தருளி, தமது திருவடிகளையே முடியாக அவருக்குச் சூட்டியருள, அவற்றைத் தாங்கி அவர் உலகினைத் தனியாட்சி புரிந்தனர். இறைவர் கோயில்களிலெல்லாம் உலகுவாழப் பூசை புரிவித்தனர். இவ்வாறு உம்பர் மகிழ நல் அரசாட்சி புரிந்திருந்து உமையொருபாகர் திருவடி சேர்ந்தனர்.

கூற்றுவ நாயனார் புராணம்

குன்றாத புகழாளர் களந்தை வேந்தர்
கூற்றுவனார் மாற்றவர்மண் கொண்டுகூடப்
பொன்றாழு முடிவேண்டப் புலியூர்வாழும்
பூசுரர்கள் கொடாதகலப் புனிதன் ஈந்த
மன்றாடுந் திருவடியே முடியாச் சூடி
மாநிலங்காத்து இறைவனுறை மாடக்கோயில்
சென்றாசை உடன் வணங்கிப் பணிகள் செய்து
திருவருளால் அமருலகஞ் சேர்ந்துளாரே

- திருத்தொண்டர் புராணசாரம்

நுண்பொருள்

முடிசூட்டுதல் அடிசூடுதலுக்கு ஓர் அறிகுறி:

ஆராய்ந்து பார்த்தால் அரசனுக்குரிய இறைமை இறைவனிடமிருந்து வருவதே என்பதில் ஐயமில்லை. ஆதலால் இறைவனது திருவடி சூடியவரே முறைப்படி உலகு ஆளுதற்கு உரியராவர். அடிசூடுதல் அகக்காட்சிக்கு மாத்திரம் புலனாகக்கூடியது. அதனால் அடிசூடுதலுக்கு ஓர் அறிகுறியாகவே முடிசூடுதல் நிகழ்கிறது. அடிசூடுதலில் இறைமையின் இலட்சியம் நிறைவுற்றிருத்தல் வெளிப்படை.

அற்றை நாளில் இரவின் கண் அடியேன் தனக்கு முடியாகப்
பெற்ற பேறு மலர்ப்பாதம் பெறவே வேண்டும் எனப்பரவும்
பற்றுவிடாது துயில்வோர்க்குக் கனவில் பாதமலர் அளிக்க
உற்ற அருளால் அவைதாங்கி உலகமெல்லாம் தனிபுரந்தார். - பெரியபுராணம்.

கூற்றுவநாயனார் குருபூசைநாள் : ஆடிதிருவாதிரை

40. பொய்யடிமையில்லாத புலவர் புராணம்

"பொய்யடிமை இல்லாத புலவர்க்கும் அடியேன்"
- திருத்தொண்டத் தொகை

"தரணியில் பொய்மையிலாத் தமிழ்ச்சங்க மதிற்கபிலர்
பரணர் நக்கீரர் முதல்நாற் பத்தொன்பது பல்புலவோர்
அருள்நமக்கீயுந் திருவாலவாய் அரன் சேவடிக்கே
பொருளமைத்து இன்பக் கவிபலபாடும் புலவர்களே"
- திருத்தொண்டர் திருவந்தாதி

மதுரைத் திருவாலவாயில் நிலைபெற்ற தமிழ்ச்சங்கத்திலிருந்து திருவாலவாயரன் சேவடிக்கே பொருளமைத்து அகப்பொருட் செய்யுட்களைப் பாடிய சங்கப் புலவர்களாகிய கபிலர், பரணர், நக்கீரர் முதலிய நாற்பத்தொன்பது புலவர்களும் அவர்களைப் போன்று பொய்ப்பொருட்கு அடிமைப்படாது மெய்ப்பொருளாகிய இறைவனுக்கே அடித்தொண்டு செய்யும் இயல்புடைய புலவர்கள் பலரும் பொய்யடிமை இல்லாத புலவர் எனப் போற்றப்பெற்றனர்.

திருத்தொண்டர் புராணசாரம்

பொய்யறியாக் கபிலரொடு பரணராதிப்புலவோர் பொற்பார் கலைகள் பொருந்த ஓதிச் செய்யுளிடை வளர்ஆசுமதுரம் நல்ல சித்திரம் வித்தாரம் எனத் தெரிக்குஞ் செம்மை மெய்யுடைய தொடைகளெல்லாம் மன்றுள் ஆடல் மேவிய கோன் இருதாளில் விரவச்சாத்திக் கையுடையுஞ் சலிமினராய் அருளால் மேலைக் கருதரிய அமருலகங் கைக்கொண்டாரே.

நுண் பொருள்

தம் நுண்மாண் நுழைபுலத்தால் மெய்ப்பொருட்காட்சி பெற்ற திறவோர் நாக்கொண்டு மானிடம்பாடாது தாம்கண்ட மெய்ப்பொருட்காட்சியையே பாடுவர். பதினோராம் திருமுறையிலுள்ள அருட்பாக்கள் சிலவற்றைப் பாடிய கபிலர், பரணர், நக்கீரர் ஆதியசான்றோர் அத்தகையர்.

செய்யுள் நிகழ் சொற்றெளிவும், செவ்விய நூல் பல நோக்கும்
மெய்யுணர்வின் பயன்இதுவே எனத் துணிந்து விளங்கிஒளிர்
மையணியும் கண்டத்தார் மலரடிக்கே ஆளானார்
பொய்யடிமை யில்லாத புலவரெனப் புகழ் மிக்கார். - பெரிய புராணம்.

41. புகழ்ச்சோழ நாயனார்

"பொழிற் கருவூர்த் துஞ்சிய புகழ்ச் சோழற்கடியேன்"
- திருத்தொண்டத் தொகை

"புலமன்னிய மன்னைச் சிங்களநாடு பொடிபடுத்த
குலமன்னிய புகழ்க் கோகனநாதன் குலமுதலோன்
நல மன்னிய புகழ்ச் சோழனது என்பர் நகு சுடர் வாள்
வல மன்னிய எறிபத்தனுக்கு ஈந்ததொர் வண்புகழே"
- திருத்தொண்டர் திருவந்தாதி -

சோழநாட்டு உறையூர்த் தலைநகரில் இருந்து அரசாண்ட மன்னர் புகழ்ச்சோழர். அவர் தமது தோள்வலிமையினால் உலக மன்னர்கள் தமது பணி கேட்டுத் தமது ஆணையின் கீழ் அடங்கி நடக்கச் செங்கோல் ஆட்சி புரிந்தனர். சிவாலயங்களில் எல்லாம் பூசனை விளங்கச் செய்வித்தும், அடியார்க்கு வேண்டுவன குறிப்பறிந்து கொடுத்தும் திருநீற்று நெறிவிளங்கச் செய்தார். இவ்வாறு உறையூரிலிருந்து செங்கோல் செலுத்திய புகழ்ச்சோழர் கொங்கரும், குடபுலமன்னவர்களும் ஆகிய சிற்றரசர்களிடம் திறைபெறற் பொருட்டுத் தமது மரபின் தலைநகராகிய கருவூரை அடைந்தார். கருவூர் ஆனிலைக்கோயிலில் வழிபட்டு அத்தாணி மண்டபத்தில் அரச கொலு வீற்றிருந்து அம்மன்னர்கள் கொணர்ந்த திறை கண்டிருந்தனர். திறை கொணர்ந்து பணிந்த மன்னர்களுக்குச் செயலுரிமைத் தொழில் அருளினர். அவ்வாறு திறை கொணரா மன்னர் உளராகில் தெரிந்துரைப்பீர் என்று அமைச்சர்க்குக் கட்டளை இட்டனர்.

இவ்வாறு கருவூரில் உறைந்த நாளில், சிவகாமி ஆண்டார் என்னும் அடியார் சிவனுக்குச் சாத்தக் கொணர்ந்த பூவைப் பறித்துச் சிந்தியதனால் பட்டத்துயானையினையும், பாகரையும் எறிந்து கொன்ற எறிபத்தரிடம் யானையால் நேர்ந்த சிவ அபராதத்திற்குத் தீர்வாகத் தம்மையும் கொல்லவேண்டும் என்று தம் உடைவாளினை நீட்டித் திருத்தொண்டில் தலை நின்றார்.

இந்நாள்களில் அளந்த திறை கொணராது முரண்பட்ட அதிகன் என்பவன் அணித்தாகிய மலைஅரணில் உள்ளான் என்று அமைச்சர் அரசர்க்கு அறிவித்தனர். படைஎழுந்து அவ்வரணினை அழித்து வரும்படி அமைச்சர்க்கு அரசர் கட்டளை இட்டனர். அமைச்சர்களும் அவ்வாறே சேனையுடன் சென்று அவ்வலிய அரணை முற்றுகை இட்டு அழித்து அதிகனது சேனையினையும் வென்றனர். அதிகன் தப்பிக் கானகத்துள் ஓடிவிட்டான். அமைச்சர்கள் வெற்றியுடனே அங்கு நின்றும் யானை, குதிரை முதலியவற்றையும், போர்ச்சின்னமாகத் துணிபட்ட தலைக்குவியல்களையும் அரசன் முன் கொண்டு வந்தனர். அவ்வாறு கொண்டு வந்த தலைக் குவியல்களுள், அரசர், ஒரு தலையிற் புன்சடைகண்டனர்; கண்டு நடுங்கிக் கண்ணீர் வார்ந்து தாம் திருநீற்று நெறி காத்து ஆண்டது சால அழகிது! என்று தம்மையே இகழ்ந்து கொண்டனர்; ஒன்று செய்யத் துணிந்து தமது குமரனுக்கு முடிசூட்டும் படி அமைச்சருக்குக் கட்டளை இட்டார். தமக்கு நேர்ந்த சிவ அபராதமாகிய பழிக்குத் தீர்வு தாமே வகுப்பாராகிச் செந்தீமுன் வளர்ப்பித்தனர்; பொய்ம்மாற்றும் திருநீற்றுக் கோலம் புனைந்தனர்; அச்சடைத்தலையினைப் பொற்கலத்தில் தலைமேல் ஏந்திக் கொண்டு, எரியை வலம்வந்து திருவைந்தெழுத்தினை ஓதிக்கொண்டு மகிழ்சியுடன் எரியினுட் புகுந்தருளி இறைவரது கருணைத் திருவடி நிழற்கீழ் நீங்காது அமர்ந்திருந்தனர்.

திருத்தொண்டர் புராணசாரம்

பொழின்மருவுங் கருவூர்வாழ்புகழார் சோழர்போதகம்போல் என்னுமிரும் போக்கும் என்றே அழலவிர்வாள் கொடுத்தபிரான் அதிகமான்மேல் அடர்ந்தபெரும் படைஏவ அவர்
– கொண்டேய்ந்த
தழல் விழிகொள் தலைகாண்பார் கண்டதோர் புன்சடைத்தலையை முடித்தலையால்
– தாழ்ந்து வாங்கிக்
கழல்பரவி அதுசிரத்தின் ஏந்திவாய்ந்த கனல்மூழ்கி இறைவனடி கைக்கொண்டாரே.

நுண்பொருள்

1. சிவநெறிபுரக்கும் அரசர் சிவனடியார்க்கு நேரும் துயர்பொறார்
2. இறைபணியாக முறைசெய்யும் மன்னர், இறையடியார்க்குத் தக்கன செய்வதன்றித் தகாதன செய்யார்.

3. திருப்பள்ளித்தாமப் பணிசெய்வோர், சிவன்தாள் சேரும் நெறிகொண்ட சடைதாங்கும் திருமுடியார் என்று இத்திறத்தினரான சிவனடியார்க்குத் தம்பரிசனத்தால் கேடு நேர்ந்தவழி அப்பழி தன் பழியே எனக் கொண்டு உயிர்வாழத்தரியார் பெரியர்.

கண்ட சடைச் சிரத்தினை ஓர் கனகமணிக் கலத்தேந்திக்
கொண்டு திருமுடி தாங்கிக் குலவும்ளி வலங்கொள்வார்.
அண்டர்பிரான் திருநாமத் தஞ்செழுத்தும் எடுத்தோதி
மண்டு தழற் பிழம்பினிடை மகிழ்ந்தருளி உள்புக்கார்.

- பெரியபுராணம்

புகழ்ச்சோழ நாயனார் குருபூசைநாள் :- ஆடி கார்த்திகை

42. நரசிங்கமுனையரைய நாயனார்

மெய்யடியான் நரசிங்க முனையரையற் கடியேன்
- திருத்தொண்டத் தொகை

புகழும் படியெம் பரமே தவர்க்குநற் பொன்னிடுவோன்
இகழும் படியோர் தவன்மட வார்புனை கோல மெங்கு
நிகழும் படிகண்டு அவனுக்கிரட்டி பொன்னிட்டவன் நீள்
திகழும் முடி நரசிங்க முனையரை சன்திறமே
- திருத்தொண்டர் திருவந்தாதி

தேடாத வளத்திற் சிறந்தது திருமுனைப்பாடி நாடு. இந்நாட்டினை அரசுபுரிந்த முனையரையர் என்னும் குறுநில மன்னர் மரபிலே வந்தவர் நரசிங்கமுனையரையர். அவர் பகைவரை வென்று தீதகலச் செய்தனர்; சிவனடியார்களின் திருவடியடைதலே அரும்பேறென்று அடியாரைப் பணிந்தார். சிவன்கோயிலின் சிவச் செல்வங்களைப் பெருக்கிக் காத்தலைத் தம் உயிரினும் சிறப்பாகச் செய்தனர். சிவநெறித் திருத்தொண்டுகளைக் கனவிலும் மறவாமல் கடமையாகச் செய்து வந்தார்.

திருவாதிரை நாடொறும் சிவபெருமானுக்கு நியமமாக விசேட பூசை செய்து, அன்று வந்தணையும் அடியார்கள் ஒவ்வொருவருக்கும் நூறு பொன் குறையாமல் கொடுத்துத் திருவமுது அளித்து வழிபட்டு வந்தார். ஒரு திருவாதிரை நாளில் அடியார்களுடனே "மான நிலையழிதன்மை வரும் காமக்குறி மலர்ந்த ஊனநிகழ் மேனியராகிய" ஒருவரும், திருநீறணிந்து வந்தனர். அவர் நிலையினைக் கண்டு அருகிலிருந்தவர்கள் இகழ்ந்து அருவருத்து ஒதுங்கினர்.

நரசிங்கர் அதுகண்டு அவரை அணுகி வணங்கிப் பேணினார். நல்லொழுக்கம் இல்லாதவர்களாயினும் திருநீறு அணிந்தவர்களை உலகம் இகழ்ந்து நரகிலடையாமல் உய்யவேண்டுமென உளம்கொண்டு அவரைத் தொழுது அவருக்கு இரட்டிப்பொன் (இருநூறு பொன்) கொடுத்து உபசரித்து விடை கொடுத்தருளினார்.

நரசிங்கமுனையரைய நாயனார்

நரசிங்கமுனையரையர் ஒரு நாள் வீதிவலம் வரும் பொழுது வீதியில் சிறு தேருருட்டி விளையாடும் நம்பியாரூரரைக் கண்டார். அவர் தம் அழகில் பெரிதும் ஈடுபட்ட அரசர் சடையனாரிடம் சென்று அவரிடம் தாம் கொண்ட நட்புரிமையால் நம்பியை வளர்த்தற்குத் தருமாறு வேண்டினார். சடையனாரும் அவர் வேண்டுதலுக்கு இணங்கி நம்பியை அளித்தார். நம்பியைப் பெருஞ் செல்வமெனக் கொண்ட நரசிங்கமுனையரையர் அவரை அரச திருவெலாம் பொருந்த திருமணப் பருவம் அடையும்வரை வளர்த்தார். இவ்வாறு அன்பர் பணிசெய்து நம்பியை வளர்க்கும் பேறு பெற்றமையாலே இறைவரது திருவடி நிழலில் சேர்ந்து மீளாத நிலை பெற்றனர்.

திருத்தொண்டர் புராணசாரம்

நாடுபுகழ் முனைப்பாடிநாடுமேய நரசிங்க முனையர்புவி நயந்து மன்றுள்
ஆடுமவர் ஆதிரைநாள் அடியார்க்கு அம்பொன் அமுதளிப்பார் ஒளிவெண்ணீறு
– அணிந்து தூர்த்த
வேடமுடையவர்க்கு இரட்டிச் செம்பொன் ஈந்து விடுத்தழகார் ஆலயங்கள்
– விளங்கச் செய்து
தோடலர் தாருடைய பிரான் அருளை ஆளத்தோன்றினார் எனை அருளின்
– ஊன்றினாரே

நுண் பொருள்

1. சீலமிலாதவரெனினும் சிவனடியாரை இகழ்தல் தகாது. அத்தகையோர்க்கு இரட்டிப்பான உபசாரம் செய்தல் உலகோர்க்கு ஒரு வழிகாட்டுதலாக அமையும்.
2. சிவபெருமானுக்குத் திருவாதிரை நாளில் சிறப்பொடு பூசனை செய்தலும் அன்றைய நாளில் அடியார்க்குத் திருவமுதளித்துப் பொன் பொருள் ஆகியன வழங்கலும் சைவ ஒழுக்கங்கள்.
3. சுந்தரநம்பியைக் காதலால் மனையிடை வைத்து வளர்த்தல் பெரும் பாக்கியம்

சீலமிலரே யெனினும் திருநீறு சேர்ந்தாரை
ஞாலம் இகழ்ந்து அருநரக நண்ணாமல் எண்ணுவார்
பாலணைந்தார் தமக்கு அளித்தபடி இரட்டிப்பொன் கொடுத்து
மேலவரைத் தொழுது இனியமொழி விளம்பி விடைகொடுத்தார்.
– பெரிய புராணம்

நரசிங்கமுனையரைய குருபூசைநாள் :- புரட்டாதிசதயம்

43. அதிபத்தநாயனார்.

"விரிதிரை சூழ் கடல்நாகை அதிபத்தர்க்கடியேன்"
- திருத்தொண்டத்தொகை

திறமமர் மீன்படுக்கும் பொழுது ஆங்கொருமீன் சிவற்கென்று
உறஅமர் மாகடற்கே விடுவோன் ஒருநாள் கனக
நிறமமர் மீன்பட நின்மலர்க் கென்றுவிட்டோன் கமலம்
புறமமர் நாகை அதிபத்தனாகிய பொய்யிலியே.
- திருத்தொண்டர் திருவந்தாதி

சோழநாட்டின் வளம்மிகுந்ததோர் துறைமுகப்பட்டினம் நாகபட்டினம். அந்நாகபட்டினத்து நுழைபாடியிலே பரதவர் வாழ்ந்தனர். அப்பரதவர்-களுக்குத் தலைவரான ஒருபெரும் நல்லவர் இருந்தார். அவர் பெயர் அதிபத்தர். அவர் சிவபெருமானிடத்து மிகுந்த பத்தியுடையவர். நாள்தோறும் பிடிபடும் மீன்களுள் தலையான ஒரு மீனை 'இது நட்டமாடிய நம்பர்க்கு' என்று கடலில் விடுவது அவர்தம் வழக்கம். ஒரு நாளில் ஒரு மீனே பிடிபடினும் அம்மீனைச் சிவனடிக்கென்று விடுவதை அவர் விடாது செய்து வந்தார். இப்படி அநேகநாள்கள் ஒரு மீனே பிடிபட அவரை வறுமை பிடித்தது. சுற்றத்தவர் உணவின்றி வருந்தினர். அப்பொழுதும் தாம் வருந்தாது தம்பணியினை மகிழ்வொடு செய்து வந்தார். இப்படியே தொடர்ந்த நாளெல்லாம் நிகழ அவரும் பசியால் தளர்ந்தார். ஆயினும் தமது தலைமீன் அளிக்கும் சீலத்தில் தவறாதிருந்தார். இத்தகைய அதிபத்தரின் தலையாய அன்பெனும் ஆரமுதம் அருந்தத் திருவுளம் பற்றினர் ஆலமுண்ட பெருமான்.

ஒரு நாள் ஒரு மீனுக்குப்பதிலாக மீனுறுப்பெல்லாம் அமைந்த அற்புதப் படைப்பொன்று பிடிபட்டது. அது மணிகள் பதித்த பொன்மீன். அம்மீன் கடலில் உதிக்கும் சூரியன்போல் கரையில் இழுத்த வலையிலே ஒளிர்ந்தது. வலைஞர் அதிசயமிகுதியோடு "மீன்ஒன்று பிடித்தோம்" என்று அதிபத்தரிடம் கூறினர். அதிபத்தர் உலகம் யாவும் பெறும் என்று விலை மதிக்கத்தக்க அம்மீனைப் பார்த்து மகிழ்ந்தார்.

அதிபத்த நாயனார்

"இப்பொன்மீன் என்னை ஆளுடைய நாயகனின் பொற்கழல் சேர்க" என்று அலைமீது விட்டார். பொருளை முதலெனக்கொள்ளும் இவ்வுலகிலே பொருட்பற்றை முற்றும் துறந்த அதிபத்தரின் முன் இறைவன் ஆகாயத்திலே தோன்றினார். அதிபத்தர் சிரங்குவித்து வணங்கிநின்றார். அவரைச் சிவலோகத்திற் சிறப்புற்றிருக்கும் வண்ணம் தலையளித்தாண்டனர் சிவபெருமான்.

நுண்பொருள்

1. பத்தர்கள் எத்தொழிலைச் செய்யினும், ஏதவத்தைப்படினும், தாம் கைக்கொண்ட தொண்டினை விடார்.
3. முதல் உழைப்பு முதல்வர்க்கு உரித்தென்பது ஓர் முதன்மையான சீலம்.
3. அதிபத்தரானோர்க்குப் பொருட்பற்றைத் துறத்தல் அரிதன்று.

திருத்தொண்டர் புராணசாரம்

அலையாரும் கடல் நாகை நகருள் வாழும்
அதிபத்தர் பரதவர்கள் அதிபர் வேலை
வலைவாரி வரும் மீனில் தலைமீன் ஈசன்
வார்கழற்கே என்றுவிடும் மரபார்பன்னாள்
தலையான ஒரு மீனே சார நாளும்
தந்தொழிலால் விடுத்து மிடிசாரச் செம்பொன்
நிலையாரும் மணி நயந்த மீனொன்று எய்த
நீத்தருளால் இறைவனடி சேர்ந்துளாரே.

அகிலலோகமும் பொருள்முதற்றாகும் எனும் அளவில்
புகலும் அப்பெரும் பற்றினைப் புரையற எறிந்த
இகலின் மெய்த்திருத் தொண்டர்முன் இறைவர்தாம் விடைமேல்
முகில்விசும்பிடை அணைந்தனர் பொழிந்தனர் முகைப்பூ

– புராணம்

அதிபத்தநாயனார் குருபூசை ஆவணி ஆயிலியம்

44. கலிக்கம்பநாயனார் புராணம்

"கைதடிந்த வரிசிலையான் கலிக்கம்பன் (கலியன் கழற்சத்தி
வரிஞ்சையர்கோன்) அடியார்க்கு மடியேன்"

- திருத்தொண்டத் தொகை

பொய்யைக் கடிந்துநம் புண்ணியர்க்கு ஆட்பட்டுத்தன்னடியான்
சைவத்திருவுரு வாய்வரத்தானவன் தாள் கழுவ
வையத்தவர் முன்பு வெள்கிநீர் வாராவிடமனைவி
கையைத்தடிந்தவன் பெண்ணா கடத்துக் கலிக்கம்பனே.

- திருத்தொண்டர் திருவந்தாதி

நடுநாட்டிலே வளங்கள் சிறந்த பழம்பதி திருப்பெண்ணாகடம் என்பது. அவ்வூரில் வணிகர் குலத்தில் அவதரித்தவர் கலிக்கம்ப நாயனார். அவர் சிவனடிப்பற்றாகிய அன்புடனே வளர்ந்து அப்பதியில் தூங்கானை மாடத் திருக்கோயிலில் எழுந்தருளிய சிவக்கொழுந்து நாதருடைய திருத்தொண்டினையே பற்றாகப் பற்றிப் பணிசெய்து வந்தனர். அவர் வேறு ஒரு பற்றுமில்லாதவர். சிவன் அடியார்களுக்கு விதிப்படி இனிய திருவமுதினை ஊட்டி வேண்டுவனவற்றை இன்பம் பொருந்த அளித்து வந்தார்.

ஒருநாள் முன்போலத் திருவமுது உண்ணவந்த அடியார்க-ளின் திருவடிகளை மனைவியார் நீர் வார்க்கத் தாம் விளக்கிக் கொண்டிருந்தார். அப்பொழுது முன்னர் தம் ஏவலாளராய் இருந்து ஏவலை வெறுத்துச் சென்ற ஒருவர், சிவனடியாரது திருவேடத்துடன் வந்தார். அவரது திருவடியினையும் விளக்குதற்கு, நாயனார் அவரது அடியினைப் பிடித்தார். அப்போது மனைவியார், "இவர் முன்பு ஏவல் செய்யாதகன்றவர் போலும்" என்று தயங்கியதால் நீர்வார்க்க முட்டுப்பாடு நிகழ்ந்தது. நாயனார் மனைவியாரைப் பார்த்தார்; அவரது கருத்தை அறிந்தார்; நீர்க்கரகத்தை வாங்கிக்கொண்டு, அம்மனைவியாரது கையை வாளினால் வெட்டினார்; அடியார் திருவடியைத் தாமே விளக்கி அமுதூட்டுதற்கு வேண்டிய ஏனைய செயல்களை எல்லாம் தாமே

செய்து சலனமில்லா சிந்தையுடன் அவர்களுக்குத் திருவமுதூட்டினார். இவ்வாறு பல நாள் சிவதொண்டாற்றித் திருவடிநீழலை அடைந்தார்.

கடவுளருட் கண்ணார்கள் பமிலுந் தொல்லைக்
கடந்தை நகர் வணிகர் கலிக்கம்பர் அன்பர்க்கு
அடிமையுற அமுதளிப்பார் அடியான் நீங்கி
அருளூருவாய் அன்பருடன் அணைய ஏந்தி
இடைமிலவர் அடிமிணையும் விளக்காநிற்ப
இகழ் மனைவி கரகமலி இரண்டுகையும்
படிமில் விழ எறிந்து அவள் செய் பணியுந்தாமே
பரிந்துபுரிந்து அரன் அருளே பற்றினாரே.

– திருத்தொண்டர் புராணசாரம்

நுண்பொருள்

சிவனடியார் பெருமைக்கு அவர்தம் முன்னை நிலை இழுக்கன்று. அவர்தம் முன்னை நிலை குறித்து அவர்க்குப் பணிசெய்ய நாணுபவரைத் தண்டித்தல் தக்கதேயாம்.

வெறித்த கொன்றை முடியார்தம் அடியார் இவர்முன் மேவுநிலை
குறித்து வெள்கி நீர்வாரா தொழிந்தாள் என்று மனங்கொண்டு
மறித்து நோக்கார் வடிவாளை வாங்கிக் கரகம் வாங்கிக் கை
தறித்துக் கரக நீரெடுத்துத் தாமே அவர் தாள் விளக்கினார்.

– பெரியபுராணம்

கலிக்கம்பர் குருபூசைநாள் :- தை இரேவதி

45. கலிய நாயனார்.

"(கைதடிந்த வரிசிலையான் கலிக்கம்பன்) கலியன்
கழற்சத்தி வரிஞ்சையர்கோ னடியார்க்கு மடியேன்"

- திருத்தொண்டத் தொகை

"கம்பக் கரிக்குஞ் சிலந்திக்கும் நல்கிய கண்ணுதலோன்
உம்பர்க்கு நாதற்கு ஒளிவிளக்கேற்றற் குடலிலனாய்க்
கும்பத் தயிலம் விற்றுஞ் செக்குழன்றுங் கொள்கூலியினால்
நம்பற்கெரித்த கலியொற்றி மாநகர்ச் சக்கிரியே"

- திருத்தொண்டர் திருவந்தாதி

தொண்டை நாட்டில் திருவொற்றியூரிலே செக்குத் தொழிலை உடைய வணிகர் மரபிலே தோன்றியவர் கலியநாயனார். செல்வமுடைய இவர் சிவபெருமானுக்கு உரிமைத் திருத்தொண்டில் ஈடுபட்டுத் திருவொற்றியூர்த் திருக்கோயிலில் உள்ளும் புறமும், அல்லும் பகலும் திருவிளக்கிடும் திருத்தொண்டினைச் செய்து வந்தார். இவரது உண்மைத் தொண்டின் பெருமையைப் புலப்படுத்தத் திருவுளங்கொண்ட சிவபெருமான் திருவருளால் இவரது செல்வம் அனைத்தும் இவரைப் பிணித்த இருவினை போற் குறைய வறுமை நிலை உண்டாயிற்று. அந்நிலையில் தமது மரபிலுள்ளார் தரும் எண்ணெயை வாங்கி விற்று அதனால் கிடைத்த பொருளால் தாம் செய்யும் திருவிளக்குப் பணியை வழுவாது செய்தார். பின்பு எண்ணெய் தருவார் கொடாமையால் கூலிக்குச் செக்காடி அக்கூலி கொண்டு விளக்கெரித்தார். வேலையாட்கள் பெருகித் தம்மைக் கூலிக்கு அமர்த்திக்கொள்வார் இல்லாமையால் வீடு முதலிய பொருட்களை விற்று விளக்கெரித்தார். முடிவில் தம் மனைவியாரை விற்பதற்கு நகரெங்கும் விலைகூறி வாங்குவாரில்லாமையால் மனந்தளர்ந்தார். திருவிளக்கேற்றும் வேளையில் ஒற்றியூர்த் திருக்கோயிலை அடைந்து "திருவிளக்குப் பணி தடைப்படின் இறந்துபடுவேன்" எனத் துணிந்து திரியிட்ட அகல்களைப் பரப்பி வைத்து எண்ணெய்க்கு ஈடாகத் தமது உதிரத்தையே நிறைத்தற்கு கருவி கொண்டு தமது கழுத்தை அரிந்தார். அப்பொழுது ஒற்றியூர்ப்பெருமானது

அருட்கரம், நாயனாரது அரியும் கையைத்தடுத்து நிறுத்தியது. அருட்கடலாகிய சிவபெருமான் விடைமீது தோன்றியருள, உடம்பின் ஊறு நீங்கித் தலைமேற் கைகுவித்து வணங்கி நின்றார். சிவபெருமான் அவரைப் பொற்புடைய சிவபுரியிற் பொலிந்திருக்க அருள் புரிந்தார்.

திருத்தொண்டர் புராணசாரம்

தடமதில் சூழ் ஒற்றியூர் நகருள் வாழும்
சக்கரப்பாடியர் குல மெய்த்தவமாய் உள்ளார்
படர் புகழார் கலியனார் நலியுங்கூற்றைப்
பாய்ந்தவர்க்கு விளக் கெரிக்கும் பரிவால் மற்றோர்
உடலிலராய்ச் செக்குழல்வார்க்கு அதுவும் நேராது
உயர் மனைவியைக் கொள்வார் உளரும்இன்றி
மிடறுதிரம் அகல் நிறைய அரிய நாதன்
வியன் கை கொடு பிடிப்ப அருள் மேவினாரே

நுண்பொருள்

செல்வப்பயன் திருவிளக்கிடல்
உள்ளவற்றை இழந்தபோதும், உழன்று பணியாற்றும் நிலைவந்தபோதும், திருவிளக்குப்பணியை, முட்டின்றிச் செய்தல் முறை.

திருவிளக்குப் பணி மாளில்தான் மாளத் துணிதல் தகைசான்ற பெரியோரின் இயல்பு.

பணி கொள்ளும் படம்பக்க நாயகர்தம் கோயிலினுள்
அணி கொள்ளும் திருவிளக்குப் பணிமாறும் அமையத்தில்
மணி வண்ணச் சுடர்விளக்கு மாளில்யான் மாள்வன் எனத்
துணி வுள்ளம் கொள நினைந்து அவ்வினை முடிக்கத் தொடங்குவார்.

– பெரிய புராணம்

கலியநாயனார் குருபூசைநாள் : ஆடி கேட்டை

46. சத்திநாயனார்

"(கைதடிந்த வரிசிலையான் கலிக்கம்பன் கலியன்)
கழற்சத்தி வரிஞ்சையர் கோ னடியார்க்கு மடியேன்"
- திருத்தொண்டத் தொகை

"கிரிவில் லவர் தம்மடியரைத் தம்முன்பு கீழ்மை சொன்ன
திருவில் லவரைஅந் நாவரி வோன்திருந்தாரை வெல்லும்
வரிவில்லவன், வயற் செங்கழுநீரின் மருவு தென்றல்
தெருவில் விரை கமழுந்தென் வரிஞ்சைத் திகழ் சத்தியே"
- திருத்தொண்டர் திருவந்தாதி

சோழநாட்டில் வரிஞ்சை ஊரில் வாய்மை வேளாண்குலம் விளங்க அவதரித்தவர் சத்தி நாயனார். அவர் சிவனுக்கு ஆட்செய்யும் திறத்தினர். யாவரேனும் தம் முன்பு சிவனடியார்களை இகழ்ந்துரைப்பாராயின் அவர்களது நாவினை அரியும் வலுவுடையராதலால் அவர் சத்தியார் எனப் பெயர் பெற்றார். சத்தியார் இகழ்வோர் நாவை குறட்டாற் பற்றி இழுத்து கத்தியால் அரிந்து தூய்மை செய்வார். அன்பினாற்செய்யும் இந்த அரிய ஆண்மைத் திருப்பணியைப் பலகாலம் வீரத்தாற் செய்திருந்து சிவன் திருவடி சேர்ந்தனர்.

திருத்தொண்டர் புராணசாரம்

விரிதருகா விரிநாட்டு வரிஞ்சியூர் வேளாளர் சத்தியார் விமலர்பாதத்
துரியவர்களடி பரவுமொருமையார் நா ஓவாமே ஐந்தெழுத்து முரைக்கும் நீரார்
இருளின் மிடறுடைய பிரானடியார் தம்மை இகழ்வார் நாத்தண்டாயத் திடுக்கி வாங்கி
அரியுமது திருத்தொழிலா வுடையார் மன்று ளாடிய சேவடி நீழலடைந்துளாரே.

நுண்பொருள்

சிவநிந்தை சொல்லும் நாவினை அரிதல் சிவபுண்ணியமே.

அத்தராகிய அங்கணர் அன்பரை
இத்தலத்தில் இகழ்ந்து இயம்பும் உரை
வைத்த நாவை வலித்து அரி சத்தியால்
சத்தியார் எனும் நாமம் தரித்துளார்.
- பெரிய புராணம்

சத்தியார் குருபூசைநாள் : ஐப்பசிபூசம்

47. ஐயடிகள் காடவர்கோன்

"ஐயடிகள் காடவர்கோன் அடியார்க்கும் அடியேன்"

- திருத்தொண்டத் தொகை

"சத்தித் தடக்கைக் குமரன் நல் தாதைதன் தானமெல்லாம்
முத்திப்பதமொரோர் வெண்பா மொழிந்து முடியரசாள்
அத்திற்கு மும்மை நன்றால்அரற் காய் ஐயமேற்றல் என்னும்
பத்திக்கடல் ஐயடிகளாகின்ற நம் பல்லவனே"

- திருத்தொண்டர் திருவந்தாதி

உலகிற் புகழ்நிலவ அரசுபுரிந்த பல்லவர் குலத்திலே ஐயடிகள்-காடவர்கோன் தோன்றினார். நாட்டில் வறுமையும், பகையும் தோன்றிக் குடிமக்களை வருத்தாவண்ணம், சிவனடித் தொண்டு பூண்டு ஒழுகும் நீதிநெறியினை மேற்கொண்டு செவ்விய முறையில் ஆட்சி புரிந்தார். எங்கும் திருவும், செல்வமும், பொலிவுடன் திகழவும், எல்லா உயிர்க-ளும் பெருமைக்குக் காரணமாகிய நற்பண்புகளுடன் இன்புற்று வாழவும், அறநெறியும் அருள்நெறியுமாகிய சைவத்திருநெறியுடன் அருமறை-யின் துறைகள் விளக்கமுறவும் அரசியலை நிகழ்த்துவாராயினர். மன்னரெல்லாம் தம் ஆணைவழி நின்று பணிபுரியவும் வடநூல், தென்தமிழ் முதலாகிய கலைத்தொண்டு நிகழவும் குடிமக்களை நன்முறையில் பேணிக்காத்து வந்தார். இவ்வேந்தர்பிரானார் ஆட்சிக்கடமை தாம் மேற்கொண்டுள்ள சிவதொண்டிற்குத் தடையாய்த் துன்பம் விளைப்பதெனக் கருதி அரசுரிமையைத் தம் அருமைப்பு-தல்வனிடம் ஒப்படைத்துவிட்டுச் சிவநெறித்திருத் தொண்டினையே விரும்பி மேற்கொள்வாராயினர். தொண்டுரிமை பூண்ட இவ்வேந்தர் அண்டர் பிரானாகிய சிவபெருமான் அமர்ந்தருளுந் திருக்கோயில்களைக் கண்டு வணங்கித் திருத்தொண்டு செய்து ஒவ்வொரு திருத்தலத்தினையும் ஒவ்வொரு வெண்பாவினாற் பாடிப்போற்றும் பேரார்வம் உடையவராய்ப் பெரும்பற்றப் புலியூராகிய தில்லையை அடைந்தார்.திருச்சிற்றம்பலமாகிய ஞானவெளியிலே அருட்கூத்தியற்றும் கூத்தப்பெருமானாரது திருக்கூத்-தினை நேரே கண்டு மகிழ்ந்தார். பேராத காதலால் தாம்பாடிய செந்-தமிழ் வெண்பாவாகிய மென்மலரால் அப்பெருமானை அர்ச்சித்துப் போற்றினார். தில்லைப் பெருமானது அருள் பெற்ற ஐயடிகள்,

இறைவன் கோயில்கொண்டு அருளிய ஏனைத்திருத்தலங்கள் பல வற்றையும் பணிந்து திருத்தொண்டு செய்து அத்திருத்தலங்களை எவ்வுலகத்தவரும் புகழ்ந்தேத்தும் இனிமை வாய்ந்த ஒவ்வொரு தமிழ் வெண்பாவினாற் பாடிப் போற்றினார். இவ்வாறு செந்தமிழினால் சிவ-நெறி வளர்த்த ஐயடிகள் காடவர்கோன் நாயனார், அடியார் பலரும் இன்புறத் தமக்கு இயைந்த திருப்பணிகள் பலவற்றையும் நெடுங்காலம் செய்திருந்து பின்பு சிவலோகத்து இறைபணிபுரியும் அடியார்களுடன் கூடிப் பரமர் திருவடி நிழற்கீழ் அமர்ந்து ஈறிலாப் பேரின்ப வாழ்வினைப் பெற்றார்.

திருத்தொண்டர் புராணசாரம்

வையநிகழ் பல்லவர் தங்குலத்து வந்த மாமணி மாநில முழுதும் மகிழ்ந்து
– காக்கும்
ஐயடிகள் காடவர்கோன் அருளால் நூல்கள் அறிந்து அரசு புரிந்திடுதல்
– அமையும் என்றே
பொய்யனைய உடல்வாழ்வு கழியுமாறு பொருந்தியிடும் புகழ்வெண்பா புலியூர்மேவுஞ்
செய்யதிருவடி முதலாப் பதிகள் தோறும் செப்பினார் என்வினைகள் தப்பினாரே

நுண் பொருள்

அரசவாழ்விலும் அடியராய்வாழ்தல் மேலானது
திருத்தல தரிசனம் திருவடிப்பேறு நல்கும்.

ஓடுகின்ற நீர்மை ஒழிதலுமே உற்றாரும்
கோடுகின்றார் மூப்பும் குறுகிற்று - நாடுகின்ற
நல்லச் சிற்றம்பலமே நண்ணாமுன் நன் நெஞ்சே
தில்லைச் சிற்றம்பலமே சேர்

– பதினோராம் திருமுறை

பெருத்தெழு காதலில் வணங்கிப் பெரும்பற்றத் தண்புலியூர்த்
திருச்சிற்றம்பலத்து ஆடல் புரிந்தருளும் செய்யசடை
நிருத்தனார் திருக்கூத்து நோந்திறைஞ்சி நெடுந்தகையார்
விருப்பினுடன் செந்தமிழின் வெண்பா மென்மலர் புனைந்தார்.

– பெரிய புராணம்

ஐயடிகள் காடவர்கோன் குருபூசைநாள் :- ஐப்பசி மூலம்

48. கணம்புல்ல நாயனார் புராணம்

"கறைக்கண்டன் கழலடியே காப்புக் கொண்டிருந்த
கணம்புல்ல நம்பிக்கும் (காரிக்கும்) அடியேன்"

- திருத்தொண்டத்தொகை

நல்நகராய இருக்குவேளூர் தனில் நல்குரவாய்
பொன்னகராய நற்தில்லை புகுந்து புலீச்சரத்து
மன்னவராய அரற்கு நற்புல்லால் விளக்கெரித்தான்
கன்னவில் தோள் எந்தை தந்தை பிரான் எம் கணம்புல்லனே.

- திருத்தொண்டர் திருவந்தாதி

வடவெள்ளாற்றுத் தென்கரையிலே அமைந்த இருக்கு வேளூரிலே அவ்வூர்க் குடிமக்களின் தலைவராய்த் திகழ்ந்தவர் கணம்புல்லர். அவர் சிவபக்தியும் பெருஞ்செல்வமுமுடையவராய் விளங்கினார். "மெய்ப்பொருளாவது திருவடியே" எனும் கொள்கையினரான இவர் செல்வப்பயன் திருவிளக்கெரித்தலே என்று எண்ணி திருவிளக்குப் பணிசெய்து வாயாரப்பாடி வழிபட்டு வந்தார். நெடுநாட்களாக இப்பணி செய்து வந்த நாயனார்க்குத் திருவருளால் வறுமை வந்தெய்தியது. அதனால் ஊரைவிட்டு நீங்கித் தில்லையை அடைந்து தம்வீடு முதலியவற்றை விற்று விளக்கேற்றி வந்தார். அவரிடமிருந்த பொருள் யாவும் ஒழிந்து போகும் நிலை நேர்ந்தது. அவர் பிறரிடம் இரத்தற்கும் நாணினார். தமது உடல் முயற்சியால் அரிந்து கொண்டு வந்த கணம்புல்லினை விலைப்படுத்தி அப்பொருளினால் நெய்பெற்று விளக்கெரித்து வந்தார். அதனால் அவருக்கு கணம்புல்லர் என்று பெயராயிற்று.

ஒருநாள் அவர் கொண்டு வந்த புல் எவ்விடத்தும் விலை போகாதாயிற்று. விளக்கேற்றும் பணி முட்டாதிருத்தற் பொருட்டு அப்புல்லையே மாட்டி விளக்கெரித்தார். ஆனால் அது தாம் நியமமாகவே மேற்கொண்ட யாம அளவு வரை எரிக்கப் போதாதாயிற்று. நாயனார் அன்பினால் எலும்பும் உருக கணம்புல்லைப்போன்ற தமது திருமுடியினையே விளக்காக மாட்டி எரித்தனர்; தலையாய அத்திருவிளக்குப் பணியால் இருவினைத் தொடக்கையும் எரித்தொழித்தார்.

இறைவர் அவருக்கு மங்கலமாம் பெருங்கருணை வைத்தருளினார். அவர் சிவலோகத்தில் இறைஞ்சி இன்பமுடன் அமர்ந்தனர்.

திருத்தொண்டர் புராணசாரம்

இலகு வடவெள்ளாற்றுத் தென்பால் வாழும்
இருக்குவே ளூரதிபர்எழிலார் சென்னிக்
கலைநிலவார் அடிபரவுங்கணம்புல்லர் தில்லைக்
கருது புலீச்சரத்தரற்குக் காதல்தீபம்
நிலைதரத் தாமிட மிடியா லொரு நாட்புல்லால்
நீடுவிளக்கிடவதுவு நேராதாகத்
தலைமமிரில் எரிகொளுவு மளவில் நாதன்
தாவாத வாழ்வருளுந் தன்மையாரே.

நுண் பொருள்

செல்வப்பயன் விளக்கெரித்தல்
மேற்கொண்டபணியை வறுமைக்காலத்தும், தாம் மாளும்நிலை ஏற்படுமிடத்தும் விடாது செய்வது முறை

அன்புறுதி நோக்கிக் குற்றமும் குணமெனக் கொள்ளப்படும்.

முன்பு திருவிளக்கெரிப்பார் முறையாமம் குறையாமல்
மென்புல்லு விளக்கெரிக்கப் போதாமை மெய்யான
அன்பு புரிவார் அடுத்த விளக்குத் தம் திருமுடியை
என்புருக மடுத்தெரித்தார் இருவினையின் தொடக்கெரித்தார்

- பெரிய புராணம்

கணம்புல்லநாயனார் குருபூசைநாள் : கார்த்திகை கார்த்திகை

49. காரி நாயனார்

"கணம்புல்ல நம்பிக்குங் காரிக்கும் அடியேன்"

- திருத்தொண்டத் தொகை

"புல்லனவாகா வகை உலகத்துப் புணர்ந்தனவுஞ்
சொல்லினவும் நயமாக்கிச் சுடர்ப் பொற்குவடு தனி
வில்லனை வாழ்த்தி விளங்குங் கயிலை புக்கான் என்பரால்
கல்லின மாமதில் சூழ் கடவூரினிற் காரி யையே

- திருத்தொண்டர் திருவந்தாதி

மறையாளர் வாழும் திருக்கடவூரில் தோன்றியவர் காரி நாயனார். அவர் வண் தமிழின் துறைகளின் பயன் தெரிந்து சொல்விளங்கிப் பொருள் மறையத் தமது பெயராற் **காரிக்கோவை** என்ற நூலினை இயற்றித் தமிழ் மூவேந்தர்களிடமும் சென்று நட்பினைப் பெற்றனர். அவர்கள் மகிழும்படி அதற்குப் பொருள் விரித்துரைத்தனர்.

அவர்கள் தந்த பெருநிதிக் குவைகளைக் கொண்டு சிவனுக்குப் பலகோயில்கள் சமைத்தனர், எல்லாருக்கும் மன மகிழும் இன்ப மொழிப்பயனை இயம்பினர். சிவனடியார்களுக்குப் பெருஞ் செல்வங்களை மிக அளித்தனர், இறைவரது திருக்கயிலை மலையினை என்றும் மறவாதிருந்தனர்; தமது புகழ் எங்கும் பரவ விளங்கி இடையறாத அன்பினாலே சிவனருள் பெற்று உடம்போடே வடகயிலை மலையினைச் சேர்ந்தனர்.

திருத்தொண்டர் புராணசாரம்

திருக்கடவூர் வருமுரவோர் காரியாராம் திகழ்தொண்டர் வண்டமிழ் நூல் திருந்த ஓதி விருப்பொடுதம் பெயரால் பாவிளம்பி மும்மை வேந்தரையும் முறை முறையே மேவிஅங்கண் உரைத்தவுரை நயமாக்கி அவர்பால் ஏய்ந்த ஒண்பொருளால் ஆலயங்கள் ஓங்கச்செய்து தரைக்குள் அருந்தவர்க் கேவல் தகமுன் போற்றும் தன்மையால் அருள்சேர்ந்த நன்மையாரே.

நுண் பொருள்

அகத்துறைப்பாக்கள் பாடினும் அகம் கைலைநாதரிடமே இருத்தல் வேண்டும்

ஏய்ந்த கடல் சூழுலகில் எங்கும்தம் இசைநிறுத்தி
ஆய்ந்த உணர்வு இடையறா அன்பினராய் அணிகங்கை
தோய்ந்த நெடுஞ் சடையார்தம் அருள்பெற்ற தொடர்பினால்
வாய்ந்த மனம் போலுடம்பும் வடகயிலைமலை சேர்ந்தார். - பெரியபுராணம்

காரி நாயனார் குருபூசைநாள் : மாசி பூராடம்

50. நின்றசீர் நெடுமாற நாயனார்

நின்றசீர் நெடுமாறன் அடியார்க்கும் அடியேன்
- திருத்தொண்டத் தொகை

கார்த்தண் முகிற்கைக் கடற்காழியர் பெருமாற் கெதிராய்
ஆர்த்த அமணர் அழிந்தது கண்டு மற்றாங்கவரைக்
கூர்த்த கழுவில் நுதிவைத்த பஞ்சவன் என்றுரைக்கும்
வார்த்தையது பண்டு நெல்வேலியின் வென்ற மாறனுக்கே.
- திருத்தொண்டர் திருவந்தாதி

நெடுமாறனார் பாண்டிநாட்டு மன்னராய்ப் பாராண்டு வந்தார். அந்நாளில் வடநாட்டு மன்னர் பாண்டியநாட்டின் மீது படையெடுத்து வந்தனர். அவர்களை நெல்வேலிப் போர்க்களத்தில் தோற்கடித்தார். அதனால் நெல்வேலிவென்ற நெடுமாறன் எனப் போற்றப்பெற்றார். நெடுமாறனார் சோழமன்னன் மகளான மங்கையர்க்கரசியாரை மணம் புணர்ந்தார்.

மாறனார் தீவினைப் பயனாய்ச் சமண சமயத்தைச் சார்ந்து தீப்பிணியுற்றனர். திருஞானசம்பந்தர் என்னும் நாமமந்திரத்தைச் செவிப்புலத்துற்றபோதே மாறனாரது தீப்பிணி சிறிது குறைவுற்றது. சம்பந்தப்பிள்ளையார் வந்தபொழுது தன்னையும் அறியாமல் தன்தலைப்பக்கமாக இருந்த பொற்றவிசில் அவரை அமருமாறு கையெடுத்துக் காட்டினார். அப் பொழுது ஆரவாரித்த சமணரை அடங்குமாறு சொல்லி தன் சுரநோயைத் தீர்ப்பதுவே இருசாராருக்கு-மாகியவாது என உரைத்தார். சம்பந்தப்பிள்ளையார் திருப்பதிகம்பாடி திருநீறுதடவியபோது அவர்தம் வலப்பாகம் அமுத இனிமையும் சுவர்க்கஇன்பமும் போல் சுகம் செய்தது. மற்றையபாகம் நரகத்துன்பமும் கொடுவிடமும்போல் வருத்தியது. சமணரை "வாதில் தோற்றீர்" எனக் கூறிச் சம்பந்தப்பிள்ளையாரை மனதார வணங்கி வருத்தம் முற்றும் தீர அருளும் என வேண்டினார். முற்றும் தீர்ந்ததும் முடிமிசைக் குவித்த கையராய் "ஞானசம்பந்தர் பாதம் அடைந்து நான் உய்ந்தேன்"

எனப் போற்றினார். சமணரை "என்னவாது உமக்கு" என ஏளனஞ் செய்தார். ஏளனக்குறிப்பறியாத சமணர் அதனை ஒரு வினாவெனவே கொண்டு அனல் வாதத்துக்கும் எழுந்தனர். அனல் வாதத்தில் பச்சென்றிருந்த ஏட்டைப் பரசமய கோளரியார் காட்ட சமணர்கள் சாம்பரைக் கையினாற் பிசைந்து தூற்றிக் கொண்டு நின்றனர். அதுகண்டு நகைசெய்த நெடுமாறர் ஏடு எரிந்த பின்னும் "நீங்கள் தோற்றிலீர் போலும்" என்றார். அவ்வங்கதம் விளங்காத அமணர் அதனைப்பயன் மொழியாகக் கொண்டு புனல் வாதத்திற்கு எழுந்தனர். புனல்வாதத்தின் போது வாழ்கஅந்தணர் எனத் தொடங்கும் திருப்பாசுரத்தைச் சம்பந்தப்பிள்ளையார் பாடினார். அத்திருப்பாசுரத்தில் அமைந்த **வேந்தனும் ஓங்குக** எனும் மந்திரமொழியால் கூன்நீங்கி நின்றசீர் நெடுமாறனானார். வாதில்தோற்ற சமணரை "வெங்கழுவேற்றுவன் இவ்வேந்தன்" என்று அவர்கள் சொன்னதற்கேற்ப முறை செய்யுமாறு குலச்சிறையாரைப் பணித்தார். அமணர்கழுவேறத் தாம் திருநீறு பூசிச் சைவரானார். சம்பந்தப்பிள்ளையாருடன் ஆலவாய்ப்பெருமான் முன்நின்று **"திருவாலவாய் மன்னரே! அமணரின் மாயையில் மயங்கிக் கிடந்த என்னை ஆளுடையபிள்ளையாரைத் தந்து ஆட்கொண்டருளினீர்"** எனப் போற்றி செய்தார். சம்பந்தப் பிள்ளையாருடன் கூடிப் பாண்டிநாட்டுத் திருத்தலம்-பலவும் பணியும் பாக்கியம் பெற்றார். சம்பந்தப்பிள்ளையார் சோழநாடு செல்ல நினைத்ததும் அவருடன் போகவே மனம் பற்றினார். பிள்ளையார் "நீர் இங்கிருந்து சிவநெறி போற்றுவீர்" எனக் கூறிய மொழிக்கிணங்கி மதுரையிலிருந்து சிவநெறி தழைக்க அரசாண்டிருந்தார். இவ்வண்ணம் பகை தடிந்து, சிவநெறிபோற்றி நெடுங்காலம் அரசாண்டு சிவலோகமுற்றார்.

திருத்தொண்ட புராணசாரம்

கன்னல் மலி நெல்வேலிக் கவினார் மாறர்
கவுணியர் கோன் அமணருறு கலக்க மெல்லாம்
பொன்னெமில் சூழ் சிரபுரக்கோன் அணைய மாற்றிப்
புனிதமிகு நீறணிந்து போற்றி செய்து

மன்னு புகழ் மங்கையர்க் கரசியாராம்
மலர் மாது மணி மார்பம் மகிழ்ந்து மாற்றார்
வெந்நிடுதல் கண்டு அரசு புரிந்து காழி
வேந்தரருள் சேர்ந்த பெரு விறலினாரே.

நுண்பொருள்

1. அரசாள்வோர் தீவினைப்பயனாய் பொய்ச்சமயநெறியிற் புகுவரேனும், சற்குரவர் சம்பந்தமுற்று சிவநெறிவளர்த்தல் சீரிது.
2. சற்குரவர் சம்பந்தத்தால் வேந்தனும் ஓங்குவான்.

திசைசெய்கடல் உலகின் கண் திருநீற்றின் நெறிவிளங்க
உரைசெய் பெரும் புகழ் விளக்கி ஓங்கு நெடுமாறனார்
அரசுரிமை நெடுங்காலம் அளித்து இறைவர் அருளாலே
பரசுபெரும் சிவலோகத்து இன்புற்றுப் பணிந்திருந்தார்.

- பெரிய புராணம்

நின்றசீர்நெடுமாறர் குருபூசைநாள் : ஐப்பசி பரணி

51. வாயிலார் நாயனார்

"துறைக் கொண்ட செம்பவளம் இருளகற்றுஞ் சோதித்
தொன்மயிலை வாயிலான் அடியார்க்கும் அடியேன்"

- திருத்தொண்டத் தொகை

"மாறா அருளரன் தன்னை மனவாலயத்திருத்தி
ஆறா அறிவாம்ஒளி விளக்கேற்றி அகமலராம்
வீறா மலரளித்து அன்பெனும் மெய்யமிர்தங் கொடுத்தான்
வீறார் மயிலையுள் வாயிலான் என்று விளம்புவரே"

- திருத்தொண்டர் திருவந்தாதி

தொண்டை நாட்டு மயிலாப்பூரிலே வேளாளர் குலத்திலே தோன்றியவர் வாயிலார் நாயனார். சிவனடித் தொண்டில் விருப்புடையராகிய இப்பெரியார், மறவாமையால் அமைத்த மனக்கோயிலின் உள்ளே இறைவனை இருத்தி, ஆண்டான் அடிமை உறவினை உணரவல்ல ஞானமாகிய திருவிளக்கினை ஏற்றி, அழியாத ஆனந்தமாகிய திருமஞ்சனம் ஆட்டி, அன்பாகிய திருஅமுதினை அமைத்து வழிபாடு செய்தலாகிய அகப் பூசையினைச் செய்தார். இவ்வாறு நெடுநாட்களாக அகப்பூசையினை வழுவாது செய்து சிவபெருமான் திருவடிநிழற் கீழ்ச் சென்றடைந்தார்.

திருத்தொண்டர் புராணசாரம்

ஞாமிலார் மதில் தொண்டைநாட்டு மேன்மை
நண்ணும் மயிலா புரிமில் வேளாண்தொன்மை
வாயிலார் மலைவில்லான் அடியே போற்றி
மறவாமை தலைநின்ற மனமே செம்பொன்
கோமிலா உயர்ஞானம் விளக்கா நீராக்
குலவிய ஆனந்தம் அன்பே அமுதாக் கொண்டு
தாமிலான் இரு சரணம் நிகழ ஏத்தும்
தன்மையார் அருள்சேர்ந்த நன்மையாரே.

நுண் பொருள்

அகப்பூசையிற் குறைவொன்றுமில்லை அது திருவடிநீழலில் சேர்க்கும்.

மறவாமையால் அமைத்த மனக்கோயில் உள்ளிருத்தி
உறவாதி தனையுணரும் ஒளிவிளக்குச் சுடரேற்றி
இறவாத ஆனந்தம் எனும் திருமஞ்சனம் ஆட்டி
அறவாணர்க்கு அன்பெனும் அமுதமைத்து அர்ச்சிப்பார். - பெரிய புராணம்

வாயிலார் குருபூசைநாள் மார்கழி இரேவதி

52. முனையடுவார் நாயனார்

"அறைக்கொண்டவேல் நம்பி முனையடுவார்க் கடியேன்"
- திருத்தொண்டத் தொகை

"என்று விளம்புவர் நீடுர் அதிபன் முனையடுவோன்
என்றும் அமருள் அழிந்த வர்க்காக் கூலியேற்றெறிந்து
வென்று பெருஞ் செல்வமெல்லாங் கனக நன் மேரு வென்னுங்
குன்றம் வளைத்த சிலையான் தமர்க்குக் கொடுத்தனனே"
- திருத்தொண்டர் திருவந்தாதி

இவர் சோழநாட்டில் திருநீடூரில் வேளாளகுலத்தில் தோன்றியவர்; சிவபெருமான் திருவடியில் நிறைந்த பேரன்புடையவர்; பகைவர்களைப் போர்முனையில் வென்று பெற்ற பெருநிதியங்களைச் சிவனடியார்க்கு மாறாதளிக்கும் வாய்மை உடையவர்; போரில் பகைவர்களுக்குத் தோற்றவர்கள் தம்மிடம் வந்து துணை வேண்டினால் நடுவு நிலையில் நின்று அவர்களோடு ஆள்வினையாற் கூலி பேசிக்கொண்டு அவர்களுக்காகப் போர்செய்து பொருள் ஈட்டிச் சிவனடியார்களுக்குச் சொன்னபடியே நிறையக் கொடுத்து அவர்களை அறுசுவைக்கறிகளுடன் திருவமுது செய்வித்துக் கொண்டிருந்தார். முனையடுவார் நாயனார் நெடுங்காலம் ஈசனடியார்க்கான திருப்பணி புரிந்திருந்து உமையொருபாகர் திருவருளாற் சிவலோகத்துப் பிரியாது உறையும் பெருவாழ்வு பெற்றார்.

திருத்தொண்டர் புராணசாரம்

பொன்னி வளம்தரு நாட்டுப் புகழும் நீடுர்ப்
பொருவில் திருமலி வேளான் தொன்மை மிக்கார்
முன்னியவர் முனையடுவார் இகலார் போரில்
முரணழிவார் தமக்காக மொழிந்த கூலி
மன்னுநிதி கொண்டு சயம் கொடுத்து வந்த
வளர்பொருளால் இறைவன் அடிவழுவா அன்பர்க்கு
அன்னம் அவர் நசைமின் மிக மிசைய நல்கும்
அன்பர் துன்பம் அவை யாவும் அகன்றுளாரே.

நுண் பொருள்

போர் முனையில் கொல்லும் தொழிலே புரியினும் அடியவர்க்கு அமுது அளித்தல் பெரும்பேறாம்.

விளங்கும் வளமைத் திருநீடூர் வேளான் தலைமைக் குடிமுதல்வர்
களங்கொள் மிடற்றுக் கண்ணுதலார் கழலில்செறிந்தகாதல் மிகும்
உளம்கொள் திருத்தொண்டு உரிமையினில் உள்ளார்நள்ளார் முனையெறிந்த
வளம் கொண்டு இறைவர் அடியார்க்கு மாறாதளிக்கும் வாய்மையார்.

– பெரிய புராணம்

முனையடுவார் நாயனார் குருபூசைநாள் : பங்குனி பூசம்

53. கழற்சிங்க நாயனார்

"கடல் சூழ்ந்த உலகெலாம் காக்கின்ற பெருமான்
காடவர்கோன் கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன்"

- திருத்தொண்டத் தொகை

"மாதவத்தோர் தங்கள் வைப்பினுக்கு, ஆரூர் மணிக்கு வைத்த போதினைத் தான்மோந்த தேவிதன் மூக்கை அரியப்பொற்கை காதி வைத்தன்றோ அரிவதென்று ஆங்கவள் கைதடிந்தான் நாதன்மொய்த்தார் வண்டு கிண்டு பைங் கோதைக் கழற்சிங்கனே"

- திருத்தொண்டர் திருவந்தாதி.

கழற்சிங்க நாயனார் பல்லவர் குலத்திலே தோன்றியவர்; சிவனடி அன்றி வேறொன்றை அறிவினிற் குறியாதவர்; வடபுலவேந்தரை வென்று அறநெறியில் நின்று நாடாண்ட வேந்தராகிய இவர் ஒரு நாள் திருவாரூரை அடைந்து திருக்கோயிலை வணங்கச் சென்றார். அப்பொழுது திருக்கோயிலை வலம் வந்து திருப்பூ மண்டபத்தை அடைந்த பட்டத்தரசி அங்குக் கீழே வீழ்ந்து கிடந்த மலரொன்றை எடுத்து மோந்தாள். அவள் கையில் புதுமலரைக் கண்ட அங்குவந்த செருத்துணையார் என்னும் சிவனடியார் இவள் இறைவனுக்குச் சாத்தும் மலரை மோந்தாள் என்று வெகுண்டு அம்மலரை எடுத்து மோந்த அவள் மூக்கினைக் கத்தியால் அரிந்தார். பட்டத்தரசி கீழே வீழ்ந்து அரற்றிஅழுதாள். உள்ளே பூங்கோயில் இறைவரைப் பணிந்து வெளியே வந்த கழற்சிங்கர், அரசியின் புலம்பலை அறிந்து வந்து மிகவும் வெகுண்டு 'அச்சமின்றி இந்தக் கொடுஞ் செயலைச் செய்தவர் யார்?' என வினவினார். அருகே நின்ற செருத்துணையார், 'இவள் இறைவர்க்குச் சாத்துதற்குரிய மலரை எடுத்து மோந்தமையால் நானே இப்படிச் செய்தேன்' என்றார். அப்போது கழற்சிங்கர் அவரை நோக்கி, 'பூவை எடுத்த கையையன்றோ முதலில் வெட்டுதல் வேண்டும்?' என்று சொல்லித் தம் உடைவாளை உருவிப் பட்டத்தரசியின் கையைத் தடிந்தார். இத்தகைய அரிய தொண்டினைச் செய்த கழற்சிங்க

கழற்சிங்க நாயனார்

நாயனார் சைவநெறி தழைத்தோங்க அரசாண்டு சிவபெருமான் திருவடி நீழலில் அமர்ந்திருக்கும் பெருவாழ்வு பெற்றார்.

திருத்தொண்டபுராண சாரம்

காடவர்தம் குலமுவந்த கழலார்சிங்கர்
காதல்மிகு தேவியுடன் காவல்ஆரூர்
ஆடவல்ல பெருமானைப் பணிவார்
ஆங்கோர் அகன்றமலர் தனைமோந்த அரிவைமூக்கைச்
சேடுடைய செருத்துணையார் அரியக்கேட்டு
திறலரசர் மலரெடுத்த செங்கை என்றே
சூடகமுன் கைதடிந்து ஞாலம்காத்த
தூய்மையார் அருள்சேர்ந்த வாய்மையாரே!

நுண் பொருள்

1. தற்பெருமையோடு கோயிலை வலம் வருதலும், ஈசர்க்கான திவ்விய-பொருள்களில் ஆசைவைத்தலும், அவற்றை நுகர்தலும், திருக்கோயிலின் செய்யத்தகாத குற்றங்கள்.
2. சிவநிந்தை பொறாத சிந்தையரான அடியார்கள் அக்குற்றம் செய்தவர் யாவரேயெனினும் தக்க தண்டம் செய்வர்.

குற்றம் செய்தவர் பட்டத்தரசியேனும் காதல் மனையாளேனும் தண்டிக்கப்பட வேண்டியவரே.

கட்டிய உடைவாள் தன்னை உருவி அக்கமழ் வாசப்பூத்
தொட்டு முன்னெடுத்த கையாம் முற்படத் துணிப்பதென்று
பட்டமும் அணிந்து காதல் பயில் பெருந் தேவியான
மட்டவிழ் குழலாள் செங்கை வளையொடும் துணித்தா னன்றே

– பெரிய புராணம்

கழற்சிங்க நாயனார் குருபூசைநாள் : வைகாசி பரணி

54. இடங்கழி நாயனார்

"மடல் சூழ்ந்த தார்நம்பி இடங்கழிக்கும் ..... அடியேன்"
- திருத்தொண்டத்தொகை

"சிங்கத் துருவனைச் செற்றவன் சிற்றம் பலமுகடு
கொங்கிற் கனக மணிந்தஆ தித்தன் குலமுதலோன்
திங்கட் சடையர் தமரதென் செல்வ மெனப்பறைபோக்
கெங்கட் கிறைவ னிருக்கு வேளூர்மன் னிடங்கழியே"
- திருத்தொண்டர் திருவந்தாதி

இவர் தில்லையம்பலத்துக்குப் பொன்வேய்ந்த ஆதித்தனுக்கு முன்னோராகச் சோழர் குடியில் தோன்றினார்; கோனாட்டின் தலை-நகராகிய கொடும்பாளூரில் தங்கியிருந்து வேளிர்குலத்து அரசினை ஏற்று ஆட்சிபுரிந்தார். சைவநெறிவைதிகத்தின் தருமநெறியோடு தழைப்பத் திருக்கோயில்கள் எங்கும் வழிபாட்டு அர்ச்சனை விதிப்படி திகழச செய்தார். சிவனடியார்கள் வேண்டுவனவற்றை விரும்பிக் கொடுக்கும் சீலமுடையராய் ஒழுகினார். இவர் அரசு புரியும் நாளில் சிவனடியார்க்குத் திருவமுதளிக்கும் தவமுடைய அடியார் ஒருவர், உணவமைத்தற்குரியன எங்கும் கிடைக்காமையால் மனம்தளர்ந்தார். அடியாரை அமுத செய்வித்த-லிலுள்ள பேரார்வத்தால் செய்வதறியாது அரசர்க்குரிய நெற்பண்டாரத்திலே நள்ளிரவிற் புகுந்து நெல்லைக் களவு செய்தார். அந்நிலையில் காவலர்கள் அவரைப் பிடித்து இடங்கழியாராகிய மன்னர் முன் நிறுத்தினர். இடங்கழியார், அவரைப்பார்த்து. 'நீர் ஏன் நம்முடைய நெற்பண்டாரத்தைக் கவர்ந்தீர்' என வினவினார். அதுகேட்ட அடியவர், 'நான் சிவனடியார்-களைத் திருவமுது செய்வித்தற்குப் பொருளில்லாமையால் இவ்வாறு செய்தேன்' என்றார், அதுகேட்டு இரங்கிய மன்னர், 'எனக்கு இவரன்றோ பண்டாரம்' என்று சொல்லிப் பாராட்டிப் படைத்த நிதிப்பயன் கொள்வாராய்ச், 'சிவனடியார்களெல்லாரும் எனது நெற்பண்டாரம் மாத்திரமன்றி நிதிப் பண்டாரங்களையும் கவர்ந்து கொள்க' என எங்கும் பறையறிவித்தார். அருள் வேந்தராகிய இவர் தண்ணளியால் நெடுங்காலம் திருநீற்றின் ஒளி தழைப்ப அரசு புரிந்திருந்து சிவபதம் அடைந்தார்.

இடங்கழி நாயனார்

நுண்பொருள்

மாகேசுரபூசை செய்யும் சிவனடியாரே பெரிய பண்டாரம்

திருத்தொண்டர் புராணசாரம்

கோனாட்டுக் கொடும்பாளூர் இருக்குவேளிர் குலத்தலைவர்
இடங்கழியார் கொங்கிற் செம்பொன்
ஆனேற்றர் மன்றில் முகடு அம்பொன் வேய்ந்த
ஆதித்தன் மரபோர் நெற்கவர்ந்தோரன்பர்
போ நாப்பண் இருளின்கண் காவலாளர்
புரவலர்முன் கொணரஅவர் புகலக்கேட்டும்
ஆனேற்றார் அடியாரே கொள்க என்று வழங்கி
அரசாண்டருளில் மன்னினாரே.

எண்ணில் பெரும் பண்டாரம் ஈசனடியார் கொள்ள
உண்ணிறைந்த அன்பினால் உறுகொள்ளை மிக ஊட்டி
தண்ணளியால் நெடுங்காலம் திருநீற்றின் நெறி தழைப்ப
மண்ணில் அருள் புரிந்திறைவர் மலரடியின் நிழல் சேர்ந்தார்.

– பெரிய புராணம்

இடங்கழி நாயனார் குருபூசைநாள் : ஐப்பசிக் கார்த்திகை

55. செருத்துணை நாயனார் புராணம்

"மடல் சூழ்ந்த தார்நம்பி இடங்கழிக்குந் தஞ்சை
மன்னவனாஞ் செருத்துணை தன் னடியார்க்குமடியேன்"
- திருத்தொண்டத் தொகை

"கழிநீள் கடல்நஞ்சு அயின்றார்க்கு இருந்த கடிமலரை
மொழிநீள் புகழ்கழற் சிங்கன்தன் தேவிமுன் மோத்தலுமே
எழில்நீள் குமிழ்மலர் மூக்கரிந்தானென் றியம்புவரால்
செழுநீர் மருகனன் னாட்டமர் தஞ்சைச் செருத்துணையே"
- திருத்தொண்டர் திருவந்தாதி.

சோழநாட்டின் பகுதியாகிய மருகனாட்டில் உள்ள தஞ்சாவூரிலே வேளாண்குடி முதல்வராய்த் தோன்றியவர் செருத்துணையார். சிவபிரான் திருவடியில் மெய்யன்புடையவர். இவர் திருவாரூர் சென்று இறைவரது திருக்கோயிலில் திருமுன்றினில் விளங்கும் பணிகளைச் செய்து காலந்தோறும் இறைவரை வழிபட்டு வந்தார். அவ்வண்ணம் வழிபட்டுவரும் ஒருநாள் பல்லவ அரசரது பட்டத்து உரிமைத்தேவி அங்குப் பூமண்டபத்தின் பக்கம்விழுந்த புதுப்பூவை எடுத்து மோந்ததனைக் கண்டார். அவ் அபராதத்திற்காக வேகத்துடன் சென்று கருவிகொண்டு அவளது மூக்கினை அரிந்தார். இவ்வாறு திருத்தொண்டு உலகில் விளங்கச் செய்திருந்து சிவனடி நீழல் சேர்ந்து இன்பமுற்றனர்.

திருத்தொண்டர் புராணம்.

இரைத் தணையார் புனல் பொன்னி மருகல் நன்னாட்டு
எழிலாரும் தஞ்சை நகர் உழவரேத்தும்
செருத்துணையார் திருவாரூர் சேர்ந்து வாழ்வார்
செல்வமிகும் பல்லவர்கோன் தேவி வீழ்ந்த
மருத்துணையார் மலரெடுத்து மோப்பக் கண்டு
வளமலி பூங்கத்தியால் அவள் மூக்கு ஈர்ந்த
கருத்துணையார் விறல் திருத்தொண்டினையே செய்து
கருதலரும் அமருலகம் கைக்கொண்டாரே.

செருத்துணை நாயனார்

நுண்பொருள்

1. பூசனைக்குரிய பொருள் புனிதமானது.
2. அதனைக் கடப்பதும் மோப்பதும் ஆதிய கருமங்களால் எச்சிற்படுத்துதல் சிவநிந்தை.
3. இத்தகைய சிவநிந்தை செய்வோர் எத்தகையோராயினும் தக்க முறையில் தண்டிக்கப்படுதற்குரியர்.

கடிது முட்டி மற்றவள்தன் கருமென் கூந்தல் பிடித்தீர்த்து
படியில் வீழ்த்தி மணிமுக்கைப் பற்றிப் பரமர் செய்யசடை
முடியில் ஏறும் திருப்பூ மண்டபத்து மலர் மோந்திடு மூக்கைத்
தடிவன் என்று கருவியினால் அரிந்தார் தலைமைத் தனித்தொண்டர்.

– பெரிய புராணம்.

செருத்துணை நாயனார் குருபூசைநாள் : ஆவணிபூசம்

56. புகழ்த்துணை நாயனார்

"புடைசூழ்ந்த புலியதண் மேல்அரவாட வாடி
பொன்னடிக்கே மனம்வைத்த புகழ்துணைக்கு மடியேன்"
- திருத்தொண்டத் தொகை

"செருவிலி புத்தூர் புகழ்த்துணை வையஞ் சிறுவிலைத்தாய்
உருவலி கெட்டு உணவின்றி உமைகோனை மஞ்சனஞ் செய்
தருவதோர் போதுகை சோர்ந்து கலசம் விழத்தரியாது
அருவரை வில்லி அருளின்நிதியது பெற்றனனே"
- திருத்தொண்டர் திருவந்தாதி.

புகழ்த்துணையார் சோழ நாட்டிலுள்ள செருவிலிபுத்தூரிலே சிவவேதியர் குலத்தில் தோன்றினார். சிவனது அகத்தடிமைத் தொண்டிற் சிறந்த அவர் சிவபெருமானைத் தத்துவ நெறியில் சிவாகம விதிப்படி வழிபட்டு வந்தார். அக்காலத்தில் பஞ்சம் வந்தது. அவர் பசியால் வாடினார். அப்போதும் இறைவரை விடுவேனல்லேன் என்று இரவும் பகலும் விடாது பூவும் நீரும் கொண்டு பூசித்து வந்தார். ஒரு நாள் பசியால் வாடி இறைவரைத் திருமஞ்சனமாட்டும் பொழுது திருமஞ்சனக்குடத்தைத் தாங்கமாடட்டாமையினால் கைதவறிக் குடத்தினை இறைவர் திருமுடிமேல் விழுத்திவிட்டு நடுங்கி வீழ்ந்தார். அப்போது இறைவரது திருவருளால் துயில் வந்தது. இறைவர் அவரது கனவில் தோன்றி 'உணவுப்பொருள் மங்கிய காலமுழுதும், நாள் ஒரு காசு நாம் தருவோம்' என்று அருளினார். புகழ்த்துணையார் துயிலுணர்ந்து எழுந்து பீடத்தின் கீழ்ப் பொற்காசு கண்டு கைக்கொண்டு களித்தனர். அவ்வாறு பஞ்சம் நீங்கும்வரை இறைவர் நாடோறும் அளித்த காசு கொண்டு துன்பம் நீங்கி, இறைவரது வழிபாடு செய்து வாழ்ந்திருந்து பின் சிவனடி சேர்ந்தனர்.

திருத்தொண்டர் புராணசாரம்

புண்ணியர்கள் புகழ் அழகார் திருப்புத்தூர்வாழ்
புகழ்த்துணையார் அகத்தடிமைப் புனிதர் சின்னாள்

புகழ்த்துணை நாயனார்

மண்ணிகழ மழைபொழியா வற்காலத்தால்
வருந்துடலம் நடுங்கிடவும் மணிநீரேந்தி
அண்ணல் முடி பொழிகலசம் முடிமேல்வீழ
அயர்ந்து ஒருநாள் புலம்ப அரன் அருளால் ஈந்த
நண்ணலரும் ஒருகாசுப் படியால் வாழ்ந்து
நலம் மலி சீர் அமருலகம் நண்ணினாரே.

நுண்பொருள்

தொண்டரானோர் கையது வீழினும் கைக்கொண்ட தொண்டைக் கைவிடார். அத்தகு தொண்டரைப் பெருமான் தாங்கிக் கொள்வார்.

அகத்தடிமை செய்யும் அந்தணன்தான்
அரிசிற் புனல் கொண்டு வந்து ஆட்டுகின்றான்
மிகத் தளர்வெய்திக் குடத்தையும் நும்
முடிமேல் விழுத்திட்டு நடுங்குதலும்
வகுத்தவனுக்கு நித்தற்படியும்
வரும் என்றொரு காசினை நின்ற நன்றிப்
புகழ்த்துணை கைப்புகச் செய்துகந்தீர்
பொழிலார் திருப் புன்கூர் புனிதனீரே.

– சுந்தரர் தேவாரம்

மாலயனுக் கரியானை மஞ்சனம் ஆட்டும்பொழுது
சாலவுறு பசிப்பிணியால் வருந்தி நிலை தளர்வெய்தி
கோலநிறை புனல்தாங்கு குடந்தாங்க மாட்டாமை
ஆலமணி கண்டத்தார் முடிமீது வீழ்ந்தயர்வார்

– பெரியபுராணம்

புகழ்த்துணைநாயனார் குருபூசைநாள் : ஆவணி ஆயிலியம்

57. கோட்புலி நாயனார்

"அடல் சூழ்ந்த வேல் நம்பி கோட்புலிக்கும் அடியேன்"
- திருத்தொண்டத் தொகை

"பெற்றமுயர்த்தோன் விரையாக்கலி பிழைத்தோர் தமது
சுற்றமறுக்குந் தொழில்திரு நாட்டியத்தான் குடிக்கோன்
குற்றம் அறுக்கும் நம்கோட்புலி நாவற்குரிசிலருள்
பெற்ற அருட் கடலென்று உலகேத்தும் பெருந்தகையே"
- திருத்தொண்டர் திருவந்தாதி.

கோட்புலிநாயனார் சோழநாட்டிலே திருநாட்டியத்தான்குடியில் வேளாளர் மரபில் தோன்றினார். இந்நாயனார் நம்பியாரூரரைத் தம் ஊருக்கு எழுந்தருளுமாறு வேண்டி, அவர் இசைந்துவர எதிர்கொண்டு அழைத்துத் தம் மாளிகையிற் சிறப்போடு பூசனையாற்றித் தம் மகளிர் இருவரையும் அடிமைகொள்ளுமாறு அர்ப்பணித்தார். அவர் தம் அர்ப்பணம் நம்பியாரூரரை அம்மகளிரின் 'அப்பனா'க முறைமை கொண்டு **சிங்கடியப்பன், வனப்பகைஅப்பன்** எனத் தம்மைக் கூறிக் கொள்ளுமளவுக்கு நம்பியாரூரரை இரங்கச் செய்தது.

சோழ சேனாதிபதியாக அதிகாரம் புரிந்த இவர் பகை நாடுகளைப் போரில் வென்று புகழுடன் விளங்கினார். அரசனிடம் பெற்ற சிறப்பின் வளங்களை எல்லாம் சிவன் கோயிலில் திருவமுதுபடிபெருகச்செய்யும் திருப்பணிக்காக்கி அதனையே பன்னெடுநாள் செய்தனர். அந்நாளில் அவர் அரசனது போரினை மேற்கொண்டு பகைவர் மேற் செல்ல நேர்ந்தது. அப்போது தாம் திரும்பி வரும் வரையில் சிவனுக்கமுது படிக்காகும் நெல்லினைக் கூடுகட்டி வைத்துத், தம் சுற்றத்தாரை நோக்கி 'இறைவர்க்கு அமுது படிவைத்துள்ள இந்நெல்லை எடுத்தல் கூடாது, **திருவிரையாக்கலி** என்னும் ஆணை' எனத் தனித்தனியே ஒவ்வொருவரிடமும் சொல்லிச் சென்றார். சில நாளிலே நாட்டிற் கடும் பஞ்சம் வந்தது. பசியால் வருந்திய சுற்றத்தார்கள் 'நாம் உணவின்றி இறப்பதைவிட இறைவர்க்கு வைத்த நெல்லைக் கொண்டாகிலும் பிழைத்து உயிர் தாங்கியிருந்து பின்னர்க் குற்றந்தீரக் கொடுத்துவிடுவோம்'

என்று நெற்கூட்டைத் திறந்து நெல்லைச் செலவழித்தார்கள். அரசருடைய பகைவரைப் போர் முனையில் வென்று அரசனிடம் நிதிக்குவை பெற்று மீண்ட கோட்புலியார், தம் சுற்றத்தார் செய்த தீமையை உணர்ந்து அவர்கள் அறியாத வகையில் அவர்களைத் தண்டிக்க எண்ணினார். தம் மாளிகையை அடைந்து 'தம் சுற்றத்தார்க்கெல்லாம் ஆடையணிகலன் கொடுக்க அவர்களை அழைத்து வாருங்கள்' என்று அவர்களை உள்ளே அழைத்து அவர்களில் எவரும் ஓடிவிடாதபடி வாயிலிற் காவலனை நிறுத்தி வைத்தார். 'சிவ ஆணையினை மறுத்து அமுது படியை அழித்த மறக்கிளையைக் கொல்லாது விடுவேனோ? என்று கனன்று, வாளினை எடுத்துக் கொள்வாராயினர். தந்தையார், தாயார், உடன் பிறந்தார், சுற்றத்தார், பதியடியார்' மற்றும் அமுதுபடியுண்ண இசைந்தார், இவர்களையெல்லாம் அவர்களது தீயவினைப் பாவத்தினைத் துணிப்பாராய்த் துண்டஞ் செய்தார். அங்கு ஒரு பசுங்குழந்தை தப்பியது. காவலாளன் 'இக்குழவி அமுதுபடி அன்ன முண்டிலது. ஒரு குடிக்கு ஒரு மகன்; அருள்செய்ய வேண்டும்' என்று இறைஞ்சினன். "அவ்வன்னம் உண்டாளது முலைப்பாலினை உண்டது" என்றுகூறி அதனை எடுத்து எறிந்து வாளினை வீசி இருதுணியாக விழ எற்றினார்.

அப்போது இறைவர் வெளிப்பட்டனர். உன் கைவாளினால் உறுபாசம் அறுத்த சுற்றத்தவர் தேவருலகம் முதலிய போக பூமிகளிற் புகுந்து பின்னர் நம்முலகம் அடைய, நீ இந்நிலையே நம்முடன் அணைக என்று அருளி மறைந்தருளினார்.

திருத்தொண்ட புராணசாரம்.

குலவு புகழ் நாட்டியத்தான் குடி வேளாளர்
கோட்புலியார் குவித்துயர்த்த செந்நெற்கூடு
நிலவணிவார்க்கு அமைத்து ஆணை நிறுத்தி ஒன்னார்
நேர்மிலைவார் திருவாணை நினையாதேநெல்
சிலமிடியால் அழித்தபடி அறிந்து வாளால்
சேர்ந்த பெரும் கிளைஞர் உடல் சிதற வீசி
இலகுமொரு குழவியையும் எறிந்து நாதன்
எண்ணரிய கருணைநிழல் எய்தினாரே.

நுண்பொருள்

1. இறைவனது அமுதுபடிக்கென்று அமைத்தவற்றைப் பஞ்சம் வந்து உயிர் துறக்கும் நிலை நேர்ந்த இடத்தும் நம்மவர் தீண்டுதல் பிழை.
2. 'விரையாக்கலி' என்பது சிவன் ஆணை. இவ்வாணை பிழைத்தல் சிவத்துரோகம்
3. அமுதுபடி அழித்தலும், சிவன் ஆணை பிழைத்தலும் ஆகிய இச்சிவத்துரோகம் இழைத்தவரைக் கொன்றொழித்தல் பாதகமாகாது.
4. இவ்வாறு கொலை செய்தவர் அந்நிலையிலேயே சிவபதம் பெறுவர். இவரால் கொலை செய்யப்பட்டோரும் தீவினை தீர்ந்து சிவலோகம் பெறுவார்.
5. தம் மக்கட் செல்வத்தை நாயன்மார்க்கு அர்ப்பணித்தல் நல்லோர் ஒழுக்கம். அத்தகைய நல்லோரை நாயன்மார் ஒருநாளும் மறவார்.

"கூடாமன்னரைக் கூட்டத்துவென்ற கொடிறன்கோட் புலிசென்னி
நாடார் தொல்புகழ் நாட்டியத்தான்குடி நம்பியை நாளும் மறவாச்
சேடார் பூங்கழல் சிங்கடியப்பன் திருவாரூரன் உரைத்த
பாடீராமினும் பாடுமின் தொண்டர் பாட நும்பாவம் பற்றறுமே"

– சுந்தரமூர்த்தி சுவாமிகள்

"எல்லாரும் புகுந்ததற்பின் இருநிதியம் அளிப்பார்போல்
நல்லார்தம் பேரோன்முன் கடைகாக்க நாதன்தன்
வல்லாணை மறுத்து அமுதுபடி அழித்த மறக் கிளையைக்
கொல்லாது விடுவேனோ எனக் கனன்று கொலைபுரிவார்.

– பெரிய புராணம்

கோட்புலியார் குருபூசைநாள் : ஆடி கேட்டை

58. பத்தராய்ப் பணிவார்

"பத்தராய்ப் பணிவார்க ளெல்லார்க்கு மடியேன்"

- திருத்தொண்டத்தொகை

"அரசினை ஆரூர் அமரர் பிரானை அடிபணிந்திட்டு
உரை செய்த வாய் தடுமாறி யுரோம புளகம் வந்து
கர சரணாதி அவயவங் கம்பித்துக் கண்ணருவி
சொரிதரு மங்கத்தினோர் பத்தரென்று தொகுத்தவரே"

- திருத்தொண்டர் திருவந்தாதி

ஈசனுக்கே அன்புடைய சிவனடியாரைக் கண்டால் அவருடைய சாதி முதலியன விசாரியாமல் அவர்களை இறைவனெனவே கொண்டாடி, தாய்ப் பசுவின்பின் கன்று சென்றாற் போன்று பெருவிருப்புடன் அணைந்து பணிவுடையராய் இன்னுரை பகரும் இயல்புடையவர்கள்;

பேரன்பினால் சிவபெருமானை எவ்விடத்தும் யாவரும் வழிபடக் கண்டால் இனிது மகிழ்ந்து பாவனையால் நோக்கினால் பலர் காணப்பயன்பெறுபவர்;

அன்பினால் யாவர்க்கும் மேம்பட்டவர்களாய்ச் சிவபெருமானையும் சிவனடியார்களையும் ஆராத காதலினால் உவகையுடன் விரும்பி வழிபடுபவர்கள்;

தம் உடம்பினாற் செய்வினைகள் யாதாயினும் அவ்வினையால் உளவாகும் நற்பயன்களைச் சிவபெருமான் திருவடிக்கே உரிமை செய்து கொடுப்பவர்கள்;

சிவ புராணங்களை அறிந்தார் சொல்ல விரும்பிக் கேட்குந் தன்மையராய் இறைவன் திருவடித் தாமரையினைச் சேர்வதற்கு உரியவர்கள்:

ஈசனையே பணிந்துஉருகி இன்பமிகக் களிப்பெய்தி, வாய்தழுதழுப்பக் கண்ணீர் அருவிபோற் சொரிய மெய்ம்மயிர் சிலிர்ப்ப அன்பினால் விதிர் விதிர்க்கும் குணத்தால் மிக்கவர்கள்;

நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் நடந்தாலும் மென்றாலும் துயின்றாலும் விழித்தாலும் மன்றாடும் இறைவன் திருவடிகளை மறவாத உணர்வுடையவர்கள்;

சிவபெருமானுக்கு ஆட்பட்ட தம் அடிமைத் திறத்தைப் பிறர்க்குப் புலப்படுத்தி அதனாற் பயன் கொள்ளாத தூய நெஞ்சமுடையவர்கள்.

மேற் குறித்த எண் பெருங் குணங்களாலும் இவ்வுலகினை விளக்கும் பெருமை வாய்ந்த அடியார்களே பத்தராய்ப் பணிவார் ஆகிய திருக்கூட்டத்தாராவர்.

திருத்தொண்டர் புராணசாரம்

தொண்டரடி தொழல், பூசைத் தொழில் மகிழ்தல், அழகார்
துளங்கிய அர்ச்சனைபுரிதல், தொகுதி நியமங்கள்
கொண்டபணி திருவடிக்கே கொடுத்தல், ஈசன்
குணம் மருவும் அருங்கதையைக் குலவிக் கேட்டு
மண்டிவிழி துளும்பல், மயிர் சிலும்பல், உன்னல்
மருவு திருப்பணி காட்டி வருபவாங்கி
உண்டிகொளா தொழிதல், என இவையோர் எட்டும்
உடையரவர் பத்தரென உரைத்துளாரே.

நுண்பொருள்

கூடும் அன்பினில் கும்பிடுதல் வீடும் வேண்டா விறலாகும்

ஈசனையே பனிந்துருகி இன்பம் மிகக் களிப்பெய்தி
பேசினவாய் தழுதழுப்பக் கண்ணீரின் பெருந்தாரை
மாசிலா நீறழித் தங்கு அருவிதர மயிர் சிலிர்ப்பக்
கூசியே உடலங் கம்பித்திடுவார் மெய்க்குணம் மிக்கார்

- பெரிய புராணம்

59. பரமனையே பாடுவார்

"பரமனையே பாடுவார் அடியார்க்கும் அடியேன்"

- திருத்தொண்டத்தொகை

"தொகுத்த வடமொழி தென்மொழி யாதொன்று தோன்றியதே
மிகுத்த இயலிசை வல்லவகையில் விண்தோயுநெற்றி
வகுத்தமதிற் தில்லை அம்பலத்தான் மலர்ப்பாதங்கள்மேல்
உகுத்த மனத்தொடும் பாடவல்லோ ரென்ப உத்தமரே"

- திருத்தொண்டர் திருவந்தாதி

தென் தமிழும் வடமொழியும் ஏனைய திசைமொழியும் ஆகியவற்றில் இறைவனையே பொருளாகக் கொண்டு இயற்றப் பெற்ற இயல் இசைப் பாடல்களை ஒன்றிய மெய்யுணர்வினோடும் இசைகற்கும் வகையால் உள்ளம் உருகிப்பாடும் அடியார்கள் பரமனையே பாடுவார் ஆவார்.

திருத்தொண்டர் புராணசாரம்

அருந்தமிழால் வடகலையால் அருளால் ஒன்றால்
அறிவுநெறி மருவும் அருங்கவிகள் யாவும்
திருந்திய வானவர் பணிய மன்றுள் ஆடும்
தேவர்பிரான் கழலிணையே சேரஓதி
விரிந்திடு நாவுடைய பயன் மேவினோர் தாம்
மேலானோம் என மகிழ்ந்து விழிநீர் சோரப்
பரிந்தருளால் பரமனையே பாடவல்ல
பான்மையார் எமை ஆளும் மேன்மையாரே

நுண்பொருள்

பெருமானுக்குப் பாடல் உகந்த அருச்சனையாதலால் பாடி மகிழுதல் பெரும் பாக்கியமாம்.

தென்தமிழும் வடகலையும் தேசிகமும் பேசுவன
மன்றினிடை நடம்புரியும் வள்ளலையே பொருளாக
ஒன்றிய மெய்யுணர்வோடும் உள்ளுருகிப் பாடுவார்
பன்றியுடன் புல்காணாப் பரமனையே பாடுவார்.

- பெரியபுராணம்

60. சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார் புராணம்

"சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கு மடியேன்"

- திருத்தொண்டத்தொகை

உத்தமதானத்து அறம் பொருள் இன்ப மொடு இயல் தெரிந்து
வித்தகத்தானத் தொருவழிக் கொண்டு விளங்கச் சென்னி
மத்தம்வைத் தான்திருப்பாதக் கமல மலரடிக்கீழ்ச்
சித்தம் வைத்தாரென்பர் வீடு பேறெய்திய செல்வர்களே

- திருத்தொண்டர் திருவந்தாதி

படைத்தல் முதலிய ஐந்தொழில் செய்யும் பிரமன் முதலிய ஐம்பெருங் கடவுளர்களும் இருக்கும் ஐவகைத் தாமரைப் பீடங்களையுடைய பதவிகளைக் கடந்து, அட்டாங்க யோகத்துள் இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம் என்னும் ஐந்தினையும் பயின்று சித்தத்தை ஒரு வழி நிறுத்தலாகிய தாரணையால் சுயஞ் சோதியாய் உள்ள சிவம், ஞானஒளி வீசி விளங்கும் நாதாந்தத்தில் சித்தத்தை நிறுத்துதலினாலே சிவத்தினிடத்தே நிலைபெற்ற சித்தத்தையுடையவர்கள் சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார் எனப் போற்றப் பெறுவர். இவர்கள் வேத காரணராகிய அம்பலவர் திருவடித்தொண்டின் வழி நின்று அம்முதல்வரை அடைந்தவராவர்.

திருத்தொண்டர் புராணசாரம்

பாரணவும் புலன் அந்தக்கரணம் ஒன்றும்
படராமே நடுநாடிபயிலும் நாதம்
காரண பங்கயன் முதலாம் ஐவர் வாழ்வும்
கழியுநெறி வழிபடவும் கருதி மேலைப்
பூரணமெய்ப் பரஞ்சோதிப் பொலிவு நோக்கி
புணர்ந்தணைந்த சிவானுபவப் போக மேவும்
சீரணவும் அவரன்றோ எம்மை ஆளும்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்துளாரே.

<u>நுண்பொருள்</u>

தொண்டரின் பெருஞ்சீர் சிவயோகத்திற் பொருந்தி சிவசிந்தனையினராயிருத்தல்

காரண பங்கயம் ஐந்தின் கடவுளர்தம் பதம் கடந்து
பூரண மெய்ப் பரஞ்சோதி பொலிந்திலங்கு நாதாந்தத்
தாரணையால் சிவத்தடைந்த சித்தத்தார் தனி மன்றுள்
ஆரண காரணக் கூத்தர் அடித்தொண்டின் வழியடைந்தார்.

- பெரியபுராணம்

61. திருவாரூர்ப்பிறந்தார்கள்

திருவாரூர் பிறந்தார்கள் எல்லார்க்கும் **அடியேன்**
- திருத்தொண்டத்தொகை

செல்வம் திகழ் திருவாரூர் மதில்வட்டத்துட் பிறந்தார்
செல்வன் திருக்கணத்துள் உள்ளவரே அதனால் திகழச்
செல்வம் பெருகுதென் ஆரூர் பிறந்தவர் சேவடியே
செல்வ நெறி உறுவார்க்கு அணித்தாய செழுநெறியே
- திருத்தொண்டர் திருவந்தாதி

அருவமாயும், உருவமாயும், எல்லாப்பொருளாயும் நின்ற பெருமானும் உமையம்மை மணவாளனுமாகிய தியாகராசப்பெருமான் மகிழ்ந்து வீற்றிருந்தருளும் திருவாரூர்த்தலத்திலே பிறக்கும் பேறு பெற்றவர்கள் எல்லோரும் திருக்கயிலை வீற்றிருந்த சிவபெருமான் திருக்கணத்தவராவர். நமிநந்தி அடிகள் திருவாரூர்ப் பிறந்தாரையெல்லாம் சிவகணநாதராகக் கண்டார். அவர்கள் திருவடிகளை வணங்கி ஒன்றிய மனத்தினையுடையார்க்கு உயர்ந்த வீட்டு நெறி அணிமை உடையதாகும்.

திருத்தொண்டர் புராணசாரம்

பொங்கிய மாதவமுடையார் வருணம் நான்கில்
பொருந்தினர்கள் அல்லாத புகழின் உள்ளார்
சங்கைமிலா அருந்தவம் முன் புரிந்தார் இங்கு
சார்விலா இறைவனருள் சார்தலாலே
கங்கைவாழ் சடைமுடியான் அருளை நீங்காக்
கணநாதர் என வாழும் கருத்தார் கன்னிச்
செங்கண் வரால் வளர் வாவி திகழும் ஆரூர்
சிறந்துளார் எமை ஆளப் பிறந்துளாரே.

நுண்பொருள்

ஆரூர்ப்பெருமான் ஓரிரவெல்லாம் பாததாமரை நிலமிசைப்பட வருவதுபோவதாய்த் திரிந்த திருவாரூரில் பிறக்கும் பாக்கியம் வாய்த்தோர் தொண்டருட் சிறந்தோரே.

திருக்கயிலை வீற்றிருந்த சிவபெருமான் திருக்கணத்தார்
பொங்கிய சீர் திருவாரூர் பிறந்தார்கள் ஆதலினால்
தருக்கிய ஐம்பொறி யடக்கி மற்றவர்தம் தாள்வணங்கி
ஒருக்கிய நெஞ்சுடையவர்க்கே அணித்தாகும் உயர்நெறியே - புராணம்

62. முப்பொழுதும் திருமேனி தீண்டுவார்

"முப்போதும் திருமேனிதீண்டுவார்க்கடியேன்"

திருத்தொண்டத்தொகை

நெறிவார் சடையாரைத் தீண்டி முப்போதும் நீடு ஆகமத்தில்
அறிவால் வணங்கி அர்ச்சிப்பவர் நம்மையும் ஆண்டு அமரர்க்கு
இறையாய் முக்கண்ணும் எண்தோளும் தரித்து ஈறில் செல்வத்தொடும்
உறைவார் சிவபெருமாற்கு உறைவாய உலகினிலே

- திருத்தொண்டர் திருவந்தாதி

எக்காலத்தும் உயிர்களுக்கு இனிமையே புரிந்தருள்வாராகிய சிவபெருமானது திருவருளினாலே பெருகிய உண்மையான சிவாகம ஞானநெறியின்படி வந்த முறைமை தவறாமல், அவ்வக்காலங்கள் தோறும் வழிபாட்டில் ஆசைமிகும் பேரன்புடையராய் நாள்தோறும் காலை நண்பகல், மாலை என்னும் மூன்று காலங்களிலும் திருக்கோயில்களிற் சிவலிங்கத்திருமேனியைத் தீண்டி அருச்சிப்பவர்கள் ஆதிசைவர்களாகிய முனிவர்கள். முப்பொழுதும் இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலமாகிய எக்காலத்திலும் வழிவழியாகச் சிவபெருமானது அகம்படித்தொண்டில் விரும்பிய வழிபாட்டு அர்ச்சனைகள் சிவமறையோர்களுக்கே உரியனவாகும். அப்பெருந்தகையார்களின் பெருமை சொல்லாற் புகழ்தற்கு எளியதன்று.

திருத்தொண்டர் புராணம்

செப்பலரும் தவமுடைய செம்மையாளர் சிறுகாலே மலர்வாவி திகழமூழ்கி
ஒப்பில் திருநீறணிந்து நியதியாற்றி ஓவாமே ஐந்தெழுத்தும் உரைத்து மேன்மைத்
தப்பில் சிவாகம விதியால் இன்பால் அன்பாம் தன்மையால் நன்மைஆள் தகையார் என்றும்
முப்பொழுதும் திருமேனி தீண்டவல்ல முறைமையால் பிறவி தொறும் திறமையாரே.

நுண்பொருள்

பூசனையே ஆகமத்தின் முடிந்தபொருளாதலால் முப்போதும் பூசிக்கும் சிவவேதியர் பேசற்கரிய பெருமையராவர்.

எப்போதும் இனியபிரான் இன்னருளால் அதிகரித்து
மெய்ப்போத நெறிவந்த விதிமுறைமை வழுவாமே
அப்போதைக் கப்போது ஆர்வமிகும் அன்பினராய்
முப்போதும் அருச்சிப்பார் முதற்சைவ மாமுனிவர்

- பெரிய புராணம்

63. முழுநீறு பூசிய முனிவர் புராணம்

"முழுநீறு பூசிய முனிவர்க்கு மடியேன்"

- திருத்தொண்டத் தொகை

உலகம் கலங்கினும் ஊழி திரியினும் உள்ளொருகால்
விலகுதலில்லா விதியது பெற்றநல் வித்தகர்தாம்
அலகில் பெருங்குணத்து ஆரூர் அமர்ந்த அரனடிக்கீழ்
இலகு வெண்ணீறுதம் மேனிக்கணியும் இறைவர்களே

- திருத்தொண்டர் திருவந்தாதி

முழுநீறுபூசிய முனிவர்கள் குலப் பிறப்பிற்கேற்ற தலைமையான அறவொழுக்கத்தை உடையவர்கள். தத்துவ நெறியினை நன்குணர்ந்து நீதி நெறியிற் சிறிதும் தவறாதவர்கள். தொன்றுதொட்டு வரும் மும்மலங்களை அறுத்த வாய்மையையுடைய அரு முனிவர்கள். நியமம் தவறாது செய்யும் நித்தியாக்கினியில் விளைத்தெடுத்த திருநீற்றினை புதிய பாத்திரத்தில் வைத்துக்கொண்டு சிவபெருமானை வணங்கி அவரது திருவருள் வண்ணமாகிய அத்திருநீற்றினை உடல் முழுவதும் பூசிக்கொள்வர்.

இத்திருநீறு கற்பம், அநுகற்பம், உபகற்பம் என மூவகைப்படும். கன்றீன்ற பசுவின் சாணத்தைச் சத்தியோசாத மந்திரத்தினால் ஏற்றுச் சிவமந்திரங்களால் உண்டாக்கப்பட்ட சிவாக்கினியில் இட்டெடுத்த திருநீறு **கற்பம்** எனப்படும். காட்டில் உலர்ந்த பசுவின் சாணத்தைக் கொண்டு வந்து கோசலத்தை விட்டுப் பிசைந்து அத்திரமந்திரம் ஓதி உண்டையாகப் பிடித்து ஓமத்தீயில் இட்டுச் சிறப்புற வெந்தநீறு **அநுகற்பம்** எனப்படும். காட்டில் மரங்கள் பற்றி எரிந்தமையால் வெந்த நீறும் கொட்டில் முதலிய இடவகைகள் தீப்பற்றிக் கொள்ள வெந்த நீறும், செங்கற்களைச் சுட்ட தீயினால் விளைந்த நீறும் ஆகிய இவற்றை உண்டாக்கித் திருமடங்களில் விளங்கும் சிவாக்கினியினால் விதிப்படி நீறாக்கப்பட்டவை **உபகற்பம்** எனப்படும். இவ்வாறு அமைந்த திரு நீற்றினை இறைவன் முன்னும், தீயின் முன்னும், குரு முன்னும் அமைதியாக இருந்து சிந்தாமற் பூசிக்கொள்ளுவர். நீரிற்குழைக்காமல்

பொடியாய்ப் பூசுதல், நீரிற் குழைத்துப் பூசுமிடத்து மூன்று கீற்றாகவும் பிறைவடிவமாகவும் முக்கோணமாகவும், வட்டமாகவும் பூசுதல் என்று இவ்வாறு உடல் முழுவதும் திருநீறு பூசிய முனிவர்களே முழுநீறு பூசிய முனிவர் எனப் போற்றப் பெறுவர்.

திருத்தொண்டர் புராணசாரம்

கற்பம் அநுகற்பம் உபகற்பம் என்றிக்
கடன் அணைந்த திருநீறும் கனற்கண் நீறும்
பொற்புடைய அரன் ஆசான் அங்கி ஆறும்
பொல்லாத பூமி எதிர் புனைதல் ஆகா
அற்புதமாம் திரிபுண்டம் மதியின் பாதி
அகிலாங்கம் தீபம் மிகு அழகார் வட்டம்
முற்பொலிய உடலணியும் முறையார் அன்றோ
முழுநீறு பூசவல்ல முனிவர் தாமே.

நுண்பொருள்

முறைப்படி அமைத்த திருநீற்றை, உறைத்த மெய்ப்பொருள் உணர்சியுடன் நியமமாகத் தரித்தல் அரனடிக் கீழ் இருத்தும்.

சாதியினில் தலையாய தருமசீலர்
தத்துவத்தின் நெறியுணர்ந்தோர் தங்கள் கொள்கை
நீதியினில் பிழையாது நெறியில் நிற்போர்
நித்தம் நியமத்து நிகழ் அங்கி தன்னில்
பூதியினைப் புதிய பாசனத்துக் கொண்டு
புலியதளின் உடையானைப் போற்றி நீற்றை
ஆதிவரும் மும்மலமும் அறுத்த வாய்மை
அருமுனிவர் முழுவதும் மெய் அணிவரன்றே.

– புராணம்

64. அப்பாலும் அடிச்சார்ந்தார்

"அப்பாலும் அடிசார்ந்தார் அடியார்க்கும் அடியேன்"
- திருத்தொண்டத் தொகை

வருக்கம் அடைந்து நல்நாவலூர் மன்னவன் வண்தமிழால்
பெருக்க மதுரத் தொகை பிறை சூடிதன் பெய்கழற்கே
ஒருக்கு மனத்தொடு அப்பால் அடிசார்ந்தவர் என்றுலகில்
தெரிக்கும் அவர் சிவன் பல்கணத்தோர் நம் செழுந்தவரே
- திருத்தொண்டர் திருவந்தாதி

சேர சோழ பாண்டியர்களுக்குரிய தமிழ்நாட்டிற்கு அப்பாலுள்ள பிறநாடுகளிற் பிறந்து சிவபெருமானது திருவடி அடைந்தவர்களும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச்செய்த திருத்தொண்டத் தொகையில் பாடப்பெற்ற சிவனடியார்கள் வாழ்ந்த காலத்துக்கு முன்னும் பின்னும் தோன்றித் திருவடி சார்ந்தவர்களும் அப்பாலும் அடிசார்ந்தார் என்னும் திருக்கூட்டத்தினராவார்.

திருத்தொண்டர்புராண சாரம்

தாராரும் மூவேந்தர் பமிலும் தொல்லைத்
தமிழ்நாட்டப் புறத்து இறைவன் சரணம் சார்ந்த
சீராரும் தொண்டர்களும் அண்டர் ஏத்தும்
திருத்தொண்டத்தொகை அருளால் செப்பும்காலத்து
ஏராரும் தொடைமிலுறாது இப்பால் அப்பால்
எந்தைபிரான் அடி அடைந்த இயல்பினோரும்
ஆராத காதலுடையவர்களன்றோ
அப்பாலும் அடிசார்ந்த அடியார் தாமே

நுண்பொருள்

திருத்தொண்டர் கூட்டம் தேசகாலம் கடந்தது.

மூவேந்தர் தமிழ் வழங்கு நாட்டுக்கப்பால்
முதல்வனார் அடிசார்ந்த முறைமையோரும்
நாவேய்ந்த திருத்தொண்டத்தொகையிற் கூறும்
நற்றொண்டர் காலத்து முன்னும் பின்னும்
பூவேய்ந்த நெடுஞ்சடைமேல் அடம்புதும்பை
புதியமதி நதி இதழி பொருந்த வைத்த
சேவேந்து வெல்கொடியான் அடிசார்ந்தார்கள்
செப்பிய அப்பாலும் அடிசார்ந்தார் தாமே - பெரிய புராணம்

65. பூசலார்நாயனார்

"மன்னியசீர் மறைநாவன் நின்றவூர்ப் பூசல்
(வரிவளையாள் மானிக்கும் நேசனுக்கு) மடியேன்"
- திருத்தொண்டத்தொகை

"பதுமநற் போதன்ன பாதத்தரற்கொரு கோயிலையான்
கதுமெனச் செய்குவது என்று கொலாம்" என்று கண்துயிலா(து)
அதுமனத்தே எல்லிதோறு நினைந்தருள் பெற்றதென்பர்
புதுமணற் தென்றலுலா நின்ற ஊர்தனிற் பூசலையே"
- திருத்தொண்டர் திருவந்தாதி

தொண்டை நாட்டில் திருநின்றவூரிலே மறையவர் குலத்திலே தோன்றியவர் பூசலார் என்னும் பெருந்தகையார். இவர் சிவனடியாராகிய அன்பர்க்கு ஏற்றபணி செய்தலே பிறவிப்பயன் எனக் கொண்டு பொருள் தேடி அடியார்க்கு அளித்து வந்தார். சிவபெருமானுக்குத் திருக்கோயில் அமைத்துப் பணிசெய்ய விரும்பிய இவர் தம்மிடத்துப் பொருள் இல்லாமையால் அதற்குரிய பொருளை வருந்தித் தேடியும் பெற இயலாதவராயினர். இந்நிலையில் மனத்தினாலே சிவபெருமானுக்குத் திருக்கோயில் அமைக்க எண்ணினார். மனத்தின்கண் சிறிதுசிறிதாகப் பெரும் பொருள் சேர்த்தார். திருப்பணிக்கு வேண்டிய கல் மரம் முதலிய சாதனங்களையும் பணிசெய்தற்குரிய தச்சர் முதலிய பணியாளர்களையும் தம் மனத்தில் தேடிக் கொண்டார். நல்ல நாள் பார்த்துத் திருக்கோயிற் பணியைத் தம்மனத்தினுள்ளே தொடங்கி இரவிலும் துயிலாமல் அடிப்படை முதல் உபானம் முதலிய வரிசைகளை அமைத்து உரியஅளவுப்படி விமானமும் சிகரமும் அமைத்து அதன்மேல் தூபியும் நட்டனர். சுதைவேலைமுடித்து அக்கோயிலினுள்ளே கிணறு திருக்குளம் மதில் முதலான எல்லாம் வகுத்தமைத்து இவ்வாறு தம்மனத்தில் உருவாகிய திருக்கோயிலினுள்ளே சிவபெருமானை எழுந்தருளச் செய்தற்கேற்ற நல்லநாளும் வேளையும் நிச்சயித்தனர்.

இவரது திருப்பணி இவ்வாறு நிகழ்ந்து கொண்டிருக்கும் நிலையில், காடவர்கோனாகிய வேந்தர்பெருமான் காஞ்சி நகரத்திலே

இறைவனுக்குத் திருக்கற்றளி அமைத்துத் தன் பெரிய பொருள் முழுவதும் அத்திருக்கோயிற் பூசனைக்கென்று வகுத்துத் தான் அமைத்த கற்றளியிலே சிவபெருமானை எழுந்தருளுவித்தற்குப் பூசலார் அகத்தில் வகுத்த அந்த நாளையே குறித்தனன். பூசலாரது அன்பின் திறத்தை உலகத்தார்க்கு அறிவிக்கத் திருவுளங் கொண்ட சிவபெருமான், அந்நாளின் முதல் நள்ளிரவில் காடவர் கோமான் முன் கனவில் எழுந்தருளி நின்றவூர்ப்பூசல் அன்பன் நெடிதுநாள் நினைந்து செய்த நன்மை மிக்க ஆலயத்துள் நாளை நாம் புகுவோம்; நீ இங்குச் செய்யத் துணிந்த தாபனத்தை நாளையதினத்தில் வைத்துக் கொள்ளாது பின்னர் மற்றொரு நாளிற் செய்வாயாக' என்று பணித்தருளி மறைந்தருளினார்.

பல்லவர்கோன், துயிலுணர்ந்தெழுந்து இறைவர் உளமுவக்கும் வண்ணம் பெரியதிருக்கோயிலை அமைத்த பெருந்தகையாரைச் சென்று காணவிரும்பித் திருநின்றவூரை அடைந்தான். அங்கு அருகணைந்தவர்களை நோக்கி, 'பூசலார் அமைத்த கோயில் எங்கே உள்ளது?' என்று வினவினான். அதுகேட்ட நின்றவூர் மக்கள்,'பூசலார் இவ்வூரிற் கோயில் எதுவும் கட்டவில்லை' என்றனர், மன்னன் அவ்வூர் மறையவர்களை அழைத்து 'பூசலார் யார்' எனக்கேட்டறிந்து, ஆசில் வேதியராகிய அவர் இருக்கு மிடத்திற்குத் தானே சென்று அவரை வணங்கி, 'தேவரீர் அமைத்த திருக்கோயில் யாது? அக்கோயிலில் சிவபெருமானை எழுந்தருளச் செய்யும் நாள் இந்த நாள் என்று இறைவர் தெரிவித்தருளத் தெரிந்து உம்மைக்கண்டு பணிதற்கு வந்தேன்' என்றான். பூசலார், அரசன் உரை கேட்டு மருண்டு, 'இறைவர் என்னையும் பொருளாக அருள்செய்தாராயின் அக்கோயிலின் பெருமை எத்தகையது' என்று தமக்குள்ளே சிந்தித்துத் தாம் மனத்தால் முயன்று செய்த திருக்கோயிலின் அமைப்பினை மன்னனுக்கு விளங்க எடுத்துரைத்தார். அரசன் அதிசயித்துப் பூசலாரை நிலமுறத் தாழ்ந்து வணங்கித் தனது நகருக்குச் சென்றான்.

பூசலார் நாயனார் தாம் கட்டிய மனக்கோயிலிலே குறித்த நற்பொழுதில் சிவபெருமானைத் தாபித்துப் பூசனைகள் எல்லாம்

பெருஞ்சிறப்புடன் பல நாட்கள் பேணிச் செய்திருந்து சிவபெருமான் திருவடிநீழலடைந்தார்.

திருத்தொண்டர் புராணசாரம்

பொருவரும் தண்டக நாட்டு நின்றவூர் வாழ்
பூசுரர்கோ பூசலார் புந்தியாலே
இருநிதியம் தேடி ஆலயமும் ஆக்கி
எழுந்தருளப் பண்ணுவதாய் எண்ணும்காலை
அரனதனைக் காடவர்கோக் கருள மன்னன்
அந்நகரம் அணைந்து அவ்வா றறிந்துதாள
விரவுமனக் கோயிலுற இருத்தி அங்கண்
வேண்டுவ கொண்டிறைஞ்சி அருள்மேவினாரே.

நுண்பொருள்

1) இறைன் மகிழ்ந்துறைதற்கான கோயிலமைத்தல் சிறந்தசிவபணி.
2) பெருஞ்செல்வம் கொண்டு அமைக்கும் 'கற்றளி' (கருங்கற்கோயில்) யை விட, பெருகிய அன்பினோடும் நினைப்பினால் எடுக்கும் ஆலயம் சிவபெருமானுக்கு உவப்பானது.

நின்றவூர் பூசலன்பன் நெடிதுநாள் நினைந்து செய்த
நன்று நீடாலயத்து நாளைநாம் புகுவோம் நீ இங்கு
ஒன்றிய செயலை நாளை ஒழிந்து பின் கொள்வாய் என்று
கொன்றை வார்சடையார் தொண்டர் கோயில் கொண்டருளப் போந்தார்.

- பெரிய புராணம்

பூசலார்நாயனார் குருபூசைநாள் : ஐப்பசி அநுடம்

66. மங்கையர்க்கரசியார்.

"வரிவளையாள் மானிக்கும் நேசனுக்கும் அடியேன்"

- திருத்தொண்டத்தொகை

"பூசல் அயில் தென்னனார்க்கு அனலாகப் பொறாமையினால்
வாசமலர்க்குழல் பாண்டிமாதேவியார் மானி கண்டீர்
தேசம் விளங்கத் தமிழாகரர்க்கு அறிவித்து அவரால்
நாசம் விளைத்தாள் அருகந்தருக்குத் தென்னாட்டகத்தே"

- திருத்தொண்டர் திருவந்தாதி

மங்கையர்க்கரசியார் சோழமன்னனின் தவக்கொழுந்தாய் அவதரித்தவர். அவர் சைவ ஒழுக்கத்தில் சிறந்தவராய் வளர்ந்து திருமணப் பருவமடைந்தார். சோழமன்னன் அவரை நின்றசீர்நெடுமாறன் என்னும் பாண்டிய மன்னனுக்கு மணஞ்செய்து வைத்தார்.

பாண்டிய மன்னன் தான் செய்த தீவினைப் பயனாய் சமணசமயத்தைச் சார்ந்து ஒழுகினான். சமண அடிகள்மாரை அவன் பெரிதும் மதித்தான். குடிகளெல்லாரும் சமணராயினர். அரசவையிலே குலச்சிறையார் என்னும் ஓரமைச்சரைத் தவிர மற்றையோரெல்லாம் சமண சமயத்தவராகவே இருந்தனர். இவ்வண்ணம் சமண இருள் சூழ்ந்து சைவம் குன்றியிருந்தமை குறித்து மங்கையர்க்கரசியார் மனம் நொந்தார். அவர் பாண்டி நாடெங்கும் சைவ வாய்மை விளங்க வேண்டுமென்ற கருத்தினராய் இருந்தார்.

இவ்வாறிருக்கும் பொழுது திருஞானசம்பந்தப்பிள்ளையார், பாண்டி நாட்டுக்கு அணித்தாகத் திருமறைக்காட்டில் வந்திருப்பதாகக் கேள்விப்பட்டார். இந்நற்செய்தியைக் கேள்விப்பட்டதும் தன் மனக்கருத்து நிறைவுற்றது எனக் களிப்புற்றார். சம்பந்தப்பிள்ளையார் தொலைவில் இருந்தாலும் அவர் தம் திருவடியைக் கும்பிட்டதோர் மகிழ்ச்சி கொண்டார். அமைச்சரான குலச்சிறையாரோடு ஆலோசித்துச் சம்பந்தப்பெருமானிடம் பரிசனத்தாரை அனுப்பிவைதார். பரிசனத்தார் சென்று பரசமயகோளரியாரை வணங்கி மங்கையர்க்கரசியாரின் மனக்கருத்தைக்

கூறினார்கள். சம்பந்தப்பிள்ளையாரும் பாண்டிநாட்டுக்கு எழுந்தருளத் திருவுளம் பற்றினார்.

சம்பந்தப்பிள்ளையார் பல திருப்பதிகளையும் வணங்கி மதுரை-யம்பதியை நெருங்கிய வேளையில் மங்கையர்க்கரசியாருக்கு நன்னிமித்-தங்கள் தோன்றின. அப்போது திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் முத்துச் சிவிகை மீதமர்ந்து சிவனடியார் சூழ மதுரை வந்தணைந்தனர் என்ற செய்தியைக் கண்டோர் வந்து கூறினர். அந்த மங்கலமான செய்தியைச் சொன்னோர்க்கு மங்கையர்க்கரசியார் பரிசில் அளித்து மகிழ்ந்தார். அவ்வேளையில் குலச்சிறையாரும் வந்து அடிபணிந்து நின்றார். அவரிடம் 'நமக்கு வாழ்வளிக்க வந்தவள்ளலை எதிர்கொண்டு அழைத்துவாரும் எனப் பணித்தார். தாமும் ஆலவாய் அண்ணலை வழிபட்டு வருவதாக அரசனிடம் கூறிச் சென்று நல்வரவளித்ததற்காகக் காத்து நின்றார்.

ஆலவாயமர்ந்தபிரானை வணங்கும் அன்புறு காதலுடன் வருகின்ற சம்பந்தப்பிள்ளையாருக்கு எதிர்செல்லாது மங்கையர்க்கரசியார் ஒரு புறம் ஒதுங்கி நின்றார். வழிபட்டுத் திருப்பதிகமும் பாடிப் பரவி கோயில் முன்றில் வந்த போது தலைமிசைக் குவித்தகையராய் முன்சென்றார். பிள்ளையாரது அருகில் நின்ற குலச்சிறையார் முன்வரு-மிவரே பாண்டிமாதேவியாரெனக் காட்டியதும் பிள்ளையார் விரைவொடும் அரசியார் பக்கமாகச் சென்றார். தேவியார், சிவக்கன்றின் செங்கமலப் பொற்பாதத்தை வீழ்ந்து வணங்கினார். வீழ்ந்து கும்பிட்டுக் கிடக்கும் மங்கையர்க்கரசியாரைப் பிள்ளையார் பெருகிய அருளோடு கைகளால் எடுத்தார். எழுந்து கையாரத்தொழுது நின்ற அரசியார் கண்ணீர் மல்க "யானும் என்பதியும் செய்த தவம் என்கொல்" எனவாய் குழறிக் கூறிநின்றார். பிள்ளையாரும் "பரசமயச் சூழலிலும் தொண்டராய் வாழும் உங்களைக் காண வந்தோம்" என அருள் மொழி கூறினார்.

பிள்ளையார் அருள் பெற்றுப் பாண்டி நாடு உய்ந்ததென்ற உறுதியோடு அரசியார் அரண்மனை புகுந்தார். அன்று பள்ளியறைக்கு வந்த மன்னன் யாதும் பேசாது சோகமாயிருந்தான். அரசியார் 'மன்ன!

உமக்கு நேர்ந்ததென்ன? துயரத்துடன் இருக்கிறீரே" என விசாரித்தார். அதற்கு அரசன் 'சோழ நாட்டுச் சிவவேதியர் ஒருவர் நமது அடிகள்மாரை வாதினில் வெல்ல வந்திருக்கின்றார். அவரை அடிகள் மார் 'கண்டு முட்டு' யான் அதனைக் "கேட்டு முட்டு" எனக் கூறினான். 'வாதினில் வென்றவர் பக்கம் சேர்தலே முறை. அதன் பொருட்டுக் கவலை ஏன்? கவலை ஒழிக' என ஆறியிருக்கச் செய்தார் அரசியார். அரசனுக்கு ஆறுதல் கூறினாரேனும் அன்றிரவு கவலையுடனேயே இருந்தார். வஞ்சனையில் வல்ல அமணரால் சம்பந்தப்பிள்ளையாருக்கு என்ன ஆபத்து நேருமோ என்பதே அவர்தம் கவலை. அவ்வாறு ஆபத்தேதும் நேரின் உயிர் துறப்பதே செய்யத்தக்கது எனும் உறுதியும் பூண்டார்.

அரசியார் அஞ்சியவண்ணமே அன்று இரவு அமண்தீயர் ஆளுடைய பிள்ளையார் உறைந்த மடத்துக்குத் தீவைத்தனர். இச்செய்தி மானியாருக்கு எட்டியபொழுது பெரிதும் மனம் வருந்தினார். தாமும் குலச்சிறையாரும் பிள்ளையாரை இத்தீயர் வாழும் நாட்டுக்கு வரவழைத்-ததே பெரிதும் பிழையாயிற்று என்றும் இதற்குக் கழுவாய் மாழ்வதே எனவும் துணிந்தார். அப்பொழுது அமண்பாதகர் வைத்த தீயால் திருமடத்திலே தீதொன்றும் ஆகவில்லை என்றறிந்து ஆறுதலுற்றார். இந்நிலையிலே மன்னனை வெப்புநோய் பற்றி வருத்தும் செய்தியைக் காவலாளர் வந்து கூறினர். அதுகேட்ட அரசியார் விரைந்து அரசனிடம் சென்றார். மருத்துவராலும் அமண் அடிகளின் மந்திரத்தாலும் வெப்பம் சிறிதும் தணியாது அரசன் வருந்துவது கண்டு அச்சமுற்றார். பிள்ளையார் பொருட்டு வைத்த தீயே இவ்வண்ணம் வெப்பு நோயாக வருத்துகிறதென எண்ணியவராய் "திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகளை அழைத்தாலே இந்நோய் தீரும்" எனக் கூறினார். "ஞானசம்பந்தன்" எனும் நாமமந்திரம் காதிற்புக்க அளவிலே அயர்வு நீங்கி உணர்வு பெற்ற பாண்டியன் 'அவரை அழைப்பீராக' எனப் பணித்தான்.

அரசியார் அமைச்சருடன் அணையுடைத்துப் பாயும் வெள்ளம் போன்றதோர் அன்பு வெள்ளத்துடன் ஆளுடையபிள்ளையார் தங்கியிருக்-கும் திருமடத்தை அடைந்தார். அங்கு ஞானத்திருவுருவாயும், வேத-காவலராகவும், மண்ணில் வளரும் மதிக்கொழுந்தாகவும், சிவபெருமானது

சீர் பாடல் பாடும் ஏழிசை அமுதமாயும் தோன்றிய சிவபுரப்பிள்ளையைக் கண்களிப்பக் கண்டார். இச்சிவம்பெருக்கும் பிள்ளைக்கு அமணர் செய்த ஆபத்தை நினைந்து சலிப்படைந்தவராய் அடிகளில் வீழ்ந்து அழுது அரற்றினார். பிள்ளையார் 'தீங்குளவோ?' என வினவினார். அரசியார் 'சமணர் செய்த தீச்செயல் அரசனுக்குத் தீப்பிணியாய்ப் பற்றியது. இத்தீப்பிணியைத்தீர்த்து எமதுயிரும் மன்னவனுயிரும் காத்தருளவேண்டும்' எனப் பணிந்தார். ஆளுடையபிள்ளை 'ஒன்றும் நீர் அஞ்ச வேண்டாம், அமணரை வாதில் வென்று அரசனைத் திருநீறு அணிவிப்பன்" என உறுதி மொழி கூறினார்.

சம்பந்தப்பிள்ளையார் முத்துச்சிவிகையிலேறி அரண்மனைக்கு எழுந்தருள மங்கையர்க்கரசியாரும் சிவிகையிலேறி அரண்மனைவந்தார். பாண்டியமன்னன் சம்பந்தப்பிள்ளையாருக்குத் தனது தலைப்புறமாக ஓர் பொன்னாசனம் காட்டினான். செம்பொற்பீடத்தில் வீற்றிருக்கும் சம்பந்தரைக் கண்டு பொறாத சமணர்கள் கோலும் நூலும் கொண்டு குரைத்தார்கள். அநேகராய்ப் பிள்ளையாரைச் சூழ்ந்து பதறிக் கதறும் கொடுமை கண்டு மங்கையர்க்கரசியார் அரசனிடம் "இப்பானல்வாயொரு பாலகரை அமணர்கள் திரளாகச் சூழ்ந்து கதறுவது அழகன்று; உங்கள் தீப்பிணியைப் பிள்ளையார் தீர்த்த பிறகு சமணர் வல்லமை-யுடையவராயின் வாது செய்யலாம்" எனக் கூறினர். அரசன் அதுவே நன்றென்று அமணரை நோக்கி "நீங்கள் செய்யத்தக்க வாது என் சுரநோயைத் தீர்த்தலே. அதனைச் செய்யுங்கள்" எனக்கூறினான். சமணரது மருந்து மந்திரமெல்லாம் மேலும் சுரத்தை அதிகரிக்கவே செய்தன. சம்பந்தப்பிள்ளையார் திருநீற்றுத்திருப்பதிகம் பாடிப்பூசிய திருநீறு மன்னனைக் குணமாக்கியது. அமணர்கள் இவ்வாதத்தில் தோற்றதுடன் அனல்வாதம், புனல்வாதம் என்பவற்றிலும் தோற்றுக் கழுவேறினர். பாண்டிய மன்னனுக்குப் பரசமய கோளரியார் திருநீற-ளித்தார். அவன் அதனைப் பணிந்து பெற்று மேனியெங்கும் பூசி மகிழ்ந்தான். அது கண்டு மதுரை மாநகரத்துள்ளாரெல்லாம். மங்கல நீறணிந்து சைவராயினர். தம்மனக்கருத்து முற்றிய மங்கையர்க்கரசியார் சம்பந்தப்பெருமான், பாண்டியமன்னன் ஆதியாரோடு அங்கயற்கண்ணி தன்னொடுமமர்ந்த ஆலவாயண்ணலை வழிபட்டு மகிழ்ந்தார்.

சம்பந்தப்பிள்ளையார் ஆலவாய்ப் பெருமானை வழிபட்டிருந்த நாளெல்லாம் மங்கையர்க்கரசியாரும் சென்று அவர்தம் திருவடிகளை வழிபடும் பாக்கியம் பெற்றார். சம்பந்தப்பிள்ளையார் தென்தமிழ் நாட்டுத் திருத்தலங்கள் பலவற்றையும் வழிபடும் ஆராக்காதலால் புறப்பட்ட பொழுது பாண்டிமாதேவியாரும், மன்னன், மந்திரியார் ஆதியோரும் அவருடன் சேர்ந்து சென்றனர். திருப்பரங்குன்றம் ஆகிய தலங்களை வழிபட்டுக் குலச்சிறையார் அவதரித்த தலமாகிய திருமணமேற்குடியைச் சென்றடைந்தனர். அத்தலத்தை வழிபட்ட பின் சம்பந்தப்பெருமான் சோழநாட்டுத் தலங்களை வழிபடப்புறப்பட்டார். மங்கையர்க்கரசியாராதியோரும் பிள்ளையாருடன் செல்ல ஒருப்பட்டனர். பிள்ளையார் அவர் தம் பேரன்புக்கு உவப்புற்றனரெனினும் அவர்களது கடமையினை வற்புறுத்தும் முறையில் "நீங்கள் பாண்டிநாட்டிலிருந்து சிவநெறியைப் போற்றுவீராக" எனப் பணித்தருளினார். அவர்களும் ஆளுடைய பிள்ளையின் ஆணையை மறுத்தற்கஞ்சி தொழுது நின்றனர். பிள்ளையார் வீடையீந்து சோழ நாடு சென்றதும் மதுரை வந்து சிவநெறியைப் போற்றி இருந்தனர். திருநாவுக்கரசு சுவாமிகள் திருவாலவாயிறைவரைத் தரிசித்திருந்த காலத்தில் தாமும் தம்பதியோடு சென்றுஅவர் திருப்பாதத்தைப் பணியும் பாக்கியம் பெற்றார். மன்னனுக்கு நெடுங்காலம் சைவவழித்துணையாயிருந்த மங்கையர்க்கரசியார் மன்னவனோடு ஈசன் இணையடி அடைந்தார்.

திருதொண்டபுராணசாரம்.

மங்கையர்க்குத் தனியரசி வளவர் குலக் கொழுந்து
மன்னவர் சூழ் தென்னவர்க்கு மாதேவியார் மண்
சங்கைகெட அமணச்சமயம் சாடவல்ல
சைவ சிகாமணி ஞானத் தமிழில் கோத்த
பொங்கு திரு வருளுடைய போதவல்லி
பொருவினொடு மாறனார் புயமேல் வாழும்
செங்கலச முலையாள் தன் அருளால் இன்பம்
சேர்ந்தவரைப் புகழ்ந் தடியேன் வாழ்ந்தவாறே

நுண்பொருள்

1) எந்நிலையிலும் சைவ ஒழுக்கத்தைப் பேணுதல் மங்கையர்மாண்பு
2) திருநீற்று நெறிவளர்க்கும் மங்கையர் மனக்கருத்து, திருவருளால் நிறைவுறும்.
3) மங்கையர் சைவ வாய்மைபிழைக்கும் கணவரின் பழிதீர்ப்பர்.
4) நாயன்மாரை வழிபடுவது நாட்டுக்கு நலன்தரும்.
5) அரசதிருவுடைய மங்கையரால் நாட்டில் சைவம் ஓங்கும்.
6) தொண்டுறுதி கொண்ட மங்கையர் போற்றப்படுவர்.

மங்கையர்க்கரசி வளவர்கோன் பாவை வரிவளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி பாண்டிமாதேவி பணிசெய்து நாள்தோறும் பரவப்
பொங்கழலுருவன் பூதநாயகனால் வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற் கண்ணி தன்னொடும் அமர்ந்த ஆலவாயாவதும் இதுவே.

- தேவாரம்

மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம்
வளவர் திருக்குலக் கொழுந்து வளைக்கை மானி
செங்கமலத் திருமடந்தை கன்னிநாடாள்
தென்னர்குலப் பழி தீர்த்த தெய்வப்பாவை
எங்கள் பிரான் சண்பையர்கோன் அருளினாலே
இருந்தமிழ் நாடுற்ற இடர் நீக்கித் தங்கள்
பொங்கொளி வெண்திருநீறு பரப்பினாரை
போற்றுவார் கழலெம்மால் போற்றலாமே

- புராணம்

மங்கையர்க்கரசியார் குருபூசைநாள் : சித்திரை உரோகிணி

67. நேசநாயனார் புராணம்

"மன்னியசீர் மறைநாவன் நின்றவூர்ப் பூசல்
வரிவளையாள் மானிக்கும் நேசனுக்கு மடியேன்"

- திருத்தொண்டத்தொகை

"நாட்டமிட் டன்றரி வந்திப்ப வெல்படை நல்கினர்தந்
தாட்டரிக்கப் பெற்றவனென்பர் சைவத்தவர் அரையிற்
கூட்டுமக்கப்படம் கோவணம் நெய்து கொடுத்து நன்மை
ஈட்டு மக் காம்பீலீச்சாலிய நேசனை இம்மையிலே"

- திருத்தொண்டர்திருவந்தாதி

நல் ஒழுக்கம் உடைய பெரியோர்கள் நிலைபெறவாழும் காம்பீலி என்னும் பழம்பதி ஒண்றுண்டு. அதில் அறுவையர் குலத்தில் செல்வம் மிக்க குடியில் வந்தவர் நேசர் என்பவர். அவர் இடையறாது சிவனடியார்களைப் போற்றி வந்தார். ஒரு போதும் சிவனடிச் சிந்தை மறவார். வாக்கினால் திருவைந்தெழுத்து ஓதுவதையும் மறவார்.தமது மரபின் கைத்தொழிலாகிய நெசவுத் தொழிலைச் சிவனடியார்க்காகவே செய்து வந்தார். உடையும், கீழும் பழுதில் கோவணமும் நெய்து அடியார்களுக்கு இடைவிடாது நாளும் அவர் வேண்டியவாறே முறையால் ஈந்து வந்து சிவனடி நிழல் சேர்ந்தார்.

திருத்தொண்டர் புராணசாரம்

சாலியர் கோ காம்பீலித் தலைவர் மேன்மை
தாவாத புகழ் நேசர் தம் சொல் என்றும்
கோலிய ஐந்தெழுத் தோதிச் சிந்தை உன்னி
கொண்டபொருள்அன்பர் கொளக்கொடுத்து வாழ்வார்
சீலமிகும் திருத்தொண்டர்க்கு உடையும் கீழும்
திருந்திய வெண்கோவணமும் சேர ஈந்து
பாலனைய ஒளி நீற்றான் பாதம் ஏத்தி
பரலோகம் முழுதாண்ட பான்மையாரே.

நுண்பொருள்

சிவனடியார்க்கு உடை உதவுதல் சிறந்த சிவதொண்டு

"ஆங்கவர் மனத்தின் செய்கை அரனடிப் போதுக்காக்கி
ஓங்கிய வாக்கின் செய்கை உயர்ந்த ஐந்தெழுத்துக்காக்கி
தாங்கு கைத்தொழிலின் செய்கை சங்கரன் அடியார்க்காகப்
பாங்குடை உடையும் கீழும் பழுதில் கோவணமும் நெய்வார்' - பெரியபுராணம்

நேசநாயனார் குருபூசைநாள் : பங்குனி உரோகிணி

68. கோச்செங்கட் சோழநாயனார்

"தென்னவனா யுலகாண்ட செங்கணார்க் கடியேன்"
- திருத்தொண்டத் தொகை

1) மைவைத்த கண்டன் நெறியன்றி மற்றோர் நெறிகருதாத்
தெய்வக் குடிச்சோழன் முன்பு சிலந்தியாய்ப் பந்தர்செய்து
சைவத் துருவெய்தி வந்து தரணிநீ டாலயங்கள்
செய்வித் தவன்திருக் கோச்செங்கணானெனுஞ் செம்பியனே.

2) செம்பொன் அணிந்து சிற்றம்பலத்தைச் சிவலோகமெய்தி
நம்பன்கழற் கீழிருந்தோன் குலமுதலென்பர் நல்ல
வம்பு மலர்த்தில்லை ஈசனைச் சூழ மறைவளர்த்தான்
நிம்ப நறுந்தொங்கற் கோச் செங்க ணானெனும் நித்தனையே
- திருத்தொண்டத் திருவந்தாதி

சோழநாட்டிலே காவிரிச் சந்திர தீர்த்தத்தின் அருகிற் பெருமரங்-கள் நிறைந்த நீண்ட குளிர்ந்த சோலையொன்றுளது. அச்சோலை-யிலுள்ள ஒரு வெண்ணாவல் மரத்தடியில் வெளிப்பட்டருளிய சிவலிங்கத் திருமேனியைக் கண்டு பெருந்தவத்தையுடைய வெள்ளை யானை தன் துதிக்கையினால் நன்னீரைமுகந்து நாள்தோறும் திருமஞ்சனஞ் செய்து மலர்தூவி வழிபாடு செய்தது. அதனால் அவ்விடத்திற்குத் திரு ஆனைக்கா என்னும் பெயருண்டாயிற்று. அங்கே மெய்யுணர்விற் சிறந்த சிலந்தியொன்று இறைவன் திருமுடிமேல் சருகுமுதலியன உதிராவண்ணம் தன் வாயின்நூலினால் மேற்கட்டிபோன்ற அழகிய பந்தர் அமைத்தது. யானை வழிபடச் சென்றபோது சிலந்தி வாய்நீர் நூலால் அமைத்த அப்பந்தரினைத் தூய்மையற்றதென்று நினைத்துச் சிதைத்தது. அதுகண்ட சிலந்தி யானையின் கைசுழன்றமையாற் பந்தர் சிதைந்ததென்றெண்ணி மீளவும் தன்வாய் நூலால் அழகியபந்தர் செய்தது. அதனை மறுநாளும் யானை அழித்துப் போக்கியது. அதுகண்ட சிலந்தி 'இறைவர் திருமுடிமேற் சருகுமுதலியன விழாதபடி நான்வருந்தியிழைத்த நூற்பந்தரை இவ்வாறு அழிப்பதோ? என வெகுண்டு யானையின் துதிக்கையினுள்ளே புகுந்து கடித்தது. அவ் வருத்தம் பொறாத யானை தன்துதிக்கையினை நிலத்தில் மோதி அறைந்து

வீழ்ந்திறந்தது. அதன் துதிக்கையினுள்ளே புகுந்து கடித்த சிலந்தியும் உயிர் துறந்தது. ஆனைக்கா இறைவர் அருள்புரியும் நெறியால் அவ்வெள்ளையானைக்கு வீடுபேறளித்தருளினார். சிலந்தியைச் சோழமன்னனாகப் பிறந்து சிவதொண்டாற்றியபின் வீடுபேறடைய அருளினார்.

அக்காலத்திற் சோழ மன்னனாகிய சுபதேவன் என்பான் தன்பட்டத்தரசி கமலவதி என்பவளுடன் திருத்தில்லை சார்ந்து கூத்தப்-பெருமானை வழிபட்டிருந்தனன். நெடுங்காலமாக மக்கட் பேறில்லாத அவ்விருவரும் இறைவரை வழிபட்டுப் போற்றிய நிலையில் இறைவர் அவர்கட்கு அருள் புரிந்தார். அதன்பயனாகக் கமலவதி கருவுற்றாள். திருவானைக்காவிற் பெருமானுக்குப் பந்தரிழைத்த சிலந்தி மகவாய்ச் சார்ந்தது. கருமுதிர்ந்து மகவு பெறும் வேளைவந்த போது, 'இன்னும் ஒரு நாழிகை கழித்துக் குழந்தைபிறக்குமானால் இக்குழந்தை மூன்றுலகமும் அரசாளும்' எனச் சோதிடர்கள் கூறினார்கள். அச்சொற் கேட்ட கமலவதி 'அவ்வாறு ஒரு நாழிகை கழித்துப் பிள்ளை பிறக்-கும்படி என்காலைப் பிணித்துத் தலைகீழாக மேலே தூக்கி நிறுத்துங்கள்' என்றுசொல்ல அவ்வாறேசெய்தனர். குறித்த வண்ணம் ஒரு நாழிகை கழித்து ஆண்குழந்தை பிறந்தது. கால நீடிப்பால் அக்குழந்தையின் கண்கள் சிவந்திருந்தன. ஈன்ற தாய் அக்குழந்தையைக் கண்டு 'என் கோச் செங்கணானோ' என அருமை தோன்ற அழைத்து உடனே உயிர் நீங்கினாள். மன்னன் தன் குழந்தையைத் தன் உயிரெனக் காத்து வளர்த்து உரிய பருவத்தில் நாடாள் வேந்தனாக முடிசூட்டித் தான் தவநெறியைச் சார்ந்து சிவலோகஞ் சார்ந்தான்.

கோச்செங்கட் சோழர், சிவபெருமானது திருவருளினாலே முன்னைப்பிறப்பின் உணர்வொடு பிறந்து சைவத்திருநெறி தழைக்கத் தம் நாட்டில் சிவாலயங்கள் பலவற்றைக் கட்டுந் திருப்பணியினை மேற்கொண்டார்; திருவானைக்காவில் தாம் முன்னைப் பிறப்பில் சிலந்தியாக இருந்து இறைவர் திருமுடிமேல் நூலாற் பந்தரிழைத்து அருள் பெற்ற வரலாற்றினை அறிந்தவராதலால் அங்கு இறைவன் வீற்றிருக்கும் ஞானச் சார்புடைய வெண்ணாவல் மரத்தினுடனே கூத் தம்பெருமான் வீற்றிருந்தருளும் நிலையில் அதனைப் பெருந்திருக்-கோயிலாக அமைத்தார். அமைச்சர்களை ஏவிச் சோழ நாட்டின் உள்நாடுகள் தோறும் சிவபெருமான் அமர்ந்தருளும் அழகிய திருக்கோயில்கள் பலவற்றை அமைத்து அக்கோயில்களில் நிகழும்

பூசனைக்கு வேண்டிய அமுதுபடி முதலான படித்தரங்களுக்குப் பெரும்பொருள் வகுத்துச் செங்கோல் முறையே நாட்டினை ஆட்சிபுரிந்தார். பின்னர் இறைவன் திருநடம் இயற்றும் தில்லைப்பதியை அடைந்து பொன்னம்பலத்தே ஆடல்புரியும் பெருமான் திருவடிகளை வணங்கிப் போற்றி அங்குத் தில்லைவாழந்தணர்களுக்குத் திருமாளிகைகள் கட்டுவித்துப் பின்னும் பல திருப்பணிகளைச் செய்துகொண்டிருந்து தில்லையம்பலவாணர் திருவடிநீழலை அடைந்தார்.

திருத்தொண்டர் புராணசாரம்

வெண்ணாவல் இறைக்கு ஒளி நூற்பந்தர் செய்த
வியன் சிலம்பி அது அழித்த வெள்ளானைக் கை
உண்ணாடிக் கடித்த உடலொழியச் சோழன்
உயர்குலத்து சுபதேவன் கமலத்து ஓங்கும்
பெண்ணாகி அவள் வயிற்றில் வைகிச் செங்கட் பெருமானாய்
தென்னவனாய்ப் பெருங்கோயில் பலவும்
கண்ணார் வித்துயர்தில்லை மறையவர்க்கு முறையுள்
கனகமயமாக்கி அருள் கைக்கொண்டாரே.

சிலந்தியும் ஆனைக்காவில் திருநீழல் பந்தர்செய்து
உலந்தவன் இறந்தபோதே கோச்செங்க ணானுமாக
கலந்தநீர் காவிரிசூழ் சோணாட்டுச் சோழர்தங்கள்
குலத்தினில் பிறப்பித்திட்டார் குறுக்கை வீரட்டனாரே

– திருநாவுக்கரசர்

ஆனைக்காவில் தான் முன்னம் அருள்பெற்றதனை அறிந்தங்கு
மானைத் தரித்த திருக்கரத்தார் மகிழும் கோயில் செய்கின்றார்
ஞானச் சார்வாம் வெண்ணாவல் உடனே கூட நலம்சிறக்கப்
பானற்களத்துத் தம்பெருமான் அமரும் கோயிற்பணிசமைத்தார். – பெரியபுராணம்

நுண்பொருள்

தொண்டும் தொண்டுடையார்க்காகும்

1) தவப்பேறும், மெய்யுணர்வுமுடைய உயிர்கள் யாவும் இறைவனை வழிபடும் இயல்பின.
2) மெய்யடியார்க்கு முற்பிறப்புணர்ச்சி வாய்த்தலுமுண்டு
3) சிவதொண்டு விட்டகுறை தொட்டகுறை எனும் முறைவழிப்படுவதாம்.

கோச்செங்கட்சோழ நாயனார் குருபூசைநாள் : மாசி சதயம்

69. திருநீலகண்ட யாழ்ப்பாணர்

திருநீலகண்டத்துப் பாணனார்க்கடியேன்
- திருத்தொண்டத்தொகை

தனைஒப்பரும் எருக்கத்தம் புலியூர்த் தகும் புகழோன்
நினை ஒப்பரும் திருநீலகண்டப் பெரும் பாணனை நீள்
சினை ஒப்பவர் பொழில் சண்பையர் கோன் செந்தமிழோடிசை
புனையப் பரனருள் பெற்றவன் என்பர் இப் பூதலத்தே
- திருத்தொண்டத் திருவந்தாதி

திருவெருக்கத்தம்புலியூரிலே யாழின் மூலமாக இன்னிசை வளர்க்கும் பெரும்பாணர் குலத்தில் பிறந்தவர் திருநீலகண்ட யாழ்ப்பாணர். இவர் சிவபெருமானுடைய திருப்புகழை யாழ்மூலம் இசைக்க, ஏழிசையிலும் வல்லவரான தம் மனைவியார் மதங்கசூளாமணியாருடன் சோழநாட்டிலுள்ள திருத்தலங்களை வணங்கி பாண்டி நாட்டின் தலைநகராகிய மதுரையை அடைந்தார். அங்கு திருவாலவாய்த் திருக்கோயிலின் வாயிலை அடைந்து முன்நின்று இறைவனது பொருள்சேர் புகழ்மாலைகளை யாழிலிட்டு இசைத்துப்போற்றினார். அவ்வின்னிசையைக் கேட்டு மகிழ்ந்த ஆலவாய் இறைவர், அன்றிரவு தம் தொண்டர்க்கெல்லாம் கனவில் தோன்றித் திருநீலகண்டப் பெரும்பாணரை தமது திருமுன்பு கொண்டு புகும்படி பணித்தருளினார். அவ்வாறே பாணனார்க்கும் உணர்த்தியருளினார். இறைவரது விருப்பப்படி பாணர் திருவாலவாய் திருக்கோயிலுள் இறைவன் திருமுன் புகுந்திருந்து அவரது மெய்ப்புகழை யாழிலிட்டு இசைத்துப்போற்றினார். தரையினிற் சீதம் தாக்கில் சந்த யாழ் நரம்பு தளர்ந்து நெகிழும் என்று பாணர்க்குப் பலகை இடும்படி இறைவர் அசரீரிவாக்கினால் அருள் செய்தார். அவ்வாறே தொண்டர்கள் பாணருக்குப் பொற்பலகை இட்டனர். பாணரும் பொற்பலகையில் ஏறியமர்ந்து உமையொருபாகர் வண்ணங்களை உலகெலாம் அறிய இசைத்துப் போற்றினார்.

ஆலவாயிறைவரைப் போற்றி அருள் பெற்ற பெரும்பாணர் பல தலங்களையும் வழிபட்டுத் திருவாரூரை அடைந்தார். அங்கு தமது குலமரபின்படி கோயில் வாயிலின் முன் நின்று இறைவர் புகழ்த்-திறங்களை யாழிலிட்டு இசைத்தார். பாணரது இன்னிசைக்கு உவந்த ஆரூர் அண்ணலார், பாணர் உட்சென்று வழிபட, வடதிசையில் வேறொரு வாயிலை வகுத்தருளினார். பாணர் அவ்வழியே புகுந்து ஆரூர்த்திருமூலட்டானத்து அமர்ந்த இறைவர் முன் சென்று வணங்கி மகிழ்ந்தார். பின் பல தலங்களையும் வழிபட்டுச் சென்று ஆளுடைய பிள்ளையாரை வணங்கும் விருப்பினராய்க் காழிப்பதியை அடைந்தார். திருஞானசம்பத்தப் பிள்ளையார் பாணர்க்குத் தக்கவாறு சிறப்புச் செய்தருளித் தாம் பாடியருளுந் திருப்பதிகங்களை யாழிலிட்டு இசைத்துத் தம்மைப் பிரியாதுடனிருக்கும் பேற்றினை வழங்கி அருளினார். அவ்வாறு ஆளுடைய பிள்ளையாருடன் சிவபெருமானுறையும் திருத்தலங்களை வணங்கி இன்னிசைத் திருத்தொண்டு புரிந்து வந்த யாழ்ப்பாணர், தமது மனைவி மதங்கசூளாமணியாருடன் திருநல்லூர்ப் பெருமணத்தில் ஆளுடையபிள்ளையாரின் திருமணத்தைக் கண்டு அவருடனே கூட அடியார் திருக்கூட்டத்துடன் ஈறில் பெருஞ்சோதியினுட் புகுந்து ஈறிலாப் பேரின்ப வாழ்வு பெற்றார்.

திருத்தொண்ட புராணசாரம்

பிறங்கெருக்கத்தம் புலியூர்வாழும் பேரியாழ் பேணு திருநீலகண்டப் பெரும்பாணனார் சீர் நிறந்தரு செம்பொற்பலகைஆலவாயில் நிமலன்பாற்பெற்று ஆரூர்சேர்ந்து சிவன்வாயில் திறந்தருளும் வடதிசையே சேர்ந்து போற்றி திருஞானசம்பந்தர் திருத்தாள் வாழ்த்தி அறந்திகழும் திருப்பதிகம் யாழிலேற்றி ஆசில் திருப்பெருமணம் சேர்ந்து அருள்பெற்றாரே

நுண்பொருள்

1. சிவன் சீர்மைகளை யாழில் இசைப்பது சிறந்த வழிபாடு.
2. தேவாரங்களைப் பண்ணமைய யாழில்பாடுவது சிவபணி.
3. பண் இசைபாடி வழிபடுவோர் பாணர் குலத்தினராயினும் தொழுதற்கேற்ற தொண்டர் குலத்தினரே.

காழியார் தவப்பயனாம் கவுணியர்தம் தோன்றலார்
ஆழிவிடம் உண்டவர்தம் அடிபோற்றும் பதிகவிசை
யாழின் முறைமையினிட்டே எவ்வுயிரும் மகிழ்வித்தார்
ஏழிசையும் பணிகொண்ட நீலகண்டயாழ்ப்பாணர் - பெரியபுராணம்

திருநீலகண்டயாழ்ப்பாணர் குருபூசைநாள் : வைகாசி மூலம்

70. சடைய நாயனார்

என்னவனாம் அரனடியே அடைந்திட்ட சடையன்.....
அடியார்க்கும் அடியேன்

- திருத்தொண்டத்தொகை

தலம் விளங்கும் திருநாவலூர் தன்னில் சடையனென்னும்
குலம் விளங்கும் புகழோனை உரைப்பர் குவலயத்தில்
நலம் விளங்கும்படி நாம் விளங்கும்படி நற்றவத்தின்
பலம் விளங்கும்படி ஆரூரனைமுன் பயந்தமையே

- திருத்தொண்டர் திருவந்தாதி

திருநாவலூரிலே ஆதிசைவ மரபிலே தோன்றியவர் சடையனார். இவர் இசைஞானியாரை மணந்து உலகமெலாம் மெய்ஞ்ஞான ஒளியைப் பரப்பும் நம்பியாரூரை மகவாகப் பெற்றுத்தந்த பெருமையை உடையவர்.

திருத்தொண்டபுராணசாரம்

சங்கையிலா அரன்மறையோர் நாவலூர்வாழ்
தவரதிபர் தம்பிரான் தோழராய
எங்கள்பிரான் தவநெறிக்கோர் இலக்குவாய்த்த
இசைஞானியார் தனயர் எண்ணார் சிங்க
மங்கையர்கள் தொழும் பரவை மணவாள நம்பி
வந்துதிக்க மாதவங்கள் வருந்திச்செய்தார்
வெங்கண் அரா விளங்கும் இளம்பிறைசேர் சென்னி
விடையினார் அருள்சேர்ந்த சடையனாரே.

நுண்பொருள்

சிவதொண்டர்க்குத் தந்தையாம் பேறுபெற்றோர் சிவப்பேறு பெற்றோரே.

தம்பிரானைத் தோழமை கொண்டருளித் தமது தடம்புயம்சேர்
கொம்பினார் பால் ஒரு தூது செல்ல ஏவிக்கொண்டருளும்
எம்பிரானைச் சேரமான் பெருமான் இணையில் துணைவராம்
நம்பியாரூரரைப் பயந்தார் ஞாலமெல்லாம் குடிவாழ - பெரியபுராணம்.

சடையநாயனார் குருபூசைநாள் :- மார்கழி திருவாதிரை

71. இசைஞானியார்

"இசைஞானி காதலன் அடியார்க்கும் அடியேன்"
- திருத்தொண்டத் தொகை

பயந்தாள் கறுவுடைச் செங்கண் வெள்ளைப் பொள்ளல் நீள் பனைக்கைக்
கயம்தான் உகைத்த நற்காளையை என்றும் கபாலம் கைக்கொண்டு
அயம்தான் புகும் அரன் ஆரூர்ப் புனித அரன் திருத்தாள்
நயந்தாள் தனது உள்ளத்து என்றும் உரைப்பது ஞானியையே
- திருத்தொண்டர் திருவந்தாதி

திருவாரூரிலே கௌதம கோத்திரத்தில் அவதரித்த ஞானசிவாசாரியார் என்பவர் ஒருவர் இருந்தார். அவருக்குத் திருமகளாக அவதரித்தவர் இசைஞானியார். அவர் திருவாரூர் இறைவரது திருவடி மறவாதவர். திருமணப் பருவம் அடைந்ததும் சடையநாயனாரது உரிமைத் திருமனைவியானார். ஆளுடைய நம்பியைப் புத்திரனாகப் பெறும் பேறுபெற்ற இசைஞானிப் பிராட்டியாரின் பெருமை எம்மால் புகழக்கூடியதோ?

திருத்தொண்டர் புராணசாரம்

நாவல் திருப்பதிக்கோர் செல்வச்சைவ
நாயகமாம் சடையனார் நயந்த இன்பப்
பூவைக் குலமடந்தை பொற்பார் கொம்பு
புனிதமிகு நீறணிந்து போற்றி செய்தே
ஆவில் திகழ்தலைவன் வலிய ஆண்ட
ஆரூரர் அவதரிக்க அருந்தவங்கள் புரிந்தார்
யாவர்க்கும் எட்டாத இசைந்த இன்ப
இசைஞானி என ஞானம் எளிதாமன்றே

நுண்பொருள்

ஒழியாப் பெருமைச் சடையனார் உரிமைச் செல்வத் திருமனையார்
அழியாப் புரங்கள் எய்தழித்தார் ஆண்டநம்பி தனைப்பயந்தார்
இழியாக் குலத்தின் இசைஞானிப் பிராட்டியாரை என் சிறுபுன்
மொழியாற் புகழ முடியுமோ முடியா தெவர்க்கும் முடியாதால். - பெரியபுராணம்

இசைஞானியார் குருபூசைநாள் :- சித்திரைச் சித்திரை



72. சுந்தரமூர்த்தி சுவாமிகள்

"ஆரூரன் ஆரூரில் அம்மானுக்காளே"
- திருத்தொண்டத் தொகை

"தொழுதும் வணங்கியும் மாலயன் தேடரும் சோதி சென்றாங்கு
எழுதும் தமிழ்ப்பழ ஆவணம்காட்டி எனக்கு உன் குடி
முழுதும் அடிமை வந்தாட்செய் எனப்பெற்றவன் முரல்தேன்
ஒழுகுமலரின் நற்றார் எம்பிரான் நம்பி ஆரூரனே".

ஞான ஆரூரரைச் சேரரை அல்லது நாமறியோம்
மான்அவ ஆக்கை யொடும் புக்கவரை வளரொளிப்பூண்
வானவராலும் மருவற்கரிய வடகயிலைக்
கோனவன் கோயில் பெருந்தவத்தோர் தங்கள் கூட்டத்திலே
- திருத்தொண்டர் திருவந்தாதி.

திருக்கைலாய மலையிலே சிவபெருமானுடைய அடியார்களுள் ஒருவராகிய ஆலாலசுந்தரரென்பார், இறைவனுக்கு மலர்கொய்து மாலை தொடுத்தணிதலும், திருவருள் வண்ணமாகிய திருநீற்றினை ஏந்தி நிற்றலுமாகிய அணுக்கத்தொண்டினை மேற்கொண்டவராவர். அவர் ஒரு நாள் வழக்கம் போல் இறைவனுக்குரிய நறுமலர்களைப் பறித்துவரத் திருநந்தவனத்தையடைந்தார். அப்பொழுது உமையம்மையாருடைய சேடியர்களாகிய அனிந்திதை, கமலினி ஆகிய இருவரும் அத்திருநந்தவனத்தில் மலர் கொய்து நின்றனர். ஆலாலசுந்தரர் இறைவனது திருவருளால் அவ்விருவரையும் கண்டு ஆசை கொண்டார். அம்மகளிர் இருவரும் அவ்வண்ணமே சுந்தரரது பேரழகில் ஈடுபட்டுத் தம் உள்ளத்தை அவரிடம் செலுத்தினார்கள். ஆலாலசுந்தரர் மகளிரிடத்தில் வைத்த தம் மனத்தை மீட்டு, இறைவனுக்கேற்ற தூய நன்மலர்களைக் கொய்துகொண்டு சிவபெருமான் திருமுன்னர் சென்றார். அவ்வாறே மகளிர் இருவரும் உமையம்மையார் அணிதற்குரிய நறுமலர்களைப் பறித்துக்கொண்டு சென்றனர்.

எல்லாவுயிர்களுக்கும் உயிர்க்குயிராய் உள்நின்று அருள் சுரக்கும் சிவபெருமான், ஆலாலசுந்தரரது உள்ளக் குறிப்பினை முன்னரே உணர்ந்தவராதலின் அவரை நோக்கி, 'நீ மாதர் மேல் மனம் வைத்தனை. ஆதலால் தென்னாட்டிலே பிறந்து அம்மகளிருடன் காதல் இன்பம் அனுபவித்து மீள்வாயாக' எனப் பணித்தருளினார். அதுகேட்டு உள்ளங் கலங்கிய ஆலாலசுந்தரர், கைகளைத் தலை-மீது குவித்து இறைவனை இறைஞ்சிநின்று, "எனது ஆருயிர்த் தலைவ-னாகிய ஐயனே! உன்னுடைய செந்தாமரை மலர் போலுந் திருவ-டிகளைப் பிரிந்து வருந்துதற்குக் காரணமாகிய காமத்தாற் சிறுமையுற்ற எளியேன், மயக்கத்தை விளைவிக்கும் மனிதப் பிறவியை அடைந்து மதிமயங்குங் காலத்து, ஆண்டவனாகிய தாங்கள் அடியேனைத் தடுத்து ஆட்கொண்டருளுதல் வேண்டும்" என வேண்டிக்கொண்டார். வேண்டுவார் வேண்டுவதே ஈந்தருளும் சிவபெருமானும் அவரது வேண்டுகோளுக்கு இசைந்தருளினார்.

இறைவன் திருவருளால் ஆலாலசுந்தரர், திருமுனைப்பாடி நாட்டின் தலைநகராகிய திருநாவலூரிலே, ஆதிசைவ மரபிலே தோன்றிய சடை-யனார் என்பார்க்கும் அவருடைய திருமனைவியார் இசை ஞானியாருக்கும் மகவாகத் திருவவதாரம் செய்தருளினார். பெற்றோர்கள் சிவனருளால் தோன்றிய தம் குழந்தைக்கு நம்பியாரூரர் என்று திருப்பெயரிட்டு அழைத்தார்கள். நம்பியாரூரர் நடைகற்கத் தொடங்கித் தெருவிலே சிறுதேர் உருட்டி விளையாடும்பொழுது அந்நாட்டரசரான நரசிங்கமுனை-யரையர் அக்குழந்தையின் அறிவொளி திகழும் திருமுகப் பொலிவி-னைக் கண்டு மகிழ்ந்து சடையனார் மீது கொண்ட நெருங்கிய நட்பின் மிகுதியால் அக்குழந்தையை வேண்டிப் பெற்றுத் தம் அரசிளங்குமரன் என்ற முறையில் அன்பினால் வளர்த்து வந்தார்.

இவ்வாறு பெருமைசால் அரசரது பேரன்புக்கு உரிய பிள்ளையாய் வளர்ந்த நம்பியாரூரர், தாம் பிறந்த அந்தணர் மரபுக்கேற்ப முந்நூலணிந்து மறைகள் நான்கும் ஆறங்கங்களும் முதலாகவுள்ள அளவற்ற கலை நூல்களைக் கற்றுத் தெளிந்தார். இங்ஙனம் இளம் பருவத்திலேயே திருவும் கல்வியும் வாய்க்கப்பெற்ற நாவலூர் நம்பியாகிய இப்பெருந்தகையார் நாட்டு மக்களுக்கு நலம்பல புரியும் இளவரசராய்

விளங்கினார். நம்பியாரூரர் திருமணப் பருவம் எய்தியதும் தந்தையாராகிய சடையனார், தங்கள் குடும்பத்தோடு ஒத்த சிறப்புடைய குடும்பத்தினராய்ப் புத்தூரிலே வாழும் ஆதிசைவ வேதியராகிய சடங்கவி சிவாசாரியாருடைய திருமகளைத் தம் பூதல்வர்க்கு மணம் செய்து தரும்படி முதியோர் சிலரை அவர்பால் மகட்பேச அனுப்பினார். அ.ஃ.துணர்ந்த சடங்கவி-சிவாசாரியார் பெருமகிழ்ச்சியுடையவராய் முதியோர்களை வரவேற்று உபசரித்தார். தம்முடைய திருமகளை நம்பியாரூரர்க்கு மணஞ்செய்து தருவதாக அன்புடன் கூறினார். முதியோர்களும் அவரது இசைவினைச் சடையனாரிடம் தெரிவித்தார்கள். அது கேட்டு மகிழ்ந்த சடையனார், திருமண நன்னாளை உறுதிசெய்து கொண்டு நம்பியாரூரரது அரச பதவிக்கு ஒத்த வகையிலே சுற்றத்தார், நண்பர் முதலிய பலருக்கும் திருமணத் திருமுகம் அனுப்பினார் சடங்கவி சிவாச்சாரியாரும் தம்-முடைய ஊராகிய புத்தூரிலே நாவலூர்த் தலைவரது திருமணம் நிகழ்தற்கு வேண்டிய எல்லாவற்றையும் குறைவறச் செய்து முடித்தார்.

திருமணத் திருநாளின் முதல் நாளில் மணமகனாராகிய நம்பியா-ரூரர்க்குக் காப்பணிதல முதலிய மங்கலச் சடங்குகள் வேதமுறைப்படி செய்யப்பெற்றன. மறுநாள் வைகறைப் பொழுதில் நம்பி திருமஞ்சனமாடி திருமணக்கோலம் கொண்டார். மன்னவர் திருவும் வைதிகத்திருவும் பொலியச் சிவபெருமானது திருவடிகளை நெஞ்சத்திருத்தி மங்கல வாத்தியங்கள் முழங்கக் குதிரை மீதமர்ந்து சுற்றத்தார், நண்பர் புடைசூழப் புத்தூரை அடைந்தார். பெண் வீட்டார் நிறைகுடம், தூப தீபம் ஏந்தி, பொரி, பொற்சுண்ணம் இவற்றைத் தூவி, வாசநீர் தெளித்து வரவேற்றனர். நம்பி திருமணப் பந்தருள் மணமேடையில் அமர்ந்திருந்தார்.

இங்ஙனமாக, ஆலாலசுந்தரரைத் தடுத்தாட்கொள்வதாகத் திருக்கயி-லாயத்திலே முன்பு உறுதி கூறிய சிவபெருமான், தாம் கூறிய வண்ணம் நம்பியாரூரரைத் தடுத்தாட்கொள்ள விரும்பி, வெண்ணரை முடியும், தோளில் மேலாடையும், ஒரு கையிற் குடையும், கோவண ஆடையும் கொண்ட முதுமைமிக்க வேதியராகத் திருமேனி கொண்டு, தளர்ந்த நடையினராய்த் தண்டூன்றித் திருமணப்பந்தருள்ளே நுழைந்தார். அங்குத் திருமணங் காண வந்திருந்த பெருமக்களை நோக்கி,

"சபையோர்களே, யான் கூறும் இம்மொழியைக் கேட்பீராக" என்றுரைத்தார். அவரது வருகையை அறிந்த மறையவர்களும் நம்பியாரூரரும் 'நன்று உமது நல்வரவு, நாங்கள் செய்த தவப்பயனேயாம். நீங்கள் சொல்லக் கருதியதனைச் சொல்லுங்கள்' என்றனர். முதியராய் வந்த அவ்வேதியர், மணமகனாகிய நாவலூரரை நோக்கி 'எனக்கும் உனக்கும் ஒரு பெரு வழக்கு உளது. அதனைத் தீர்த்த பின்னரே நீ திருமணம் செய்துகொள்ளுதல் வேண்டும்' எனக் கூறினார். அதுகேட்ட நம்பியாரூரர் மறையவரை நோக்கி 'என்னுடன் உனக்கு வழக்கு இருக்குமாயின் அதனைத் தீர்த்தன்றித் திருமணஞ் செய்யேன். அதனை முழுதுஞ் சொல்லுக' என்றார்.

முதியராய் வந்த அந்தணர், அங்குள்ளவர்களைப் பார்த்து 'வேதியர்களே, இவ்வழக்கினைக் கேளுங்கள். நாவலூரனாகிய இவன் எனக்கு வழிவழி அடியவனாவான்' எனக் கூறினார். அம்மொழியினைக் கேட்டு அங்கிருந்தோர் திடுக்கிட்டனர்; சிலர் "இவன் யாவன்" என இகழ்ந்து நோக்கினர்; சிலர் வெகுண்டனர்; திருநாவலூரர் "இம்மறையோன் மொழி மிகவும் நன்றாயிருக்கிறதே" எனச் சொல்லி நகைத்தார். அது கண்ட கிழவர், அவரருகே சென்று "ஏடா, அக்காலம் உன் பாட்டன் எழுதிக் கொடுத்த அடிமையோலை என் கையில் இருக்கின்றது. இக்காரியத்தை நீ இகழ்ந்து சிரிப்பது ஏன்?" எனக் கேட்டார். "அந்தணர்கள் வேறோர் அந்தணர்க்கு அடிமையாதலென்பது இவ்வுலகில் எங்கும் கேட்டதில்லை. நீ சொல்லவே இன்று புதிதாகக் கேட்டேன். மறையோனாகிய நீ பித்தனோ?" என்றார் நம்பியாரூரர். அது கேட்ட முதியவர் 'யான் பித்தன் ஆயினும் ஆக; பேயன் ஆயினும் ஆக; நீ எத்தனை முறை இகழ்ந்துரைத்தாலும் அவ்வுரைகளால் யான் சிறிதும் நாணமுறுபவனல்லன். நீ என்னைச் சிறிதும் அறிந்து கொள்ளவில்லை என்பதையே உன்மொழிகள் புலப்படுத்துகின்றன. வித்தகம் பேசவேண்டாம். பணி செய்யவேண்டும்" என்றார்.

அப்பொழுது நம்பியாரூரர், 'ஆளோலையுண்டு' என இவ்வேதியர் கூறும் மொழியின் உண்மையை அறிந்துகொள்ள வேண்டுமென்னுங் கருத்துடையராய், புதியராய் வந்த அவ்வேதியரை நோக்கி 'ஓலையைக் காட்டு' எனக் கூறினார். "நீ அவ்வோலையைக் காணுவதற்கு

தகுதியுடையவனோ? அதனை யான் அவையினர் முன்னிலையிற் காட்டி நீ எனக்கு அடிமை என்பதை உறுதிப்படுத்திய நிலையில் எனக்கு அடிமைத் தொழில் செய்தற்கே உரியாய்" என்றார் முதுமறையோர். அம்மொழியினைக் கேட்டு வெகுண்ட நாவலூரர், விரைந்தெழுந்து அவ்வேதியர் கையிலுள்ள ஓலையைப் பறிக்கச் சென்றார். அப்பொழுது மறையவராய் வந்த இறைவர், விரைந்து ஓடினார். மாலும் அயனும் தொடர ஒண்ணாத அவரை வலிந்து பின்தொடர்ந்த ஆரூரர், அம்மறையவர் கையில் உள்ள ஓலையைப் பற்றி 'அந்தணர்கள் வேறொரு அந்தணர்க்கு அடிமையாதல் என்ன முறை' என்று சொல்லிக் கிழித்தெறிந்தார். ஓலையைப் பறிகொடுத்த அந்த முதியவர், "இது முறையோ" எனக் கூவி அழுது அரற்றினார். அப்பொழுது அங்குள்ளவர்கள் அவ்விருவரையும் விலக்கினார்கள். முறையிட்டு வருந்தும் கிழவராகிய மறையவரை நோக்கி, 'உலகில் இல்லாத வழக்கினைக் கொண்டு பிணங்கி நிற்கும் நீர் வாழும் ஊர் எது?' என வினவினார்கள். அதுகேட்ட முதியவர், 'யான் வாழும் ஊர் நெடுந்தூரத்திலுள்ளதன்று. மிகவும் அண்மையிலுள்ளதாகிய திருவெண்ணெய்நல்லூரேயாகும். அது நிற்க; நம்பியாரூரனாகிய இவன், என் கையிலுள்ள ஓலையை வலிந்து பிடுங்கிக் கிழித்தெறிந்தமையால் எனக்கு அடிமை என்பதைத் தானே உறுதிப்படுத்தி விட்டான்' என மொழிந்தார்.

அம்மொழியினைக் கேட்ட திருநாவலூரர். 'இவன் பழைய மன்றாடி போலும், என நினைந்து அம்முதியவரை நோக்கி, 'உன்னுடைய ஊர் திருவெண்ணெய் நல்லூராயிருக்குமானால் உனது பிழைபட்ட வழக்கை அங்கேயே பேசித் தீர்த்துக்கொள்ளலாம் என்றார். முதியவராய் வந்த மறையவர், 'திருவெண்ணெய் நல்லூருக்கு வந்தாலும் அங்கு வாழும் தூய நான்மறையோராகிய அவையத்தார் முன்னிலையில் உன் பாட்டன் எழுதிக்கொடுத்த மூல ஓலையைக் காட்டி நீ எனக்கு அடிமை என்பதை உறுதிப்படுத்துவேன்' என்று கூறிக் கோலை ஊன்றிக்கொண்டு முன்னே சென்றார். அவரைத் தொடர்ந்து நம்பியாரூரர் பின் சென்றார். 'இவ்வழக்கு என்னாகுமோ' எனக் கலக்கமுற்ற மனத்தினராய்ச் சுற்றத்தார்களும் உடன் சென்றார்கள்.

திருவெண்ணெய் நல்லூரை அடைந்த முதுமறையோர், அங்குள்ள அவையினரை நோக்கி, 'திருநாவலூரனாகிய இவன், எனக்கு அடியான் என நான் காட்டிய அடிமை ஓலையை வலிந்து பிடுங்கிக் கிழித்தெறிந்து-விட்டு மூதறிவுடைய அவையோராகிய உம்முன்னே வந்துள்ளான். இதுவே எனது முறையீடாகும்' என மொழிந்தார். அது கேட்ட அவையத்தார், அம்முதியவரை நோக்கி, 'ஐயா அந்தணர் அடிமை-யாதல் இவ்வுலகத்தில் இல்லையே' என்றனர். 'இவன் என் கையினின்றும் வலிதிற் பிடுங்கிக் கிழித்த ஓலை, இவனுடைய தந்தைக்குத் தந்தை-யாகிய பாட்டனே உளமிசைந்து எழுதிக் கொடுத்ததாகும்.' எனக் கூறினார் மறைமுதியோர். அந்நிலையில் அவையிலுள்ள பெரியோர்-கள், திருநாவலூரரை நோக்கி, 'உம்பாட்டனார் உளமிசைந்து எழுதிக்கொடுத்த அடிமையோலையை இம்மறையோன் காட்டினால் அதனை வலிந்து வாங்கிக் கிழித்தெறிவது உமக்கு வெற்றியாகுமா? ஊன் சுருங்கி வற்றிய உடலினை உடைய இம்முதியோன் தன் வழக்கினைப் பொருந்த எடுத்துரைத்தான். ஆரூரராகிய உமது எண்ணம் யாது?' என வினவினார்கள்.

அப்பொழுது ஆழ்ந்த சிந்தனையிலிருந்த நம்பியாரூரர், அவை யினரை நோக்கி 'எல்லா நூல்களையும் கற்றுணர்ந்த பெரியீர், நான் ஆதிசைவன் என்பதை நன்குணர்வீர். முதியோனாகிய இவ்வந்தணன் தனக்கு நான் அடிமை என்று சாதித்தானாயின், இது மனத்தாலுணர்தற்கு எட்டாத மாயையாகவுள்ளது. என்னால் இதனைத் தெளிந்துணர இயலவில்லை' எனக் கூறினார். அது கேட்ட அவையினர், கிழவராய் வந்த மறையவரை நோக்கி, 'நம்பியாரூரரை அடிமை எனக் கூறும் இவ்வுரையினை **ஆட்சி, ஆவணம், சாட்சி** என்ற மூன்றினுள் ஒன்றைக் கொண்டு நீர் இச்சபையின் முன் உறுதிப்படுத்துதல் வேண்டும்' என மொழிந்தனர். 'நாவலூரன் சின மிகுதியால் என் கையிலிருந்து பறித்துக் கிழித்த அடிமைச்சீட்டு படிஓலையாகும். அதன் மூலவோ-லையை அவையத்தார் முன் காட்டுதற்கென்றே போற்றி வைத்துள்ளேன்' என்றார் கிழவர். 'அங்ஙனமாயின் அவ்வோலையைக் காட்டுக' என அவையோர் பணித்தனர். 'இவன் முன்போற் கிழித்தெறியாதபடி நீங்கள் பார்த்துக்கொள்ள வல்லீராயின் அவ்வோலையைக் காட்டுவேன்'

என்றார் மறைமுதியோர். 'நான்மறை வல்ல மறையவரே நாங்கள் தீங்கு நேராமற் பார்த்துக்கொள்கின்றோம்' என அவையத்தார் கூறினார்கள். முதியவர் மூல ஓலையாகிய ஆவணத்தை அவையத்தார் முன் எடுத்துச் சென்றார். அவையினர் பணித்த வண்ணம் கரணத்தான் அவ்வோலையை வாங்கிப் படிக்கத் தொடங்கினான்.

"திருநாவலூரில் வாழும் அருமறைவல்ல ஆதி சைவனாகிய ஆரூரன் எழுதியது; வெண்ணெய்நல்லூரில் வாழும் முனிவர் பெருமானாகிய பித்தனுக்கு நானும் என் குடும்பத்தில் வழிமுறை வழிமுறையாக இனி வருபவர்களும் அடித்தொண்டு செய்தற்கு இதுவே ஆவண ஓலையாகும். இரு திறத்தோமும் உள்ளம் ஒத்த நிலையில் இதனை எழுதிக் கொடுத்தேன். இதற்கு இவை என் கையெழுத்து" என அழகிய தமிழ்நடையில் எழுதப்பெற்றிருந்த அவ்வாசகத்தைக் கரணத்தான் படித்த பின்னர் அதில் சான்றாளராகக் கையெழுத்திட்டவர்களுடைய கையெழுத்துக்களையும் ஒப்புநோக்கி இவை ஏற்றுக்கொள்ளத் தக்கன என அவையோர் ஒத்துக்கொண்டனர். பின்பு நம்பியாரூரரை அழைத்து 'உம்முடைய பாட்டனாருடைய கையெழுத்து இதுதானோ என்பதைத் தெளிவாகப் பார்த்தறிவீராக' எனப் பணித்தனர். அப்பொழுது அருகே நின்ற கிழவர், அவையினரை நோக்கி 'முன்னர் ஆவண ஓலையைக் கிழித்துக் குற்றம் புரிந்த இவனா இம்மூல ஓலையைப் பார்த்தறிதற்குத் தகுதியுடையான்? இவனுடைய பாட்டன் எழுதிக் கொடுத்த வேறு கைச்சாத்துக் கிடைக்குமானால் அதனோடு நான் காட்டிய ஓலையில் உள்ள கையெழுத்தினையும் நீங்கள் ஒத்துப்பார்த்து உம் மனதிற்பட்ட முடிவைச் சொல்லுங்கள்' என்றார். அவையினரும் அவ்வாறே நம்பியாரூரருடைய பாட்டனார் கையெழுத்தாகச் சுவடிச்சாலையில் சேமிக்கப்பெற்றிருந்த கைச்சாத்தொன்றைக் கொணரச் செய்து ஒப்புநோக்கி 'இவ்விரண்டிலும் கையெழுத்து ஒத்திருக்கிறதே. இனி இதற்கு மாறாக ஒன்றும் செய்தற்கில்லை' என்றார்கள்; 'நமபியாரூரரே, நீர் நான்மறை முனிவராகிய இம்முதியவர் கொணர்ந்த வழக்கில் தோல்வியடைந்து விட்டீர். இனி முறைப்படி இம்முதியவருக்கு அடிமை செய்தலே உமது கடமையாகும்' என முடிவு கூறினார்கள். அதுகேட்ட

நாவலூரர் 'அறநெறி வழாத அவையோர்களாகிய உங்கள் முடிவு இதுவாயின், இதன் வழி அடங்கி நடப்பதற்குரிய நான் இதனை உடன்படேன் என மறுத்தல் இயலுமோ' என மொழிந்தார்.

அப்பொழுது அவையினர், வழக்கில் வென்ற வேதியரை நோக்கி, 'மறை முனிவரே, நீவிர் காட்டிய ஆவணத்தில் உம்முடைய ஊர் எங்கள் திருவெண்ணெய் நல்லூராகக் குறிப்பிடப் பெற்றுள்ளதே? உமக்கு இவ்வூரில் தொன்று தொட்டு நிலைபெற்றுவரும் மனையும் ஏனைய வாழ்க்கைச் செல்வமும் ஆகியவற்றை எங்களுக்குக் காட்டுதல் வேண்டும்' என்றனர். வழக்கில் வென்ற புண்ணிய முதல்வராகிய மறையவர், அவையினரைப் பார்த்து 'உங்களில் ஒருவரும் இதுவரை என்னை அறிந்துகொள்ளாதிருப்பீரானால் என்னுடன் வாருங்கள்' என்று சொல்லி, நம்பியாரூரரும் அவையத்தாரும் தம்மைப் பின்தொடர்ந்து வரத் திருவெண்ணெய் நல்லூரிலுள்ள 'திருவருட்துறை' என்னும் திருக்கோயிலுட் புகுந்து மறைந்தார். பின் சென்றோர் யாவரும் அவரைக் காணாது திகைத்து நின்றார்கள்.

உடன் சென்ற நம்பியாரூரர், 'என்னை அடிமை கொண்ட மறையோர் இறைவரது திருக்கோயிலிற் புகுந்து மறைந்தது என்ன அதிசயம்' என வியப்புற்றுத் தனியே தொடர்ந்து சென்று பெருவிருப்புடன் அவரைக் கூவி அழைத்தார். அப்பொழுது மறையவராய் வந்து தடுத்தாண்டருளிய சிவபெருமான், உமையம்மையாருடன் விடை மீது விசும்பில் தோன்றி நம்பியாரூரர்க்குக் காட்சி தந்தருளினார். 'நம்பியாரூரனே' நீ முன்னமே நமக்குரிய தொண்டன். உன்மனத்தே மாதரொடு வாழும் காதல் வேட்கை தோன்றியமையால் இம் மண்ணின் மீது பிறந்தாய். துன்புறுதற்குக் காரணமாகிய இவ்வுலகியல் வாழ்வு உன்னைத் தொடர்ந்து வருத்தாவண்ணம் நல்லறிவுடைய அவையோராகிய அந்தணர்களின் முன்னிலையிலே நாமே வந்து உன்னைத் தடுத்து ஆட்கொண்டோம்" எனத் திருவாய் மலர்ந்தருளினார்.

இத்திருவருள் வாக்கினைக் கேட்ட நாவலூரர், தாய்ப்பசுவின் கனைப்பினைக் கேட்டுக் கதறும் கன்றினைப் போன்று அன்பினாற் கதறி, மெய்ம்மயிர் சிலிர்க்கக் கைகளைத் தலைமேல் குவித்து

இறைஞ்சினார். 'மறையவனாக வந்து என்னை வலிய ஆட்கொண்ட இது, தில்லையம்பலத்துள் ஆடும் பெருமானாகிய உமது அருட்செயலோ' என நெஞ்சம் நெக்குருகிப் போற்றினார். அந்நிலையிற் சிவபெருமான், அவரை நோக்கி 'நம்முடன் நீ வன்மொழிகளைப் பேசினமையால் **'வன்றொண்டன்'** என்ற பெயரினைப் பெற்றாய். நமக்கு அன்பினாற் செய்யத்தக்க சிறந்த வழிபாட்டிற்குரிய மந்திரம் சுவைநிறைந்த திருப்பாட்டேயாம். ஆதலால் இவ்வுலகில் நம்மைச் செந்தமிழ்ப் பாடல்களாற் பாடிப் போற்றுவாயாக' எனப் பணித்தருளினார். அவ்வருளுரையைச் செவிமடுத்த வன்றொண்டர், 'என்னை வழக்கினால் வெல்தற்கு வேதியனாகி வந்த கோதிலா அமுதே, நாயேன் உனது திருவருட் பண்பாகிய பெருங்கடலுள் எதனைத் தெரிந்து எத்தகைய சொற்களாற் பாடுவேன்' என இறைவனை நோக்கி உளம் கசிந்து வினவி நின்றார். "அன்ப நான் ஓலை காட்டி உன்னை ஆட்கொள்ள வந்தபொழுது நீ, என்னைப் பித்தனென்று கூறினாய். ஆதலால் என் பெயர் பித்தனென்றே பாடுக" எனச் சிவபெருமான் அருளிச் செய்தார். இறைவரது பெருங்கருணைத் திறத்தை நினைந்துருகிய வன்றொண்டர், * **"பித்தா பிறைசூடீ"** எனும் செந்தமிழ்ப் பதிகத்தை இன்னிசை பொருந்தப் பாடினார்.

நாவலூர் நம்பியை மணந்து கொள்ள இருந்த புத்தூர் சடங்கவி சிவாசாரியாருடைய திருமகளார், திருமணம் தவிர்ந்தமையால் நம்பியாரூரரையே தமது வழிபடு தெய்வமாகத் தியானிக்கும் **மெய்யுணர்வுடையராய்** இவ்வுலக வாழ்வை நீத்து உயர்ந்த சிவலோக வாழ்வாகிய பேரின்பம் எளிதிற் கைவரப்பெற்று இறைவனடி சேர்ந்தார். வன்றொண்டராகிய நம்பியாரூரர் தம்மை ஆட்கொண்டருளிய அருட்துறை இறைவரை இறைஞ்சித் திருநாவலூரை அடைந்தார். அங்கு கோயில் கொண்டருளிய சிவபெருமானைப் பணிந்து செந்தமிழ்ப் பாமாலை போற்றிப்பாடினார். பின்னர் அருகேயுள்ள திருத்துறையூரை அடைந்து

---

* பித்தா பிறைசூடீ பெருமானே அருளாளா
எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூரருட்டுறையுள்
அத்தா உனக்காளாய் இனி அல்லேன் எனலாமே.

அங்கு எழுந்தருளியிருக்கும் துறையூர்த்தலைவரை வழிபட்டுத் தவநெறி தந்தருளுமாறு திருப்பதிகம் பாடினார்.

திருத்துறையூரிறைவரிடம் தவநெறி வேண்டிப்பெற்ற நம்பியாரூரர், சிவபெருமான் கோயில் கொண்டருளிய திருத்தலங்கள் பலவற்றை வணங்கிப் பெரும்பற்றப் புலியூராகிய தில்லையிற் பொன்னம்பலத்திலே ஆடல் புரிந்தருளும் கூத்தப் பெருமானை வழிபட்டு மகிழவிரும்பினார். பெண்ணையாற்றைக் கடந்து கதிரவன் மறையும் மாலைப்பொழுதிலே திருவதிகைப் பதியின் எல்லையை அடைந்தார். "உலகம் போற்றும் ஆளுடைய அரசராகிய திருநாவுக்கரசர் உழவாரப்படையைக் கையிலேந்திச் சிவபெருமானுக்குத் திருத்தொண்டு புரிந்த சிறப்புடைய பெரும்பதியாகிய திருவதிகையை என் கால்களால் மிதித்து உள்புகமாட்டேன்" என அன்பும் அச்சமும் கொண்ட நம்பியாரூரர், திருவதிகை நகரத்துள்ளே நுழையாது அப்பதியின் புறத்தே அமைந்த **சித்தவட மடத்தில்** அடியார்களுடன் தங்குவாராயினர். அங்கிருந்தபடியே திருவதிகை வீரட்டானத்து இறைவருடைய திருவடிகளைச் சிந்தித்துப்போற்றி அன்றிரவு அத்திருமடத்திலேயே துயிலமர்ந்தார். நம்பியாரூரர் நாவுக்கரசரிடம் கொண்ட பேரன்பின் பெற்றியை உணர்ந்த சிவபெருமான், தளர்ந்த முது வேதியர் வேடங்கொண்டு ஒருவரும் அறியாவண்ணம் அப் பொது மடத்திலே புகுந்து வன்றொண்டர் முடிமேல் தம்முடைய திருவடிகள் பொருந்தும்படி பள்ளி கொண்டருளினார். அப்பொழுது விழித்துணர்ந்த வன்றொண்டர், மறையவரை நோக்கி "அருமறைவல்ல பெரியோய், உன்னடி என் தலையில் வைத்தனையே"என வினவினார். 'இவ்வாறு திசையறியாவகை செய்தது என்னுடைய முதுமை நிலையே' எனக் கூறி வேதியர் தனது முதுமைத் தளர்ச்சியை உடன்பட்டார். அந்நிலையில் வன்றொண்டர் இன்னொரு பக்கம் தலை வைத்துத் துயிலமர்ந்தார். முதுமறையவராய் வந்த அதிகையிறைவர், அங்கும் தம் திருவடியை நீட்டினார். அதனையுணர்ந்த நாவலூரர், 'இங்கு என்னைப் பலகாலும் மிதித்தனை நீ யார்?' என மறையவரை நோக்கி வினவினார். அதுகேட்ட மறையவர் 'நீ அறிந்திலையோ' எனக் கூறி மறைந்தருளினார். அந்நிலையில் தம் தலையில் திருவடி சூட்டி மறைந்தருளியவர் திருவதிகை வீரட்டானப் பெருமானே எனத் தெளிந்த

நம்பியாரூரர், 'என் பொருட்டு எளிவந்தருளிய இறைவனைக் காணப்பெற்றும் அடியேன் அறியாமையால் இறுமாந்து இகழ்ந்துரைத்தேனே' என வருந்தித் *'**தம்மானை அறியாத சாதியாருளரே**' எனத் திருப்பதிகம் பாடினார்.

திருவடி சூட்டப்பெற்ற நம்பியாரூரர், இறைவனது திருவடிகளை நினைந்து ஆனந்தம் கொண்டவராய்த் திருக்கெடில நதியில் மூழ்கிச் சிவபெருமானை வழிபட்டு அந்நதியின் தென்கரையை அடைந்தார். பல தலங்களையும் வழிபட்டு தேவர்பிரான் திருநடம் புரியும் தில்லை நகரத்தின் எல்லையை நெருங்கினார். அந்நகரின் புறத்தே அமைந்த தண்ணிழல் தரும் சோலைகளையும், நறுமணம் மிகுந்த நந்த வனங்களையும், மதிலைச் சூழ்ந்து விளங்கும் கிடங்குகளையும் கடந்து, வடதிசை வாயில் வழியாகத் தில்லை நகரத்தினுள்ளே புகுந்து, சிவனடியார்கள் எதிர்கொண்டுபோற்ற அழகிய திருவீதியினை வணங்கி வலம் வந்தார். பெருமதில் சூழ்ந்த செம்பொன் மாளிகை-யின் நடுவே மேருமலை போன்ற ஒளியுடன் விளங்கும் பேரம்பலத்தை வலஞ்செய்து வணங்கினார். அருமறையாகிய வேதத்தின் முதலிலும், நடுவிலும், முடிவிலும் மெய்யன்பர்களுடைய திருவுள்ளத்திலும், திருவள-ரொளியினதாய்த் திகழும் ஞானமயமான திருச்சிற்றம்பலத்தின் முன்னே-யுள்ள திருவணுக்கன் திருவாயிலை அடைந்தார். உலகெலாம் இன்புற மன்றுளே திருவருட் கூத்தியற்றும் கூத்தப் பெருமானைக் கண்டு அன்பு மீதூரத் தலைமீது குவித்த கையினராய்த் திருக்களிற்றுப் படியின் அருகே வீழ்ந்து வணங்கினார்.

---

* தம்மானை அறியாத சாதியாருளரே சடைமேற்கொள்
பிறையானை விடைமேற்கொள் விகிர்தன்
கைம்மாவின் உரியானைக் கரிக்காட்டில் ஆடல்
உடையானை விடையானைக் கறைகொண்ட கண்டத்து
அம்மான்றன் அடிக் கொண்டென் முடிமேல் வைத்திடு மென்னும்
ஆசையால் வாழ்கின்ற அறிவிலா நாயேன்
எம்மானை எறிகெடில வடவீரட்டானத்து
உறைவானை இறைபோதும் இகழ்வன் போலி யானே.

ஆடவல்ல பெருமானைக் கண்டு கும்பிடும் நம்பியாரூரர், தம்முடைய ஐம்பொறிகளின் அறிவெலாம் கண்களாகிய ஒரு பொறியளவிலே சென்று அடங்கவும், முக்குணங்களும் இறைவனது திருவருளுணர்-விலே தோய்ந்தமையால் திருந்திய சாத்துவிக குணமேயாகத் திக-ழவும், திங்களணி சடைப்பெருமான் ஆடியருளும் திருக்கூத்தினால் வந்த எல்லையற்ற பேரின்ப வெள்ளத்திலே திளைத்து, மாறாத பெருமகிழ்ச்சியினால் மலரப் பெற்றார். 'தேய்ந்து இறக்கும் இடர்-நிலை எய்திய பிறைமதியும் தெளிவு பெற்றுக் குறைவிலா ஒளியுடன் வளர்தற்கு இடமாய் விளங்கும் செஞ்சடைக் கடவுளே! உனது திருவருட் கூத்தினைக் கண்டு கும்பிடும் இப்பேறு பெற்றமையால் மண்ணுலகத்தில் வந்த இம்மனிதப் பிறவியே அடியேற்குத் தூய்மையான பேரின்பத்தை நல்குவதாயிற்று' எனக் கூறிக் கண்களினின்றும் ஆனந்தக் கண்ணீர் சொரியக் கைகளை உச்சி மேற் குவித்துப் பண்ணினால் நீடி அறிதற்கரிய பெருமை வாய்ந்த இன்னிசைத் திருப்பதிகத்தைப் பாடி இறைவனைப் பரவிப் போற்றினார்.

ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள அளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றும் திருந்து சாத்துவிகமே யாக
இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த எல்லையில் தனிப்பெரும்கூத்தின்
வந்த பேரின்ப வெள்ளத்துள் திளைத்து மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.

தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உன்றன் திருநடம் கும்பிடப்பெற்று
மண்ணிலே வந்தபிறவியே எனக்கு வாலிதாம் இன்பமாம் என்று
கண்ணில் ஆனந்த அருவிநீர் சொரியக் கைம்மலர் உச்சிமேல் குவித்து
பண்ணினால் நீடி அறிவரும் பதிகம் பாடினார் பரவினார் பணிந்தார்.

அப்பொழுது தில்லைச் சிற்றம்பலவர் திருவருளால் 'நீ திருவாரூரில் நம்மிடம் வருக' என்ற திருவருள் மொழி ஆகாயத்தே தோன்றியது. நாவலூரர் அவ் அருளாணையைச் சிரமேற்கொண்டு கூத்தப் பெருமானைத் தொழுது விடைபெற்றுப் பொன்னம்பலத்தை வலம்வந்து வணங்கி எழுநிலைக் கோபுரத்தையும், திருவீதியையும் இறைஞ்சித் தில்லை நகரத்தின் தென்திசைவாயில் வழியாகப் புறப்பட்டுச் சென்றார். சிவ-பெருமானது திருவருட்டிறத்தையே நினைந்து செல்லும் நம்பியாரூரர்,

வழியிடையேயுள்ள கொள்ளிடத்திருநதியைக் கடந்து திருக்கழு மலமென்னும் சீகாழிப்பதியின் எல்லையை அடைந்தார்.

உமாதேவியார் அளித்த திருமுலைப்பாலுண்டு வளர்ந்து உலகம் உய்யத் திருநெறியதமிழ் பாடியருளிய திருஞானசம்பந்தப்பிள்ளையார் பிறந்தருளிய சிறப்பும் தூய்மையும் உடையது திருக்கழுமலமாகிய சீகாழிப்பதி என்பதால், தம் பாதங்களால் மிதித்தல் கூடாது எனக் கருதிய வன்றொண்டர், அந்நகரத்தின் புறவெல்லையை வணங்கி அத்திருப்பதியினை வலஞ்செய்வாராயினர். அடியார்கள் மேல் ஆரூரர் கொண்ட அன்பின் திறத்தை உணர்ந்த காழிப்பெருமான் அவர்க்கு எதிரே அம்மையப்பராக எருதின் மீது தோன்றிக் காட்சி கொடுத்தருளினார். அத்தெய்வத் திருக்கோலத்தைக் கண்டு உளங்குளிர்ந்த நம்பியாரூரர், 'என்னை ஆட்கொண்டருளிய பெருமானைக் கழுமலவளநகரிற் கண்டு கொண்டேன்' எனும் கருத்தமைய *"**சாதலும் பிறத்தலும்....**' எனும் திருப்பதிகம் பாடினார்.

சீகாழிப்பதியில் இறைவனது திருக்கோலத்தைக் கண்டு மகிழ்ந்த நம்பியாரூரர் திருக்கோலக்கா முதலாய பல தலங்களையும் வழிபட்டுத் திருவாரூரை அடைந்தார். அந்நிலையில் திருவாரூரில் கோயில்-கொண்டருளிய இறைவர், ஆரூரில் வாழும் அடியார்களுக்கு முன்னே தோன்றி 'நம் ஆரூரனாகிய வன்றொண்டன் நாம் அழைக்க இங்கு வருகின்றான். நீங்கள் மகிழ்ந்து அவனை எதிர்கொண்டு அழைப்பீராக' என அருள் செய்து மறைந்தருளினார். இறைவன் திருவருள் இதுவென உணர்ந்த அடியார்களும், நகரமாந்தரும் திருவாரூரைச் சிறப்புற அலங்கரித்து மங்கல வாத்தியங்கள் முழங்க ஆரூர்த் திருமதில்

---

* சாதலும் பிறத்தலும் தவிர்த்தெனை வகுத்துத்
தன்னருள் தந்தஎந் தலைவனை மலையின்
மாதினை மதித்தங்கோர் பால்கொண்ட மணியை
வருபுனல் சடையிடை வைத்த எம்மானை
ஏதிலென் மனத்துக்கோர் இரும்புண்ட நீரை
எண்வகை ஒருவனை எங்கள் பிரானைக்
காதில் வெண் குழையனைக் கடல்கொள மிதந்த
கழுமல வளநகர்க் கண்டுகொண்டேனே

வாயிற்புறத்துச் சென்று நம்பியாரூரரை எதிர்கொண்டு வணங்கினார்கள். திருநாவலூராரும், தம்மை எதிர்கொண்டழைத்த அடியார்களைக் கைகூப்பித் தொழுது, "எந்தையாகிய சிவபெருமான் வீற்றிருந்தருளும் பெருஞ்சிறப்புடைய திருப்பதியும் இத்திருவாரூரே. இங்கெழுந்தருளிய இறைவர் எளியேனையும் ஆட்கொண்டருளும் இசைவுடையாரோ என்பதனை அன்புகூர்ந்து அவர்பால் கேட்டுத் தெரிவிப்பீராக என வினவி ®"கரையும் கடலும்மலையும்..." எனவரும் திருப்பதிகம் பாடி திருக்கோயில் வாயிலை அடைந்தார். சிவனடியார்கள் வீற்றிருக்கும் சிறப்புடைய தேவாசிரிய மண்டபத்தைக் கைகூப்பித் தொழுதார். புற்றிடங்கொண்ட பெருமான் எழுந்தருளிய திருமூலட்டானத்தைச் சூழ்ந்த திருமாளிகை வாயிலை வணங்கி உள்ளே புகுந்தார். செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகளார் மலர்தூவி வழிபாடு செய்யத் திருவருள் புரிந்த பூங்கோயில் அமர்ந்த பெருமான் சேவடிகளை உளங்குளிர இறைஞ்சியதனால் உளதாகிய இன்பப்பெருவெள்ளத்திலே மூழ்கிநின்று இன்னிசைத் தமிழ் மாலையினைப் பாடிப் போற்றினார்

அப்பொழுது யாவரும் கேட்கும்படி 'நம்பியாரூரனே தோழமையாக உனக்கு நம்மைத் தந்தனம். நீ எம்மால் தடுத்தாட்கொள்ளப்பட்ட அந்நாளில் நீ கொண்ட திருமணக்கோலத்தையே எப்பொழுதும் மேற்கொண்டு இந்நிலவுலகில் இன்புற்று வாழ்வாயாக' என்றதோர் அருள்வாக்கு வானிடையே தோன்றியது. அவ்வருள்மொழியைச் செவிமடுத்த சுந்தரர், 'அடியேனைத் தடுத்தாட்கொள்ள வந்த மறையவனே! ஆரூரமர்ந்த அருமணியே!! நாயினும் கடையனாய எளியேனையும் பொருளாகக் கொண்டு உன் திருவடித்தாமரையினைத் தந்தருளியது உன் பெருங்கருணைத் திறமல்லவா' எனக்கூறிப் புற்றிடங்கொண்ட பெருமானைப் பலமுறையும் வணங்கிப் போற்றினார். வீதிவிடங்கப் பெருமானாகிய தியாகேசர் திருமுன்பு சென்று தொழுது திருமாளிகையை வலஞ்செய்து வெளியேவந்தார். அன்றுமுதல் அடியார்களெல்லாம் அவரைத் **'தம்பிரான் தோழர்'** என அழைத்தனர். இறைவன்

® கரையும் கடலும் மலையும் காலையும் மாலையும்
உரையில் விரவி வருவான் உருத்திரலோகன்
வரையின் மடமகள் கேள்வன் வானவர் தானவர்க்கெல்லாம்
அரையன் இருப்பதும் ஆரூர் அவர் எம்மையும் ஆள்வரோகேள்

பணித்த வண்ணம் நம்பியாரூரர், என்றும் திருமணக் கோலப் பெருமான் எனப் போற்றும் வண்ணம் சுந்தர வேடங்களை உடைய தவவேந்தராய்ப் பூங்கோயிலமர்ந்த பெருமானை நாடோறும் வழிபட்டு இன்னிசைத் தமிழ்பாடி மகிழ்ந்திருந்தார்.

திருக்கைலாய மலையிற் பார்வதி தேவியாருடைய சேடியர்களாய் ஆலாலசுந்தரராற் காதலிக்கப்பெற்ற மகளிர் இருவருள் ஒருவராகிய கமலினியார் திருவாரூரிலே உருத்திரகணிகையர் குலத்திற் பிறந்து பரவையார் எனும் பெயரைப் பெற்று பேரழகுடையராய் வளர்ந்து மங்கைப் பருவமெய்தினார். அந்நங்கையார் பூங்கோயிலமர்ந்த பெருமானை நாடோறும் வழிபட்டு வரும் கடமையுடையராய் விளங்கினார்.

இவ்வாறு சிவபெருமானை வழிபடுதல் கருதிப் பரவையார் திருவாரூர்த் திருக்கோயிலுக்குச் சென்று வரும் நாட்களில் ஒருநாள், தம்பிரான் தோழராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள், பண்டைப் பிறப்பின் அன்புடையராகிய காதலரை மீளவும் சேர்த்து வைக்கும் நல்லூழாகிய இறைவனது திருவருளாணையால், அவரைக் கண்டு காதல் கொண்டார். பரவையாரும் அவ்வாறே பண்டை நல்விதியின் தூண்டுதலால் நம்பியாரூரரைக் கண்டு காதல் கொண்டார்.

திருவாரூரிறைவர், அன்றிரவே சிவனடியார் முன் தோன்றிப் பரவையாரைச் சுந்தரருக்குத் திருமணம் செய்து கொடுக்குமாறு பணித்தருளினார்; நம்பியாரூரரை அடைந்து, 'நங்கை பரவையை உனக்கு வாழ்க்கைத்துணையாகத் தந்தோம். இன்னவகையே நம்முடைய அடியார்களும் அறிந்து கொள்ளும்படி தெரிவித்துள்ளோம்' என்றருளிச் செய்து, பரவையார் முன்னிலையில் தோன்றி 'உனக்கும் நம்பியாரூரனுக்கும் நாளை திருமணம் நிகழும்' எனக்கூறி மறைந்தருளினார். மறுநாள் விடியற்காலை இறைவன் பணித்தவண்ணம் சிவனடியார்கள் அனைவரும் ஒருங்குகூடி அடியார்க்கு எளிய சிவபெருமானது திருவருட்டிறத்தை வியந்து போற்றித் தம்பிரான் தோழராகிய நம்பியாரூரருக்கு நங்கை பரவையாரை விதிப்படி திருமணஞ் செய்து கொடுத்தார்கள். இவ்வாறு ஆரூர்ப்பெருமான் திருவருளால் பரவையாரை வாழ்க்கைத் துணைவியாகப் பெற்ற திருநாவலூரர், அம்மெல்லியலாருடன் அன்பினாற்

கலந்து மகிழும் நிலையிலேயே சிவனருட்கடலில் திளைத்து இன்புறும் சிவயோகச் செல்வராய்ச் செந்தமிழ்ப் பாமாலைகள் பாடிச் சிவ-பெருமானைப் போற்றி மகிழ்வாராயினர்.

நம்பியாரூரர் பரவையாருடன் கூடி இறைவனை வழிபட்டுவரும் நாட்களில் ஒருநாள், தேவாசிரிய மண்டபத்தில் ஒருங்கு குழுமியிருக்கும் சிவனடியார்களைக் கண்டார். "அன்புடைத் தொண்டர்களாகிய இவர்களுக்கு நான் அடியனாகும் நாள் எந்நாளோ" என்னும் நினை-வுடையவராய்ப் புற்றிடங்கொண்ட பெருமானை வழிபடுதற்குத் திருக்கோவிலினுள்ளே சென்றார். அந்நிலையில் தேவாசிரிய மண்டபத்தில் வீற்றிருக்கும் சிவனடியார்களுள் ஒருவராகிய விறன்மிண்டர் என்பார், வன்றொண்டர் அடியார் திருக்கூட்டத்தைப் பணியாது நேரே திருக்கோயிலுக்குச் சென்றார் எனக் கருதி **'சிவனடியார் திருக்கூட்டமானது தன்னைப் பேணாது செல்லும் நம்பியாரூரனுக்கும் புறம்பு; அவனுக்குப் பிரானாகிய சிவபெருமானுக்கும் புறம்பு;'** என வெகுண்டு உரைத்தார்.

இங்ஙனமாக, 'அடியவர்க்கு அடியனாவேன், என்னும் பேரார்-வத்துடன் திருக்கோயிலுள் வழிபடச் செல்லும் வன்றொண்டர்க்கு எதிரே ஆரூரிறைவர் தோன்றிக் காட்சி கொடுத்தருளினார். வன்றொண்டரும் தமக்கு எளிவந்தருளிய இறைவரது பெருங்கருணைத் திறத்தை வியந்து பணிந்து போற்றினார். தொண்டர்க்குத் தொண்டராம் நற்பேற்றி-னைத் திருநாவலூரர்க்கு அளித்தருளத் திருவுளங்கொண்ட இறைவர், அடியார்களது திருத்தொண்டின் திறத்தையும் சால்பினையும் சுந்தரர்க்கு அறிவுறுத்தியருளி, நம்முடைய அடியார்களை முறைப்பட வணங்கி அவர்களது திருத்தொண்டின் திறத்தை விரித்துரைக்கும் திருப்பதிகச் சொன்மாலை பாடிப் போற்றுவாயாக' எனப் பணித்தருளினார். அப்பணியினைத் தலைமேற்கொண்ட வன்றொண்டர், ஆரூர் இறை-வரை இறைஞ்சி நின்று 'எம்பெருமானே உன் மெய்யடியார்களது வரலாறு இன்னதென்றும் அவர்தம் பெருந்தகைமை இதுவென்றும் உணராத தமியேன் எங்ஙனம் பாடவல்லேன்? அடியார்களது பொருள் சேர் புகழை விரித்துரைக்கும் திருப்பதிகத்தினைப் பாடும் பரிசினை அடியேற்கு அருள்செய்வாயாக' என வேண்டி நின்றார். மாதொரு பாகராகிய இறைவர், அவரது வேண்டுகோட்கு இசைந்து, வேதங்களை

அருளிச் செய்த தமது திருவாக்கினால், தில்லை வாழந்தனர் தம் அடியார்க்கு மடியேன்' என்று அடியெடுத்துக் கொடுத்து மறைந்தருளினார். இறைவரால் அடியெடுத்துக் கொடுக்கப் பெற்ற நம்பியாரூரர், தேவாசிரிய மண்டபத்தில் வீற்றிருக்கும் அடியார்களை நெடுந்தூரத்திலேயே கண்டு தாழ்ந்திறைஞ்சி ஈர அன்பினராய் வீரம் மிக்க அவ்அடியார்களது திருப்பெயரை முறையே எடுத்தோதி அவர்களெல்லார்க்கும் தனித்தனியே 'அடியேன்' எனப் பணிமொழி பகர்ந்து, **'தில்லை வாழந்தணர் தம் அடியார்க்குமடியேன்....''** எனும் திருத்தொண்டத்தொகைத் திருப்பதிகம் பாடிப் போற்றித் தேவாசிரிய மண்டபத்தில் அமர்ந்த சிவனடியார் உளமகிழ அவர்தம் திருக்கூட்டத்தின் நடுவே சென்றணைந்தார்.

தேசமுய்யத் திருத்தொண்டத் தொகை பாடியருளிய திருநாவலூரர், வாழ்க்கைத் துணையாகிய பரவையாருடன் கூடி ஆரூர்ப்பெருமானை வழிபட்டுத் திருவாரூரில் தங்கியிருந்தார். அவரது குடும்பத்திற்கு வேண்டிய செந்நெல், பருப்பு முதலிய உணவுப்பொருட்களைக் குண்டையூர்க் கிழவரெனும் வேளாளர் அன்புடன் அனுப்பி வருவாராயினர். இப்பணி இடையறாது நிகழ்ந்து வந்தது. உரிய காலத்தில் மழை பெய்யாமையால் நாட்டிற் பஞ்சம் உண்டாயிற்று. இப்பஞ்சம் குண்டையூர்க் கிழவரையும் பற்றி வருத்தியது. சுந்தரமூர்த்தி நாயனார் திருமாளிகைக்கு இன்று நெல் அனுப்புதற்கு இல்லையே' எனப் பெருங்கவலை கொண்ட குண்டையூர்க் கிழவர், அன்று உண்ணா நோன்பினராய் அயர்ந்து துயில் கொண்டார்' இறைவன் அவர்க்குக் கனவிலே தோன்றி 'நம்பியாரூரன் பொருட்டு உன்பால் நெல்லைத் தந்தோம்' என்று உரைத்துக் குபேரனை ஏவினார். அவ்வண்ணமே குபேரன் குண்டையூர் முழுவதும் நெல் மலையாகச் குவிந்திடச் செய்தான். மறுநாள் விழித்தெழுந்த குண்டையூர்க் கிழவர், மலைபோன்ற நெற்குவியலைக் கண்டு வியப்புற்று இறைவன் திருவருளைத் தொழுது போற்றினார். 'வன்றொண்டர்க்களித்த இந்நெல்மலையை யாவர் எடுத்துச் செல்ல வல்லவர்? இதனை அவர்க்குத் தெரிவிப்பேன்' என்றெண்ணித் திருவாரூரை நோக்கிச் சென்றார். தம் பொருட்டுக் குண்டையூரில் நெல் மலை அளிக்கப்பெற்றுள்ளது என இறைவன் அறிவிக்க அறிந்த நம்பியாரூரர், குண்டையூரைநோக்கி வந்தார். வழியிடையே வன்றொண்டரைக் கண்ட குண்டையூர்க் கிழவர், அவரை இறைஞ்சி

எதிர்கொண்டு தம்மூருக்கு அழைத்துச் சென்றார். அவ்வூரை அடைந்து வானளாவ உயர்ந்த நெல்மலையைக் கண்ட தம்பிரான்தோழர், இறைவன் திருவருளை வியந்தார். இங்கு நெல்மலையைத் தந்த சிவபெருமானே இதனை எடுத்துச் செல்வதற்குரிய ஆட்களையும் தந்தாலல்லது இதனைக் கொண்டு செல்ல இயலாது' என நினைந்து திருக்கோளிலித் திருக்கோயிலை அடைந்தார். இறைவன் திருமுன் நின்று *'**நீளநினைந்தடியேன்....**' எனவரும் திருப்பதிகம் பாடிப்போற்றி நெல்லை எடுத்துச் செல்வதற்குரிய ஏவலாட்களைத் தரும்படி வேண்டிக்கொண்டார். இன்று பகற்பொழுது நீங்கியபின் நம்முடைய பூதகணங்கள் பரவை வீடு மாத்திரமின்றித் திருவாரூர் முழுவதிலும் நெல்லைக்கொண்டு வந்து குவித்துவிடும்' என்றதோர் அருள்வாக்கு, வானிடை எழுந்தது. அது கேட்டு மகிழ்ந்த சுந்தரர், சிவனருளைத் துதித்துப் போற்றித் திருவாரூரை அடைந்து நிகழ்ந்த செய்திகளைப் பரவையாருக்குத் தெரிவித்து மகிழ்ந்திருந்தார். அன்றிரவே பூதகணங்கள் குண்டையூரிலுள்ள நெற்குவியலை வாரிக்கொண்டு சென்று பரவை-யார் மாளிகையிலுந் திருவாரூர் வீதியிலும் நிரப்பி விட்டன. மறுநாள் வைகறைப் பொழுதில் துயிலுணர்ந்து எழுந்த பரவையார், தம் மாளிகையிலும் திருவாரூர் வீதிகளிலும் நிரம்பிய நெற்குவியல்களைக் கண்டு வியப்புற்றார்; ஆரூர் மக்கள் அனைவரும் அவரவர் மனைமுகப்பிலுள்ள நெற்குவியல்களை அவர்களே வாரிக்கொள்ளலாம் எனப் பறையறைவித்தார்.

நம்பியாரூரர் திருவாரூரில் இனிதுறையும் நாட்களில், சோழ மன்னனின் சேனைத் தலைவராகவும், சிவபெருமான் வீற்றிருக்கும் திருக்கோயில்களுக்குத் திருவமுதுக்குரிய செந்நெல்லைச் சேர்த்தளிக்கும் திருத்தொண்டினை மேற்கொண்ட தாளாண்மை மிக்க வேளாளராகவும் விளங்கிய கோட்புலியார், தமது பதியாகிய நாட்டியத்தான் குடிக்கு எழுந்தருளும் வண்ணம் நம்பியாரூரரை வேண்டிக் கொண்டார். அவரது வேண்டுகோட்கிசைந்த சுந்தரர், திருவாரூரினின்றும் புறப்பட்டு திருநாட்டி-

---

* நீள நினைந்தடியேன் உமை நித்தலும் கைதொழுவேன்
வாளன கண்மடவாள் அவள் வாடி வருந்தாமே
கோளிலி எம்பெருமான் குண்டையூர்ச் சில நெல்லுப்பெற்றேன்
ஆளிலை எம்பெருமான் அவை அட்டித்தரப் பணியே.

யத்தான்குடியை அடைந்தார். ஆரூரரைக் கோட்புலியார் எதிர்கொண்டு வணங்கி, தமது மாளிகைக்கு அழைத்துச் சென்று முறைப்படி பூசணை புரிந்து திருவமுது செய்து வைத்தார். தம் மக்களாகிய சிங்கடி, வனப்பகை என்னும் பெண்கள் இருவரையும் வன்றொண்டர் திருவடிகளில் வணங்கச் செய்து தாமும் வணங்கி நின்று, 'தம்பிரான் தோழராகிய நீவிர் அடியேன் பெற்ற இப்பெண்கள் இருவரையும் அடிமையாக ஏற்றருளல் வேண்டும்' என அன்புடன் வேண்டிக்கொண்டார். அவரது அன்பின் திறத்தையுணர்ந்த நம்பியாரூரர் 'இப்பெண்கள் இருவரும் என் குழந்தைகள்' என்று சொல்லி அக்குழந்தைகள் இருவரையும் அன்பினால் அணைத்தெடுத்துத் தம்மடிமீது அமர்த்திக்கொண்டு நெஞ்சம் நெக்குருக உச்சிமோந்து அக்குழந்தைகள் விரும்பிய பொருள்களைக் கொடுத்து மகிழ்ந்தார்.

நாட்டியத்தான் குடியினின்றும் புறப்பட்டு வலிவலம் எனும் தலத்தை அடைந்து மாதொருபாகனாகிய பெருமானைக்கண்டு மகிழ்ந்த நம்பியாரூரர் **'நன்று மகிழும் சம்பந்தர் நாவுக்கரசர் பாட்டுகந்தீர்'** என திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகிய பெருமக்கள் இருவரும் திருவாய் மலர்ந்தருளிய தேவாரத் திருப்பதிகங்களில் சிவபெருமானுக்குள்ள ஈடுபாட்டினைக் குறிப்பிட்டுப் போற்றி மீண்டும் திருவாரூர் அடைந்தார். அப்பொழுது பங்குனி உத்தரத் திருவிழா அணுகியது. அதனை உணர்ந்த சுந்தரர், அத்திருவிழாவிற் பரவையார் செலவு செய்தற்குரிய பொன்னைக் கொண்டு வரும் பொருட்டுத் திருப்புகலூரை அடைந்தார். திருக்கோயிலிற் சென்று இறைவனைப் பணிந்து போற்றி அண்மையிலுள்ள திருமடத்திற்குச் செல்லத் திருவுளம் கொண்டு அடியார்களுடன் கோயில் வாயிலில் சிறிது நேரம் இளைப்பாறியிருந்தார். அந்நிலையில் இறைவன் திருவருளால் அவர்க்கு உறக்கம் வருவதாயிற்று. திருக்கோயில் திருப்பணிக்காக அங்கு அடுக்கி வைக்கப்பட்டுள்ள செங்கற்களைக் கொண்டு வரச்செய்து அவற்றைத் தலைக்கு அணையாகக் கொண்டு அவற்றின் மேல் மேலாடையை விரித்துத் துயில் கொண்டார். பின்பு நம்பியாரூரர் துயிலுணர்ந்து எழுந்த பொழுது தலைக்கு அணையாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த செங்கற்கள் எல்லாம் பொன் கட்டிகளாயிருந்தன. வியப்புற்ற சுந்தரர் புகலூரிறைவர்

திருவருளைத் துதித்து திருக்கோயிலினுள்ளே சென்று இறைவனை வணங்கி, * 1. **'தம்மையே புகழ்ந்திச்சை பேசினும்...'** எனும் திருப்பதிகம் பாடிப் போற்றினார்.

புகலூரிறைவன் அளித்த பொன்கட்டிகளை எடுத்துக்கொண்டு அடியார்களுடன் அங்கிருந்து புறப்பட்ட சுந்தரர் திருவாரூரை அடைந்து தெய்வப் பெருமானாகிய இறைவரைப் பணிந்து போற்றிப் பரவையாருடன் மகிழ்ந்திருந்தார்.

இறைவன் எழுந்தருளிய திருத்தலங்கள் பலவற்றையும் வழிபட எண்ணிய நம்பியாரூரர், திருவாரூரினின்றும் புறப்பட்டு நன்னிலம் ஆகிய தலங்களை இறைஞ்சித் திருவாலம்பொழிலையடைந்து இறைவனை வணங்கி இருந்தார். அன்றிரவு அவர் துயிலும் பொழுது சிவபெருமான் அவர் கனவில் தோன்றி 'மழபாடிக்கு வருவதற்கு மறந்தாயோ' என வினவி மறைந்தருளினார். துயிலுணர்ந்தெழுந்த சுந்தரர், காவிரியைக் கடந்து அதன் வடகரையைச் சேர்ந்து திருமழபாடிக்குப் போய் மழபாடி இறைவர் திருமுன்நின்று, * 2. **'பொன்னார்மேனியனே...''** என்ற திருப்பதிகம் பாடிப் போற்றினார். பின்னர் அங்கிருந்து மேற்றிசை நோக்கிப் புறப்பட்டுக் காவிரியின் இருமருங்கிலுமுள்ள தலங்களை இறைஞ்ச விரும்பித் திருவானைக்காவை அடைந்தார். சிலந்திக்கு அருள்புரிந்த திருவானைக்கா இறைவரைப் பணிந்து **'மறைகளாயின நான்கும்'** என்ற திருப்பதிகம் பாடி 'ஆனைக்கா அண்ணலைப் பணிவோர் எம்மையும் ஆளாகவுடையார்' எனப் போற்றி மகிழ்ந்தார்.

பின்பு திருப்பாச்சிலாச்சிராமம் அடைந்து தமக்குப் பொன்னைத் தந்தருள வேண்டுமென்னுங் குறிப்புடன் சிவபெருமானை வணங்கினார்.

---

* தம்மையே புகழ்ந் திச்சை பேசினும் சார்கினும் தொண்டர்தருகிலாப்
பொய்ம்மையாளரைப் பாடாதே எந்தை புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மையே தரும் சோறும் கூறையும் ஏத்தலாம் இடர் கெடலுமாம்
அம்மையே சிவலோகம் ஆள்வதற்கு யாதும் ஐயுறவில்லையே.

* பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர் கொன்றை அணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால் இனி ஆரைநினைக்கேனே.

பொன்பெற்ற சுந்தரர் பாச்சிலாச்சிராமத்தினின்றும் புறப்பட்டுப் பைஞ்ஞீலி, ஈங்கோய்மலை என்னும் பதிகளைப் பணிந்து கொங்கு நாட்டை அடைந்தார். காவிரிக்குத் தென்கரையில் உள்ள கரையூர்த் திருப்பாண்டிக் கொடுமுடி என்னும் திருக்கோயிலை இறைஞ்சி [1] **'மற்றுப்பற்றெனக்கின்றி'** என்னும் நமச்சிவாயத் திருப்பதிகம் பாடிப் போற்றினார். பின்பு காஞ்சிநதிக்கரையிலிருக்கும் பேரூர் திருக்கோயிலை அடைந்து வழிபட்டார். அந்நிலையிற் பேரூர்ப் பெருமான், தில்லை மன்றுள் நின்றாடும் தமது திருக்கோலத்தோடு காட்சி கொடுத்தருளினார். அவ்வழகிய காட்சியைக் கண்டு அளவிலாப் பேரின்பமடைந்த சுந்தரர், 'தில்லையம்பலவன் திருக்கூத்தினைக் கண்டு கும்பிடப் பெற்றால் இனிப் புறம்போய் எய்துதற்கு யாதுளது' எனும் பெருமகிழ்ச்சியுடையவராய்ப் பேரூரினின்றும் புறப்பட்டு தில்லையை நோக்கிச் சென்றார். செல்லும் போது பல தலங்களையும் இறைஞ்சி நடுநாட்டில் திருக்கூடலையாற்றூரை அணுகியவர் அங்கு செல்லாமல் திருமுதுகுன்றை நோக்கிச் சென்றார். அப்பொழுது கூடலையாற்றூரில் கோயில் கொண்டருளிய சிவபெருமான், மறையவர் வடிவுகொண்டு வழிப்போக்கராய் வன்றொண்டரை அணுகி நின்றார். அந்தணரைக் கண்ட சுந்தரர், அவரைப் பணிந்து "ஐயரே, நாம் இன்று திருமுதுகுன்றுக்கு போதற்குரிய வழிதனைத் தெரிவித்தல் வேண்டும்?" என வேண்டிக்கொண்டார். அதுகேட்ட இறைவர், 'கூடலையாற்றூரை அடையச் செல்வது இவ்வழியே' எனக்கூறி அவர்க்குத் துணையாய்த் தாமும் அவ்வூரெல்லையளவும் உடன் சென்று மறைந்தருளினார். உடன் வந்த அந்தணரைக் காணாத சுந்தரர், அழைத்து வந்து மறைந்த அவர் சிவபெருமானே எனத் தெளிந்து [2] **'வடிவுடைமழுவேந்தி....'** எனும் திருப்பதிகம் பாடி கூடலையாற்றூர்க்

---

[1] மற்றுப்பற்றெனக் கின்றிநின்திருப் பாதமே மனம் பாவித்தேன்
பெற்றவும் பிறந்தேன் இனிப் பிறவாத தன்மை வந்தெய்தினேன்
கற்றவர் தொழுதேத்தும் சீர்க்கறை ஊரிற் பாண்டிக்கொடுமுடி
நற்றவா உனை நான் மறக்கிலும் சொல்லும்நா நமச்சிவாயவே

[2] வடியுடை மழுவேந்தி மதகரியுரி போர்த்துப்
பொடியணி திருமேனிப் புரிகுழல் உமையோடும்
கொடியணி நெடுமாடக் கூடலை ஆற்றூரில்
அடிகள் இவ்வழிப் போந்த அதிசயம் அறியேனே.

கோயிலை அடைந்து தமக்கு வழித்துணையாய் வந்தபெருமானை வணங்கிப் போற்றித் திருமுதுகுன்றம் அடைந்தார்.

திருமுதுகுன்றத்திறைவரை இறைஞ்சிய நம்பியாரூர், 'நஞ்சிடை-யினின்று' என்ற முதற்குறிப்புடைய திருப்பதிகம் பாடி இறைவனிடம் பொருள்பெறும் மனக்குறிப்புடன் **'மெய்யில் வெண்பொடி'** என்னும் செந்தமிழ்ப் பதிகத்தைப் பாடினார். அப்பொழுது திருமுதுகுன்றப் பெருமான் நம்பியாரூரர்க்குப் பன்னீராயிரம் பொன்களைப் பரிசிலாகத் தந்தருளினார். அவற்றைப் பெற்ற ஆளுடைய நம்பி மீண்டும் இறை-வரைப் பணிந்து 'தேவரீர் தந்தருளிய இப்பொன் யாவும் அடியேற்குத் திருவாரூரிலுள்ளார் வியக்கும் வண்ணம் அங்கே வரும்படி செய்தல் வேண்டும்' என வேண்டிக்கொண்டார். அப்பொழுது 'இப்பொன்னெல்லா வற்றையும் மணிமுத்தாற்றிலிட்டு திருவாரூர்க் குளத்தில் எடுத்துக் கொள்க' என்றதோர் அருள்வாக்கு எழுந்தது. அவ்வருள் மொழியைச் செவிமடுத்த வன்றொண்டர், தாம் பெற்ற பொன்னின் மாற்றறிதற்கு மச்சம் வெட்டி எடுத்துக்கொண்டு பொன் முழுவதையும் மணிமுத்தாற்று நீரினுள்ளே புகவிட்டு, 'அன்று என்னை வலிய ஆட்கொண்ட திரு-வருளை இதில் அறிவேன்' எனச் சொல்லித் தில்லைக் கூத்தனைக்கண்டு கும்பிடும் பேரார்வத்துடன் அங்கிருந்து புறப்பட்டார். கடம்பூரை இறைஞ்சித் தில்லைப்பதியை அடைந்தார். திருவீதியை வலம்வந்து கோபுரத்தை இறைஞ்சி உள்ளே புகுந்து பொன்னம்பலத்தில் ஆடல் புரியும் பெருமானை ஆர்வமுறக் கண்டு தொழுதார்.

தில்லையிற் சிற்றம்பலவன் திருக்கூத்தைக் கண்டு மாறிலா மகிழ்ச்சியில் திளைத்த நம்பியாரூரர், அங்கிருந்து புறப்பட்டு கருப்பறியலூர், மண்ணிப்படிக்கரை, வாழ்கொளிபுத்தூர் முதலிய பல தலங்களையும் வழிபட்டுச் செந்தமிழ்ப் பாமாலைகள் போற்றிசைத்துத் திருவாரூரை அடைந்து பூங்கோயிலமர்ந்த பெருமானை வழிபட்டுப் பரவையாருடன் இனிதிருந்தார்.

இங்ஙனம் இருக்கும் நாளில் ஒருநாள் சுந்தரர், பரவையாரை நோக்கி, திருமுதுகுன்றப் பெருமான் நமக்குத் தந்தருளிய பொன்னை மணிமுத்தாற்று நீரினுள் புகவிட்டு வந்தோம். அப்பொன்திரளை

இறைவனருளால் ஆரூர்த் திருக்கோயிலின் மேற்றிசையிலுள்ள குளத்திலே தேடி எடுத்து வருவோம். நீயும் உடன் வருக' என அழைத்தார். அது கேட்ட பரவையார், முறுவலித்து 'இ.ஃது என்ன அதிசயம்' என்றார். 'நங்கையே, நம் பெருமானருளால் அப்பொன் முழுவதையும் குளத்திலே எடுத்து உனக்குத் தருவது பொய்யாது' என உறுதி கூறிய நம்பியாரூரர், பரவையாருடன் புற்றிடங்கொண்ட பெருமானை வணங்கித் திருவாரூர்க் கோயிலை வலம் வந்து அதன் மேற்பக்கத்துள்ள திருக்குளத்தின் வடகீழ்க் கரையில் நிற்கும்படி பணித்துத் தாம் குளத்திலே இறங்கி முன் முதுகுன்றில் மணி முத்தாற்றிலிட்ட பொன்னைத் தேடினார். அவர் வாயிலாகச் செந்தமிழ்ப் பாமாலையை அணிய விரும்பிய சிவபெருமான், அக்குளத்திலே பொன் விரைவில் தோன்றாதபடி செய்தருளினார். அந்நிலையிற் பரவையார் தன் கணவரை நோக்கி ஆற்றிலே இட்டு குளத்திலே தேடுவீர்; இறைவன் திருவருளால் அறியும் முறை இதுவோ' என நகைத்தார். அதுகேட்ட சுந்தரர் முதுகுன்றமர்ந்த பெருமானே, பரவையிவள் நகைத்துரையாதபடி தேவரீர் அடியேற்குமுன் அருளிச் செய்த வண்ணம் செம்பொன்னைத் தந்தருள்வீராக' என **'பொன் செய்த மேனியினீர்'** எனவரும் திருப்பதிகம் பாடிப்போற்றினார். இவ்வாறு இத்திருப்பதிகத்தின் எட்டாந் திருப்பாடலளவும் வேண்டியும் இறைவன் பொன்னைத் தந்தருளவில்லை. * **"ஏத்தா திருந்தறியேன்"** எனும் ஒன்பதாம் திருப்பாடலைப் பாடிய அளவில் இறைவரருளால் பொன் திரள் குளத்தில் அகப்பட்டது. அப்பொன்னைக் கண்ட சுந்தரர், அதனையும் முன் மாற்றறியக் கொணர்ந்த மச்சத்தையும் உரைகல்லில் உரைத்துப் பார்த்த பொழுது பொன் உரையில் தாழ்ந்து காணப்பட்டது. அதுகண்ட சுந்தரர் இறைவனை மீண்டும் பதிகம் பாடிப் பரவினார். திருவருளால் அப்பொன் மாற்றுயர்ந்து காணப்பட்டது. அதனைக் கொண்டு கரையேறிய வன்றொண்டர், பொற்குவையினை ஏவலாட்கள் மூலம் பரவையார் மாளிகைக்கு அனுப்பி விட்டுப் பூங்கோயிலமர்ந்த இறைவரை வணங்கிப் பரவை-

* "ஏத்தா திருந்தறியேன் இமையோர்தனி நாயகனே
மூத்தா யுலகுக்கெல்லாம் முதுகுன்ற மமர்ந்தவனே
பூத்தாருங்குழலாள் பர வையிவள் தன் முகப்பே
கூத்தா தந்தருளாய் கொடியே னிட்ட னம் கெடவே"

யாருடன் மாளிகையை அடைந்து இறைவரது திருவருட்திறத்தை எண்ணி மகிழ்ந்திருந்தார்.

இறைவன் கோயில் கொண்டருளிய ஏனைய திருத்தலங்களையும் வழிபட்டு மகிழ எண்ணிய நம்பியாரூரர், ஆரூரிறைவர்பால் விடைபெற்று நள்ளாறு, கடவூர் முதலிய பல தலங்களையும் வழிபட்டு திருக்கோலக்காவின் எல்லையை அடைந்தார். அப்பொழுது சிவபெருமான் அவர்க் கெதிரே தோன்றிக் காட்சி கொடுத்தருளினார். அத்தெய்வக் காட்சியைக் கண்டு மகிழ்ந்த சுந்தரர், ஞானசம்பந்தப் பிள்ளையார் தம்முடைய மெல்லிய கைகளால் தாளமிட்டு இன்னிசைத் திருப்பதிகம் பாடியது கண்டு இரங்கிய திருக்கோலக்கா இறைவர் பிள்ளையார்க்குத் திருத்தாளம் அளித்தருளிய செய்தியை, *'**நாளுமின்னிசை யாற்றமிழ்.....**' எனும் திருப்பாடலிற் போற்றிப்பாடினார்.

பின்பு சீகாழிப்பதியைப் புறத்தே வலம்வந்து வணங்கி நின்று அத்திருப்பதியில் திருவவதாரம் செய்தருளிய முத்தமிழ் விரகராகிய திருஞானசம்பந்தப்பிள்ளையார் திருவடிகளைப் பரவிப் போற்றிக் குருகாவூர் என்னும் திருப்பதியை நோக்கிச் செல்வாராயினர். அங்ஙனம் செல்லும் வன்றொண்டர் பசியாலும், நீர்வேட்கையாலும், வருந்துதலை உணர்ந்த சிவபெருமான், வழியிடையே மறையவர் வடிவுடன் தண்ணீரும் பொதிசோறும் கொண்டு வந்து வெய்யில் வெப்பம் நீங்க நிழல் தரும் பந்தரையும் உண்டாக்கி நம்பியாரூரரை எதிர்பார்த்திருந்தார். அப்போது சுந்தரர் அடியார்திருக்கூட்டத்துடன் அவ்விடத்து வந்து பந்தரின் கீழே போய் அங்குள்ள அந்தணர் பக்கத்திலே 'சிவாயநம' எனத் திருவைந்தெழுத்தோதி அமர்ந்தார். அந்தணராய் வந்துள்ள சிவபெருமான் அவரை நோக்கி 'நீவிர் மிகவும் பசியுடையவராக உள்ளீர். நான் கொண்டுவந்த இப்பொதிசோற்றை உண்டு தண்ணீர் பருகி இளைப்பாறுவீராக' என வேண்டிக்கொண்டார். சுந்தரரும் அதற்கிசைந்து அவர் அன்புடன் தந்த பொதிசோற்றை வாங்கி அடியார்களுடன் அமுதுசெய்து

---

* நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தனுக்கு உலகவர்முன் தாளமீந்து அவன் பாடலுக் கிரங்கும் தன்மையாளனை என்மனக் கருத்தை ஆளும் பூதங்கள் பாடநின்றாடும் அங்கணன்தனை எண்கணம் இறைஞ்சும் கோளிலிப் பெருங் கோயிலுள்ளானைக் கோலக்காவினிற் கண்டுகொண்டேனே.

உடன்வந்த பரிசனங்களெல்லாரும் உண்ணும்படி செய்தார். அறவாழியந்தணனாகிய இறைவனளித்த பொதிசோறு யாவரும் உண்ணும்படி குறையாது பெருகியது. உண்டு பசிதீர்ந்த வன்றொண்டர், உரிய நேரத்தில் உணவளித்து உய்வித்த மறையவரைப் பாராட்டி அடியார்களுடன் அருகே துயிலமர்ந்தார். அந்நிலையில் மறையவராய் வந்த இறைவர், பந்தருடன் மறைந்தருளினார். துயிலெழுந்த சுந்தரர், மறையவரைக் காணாது அதிசயித்து, இவ்வாறு வந்து அருள்புரிந்தவர் குருகாவூரிற் கோயில் கொண்டருளிய சிவபெருமானே எனத் தெளிந்து, *'**இத்தனை யாமாற்றம்...**' எனும் திருப்பதிகம் பாடி திருக்குருகாவூரை அடைந்து உணவளித்து உயிர்காத்த பெருமானை அன்பினாற் போற்றி மகிழ்ந்தார்.

குருகாவூர்ப் பெருமானை வழிபட்ட சுந்தரர், திருக்கழிப்பாலையை இறைஞ்சித் தில்லையை அடைந்து தில்லைச் சிற்றம்பலவன் திருக்கூத்தினைக் கண்டு கும்பிட்டு, எல்லையிலா இன்பத்தில் திளைத்து மகிழ்ந்தார். பின்பு, திருத்தினைநகரை வணங்கித் தாம் பிறந்த தலமாகிய திருநாவலூரை அடைந்தார். நாவலூர்வாழ்வார்கள் தம்பெருவாழ்வு வரும்நாள் என்று நகரணி செய்து நம்பியை எதிர்கொண்டு வரவேற்றார்கள். நம்பியும் தொண்டருடன் கோயிலுட் புகுந்து தம் ஆவியினும் அடைவுடைய **சிவபெருமான் திருவடிகளை** இறைஞ்சிக் **'கோவலனான்முகன்'** என்ற திருப்பதிகத்தினைப் பாடிப் போற்றி அடியார்களுடன் அப்பதியில் அமர்ந்திருந்தார்.

தொண்டை நாட்டுத் திருத்தலங்களை வழிபடவிரும்பிய சுந்தரமூர்த்தி சுவாமிகள், திருநாவலூரினின்றும் புறப்பட்டுத் திருக்கழுக்குன்றத்தை வணங்கிச் செந்தமிழ்ப் பதிகம் பாடித் திருக்கச்சூர் ஆலக்கோயிலை அடைந்து அங்கு வீற்றிருக்கும் பெருமானைப் பணிந்து போற்றிக் கோயிற் புறத்தணைந்தார். அப்பொழுது வெய்யில்வெம்மை மிக்க நண்பகற் பொழுதாகியும் அவர்க்கு அமுது சமைத்தளிக்கும்

* இத்தனையாம் மாற்றம் அறிந்திலேன் எம்பெருமான்
பித்தரே என்றும்மைப் பேசுவர் பிறரெல்லாம்
முத்தினை மணிதன்னை மாணிக்க முளைத்தெழுந்த
வித்தனே குருகாவூர் வெள்ளடை நீயன்றே.

பரிசனங்கள் அங்கு வந்து சேரவில்லை. அந்நிலையில் நம்பியாரூரர் திருக்கோயிலின் மதிற்புறத்தே ஒருபால் தங்கியிருந்தார். அடியார் பசித்திருக்கப் பொறாத இறைவன் மறையவர் வடிவுடன் வந்து வன்தொண்டரை நோக்கி 'நீர் பசியால் மிகவும் வாட்டமடைந்துள்ளீர்; நான் சிறிது நேரத்திற்குள் இங்குள்ள வீடுகளில் இரந்து உணவு கொண்டு வருமளவும் இவ்விடத்திலேயே இருப்பீராக" என்று சொல்லிச்சென்றார். திருநீற்றொளி திகழவும், முப்புரிநூல் தவழவும் கண்டவர்கள் மனமுருகவும் பகற்பொழுதில் மென்மலர்ப்பாதம் மண்ணிற் பொருந்த அண்மையிலுள்ள வீடுகளில் திருவமுதும் கறியும் இரந்து பெற்று நம்பியாரூரரை அணுகி 'இதனையுண்டு பசிதீரும்' எனக் கொடுத்தருளினார். அந்தணரது பேரன்பைக் கண்டு மகிழ்ந்த சுந்தரர், அவர் தம் உணவினை அன்புடன் வாங்கி அடியார்களுடன் அமுது செய்தார். அந்நிலையில் சோறு இரந்து கொணர்ந்த மறையவர் விரைவில் மறைந்தார். அதுகண்ட சுந்தரர், தம்பால் மறையவராய் வந்து பசிதீர்த்தருளியவர் சிவபெருமானே என உணர்ந்து 'வெம்மை மிகுந்த இவ்வுச்சிப் பொழுதிலே திருவடிவருந்த வீடு தோறும் சென்றிரந்து எமக்குச் சோறளித்த இப்பெருங்கருணையை என்னென்பேன்' என நெஞ்சு நெக்குருகி மெய்ம்மயிர் சிலிர்ப்பக் கண்ணீர் அரும்ப மலைமேல் மருந்தாகிய ஆலக்கோயிற் பெருமானை **"முதுவாயோரி கதற...."** எனவரும் திருப்பதிகம் பாடிப் போற்றினார். அங்கிருந்து புறப்பட்டுக் காஞ்சி நகரத்தை அணுகி ஏகாம்பரநாதரைக் கண்டு நிலமிசை வீழ்ந்திறைஞ்சினார். ஆராத காதலுடன் திருப்பதிகச் செந்தமிழ்ப்பாடித் துதித்தார். தொண்டர்களுடன் அந்நகரத்திலே சிலநாள் தங்கியிருந்தார்.

காஞ்சியில் தங்கியிருந்த நாட்களில் காமக் கண்ணியராகிய உமையம்மையார் எழுந்தருளிய திருக்காமக்கோட்டத்தைச் சென்று பணிந்தார். திருமேற்றளித் திருக்கோயிலை அடைந்து * **"நொந்தா ஒண்சுடரே"** எனும் திருப்பதிகம் பாடித்துதித்தார். திருவோணகாந்தன் தளியை இறைஞ்சி **"நெய்யும் பாலும்..."** எனும் பாமாலை பாடி

---

* நொந்தா ஒண்சுடரே நுனையே நினைந் திருந்தேன்
வந்தாய் யோயறியாய் மனமே புகுந்து நின்ற
சிந்தாய் எந்தை பிரான் திருமேற்றளியுறையும்
எந்தாய் உன்னையல்லால் இனி ஏத்தமாட்டேனே

இறைவர்பால் பொன்னை வேண்டிப் பெற்று மகிழ்ந்தார். கச்சி அநேகதங்காவதம் என்னும் திருக்கோயிலை அடைந்து செந்தமிழ் பாடித் துதித்தார். பின்பு பனங்காட்டூர் ஆகிய தலங்களைப் போற்றித் திருக்காளத்தி மலையை அடைந்தார். அம்மலையை வலம்வந்து காளத்தியப்பரைக் கைதொழுதிறைஞ்சி அவரருகே 'பொங்கிய ஒளி-யின் நீழற் பொருவிலன்புருவாய்' நிற்கும் கண்ணப்பநாயனார் திருவ-டிகளை வணங்கி மகிழ்ந்து தொண்டர்களுடன் அப்பதியிற் சிலநாள் அமர்ந்திருந்தார். அம்மலையிலிருந்தவண்ணமே வடநாட்டிலுள்ள திருப்ப-ருப்பதம் ஆகிய தலங்களை நினைந்து செந்தமிழ்ப் பாமாலைப் பாடிப் பின் கடற்கரையிலுள்ள திருவொற்றியூரை அடைந்து அங்கு எழுந்-தருளிய எழுத்தறியும் பெருமானை நாள்தோறும் மூன்று காலங்களிலும் ஆர்வமுறத் தொழுது அப்பதியில் தங்கியிருந்தார்.

திருக்கைலாய மலையிலே உமாதேவியார்க்குப் பணிபுரிந்த சேடியர்களில் ஒருவராகிய அநிந்திதையார் தொண்டை நாட்டில் ஞாயிறு என்னும் ஊரில் வாழும் ஞாயிறுகிழார் எனும் வேளாளர்க்கு அருமைத் திருமகளாகச் சங்கிலியார் எனும் பெயருடன் வளர்ந்து வந்தார். உமாதேவியார் திருவடிகளில் நிறைந்த பேரன்புடைய சங்கிலியார், பெதும்பைப் பருவமெய்தினார். பெற்றோர் தம்முடைய மகளின் வடிவு, பண்பு முதலிய குணங்களுக்கு இசைந்த வகையில் ஒருவரைக் கணவராகத் தேர்ந்து மணஞ்செய்து கொடுக்க முடிவு-செய்தனர். அதுகேட்டு அயலே நின்ற சங்கிலியார், 'இவர்கள் பேசும் இவ்வார்த்தை என் திறத்துப் பொருந்தாது. ஈசனருள் பெற்றார் ஒருவர்க்கே நான் மனைவியாதற்குரியேன். என் கருத்துக்கு மாறாக யாது விளையுமோ' என மனங்கலங்கி மூர்ச்சித்து நிலமிசை வீழ்ந்தார். அதுகண்டு பதைபதைத்த தாயும் தந்தையும் தம் மகளாகிய சங்கிலியைக் கைகளால் தாங்கிக் கொண்டனர். முகத்தில் பனி நீர் தெளித்து மூர்ச்சை தெளிவித்து 'உனக்கு நிகழ்ந்த துன்பம் யாது' என வினவினார். உணர்வு தெளியப்பெற்ற சங்கிலியார், என் தாயும் தந்தையுமாகிய நீங்கள் இப்பொழுது என் திருமணத்தைக் குறித்துப் பேசிய இவ்வுரை எனக்கு ஏற்புடையதன்று'. சிவபெருமான் அருள்செய்த ஒருவரை நான் மணத்தற்கு உரியேன். இனிமேல் திருவொற்றியூரை அடைந்து இறைவன் திருவருளிற் செல்வேன்' என மறுமொழிபகர்ந்தார்.

அவரது மனக்கருத்தறிந்த தந்தையும் தாயும் சோர்வுற்று அச்சமும் வியப்பும் உடையவர்களாகித் தம்மகள் சொன்ன அவ்வார்த்தையினை உலகத்தார் அறியாமல் மறைந்தொழுகினார்கள்.

இந்நிலையில் அவர்களோடு குலத்தால் ஒப்புடைய ஒருவன், சங்கிலியாரது தகுதியை உணராதவனாய் அவரை மணந்து கொள்ள விரும்பி அவருடைய தந்தையார் பால் மகட்பேசி வருவதற்குச் சிலரை அனுப்பினான். அவர்கள் ஞாயிறு கிழாரை அடைந்து சங்கிலியாரை மணம் பேசிய பொழுது அவருடைய தந்தையார், தம்முடைய மகளது மனக் கருத்தினை வெளியிடுவது தகுதியன்றென நினைத்து, தீங்கு நேராதபடி வேறொரு வகையால் சமாதானங்கூறி அனுப்பிவிட்டார். இவ்வாறு பெண் கேட்க வந்தவர்கள் திரும்பிச் செல்வதற்கு முன்னமே அவர்களை அனுப்பியவன் அங்கு வந்து சால்புமிக்க சங்கிலியாரை இகழ்ந்துரைப்பான் ஆயினன். அவனது அடாச் செய்கை கண்டு வெறுப்புற்ற பெரியோர்கள், 'இவன் இறந்தவனை ஒத்தான்' என எண்ணி, அவனை அவ்விடத்தைவிட்டு அகற்றினர். அங்ஙனம் சென்ற அவன் விரைவில் இறந்தொழிந்தான். உய்ய வேண்டும் என்ற நினைவுடையவர்கள் சங்கிலியார் திறத்தே இவ்வாறு பேசத்தகாத வார்த்தையைப் பேசமாட்டார்கள் என்னும் மெய்ம்மையை உலகத்தார் அறியும்படி செய்த விதிபோல் இச்செயல் நிகழ்ந்தது.

இதனைக் கேள்வியுற்ற ஞாயிறு கிழார், தம் சுற்றத்தாரிடம் தம் மகள் சங்கிலியாரது திருவருள் நினைவினை உள்ளபடி எடுத்துரைத்து மிகவும் அச்சமுடையவராய் 'இனி சங்கிலியார் எண்ணிய வண்ணம் அவரைத் திருவொற்றியூரிற் சிவதொண்டு செய்து இருக்கும்படி செய்தல் வேண்டும்' எனத் துணிந்து சுற்றத்தாருடன் சங்கிலியாரை அழைத்துச் சென்று திருவொற்றியூர் இறைவரைப் பணிந்து அவ்வூர் மக்கள் இசைவுபெற்றுத் திருக்கோயிலின் அருகே கன்னிமாடம் ஒன்று அமைத்தார். அதிலே தம் மகள் சங்கிலியாரை அமர்த்தி 'உமக்கு வேண்டிய பணிகளை நாங்கள் செய்ய நீர் சிவபெருமானுக்குரிய திருத்தொண்டுகளைச் செய்து இக்கன்னி மாடத்திலே உறைவீராக' என இறைஞ்சி அவர்க்கு வேண்டிய வசதிகளைச் செய்து தம் ஊரை அடைந்தார். கன்னிமாடத்தில் வாழும் சங்கிலியார் நாள்தோறும்

மூன்று காலங்களிலும் ஒற்றியூரிறைவரைப் பணிந்து கோயிலின் திருமாலை தொடுக்கும் மண்டபத்திலே திரையிட்டிருக்கும் இடத்தில் அமர்ந்து **அன்பு நாராக அஞ்செழுத்தும் நெஞ்சு தொடுக்க நறுமலர் மாலை தொடுத்து** எழுத்தறியும் பெருமானுக்கு எழில்பெறச் சாத்தும்படி திருத்தொண்டு புரிந்து வருவாராயினர்.

இங்ஙனம் நிகழ்ந்துவரும் நாட்களிலே ஒற்றியூர்ப் பெருமானை வழிபட்டு மகிழும் சுந்தரமூர்த்தி சுவாமிகள், ஒருநாள் மலர்மாலை தொடுக்கும் திருமண்டபத்தை அணுகினார். அப்பொழுது இறைவனுக்குச் சாத்தும்படி தாம் கட்டிய மலர்மாலைகளைக் கொடுத்துவிட்டு மின்னற் கொடி போன்று திரையினுள்ளே மறையும் சங்கிலியாரை இறைவனருள் கூட்டிய நல்விதியால் கண்ணுற்றார். சங்கிலியாரைக் கண்டு காதல் கொண்ட சுந்தரர் அவ்விடத்தை நீங்கிப் புறத்தே ஒருபாற் சென்று 'என்னை உள்ளம் திரியுமாறுசெய்த இவள் யார்' என வினவினார். அதனைக் கேட்டு அருகே நின்றவர்கள் 'அவர்தாம் நங்கை சங்கிலியார்; பெருகுந்தவத்தால் சிவபெருமானுக்குரிய திருப்பணிபுரியும் கன்னியார் எனப் பகர்ந்தனர். அம்மொழி கேட்ட சுந்தரர்' 'மகளிர் இருவர்' காரணமாக இப்பிறவியை இறைவர் எனக்கு எய்வித்தருளினார். அவ்விருவருள் ஒருத்தி நங்கை பரவை, மற்றையவள் சங்கிலியாகிய இந்நங்கை' என மனம்மருண்டார். 'இவளைச் சிவபெருமானிடம் வேண்டிப் பெறுவேன்' எனத் துணிந்து ஒற்றியூர்ப் பெருமான் திருமுன் சென்றார். 'மங்கை பங்கராயிருந்தும் கங்கையைச் சடையிற் கரந்தருளுங் காதலுடைய பெருமானே, இத்திருக்கோயிலில் உமக்குத் திருமாலை தொடுத்து என் உள்ளத்தை நெகிழ்வித்த சங்கிலியைத் தந்தருளி எனது துயரத்தை தீர்த்தருள்வீராக' எனக் குறையிரந்து வேண்டித் திருக்கோயிலின் புறத்தே போய் ஒருபக்கத்தே கவலையோடு அமர்ந்திருந்தார். அந்நிலையில் ஞாயிறு மறைய இரவுப்பொழுது வந்தெய்தியது. அப்பொழுது ஒற்றியூரிறைவர் வன்றொண்டரை அடைந்து 'இவ்வுலகத்தவர் யாவராலும் அடைதற்கரிய தவச் செல்வியாகிய சங்கிலியை உனக்கு மணஞ்செய்து தருவோம். நீ கொண்ட கவலையை ஒழிக' என அருள் செய்தார். 'ஒன்றும் அறியாத நாயேனை

அன்று வலியவந்து வெண்ணெய் நல்லூரில் ஆட்கொண்டருளினீர், இன்றும் எனது உயிர் காக்க இவளை மணஞ்செய்து தரத் துணை நின்றீர்' என நம்பியாரூரர் ஒற்றியூரிறைவரைப் போற்றி வணங்கினார்.

இவ்வாறு நம்பியாரூரருக்கு அருள் புரிந்த இறைவர், அன்று நள்ளிரவு சங்கிலியார் கனவில் தோன்றி "சாரும் தவத்துச் சங்கிலியே, நான் சொல்வதைக் கேட்பாயாக, என்பால் மிகுந்த அன்புடையவனும், திருவெண்ணெய் நல்லூரில் என்னால் ஆட்கொள்ளப்பட்டவனும், என் அனிபிற்கினிய தோழனுமாகிய சுந்தரர், தனக்கு மனைவியாக உன்னைத் தருமாறு என்னை வேண்டி நின்றான். நீ மகிழ்ச்சியுடன் அவனை மணந்து கொள்வாயாக" எனப் பணித்தருளினார். அவ்வருள் மொழியைச் செவிமடுத்த சங்கிலியார், இறைவன் திருவடிகளில் வீழ்ந்திறைஞ்சி 'எம்பெருமானே, உம்பால் அருளிச் செய்யப் பெற்றார்க்கு நான் உரியேன். தங்களது ஆணையைத் தலைமேற் கொண்டேன்'. என்னை நம்பியாரூரருக்கு மணஞ்செய்து கொடுக்கும் நிலையில் மலைமகளாரைப் பிரிவின்றி ஒரு பாகத்திற் கொண்டருளிய தங்கள் பால் அடியேன் தெரிவித்துக்கொள்ளவேண்டியதொன்று உண்டு. தம்பிரான் தோழராகிய அவர் திருவாரூரில் மிகுந்த மகிழ்ச்சியுடன் நிலைபெறத் தங்கியிருக்கும் விருப்பமுடையவரென்பதையும் தாங்கள் அறிந்தருளல் வேண்டும்' என வேண்டிக்கொண்டார். அதுகேட்ட இறைவர், சங்கிலியாரை நோக்கி, 'பெண்ணே, அவ்வன்றொண்டன் 'உன்னைப் பிரியேன்' என உனக்கொரு சபதஞ் செய்து தருவான்" எனக் கூறியருளினார்.

பின்பு இறைவர் சுந்தரரை அடைந்து 'நாம் சங்கிலிபாற் சென்று உனது விருப்பத்தைத் தெரிவித்தோம். அதற்கு உன்னாற் செய்யத்தக்கதொரு காரியமுளது' என்றார். அதுகேட்டு மகிழ்ந்த சுந்தரர் 'நான் செய்ய வேண்டுவது யாது' என வினவ "நீ இன்றிரவே அவள்பாற் சென்று 'நின்னைப்பிரியேன்' எனச் சபதஞ்செய்து கொடுத்தல் வேண்டும். இனி இக்காரியத்தில் நாம் செய்யத்தக்கது உண்டாயின் அதனையும் கூறுக' எனப் பணித்தருளினார். சங்கிலியார் பால் தம் மனதைப் பறிகொடுத்த நம்பியாரூரர், 'இறைவன் எழுந்தருளிய திருத்தலங்கள் பலவற்றையும் அடைந்து வழிபடும் விருப்புடைய

அடியேனுக்கு இவ்வாறு சபதஞ்செய்து கொடுத்தல் பெருந்தடையாகுமே' என்னும் நினைவுடையராய் இறைவரைப் பணிந்து "எம் பெருமானே அடியேன் சங்கிலிக்கு 'உன்னைப்பிரியேன்' எனச் சபதஞ் செய்து கொடுத்தற்காக அவளுடன் திருக்கோயிலில் உம் திருமுன்னர் வரும்பொழுது தேவரீர் அவ்விடத்தைவிட்டு ஆலயத்திலுள்ள மகிழ-மரத்தடியின் கீழ் எழுந்தருளி இருத்தல் வேண்டும்' என வேண்டிக் கொண்டார். இறைவரும் அவரது வேண்டுகோளுக்கிசைந்து, முன்போல் சங்கிலியார் முன் கனவில் தோன்றி 'நங்கையே, சுந்தரன் உனக்குச் சபதஞ் செய்து தருதற்கு இசைந்துள்ளான். அவன் திருக்கோயிலிலே நம் திருமுன்பு சபதஞ் செய்தற்கு வந்தால் நீ அதற்கு உடன்படாமல் மகிழமரத்தடியிலே சபதஞ் செய்து தரும்படி கேட்பாயாக" எனக்கூறி மறைந்தருளினார்.

அந்நிலையில் சங்கிலியார் விழித்தெழுந்து வியப்புற்றுத் தம்-முடைய பாங்கியர்களை எழுப்பித் தமக்குச் சிவபெருமான் கனவிலே தோன்றி அருள்செய்த எல்லாவற்றையும் அவர்களுக்கு எடுத்துரைத்தார். அதுகேட்ட பாங்கியர் அச்சமும், அதிசயமும், பெருமகிழ்ச்சியும் உடையவர்களாய்ச் சங்கிலியாரை வணங்கினார்கள். இறைவனுக்கு திருப்பள்ளியெழுச்சியில் திருமாலை தொடுத்தற்குரிய வைகறைப் பொழுதும் வந்தெய்தியது. சங்கிலியார் சேடியர்களுடன் ஒற்றியூர்த் திருக்கோயிலுக்குச் சென்றார். சங்கிலியார் செல்வதற்கு முன்னரே அவருக்குச் சபதஞ் செய்து கொடுத்தற்பொருட்டு அவரது வருகையை எதிர்பார்த்திருந்த சுந்தரர், சேடியருடன் வந்த சங்கிலியாரருகே சென்று தமக்கு இறைவன் அருளிச் செய்தவற்றை எடுத்துரைத்தார்.

சங்கிலியார் நாணத்தால் மறுமொழி கூறமாட்டாது ஒருபுறம் ஒதுங்கித் திருக்கோயிலினுள்ளே சென்றார். சுந்தரர் அவரைத் தொடர்ந்து 'இங்கு நான் உம்மைப்பிரியேன் எனச் சபதம் செய்தற்பொருட்டு இறைவன் திருமுன்னர் வருவீராக' என அழைத்தார். கனவில் நடந்தவற்றை அறிந்த பாங்கியர்கள் சுந்தரரை நோக்கி, 'தேவரீர் இதற்காக இறைவன் திருமுன்பு சென்று சபதஞ் செய்வது தகாது' என்றார்கள். அந்நிலையில் நம்பியாரூரர் இறைவனது செய்கையை

அறியாது 'மங்கையீர், நான் வேறு எங்கே சபதஞ் செய்து தரவேண்டும்' என வினவ இங்குள்ள மகிழ மரத்தடியில் சபதஞ்செய்தாற் போதும்' என மறுமொழி சொன்னார்கள். அதுகேட்ட வன்றொண்டர் மனமருட்சி-யுடையவராய் 'இவர்கள் சொல்லியதை மறுத்தல் தகாது எனஎண்ணி 'அவ்வாறே செய்யலாம் வாருங்கள்' என்று அவர்களை அழைத்துக்-கொண்டு மகிழமரத்தை மூன்றுமுறை வலம்வந்து சங்கிலியாரை நோக்கி 'இங்கு உன்னைப் பிரியேன்' எனச் சபதம் செய்து கொடுத்தார். இவ்வாறு நாவலூரர் தன்னை மணத்தற் பொருட்டுத் தெய்வத்தின் முன்னிலையில் சூளுறுதல் கண்ட சங்கிலியார், அச்சூளுறவின் பழுவினால் அவர்க்கு வரும் துன்பத்தினை எண்ணி 'தீவினையாட்டியேன் இறைவன் பணியால் இச்செயலைக் கண்டிருந்தேனே' என மனங்கலங்கிச் சென்றார். சுந்தரர் சூளுறவு முற்றியபின் திருக்கோயிலுட் சென்று இறைவனைப் பணிந்து 'அருள் நாளும் தரஇருந்தீர். நீர் செய்த இச்செயல் மிகவும் அழகாயிருக்கிறது' எனப் போற்றி மகிழ்ந்து கோயிற்புறத்தை அடைந்தார். இந்நிலையில் ஒற்றியூரிறைவர், அடியார்களுக்குக் கனவிலே தோன்றி. 'நம்முடைய அடியவனாகிய நம்பியாரூரனுக்கும் நங்கை சங்கிலிக்கும் உலகவர் அறியத் திருமணஞ் செய்து கொடுப்பீராக' என அருள்செய்து மறைந் தருளினார். இறைவ-னது ஆணையைத் தலைமேற்கொண்ட சிவனடியார்கள் இருவருக்கும் பலவகைச் சிறப்புக்களுடன் மணஞ் செய்து கொடுத்தனர். நம்பியாரூரர் தம் வாழ்க்கைத் துணையாகிய சங்கிலியாருடன் கூடி 'ஊழியாம் ஒரு கணம்தான், அவ்வூழி ஒரு கணமாம்' எனக் கருதும் வண்ணம் ஐம்புல இன்பமும் ஆரத்துய்க்கும் அந்நிலையிலே இறைவனது திருவருளா-கிய பேரின்பக் கடலில் திளைத்து மகிழ்வாராயினர்.

நம்பியாரூரர் சங்கிலியாருடன் திருவொற்றியூரில் மகிழ்ந்துறையும் நாளில் இளவேனிற் பருவம் எய்தியது. இக்காலத்தில் திருவாரூரில் வீதி விடங்கப் பெருமானுக்கு நிகழும் வசந்த விழாவையும், அத்திருவிழாவில் திருவோலக்கத்திலே நடைபெறும் பரவையாரின் ஆடல் பாடல்களையும் முன் கண்டு மகிழ்ந்த சுந்தரர், ஆரூரில் நிகழ இருக்கும் அவ்வழகிய தெய்வக் காட்சியைக் காணும் பெருவிருப்பத்தால்

ஏசற்ற உள்ளத்தரானார். என்உயிருக்குயிரான எழிலாரூர்ப்பெருமானை-மூர்க்கனேன் இத்தனை நாள் பிரிந்து இருந்தேனே என நைந்த சிந்தையினராய், [1] **'பத்திமையும் அடிமையையும்....'** எனும் திருப்பதிகம் பாடினார்.

மற்றொருநாள் திருவாரூர் நினைவு மூளப்பெற்ற வன்றொண்டர், சிவபெருமானை ஒற்றியூர்த் திருக்கோயிலிற் சென்றிறைஞ்சி ஆரூர் நோக்கிப் புறப்பட்டார். சங்கிலியாருக்குத் தான் செய்த சபதத்திற்கு மாறாக ஒற்றியூரெல்லையைக் கடந்தபோது அவரது இரண்டு கண்களும் ஒளியிழந்தன. செய்வதறியாது திகைப்புற்ற வன்றொண்டர் 'சங்கிலியார்முன்செய்த சபதம் தவறியமையால் இத்தீவினைவிளைந்தது' எனவுணர்ந்து, தமது செயலற்ற நிலைமைக்கும் சொன்ன சொல் தவறியமையால் தமக்குண்டாகிய பழிக்கும் நாணி 'இக்கொடுந்துயரம் நீங்க எம்பெருமானைப் பாடிப்போற்றுவேன்' என நினைந்து [2] 'அழுக்கு **மெய்கொடுன் திருவடியடைந்தேன்....'** எனும் திருப்பதிகம் பாடித் தனது பிழை பொறுத்தருளும்படி ஒற்றியூர்ப்பெருமானைப் பரவிப் போற்றினர்.

இங்ஙனம் சுந்தரர் கண்ணிழந்து நெஞ்சங்கலங்கி வருந்திய நிலையிலும், ஒற்றியூர் இறைவர் அவர்க்கு விரைந்து அருள் புரிந்திலர்.

---

[1] பத்திமையும் அடிமையையும் கைவிடுவான் பாவியேன்
பொத்தினநோய் அதுவிதனைப் பொருளறிந்தேன் போய்த் தொழுவேன்
முத்தினை மாமணிதன்னை வயிரத்தை மூர்க்கனேன்
எத்தனை நாள் பிரிந்திருக்கேன் என் ஆரூர் இறைவனையே.

[2] அழுக்கு மெய்கொடுன் திருவடியடைந்தேன்
அதுவும் நான் படற்பாலதொன்றானால்
பிழுக்கை வாரியும் பால் கொள்வர் அடிகேள்
பிழைப்பனாகிலும் திருவடிபிழையேன்
வழுக்கி வீழினும் திருப்பெயரல்லால்
மற்றுநான் அறியேன் மறுமாற்றம்
ஒழுக்க என்கணுக்கு ஒருமருந்துரையாய்
ஒற்றியூரெனும் ஊருறைவானே

திருவாரூரைத் தொழவிரும்பிய சுந்தரர், உடன் வரும் தொண்டர்கள் வழிகாட்டிக் கொண்டு முன்னே செல்ல வடதிருமுல்லை வாயிலை அடைந்தார். திருமுல்லைவாயிற் பெருமானை இறைஞ்சிக்கண்பார்வை இன்றித் தாம் படும் துயரத்தைக் களைந்தருள வேண்டி *1. **'திருவும் மெய்ப்பொருளும்'** எனவரும் திருப்பதிகத்தினைப்பாடிப் போற்றினார். 'சங்கிலியின் பொருட்டு என் கண்களைக் கவர்ந்து கொண்ட பெருமானே, கண்ணிழந்து வருந்தும் அடியேனது பெருந்துயரத்தைக் களைந்தருள்-வாயாக' என வேண்டினார்.

பின்பு திருவெண்பாக்கத்தை அடைந்து சிவபெருமானுடைய அருட் பண்புகளைச் சிந்தித்து வணங்கி, அடியேன் ஏதேனும் பிழை செய்திருந்தால் அப்பிழையை உன் திருவருளால் பொறுத்தருள் புரிதலே முறை. இறைவனாகிய நீர் அடியேன் செய்த குற்றத்தைப் பொறுத்தருளாமையால் உமக்கு வரும் பழியையும், எண்ணிப் பாராது என் கண்களைப் படலத்தால் மறையச்செய்தாய். நீர் இக்கோயிலினுள்ளே உள்ளாயோ' என்று மனவருத்தத்துடன் வினவி நின்றார். அப்பொழுது தோழராகிய வெண்பாக்கத்திறைவர் கோயிலினுள் இருந்துகொண்டே இணக்கமில்லாத மொழியால் *2. **'உளோம் போகீர்'** என மறுமொழி கூறி ஊன்று கோலொன்றைக் கொடுத்தருளினார்.

இறைவனருள் என்னளவில் இவ்வளவுதான் போலும் என எண்ணி வருத்தமுற்ற சுந்தரர், வெண்பாக்கத்தைவிட்டு நீங்கி பழையனூரை அடைந்தார். அங்கு காரைக்காலம்மையார் தலையாலே நடந்து அடைந்த ஆலங்காட்டிறைவரின் அடி வணங்கி **'முத்தா முத்திதரவல்ல'** எனும் முதற்குறிப்புடைய திருப்பதிகம் பாடினார். பின்பு காஞ்சிப்பதியை

*1. திருவும் மெய்ப்பொருளும் செல்வமும் எனக்குன் சீருடைக்கழல்கள் என்றெண்ணி
ஒருவரை மதியாது உறாமைகள் செய்தும் ஊடியும் உறைப்பனாய்த்திரிவேன்
முருகமர் சோலை சூழ்திருமுல்லை வாயிலாய் வாயினால் உன்னைப்
பரவிடும் அடியேன் படுதுயர்களையாய் பாசுபதா பரஞ்சுடரே.

*2. பிழையுளனபொறுத்திடுவர் என்றடியேன் பிழைத்தக்கால்
பழியதனைப் பாராதே படலம் என்கண் மறைப்பித்தாய்
குழைவிரவு வடிகாதா கோயிலுளாயே என்ன
உழையுடையான் உள்ளிருந்து உளோம்போகீர் என்றானே.

அடைந்தார். அங்கு காமக்கோட்டத்தை வணங்கியபின் திருவேகம்பத்தை அடைந்தார். கச்சியேகம்பப்பெருமான் திருமுன் எய்தி நின்று 'தேவர்கள் நெடுங்காலம் வாழவேண்டி அமுதுண்டு மகிழஅவர்பொருட்டு ஆலகால நஞ்சினைஉட்கொண்டருளிய அருளாளனே, கடையவனாகிய அடியேன் பின் விளைவதனை எண்ணாது செய்த பெரும் பிழையைப் பொறுத்து மறைந்த கண்களைக் காட்டி அருள்புரிவாயாக' என நிலமிசை வீழ்ந்திறைஞ்சினார். மங்கை தழுவக் குழைந்த பிரானாகிய கச்சியேகம்பர் பொங்கிய பேரன்பால் போற்றிய வன்றொண்டர்க்கு இடக்கண்ணைக் கொடுத்தருளி மலைமகளார் வழிபட்ட தமது திருக்கோலத்தைக் காட்டியருளினார். இடக்கண்ணைப் பெற்றமையால் இறைவரது எழில் மேனியைக் கண்டு மகிழ்ந்த சுந்தரர், * **'ஆலந்தானுகந்தமுது...'** எனும் திருப்பதிகம் பாடி உடன் வந்த அடியார்களுடன் இறைவனைக் கும்பிட்டு சிலநாள் தங்கியிருந்தார். திருவாரூரை அடைந்து என்னுயிர்க்குயிராம் பெருமானை என்று காண்பேன் என்னும் ஏக்கம் உண்டாக, **'அந்தியும் நண்பகலும்....'** எனும் திருப்பதிகம்பாடிக் காஞ்சியில் இருந்து புறப்பட்டுத் திருநெல்வாயில் அரத்துறை இறைவரை வணங்கி **'கல்வாயகில்'** எனும் திருப்பதிகம்பாடி ஏனைய தலங்களையும் வணங்கித் திருவாவடுதுறையை அடைந்தார். அந்நிலையில் அவர் மேனியிற் புகர்நோய் தோன்றி வருத்தியது.

திருவாவடுதுறைத் திருக்கோயிலை வலம் வந்து வணங்கிய சுந்தரர் மாசிலாமணீசர் திருவடிகளை அன்புடன் வழிபட்டு திருத்துருத்தியை அடைந்து இறைவரைப் பணிந்து அடியேனது உடம்பிற்பொருந்திய இந்நோயை ஒழித்தருளவேண்டும் எனவேண்டிக் கொண்டார். அடியார்கள் அன்பினால் சொல்லிய குறைகளை அறிந்து முடித்தருளவல்ல திருத்துருத்தி இறைவர் வன்றொண்டரை நோக்கி, 'நீ திருக்கோயிலின் வடபாலுள்ள திருக்குளத்தில் குளிப்பாயாக' எனப்பணித்தருளினார். அவ்வண்ணமே சுந்தரர் அத்தீர்த்தத்துள் மூழ்கி நோய்நீங்கி

---

* ஆலந்தானுகந் தமுதுசெய்தானை ஆதியை அமரர்தொழுதேத்தும்
சீலந்தான் பெரிதும் முடையானைச் சிந்திப்பாரவர் சிந்தையுளானை
ஏலவார் குழலாள் உமை நங்கை என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
காலகாலனைக் கம்பன் எம்மானைக் காணக்கண் அடியேன் பெற்றவாறே.

ஒளிதிகழும் திருமேனியுடன், கண்டவர்கள் அதிசயிப்பக் கரையேறித் தூய ஆடை உடுத்துத் திருக்கோயிலை வலம் வந்து, **"மின்னுமா-மேகங்கள்....."** எனும் திருப்பதிகம் பாடினார்.

புகர்நோய் நீங்கி நலம்பெற்ற சுந்தரர், அடியார்களுடன் பலதலங்-களையும் வழிபட்டுத் திருவாரூரை அணுகினார். அங்கு பரவையுண்-மண்டளி என்னுந் திருக்கோயிலை அடைந்து தூவாயர் ஆகிய இறைவரைத் தொழுது **'தூவாயா'** எனும் திருப்பதிகம் பாடித் தமக்-குக் கண்ணைத் தந்தருளும்படி வேண்டிப் புறம்போய் ஓரிடத்திலிருந்தார். பின் அர்த்தயாமத்தில் திருமூலட்டானத்திறைவரை வழிபடச் சென்றார். எதிர்வந்த அன்பர்களை நோக்கி ஆரூர்ப் பெருமானோடு தமக்குள் அயன்மை விளங்க வருந்திக் கூறும் நிலையில், 'குருகுபாயக்கொழும்...' எனும் திருப்பதிகம்பாடி புற்றிடங்கொண்ட பெருமான் முன்னர் வீழ்ந்தெ-ழுந்தார். இறைவனது திருமேனியைக் காணத் தமக்கு ஒருகண் போதாமை கண்டு மனம் வருந்தி 'அடியேனைத் துன்பக் கடலினின்றும் கரையேற்றி மற்றைக் கண்ணாகிய வலக்கண்ணையுந் தந்தருள்வீராக' என வேண்டி * **"மீளா அடிமை.."** எனும் திருப்பதிகம் பாடினார். ஆரூர்ப்பெருமான் உளமிரங்கி நம்பியாரூரர்க்கு வலக்கண்ணைக் கொடுத்தார். இருகண்களையும் ஒருங்கே பெற்ற சுந்தரர் பெருமான் திருமேனியைக் கண்களாரக் கண்டு ஆடிப்பாடித் துதித்து பேரின்ப வெள்ளத்தில் திளைத்து மகிழ்ந்தார்.

சுந்தரர் பூங்கோயிலமர்ந்த பெருமானை வணங்கச் சென்றபொழுது அவருடைய பரிசனங்களிற் சிலர் பரவையார் மாளிகையை அணுகி-னர். தம்மைப் பிரிந்து சென்ற சுந்தரர் சங்கிலியாரை மணந்துகொண்ட நிகழ்ச்சியைக் கேள்வியுற்ற பரவையார் கோபங் கொண்டிருந்தமையால் சென்ற பரிசனங்கள் மாளிகைக்குள் நுழையாது மீண்டும் தேவாசிரிய மண்டபத்தை அடைந்தனர். சுந்தரரை இறைஞ்சி நின்று 'பெரியீர்,

---

* மீளா அடிமை உமக்கே ஆளாய்ப் பிறரைவேண்டாதே
மூளாத் தீப்போல் உள்ளே கனன்று முகத்தால் மிகவாடி
ஆளாய் இருக்கும் அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவாரூரீர் வாழ்ந்து போதீரே.

தாங்கள் சங்கிலியாரை மணம்செய்த செய்தி முழுவதையும் பரவையார் முன்னமே கேள்வியுற்றுச் சினம் கொண்டிருந்தமையால் நாங்கள் அவர் மாளிகைப் புறத்திலும் செல்லவொண்ணாதபடி தடுக்கப்பட்டுத் திரும்பிவிட்டோம்' எனக் கூறினார்கள். கலக்கமடைந்த சுந்தரர் தம் மேற் பரவையார் கொண்ட வெகுளியைத் தணித்துவரும்படி உலகியல் நடைமுறைகளை நன்கு உணர்ந்த பெரியோர் சிலரை அனுப்பினார். அவர்கள் பரவையாரிடம் சென்று அம்மங்கையார் மனங்கொள்ளத்தக்க வகையில் வேண்டும் நியாயங்களை எடுத்துரைத்து, 'நீர் நம்பியாரூரருடன் முன்புபோல் கூடியிருத்தல் வேண்டும் என வேண்டினர். சுந்தரர்பாற் கோபங் கொண்டிருந்த பரவையார், அமைதிகூற வந்த அறிஞர்களை நோக்கி, 'குற்றம் பொருந்திய நம்பியாரூரருக்குச் சார்பாக நீங்கள் இவ்வாறு கூறுவீராயின் என்னுயிரைத் துறப்பேன்' என வருந்திக் கூறினார். அவரது மனநிலை அறிந்த பெரியோர், சுந்தரரிடம் சென்று நிகழ்ந்ததனைத் தெரிவித்தனர்.

இங்ஙனமாக அன்புடைய பரவையாரை அணுகப்பெறாது துன்பமுற்று வருந்தும் சுந்தரர், எல்லோரும் அயர்ந்து துயிலும் நள்ளிரவிலே தம் தோழராகிய வீதிவிடங்கப்பெருமானை நினைந்து போற்றி 'என்னை அடிமை கொண்டருளிய பெருமானே, முன்னை வினையால் இத்துன்பத்திற்குக் காரணமாகிய பரவையின்பால் நீரே இந்த இரவுப் பொழுதிற்சென்று, அவள் என்மீது கொண்ட ஊடலைத் தணிவித்தருள்வீராயின் நான் உயிர்தாங்கி இருத்தல் கூடும்; இதுவன்றி என்னாற் செய்யத்தக்கது ஒன்றுமில்லை' என வேண்டிப் போற்றினார். அந்நிலையில் அடியார்களது துன்பத்தினைக் காணப்பொறாத அருளாளராகிய சிவபெருமான், நெடியான் அறியா அடிமலர்கள் நிலத்தில் தோய எழுந்தருளி, தம் தோழராகிய சுந்தரரை அடைந்து 'உனது துயரம் யாது' என வினவினார். அருளே திருமேனியாகக் கொண்டு எளிவந்தருளிய இறைவரைக் காணப்பெற்ற சுந்தரர், விரைந்து எழுந்து சென்று அவர்தம் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினார். எம்பிரானாகிய உமது திருவருளால் அடியேன் சங்கிலியை மணந்தசெய்தி பரவை கேள்வியுற்றுத் தன்பால் நான் அடைந்தால் தன் உயிரையே விட்டுவிடுவதென்னும் துணிபு கொண்டுள்ளாள். சிறியேன் உமக்கு அடியவனும்

தேவரீர் அடியேனுக்கு நல்ல தோழனும், ஆண்டவனும் ஆக இருப்பது உண்மையானால், அறிவிழந்து வருந்தும் சிறியேனது அயர்வு நீங்க இவ்விரவே பரவை வீட்டுக்குத் தூது சென்று அவளது ஊடலைத் தீர்த்தருளல் வேண்டும்' எனக் குறையிரந்து வேண்டினார்.

வன்றொண்டரது துன்பத்தை நீக்கத் திருவுளம் கொண்டு தம் தோழராகிய அவரை நோக்கி, 'நீ வருந்தற்க; நாம் உன்னுடைய தூதனாகி இப்பொழுதே பரவை வீட்டுக்குச் செல்கின்றோம்' எனத் திருவாய் மலர்ந்தருளி தேவர், முனிவர் புடைசூழ பரவையார் மாளிகையை அடைந்தார். இறைவர், தனக்கு வழிபாடு செய்யும் மறைமுனிவர் வடிவுடன் தனித்து உள்ளே சென்று 'பரவையே கதவைத் திறந்திடுக' எனக் கதவினைத் தட்டி அழைத்தார். பூங்கோயிலமர்ந்த பெருமானுக்குப் பூசனைபுரியும் மறைமுனிவரே இவ்வாறு அழைக்கின்றார் என எண்ணிய பரவையார், 'இப்பெரியவர் நள்ளிரவிலே இங்கு வந்தது எக்காரணம் பற்றியோ' என அஞ்சிக் கதவைத் திறந்து அங்கு வந்த மறையவரை நோக்கி, 'செந்தண்மை பூண்ட அந்தணரே, நீவிர் எம்மையாளும் சிவபெருமானைப் போன்று இங்கு எழுந்தருளியதன் காரணம் என்ன என்று வினவினார். அதுகேட்ட மறையவர் 'நங்கையே நான் சொல்வதை நீ மறுக்காமல் செய்வாயானால் சொல்லுவேன்' என்றார். 'நீவிர் சொல்லக் கருதியதனைச் சொல்வீராக, என்னால் செய்யத்தக்கதாயிற் செய்வேன்' என்றார் பரவையார். 'நம்பியாரூரர் இங்கு வருவதற்கு நீ இசைதல் வேண்டும்' என மறையவர் பணித்தருளினார். அதுகேட்ட பரவையார் பங்குனித் திருநாளுக்குப் பொன் முதலியன கொண்டு பண்டு போல் வருபவராக இங்கு என்னைப் பிரிந்து சென்று திருவொற்றியூரெய்தி அங்கே சங்கிலிபாற் தொடக்குண்டவர்க்கு இங்கு ஒரு சார்பும் உண்டாகுமோ? அவர் பொருட்டு நள்ளிரவிலே தாங்கள் இங்கு வந்து சொன்ன காரியம் மிகவும் நன்றாயிருக்கிறது' என மறுத்துரைத்தார். 'நங்கையே நீ நம்பியாரூரன் செய்த குற்றத்தினை உளத்திற் கொள்ளாது கோபம் நீங்கி அவனை அன்புடன் வரவேற்கும் பொருட்டன்றோ நான் உன்னை வேண்டிக்கொண்டது. இதனை மறுத்துரைப்பது முறையாகாது' என மறையவர் வற்புறுத்திக் கூறினார். அதனைக் கேட்ட பரவையார்

'அருமறை முனிவராகிய நீர் பொருத்தமில்லாத இக்காரியத்தின் பொருட்டு நள்ளிரவிலே இங்கு வருதல் உமது பெருமைக்கு ஏற்றதன்று. ஒற்றியூரில் நிலைத்தவுள்ளமுடைய அவர் இங்கு வருவதற்குச் சிறிதும் இசையமாட்டேன். நீர் விரைவில் இவ்விடத்தைவிட்டு அகல்வீராக' எனச் சினந்தோன்றக் கூறினார். அந்நிலையில் மறையவராகி வந்த இறைவர் தம் உள்ளத்துள்ளே நகைத்துக்கொண்டு தமது உண்மையுருவம் பரவையாருக்குப் புலப்படாவண்ணம் தம் தோழரது வருத்த நிலையைக்கண்டு மகிழும் வேட்கையினராய்ப் பரவையார் முதலில் மறுத்துரைத்ததையே முடிவாகக் கொண்டு சுந்தரரிடம் சென்றார்.

தூது சென்ற இறைவரை எதிர்பார்த்து நின்ற சுந்தரர், எதிர்கொண்டு அவர் தம்முடைய குறையினை இனிது நிறைவேற்றி வருகின்றாரெனப் பெரிதும் மகிழ்ந்தார்; 'அன்று அடியேனைத் தடுத்தாண்டு கொண்டதற்கு இசையவே இன்று பரவையின் வெகுளியைத் தணித்து வந்தீர்' என இறைஞ்சிப் போற்றினார். சிவபெருமான் வன்றொண்டரை நோக்கி 'நாம் உனது வேண்டுகோளின் படியே பரவை வீடு சென்று அவளுக்குச் சொல்லத்தக்க நியாயங்களை எடுத்துரைத்தோம். எனினும் அவள் இசையவில்லை' என்றார். திடுக்குற்ற சுந்தரர், தமக்கு எளிவந்தருளிய இறைவரை வணங்கி 'முழுமுதற் கடவுளாகிய உமது பணிமொழியினை உம் அடியவளாகிய பரவை மறுக்குந் துணிவுடையவளோ? நீவிர் எனது அடிமைத் திறத்தை விரும்பாவிட்டால் அன்று வலியவந்து என்னை ஆட்கொண்டது எதற்காக? அருளாளராகிய நீர், அடியேன் படும் துயரத்தைக் கண்டிரங்கி என்னை அவள்பாற் சேர்த்திலீராயின், என்னுயிர் விரைவில் நீங்குவது திண்ணம்' என்றுரைத்துத் தளர்ந்து வீழ்ந்தார். தம் தோழராகிய சுந்தரரது தளர்ச்சிகண்டு தரியாத சிவபெருமான், அவரை அருட் கண்ணால் நோக்கி 'நாம் மீண்டும் பரவைபாற் சென்று இப்பொழுதே நீ அவளை அடையும்படி செய்வோம். துயர் நீங்கி மகிழ்வாயாக' எனத் தேறுதல் மொழிபகர்ந்து சிவகணங்களுடன் பரவையாரது மாளிகையை அடைந்தார்.

இங்ஙனமாக பரவையார், தமது வெகுளியைத் தணிக்க வந்த மறைமுனிவர் நீங்கியபின் அங்ஙனம் வந்தவர் சிவபெருமானே ஆதல் வேண்டும் எனத் தெளிந்து பெரிதும் அஞ்சினார். 'அந்தோ எம்பெருமானது

அருள்வாக்கினை அறியாது மறுத்துரைத்தேனே' என மனங்கலங்கினார்; 'தம்முடைய தோழருக்காக அருச்சகர் வடிவுகொண்டு எளிவந்த பெருமானைத் தீவினையாட்டியேன் போற்றாது இகழ்ந்தேனே' என வருந்திப் புலம்பினார்; தம்முடைய பாங்கியரை எழுப்பி மறை முனிவர் வந்து சென்ற நிகழ்ச்சியினை எடுத்துக் கூறினார். இறைவர் வந்துசென்ற மனைவாயிலை நோக்கியவண்ணம் துயிலின்றியிருந்தார்.

அப்பொழுது சிவபெருமான், தன்னை யாவரும் உணர்ந்து கொள்ளுவதற்குரிய உண்மைத் திருக்கோலத்துடன் தேவர், முனிவர், சித்தர் முதலானோர் சூழ்ந்து போற்றப் பரவையார் மாளிகைக்கு எழுந்தருளினார். அத்தெய்வக்காட்சியைக் கண்ட பரவையார், விரைந்து எதிர்சென்று சிவபெருமான் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினார். சிவபெருமான், பரவையாரை நோக்கி 'நங்கையே தோழனாகிய சுந்தரன் நட்புரிமையால் நம்மை ஏவ மீளவும் உன்பால் வந்தோம். நீ முன்புபோல் மறுத்துரையாது உன்பிரிவால் வருத்தமுறும் சுந்தரன் உன்னை அடைவதற்கு இசைதல் வேண்டும்' எனப் பணித்தருளினார். அவ்வருள் மொழியைச் செவிமடுத்த பரவையார், 'இவ்வாறு முழுமுதற் கடவுளாகிய ஆரூர்ப்பெருமானை அலைக்கழித்தேனே' என மனங்கலங்கிக் கண்ணீர்மல்கி, 'அடியேன் செய்த தவப்பயனால் அருமறை முனிவராக முன்பு வந்தவரும் நீர் தாமோ? இங்ஙனம் நள்ளிருளிலே ஒளிவளர் செய்ய பாதம் தரையிற்பட்டு வருந்த அன்பர்க்காக இங்கும் அங்கும் உழல்வீராகி எளிவந்தருளினீராயின், சிறியேன் இதற்கு உடன்படாமல் வேறு என் செய்வேன்' எனத் தம் இசைவு தோன்றக் கூறி இறைஞ்சினார்.

பரவையாரது பணிமொழியினைக் கேட்டு மகிழ்ந்த இறைவர், 'நங்கையே, நீ உன் பெருந்தன்மைக்கேற்ப நன்றே மொழிந்தாய்' எனக்கூறி விரைந்து சென்று சுந்தரரை அடைந்தார். நம்பியாரூரர் சிவபெருமானை எதிர்கொண்டு போற்றி "எம்பெருமானே! என்னுயிரைக் காவாது இடர்செய்யும் பரவையிடத்திலிருந்து எத்தகைய மறுமொழியினைக் கொண்டு வந்தீர்' எனக் கேட்டார். இறைவரும் வன்றொண்டரை நோக்கி 'உன்மேல் பரவை கொண்ட கோபத்தைத் தணிவித்து வந்தோம்; இனி நீ அவளிடத்தில் செல்லலாம்' எனத் திருவாய்

மலர்ந்தருளினார். இறைவரது அருளுரையினைக் கேட்டு மகிழ்ந்த சுந்தரர், 'எந்தை பிரானே, போகம் வீடு என்னும் இருமையின்பத்தையும் அடியேனுக்கு வழங்கியருளினீர். இனி எளியேற்கு இடரொன்றுமில்லை' என்றுகூறி இறைவன் திருவடிகளில் வீழ்ந்திறைஞ்சினார். தொண்டர்களின் துயர் தீர்த்தருள்புரியும் வீதிவிடங்கப் பெருமான் எவ்வுயிரும் களிகூர விடைமீதெழுந்தருளித் திருவாரூர்ப் பூங்கோயிலிற் சென்று புகுந்தருளினார். புற்றிடங்கொண்ட பெருமானது திருவருள் பெற்ற நம்பியாரூரர், தம்முடைய பரிசனங்கள் சூழ்ந்து போற்றி உடன்வரப் பரவையார் மாளிகைக்குப் புறப்பட்டருளினார். அன்பிற் சிறந்த பரவையாரும் திருமாளிகையை அணிசெய்து நிறைகுடமும் நல்விளக்கும், நறும் புகையும் கொண்டு பாங்கியர்களுடன் மனைவாயிலிலே நின்று தம் அன்பிற்குரிய நம்பியாரூரரை வணங்கி வரவேற்றார். சுந்தரர் பரவையாடைய செங்கையினைப் பற்றிக்கொண்டு திருமாளிகையினுள்ளே சென்று சேர்ந்தார். உயிரொன்றிய காதலராகிய அவ்விருவரும் வீதிவிடங்கப்பெருமான் தம்பொருட்டுத் தூதராக எளிவந்தருளிய திருவருட்செயலை நினைந்துருகி மாறிலா மகிழ்ச்சியில் திளைத்திருந்தார்கள்.

சுந்தரர் பொருட்டுப் பரவையாரிடம் இறைவன் தூது சென்ற செய்தி கேட்ட திருவருட் செல்வராகிய ஏயர்கோன் கலிக்காமநாயனார் உளம் வெதும்பி வருந்தினார். சிவனடியாராகிய கலிக்காமர் தம்மிடம் சினங்கொண்டிருத்தலைக் கேள்வியுற்ற நம்பியாரூரர் தம்மீது கொண்ட செற்றத்தை நீக்கியருளும்படி சிவபெருமானைப் பலமுறை இறைஞ்சினார். அவ்விருவரையும் அன்பினால் ஒற்றுமைப்படுத்த எண்ணிய சிவபெருமான் கலிக்காமருக்குச் சூலைநோயை ஏவி அந்நோயைச் சுந்தரரே தீர்க்க முடியும் என்றும் கூறியருளினார். அதற்குக் கலிக்காமர், வன்றொண்டரால் தீர்க்கப்படுதலை விட அவன் இங்கு வருவதற்கு முன் என்னை வருத்தும் சூலை நோயினை வயிற்றோடு கிழித்துப் போக்குவேன் எனத் துணிந்து தமது உடைவாளால் வயிற்றைக் கிழித்து மாய்ந்தார். இதனை அறிந்த ஆரூரர் மனநடுக்கமுற்று 'நானும் அவர் முன் உயிர்துறப்பேன்' எனத்துணிந்து கலிக்காமரது குற்றுடைவாளைப் பற்றி தம்முயிரையும் போக்க முனைந்தபோது சிவனருளால் கலிக்காமர் உயிர்பெற்று ஆரூரர் கைப்பற்றிய வாளைப் பறித்துத் தடுத்தார்.

கலிக்காமர் உயிர் பெற்று எழுந்ததை அறிந்த வன்றொண்டர் அவரை அன்புடன் தழுவினார். இவ்வாறு இருவரும் நண்பராயினர். நம்பியாரூரர் கலிக்காமரோடு திருவாரூரை அடைந்து பூங்கோயிலமர்ந்த பெருமானைக் கும்பிட்டு மகிழ்ந்தனர். பின் ஆரூரர் திருநாகைக்காரோணத்துக்குச் சென்று அங்குள்ள இறைவனை இறைஞ்சி, 'பத்தூர்புக்கிரந்து....' எனும் திருப்பதிகம் பாடி பொன், பொருள், பட்டாடை, குதிரைகள் ஆகியவை பெற்று நாகப்பட்டினத்திலிருந்து புறப்பட்டு திருவாரூரை அடைந்தார்.

இங்ஙனமாக நம்பியாரூரது பெருமையினைக் கூத்தப்பெருமான் அறிவித்தருளக் கேட்டுணர்ந்த சேரமான்பெருமாள் அவரைக்காணத் திருவாரூரை அடைந்தார். சேரவேந்தனது வருகை உணர்ந்த வன்றொண்டர் அவரை எதிர்கொண்டழைத்தார். சேரமான் பெருமாள் அவரது திருவடிகளில் வீழ்ந்து இறைஞ்சினார். ஆரூரரும் அவரது திருவடிகளில் வீழ்ந்து வணங்கி அவரை இருகைகளாலும் எடுத்துத் தழுவிக் கொண்டார். சேரமான் பெருமாளும், நாவலூர் மன்னரும் உயிர் ஒன்றி உடலும் ஒன்றாமென அன்பினால் அளவளாவி மகிழும் தோழமைத் திறத்தைக் கண்ணுற்ற சிவனடியார்கள் நாவலூரரை 'சேரமான் தோழர்' என அழைத்தனர்.

நம்பியாரூரர், தம் அன்பிற்கினிய தோழரை அழைத்துக் கொண்டு பரவையாரது திருமாளிகைக்குச் சென்றார். பரவையார் திருவிளக்கு, நிறைகுடம் முதலிய மங்கலப் பொருட்களுடன் அவர்களை வரவேற்று சிவனடியார்களுக்கும், உடன்வந்த பரிசனங்களுக்கும் அறுசுவைப் போனகம் அமைத்து விருந்தளித்து உபசரித்தார். அவர்கள் இருவரும் உடனிருந்து திருவமுது செய்து வீதிவிடங்கப் பெருமானது திருவோலக்கச் சிறப்பினைக் கண்டு மகிழ்ந்திருந்தார்கள்.

இங்ஙனம் திருவாரூரில் தங்கியிருக்கும் நாளில் ஆரூரர் திருவாலவாய் ஆகிய தலங்களை வழிபடும் வேட்கையுடையவராய் தனது விருப்பத்தினைச் சேரமான் பெருமாளுக்குத் தெரிவித்தார். சேரமான் பெருமாளும் அவரைப் பிரியவொண்ணாது, 'மதிமலிபுரிசை'த் திருமு-

கம் அனுப்பியருளிய திருவாலவாயிறைவரைக் கண்டு வழிபட வேண்டு-மென்னும் பேரார்வமுடையவராய் நமபியாரூரருடன் செல்லத் துணிந்தார். ஒத்த உள்ளமுடையார் இருவரும் அடியார்களும் புடைசூழ மதுரையை அடைந்தார்கள். அப்பொழுது பாண்டி நாட்டை ஆட்சி செய்த பாண்டிய-னும், அவன் மகளை மணம் செய்து வேட்டகத்தில் தங்கியிருந்த சோழமன்னனும் இவ்விரு பெருமக்களையும் எதிர்சென்று வரவேற்றுத் திருவாலவாய்த் திருக்கோயிலுள் அழைத்துச் சென்றனர். நம்பியாரூரர், சேரமான் பெருமாளுடன், ஆலவாயிறைவரை வணங்கி செந்தமிழ்ப் பாமாலை பாடிப்போற்றினார். 'அடியேனையும் பொருளாக எண்ணித் திருமுகப் பாசுரம் பாடிக்கொடுத்தருளிய பேரருளின் எல்லையை அறிந்திலேன்' எனச் சேரமான் பெருமாள் ஆலவாயண்ணலைப் பரவித் துதித்து, பாண்டியனது அரண்மனையில் தங்கியிருந்தனர்.

சுந்தரர், சேர சோழ பாண்டியர்களாய அம்மூவேந்தர்களுடன் திருப்பூவணம் சென்று **'திருவுடையார்'** என்னுந் திருப்பதிகம் பாடித் துதித்தார். திருப்பரங்குன்றத்தை அடைந்து திருப்பதிகம் பாடிப் பரவினார். இப்பதிகத்திலே அடிகேள் உமக்காட்செய்ய அஞ்சுதுமே எனப் பாடல்தோறும் குறித்துப் போற்றினார். இதனால் தொண்டு செய்யும் அருமையை உணர்ந்த அரசர் மூவரும் பயபத்தியோடு நம்பியை வணங்கினர். சுந்தரர் சேரமான் பெருமாளுடன் பலதலங்க-ளையும் வழிபட்டு இராமேச்சுரத்தை அடைந்து இராமபிரானால் வழிபடப்-பெற்ற பெருமானைத் திருப்பதிகச் செந்தமிழ்மாலைகளாற் போற்றிசைத்து சிலநாள் தங்கியிருந்தார். அங்கிருந்து ஈழநாட்டிலுள்ள * திருக்கேதீச்சரத்தை எண்ணிப் பதிகம் பாடினார். பின் அங்கிருந்து புறப்பட்டு திருச்சுழியல் என்ற தலத்தை அடைந்து "ஊனுயிர்" எனும் திருப்பதிகம் பாடினார். அப்பொழுது சிவபெருமான், தம் திருக்கையிலே பொற்செண்டும் திருமுடியிற் சுழியமும் உடையவராய் நம்பியாரூரர்க்குக் கனவில் தோன்றி, 'நான் இருப்பது கானப்பேர்' என்று கூறி மறைந்தருளினார்.

* நத்தார் படைஞானன் பசு ஏறிந் நனை கவிழ்வாய்
மத்தம் மதயானையுரி போர்த்த மணவாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேல்
செத்தார் எலும் பணிவான் திருக் கேதீச்சரத் தானே.

எங்குமிலாத் திருவேடத்தைக் கண்டு விழித்தெழுந்த சுந்தரர், தாம் கண்ட கனவுக் காட்சியைச் சேரமான் பெருமாளுக்குத் தெரிவித்துத் திருச்சுழியலிலிருந்து புறப்பட்டுத் **'தொண்டரடி தொழலும்'** எனும் திருப்பதிகம் பாடி, பல தலங்களையும் வழிபட்டுச் சோழநாட்டை அடைந்து அங்கும் பல கோயில்களை வழிபட்டுத் திருவாரூரை அடைந்து பரவையார் மாளிகையில் தங்கியிருந்தார்.

பல நாட் சென்றபின் சேரமான் பெருமாளின் வேண்டுதலுக்கிசைய அவரது நாட்டிற்குப் புறப்பட்டுக் காவிரியின் தென்கரைவழியே திருக்கண்டியூரை அடைந்து இறைவனை வழிபட்டு மகிழ்ந்தார். அப்பொழுது திருவையாறு எதிரே தோன்றக்கண்டு நெஞ்சம் கசிந்துருகிய சுந்தரர் கடல்போற் பெருகும் காவிரியாற்றினைக் கடந்து தொழ நினைந்தார். 'ஓடங்கள் செல்லாதபடி கரைகடந்து செல்லும் வெள்ளத்தைக் கண்டு கலக்கமுற்று, **'பரவும் பரிசொன்று...'** எனும் திருப்பதிகம்பாடி **'ஐயாறுடைய அடிகளோ'** என அழைத்து நின்றார். அப்பொழுது சிவ-பெருமான் கன்று அழைத்தலைக் கேட்டுக் கனைக்கின்ற பசுவைப்போல் எல்லோரும் கேட்க **'ஓலம்'** என உரக்கக் கூறியருளினார். உடனே காவிரி நதியின் வெள்ளம் விலகி நடுவே வழிகாட்டியது. அவ்வழியி-னூடாகக் கொங்கு நாட்டை அடைந்து சேர நாடடைந்து மலைநாட்டு மக்கள் மகிழ்ந்தெதிர்கொள்ளக் கொடுங்கோளூரை அடைந்தார். சேரமான் பெருமாள், தம் தோழராகிய வன்றொண்டரைத் திருவஞ்சைக்களம் என்ற திருக்கோயிலுக்கு அழைத்துச் சென்றார். அஞ்சைக் களத்தி-றைவரைக் கும்பிட்டு மகிழ்ந்த சுந்தரர், **'முடிப்பது கங்கை'** எனும் திருப்பதிகம் பாடித் துதித்துப் புறத்தேவந்தார். சேரமான் பெருமாள் தம் கெழுதகை நண்பராகிய சுந்தரரைப் பட்டத்து யானைமேல் அமரச் செய்து தாம் அவர் பின்னே அமர்ந்து இருகைகளாலும் வெண்சாமரை வீசிக்கொண்டு தம்முடைய அரண்மனைக்கு அழைத்துச் சென்றார். அங்கு அவரை அரியணையில் அமர்த்தித் தம் தேவிமார் பொற்குடத்தில் தண்ணீர் ஏந்திப் பணிசெய்ய வன்றொண்டர் திருவ-டிகளை விளக்கி நறுமலர் தூவி அருச்சித்தார். உடனிருந்து திருவ-முதும் செய்வித்து உபசரித்தார்.

இங்ஙனம் சேரவேந்தரும் சுந்தரரும் அன்பினால் அளவளாவி மகிழ்ந்திருந்த சமயம் திருவாரூர் பெருமானைக் கண்டிறைஞ்சி இன்புற வேண்டும் என்ற எண்ணம் சுந்தரருக்கு உண்டாயிற்று. அந்நினைவு மீதூரப்பெற்ற சுந்தரர் [1]. **"பொன்னும் மெய்ப்பொருளும்..."** எனவரும் திருப்பதிகத்தைப் பாடி தமது ஆற்றாமையினைச் சேரமானுக்குணர்த்தி விடைபெற முயன்றார். சுந்தரரது உள்ளக்குறிப்பினை உணர்ந்த சேரமான், 'இன்றுமது பிரிவாற்றேன் என் செய்வேன்' என மிகவும் வருந்தினார். சுந்தரர், சேரமான் பெருமாளுக்குள்ள அரச கடமையினை உணர்த்தி சேரமான் பெருமாளை வணங்கி விடைபெற்றார். சேரமானும் தமது நண்பரை வணங்கிப் பெரும் பொருட்கள் பொதி செய்து ஆட்களின்மேல் ஏற்றுவித்து அனுப்பினார். சுந்தரர் மலைநாட்டைக் கடந்து கொங்குநாட்டுத் தலங்களுள் ஒன்றாகிய திருமுருகன் பூண்டி வழியே போதற்குத் துணிந்து சென்றார்.

அங்ஙனம் செல்லுங்கால் அவ்வூரிற் கோயில் கொண்டருளிய சிவபெருமான், பூதகணங்களை நோக்கி 'நீங்கள் வேடுவராகிச் சென்று சுந்தரருடைய பொருட்களைக் கவர்ந்து கொள்மின்' எனப் பணித்தருள அவர்களும் வேடுவராகச் சென்று நிதிக்குவியல்களைச் சுமந்துசெல்லும் சுமையாட்களை வழிமறித்து அவர்களை அச்சுறுத்தி அவர்களிடமுள்ள பொருட்கள் எல்லாவற்றையும் கவர்ந்து கொண்டனர். அந்நிலையிற் சுந்தரர் திருமுருகன் பூண்டியிலுள்ள திருக்கோயிலுட் புகுந்து இறைவனை இறைஞ்சி, **'கொடுகு வெஞ்சிலை வடுகவேடுவர்.....'** எனும் திருப்பதிகம் பாடியதும் உடனே இறைவனருளால் வழிப்பறி செய்த வேடுவர் தாம் கவர்ந்த பொருட்களை எல்லாம் திருக்கோயிலின் வாயிலிற் கொண்டு வைத்தார்கள். இறைவன் திருவருளை வியந்த ஆரூரர், அவற்றைப் பொதிசெய்து ஏவலாளர்களிடம் முன்னே எடுத்துச் செல்லும்படி கூறி,

---

[1] பொன்னும் மெய்ப்பொருளும் தருவானைப் போகமும் திருவும் புணர்ப்பானைப்
பின்னை என்பிழையைப் பொறுப்பானை பிழையெலாம் தவிரப்பணிப்பானை
இன்ன தன்மையன் என்றறியொணா எம்மானை எளிவந்தபிரானை
அன்னம் வைகும் வயற் பழனத்தணி ஆரூரானை மறக்கலுமாமே.

திருவாரூரை அடைந்தார். புற்றிடங் கொண்ட பெருமானை வணங்கிப் பரவையாரது மாளிகையில் எழுந்தருளியிருந்தார்.

திருவாரூரிற் தங்கியிருந்த ஆரூரர் நண்பராகிய சேரமான் பெருமாளை நினைத்து மலைநாடு செல்லத் திருவுளம் கொண்டு திருப்புக்கொளியூர் அவிநாசி எனும் தலத்தை அணுகி அவ்வீதி வழியாகச் சென்றார். அப்பொழுது அங்கே ஒரு வீட்டில் மங்கள ஒலியும் எதிர் வீட்டில் அழுகை ஒலியும் எழுதலைக் கேட்டு அங்குள்ளாரை நோக்கி 'மாறுபட்ட இவ்விரண்டொலியும் ஒருங்கு நிகழக் காரணம் யாது' என வினவினார். அதுகேட்ட வேதியர் சுந்தரரை வணங்கிப் பின்வருமாறு கூறினார்கள். 'ஒத்த பருவத்தினராய் ஐந்து வயது நிரம்பப்பெற்ற சிறுவர் இருவர் மடுவிலே குளித்த போது ஒருவனை முதலை விழுங்கியது. மற்றொருவன் அதன்வாயில் அகப்படாது பிழைத்துக் கொண்டான். பிழைத்த சிறுவனுக்கு வீட்டில் உபநயனம் நடைபெறுகின்றது. இம்மங்கல ஒலி இவனோடொத்த வயதினனாய் முதலைவாயில் அகப்பட்டிருந்த தம் புதல்வனை நினைப்பித்தமையால் வருந்திய பெற்றோரது அழுகையொலி அவ்வீட்டில் உண்டாயிற்று என்பது அவர்கள் கூறிய மறுமொழி. அத்துயரச் செய்தி கேட்ட சுந்தரர் சிந்தை கலங்கி நின்றார். புதல்வனை நினைந்து வருந்திய வேதியரும், அவர் மனைவியும் சுந்தரமூர்த்திசுவாமிகள் வந்த செய்தியறிந்து அழுகை நீங்கி முகமலர்ச்சியுடன் அவர்களது திருவடிகளில் வீழ்ந்து வணங்கினார்கள். அவர்களைக் கூர்ந்து நோக்கிய சுந்தரர் 'புதல்வரை இழந்தவர்கள் நீவிரோ' எனப் பரிவுடன் வினவினார். அவர்கள் மீண்டும் சுந்தரரை வணங்கி நின்று 'பெரியீர், அது முன்னே நிகழ்ந்து போயிற்று, அது நிற்க, தங்களை நெடுங்காலமாகக் கண்டு வணங்குவதற்கு விரும்பியிருந்த எங்களது அன்பு பழுதாகாமல் தாங்கள் இங்கு எழுந்தருளியது எமது தவப்பேறேயாகும்' என மகிழ்ந்துரைத்தார்கள். தன்னை அடைந்தவர்களின் இடர்களைக் களைந்தருளவல்ல சுந்தரர் 'இவ்வேதியனும் மனைவியும் தம்மகனை இழந்த துன்பத்தையும் மறந்து நான் இங்கு வந்ததற்காக மனம் மகிழ்கிறார்கள். இவர்களுடைய புதல்வனை முதலை வாயினின்று அழைத்துக் கொடுத்த

பின்னரே அவிநாசினியில் எழுந்தருளிய எந்தை பிரானை நான் இறைஞ்சுதல் வேண்டும்' என அருளிச் செய்து, 'புதல்வனை முதலை விழுங்கிய மடு எங்குள்ளது' என வினவி அம்மடுவின் கரையை அடைந்தார். 'முதலையானது தான் விழுங்கிய புதல்வனை உயிருடன் கரையிற் கொண்டுதரும்படி அருள் செய்வீராக' எனத் திருப்புக்கொளியூர் அவிநாசியில் எழுந்தருளிய சிவபெருமானை நினைந்து, * **"எற்றான் மறக்கேன்"** எனும் திருப்பதிகம் பாடி **'உரைப்பாரு ரையுகந்து....'** என வரும் நான்காம் திருப்பாடலைப் பாடும்பொழுது காலனாகிய இயமன் முதலை வயிற்றில் விழுங்கப்பட்டிறந்த புதல்வனது உடம்பைச் சென்ற ஆண்டுகளின் வளர்ச்சியையுடையதாகச் செய்து அவ்வுடம்பிலுள்ள அப்புதல்வனின் உயிரைக் கொண்டுவந்து புகுத்தினான். உடனே முதலை மடுவிலிருந்து வெளிப்பட்டு முன் தான் விழுங்கிய புதல்வனைக் கரையிலே கொண்டு வந்து உமிழ்ந்தது. புதல்வனைக் கண்ட தாயார், விரைந்து சென்று தழுவி எடுத்துக்கொண்டார். தாயும் தந்தையுமாகிய அவ்விருவரும் சுந்தரர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினார்கள். இவ்வற்புதத்தை நேரிற் கண்ட அனைவரும் இறைவனது திருவருட்டிறத்தை வியந்து போற்றினார்கள். முதலை வாயினின்றும் வெளிப்பட்டு உய்ந்த மறைச்சிறுவனை நம்பியாரூரர் அவிநாசித் திருக்கோயிலுக்கு அழைத்துச்சென்று இறைவரைத் தொழுது போற்றி வேதியரது வீட்டிற்கு அழைத்துச் சென்று மங்கள வாத்தியம் முழங்க அப்புதல்வனுக்கு உபநயனம் செய்வித்தருளினார்.

பின்னர் நம்பியாரூரர் மலைநாட்டை நோக்கிச் சென்றார். அவர் வஞ்சி நகரத்தை நோக்கி வருதலைக் கேள்வியுற்ற சேரமான்பெருமாள், தம் ஆருயிர்த் தோழராகிய அவரை எதிர்கொண்டு வணங்கி யானை மேலமர்த்தி அரண்மனைக்கு அழைத்துச் சென்று அரியணையில்

---

* எற்றான் மறக்கேன் எழுமைக்கும் எம்பெருமானையே
உற்றாய் என்றுன்னையே உள்குகின்றேன் உணர்ந்து உள்ளத்தால்
புற்றாடரவா புக்கொளியூர் அவிநாசியே
பற்றாக வாழ்வேன் பசுபதியேபரமேட்டியே

அமரச் செய்து பூசித்துப் போற்றினார். சேர மன்னனால் உபசரிக்கப்பட்ட சுந்தரர் அவருடன் அருகேயுள்ள மலைநாட்டுத் தலங்களை இறைஞ்சி அன்பினால் அளவளாவி மகிழ்ந்திருந்தார்.

ஒரு நாள் சேரமான் பெருமாள் திருமஞ்சனச்சாலையில் நீராடிக் கொண்டிருந்தபொழுது சுந்தரர் திருவஞ்சைக்களத்திறைவனை வழிபடச் சென்றார். திருக்கோயிலுட் சென்ற ஆரூரர், நிலமிசை வீழ்ந்திறைஞ்சி "இவ்வுலக வாழ்க்கையை வெறுத்து நீங்கினேன்" அடியேனை உன் திருவடியில் சேர்த்தருளல் வேண்டும் என **தலைக்குத்தலைமாலை** எனும் பதிகம் பாடினார். அடியார்களின் கருத்தறிந்து முடிக்கவல்ல பெருமான் சுந்தரரது பாசத்தளையை அகற்றி ஈறில்லாப் பேரின்ப வாழ்வைத் தந்தருளத் திருவுளம் கொண்டு நம்பியாரூரரைத் திருக்கைலாயத்திற்கு அழைத்துவரத் தேவர்களை வெள்ளையானையுடன் திருவஞ்சைக் களத்திற்கு அனுப்பினார். தேவர்கள் கோயில் வாயிலை அடைந்து ஆரூரரை வணங்கி, தாங்கள் இவ்வெள்ளை யானையின்மேல் அமர்ந்து திருக்கைலைக்குவரவேண்டும் என்பது சிவபெருமானது அருளிப்பாடாகும். தாங்கள் ஏவியவற்றைச் செய்ய நாங்கள் காத்திருக்கின்றோம்' என விண்ணப்பம் செய்தனர். இறைவன் திருவருளையெண்ணித் தன்னை மறந்திருந்த வன்றொண்டர், ஈசனது ஆணையை ஏற்றனர். தேவர்கள் அவரை வெள்ளை யானையில் அமர்த்தி கையிலைக்குப் புறப்பட்டனர். செல்லும்போது தம் உயிர்த்தோழராகிய சேரமான் பெருமாளைத் தம்மனதிற் சிந்தித்துக் கொண்டு சென்றார்.

தம்முயிர்த் தோழர் தம்மை நினைத்துச் செல்லும் பேரன்பின் திறத்தை திருவருளாற்றலால் விரைந்துணர்ந்த சேரமான் பெருமாள் தன் குதிரை மீதமர்ந்து திருவஞ்சைக்களத்தை அடைந்தார். தன் நண்பர் விசும்பில் செல்வதைக் கண்டார். தமது குதிரையின் செவியில் திருவைந்தெழுத்து உபதேசித்தார். அக்குதிரை வான் வழியே செல்லும் ஆற்றல்பெற்று தெய்வத்தன்மை வாய்ந்த வெள்ளை

® தானெனை முன்படைத்தான் அதறிந்துதன் பொன்னடிக்கே
நானென பாடலந்தோ நாயினேனைப் பொருட்படுத்து
வானெனை வந்தெதிர்கொள்ள மத்தயானை அருள்புரிந்து
ஊனுயிர் வேறு செய்தான் நொடித்தான்மலை உத்தமனே.

யானையை வலம் வந்து அதற்கு முன்னே சென்றது. மன்னரின் பின்னே வந்த படைவீரர்கள் கண்ணுக்குப் புலப்படும் தூரத்தில் தம்மன்னரைக் கண்டு பின் காணப் பெறாது வருந்தினார்கள். வேந்தரைப் பிரிய மனமற்ற அவ்வீரர்கள் தம் உடம்பை வெட்டி வீர யாக்கை பெற்று விசும்பில் எழுந்து சேரமான் பெருமாளைச் சேவித்துச் சென்றனர். சேரமான் பெருமாளும், தேவர்களும் முன்செல்ல பின் சென்ற ஆரூரர், **'தானெனை முன்படைத்தான்....'** எனும் திருப்பதிகம் பாடி கைலாய மலையின் தென்திசை வாயிலை அணுகினார்.

சேரமான்பெருமாளும், நம்பியாரூரரும் குதிரையினின்றும், யானையினின்றும் இறங்கி பலவாயில்களையும் கடந்து திருவணுக்கன் வாயிலை அடைந்தார்கள். சேரமான்பெருமாள் உள்ளே செல்ல அனுமதியின்றி தடைப்பட்டிருந்தார். அவருடைய கெழுதகை நண்பராகிய சுந்தரர் உள்ளே சென்று அம்மையப்பரை வணங்கி, 'கங்கையைச் சடைக்கணிந்த கடவுளே உன் திருவடிகளை வணங்கற் பொருட்டு சேரமான் பெருமாள் திருவணுக்கன் வாயிலின் புறத்தே நிற்கின்றார்' எனக் கூறினார். அதுகேட்டு மகிழ்ந்த சிவபெருமான் நந்தியை நோக்கி, 'சேரமானைக் கொணர்க' எனப் பணித்தருளினார். நந்திதேவரால் அழைத்துவரப்பட்ட சேரமான் பெருமாள் இறைவன் திருமுன் இறைஞ்சி நின்றார். இறைவர், சேரமானை நோக்கி 'நாம் இங்கு உன்னை அழையாமல் வந்தது எதுகருதி' என வினவினார். அதுகேட்ட சேரவேந்தர், இறைவனை இறைஞ்சி 'எம்பெருமானே அடியேன் நம்பியாரூரருடைய திருவடிகளைப் போற்றி அவரேறிய வெள்ளை யானைக்கு முன் அவரைச் சேவித்துக் கொண்டு வந்தேன். தேவரீரது திருவருட் பெருவெள்ளம் அடியேனை ஈர்த்துக்கொண்டு புகுதலால் இங்கு தங்கள் திருமுன் வரப்பெற்றேன். எனது பாசத்தளையை அகற்றுதற் பொருட்டு வன்றொண்டரது தோழமையைத் தந்தருளிய பெருமானே, தேவரீரைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு 'திருவுலாப்புறம்' என்ற செந்தமிழ்ப் பனுவலொன்றைப் பாடி வந்துள்ளேன். இத் தமிழ்ப்பனுவலை திருச்செவியில் ஏற்றருள வேண்டும்' என விண்ணப்பஞ் செய்தார். அப்பொழுது சிவபெருமான், 'அவ்வுலாவைச் சொல்லுக' எனப் பணித்தருளினார். சேரமான்பெருமாள்நாயனாரும் தான் பாடிய செந்தமிழ்ப் பனுவலை

இறைவன் திருமுன்னர் அரங்கேற்றினார். சேரர்காவலர் பணிவுடன் கேட்பித்த 'திருவுலாப்புறத்தை' ஏற்றருளிய சிவபெருமான், அவரை நோக்கிச், 'சேரனே நம்பியாரூரராகிய ஆலால சுந்தரருடன் கூடி நீவிர் இருவீரும் சிவகணத் தலைவராய் நம்பால் நிலைபெற்றிருப்பீராக' எனத் திருவருள் புரிந்தார். சிவபெருமான் அருளிய வண்ணம் இருவரும் திருக்கையிலையில் திருத்தொண்டு புரியும் பேரின்ப வாழ்வில் திளைத்து மகிழ்ந்தார்கள். நம்பியாரூரரை மணந்து வாழ்ந்த பரவையாரும் சங்கிலியாரும் சிவபெருமான் திருவருளால் திருக்கையிலையடைந்து கமலினியாராகவும், அநிந்திதையாராகவும் ஆகி உமையம்மையாருக்கு, அவர்கள் முன் செய்துவந்த அணுக்கத் தொண்டினைச் செய்து மகிழ்ந்தார்கள்.

திருத்தொண்டர் புராணசாரம்.

தண்கமிலையது நீங்கி நாவலூர்வாழ்
சைவனார் சடையனார் தனயனாராய்
மண்புகழ அருட்டுறையான் ஓலைகாட்டி
மணம் விலக்க வன்றொண்டாய் அதிகை சேர்ந்து
நண்பினுடன் அருள்புரிய ஆரூர்மேவி
நலம் கிளரும் பரவைதோள் நயந்துவைகி
திண்குலவும் விறன்மிண்டர் திறல்கண்டேத்தும்
திருத்தொண்டத் தொகை அருளால் செப்பினாரே.

செப்பலரும் குண்டையூர் நெல்அழைத்துத் திருப்புகலூர்
செங்கல் செழும் பொன்னாச் செய்து
தப்பில் முதுகுன்றர் தரும்பொருள்ஆற்றிலிட்டுத்
தடத்தெடுத்துச் சங்கிலிதோள் சார்ந்து நாதன்
ஒப்பில் தனித்தூது வந்து ஆறாடு கீறி
உறுமுதலை சிறு மதலை உமிழ நல்கி
மெய்ப்பரிய களிறேறி அருளாற் சேர
வேந்தருடன் வடகயிலை மேவினாரே.

நுண்பொருள்

1. கைலையில் சிவதொண்டு செய்திருத்தலே நம்பியின் உண்மை நிலை மனச்சலனமொன்றினால் மண்மேற் பிறவி வந்துற்றது. அது மண்ணுளோர் நன்மைப் பொருட்டே.
2. நம்பி மீளா அடிமை. (பழ ஆவணம்) சிவபெருமான் தம் அடியவரை மண்ணில் மயங்காவண்ணம் தடுத்தாட் கொள்வான்.
3. சிவபெருமானுக்கு மிக உகப்பான அருச்சனை பாட்டு.
4. தொண்டர்க்குத் தொண்டராதல் தொண்டர் கதைக்கு நாயகனாம் பேறு தருவது.
5. அடிமைத் திறத்தின் உறைப்பு தம்பிரானைத் தோழமை கொள்ளச் செய்யும்.
6. மீளா அடியரானோர் தமக்கு வேண்டும் சுகபோகங்களையும் சிவ-பெருமானிடமே வேண்டிப் பெற்றுச் சிவபோகமாகவே அனுபவிப்பர்.
7. தொண்டருட் சிலர் சுந்தர வேடம் பூண்டு துரிசுகள் செய்தலும் உண்டு.
8. சிவபெருமான் அன்பர் பொருட்டு, அன்பர் ஏவல் புரியும் அடியவர்க்-கடியவராவர்.
9. நம்பியைக் கும்பிட்ட நலத்தால் நாயன்மார் சிலர் திருவடிப் பேறு பெற்றனர்.
10. நம்பி தம்மை நண்பராகக் கொண்டோரையும் நினைந்து கொண்டே கையிலை சென்றனர்.
11. இந்திரன் மால் பிரமன் ஆகியோர் எதிர்கொண்டு அழைத்துச்செல்லத்தக்க மாண்பினரே நம்பி.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூசைநாள் :- ஆடிச்சுவாதி



"வாதவூர்த்தேவே என்பேன்"

மாணிக்கவாசக சுவாமிகள்

சிவலோகம் எனக் கொண்டாடப்படும் சிறப்பினையுடையது பாண்டியநாடு. இந்நாட்டிலுள்ள தேவரூரினும் சிறந்த ஊர் திருவாதவூர். இத்திருவாதவூரிலே ஆகம விற்பன்னர்களும், அரசனுக்கு மதியுரை கூறுவதில் வல்லவருமான அமாத்தியப்பிராமணர்கள் வாழ்ந்துவந்தனர். அச்சிவப்பிராமணருள் ஒருவர் சிவபெருமானது செம்பொற்றாளைச் சிரமிசைச் சுமந்து திரியும் சிறப்பினரான **சம்புபாதசிரயர்**. அவரது திருமனையார் **சிவஞானவதியார்**. இவ்விருவருக்கும் ஓர் அருந்தவக்குழந்தை அவதரித்தது. அக்குழந்தைக்குத் **திருவாதவூரர்** எனப் பெயரிட்டுச் சீராட்டிப் பாராட்டி வளர்த்து வந்தனர். திருவாதவூரர் உரியபருவத்தில் கலைபயிலத் தொடங்கினார். பதினாறாண்டளவில் ஆகமக்கல்வியுடன் அரசியல் முதலாம் கலைகளையும் கற்றறிந்த வித்தகரானார். அவரது திறமைகளைக் கேள்வியுற்ற பாண்டியமன்னன் அவரை அழைத்து அவரோர் தகவுடையரெனத் தெளிந்து தனது முதன்மந்திரியாக்கினான். "**தென்னவன் பிரம்மராயன்**" என்ற விருது அளித்தான். பீதாம்பர ஆடை, இரத்தினாபரணம், சிவிகை, குடை என்பனவும், உறைதற்கு மாளிகையும் அளித்தான். திருவாதவூரருக்கு அரசபோகவாழ்வு அமையலாயிற்று. அவர் அரசநீதியைச் செவ்வனே செய்தார். மன்னுயிரெல்லாம் மகிழ்வுடன் வாழ்தற்குத் தன்னாலான யாவையும் செய்தார். தாழ்ந்தோர்க்கெல்லாம் நலம் செய்வதில் தாய்போன்றமைந்தார். ஆயினும் அவர் கண்டதெல்லாம் தீத்திறவினையினாலே உயிர்த்திரள்படும் துயரமேயாகும். தமக்கு அமைந்த இந்திரச்செல்வத்தால் தாம் இன்புற்றுவாழவும் முடியவில்லை. உலகபோகத்தில் நிறைவு காணமுயல்வது தெளிந்தநீரென்று பேய்த்தேரை (கானல்நீர்) ப்பருகித் தாகம் தணியமுயல்வதை ஒத்ததே எனத் தெளிந்து கொண்டார். அமைச்சியல் அனுபவம் **வினைப்பிறவி என்னும் வேதனை** எனும் கருத்தையே அவர் தம்உள்ளத்தில் பதித்தது. ஆதலால் அரசவாழ்விற் பயனிலை எனத் துணிந்து கொண்டார். தாம் முன்பு பொதுவகையாற் கற்றிருந்த சிவாகமங்களை இப்போது ஆழ்ந்து சிந்திக்கலானார். **தெய்வமென்பதோர் சித்தம்** உண்டாயிற்று. தேடும்பொருளும் சிவன்கழலே என்ற தெளிவுபிறந்தது. ஆயினும்

கூத்தினர் கொள்கைவேறு கோலம் வேறு ஆதல்போல முன்போன்றே அரசகருமம் ஆற்றிவந்தார். கொள்கையில் வேறுபாடுகண்ட சுற்றத்-தவர்கள் அவரைப் பற்றி அழைத்துப் பதறினர். ஆத்தமானாரும் அயலவரும்கூடி நாத்தழும்பேறுமளவு நாத்திகம் பேசினர். இவ்வாறு ஆறுகோடிமாயா சக்திகள் வேறுவேறுதம் மாயை தொடங்கின. ஆயினும் தாம் கொண்ட கொள்கையிற் சலியாது திருவடித்தேட்டத்தில் கண்ணாயிருந்தார். ஆகமங்களிற் சொன்ன விதிமுறைகள் பலவற்றிலும் அகமுகமாக முயன்றுபார்த்தார். ஆயின் அது தேடித்தேடொணாத் தேட்டமேயாம். அது குருபரன் அருளால் கைகூடுவது. ஆதலால் குருபரன் திருத்தாள் கூடவேண்டுமென்ற தாகம் பொருந்தியவரானார். அத்தாகத்-தினாலே சமயவாதியரைக்காணுமிடத்து விளாங்கனி பெறுதற்பொருட்டு விளாமரத்திலிருக்கும் குரங்கை நோக்கி கல்லால் எறிவதுபோல் உபதேசம் அருளவல்லவர் உளரோ என அறிதற்பொருட்டு தமது சாத்திரஞானத்தால் சொல்லாடி வந்தார்.

இவ்வாறிருக்கும் நாளில் ஒருநாள் அரசவைக்குச் சென்று தமது ஆசனத்தில் இருந்தார். அரசன் பவனிவந்து சிம்மாசனத் தமர்ந்தான் . அன்று அரசின் குதிரைப்பந்தி பற்றி ஆலோசிக்கப்பட்டது. முடிவில் தென்னவன் பிரமராயரைக் குதிரைவாங்கிவருமாறு அரசன் பணித்தான். திருவாதவூர் களஞ்சியத்திலிருந்து போதுமளவு பொன்கொண்டு குதிரை-வாங்குவதற்கான பயணத்துக்கு ஆயத்தமானார். முதலில் ஆலவாய்க் கோயில் சென்று அண்ணலை வழிபட்டார். இந்த நீண்டபயணத்திலே குருபரன் திருத்தாள் கூடவேண்டும் எனவும் வேண்டுதல் செய்தார். பின்னர் அரசனிடமும் விடைபெற்று ஆரியவணிகர்கள் குதிரைகொண்டு வந்திருக்கும் இடமாகிய சோழநாட்டுக் கடற்கரையை நோக்கிப் பயணத்தைத் தொடங்கினார்.

குருபரன் திருத்தாள்கூட வேண்டுமெனும் தாகம் கொண்ட திருவாதவூரருக்குத் தாமே குருவாக வந்து தலையளித்து ஆட்கொள்ளத் திருவுளம் பற்றினார் கயிலைநாதர். கணநாதரை மண்ணவர் உருவில் வருமாறு பணித்துத் தாமோர் பரமாசாரிய வேடம் கொண்டார். பிறவிக்கடலில் உழல்வோர் முத்திக்கரை சேர்வதற்கு இறங்கும் துறையான திருப்பெருந்துறையைச் சேர்ந்தார். அத்தெங்குதிரள் சோலைத்

தென்னன் பெருந்துறையிலுள்ள நந்தவனத்திற் சென்று நிறை-மலர்க்குருந்தின் கீழ் திருவாதவூரரை வழிபார்த்திருந்தார்.

திருவாதவூரரின் பயணம் திருப்பெருந்துறையை அடைந்தது. நந்தவன வழியாக வரும்பொழுது அவர் தம் உரோமம் சிலிர்த்தது. இருதயம் மலர்ந்தது. கண்கள் களிகூர்ந்து நுண்துளியரும்பின. சாயா அன்பு தழைத்தது. இவையெல்லாம் பரமாதிசயக் குறிப்புகள் என்றுணர்ந்து உள்ளகம் ததும்பி வரும் வேளையில் நந்தவனத்தினின்றும் ஆகமம் ஓதும் ஓசைகேட்டது. திருவாதவூரர் சிவிகை விட்டு இறங்கி ஓசைவந்த வழியே சென்று குருந்தடி பொருந்தியிருக்கும் தம் ஆதி நட்பைக் கண்டுகொண்டார். அவர்தம் உள்ளம் காந்தம் கண்ட இரும்புபோல் அப்பெரியோர் பால் ஈர்ப்புண்டு சென்றது. அவரை மனதார வணங்கி வணங்கார் போல் மந்திரியாம்பான்மை தோன்ற நின்றார். அந்த அழகமர் கோலத்தின் செங்கையில் புத்தகம் ஒன்றிருக்கக் கண்டு "ஐயா உங்கள் கையில் இருக்கும் புத்தகத்தின் பெயரென்ன?' என்று கேட்டார். பரமாசாரியர் "பொய்ம்மையில்லாச் சிவஞானபோதம்" என்றார். அப்போது "சிவம் ஏது? ஞானம் ஏது? போதம் ஏது?" என்னும் மூன்று வினாக்களைத் திருவாதவூரர் கேட்டார். அதற்கு

"நின்றசிவம் ஒன்று
அதனைத் தேர்தல் ஞானம்
தேர்ந்தனைத் தெளிதல் போதம்"

எனப் பராமாசாரியார் விடை கூறினார். இச்சின்மொழிகள் திருவாத-வூராளியின் சிந்தை தெளிவித்தன. அச்சுந்தரக் கோலத்தின் திருவடிக்கீழ் தம் உடல் பொருள் ஆவி அனைத்தையும் ஒப்படைத்து வீழ்ந்து கும்பிட்டார். முகமெல்லாம் கண்ணீர்வார எழுந்து நின்று "தளர்ந்தேன் அடியேன்; தமியேன்; அஞ்சேல் என்றிங்கு அருள்வாய் "என்று வேண்டுதல் செய்தார். பரமாசாரியர் அன்பாளரின் கண்ணின் நீரை மாற்றினார் "ஆ.ஆ" பாவம் பைதல்" (சிறுவன்) எனப் பரிவுடன் மொழிந்தார். "வினைப்பிறவி என்னும் வேதனையால் நொந்தனையோ! அஞ்சாதே நான் வினைக்-கேடன்" என்று ஆறுதல் கூறினார். அன்பரைப் பிணித்த வெம் பிறவிப் பகை மீது கோபம் கொண்டார். "பிறப்பறுத்து வீடருள்வேன்" என்று அறைகூவினார். தன் நீறு அருளினார். நொடிபோன்ற சில சொற்கள்

கூறினார். நோக்கரிய நோக்கால் நுணுக்கரிய நுண்பொருளை உணர்த்தினார். அன்பாளருக்கு காட்டாதனவெல்லாம் காட்டிச் சிவம் காட்டி தாள்த்தாமரை காட்டி, தன்கருணைத்தேன் காட்டி ஆட் கொண்டார். "நம் அடியான்" என்று உறவு செய்து குழுமியிருந்த பழைய அடியாருடன் கூட்டி வைத்தார். சிரிப்பவரும் களிப்பவரும் தேனிப்பவரும், திரண்டுதிரண்டு திருவார்த்தை வரிப்பவரும், கேட்பவரும் மெச்சுபவரும், வெவ்வேறிருந்து திருநாமம் தரிப்பவருமான பழஅடியாருடன் கூடித் திருவாதவூரர் களிகூர்ந்தார். இவ்வண்ணம் பரமாசாரியார் அடியரிற் கூட்டிய அதிசய அனுபவத்தில் திளைத்தவராய் கன்னற் கனிதேர் களிறெனக் களித்திருந்தபொழுது குருபரன் பாடுக எனப் பணித்தார். அன்பாளர் **"வைப்புமாடு என்றும் மாணிக்கத்தொளியென்றும்"** எனத்தொடங்கி அப்பன் ஆண்டுதன் அடியரிற் கூட்டிய அதிசயத்தைப் பாடினார். இப்பாடலைக் கேட்டு நயந்த பரமாசாரியர் **"மாணிக்கவாசகன்"** எனும் நாமத்தைச் சூட்டினார்.

சீரடியாருடன் குருபரன் அடிக்கீழ் களித்திருந்த அவர்தம் பெருவாழ்வுக்கு ஓர் இடர்ப்பாடு உண்டாயிற்று. அவருடன் கூடிவந்த பரிவாரத்தினர் அவரின் நிறையழிபித்தரானநிலை கண்டு மனம் கலங்கினார்கள். அவரிடம் சென்று குதிரைவாங்கும் கருமத்தை நினைவூட்ட முயன்றார்கள். அவர்கள் தம் முயற்சியொன்றும் கைவராமல் மன்னனிடம் சென்று சொல்வதே முறையென்று மதுரைநகர் சென்றார்கள். மன்னனைக்கண்டு வணங்கி நிகழ்ந்ததெல்லாம் கூறினார்கள். பாண்டியன் கடும் கோபம் கொண்டான். ஓலை ஒன்று எழுதிக் கடுநடைத்தூதரிடம் கொடுத்து அமைச்சரை அழைத்துவருமாறு ஏவினான். தூதர் பெருந்துறையடைந்து அவரைக் கண்டு அரசனது திருமுகம் காட்டினர். மணிவாசகரோ குருபரனின் திருமுகமன்றிப் பிறமுகமொன்றும் அறியார். ஆதலினால் குருபரன் முன்னிலையிற் சென்றார். அங்கு அரசனது ஓலையைக் கரணத்தான் ஒருவன் வாசித்தான். அது "தென்னவன் எழுதும் ஓலை தென்னவன் பிரமராயன் என்னும் நம் அமைச்சன் காண்க" எனத்தொடங்கி "குதிரைகொள்ளச் சென்று குதிரைகொள்ளாது கோவணம் கொண்டீர்" என்ற பழிப்புரையாகத் தொடர்ந்து, ஓலை கண்டதும் உடனே வருமாறு அழைக்கும் கட்டளையுடன் முடிந்தது. மணிவாசகருக்குத் தான் ஓர் அமைச்சன் என்பதும், தான் அரசனைப்-

பிழைத்தேன் என்பதுமான இவற்றைச் சற்றும் விளங்கிகொள்ள முடியவில்லை. பரமாசாரியரோ மணிவாசகரைப் பரிவோடு நோக்கிப் "பாண்டியமன்னனிடம் சென்று, குதிரை ஆவணிமூலநாளில் வருமென்று கூறுவாய்" எனப்பணித்தார். தாமே குதிரை நடாத்திவருவதாகவும் மொழிந்தார். மணிவாசகரை முன்னர் போல் மந்திரிப்பான்மைசெய்து மன்னனிடம் கொடுப்பதற்கென் ஓர் பெறுமதிமிக்க மாணிக்கமும் அளித்தார். பாழ்செய்விளாவிப் பயனிலியாக் கிடந்தேற்குக் கீழ்செய்தவத்தால் கிழியீடு நேர்பட்டு என்றிருந்த மணிவாசகருக்கோ அக்கிழிபீட்டை இழந்துபோவதான துயரம் பெருகியது. காடுமலையெல்லாம் கடந்து கடலோடுசங்கமமாகிய நதி மீண்டும் தரையில் பாய்வதோ? உனைப்-பிரிந்திங்கு ஒருபோதும் தரியேன் என அழுதார். பரமாசாரியர் "பிரியேன் பிரியேன்" எனப் பலதரமும் சொன்னார். குருபரனின் பணிப்பின்படி நடப்பதன்றித் தனக்கெனச் செயலுண்டோ என எண்ணியவராய் கடுநடைத் தூதருடன் கூடச் சென்று மதுரையை அடைந்தார் திருவாதவூரர்.

பாண்டியமன்னன் மந்திரிக்கோலத்தோடு வரும் பிரமராயரைக் கண்டு மகிழ்ந்தான். அவரை ஆசனத்தில் அமரச்செய்து குதிரைவாங்கச்-சென்ற காரியம் பற்றிக்கேட்டான். அவர், நல்லினக் குதிரைகளாக வாங்கியதாகவும், ஆவணிமூல நாளே குதிரைகள் கொண்டுவருவதற்கு நல்ல நாளென்று அறிந்து அந்நாள் வரும்வரையும் திருப்பெருந்துறையில் காத்திருந்ததாகவும் கூறினார். பரிப்பாகர் பரிசாகத் தந்ததெனக்கூறி மாணிக்கத்தையும் அளித்தார். அதனை வியந்து நயந்த அரசன் தான் 'கேட்டதொன்று' என்றும், அதனை நம்பி ஓலை எழுதிய பிழையை மனங்கொள்ளாதிருக்குமாறும் வேண்டிக் கொண்டான்.

ஆவணிமூலநாளுக்குச் சிலநாள்கள் இருக்கும்பொழுது அமைச்சருள் ஒருவன் அரசனிடம் சென்று பிரமராயர் சொன்னதெல்லாம் பொய்யுரை-யென்றும், திருப்பெருந்துறையில் குதிரையொன்றுமில்லை என்றும் சொன்னான். அரசன் தூதுவரை அனுப்பித் திருப்பெருந்துறையிலும், அயலிடங்களிலும் குதிரையில்லை என்பதை அறிந்து கோபம் கொண்டான். தண்டலாளரை அழைத்து அரசனைப் பிழைத்த அமைச்சரைத் தண்டம் செய்யுமாறு கூறினான். தண்டலாளர் புளியம்வளாரால் அடித்துத் துன்புறுத்தினார். அடிபொறுக்கமாட்டாத

திருவாதவூர் பரமாசாரியரை வேண்டி அழலாலானார். அப்பொழுது குதிரைத்திரள் புழுதி கிளம்புமாறு மதுரைநோக்கி வரும் செய்தி எட்டியது. மன்னவன் மந்திரியாரை அழைத்துத் தவறுதல் நேர்ந்ததற்கு இரங்கினான். அவரையும் அழைத்துக்கொண்டு செண்டுவெளிக்குச் சென்று அமர்ந்து குதிரைவரவு பார்த்திருந்தான்.

பாய்ந்துவரும் பரித்திரள் கண்டு மணிவாசகர் களிகூர்ந்தார். பரமாசாரியார் சொல்லியவண்ணமேகுதிரைகொண்டுவந்த கருணையை நினைந்து அகம்மகிழ்ந்தார். பரிமேலழகியராய் வந்த பெருமானது திருக்கோலத்தைக் கண்களிகூரக் கண்டு வியந்து நயந்தார். வெள்ளைக்கலிங்கம் உடுத்து வெண்திருமுண்டமிலங்க பள்ளிக்குப்-பாயத்தராய்த் தோன்றிய அவர்தம் நிரம்ப அழகிய கோலத்தில் உளம் பூரித்திருந்தார். மன்னன் குதிரை வீரரிடம் குதிரையேற்றம் காட்டுமாறு கேட்கும்படி மந்திரியாரை வேண்டினான். மாணிக்கவாசகர் "இவன் என்ன நினைந்தான்" என்று, எண்ணியவராய் கருணைக் கடலாய்த் தோன்றிய சுந்தரவேடத்தின் முன் சென்று மனதாரப் போற்றினார். குருந்தின் கீழ் இருந்த அந்தக் குருமேனியைப் பரிமேலும் பார்த்து, பணிவுடன் பாண்டியன் வேண்டுதலைச் சொன்னார். பரிமேலழகியர் அன்பாளரைப் புரிந்து நோக்கிச் சருக்கரை தீற்றினார் என்றே சொல்ல வேண்டும். பரிமேலழகியரின் குதிரை விளையாட்டுக்கள் சென்று வெளியில் நிகழ்ந்தன. களிப்பு மிகுந்த பாண்டியன் பட்டுப் பீதாம்பரம் ஒன்றைப் பரிசாக வீசினான். அதனைப் பரிப்பாகர் செண்டால் ஏற்ற சதுரினைக் கண்டு மணிவாசகர் நயந்தார். பாண்டியன் தான் அளித்தபரிசை குதிரை வீரன் மரியாதையுடன் வாங்கவில்லை என முகம் சுழித்தான். அப்பொழுது மணிவாசகர் அவர்களது நாட்டுவழக்கம் அதுவென்று சமாதானம் செய்தார். குதிரை இலக்கணம் கற்றோர் நல்லினக் குதிரைகள் என்றும், கொடுத்த பொன்னிலும் இருமடங்கு பெறுமதியுடையன என்றும் கூறினர். ஈற்றில் குதிரை கயிறு மாறப்பட்டது. பரிமேலழகியர் தம் அருளாடலை நிகழ்த்திய பின் பனியரும்புதிரும் கண்களால் மணிவாசகர் பார்த்திருக்க வந்த வழியாற் சென்று மறைந்தார்.

குதிரைப்பத்தியிற் கட்டி வைக்கப்பட்டிருந்த மாயக் குதிரைகள் அன்றிரவு நரிகளாயின. அவை அங்கிருந்த குதிரைகளைக் கடித்துக்

கொன்றன. மதுரை நகர வீதியெங்கும் கூக்குரலிட்டுத் திரிந்தன. நள்ளிரவுப் போதில் மக்கள் அல்லோலகல்லோலப்பட்டனர். இவ்வோசைகள் மணிவாசகருக்கும் கேட்டன. அவருக்குப் பரிமேலழகியரின் பேராற்றலையே அவை வெளிப்படுத்தின. **நரகரைத்தேவு செய்யவல்ல பெருமானுக்கு நரியைக் குதிரையாக்குவது பெருங்காரியமன்று** என எண்ணியவராய் இருந்தார். அரசன் கடுங்கோபம் கொண்டான். "நரியைக் குதிரையாக்கி வஞ்சகம் செய்த சலதியைக் கடுமையாகத் தண்டித்துப் பொன்னைத் திரும்பிப் பெற்றுக்கொள்ளுங்கள்" எனக் கட்டளையிட்டான். தண்டலாளர் அவரைப் பிடித்துச் சென்று வளைவுள் நிறுத்தி நெற்றியிற் கல் ஏற்றி உச்சி வெய்யிலில் நிறுத்தினார்கள். துயர் தாங்கொணாத மணிவாசகர் **செத்திலேன் அந்தோ** என்று பாடினார். இப்பாடல் கேட்டு இரங்கிய பெருமானார் வைகை நதி பெருகும் வண்ணம் திருவுளம் பற்றினார். வைகை கடல்போற் பெருகி மதுரை நகரை அழித்தது. அரசனும் அமைச்சரும் ஆலோசித்துப் பிரமராயருக்கு செய்த துன்பமே இப்படிப் பெருவெள்ளம் பரவக்காரணம் என்று தெளிந்தனர். அவரிடம் சென்று தண்டம் தவிர்த்து, வெள்ளம் ஊர்கொள்ளாதிருக்க இறைவனை வேண்டுமாறு இரந்தனர். அவ்வாறே மணிவாசகப் பெருமானும் வேண்டினர். வைகை அடங்கியது. அப்பால் உடைப்புக்களை அடைப்பதற்காக மதுரை நகரிலுள்ளார்க்கெல்லாம் கோலறை அளந்து கொடுத்தனர். எல்லோரும் தத்தம் பங்கை அடைக்கலாயினர். அந்நகரில் பிட்டு விற்றுச் சீவனம் செய்யும் நரைமூதாட்டியான செம்மனச் செல்வியார், பிட்டினைக் கூலியாகக் கொண்டு தன் பங்கினை அடைப்பதற்கு ஆளின்றி வருந்தினார். அவர் ஆலவாய் அழகர் கோயிலுக்குச் சென்று தன் இலம்பாட்டைச் சொல்லி அழுது வேண்டினார். பெருமான் கூடையும், மண்வெட்டியும் கொண்டு கூலியாளாகத் தோன்றினார். செம்மனச் செல்வியார் ஈந்த இனிய பிட்டினை அருந்தி, "நன்று நன்று இன்னமும் அளிக்கவேண்டுமென்று" தன் கரிய சீரையில் வாங்கிக் கொண்டு வைகைக் கரையை அடைந்தார். அங்கே உடைப்பு அடைத்து நின்றோர்க்கு 'இனியபிட்டு' எனக் கூறிப் பிட்டளித்துத் தாமும் அருந்திக் கொண்டும், ஒரு பிடிமண்ணைக் கொண்டு தன்பங்கில் போட்டுக் கொண்டும், ஓடுவதும் ஆடுவதுமாகவும், போவெனில் வருவதும் வாவெனில் போவதுவாகவும் திரிந்தார். அவர்செய்கை கண்டு "தன்

பங்கு அடைக்கப்படாது கிடந்துவிடுமே என்ற கவலை கொள்ளாது அதிகாரிகள் இவரைத் துன்புறுத்துவரே" என செம்மனச் செல்வி இரங்கி நின்றார். அவரை "இப்பொழுதே உன் பங்கினை அடைத்துவிடுவேன். நீர்கவலையின்றிச் செல்க" என அனுப்பிவிட்டுக் கொன்றைநிழலில் வெண்மணற் பரப்பில் அறிதுயில் கொண்டார் அடியார்க்கு எளிய பிரான். அவர் செய்கை கண்ட அதிகாரிகள் அவர் மேற்கோபம் கொண்டனர். ஓர் அதிகாரி அவர் முதுகிற் பிரம்பால் அடித்தான். அம்மையின் பாகத்தில் அடிபடாமற் காத்துக் கொண்ட பெருமான் அக்கணமே மறைந்தருளினார். "தார்மேல் நின்றிலங்கு புய வழுதிமேலும் தன்மனை மங்கையர்மேலும் அமைச்சர் மேலும்..... பார் மேலும் கடல்மேலும் மரங்கள் மேலும் பட்டது." மணிவாசகர் இறைவன் தன்பொருட்டுச் செய்த இன்னொரு திருவிளையாடல் என இதனைக் கண்டுகொண்டார். வைகைக்கரைக்குச் சென்று பெருமான் மண்சுமந்த இடத்தில் அழுத கண்ணினராய்த் திரிந்தார். ஏழைஒருத்திக்காக எழில்வைகையாறடைத்த அருளையும், மண்சுமந்து கூலிகொண்டு அக்கோவால் மொத்துண்ட திறத்தையும், உயிருள் உயிருக்குயிராய் இருக்கும் வண்ணத்தையும் நினைந்து நினைந்து உளமுருகி நின்றார். அவ்வேளையில் பாண்டியமன்னன் அங்குவந்தான். அவன் அழுதுநின்ற அன்பாளரை மானிடமல்லர் என்றும் அவர் ஓர் 'தேவு' என்றும் தெளிந்தவனாய் வணங்கினான். தனது அமைச்சராக அல்லாமல் தனக்கும் அரசனாக அமைந்து இப்பாண்டி-நாட்டை ஆளுமாறு வேண்டினான். மணிவாசகப் பெருமானோ தமக்குப் பாண்டிப் பெரும்பதம் அருளுவதெனின் அது பரமாசாரியரிடம் தம்மை செல்லவிடுவதே எனக் கூறினார். அன்பர்க்கு அரசவாழ்வில் பற்றில்லை எனத் தெளிந்திருந்த மன்னன் அவரை "விரும்பியது செய்க" ஐயா என்று விடைகொடுத்து அனுப்பினான்.

அடித்து அடித்து அக்காரம் தீற்றிய அற்புத அனுபவத்தோடு சிறைபெறாநீர்போல் திருப்பெருந்துறை நோக்கி விரைந்து சென்றார் மாணிக்கவாசக சுவாமிகள். குருந்த நீழலிருந்த பரமாசாரியரின் கழலிணை-களைக் கழுமத்தழுவிக் கண்ணீரால் நீராட்டியபின் எழுந்து நின்று பரிமேலழகியராக வந்து அருள் செய்த திறத்தை நினைத்து அகம் களித்து நின்றார். மண் சுமந்த செயல் நினைந்து உடம்பெல்லாம் கண்ணாய் வெள்ளம் பாய நின்றார். பெண்ணாய் ஆணாய் விண்ணாய்

மண்ணாய் என்று எல்லாமாய் நிற்கும் பெருமையை ஓரடி பட்டு உணர்த்திய திறம் நினைந்து உணர்வொடுங்கி நின்றார்.**"பரிந்து வந்து பரமானந்தம் பண்டே அடியேற்கருள்செய்ய பிரிந்து போந்து பெருமாநிலத்தில் அருமாலுற்றேன் என்றென்று சொரிந்த கண்ணீர் சொரியச் சொரியப் புரிந்து நோக்கி"** நின்றார். அழுது நின்ற அன்பாளரின் அடிசேர்ஞானத் துறுதியைக் கண்டுகொண்ட கயிலைநாதர், தமது உண்மைச் சொருபத்தை உளவறிந்து கொண்ட அன்பாளரின் முன் பரமாசாரியப் போர்வை வேண்டுவதன்றெனத் திருவுளம் பற்றினார். கயிலைகிழவோர் உமையம்மையாரோடு கூடியிருக்கும் தன் தொன்மைக் கோலத்தைக் காட்டிக் கடைக்கணித்து நோக்கினார். மணிவாசகரின் பிறவிக் கருவேர் அறுந்தொழிந்தது. தினையளவு போதிலே அவர் சிவமாயினார். மணிவாசகரைத் தானாகச் செய்யும் காரியம் நிறைவுற்றதும் கயிலை நாதர் கயிலை செல்லத் திருவுளம் பற்றினார். சூழ இருந்த பழைய அடியார்களைப் பார்த்து சில நாள்கள் மணிவாசகருடனே இருங்கள் என்றார். அவர்களோ "ஐயா! தரிப்பரிது" என்று வருந்தினர். "வருந்துவது ஒழிமின் இக்குருந்த நிழலில் **திருவடி பிரதிட்டை செய்து திருவடியை நாமாகவே கண்டு மௌனமாக வழிபாடு செய்யுங்கள்."** என்று தேறுதல் கூறிச் சென்றார். மணிவாசகரின் கால்கள் அவரை நிழல் போல் தொடர்ந்தன. இவர் தொடராதொழியார் என்றுணர்ந்த கைலை நாதர் ஒரு கொன்றை நீழலில் நின்றார். தம்மை அண்டி வந்த மணிவாசகரிடம் **மண்ணினிற் பிறந்து மண்ணாதற்கு ஒருப்படுகின்ற மக்களைத் திருந்திய நெறியிற் சென்று திருவடி சேர்த்தற்கான திருவாசகப் பாக்களைப் பாடித் தில்லைப் பதிக்கு வா** என்றருளினார். அவ்வாறு அருளியவர் மணிவாசகர் விழித்திருக்கும் பொழுதே சோதியாய்த் தோன்றி மறைந்தார்.

பழ அடியார்கள் பரமாசாரியரின் மறைந்தமையைத் தாங்க முடியாதவராயினார். பெருநீறச் சிறுமீன் துவள்வது போல் துடித்தனர். பலர் மண்மிசை விழுந்து புரண்டு "நாத நாத" என்று அழுதரற்றிப் பாதமெய்தினர். இவ்வாறு எய்தப் பெறாதார் எழுந்து கால் விசைத் தோடிக் கடல் புக மண்டி திருவடி சேர்ந்தனர். ஏனையோர் எரியிற் பாய்ந்து சோதியுட் கலந்தனர். மணிவாசகர் தில்லைத் திருத் தலத்தையே

நினைந்தவராய் பதஞ்சலிக்கருளிய பரம நாடக என்று இதஞ்சலிப் புற்றிருந்தனர். பின்னர் பரமாசாரியாரின் பணிப்பினை நினைந்து குருந்த நிழலிலே பதும பீடிகை அமைத்து அதில் திருவடி பிரதிட்டை செய்தனர். அத்திருவடி பெருமானதும், சிவமான தனது சிவானந்த அநுபவத்தினதும் விளக்கமாக ஒளிர்ந்தது. கார்காலத்து மேகம் கடலைச் சுருக்கி எழுந்து மலை மேல் ஏறிச் சோணாமாரியாய் நுண்டுளி பொழிய அது பெருகி ஆறாய்ப் பாய்ந்து செல்லும் வழியிலே குளவாய் கோலி உழவர்கள் பயிர் செய்வார்களல்லவா? அவ்வாறே பரமானந்தப் பழங் கடலான கயிலை நாதர் திருவார் பெருந்துறையில் பரமாசாரியராய் எழுந்தருளி நோக்காலும், வாக்காலும், பரிசத்தாலும், பரி மேல் வருதல் ஆதிய ஆடல்களாலும் பொழிந்த அருள் வெள்ளம் இப்பொழுது திருவடி வடிவாய்க் குருந்த நிழலில் அமர்ந்திருப்பதாக மணிவாசகர் உணர்ந்தார். அத்திருவடி, அர்ச்சனை வயலுள் அன்பு வித்திட்டு, தொண்ட உழவர் சிவபோகம் புசிப்பதற்கு ஆதாரமாயிற்று. அப்பாதார விந்தத்தைப் பூசிப்பதே தம் தலையாய பணியாகக் கொண்டார். அதனை அவர் கருத்தோடு புரிந்தார். ஆகம விற்பன்னரான அமாத்தியப் பிராமணராதலால் விதி முறை தவறாது திருவடி பூசை ஆற்றினார். பூசைக் கருமத்தை முட்டின்றிச் செய்யும் அவர்தம் சிரத்தை ஆயிரமலரில் ஒரு மலர் குறைய கண்மலர் கொண்டு நிறை பூசை செய்த நெடுமாலின் சிரத்தையை நினைவூட்டியது. அது கண்ணப்பரின் நிறை அன்புடன் செய்த பொருள் பற்றிச் செய்யும் பூசனை போன்று அமைந்தது. அரமனையிலே அரசனை வாத்தியங்கள் இசைத்து துயிலெடை பாடி துயில் எழுப்பும் வழக்கம் அந்நாளில் நிலவியது. பாண்டிப் பெரும் பதத்தின் அரசனை இத்தனை சிறப்புச் செய்து துயிலெழுப்புவதெனின் முழுதுலகாளியான பெருமானை எத்தனை சிறப்புடன் திருப்பள்ளி எழச் செய்ய வேண்டும்! ஆகவே **போற்றி என் வாழ் முதலாகிய பொருளே** எனத் தொடங்கித் திருப்பள்ளி எழுச்சியைப் பாடி இணை மலர் கொண்டு திருவடி தொழுதார். அருச்சனையின் பொருட்டு அறுவகை வாழ்த்து, ஐவகை வெற்றி, எண்வகைப் போற்றி ஆதிய மங்களங்களெல்லாம் அமையச் **சிவபுராணம்** எனும் சொன் மாலையைப் புனைந்தெடுத்தார். இப்பாட்டினைப் பொருளுணர்ந்து சொல்வோர் சிவபுரத்துட் சென்று சிவனடிக் கீழ் இருப்பர் எனவும் குறித்து வைத்தார்.

பரமாசாரியார் தாள்காட்டித் தானாகச் செய்த அப்பொழுதே மாணிக்கவாசகர் வீடெய்தினார். * சீவன் முத்தரான அவரது கரணங்கள் சிவகரணங்களாயின. அவர் என்புதோல் போர்த்த உடலினரல்லர். உருகுவது உளங்கொண்டு உருச்செய்தது போன்ற அள்ளூறு ஆக்கையினர் அவர். தேனனான இறைவன் அவரது மயிர்க்கால் தோறும் செந்தேனைப் பாய்த்து நிரப்பினார். எற்புத்துளை தோறும் அற்புதமான அமுததாரைகளை ஏற்றினார். ஆதலால் மாணிக்கவாசகர் ஒரு பராஅமுத வடிவினர். அவர் அல்லற்பிறவியில் உழல்வோரை முத்திக்கரைசேர்க்கவல்ல திருவாசகங்களைப் பாடநாடினார். அவ்வாறு நாடியபோது இவ்விடமகன்ற உலகத்திலே இருந்த, இருக்கின்ற, இருக்கும் இடர்க்கடல்வாய்ச் சுழிசென்று மாதர் திரைபொரகாமச்சுறவெறிய அழிகின்ற அனைவரதும் 'பாடு'களெல்லாம் அவரது பந்தமறும் பளிங்கனைய உள்ளத்தில் பிரதிபலித்தன. அவ்வாறு பாடுபடுவோர்க்கெல்லாம், தாம் முத்திக்கரையில் பேரின்பவெள்ளத்துள் திளைத்தவண்ணம் நின்றுகொண்டே உபதேசம் புரிவது அவருக்கு உடம்பாடன்று. அவர்களது அல்லலெல்லாவற்றையும் தன்மயமாக்கித் தாமே அப்பொழிகின்ற துன்பப் புயல் வெள்ளத்தூடாக அஞ்செழுத்துப் புணைபிடித்து முத்திக்கரைசேரும் ஓர் அழுதடியடையும் அன்பாளராக நின்று பாடுவதே அவர்தம் அருளுள்ளத்துக்கு இசைவாயிருந்தது. அவரது அகம் அந்தமிலா ஆனந்தத்தைச் சுபாவமாக உடையது அவர் பெருமானது கருணைக் கையின் அரவணைப்பில் கலந்தினிதிருக்கும். ஆனந்தத்துடன், பழவடியாரோடு உடனுறைந்து அனுபவிக்கும் களிப்பும் மிக்கவர். இப்பொழுது மன்னுயிர்திரளின் பாடும் அவருள்ளத்தில் பிரதிபலித்தது. அப்'பாடு'களுக்குக் காரணமாய கடலின் திரையதுபோல் வரும் கலக்கமலத் தியல்பும், அம்மலத்தை அறுக்கும் வழிமுறையும் அவருக்கு நன்கு விளக்கமாயின. இவற்றைப் பாடுதற்கு மாணிக்கமனைய வாசகங்கள் சேவகஞ் செய்தன. மாணிக்க மலைகளும், மரகதக் குன்றுகளும் அனைய உவமை உருவகங்கள் உதவி நின்றன. இவற்-

---

* பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
- சிவபுராணம்

தாள்த்தாமரைக்காட்டித் தன்கருணைத்தேன் காட்டி
நாட்டார் நகைசெய்ய நாம்மேலை வீடெய்த
- திருவம்மானை

றைக் கொண்டு இழைத்த ஞானமணிப்பூடணங்களின் பேழையாக அவரது உள்ளம் திகழ்ந்தது. அவ்வுள்ளத்திலிருந்து அவ்வப்போது அமுதினும் இனிய திருவாசகங்கள் மலர்ந்தன. முதலில் **'மெய்தான் அரும்பி'** என எடுத்து அந்தாதியாகத் தொடுத்த **'திருச்சதகத்'**தைப் பாடலானார். நூறு பாடல்களைக் கொண்ட அப்பாமாலையில் நாடகத்தால் அடியார்-போல் நடித்து வீடகத்தே புக நாடுவதை விடுத்து, வேண்டாதொன்றும் வேண்டாது மிக்க அன்பை வேண்டுதலைப் பாடிவைத்தார். அதிலே பத்தியினதும், வைராக்கியத்தினதும் விசித்திர இயல்புகளெல்லாம் விளக்கமெய்தின. பின்னர் வீடுசேருவதில் விருப்பமுள்ளவர் கைக்கொள்ளவேண்டிய இரு முக்கிய விடயங்கள் பற்றிப் பாடலானார். அவற்றுள் ஒன்று மண்மேல் யாக்கை விடுமாறு; மற்றது கழற்கே புகுமாறு. மண்மேல் யாக்கை விடுமாற்றை [1] **வாழாப்பத்தாகப்** பாடிவைத்தார். கழற்கே புகுமாற்றை நுணுக்கமாக நோக்கி [2] **ஆசைப்பத்து,** [3] **சென்னிப்பத்து,** [4] **புணர்ச்சிப்பத்து** எனப் பத்துப் பத்துப் பாக்களில் பாடிவைத்தார்.

---

[1] பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே பற்று நான் மற்றிலேன் கண்டாய்
சீரொடுபொலிவாய் சிவபுரத்தரைசே திருப் பெருந்துறையுறை சிவனே
யாரொடு நோகேன் யார்க் கெடுத்துரைக்கேன் ஆண்ட நீ அருளிலையானால்
வார் கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய் வருக என்றருள் புரியாயே.

[2] கையால் தொழுதுன் கழற் சேவடிகள் கழுமத் தழுவிக் கொண்டு
எய்யா தென்றன் தலை மேல் வைத்தெம் பெருமான் பெருமானென்று
ஐயா என்றன் வாயாலரற்றி அழல் சேர் மெழுகொப்ப
ஐயாற்றரசே ஆசைப்பட்டேன் கண்டாய் அம்மானே.

[3] தேவதேவன்மெய்ச் சேவகன் தென்பெ ருந்துறை நாயகன்
மூவ ராலும் அறியொணா முதலாய ஆனந்த மூர்த்தியான்
யாவ ராயினும் அன்பரன்றி அறியொ ணாமலர்ச் சோதியான்
தூய மாமலர்ச் சேவடிக்கன்நம் சென்னி மன்னிச் சுடருமே

[4] நெக்கு நெக்கு உள் உருகி உருகி
நின்றும் இருந்தும் கிடந்தும் எழுந்தும்
நக்கும் அழுதும் தொழுதும் வாழ்த்தி
நானாவிதத்தால் கூத்தும் நவிற்றிச்
செக்கர்போலும் திருமேனி
திகழ நோக்கிச் சிலிர்சிலிர்த்துப்
புக்கு நிற்பதென்று கொலோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே.

வேற்றுவிகார விடக்குடம்பின் பிடிப்பை விட்டுவிடுவதும், நெடுமால் வழுத்தியும் காணாமலரடியிணைகளைச் சேர்வதும் தன்வலத்தாலாவதன்று. இயல்பான ஒப்படையும், குருவருளுமே இவற்றுக்குத் துணையாயமைவது. ஒப்படையினை [1] **'அடைக்கலப் பத்து'** எனப் பாடி வைத்தார். குருவருளைத் தமக்கு நிறைமலர்க் குருந்தின் கீழ் இருந்து அருள்செய்த பரமாசாரியக் கோலத்தையே சிந்தை செய்து [2] அருட்பத்தாகப் பாடினார்.

மேற்படியில் ஏறஏற 'மண்மேல் யாக்கை விடுமாறும் வந்துன் கழற்கே புகுமாறும் அண்ணா எண்ணக் கடவேனோ' என்ற துணிவினராய், நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ இதற்கு நாயகமே' எனக் [3] **'குழைத்த பத்து'** ஆகியவற்றைப் பாடலானார். அவ்வண்ணம் பாடிய [4] **'பிரார்த்தனைப் பத்திலே'** ஆவி, யாக்கை, யான், எனது என்று யாதுமின்றி இருப்பதற்குப் பிரார்த்தித்தார். தூலபஞ்சாக்கரத்தில் தொடங்-

---

[1] வழங்குகின்றாய்க்குன் அருளார முதத்தை வாரிக் கொண்டு
விழுங்குகின்றேன் விக்கினேன் வினையேன் என் விதியின்மையால்
தழங்கரும் தேனன்ன தண்ணீர் பருகத் தந்து உய்யக் கொள்ளாய்
அழுங்குகின்றேன் உடையாய் அடியேன் உன் அடைக்கலமே.

[2] சோதியே சுடரே சூழொளி விளக்கே சுரி குழற் பனை முலைமடந்தை
பாதியே பரனே பால் கொள் வெண்ணீற்றாய் பங்கயத்தயனு மாலறியா
நீதியே செல்வத் திருப்பெருந்துறையில் நிறைமலர் குருந்தமேவிய சீர்
ஆதியே அடியேன் ஆதரித்தழைத்தால் அதெந்துவே என்றருளாயே.

[3] அன்றே என்றன் ஆவியும் உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் எனை ஆட்கொண்டபோதே கொண்டிலையோ
இன்றோர் இடையூறு எனக்குண்டோ எண்டோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ இதற்கோர் நாயகமே.

[4] மேவும் உன்றன் அடியாருள் விரும்பியாலும் மெய்ம்மையே
காவிசேரும் கயற்கண்ணாள் பங்கா உன்தன் கருணையினால்
பாவியேற்கும் உண்டாமோ பரமானந்தப் பழங்கடல் சேர்ந்து
ஆவியாக்கை யான் எனது என்று யாதுமின்றி அறுதலே

கிச் சிவபுராணம் பாடியவர், [1] **'நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம எனப் பெற்றேன்'** எனத் [2] **திருவேசறவு** பாடலானார். தேடுதல், திகைத்தல், வாடுதல், வற்றல் மரம்போல் நிற்றல் என்றெல்லாம் பட்ட அல்லல் அகல **இறைதாழ் பூண்டேன், புறம்போகேன், புறம்போகலொட்டேனே** எனச் சிவானந்த மேலீட்டினால் [3] **உயிருண்ணிப்பத்துப்** பாடினார். இவ்வாறான வளர்ச்சிப் படியில் சிவானந்த விளைவுண்டாக **"பாண்டிப்-பிரான் தன் அடியவர்க்கு மூலபண்டாரம் வழங்குகின்றான் வந்து முந்துமினே"** எனப் [4] **பாண்டிப் பதிகம்** பாடினார்.

இவ்வாறாகப் பாண்டிப்பிரான் மூலபண்டாரம் வழங்கும் இடம் வரை மண்ணவரை உயர்த்தும் திருவாசகங்களைப் பாடிய பின் பரமாசாரியாரின் பணிப்பின்படி தில்லைக்குச் செல்லத் திருவுளம்பற்றினார்.

அந்நாட்களிலே உத்தர கோச மங்கை என்றோர் திருத்தலம் தென்பாண்டிநாட்டில் புகழ் பெற்றிருந்தது. அது சிவபெருமான் உமையம்மையாருக்கு ஆகமம் உபதேசித்த திருவேறிய ஊராகும். ஒரு நாடும் ஓர் ஊரும் இல்லாத சிவபெருமானுக்கு நாடும் ஊரும் கூறுவதெனின் தென்பாண்டிநாட்டை நாடெனவும் உத்தரகோச மங்கையை ஊர் எனவும் கூறுவதே தகுதி என்பது மணிவாசகரது கருத்து. ஆதலால் தில்லை செல்லு முன் அவ்வூரைத் தரிசிக்கும் ஆர்வம் கொண்டார். அவ்வூர் இராச வீதிகளைக் கொண்ட செல்வச் செழிப்பு மிக்க நகராக விளங்கியது. அந்த நகரம் சென்று கோயிலை

---

[1] நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்
தேனாய் இன்னமுதமுமாய் தித்திக்கும் சிவபெருமான்
தானே வந்து எனதுள்ளம் புகுந்து அடியேற்கு அருள்செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே

[2] வேண்டேன் புகழ்வேண்டேன் செல்வம் வேண்டேன் மண்ணும் விண்ணும்
வேண்டேன் பிறப்பிறப்புச் சிவம் வேண்டார்தமை நாளும்
தீண்டேன் சென்றுசேர்ந்தேன் மன்னு திருப்பெருந்துறை இறைதாள்
பூண்டேன் புறம்போகேன் இனிப் புறம்போகல்ஒட்டேனே

[3] காலமுண்டாகவே காதல் செய்துய் மின் கருதரிய
ஞாலமுண்டானொடு நான் முகன் வானவர் நண்ணரிய
ஆலமுண்டான் எங்கள் பாண்டிப் பிரான் தன் அடியவர்க்கு
மூலபண்டாரம் வழங்குகின்றான் வந்து முந்துனே.

வலம் வந்து சந்நிதானத்தில் நின்ற போது பெருமான் வித்தக வேடத்தைக் காட்டி அருளினார். உமையம்மையாரும் தாமும் உடனாக நின்று காட்சி கொடுத்த அப்பெருங் கருணையைப் போற்றிச் **சீரார்பவளம் கால் முத்தம் கயிறாக ஏராரும் பொற் பலகை ஏறி இனிதமர்ந்து** எனத் தொடங்கும் திருப்பொன்னூசல் பாடினார். உன்னற்கரிய உத்தர கோசமங்கையின் மன்னியிருந்த மாமருந்தின் சீர் பாடல் பாடியிருக்கும் போது, பத்தி நெறியிற் செல்லும் உத்தமரை, மாதரார் வலையுள் அகப்பட்டு பொய்ந்நெறியில் விலகிச் செல்லாதவாறு பெருமான் தன் கருணைக்குள் வைத்துக் கொள்ள வேண்டுமென்று விண்ணப்பம் செய்யும் நோக்குடன் ஐம்பது பாடல்களைக் கொண்ட [1] **நீத்தல் விண்ணப்பம்** என்னும் திருவாசகத்தை அருளிச் செய்தார். உத்தர கோச மங்கையில் மரகதலிங்கமாக வீற்றிருக்கும் பெருமானின் மாண்புக்குத் தக்க மரகதக் குன்றமெனவே அம்மாணிக்க வாசகம் திகழ்வதாயிற்று.

உத்தரகோசமங்கையினின்றும் திருவாரூர் திருவிடைமருதூர் ஆதிய தலங்களைத் தரிசித்து திருவண்ணாமலையை அடைந்தார். திருவண்ணாமலையை அடைந்த காலம் மார்கழி மாதமாயிருந்தது. அந்நாள்களில் மாதர்களிடத்தே மார்கழி நீராடுதல் என்றோர் விளையாட்டு இருந்தது. அதனைப் பெருமானது ஆட்கொண்டருளும் விளையாட்டாகவே கொண்டு பொற் பாதம் போற்றி செய்யும் [2] **திருவெம்பாவையைப்**

---

[1] கொள்ளேர் பிளவக லாத்தடங் கொங்கையர் கொவ்வைச் செவ்வாய்
விள்ளேன் எனினும் விடுதிகண் டாய்நின் விழுத்தொழும்பின்
உள்ளேன் புமல்லேன் உத்தர கோசமங் கைக்கரசே
கள்ளேன் ஒழியவுங் கண்டுகொண் டாண்டதெக் காரணமே.

[2] போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யவாட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய்.

பாடினார். மகளிர் ஆடும் அம்மனை விளையாட்டைக் கண்டு [1] திருவம்மானை பாடினார். அப்பால் திருவிடை மருதூர் சென்று அங்கு வீற்றிருந்த படிமப் பாதத்தை **ஆனந்தத் தேனிருந்த பொந்தாகப்** பாடிப் பரவினார். பின்னர் திருத்தோணிபுரம், திருக்கழுக்குன்றம் ஆகிய பதிகளுக்குச் சென்று முறையே **பிடித்த பத்தும், திருக்கழுக்குன்றப்** பதிகமும் பாடிப் பரவினார். ஈற்றில் [2] **போவோம் காலம் புகுந்தது காண் பொய்விட்டுடையான் கழல் புகவே** என்று தில்லைத் திசையை நோக்கினார்.

"நிற்பார்நிற்க நில்லா உலகில் நில்லோம் நாம்" எனக் கூறியாத்திரைப்பத்துப் பாடியவராய் பெரும் [3] **திருப்படையெழுச்சி** போல தில்லைத் திருத்தலத்தைச் சேர்ந்தனர். தில்லைக்கோயிலிலே கீழைக்கோபுரத்தைப் பணிந்தெழுந்து அக்கோபுரவாயிலினூடாக உட்புகுந்து சென்றனர், செம்பொன் மாளிகையை வலம் வந்து கனகசபையின் முன்நின்ற பொழுது தம்மை ஆண்ட பரமாசாரியக் கோலத்தையே

[1] கல்லா மனத்துட் கடைப்பட்ட நாயேனை
வல்லாளன் தென்னன் பெருந்துறையான் பிச்சேற்றிக்
கல்லைப் பிசைந்து கனியாக்கித் தன் கருணை
வெள்ளத் தழுத்தி வினை கடந்த வேதியனைத்
தில்லை நகர் புக்குச் சிற்றம்பலம் மன்னும்
ஒல்லை விடையானைப் பாடுதும் காண் அம்மானாய்

[1] பூவார் சென்னி மன்னனெம்
புயங்கப் பெருமான் சிறியோமை
ஓவா துள்ளம் கலந்துணர்வாய்
உருக்கும் வெள்ளக் கருணையினால்
ஆவா என்னப் பட்டன்பாய்
ஆட்பட் டீர்வந் தொருப்படுமின்
போவோம் காலம் வந்ததுகாண்
பொய்விட் டுடையான் கழல்பகவே.

[3] ஞானவாள் ஏந்தும்ஐயர் நாதப் பறையறைமின்
மானமா ஏறும்ஐயர் மதிவெண் குடைகவிமின்
ஆனநீற் றுக்கவசம் அடையப் புகுமின்கள்
வானஊர் கொள்வோம்நாம் மாயப்படை வாராமே.

நடராசப் பெருமானிற் கண்டு பரவசத்தராயினர். அவர் கண்கள் இமைக்கவில்லை. கைகள் அசையவில்லை. வழிபாடும் மறந்தவராய் நிலை ஓவியம் போல் நின்றார். இவ்வாறு நெடுநேரம் நின்றவரது உடலில் சாமுடலில் அசைவு வந்தது போல் மெல்லென அசைவு வந்தது. சிவ எனும் நாமத்துடன் கைகள் சிரம் குவிந்தன. அப்பொழுது சாந்த சுகத்தில் விளைந்த களிமிகுதியால்

"சிந்தைதனைத் தெளிவித்து சிவமாக்கி எனை ஆண்ட
அந்தமிலா ஆனந்தம் அணிகொள் தில்லைக் கண்டேன்"

என்று **கண்ட பத்து** எனும் திருப்பதிகத்தை அருளிச் செய்தார். பதிகம் பாடியும் ஆராத அன்பினாலே அரிதில் வெளி வந்தார். வெளிவந்து களிமிகுதியாலே

பாழ் செய் விளாவிப் பயனிலியாய்க் கிடந்தேற்குக்
கீழ் செய் தவத்தால் கிழியீடு நேர்பட்டு"

என கூடும் உயிரும் குமண்டையிடத் தெண்டனிட்டு ஆனந்தக் கூத்தாடினார். அப்பொழுது கூத்துக்கேற்ற துள்ளோசையில் **"ஓடும் கவந்தியுமே உறவென்று உள்கசிந்திட்டு"** [1] எனத் தொடங்கும் **குலாப் பத்துப்** பாடினார். இவ்வண்ணம் பாடியாடியவராய் கோயிலின் வடகிழக்குப் பாகத்திலே 'திருப்பாற்கடல்' எனும் தீர்த்தக் குளத்தின் தென்பகுதியில் வந்து தங்கினர். அவ்விடமே திருவடிக் கலப்புறும் வரையும் அவர் உறையும் இடமாயிற்று. தாம் உறையும் அவ்விடத்திலே திருப்பெருந்துறையில் பரமாசாரியார் பணிப்பின்படி திருவடி பிரதிட்டை செய்து வழிபட்டாற் போன்று திருவடிபிரதிட்டை செய்து வழிபட்டார். திருப்பெருந்துறைக் கோயில் போலவே அச்சிறிய கோயிலையும் தென்முக வாயிலையுடையதாக அமைத்தார். திருப்பெருந்துறைக் கோயில் எனவே அதற்கு நாமம் வழங்கியது. அக்கோயிலில் உறைந்து சாதனை பயில்வதும் காலந்தோறும் வந்து அம்பலத்தரசை வழிபடுவதுமாக அவர்

[1] ஓடுங் கவந்தியுமே உறவென்றிட் டுள்கசிந்து
தேடும் பொருளுஞ் சிவன்கழலே எனத்தெளிந்து
கூடும் உயிருங் குமண்டையிடக் குனித்தடியேன்
ஆடுங் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே.

வாழ்நாள் சென்று கொண்டிருந்தது. திருப்பெருந்துறையிலே திருவடி வழிபாட்டிற்கான அருச்சனைப் பாடலாகச் சிவபுராணத்தைப் புனைந்தது போல் இத்தில்லைப் பெருந்துறைத் திருவடி வழிபாட்டு அருச்சனைக்கான சொன்மாலைகளும் புனையத் திருவுளம் பற்றினார் "தில்லை மூதூர் ஆடிய திருவடி" எனத் தொடங்கும் **கீர்த்தித் திருவகவல்**, அண்டப் பகுதி என்னும் சொல்லை முதலாகவுடைய **திருவண்டப் பகுதி**, குழைத்த சொன்மாலை கொண்டருள் போற்றி எனப் பணிவுடன் சாத்திய போற்றித் திருவகவல் எனும் மூன்று பாமாலைகள் தொடுத்தெடுத்தனர். சிற்றம்பலத்தே ஆனந்தத் தாண்டவம் புரியும் பெருமானது

நினைதொறும் காண்தொறும் பேசுந்தொறும் எப்பொழுதும்
அனைத்தெலும்பு உள்நெகச் சொரியும்

ஆனந்தத் தேனைப் பருகியும் விழுங்கியும் ஆராத தேனிப்பினாலே [1] திருக்கோத்தும்பி பாடினார். தன்னைப் பிணித்த வல்வினையின் வாயில் பொடியிட்ட வண்ணத்தை நினைந்து **திருப்பூவல்லி** பாடினார். நறுநெய்யோடு பால், தயிர் ஆகியவற்றால் திருமுழுக்காடும் ஆனந்தத் தாண்டவருக்குச் சுண்ணம் இடிப்பதற்கெனத் **திருப் பொற் சுண்ணம்** பாடினார். பிறவிக் கருவறுத்த திறம் நினைந்து **தெள்ளேணம்** கொட்டிப் பாடினார். இவ்வாறு பெருந்துறைக் கோயில் சாதனையும், அம்பலத்து வழிபாடும் அருச்சனைப் பாமாலை புனைதலும், பொற்சுண்ணம் ஆதிய பாடல்களைப் பாடுவதுமாகச் சிவபுர வாழ்வு வாழ்ந்து கொண்டிருந்த வேளையில் இலங்கை மன்னன் தன் வாய் பேசாத மகளுடன் பொன்னம்பலத்தை வந்து சேர்ந்தான். அவன் தன் அரமனைக்கு அழைத்து வரப்பட்ட ஒரு தபோதனர், பொன்னம்பலத்தைப் பெருமந்திரமாக ஓதித் திரிவதின் நுட்பத்தில் மனம் செலுத்தி, அப்பொன்னம்பலம் தன் மகளின் வாயினைப் பேசச் செய்யும் என நம்பியவனாய் வந்திருந்தான். அவனுடன் புத்தபிக்கு ஒருவனும் வந்திருந்தான். புத்தபிக்குவின் நோக்கமோ பொன்னம்பலத்தில் புத்தனை நடுவதாக இருந்தது. அவன் தம்முடன் வாதிட வருமாறு தில்லையிலுள்ளாரை வலிந்தழைத்தான். பிக்குவின் புல்லறிவு குறித்து

[1] தினைத்தனை உள்ளதோர் பூவினில்தேன் உண்ணாதே
நினைத்தொறுங் காண்தொறும் பேசுந்தொறும் எப்போதும்
அனைத்தெலும் புள்நெக ஆனந்தத் தேன்சொரியுங்
குனிப்புடை யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ

தில்லை வாழ் பெரியோர்கள் அத்துணைப் பொருட்படுத்தவில்லை யெனினும், அம்பலவாணரின் திருவுளம் அறிய எண்ணினர். அம்பலவர் அவர் தம் கனவில் தோன்றி மாணிக்கவாசகர் புத்த பிக்குவை வெற்றி கொள்வாரென அருளினர். இதனைத் தில்லையுள்ளார் மாணிக்கவாசக சுவாமிகளிடம் விண்ணப்பித்தனர். மாணிக்கவாசக சுவாமிகள் பொன்னம்பலத்தை நம்பி வந்த மன்னனிடத்து இரக்கம் கொண்டார். அவர் தம் இரக்கம் வாய் பேசாத பெண்ணை வாய் திறந்து பேசச் செய்ததுடன் அப்பேச்சே பௌத்த பிக்குவினது வாதவுரைக்குத் தக்க மருந்துமாயிற்று. பிக்கு புத்த பகவானைப் பிரதிட்டை செய்வதற்குப் பதிலாகத் தாமே திருநீறும் உருத்திராக்கமும் புனைந்து சைவரானார். அவ்வேளையில் வினா விடைப் பாங்கான திருச்சாழல் எனும் பாவையர் பாடலை மாணிக்கவாசக சுவாமிகள் பாடியருளினார்.

பாடிப் பரவிப் பணி செய்யும் ஆசையும் அருகியது. ஒரு போதும் பெருமானைப் பிரிந்திருக்கத் தரியாதவராயினார். அவ்வேளையில் "உனைப் பிரிந்தொரு போதும் தரியேன்" என்று தம் எண்ணத்தைச் சொல்லி [1] **எண்ணப்பதிகம்** பாடினார். தமது சிவானுபவ விருப்பத்தைச் சொல்லி **மின்னேரனைய பூங்கழல்கள்** எனத் தொடங்கும் **ஆனந்த மாலையைப்** பாடியருளினார். இச்சிவானுபவ விருப்பம் அளவறுக்க ஒண்ணாத நிலையை அடைந்த போது பொன்னம்பலத்தின் முன் நின்று

அரைசே பொன்னம்பலத்தாடும் அமுதே
என்றுன் அருள் நோக்கி
இரைதேர் கொக்கொத்து இரவு பகல்
ஏசற்றிருந்தே ஏசற்றேன்

---

[1] உரியேன் அல்லேன் உனக்கடிமை
உன்னைப் பிரிந்திங் கொருபொழுதும்
தரியேன் நாயேன் இன்னதென்
றறியேன் சங்கரா கருணையினாற்
பெரியோன் ஒருவன் கண்டுகொள்
என்றுன் பெய்கழல் அடிகாட்டிப்
பிரியேன் என்றென் றருளிய அருளும்
பொய்யோ எங்கள் பெருமானே.

என்று கோயின் மூத்த திருப்பதிகத்தைப் பாடி இரங்கி அருளாய் என வேண்டி நின்றனர். இவ்வாறு வேண்டுதல் செய்து தாம் ஆத்மார்த்தமாக வழிபாடு செய்யும் பெருந் துறைக் கோயிலுட் சென்று பெருமானாரது உள்ளவாறேயான பூரணக் காட்சியைக் காணும் ஆராக் காதலுடன் ஏகமனதாயிருந்த வேளையில் பெருமான் அக் காட்சியை அனுபோகமாக அருளினார். அதனை மாறி நின்றெனை எனத் தொடங்கும் * கோயில் திருப்பதிகமாகப் பாடியருளினார். அப்பதிகத்திலே

நினைப்பற நினைந்திருக்கும் தம் அநுபோக இலக்கணத்தை அருளி வைத்தனர். அவ்வநுபோகத்தில் பெற்ற அந்த மொன்றில்லா ஆனந்தம் திருவாசகத்தின் இருதயத்தானமாயிற்று.

அவ்வேளையில் ஒருநாள் அம்பலவாணர் வேதிய வடிவம் கொண்டு பெருந்துறைக் கோயிலுக்கு எழுந்தருளினார். வேதியரை வரவேற்று உபசரித்த மணிவாசகப் பெருமான், அவரது ஊர் முதலிய-வற்றையும் வந்த காரியத்தையும் விசாரித்தார். வேதியர் தென்பாண்டி நாடே தம் நாடு என்று சொன்னார். பாண்டி நாட்டவரான தாங்கள் பெருமானைப் பரிமேல் எழுந்தருளி வரச் செய்தது முதலான அருஞ் செயல்கள் புரிந்தீரென்று புகழ்ந்தார். "தாங்கள் பாடிய திருவாசகப் பாக்களை ஓதி அறியும் ஆசையால் வந்தேன் எனவும் அதனை சொல்லச் சொல்ல எழுதிக் கொள்ள விரும்புகின்றேன்"எனவும் வேண்டினார். வேதியரது வேண்டுதலுக்கிசைந்த மணிவாசகப் பெருமான் தாம் பாடிய திருவாசகங்-களையெல்லாம் ஓர் ஒழுங்கு முறையாகக் கூறி வந்தார். அவர் கூறிய முறைப்படியே சிவபுராணம் ஆதியநான்கு அகவல்கள், திருச்சதகம், நீத்தல்விண்ணப்பம், திருவெம்பாவை என்ற பாவைப் பாட்டு என்ற

* இன்றெனைக் கருளி இருள் கடிந்து உள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்ற நின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலால் பிறிது மற்றின்மை
சென்று சென்றணுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்றாம்
திருப் பெருந்துறையுறை சிவனே
ஒன்றும் நீயல்லை அன்றியொன் றில்லை
யாருன்னை அறியகிற்பாரே.

வண்ணமாய் அச்சோப்பத்து ஈறான திருவாசகம் முழுமையும் எழுதிக் கொண்டார். பின்னர் "பாவை பாடிய வாயால் கோவை பாடுக" என வேண்டினார். மணிவாசகப் பெருமான் திருச்சிற்றம்பலம் உடையாரையே பொருளாகக் கொண்டு **திருக்கோவை** பாடினார். கோவையும் எழுதி முடிந்ததும் 'அழகிய சிற்றம்பலமுடையான் எழுத்து' என்று ஏடெழுதிய தன் பெயரையும் பொறித்து வேதியர் மறைந்தனர். அடுத்த நாள் காலைப் போதில் திருப்பள்ளியெழுச்சிக்காகக் கனகசபைக்குச் சென்ற அந்தணர் அங்கே களிற்றுப்படியாரில் ஏடொன்றிருப்பது கண்டு ஈதோர் அற்புதமென்று மருண்டவராய் மற்றைத் தில்லை வாழந்தணர்களிடம் கூறினர். அவர்களெல்லாம் வந்து பார்த்து ஆச்சரியம் அடைந்தவர்களாய்த் தங்களில் தக்கோரொருவரை அப்புத்தகத்தை எடுத்துப் பார்க்குமாறு வேண்டினார். அவர் உரிய பூசனையாற்றி அத்திருவேட்டாகிய ஆகமத்தை எடுத்து வாசிக்கலானார். ஏட்டின் முடிவிடத்தில் மாணிக்கவாசகன் சொல்ல அழகிய சிற்றம்பலமுடையான் எழுதியது என்றிருந்த வாசகத்தையும் வாசித்தார். இதனைக் கேட்ட யாவரும் "**இனி நமக்கு இதுவே வீட்டுநூல்**" என வியந்தனர். அனைவருமாகச் சேர்ந்து மாணிக்கவாசகப் பெருமானிடம் சென்று அவரைப் போற்றி மன்றுளார் ஆடலெல்லாம் சொல்லி முகமெல்லாம் கண்ணீர் வார நின்றனர். உணர்ந்த மாமுனிவர் உம்பரோடொழிந்தார் உணர்வுக்கும் தெரிவரும் பொருளை உணர்ந்துணர்ந்து இன்பத்தில் தேக்கி, கன்னற் கனி தேர் களிறெனக் களித்திருந்தார் மணிவாசகப் பெருமான். அவரிடம் அத்திருவாசகப் பொருள் கேட்பதற்கு வந்தோரெல்லாம் ஆசைப்பட்டனர். அவர்களுக்கெல்லாம் அம்பலவர் முன்னிலையில் பொருள் சொல்வதாகக் கூறி அவர்களோடு கூட ஆளுடையடிகள் வந்தனர். வந்தவர் பொன்னம்பலத்தாடும் அவ்வமுதையே சுட்டிக்காட்டி இவரே இத்திருவாசகப் பொருளெனக் கூறி 'ஆனந்தமாக்கும் என் சோதி' எனச் சென்று சோதிமயமாயினர்.

திவ்விய மாணிக்கர்க்கு மங்களம்

மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசை : ஆனிமகம்



அச்சுப் பதிப்பு

எவகிநீன் அச்சகம்

93 திருமலை வீதி, மட்டக்களப்பு.

தொ.பே : 065-2222607